அனைத்திந்திய நூல் வரிசை

கவி

தாராசங்கர் பந்த்யோபாத்யாய்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

அனைத்திந்திய நூல் வரிசை

கவி

தாராசங்கர் பந்த்யோபாத்யாய்

தமிழாக்கம் :

த. நா. குமாரஸ்வாமி

அன்பளிப்பு
முனைவர் ம. இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
புது தில்லி

September, 1972 (Asvina 1894)
செப்டம்பர், 1972 (அஸ்வினு, 1894)

© கௌரிதேவி, வாணிதேவி
கங்காதேவி, வாணிதேவி

ரூ. 5-50.

Original : KAVI (Bengali)

Tamil Title : KAVI

விநியோகிப்பாளர் :

பாரி நிலையம்

1/59, பிராட்வே, சென்னை-1

வெளியிட்டவர் : டைரக்டர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,
ஏ-5, கிரீன் பார்க், புது தில்லி-16

அச்சிட்டவர் :—டேக்ஸ் அண்டு கம்பெனி லா பிரஸ், சென்னை-32.

முகவுரை

இந்தியா ஒரு விசாலமான நாடு. இந்நாடு பண்பாட்டினுல் ஒன்ருக இருந்தபோதிலும், இதனை முன்னேற்றமடைந்த சக்தியுள்ளதொரு நாடாக ஆக்கக்கூடிய ஒற்றுமைத்தளைகளை இன்னும் வலிமைப் படுத்த வேண்டியிருக்கின்றது.

நம்முடைய பாரத நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. நம்முடைய நாட்டைப்போல உலகத்தின் மற்றெந்த நாட்டிலும் மொழிகளுடைய எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இல்லை. ஆனுல், நமது அண்டையிலுள்ள பகுதியில் வழங்கும் மொழிகளைப் பற்றி நாம் அதிகம் அக்கறை கொள்ளுவதில்லை. அப் பகுதிகளில் இலக்கியம், கலாசாரம், இவற்றின் செழிப்பைப் பற்றிய அறிவும் நாம் அதிகமாகப் பெற்றிருக்கவில்லை. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய ஐரோப்பிய மொழிகளின் இலக்கியத்தைப் பற்றியும், அம் மொழிகள் வழங்கும் சமுதாயங்களைப் பற்றியும் நமக்குள்ள அறிவை விட நமது நாட்டின் மொழிகளில் உள்ள இலக்கியங்களைப் பற்றிய அறிவு குறைவாயுள்ளது.

நாட்டின் உணர்ச்சி - பண்பாடு - ஒருமைப்பாட்டிற்கு நமது நாட்டினர் தேசத்தின் பல மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியப் படைப்புக்களைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவற்றின் வாயிலாகப் பல்வேறு பகுதிகளில் வழங்கும் வாழ்க்கை முறைகள், மக்களது எண்ணங்கள், நம்பிக்கைகள் நடை உடை பாவனைகள் ஆகியவை பற்றியும் அறிய வேண்டும்.

மேற்கே சுதந்திரமான பல நாடுகள் உள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் தனிப்பட்ட மொழி உண்டு. ஆயினும் ஒவ்வொரு நாட்டினரும் மற்ற நாட்டினருடைய இலக்கியத்தைப் பற்றியும், சிந்தனையைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கிருர்கள். அவ்வாறு நாம் நமது நாட்டு மொழிகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஐரோப்பிய மொழியொன்றில் வெளியாகும் எந்தச் சிறந்த நூலும் உடனடியாக மற்ற மொழிகளில் பெயர்க்கப்படுகின்றது. இந்தியா ஒரே நாடு. ஆனுல் நமக்கு நமது அண்டை மொழிகளில் என்ன நடைபெறுகின்றது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வதில் அவ்வளவு ஆவல் கிடையாது. இந்நிலைமை மாறிக்கொண்டு

வருகிறது என்பது உண்மையே. ஆனல் இந்த மாறுதல் மிகவும் மெதுவாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையை உத்தேசித்தே இந்திய அரசு ஒவ்வொரு இந்திய மொழியிலிருந்தும், தற்காலத்திய இலக்கியத்திலிருந்தும் தெரிந்தெடுத்த நூல்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான திட்டமொன்றை வரைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மக்கள் படித்து மகிழக்கூடிய நூல்கள் அதாவது கதைகள், புதினங்கள், இன்பமளிக்கும் புராண வரலாறுகள், சுயசரிதைகள் போன்றவை தெரிந்தெடுக்கப்படும். மிகச் சிறந்தவையும், மக்களிடையே பிரபலமடைந்தவையும், அந்தந்த மொழிப் பகுதியில் வாழும் மக்களுடைய நடை உடை பாவனைகளையும், வாழ்க்கை முறைகளையும், சமூக நிலைகளையும் கண்ணுடிபோலப் பிரதிபலித்துக் காட்டக்கூடியவையுமான நூல்களே இத்தொடரில் தெரிந்தெடுக்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாகப் பல்வேறு மொழிகள் பேசுவோரிடையே பரஸ்பரப் பரிவுணர்வும் ஒற்றுமையும் வளருமென நம்புகிறோம்.

வெவ்வேறு மொழிகளின் சிறந்த படைப்புக்களைத் தெரிந்தெடுப்பதும், அவற்றை மொழிபெயர்ப்பதும் எளிய காரியமல்ல. இப்பணியில் எங்களுடைய ஆலோசனைக் குழுவினருக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நாங்கள் கடமைப்பட்டவராவோம். அவர்கள் வழி காட்டி, உதவி செய்து, ஒத்துழைப்புத் தராவிடில் இந்தத் திட்டத்தை வெற்றிப் பலனுடன் செயலாக்குவது முடியாது.

—பாலகிருஷ்ண கேஸ்கர்.

முன்னுரை

தாராசங்கர் பந்த்யோபாத்யாயரின் '**கவி**' என்ற நவீனம் முதன் முதல் வெளிவந்தபோது எனக்கு வயது ஏழு—1941 ஆம் ஆண்டு. அவர் அச்சமயம் தம் நாற்பதாவது வயதைக் கடந்துவிட்டார். என் போன்ற இளைஞர் சிறுகதை, நவீனங்கள் படிக்கத் தொடங்கிய சமயம் தாராசங்கர் புகழ்வான் உச்சியில் நின்றார். '**கவி**' என்ற இந்த நவீனம், அக்காலத்திலேயே ஆர்வலர் விழைந்து போற்றிய நூலாகத் திகழ்ந்தது. தாராசங்கருக்கும் என்போன்ற இளைஞருக்கு மிடையே ஒரு தலைமுறைக் காலம் வித்தியாசப்பட்டாலும் நாங்கள் அவருடைய இலக்கியப் படைப்பின் சுவையில் ஆழ்ந்து திளைத்தவ ரானோம். அவருக்கே உரித்தான விரிவுடைய படைப்புத் திறன், மனித உள்ளங்களை நுணுகி ஆராயும் ஆற்றல் இவை, எச்சமயத்திலும் எங்களுக்கு அவர்பால் ஈடுபாட்டையும், வியப்பையும் தூண்டின எனலாம்.

வங்க இலக்கியத்தில் '**கவி**' இன்னும் மழுங்காப் புகழுடன் நிலைத்து வருகிறது. ஐரிஷ் புலவர் ஒருவரைப் பற்றிக் கூறுவ துண்டு—முப்பது ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் அவர் காலத் துடன் சமமாகச் சென்ற எழுத்தாளரென்று. இந்தக் கூற்று தாரா சங்கருக்கும் பொருந்தும்.

ரவீந்திரர் காலமான ஆண்டில் வெளிவந்த இந்த நவீனம் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். இலக்கியத்தில் ஒரு புதிய திருப்பம் சில ஆண்டுகளாகத் தொடங்கி வருகிறது. ரவீந்திரர் மறைவுக்குப் பிறகு அது மேலும் உருவான வளர்ச்சிப் பெற்றுவிட்டது. இது குறித்து ஆய்வதன் முன் இப்போக்கு தோன்றக் காரணமாக இருந்த நிலைகளைப் பற்றிச் சுருங்கக் கூற வேண்டியன சில உள.

இந்நூற்றுண்டுத் தொடக்கத்திலிருந்து இரண்டாம் உலகப்போர் நடந்த காலம்வரை விரிந்துள்ள காலம், ரவீந்திரர் வங்கஇலக்கி யத்தில் தனிப்பெரும் ஆட்சி செலுத்திய பகுதியாகும். அவருடைய நூல்கள் பாரதத்தின் வெவ்வேறு மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பெயர்க்கப்பட்டமையால் அவருக்கு இந்த ஆதிக்கியம் ஏற்பட்ட தாகும். இது இங்கு நம்முடைய சருச்சைக்குரிய விஷயமன்று. அவர் வங்க இலக்கியத்தின் முழுப் பிராணனாக இருந்தார். இதில்

கருத்து வேறுபாட்டிற்கே இடமில்லை. அவரைப் போன்ற மேதா விலாசமுடைய எழுத்தாளரை உண்மையில் காண்பதரிதே. நம்மிடைப் பலர் எப்பொழுதுமே வெறுப்புற்றுப் பல காரணங்களுக்காக அவருடைய இலக்கியங்களை எதிர்த்துள்ளோம். ஆனால் உளம் விண்டுரைப்பின் ரவீந்திரரின் பரந்த அறிவாற்றலை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். இதனை ஏற்காதவர் பொய்யர், கயவர் என்றே கூறுவேன். அவர்கள் எழுத்தாளரே அல்லர்.

கவிதை, நவீனம், சிறுகதை, பாட்டு, கட்டுரை இத்துறைகள் அனைத்திலும் ரவீந்திரர் வியன்பெரு சாதனைகள் புரிந்தவர். வாழ்வு இறுதிவரை அவர் பல கவிதைகளைப் புனைந்தவர்; நவீனங்கள், சிறுகதைகள், பாடல்கள் கணக்கற்று யாத்தவர். ஆனால் அவை யாவும் இன்று மக்கள் மறந்து போனவை. பள்ளிகளிலும், கல்லூரி களிலும் பாடநூல்களாகவே தலைக்காட்டுகின்றன. ஆனால் காவியத் துறையில் காஜி நஜ்ருல் இஸ்லாமையும், நவீனத்தில் சரத்சந்திர சட்டோபாத்யாயரையும் இன்னும் வாசகர்கள் மறக்கவில்லை.

நவீனத்தையே எடுத்துக்கொள்வோம். நவீனம் என்ற பெயருக்கு ஏற்ப ரவீந்திரனின் ஆக்கங்கள், அவற்றிற்குரிய லட்சணங்களைக் கொண்டனவா என்ற வாதம் இருந்து வருகிறது. நவீனமோ இல்லையோ, அவற்றின் இலக்கியத் தரம் அசாதாரணமானது.

குணசித்திரங்களை நுணுகி ஆராய்வது, உயிர் பெய்து பாத்திரங் களைப் படைப்பது, மொழியைச் சிறப்பாகக் கையாளும் விதம்- இவற்றில் அவருடைய நவீனங்கள் நிகரற்றன. இது தவிர, நவீனம் என்பது மலையைப் போல் அசையாது நிற்கும் ஒரு விஷயமன்று. சொல்லப்போனால் ரவீந்திரரின் நவீனங்களும் நாடகங்களும் கற்றறிந்த வங்காளி ரஸனைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. ஆனால் ரவீந்திரர் வாழ்ந்த காலத்திலேயே நவீனத்தில் ஒரு புதுமையைப் புகுத்தியவரென்று சரத்சந்திரரை மக்கள் வெகுவாய்ப் போற்றத் தொடங்கினர். திறனாய்வோர், சரத்சந்திரர் சிறந்த நாவலாசிரியர் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் வாசக பெருமக்கள் அவரைப் புகழ்ந்து பாராட்டினர். ரவீந்திரரிடம் காண்பனபோல் ஆழ்ந்த உணர்வும், வளமார் மொழிச்செறிவும் சரத்சந்திரரிடம் இல்லை. ஆனால் சரளமான நடையில் மக்கள் எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கதைகளைப் புனைந்து அவர் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டார்.

கதைகள் புனையும் விஷயத்தில் சரத்சந்திரர் அப்படித் திறமையில் குறைந்தவர் அல்லர். ஆனால் வங்க இலக்கியத்தில் ஒரு தனிப்பட்ட

பாணியை உருவாக்க அவரால் இயலவில்லை. சரத்சந்திரரை அடியொற்றிச் சென்ற எழுத்தாளர் எண்ணிக்கையில் சிலரே. வங்க இலக்கியத்தின் போக்கு ரவீந்திரரைக் குறிக்கோளாக் கொண்டே சென்றதெனலாம்.

1924-25 ஆண்டுகளில் ரவீந்திரரை எதிர்க்கும் இயக்கம் தோன்றியது. அந்நாளைய இளம் எழுத்துவல்லார் வெளிப்படையாக ரவீந்திரரை ஏற்க மறுத்துப் புது இலக்கியத்தின் கோஷத்தைக் கிளப்பினர். கவிதை, சிறுகதை, நவீனம்—இத்துறைகளில் இந்த இளம் எழுத்துச் சிற்பிகள் யாவரும் மேலைநாட்டு இலக்கியத்தில் துளைந்தவர். இவர்களில் பலர் ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர்கள். ரவீந்திரனின் இலக்கியத்தில் காண்பதற்கரிதான சேரிமாக்கள், கரிச்சுரங்கத்து வாழ்க்கை, காட்டகத்தில் திரியும் பழங்குடிகள் இவர்களை வைத்து அருவருக்கத் தக்கதும், ஆண் பெண்பாலாரின் காமவிழைச்சைக் கூறுவதுமான ஆபாசங்கள் இப்புது இலக்கியத்தில் மணத்தன. ரவீந்திரரை வெறுப்போர் இது போன்ற விரசங்களைத் தாராளமாகத் தம் படைப்பில் புகுத்தினர். அச்சமயம் வங்க இலக்கியத்தில் இந்த உத்வேகமும், பரபரப்புமே மண்டிக் கிடந்தன எனலாம்.

ரவீந்திரரைப் பின்பற்றும் அல்லது அவரது நிழலையொத்த எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ரவீந்திரரை வெறுப்போரான இலக்கியச் செம்மல்கள் கவிர்ச்சி மிகுந்தவர். வருந்ததற்குரிய விஷயம் என்னவென்ருல் ரவீந்திரரை வெறுப்போர் இலக்கியத்தில் தரமானது எதையுமே படைக்காமல் போனதேயாம். அனுபவத்தில் பெருத விஷயங்களைக் கொண்டு புதுமை இலக்கியம் படைக்கும் குருட்டார்வத்தில் சாரமற்ற ஒன்றையே உருவாக்கினர். கவிதை வரைக்கும் ஓரளவு புதியன புகுத்த முயன்றனர். ஆனுல் நவீனத்தில் அவர்களுடைய முயற்சி வெற்றி பெறவில்லை.

ரவீந்திரருக்குப் பிறகு முக்கியமாக மூன்று நாவலாசிரியர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளனர். இவர்கள் எவரும் ரவீந்திரரை வெறுக்கும் குழாத்தில் சிக்காதவர்கள். இவர்கள் தம் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் தமக்கே உரித்தான பாணியில் நாவல்களை வரைந்தனர். அதிலிருந்து இலக்கியமே தனியான பாதையைக் கோலிக் கொண்டது. ரவீந்திரரின் எதிரிகள் நடத்தும் கிளர்ச்சி பற்றி இவர்கள் தம் மூளையைக் குழப்பிக் கொள்ளவில்லை. இம் மூவரும் வங்க இலக்கியத்தில் ‘முப்பெரும் பானர்ஜிகள்’ என அழைக்கப் பட்டனர், விபூதி பூஷண் (பதேர் பாஞ்சாலியின் ஆசிரியர்)

மாணிக் (புத்துல் நாச்சேர் இதிகதாவை எழுதியவர்) தாராசங்கர் (கணதேவதாவின் சிற்பி).

இந்தப்படி, ரவீந்திரர் மறைந்த ஆண்டில் '**கவி**' என்ற நவீனம் இன்றைய வங்க இலக்கியத்தின் ஒரு திசைக் காட்டியெனத் தெற்றெனக் கூறலாம். இந்த நூலை நான் முதன்முதல் படித்து நுகர்ந்த இன்பம் இன்றும் என் மனத்துள் பதிந்து இருக்கிறது. இன்னும் தொடராதா, எங்கேயாவது நின்றுவிடுமோ என்றெல்லாம் என் மனம் அலைபாயும். அதைப் படித்து முடித்ததும் நான் மெய் மறந்து ஒரே இடத்தில் அமர்ந்து விட்டேன். கண்களில் நீராக வடிந்தது. இளம் வயதில் இப்படி ஒரு புனிதமான கண்ணீர் உள்ளூரப் பொங்கி எழுவது உண்டா? அந்தோ, அன்று நான் பெற்ற அனுபவம் மீண்டும் திரும்பி வருமா? புத்தகத்தைப் படிக்கும் போதெல்லாம் ஒரு வகை வேதனை என்னை அழுத்திக்கொண்டே இருக்கும். இனமறியாத ஒரு தனிமையையே குறிப்பது இந்த வேதனை. கூரிய அறிவு படைத்த வாசகர்கள் இது என்னவென்று புரிந்து கொள்வர். பெரியதோர் இலக்கியத்தைப் படித்து இத்தகைய துயரின் துடிப்பைப் பெற அடிக்கடி நம் உள்ளம் அவாவுகிறது.

தாராசங்கரின் முதல் ஆக்கங்களான நவீனங்கள், ஆரோக்கியம் நிரம்பிய நல்லகாற்றென வங்க இலக்கியத்தில் புகத் தலைப்பட்டன. ரவீந்திரரை வெறுப்போரின் பக்குவப் படாத பிஞ்சுமொழியும், இக் காலத்தை நகல் செய்யும் இலக்கிய அட்டூழியங்களும் படிப்பவருக்குச் சலிப்பையே தந்தன. இத்தகைய சந்தர்ப்பத்தில் தாராசங்கர், நாம் வாழ்க்கையில் காணும் ரத்தமாமிசமான மனிதர்களையும், அவர் களுடைய இன்பதுன்பங்களையும் படம் பிடிக்கும் நவீனங்களையே படைத்தார். இந்த நாட்டின் மண், நீர், காற்று இவற்றின் மணம் நிரம்பிய, நம் கண்முன் உலவுவோரின் அப்பு அழுக்கற்ற சித்திரங் களே இவற்றில் உள்ளன. எளிய மக்கள், வறுமையில் உழல்வோர் இவர்களைச் சித்திரிப்பது ஒருபுறம் இருக்க, தாராசங்கர் இதற்கும் மேலானதோர் நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறார். அவருடைய நவீனங்களில் கதையம்சத்தின் கவர்ச்சி அசாதாரண மானது. ரவீந்திரரே தாராசங்கரிடம் கூறியுள்ளார்—'நீ எழுதும் கதை ஏதோ எழுதுவதற்கென்று எழுதியதன்று. இப்படி அமைவது தான் எனக்குப் பிடித்திருக்கிறது.'

வங்க நாட்டின் குறிப்பிட்டதொரு பகுதியில் வாழும் மனிதர்களைப் பற்றியே தாராசங்கரின் இலக்கியம் அதிகமாக அமைந்துள்ளது. வாலிபம் இளமை இப்பருவங்களில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து

ஓர் எழுத்தாளன் தன் படைப்பிற்கான கருப்பொருளைப் பெறுகின்றான் என அறிஞர் பலர் கூறுவர். தாராசங்கரும் ஒரு வங்க ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்த பிள்ளை. வாழ்வின் பெரும் பகுதியைத் தம் கிராமச் சூழலிலேயே கழித்தவர். ஒடுங்கி வரும் ஜமீன்தார் குடும்பங்களைப் பற்றி அவர் நேரில் கண்ட அனுபவங்கள் உண்டு.

இத்துடன், அவர் சுதந்திரப் போராட்டத்திலும், சமூகத் தொண்டிலும் நிறையப் பங்கு கொண்டு சிறந்த பணியாற்றிய பொழுது கீழ்த்தரப்பட்ட மக்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. இலக்கியத்தை நம்பி, பிழைப்பு நிமித்தம் அவர் கல்கத்தாவுக்கு வந்தார். அச்சமயம் வறுமையில் ஆழ்ந்து, கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. அவர் இப்படிப் பெற்ற பல வகையான அனுபவங்களைத் தம் காரியத்துக்கு நன்கு பயன்படுத்திக் கொண்டார். வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து பார்க்கும் கிடைத்தற்கரிய ஆற்றல் அவருக்கு மேலும் வளர்ந்தது. இடம், காலம் இவற்றைக் கடந்து அவருடைய நோக்கு உண்மை அடிப்படையில் எழுந்து உலகு பரந்ததாகியது. சமூகத்தொண்டு புரிந்த சமயம், வெஞ்சிறையில் உழன்றபோதும் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களால்தான் அவருடைய எழுத்தில் ஆங்காங்கே உயர்ந்த லட்சியத்தின் உரத்த சங்கநாதம் கேட்கிறதோ என்னவோ!

'**கவி**'ப் புதினத்தின் தலைவன் இந்தப் பிற்போக்கான சமுதாயத்தின் அடிப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இனத்தவன். 'டோம்' என்று நாம் எவரைக் குறிக்கின்றோமோ அவர்கள், மயானத்தில் சவங்களை எரிப்பவர்களென்பதையே சுட்டும். டோம்கள் என்றால் ஒரு வகைக் கொடிய மக்கள் இனத்தவர், ஜமீன்தார்களின் பாதுகாவலர்களான சிலம்பம் பயின்ற முரடர்கள் என்றே பொருள்படும். இவர்கள் பின்பு, கொள்ளை, கொலை போன்ற கொடுமைகளைப் புரிவோராயினர். இக்காலத்தில் இவர்கள் உடல்வருந்தி வேலை செய்யும் பாட்டாளி மக்களாவர். இத்தகைய மறக்குடியில் தோன்றிய நிதாயி, ஒரு கவிஞன். நிதாயின் மாமன் ஒரு பயங்கர வழிப்பறிக்காரன். நிதாயி இத் தொழிலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் சிறு பிராயத்திலேயே அவன் மனம் நேரிய பாதையிலேயே திரும்பியது. கற்பனையில் விருப்புடையவன். கள்ளனாகப் போக வேண்டிய அவன் கவிஞனாக மாறி, இனிய பாடல்களைப் புனையலானான். இந்த நவீனத்தின் தொடக்கத்திலிருந்து இத்தகைய எழுத்திலே வல்லவனை, ஒவ்வொரு படியாக உயர்ந்த லட்சியத்திற்கு ஆசிரியர் இட்டுச் செல்வதை ஓர்கவும். தாராசங்கர் இந்த லட்சியத்தைக்

கருத்தில் கொண்டவர். இதுவே வாழ்க்கையின் தருமமாகும்; சமூகத்தின் ஆதர்சமாகும்.

இந்த நாவலின் தலைவனின் வரலாற்றை உண்மை சம்பவத்திலிருந்து ஆசிரியர் எடுத்துக் கொண்டார். பிற்காலத்தில் தாராசங்கர் தமது 'ஸ்ம்ருதி கதா' (நினைவுகள்) என்ற நூலில் இதுபற்றி விரிவாக வருணித்துள்ளார். அவருடைய கிராமத்து ரெயில் ஸ்டேஷனில், இதுபோன்ற ஒரு டோம் யுவகன் கூலி வேலை செய்பவன். 'கன்னங்கரேலென்று நிருநிருவென்று இருப்பான். ஏதோ சுமாராக எழுதப் படிக்கத் தெரியும். ஸ்டேஷனில் மூட்டைத் தூக்கி அதில் கிடைக்கும் ஊதியந்தான் பிழைப்பிற்கு. தனக்குத்தானே பாடிக் கொண்டே திரிவான் எங்கும். ஒரு நாள் பார்த்தேன், ஆள் நடமாட்டமிராத மாந்தோப்பில் மரங்கள் அவனுக்குச் செவி சாய்க்க, அவன் கையை கன்னத்தில் ஒருபுறமாக அழுத்தியவாறு, மற்றொரு கையை ஆட்டியபடி, சற்றுக் கூனிக்கொண்டு 'கவி' பாட்டுக்களைப் பாடிக் கொண்டே போனான். இதை வைத்துக் கொண்டு என் கதையைத் தொடங்கினேன்' என்கிறார்.

உண்மையில் நடப்பதற்கும், இலக்கியத்தில் வரும் நிகழ்ச்சிக்கும் இடையே எத்தனையோ வேற்றுமை. உண்மையில் நிகழ்ந்ததை வைத்து இந்த உணர்வும் ஊக்கமும் பிறந்தாலும் கதையில் வரும் தலைவன் மெல்ல மெல்லத் தனக்கு இயல்பான உன்னதநிலைக்கு வருவதை ஆசிரியர் தம் திறமையால் அமைக்கிறார். வாழ்வில் உள்ளதுபோல் கதையில் வருகிறதா இல்லையா என்று ஆராய வேண்டிய தேவையே இல்லை. இது முற்றிலும் ஒரு நம்பிக்கையின் பேரில் எழுதுவதாகும். இந்த உண்மையைத் தவிர்த்து இக் கதைக்கு ஏற்புடைமை இன்னும் ஒன்று உள்ளது. அந்த நோக்கிலிருந்து பார்த்தால் இந்த குணச்சித்திரம் பயனுள்ள படைப்பாக அமைகிறது. உண்மை அனுபவம், படைக்கும் திறமையில் தீவிரம் இவை இன்றேல் இந்த ஏற்புடைமை கைகூடாது.

'கவி' முதலில் ஒரு சிறுகதை உருவில் வந்தது. அப்போது அதில் ஜுமுர் பாடக கோஷ்டியே வரவில்லை. பின்னர் நவீனமாக அக் கதை உருவெடுத்தபோது இந்த இரண்டாவது அம்சம் அதில் இடம் பெற்றது. இவ்விரு பகுதிகளிலும் ஓர் இடைவெளி தென்பட்டாலும் வஸனைப்போல் ஓர் அபூர்வமான பெண்ணின் குணச்சித்திரம் நம் இலக்கியத்திற்குக் கிடைத்த வெற்றியே எனலாம். இந்த வஸனின் பாத்திரமும், தாராசங்கர் உண்மை வாழ்விலிருந்தே எடுத்துக் கொண்டதாகும். அவருடைய கிராமத்தில் ஸ்டேஷன் பக்கமாக

உள்ள தோப்பில் ஜுமுர் கோஷ்டி வந்து இறங்கும். அதில் வஸன் என்ற பெயருடைய ஒரு பெண்ணுக்கு காலரா நோய் கண்டது. சமூகம் வெறுக்கும் பல தீய பழக்க வழக்கங்கள் மலிந்த இந்த எளிய மக்கள் தம்மில் யாருக்காவது காலரா நோய் கண்டால் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் போய் விடுவார்கள். சமூகத் தொண்டில் ஈடுபட்ட தாராசங்கர் அப்போது காலரா நோய் தணிவதற்கு ஊசி போட முன் வருவது வழக்கம். இப்படிச் சிகிச்சை செய்கையில் அவர் இந்த வஸனைக் கண்டார். இந்த ஜுமுர் கோஷ்டியாருடன் அணித்தாகப் பழகி, பல விஷயங்களை நேரில் கண்டறிந்து விசித்திர அனுபவங்களைப் பெற்ருர்.

'**கவி**' நவீனத்தில் மற்ற எல்லாவற்றையும்விட அதில் வரும் பாட்டுக்களே உயர்ந்த பொக்கிஷமாகும். இந்தப் பாட்டுக்கள் தாராசங்கர் திரட்டியவை அல்ல. அவரே சொந்தமாக யாத்தவை. அவர் ஒரு கவிஞரென்று யாருமே அறிந்திருக்க மாட்டார்கள். ஆனுல் இதுபோன்ற பாணியில் பாடல்கள் இயற்றுவதில் அவருக்கு இணை எவருமில்லை. '**கவி**'யில் வரும் பாடல்கள், கதையுடன் அதில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்றபடி இழைந்து செல்கின்றன. உள்ளத்தில் உணர்ச்சிப்பெருக்கு குமிழ்க்காதுபோனுல் இவை போன்ற பாட்டுக்களை எழுதவே முடியாது. அவருடைய 'நினைவுகள்' என்ற நூலிலிருந்து இப்பாடல்கள் எழுந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம். வீட்டில் அறையொன்றில் தாராசங்கரின் மனைவி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிருர். அதே அறையில் ஒரு பக்கம் தம் மடிமீது ஒரு சிறு ஸூட் கேஸ்ஸை வைத்தபடி ஒரு காகிதத்தில் அவர் பாடல்களைப் புனைகிருர். நடுநடுவே பிணியுற்ற இல்லாளைக் கவனிக்கிருர். மீண்டும் பாட்டெழுதுவதில் ஆழ்ந்து விடுகிருர். இப்படிச் சில அடிகளை இயற்றியதும் எழுந்து, தம் அண்டை வீட்டுக்காரரான பிரபல ஓவியர், யாமிநீ ராயைக் காணப் போகிருர். திரும்பி வந்து குறையாக நின்ற பாட்டைப் பூர்த்தி செய்கிருர். மற்ருென்றை எழுத அழகிய சொற்களைத் தேடுகிருர். இது அல்லவோ உணர்ச்சிப் பெருக்கு! இப்பாடல்களை வேறு மொழியில் பெயர்த்தால் அவற்றின் சுவை மாருமல் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. இதில் மிளிரும் சொற்கள் ஒரு சாரார் பேசும் கொச்சைமொழிகள் அல்லவா. இதுவே இப் பாடல்களுக்குரிய சிறப்பு!

வாசக நண்பர்களே, '**கவி**' என்ற நவீனத்தைப்போல் அப்பட்டமான உணர்ச்சி பொங்கித் ததும்பும் ஓர் இலக்கியத்தைப் படிக்க முனைவீர். காதல், கலுழ்ச்சி இவற்றின் கதையை எத்தனை ஆழ்மை

யுடனும், உருக்கத்துடனும் ஆசிரியர் வருணிக்கின்றார்! அதன் எதிரே என்னுடைய இந்தப் பீடிகை வெற்றுச் சொற்களாகவே தோன்றும்.

—ஸுநீல் கங்கோபாத்யாய்.

I

இது வியத்தற்குரிய நிகழ்ச்சியே அன்று; ஆனால் உலகில் இப்படியும் நிகழ்வதைப் பார்க்கிறோம். கொள்ளை, வழிப்பறி இவற்றைத் தொழிலாகக் கொண்ட ஒரு வம்சத்துப் பிள்ளை, திடுமென ஒரு கவிஞனாக மாறிவிட்டான்.

இப்படியும் நடக்குமென்பதற்கு நமக்கு வேண அத்தாட்சிகள் உள்ளன—அசுரர் குலத்தில் பக்தன் பிரஹ்லாதன் தோன்றவில்லையா? ஆனால், அது கடவுளின் திருவிளையாடல் என்று சொல்லிவிடலாம். ஊமையை நா படைத்த புலவனாக மாற்றவும், முடவனை மலை முகட்டைக் கடக்கச் செய்யவும் வல்ல அப் பரம் பொருளின் விருப்பத்தால் அசுரர் குலத்தில் பிரஹ்லாதன் பிறக்க நேர்ந்தது. ராமாயணக் கவியான வால்மீகி ஓர் ஆறலைக் கள்வனே; ஆனால் பார்ப்பன குலத்தவன். இங்கேயும் கடவுளின் லீலையைப் பார்க்கிறோம். கொடுமை மிகுந்து குற்றமே புரியும் 'டோம்' இனத்தவன், திடுமென ஒரு கவிஞனாக வெளிப்படுவதை, கடவுள் விரும்பிய செயலா என்ற விஷயத்தை ஆராயப் புகுவதற்கு வேண்டிய சாஸ்திர சம்மதங்கள் இல்லை. சொல்லப் போனால், இதைக் கூறும் பொழுதே நமக்கு உடல் சிலிர்க்கிறது. ஆனால் இப்படி நிகழ்வதை உலகத்தவர் ஒரு பேராச்சரியம் என்று கருதினர்; வியப்பையும் அடைந்தனர்.

கிராமத்துப் பிரமுகர்களும், 'இது ஒரு அதிசயமே; இதுவரை பார்க்காததொன்று' என்றனர். கல்வியறிவில்லாத ஹரிஜனங்களும் 'அடேயப்பா, இந்த நிதாயிசரண் இப்படி ஆவான் என்று நாங்கள் நினைக்கவே இல்லே; அதிசயம்தான்' என்றனர்.

நிதாயிசரண் பிறந்த அக்குடியினர் ஹிந்து சமூகத்தில் மிகக் கீழ்த்தரமான டோம் ஜாதியைச் சேர்ந்தவர்கள். நகரங்களில் டோம்கள் எந்த நிலையைச் சேர்ந்தவர்களென்று எண்ணுகிறோமோ, அந்நிலையில் உள்ளவர்களல்லர் இவர்கள். இந்த டோம் இனத்தவர் வங்காளத்திலேயே புகழ்பெற்ற சிலம்பக்காரர்கள் (கோல் விளையாட்டில் வல்லவர்கள்). பழமை முதற்கொண்டே தோள் வலிமைக்கு இவர்கள் பெயர் போனவர்கள். இவர்களை வீர்வம்சி என்று மக்கள் அழைப்பர். நவாபின் படையில் இவர்களே அதிக

மாகச் சேர்ந்து, தம் வீரப் பிரதாபங்களைக் காட்டியுள்ளனர். கம்பெனி ஆட்சியில் இவர்கள் சேவையிலிருந்து விலகி, கட்டுக்கடங்காத கொடுமைமிக்க கொள்ளைக் கூட்டத்தவராக மாறினர். போலீஸ் வரலாறும் இந்த டோம் குலத்தவர் புரிந்த அட்டூழியங்களைப் பற்றிக் கூறுகிறது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த இந்த டோம்களின் உடலில் இன்னும் அந்த இரத்தவெறி ஓடிக் கொண்டுதான் இருக்கிறது. இதைக் கட்டுக்கு மீறிச் செல்லவிடாமல் போலீஸ், இரும்பால் அணை போட்டிருக்கிறது. கை விலங்கு, காலில் இரும்புச்சங்கிலி, உடலை வருத்தும் கடினப்பணி இவற்றால் இவர்களது கொற்றத்தை ஏறக் குறைய ஒடுக்கிவிட்டது. இவை போதாவென்று ராணுவ ரீதியான தண்டனைகளையும் விதித்திருந்தனர். இருப்பினும், எங்கேயோ ஒரு புரைசல் வழியாக இவர்கள் உள்ளத்தில் கரந்துள்ள அந்தக் கொடூர குணம் எப்போதாவது தலைக்காட்டாமல் போய்விடுவதில்லை. இன்னும் அது இருக்கத்தான் செய்கிறது. நிதாயியின் மாமா கௌர் வீர்வம்சி; அதாவது கௌர் டோம், அந்தப் பிராந்தியத்திலேயே பயங்கரமான கொள்ளைக்காரன். சில ஆண்டுகளுக்கு முன்புதான் அவன் அந்தமானில் கைதியாக ஐந்தாண்டுகள் தண்டனை அனுபவித்துவிட்டு வீடு திரும்பியிருக்கிறான்.

நிதாயியின் தாய்வழிப்பாட்டன்—கௌரின் தந்தை, சம்பு வீர் வம்சி இதேபோல் அந்தமானுக்குச் சென்று அங்கேயே உயிரையும் துறந்தான்.

நிதாயியின் தகப்பன் ஒரு கன்னக்கோல் திருடன். அவன் பாட்டன் ஒரு தடி சுழற்றி. தன் சொந்த மருமகனையே ஒரு காரிருளில் ஏதோ வழிப்போக்கன் என்று நினைத்து மடக்கி, தடியால் கொன்று போட்டுவிட்டான். மாப்பிள்ளை - கொலை - செய்தான் மைதானம், அவ்வூரிலிருந்து சில மைல் தொலைவில்தான் இருக்கிறது.

இப்படி இவர்களுடைய முன்னோர்கள் புரிந்த அருஞ் செயல்கள் பற்றிய முழு வரலாறு போலீஸ் ரிகார்டுகளில் உள்ளன. அவை நம் இரத்தத்தை உறையச் செய்யும் பயங்கரமான செயல்கள்.

இந்த நிதாயிசரண் இத்தகைய குலத்தில் உதித்த மகன். ஒரு கொலைகாரனின் பெண் வயிற்றுப் பேரன்; ஒரு வழிப்பறிக் கொள்ளைக் காரனின் மருமான்; ஒரு கோல்காரனின் சொந்தப் பெயரன்; கன்னக் கோல் திருடனின் மகன் அவன். நிதாயியின் தோற்றமும் இத்தகைய வம்சத்தின் அச்சில் வார்த்ததுபோல் அமைந்திருந்தது. நரம்பு வார்ந்த இரும்புக் கட்டான தேகம்; நல்ல உயரம்; இருள் கருமை நிறம்; பெரிய பெரிய கண்கள் அவனுக்கு. அடக்கமும், இரக்கமும்

மலிந்த நோக்கு. இந்த நிதாயி, திடுமெனக் கவிஞனாக மாறி விட்டான். எல்லோரும் அவனையே வியப்புடன் நோக்கினர். அவன் வெட்கத்தால் தலை தாழ்ந்து, இரு கை குவித்து, இளகிய பார்வையுடன் தரையையே நோக்கினான். அவன் உதடுகளில் சற்றே நெளியும் ஒரு வெட்கச் சிரிப்பு.

இப்படி நிகழ்ந்தது—

இந்தக் கிராமத்தின் பழைய பெயர் அட்டஹாஸம். ஐம்பத்தொரு சக்தி பீடங்களுள் ஒன்று அங்கிருந்தது. அங்கே கோயில் கொண்டுள்ள அதிதேவதையின் பெயர் சாமுண்டா. மாசி பூர்ணிமையில் இவளுக்கு ஆற்றப்படும் பூஜை மிகவும் விசேஷ மானது. இதன் நிமித்தம் இங்கு மாபெரும் மேளா ஒன்று கூடும். இந்த மேளாவில் புலவர்களின் போட்டி ஒரு முக்கிய அம்சமாகும். நோட்டன்தாஸ், மஹாதேவ பால் இவர்களிருவரும் அந்தப் பக்கத் திலேயே பிரபலமான கவிவாணர்கள். இவர்களது பாட்டுச் சவால்கள் இங்கேதான் நடைபெறும். இந்தத் தடவை, இதைப் பார்க்கப் பிற்பகலிலிருந்தே ஜனங்கள் கூடிவிட்டனர். சாயங்காலம் ஆவதற்குள் இம் மக்களின் நெரிசல் மேலும் அதிகமாகிவிட்டது. இரண்டாயிரத்துக்குமேல் இருந்தனர். ஆடம்பரமாகத் தொடங்கியது கவியரங்கு. மாலை நேரம் ஆக ஆக வெளிச்சத்திற்காக 'பெட்ரோ மாக்ஸ்' விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிர்ந்தன. இந்தப் பாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளும் மஹாதேவ பாலின் கட்சியினர் மேடையில் அமர்ந்தனர். ஆனால் நோட்டன் தாஸ், ஆளே தென்பட வில்லை. அவனை அழைத்துவரச் சென்றிருந்தவனும் வெற்று ஆளாகத் திரும்பி வந்து, 'வீட்டில் ஆளையே காணோம்; அங்கே ஒரு சாமானும் இல்லை; வீடு வெறிச்சோடியிருந்தது. ஒரே ஒரு ஜமுக்காளம் மட்டும் கிடந்தது; அதுவும் நாம் கொடுத்ததுதான்' என்றான்.

இதைக் கேட்டதும், மேளாவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் திடுக் கிட்டு என்ன செய்வதென்று புரியாமல் விழித்தனர். இதற்குள் குழுமியிருந்த மக்களிடமிருந்து ஆரவாரமும், சீழ்க்கையொலியும் வந்தன.

இப்படி அந்த நோட்டன் செய்தது மிகவும் அநியாயம் என்பதில் சந்தேகமே இல்லை. சொல்லப்போனால் இது நோட்டன் தாஸின் தவறே இல்லை. போன தடவையே அவனுக்குக் கொடுக்கவேண்டிய பணம் பாக்கி யிருந்தது. அந்தத் தடவை மேளாவுக்கெனத் திரட்டப் பட்ட சந்தாத் தொகை விஷயமாக ஏதோ குழப்பம் நடந்திருக் கிறது. அதனாலேயே சாமுண்டாவின் மஹந்து (கோயில் நிர்வாகி)

குழுவினர் தலையில் வில்வ இலையை வைத்து ஆசி கூறும்போது, 'அடுத்த தடவை அப்பன்மாரே......அடுத்த தடவை இந்தக் கவி யரங்கைக் கூட்டுவதற்கு முன்பே எனக்குச் சேரவேண்டிய இரண்டு வருஷ பாக்கியைத் தீர்த்துவிடுங்களப்பா' என்றுர்.

நோட்டனும், மஹாதேவனும் பல வருடங்களாக இந்த மேளாவில் கவிப்போட்டியில் ஈடுபட்டவர்கள். பொங்கும் காலங்களில் இந்த மேளாவில் நல்ல சம்மானங்களையும் பெற்றிருக்கின்றனர். நன்றியறி தலுக்காகவோ அல்லது உலகத்தவர் எதிரே விழிக்கவேண்டுமே என் பதற்காகவோ இவர்கள் போன தடவை கொடுத்ததைப் பெற்றுத் திருப்தி அடைந்தனர். இந்தத் தடவை நோட்டன் மஹந்தை வணங்கி, கையை ஏந்தியபொழுது அவர் பணத்துக்குப் பதிலாக, செக்கச் செவேலென்ற செம்பருத்திப் பூவை வைத்தார். 'எல்லா மங்களமும் உண்டாகட்டுமப்பா' என்று ஆசீர்வாதம் செய்தார். அங்கே குழுமியிருந்தவர்களில் பலர் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த கௌரவ மனிதர்கள். அவர்களுடன் இதைப் பற்றிய பேச்சு நடந்து கொண்டிருந்தது. இது முடிவதற்கு நோட்டன் காத்துக்கொண் டிருந்தான். மேளாவுக்குத் தண்டப்பட்ட தொகை, தேவி சாமுண் டாவின் பீடத்துக்காகும் வரவு செலவு கணக்கு இவை பற்றி விசாரணை நிகழ்ந்தது. மஹந்து கோயில் வருவாய், நித்திய நைமித்திக மற்ற வகையருவுக்காகும் செலவுப் பட்டியல் யாவற்றையும் விளக்க மாகக் கூறி, 'அன்னை சாமுண்டா பேரில் 'பாண்டு' எழுதித் தந்தால்தான் சமாளிக்க முடியும். உங்களில் யாராவது கடன் தர முன் வாருங்களேன். இப்படி ஒரு நல்ல காலம் மீண்டும் வராது. சாக்ஷாத் அம்பாளின் கை முத்திரையிட்ட நோட் ஐயா! இதைப் பெற்றுக் கடன் தாராளமாக வழங்குவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதனுல் உங்கள் செல்வம் நூறு மடங்கு பெருகுமே. குபேரனே இந்தப் பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்துப் போடுகிருன். இந்த அறக்கட்டளைக்கு நீங்கள் வழங்கும் திரவியம் இம்மையில் அமோக ஐசுவரியத்தையும், மறுமையில் முழு மோக்ஷத்தையும் அசலும் வட்டியுமாகத் தருமே...' என்றதும், 'ஹ...ஹ' என்று சிரித் தார். மற்றவர்களும் கூடவே சிரித்தனர். நோட்டனும் சிரித்தான். அவன் புத்திசாலி. கூட்டத்திலிருந்து தலை மறைந்துவிட்டான்.

நோட்டனுடைய வீட்டில் அச்சமயம் புதிதாக வேற்றூர் கோஷ்டி யொன்று அவனை எதிர்நோக்கியிருந்தது. அவ்வூரிலிருந்து இருபது கல் தொலைவில் ஒரு மேளா நடக்கிறது. அதில் ஆர்ப்பாட்டமான ஏற்பாடுகள்...அங்கு நடக்கும் பாட்டுப் போட்டிக்கு நோட்டன்

தாஸைப் பயன்படுத்திக்கொள்ள ஆட்கள் வந்திருந்தனர். இங்கே நடக்கப்போகும் கவியரங்கு முடிந்த பின்னர் போகவேண்டும். கடைசி தினத்தன்று தலை காட்டிவிட்டு நழுவிவிட்டால் எவரும் கேட்கப் போவதில்லை. இவ்வூராரிடமிருந்து எதிர்பார்த்த சம்மானம் என்னவோ கிடைக்கப் போவதில்லை. அங்குச் சென்ருல் தட்சிணையாகப் பெருந்தொகை கிடைக்கலாம்.

நோட்டன் கை கூப்பித், தலையைத் தொட்டு, 'அம்மா சாமுண்டேசுவரி, ஜயம் உனக்கு!' என்ருன். அப்புறம், அவன் தன் பின் பாடகனைப் பார்த்து, 'அந்தப் புட்டியை இப்படித் தா. கொஞ்சம் போடாது போனுல் இந்த நோட்டனுல் முடியாது' என்ருன். இரண்டு விழுங்கு அதைப் பருகியதும், நோட்டன் உடம்பைக் குலுக்கிக் கொண்டு உட்கார்ந்தான். வந்த ஆள் நோட்டனையே நோக்கி, 'பாடகரே, நாழியாகிறது. நாங்கள் அடுத்த வண்டிக்கே திரும்ப வேண்டும், முடிவாகச் சொல்லுங்கள்' என்ருன். நோட்டன் சிரித்து, 'நானேயே பிடித்து நான் பாடினுல் உங்களுக்குச் சௌகர்யப் படுமா?' என்ருன்.

வேற்றூரான் யோசித்து, 'அப்பொழுது இங்கே நடக்கவேண்டியது?...' என்று கேட்டான். நோட்டன், 'உன் கதையைக் கவனித்துக்கொள்ளய்யா முன்னுல். எனக்கு மேல்கொண்டு ஏதாவது போட்டுக் கொடுத்தால்தான் ....' என்ருன்.

வந்தவன் உற்சாகத்துடன், 'அதற்கென்ன தாராளமாக...அப்ப... எப்போ கிளம்புகிறீர்?' என்ருன்.

'இன்றைக்கே.... இப்பொழுதே.... உன்னுடன்தான், இதே வண்டிக்கு....'

வந்தவன் மேலும் எக்களிப்புக் கொண்டான்.

'சம்மானம் தெரியுமா ? ஒரு ராத்திரிக்கு வில்லையாக பன்னிரண்டு ரூபாய்...'

'அதற்கென்ன பாடகரே..' என்ருன் உற்சாகம் துளும்ப, வந்தவன்.

'முன் பணம் ?'

அக்கணமே ஒரு பத்து ரூபாய் நோட்டு வெளியே வந்தது.

'இதோ வைத்துக்கொள்ளுங்கள் ; நம்ம ஊரில் காலை வைத்ததும் மிகுதியை அணு பைசாவுடன் தீர்த்துவிடுகிருேம்.'

நோட்டை 'ட்ரங்க்'கிலே பத்திரப்படுத்திக்கொண்டு நோட்டன் எழுந்தான். மத்தளக்காரன், பின் பாடகர்கள் இவர்களைப் பார்த்து, 'கிளம்புங்கள்' என்ருன். அழைத்துச் செல்லும் வேற்றூரானைப் பார்த்து, 'தெரிகிறதா ? போனதும் மீதி பணத்தைக் கொடுத்து விட்டு மறு காரியம் செய்யவேண்டும்' என்று எச்சரிக்கை விடுத்தான்.

இருள் மெல்லச் சூழ்ந்துகொண்டது. சால்வையில் முகத்தை மறைத்தபடியே ஸ்டேஷனுக்கு வந்து, வண்டி வந்ததும் ஏறிக் கொண்டான். ட்ரெயினும் போய்விட்டது.

இதுவே அந்நிகழ்ச்சியின் முடிவு.

நோட்டன் விட்டடித்த சமாசாரத்தைக் கேட்டதும், போட்டியில் கலந்துகொள்ளும் மற்ற பாடகனுன மஹாதேவ் பால், அரங்கில் அமர்ந்து தனக்குள்ளேயே பொருமிக் கொண்டிருந்தான். இது காறும் நோட்டனுடன் சேர்ந்து அவன் போட்டியில் தோல்வி யுற்றதே இல்லை. ஆனுல் இன்றோ உள்ளூரத் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான். நோட்டனை, பேமானி, கையாலாகாதவன் என்றெல்லாம் திட்டிக் கொண்டிருந்தான். ஒரு வார்த்தை எட்ட விட்டிருந்தால் அவனுடனேயே சென்றிருக்கலாமல்லவா?

இதற்குள் அரங்கில் ஜனங்கள் பொறுமையிழந்து கூச்சலிட்டனர். தாமதத்திற்குக் இன்னும் காரணம் முழுவதும் விளங்கவில்லை. அவர்களுக்கு, கூச்சல் காது செவிடாகும்படி இருந்தது. வேற் ருெரு பக்கம் மேளாவை நடத்துவோரும், கிராமத்து மேட்டிக் குடிகளும் நோட்டன் செய்த மோசத்தைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தனர். கோயில் மஹந்து சிந்தனையில் ஆழ்ந்து, தம் தாடியை உருவி விட்டுக் கொண்டேயிருந்தார். இடையிடையே அவர், 'மா... தாரா... மா... தாரா' என்று முனகிக்கொண்டே யிருந்தார்.

நோட்டன் ஓடி விட்டான்.... பாட்டுப் போட்டி நடக்காது—இதுவே எவர் வாயிலும் பேச்சாக இருந்தது. பார்க்க வந்தவர்கள் கூட்டம், கரை உடைந்து ஏரிநீர் புரண்டோடுவதுபோல் நாலா திசையும் சிதறிவிடும்; நீரெல்லாம் வழிந்துபோய் மிகும் வண்டல் போல் அந்த மேளாவில் புழுதியும், காலடி அடையாளங்களுமே எஞ்சி நிற்கும்.

அந்தப் பக்கம் கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள் சிலர் வைக் கோலில் பற்றிய தீயெனக் கோபமும், ஆத்திரமும் கொண்டனர். இப்பொழுதே ஒரு ஜவானைத் தடியுடன் ஏவி, அந்த நோட்டனை, கழுத்தைப் பிடித்துச் சவுக்கத்தில் கட்டி இழுத்து வந்து செருப்புப் பிய்ந்துபோகும் அளவு அவன் முதுகைப் பொத்தி, இந்த நஷ்டத் திற்கு அவனை ஈடுகட்டும்படிச் செய்ய வேண்டும்—இப்படிப் பல யோசனைகள் அவர்கள் மூளையில் பற்றியெரிந்தன. ஊர் நாட்டாண் மைக்காரர்களில் ஒருவரான, கஞ்சா அடிக்கும் பூதநாத்—பெயருக் கேற்றபடி, தக்ஷயாகத்தில் சிவபெருமான் நின்றதுபோல் உக்கிரம்

மிக்கவர்—சட்டெனத் தம் வேஷ்டிக் கச்சத்தை இழுத்துக் கட்டி ஒரு துள்ளு துள்ளினுர். 'ரெண்டே ஆள்' என்று தம் இரு விரல்களை அசைத்தார்...சற்றுப் பொறுத்து அவர், 'ரெண்டு ஆள்...ரெண்டே ஆட்களை என்னுடன் அனுப்புங்கள்...இதோ, நான் போய் என்ன பண்ணுகிறேன் பார்! அவன் இருநூறு மைல்தான் போயிருக் கட்டுமே, சிண்டைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்' என்றதும், ஒரு மிடுக்கு நடை வைத்தார்.

அதே சமயம் இவர் பேசுவதைக் கேட்ட ஒருவன் அந்த அரங்கின் ஒரு முனையிலிருந்து உரக்கவே 'அடே ராக்ஹரி, எழுந்து வாடா இங்கே' என்று அழைத்தான்.

'எதற்கடா? எழுந்தா இங்கே இடத்தை எவனுவது பிடிச்சுக் கொள்வான்'

'மகாபட்ட இடமடா...எழுந்துவாடா என்ரு? வீட்டுக்குப் போவோம்; சாப்பிட வேண்டாமா? நோட்டான்தாஸ்தான் போய் விட்டானேடா ... இங்கே ஒண்ணும் நடக்காது ... போட்டியாவது மண்ணுங்கட்டியாவது?'

'சே, பொய் சொல்றே நீ!'

'அடப்பாவி, நிச்சயமாடா'

இந்த ராக்ஹரி ஒரு ரஸிகப் பேர்வழி. அவன் அங்கிருந்தவர் களைப் பார்த்து, 'சொல்லுங்கள், போலோ ஹரி...ஹரி போல்' என்றதும், அங்கிருந்த அப்பெருங்கூட்டம் நீர்த் திரள் தளும்புவது போல் பெருத்த கோஷம் செய்தனர்—'ஹரி போல்!' (கோவிந்தா). அதாவது அந்த மேளா இப்படி முடிந்ததையறிவிக்கப் பிணத்தைத் தூக்கிச் செல்லும்போது போடும் கோஷத்தைக் கிளப்பினர். வைக் கோல் பற்றி எரிவதுபோல் ஆத்திரத்தால் எரிந்து கொண்டிருக்கும் அந்தக் கிராமப் பிரமுகர்கள், அம் மக்கள் மீது சீறத் தொடங்கினர்.

'யாரடா அவன்? எவனடா அப்படிக் கத்துறவன்?'

'பிடி அந்தப் பயலை...உதை அவனை'

பூதநாத் புலியைப்போல் ஒரு வட்டமிட்டு ராக்ஹரிக்கு மாருக அந்தக் கூட்டத்தில் அகப்பட்ட ஓர் ஆளைப் பிடித்து முன்னுல் இழுத்து வந்து, 'சோம்பேறிப் பயலே, சும்மாக் கிடடா' என்று அடித்தான்.

மற்றவர்கள் அவனைத் தணிவிக்க, 'பாவம்...போருன்...பாவம்... பூதநாத், அவனை விட்டுவிடு; கோஷம் போட்ட ராஹக்ரி இவ னல்ல...அப்பாவிப் பையன்' என்றனர்.

பூதநாத் அவனை விட்டு விட்டான்; ஆனால் எச்சரிக்கை செய்யாமல் விடவில்லை—'அடேய், கபர்தார்! இன்னொரு தரம் இப்படிச் செய்தால்...'

கூட்டத்திலிருந்த ஓர் ஆள், 'மேளா என்றால் இப்படித்தான் இருக்கும்...எல்லாம் ஒரு தமாஷ்தானே' என்றான்.

மிட்டாய்க்கார போலா—அவனும் ஒரு குட்டிக் கவிவாணன்; ஜமீன்தார் முன்பாகவே அவன் சற்றுத் துணிச்சலாக—

[1] கி கரே துயி பல்லி ஜகா
ஜாடா கோலோக் ப்ருந்தாவன்
ஜேகானே பாமுன் ராஜா, சாஷி ப்ரஜா
சாரி திகே வாம்சேர் வன்!
கோதாய் வா தோர் சாம்குண்ட, கோதாய் வா தோர் ராதாகுண்ட
ஸாம்னே ஆசே மூலோகுண்ட கொர்கே மூலோ தர்சன்.

அவன் இப்படி நையாண்டி செய்ததை நாட்டாண்மைக்காரர்கள் பொருட்படுத்தவில்லை; தமாஷ் என்று சிரித்தார்கள்.

பூதநாதுக்கு இந்த நகைச்சுவை புரியவில்லை. இப்படிச்சொன்னவனைப் பார்த்து, 'போடா...போடா போ..எதுக்கும் எதுக்கும் ஒப்பிடறே? அரிசி உமி ஆகுமாடா?' என்றான்.

'அடேய், உமியில்லாத அரிசி ஏதுடா? உனக்கு ஏனய்யா ரோசம் பொத்துக்குது? அம்மாந் தொலைவிலிருந்து பொவலை எல்லாம் பர்த்தி பண்ணிக்கினு பாட்டு கேக்கலாம்னு வந்தாக்கா, இங்கேயென்னா பாட்டுக்காரன் ஓடிட்டான்னு சொல்றாங்க..என்னமோ தமாசா நாங்க 'கோவிந்தா' போட்டாக்கா, என்னமோ துள்றியே?'

மஹந்து இப்பொழுது மஹந்து பதவியில் இருப்பவர்தான். ஆனால் அதே சமயம் அவர் தேர்ந்த 'பட்டவார்'—அதாவது ஜமீன்தாருக்கு அவ்வப்போது சூழ்ச்சிகள் சொல்லிக் கொடுக்கும் காரியஸ்தராகவும் இருந்தார். அவர் எப்போதுமே கஞ்சா அடிப்பவர்தாம். இத்தனை நாழிகை மௌனமாக பாட்டுப் போட்டி பற்றிய சிந்தனையில் ஆழ்ந்

[1] இது ஒரு பழைய பள்ளுப் பாட்டு—
எப்படி சொன்னாயடா ஜகா இந்தப் பட்டிக்காட்டை கோலோக பிருந்தாவனமென்று? இங்கே பார்ப்பான் அரசன்; உழவன் அவன் கீழ்க் குடி; சுற்றிலும் ஒரே மூங்கில் புதர். நீ சொல்லும் அந்த சாமானின் குளம் எங்கே? அந்த ராதையின் குளம் எங்கே? இங்கே உள்ளது முள்ளங்கித் தோட்டந்தானே? முள்ளங்கியைத்தான் பார்க்கலாம்.

திருந்தார். சட்டென அவர் சிந்தனை கலைந்து, 'சரி...சரி எதற்கு இத்தனை தகருர்? பாட்டுப் போட்டி நடக்கும். சிந்தாமணியில் *[1] வளைய வருகிருளே, அந்தப் பைத்தியக்காரியின் ஸதஸ் சும்மா போகாது! அவள் இருக்கிருள் நடத்திவைக்க! உங்களுக்கு ஏன் கவலை?'—என்றதும் தொந்தி குலுங்க ஒரு சிரிப்பு சிரித்தார்.

'கிடைத்து விட்டான் நமக்கு ஆள்!'

எல்லோரும் இதன் மர்மம் புரியாமல் மஹந்தையே நோக்கினர். மஹந்து, 'மஹாதேவனைக் கூப்பிடு; அவனுடைய பிரதான பின் பாடகனையும் கூப்பிடு...' என்றதும், கழுத்தை அசைத்து, 'அதுதான் சரி, குரு சிஷ்யர்களைப் போட்டிக்கு விட்டால் போகிறது. ராமராவண யுத்தத்தை விடவோ, துரோண அர்ஜுனருடைய போரை விடவோ இது எவ்விதத்தில் குறைந்ததாகும்! ராமாயணம் ஏழு காண்டம்... மஹாபாரதம் பதினெட்டு பர்வங்கள்!' என்ருர் சமத்காரமாக.

கூச்சல் எழும்பியது—'மஹாதேவ்... மஹாதேவ் ஓய் பாடகரே, உம்மைத்தான்... ஓய்... இங்கே வாரும்'

2

வேறு வழியில்லை. மஹாதேவ பால் இதற்கு இணங்காமல் எப்படி இருக்க முடியும்?

மஹந்து ஸுதுர்லப் ஆசி கூறி அவனைக் கல்ப விருக்ஷத்தின் *[2] கீழ் அமரச்செய்தார். ஜனங்கள் இதற்குள் நாற்புறமும் சூழலாயினர். இவ்வளவு ஆனபிறகு எப்படி அவன் இணங்காமலிருப்பது! ஆனல் அவனுக்கு ஒரு மத்தளக்காரனும், பின் பாடகனும் தேவைப்பட்டது. ஏறக்குறைய அதே சமயம் நிதாயிசரண் அங்குத் தோன்றினன். கைகூப்பிய வண்ணம் மிகவும் வணக்கமாக, திருந்திய மொழியில் அவையோர் முன்பு தன் விண்ணப்பத்தை அறிவித்தான்—'ஐயாமார்களே, அடிமையின் விண்ணப்பம் ஒன்றுள்ளது. உங்கள் திருவடிகளில் வணங்கிக் கேட்கிறேன்.'

[1] மகாசக்தி வீற்றிருக்கும் பிந்துஸ்தானம்

[2] நாடக அரங்கின் மேல் விதானம்.

மற்றவர்கள் வாய் திறக்குமுன் மஹாதேவ் கவிவாலா, 'இதோ நம் நிதாயியே இருக்கிருனே, நமக்கென்ன கவலே? இவன் பின்பாட்டுக்கு ஏற்றவன்' என்றதும், நிதாயியை நோக்கி, 'என்னடா உன்னுல் முடியுமா?' என்ருன்.

நிதாயியின் குணுகுணங்களேப்பற்றி இந்தக் கவிவாலாக்கள் நன்கறிவர். பாட்டுப் போட்டி நடக்கும் அரங்குகளில் இவன் கலந்துகொள்வது வழக்கம். சில சமயம் ஜால்ரா போடுவான். இப்படிப் பின்பாடகர்களுக்குத் தொண்டு புரிவான்.

அங்குக் கூடியிருந்த பிரமுகர்களில் ஒருவன் கல்கத்தாவில் உத்தியோகம் பார்ப்பவன். அழுக்குச் சொக்காயும், துணியும் அணிந்திருக்கும் அந்தக் கூட்டத்தவர்களிடையே இஸ்திரிபோட்ட வெளுப்பு உடையை அணிந்து நாகரிகமாகத் தென்பட்டான். பெரிய இடத்தில் பழக்கம் உள்ளவனேப்போல் பாணி செய்து கொண்டு, வியப்படைந்தவன்போல் புருவத்தைத் தூக்கி, 'நம்ப நிதாயிதானே, அவனுக்கென்ன சோடை! a poet... டேய் நிதாயி, நீ எல்லோரும் அசைந்து போகும்படிப் பாடவேண்டும். இனிமேல் நேரம் ஆக்க வேண்டாம்... ஆரம்பிக்கலாம்' என்றதும், தன் கடிகாரத்தை நோக்கிவிட்டு, பக்கத்திலிருப்பவனிடம் 'உன்னதில் என்ன மணி ஆகிறது?' என்று கேட்டான்.

இன்னொருவன் அப்பொழுது வத்திப்பெட்டியிலிருந்து ஒரு குச்சியைக் கிழித்து வெளிச்சம் காட்டிஞன். முன் பேசிய அந்த நாகரிகன் சட்டெனத் தன் கையை இழுத்துக்கொண்டு, 'எதற்கு வெளிச்சம்? ரேடியம்தான் இருக்கிறதே; இருட்டில் தெரியும்' என்ருன்.

பூதநாதுக்கு இந்த ரேடியம் கீடியம் எல்லாம் தெரியாது. அவன் 'ஹி...ஹி' என்று சிரித்து, நிதாயியை நோக்கி, 'கறுப்புக் குயிலுக்குப் பதிலா அண்டங்காக்கா வந்தது... உம், ஆரம்பியடா உன் பாட்டை கேட்கலாம்!' என்ருன்.

நிதாயி இதனுல் சற்றுப் புண்பட்டவனுய் பதிலேதும் பேசவில்லே. இதற்குள் மேடையில் மத்தளத்தில் ஜதி வரிசைகள் தட்டும் ஓசை எழுந்தது—

தளாங்கு... தித்தளாங்கு... தோம்... ததிங்கிணதோம்.

நிதாயி பின்பாட்டுப் பாடத் தொடங்கிஞன். கவிவாலா தன் பின் பாடகனுடனேயே அன்று பாட்டுப் போட்டியில் இறங்கிஞன். ஆனுல் இந்தப் பாட்டுச் சவால்களில் எதிர்பார்த்த சூடுபிடிக்க வில்லே; மந்தமாகவே இருந்தது. அவையோர்களிடமிருந்து இரு

தரப்பான அபிப்பிராயங்கள் எழுந்தன. இதுபோன்ற பாட்டுப் போட்டிகளை உண்மையில் ரஸிப்பவர்கள்—அதாவது சற்றுக் கூரிய புத்தி படைத்தவர்கள், 'போடா வெளியே... போடா வெளியே... பாட்டுப் பாடுகிறுனும்... போலாமடா வீட்டுக்கு' என்றதும், சிலர் வெளியே போக முற்பட்டனர். மறுதரப்பினர், 'என்னமோ என்று நினைத்தோம்: மஹாதேவின் சிஷ்யன்கூட நல்லாத்தான் பாட்டுக் கட்டருன் ; டக்கு டக்குனு வெட்டருன்' என்று புகழ்ந்தனர்.

இந்தப் புகழுரையில் நிதாயியிக்கும் ஒரு பங்கு கிடைத்தது. அதற்குரிய மூலதனம் அவனிடமிருந்தது. அவனுடைய குரல் கணீ ரென்று இருக்கும். மேலும் தக்க சொற்களும், எதுகை மோனை நயமாக அவனுக்கு வந்து அமைகின்றன. கவிவாலா மஹாதேவின் சீடனையும் பின்தள்ளி அவன் தங்குத் தடையின்றி நாலைந்து உதிரிச் சரணங்களையும் புனைந்து கரகோஷத்தைப் பெற்றுன். முன்னுல் அமர்ந்திருக்கும் ஊர்க் கனவான்கள், அவனுக்கு உற்சாகம் தர, 'ஜமாய்டா..ஜமாய் பயலே' என்று ஆர்ப்பரித்தனர்.

நிதாயினுடைய நண்பர்கள் அவனுக்கு ஊக்கமூட்ட 'கொன் னுட்டே..கொன்னுட்டே' என்று கைத்தட்டினர். ஒரு மூலையில் பெண்களின் கூட்டம். இவர்களில் பெரும்பாலோர் ஒதுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அடைந்த வியப்புக்கோர் அளவில்லை. நிதாயியின் ஆருயிர் நண்பனுன ஸ்டேஷன் பாயிண்ட்ஸ்மேன் ராஜாலாவின் சம்சாரம் உருண்டு உருண்டு நகைத்து, 'நம் நெதாயி அண்ணுத்தேயா இவ்வளவு பாடுது... அடியம்மா!' என்ருள்.

அவள் பக்கத்திலேயே இருக்கும் ராஜாவின் மைத்துனி—பதினுறு பதினேழு வயதுப் பெண், பக்கத்து ஊரில் வாழ்க்கைப் பட்டவள்—அடிக்கடி அவள் கண்கள் அகல விரிந்தன. ஆனுல், நடுநடுவே புருவஞ் சுளித்து, 'எதற்கு அக்கா இப்படி சிரிக்கிறே? பாட்டைக் கேள்' என்ருள்.

நண்பன் ராஜா சற்றுத் தொலைவாக இடம் கொண்டிருந்தான். அடிக்கடி அவன் உடல் அசைந்தது. அவன் மகிழ்ச்சி பொங்க, 'பாத்தியா மச்சி, நம்ம உஸ்தாத் நெத்தாய் என்னமா பாடருன்?' என்று சுத்த ஹிந்தியில் சொன்னுன். பாயிண்ட்ஸ்மேன் ராஜா வங்காளியல்ல. ராஜா குறிக்கும் அந்தப் பெண் அவனுடைய மைத்துனிதான். நிதாயியும் அவளை, 'மச்சி' என்று அழைப்பது வழக்கம். அவள் புக்ககத்திலிருந்து, அதாவது அண்டைக் கிராமத்தி லிருந்து அன்ருடம் பால் விற்க வருவாள். நிதாயி தனக்காக

அவளிடம் நித்தியம் உழக்குப்பால் வாங்குவான். இந்தக் காரணத்தினுல் அந்தப் பெண்ணுக்கு அவனைப்பற்றி இத்தனை வியப்பு. தனக்குத் தெரிந்த ஒரு சாதாரண ஆள் இப்படி ஒரு சபையில் பாடுவதைப் பார்த்தால் அவளுக்கு அதிசயமாகத்தான் இருக்கும்.

நிதாயிக்கோ இந்தப்பக்கம் அரங்கில் உள்ளவர்களைக் கவனிப்பதற்கான அவகாசமில்லை. அவனே, மேலும் மேலும் புதுப்புது பாட்டுக்களைப் புனைவதில் உத்வேகம் கொண்டுவிட்டான். கதையில் வரும் ஒட்டகத்தைப்போல் அவன் பின்னணிப் பாடகனை வந்து இப்பொழுது சபையையே நிரப்பிக் கொண்டுவிட்டான். 'ஆங்...' என்று ராகத்தை இழுத்து மஹாதேவின் பின்பாடகன் கட்டும் பாட்டின் அடிகளை மாற்றியும், மடக்கியும், புதுக்கியும் பல்வேறு சந்தங்களில் அமைத்துப் பாடினுன். இத்துடன் தன் இனியகுரலையும் இணைத்து மக்களின் பாராட்டையும் பெற்றுன். மஹாதேவின் பின்பாடகன் எதிர்ப்புப் பாடல்களில் ஒரே வழியைக் கற்றவன். அவன் நிதாயியை அடிக்கடித் தடுத்து, 'ஐயே...ஐயே...இதென்ன பாடுகிருய் நிதாயி......நான் ஒண்ணு கட்டினு, நீ ஒண்ணு நுழைக்கிருயே?' என்ருன்.

நிதாயி, அவன் பேச்சையே வாங்கிக் கொள்ளவில்லை. இடது கையைக் காதருகில் வைத்து முகத்தைத் தூக்கிப் பாடிக் கொண்டே சென்ருன். தாளத்துக்கேற்ப அவன் மெல்ல அசைந்து ஆடிக் கொண்டே பாடினுன்—

[1] ஹுஜுர் பத்த பஞ்சஜந ரயேச்சேந் ஜக்கந்
ஸுவிசார் ஹபே நிச்சய தக்கந்—
ஜாநி ஜாநி—

அப்பொழுது பெரிய மனிதர்கள் கைதட்டி, 'பேஷ்...பலே...பேஷ் ...பாஹ்வா...பாஹ்வா ... நிதாயியின் சொல்கட்டு ரொம்ப ஜோர்!' என்றனர்.

சாதாரண மக்கள், 'பாடு......இன்னும் பாடு' என்று அவனை ஊக்குவித்தனர்.

நிதாயி சட்டென எழும்பிக் குதித்து ஒரு சுழலமிட்டு மிருதங்கக் காரனை அதட்டி, 'ஏய் தாளம் தப்புது' என்றதும் தன் உள்ளங் கையைத் தட்டி தாளப் பிரமாணம் காண்பித்தான் — தகிட — த — த —

[1] ஐயன்மீர் படித்த ஐவர் இருக்கிறீர்கள் இங்கே; என் திறமையை நன்கு ஆராய்வீர்..எனக்கு இது தெரியும்.

திந்தா,—த—த—திந்தா, தகுட—தகுட—த—தி— திகுட—திகுட...
ஆங்...தெரிஞ்சிண்டையா?' என்றதும் தன்னுடைய புதிய சந்தப் பாடலை மேலே பாடத்தொடங்கினான்.

[1] க$_1$—யே க$_1$ாலீ க$_1$பாலிநீ—க$_2$-யே க$_2$ப்பரதாரிணீ
க$_3$-யே கே$_3$ாமாதா ஸுரபி$_4$ க$_3$ணேசஜநநீ
க$_1$ண்டே தாஓ மா வாணீ—

ஒரு பாரிசமாக மடக்கிக் கிடந்த திண்ணைப் பள்ளிச் சிறுவர்கள் சிலர் இந்தச் சந்தப் பாட்டைக் கேட்டதும் 'கள கள' வென்று நகைத்தனர். அவர்களில் ஒரு பையன், 'க என்றால் கழுதை, ச என்றால் சாவி, ட என்றால் டமாரம், த என்றால் தாலி, ப என்றால் பம்பரம்...பலே ஜோர்...பலே ஜோர்!' என்று எல்லோருடனும் சேர்ந்து கொம்மாளம் போட்டான்.

நிதாயி சற்று நிமிர்ந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். சிரிப்பின் அலை சற்று ஓய்ந்ததும் அவன், 'போதுமே என் பின்பாடகர்களே' என்றான்.

கவிவாலா மஹாதேவின் பின்பாடகன் கோபத்தினால் முகம் தொங்க ஒரு பக்கம் உட்கார்ந்து விட்டான். எதிர்ப்பாட்டு பாடுவதற்கு எவருமில்லை. நிதாயி அப்பொழுது சபையைப் பார்த்து, 'என் குட்டிப் பின்பாடகர்களே, என்னை நையாண்டி செய்ய எல்லோரும் சிரித்தீர்கள். க என்றால் கழுதை, ச என்றால் சாவி, ட என்றால் டமாரம், த என்றால் தாலி, ப என்றால் பம்பரம்— என்றெல்லாம் கிண்டல் பண்ணினீர்கள் அல்லவா?' என்றான். மிருதங்கக்காரனும் அவனுக்கு அனுசரணையாக வாத்தியத்தைத் தட்டி 'ஆமாம்' என்றான்.

'சரி நான்மேலே பாடுகிறேன்—

[2] கே$_3$ா-மாதா சுனியா ஸபே$_3$ ஹாஸ்ய கரே
தீ$_3$ந நிதாஇசரண் ப$_3$லேச்சே ஜோட்$_3$கரே

என்றதும் இரு கை கூப்பி நாற்புறமும் நோக்கினான். அவனுடைய நண்பன் ராஜா குதுகலத்துடன் 'பஹுத் அச்சா பாடகரே' என்றான்.

[1] 'க' என்றால் காளி—கபாலினி. க்கா—என்றால் கப்பறை ஏந்துவோள். க—என்றால் கோ மாதா (பால் தரும் பசு, கணேசன் தாய்) பாட எனக்கு அருள் தா! வாணி சரசுவதியே!

[2] கோமாதா என்றதும் நீங்கள் சிரிக்கிறீர்கள்; எளியன் நிதாயிசரண் கை கூப்பிச் சொல்கிறான்.

ஆனுல் நிதாயியின் கண்முன்பு எதுவுமே புலப்படவில்லே. அவன் தன் நண்பனேயும் கவனிக்கவில்லே. பாட்டுப் புனேவதிலேயே அவன் மனம் ஒன்றிக் கிடந்தது.
—மேலும் தொடர்ந்தான்—

[1] சுனுன் மஹாசய் தீ$_3$நேர் நிவேத$_3$ந்
கோ$_3$ கிம் பா$_3$ க$_3$ரு துச்ச நய் க$_1$க$_2$ந்
க$_3$ாபீ$_4$ ப$_4$க$_3$வதீ, ஷாண்ட்$_3$ சிவேர் ப$_3$ாஹந்
ஸுரபி$_4$ர் சாபே மஜே கதோ ராஜந்

—அச்சமயம் குரல்கள் கேட்டன—'ஜோர்...பலேஜோர்!' மத்தளமும், அதற்கேற்ப முழங்கியது.
நிதாயி தொடர்ந்தான்—

[2] சாஸ்த்ரேர் ஸார் கத$_2$ா ஆரஓ ப$_2$லே ஜாஇ
கே$_3$ா-த$_4$ந துல்ய த$_4$ந பூ$_4$-ப$_4$ாரதே நாஇ
தேஇ கே$_3$ாலோகபதி—விஷ்ணு வநமாலீ
வ்ரஜத$_4$ாமே கர்லேந் க$_3$ருர் ராக்க$_2$ாலீ—

நிதாயியின் இந்தப் புனேவைக் கேட்டு அத்தனேப்பேரும் அசைந்து போயினர். யாப்பில் அமைத்து இவ்வளவு கச்சிதமாக சவால் பாட்டைப் புனேந்துவிடுவது அற்ப விஷயமன்று. அவனுடைய நண்பன் ராஜா வாய் பிளந்து நின்ருன்; அவன் மனேவி சிரிப்பதைக் கூட நிறுத்திவிட்டாள். மைத்துனியின் முட்டாக்கு தலேயிலிருந்து விலகிவிட்டது. தோளிலிருந்தும் முந்தானே நழுவிக் கிடந்தது. நிதாயி இன்னும் தன் பாட்டை முடிக்கவில்லே. மேலும் அவன் தொடர்ந்தான்—

[3] தா சாடா மஷாஇ—ஆசே ஆரஓ மானே—
கோ மானே பிருதிவீ சுதான் பண்டித ஜனே

[1] —கேண்மின் பெரியோரே, எளியேன் விண்ணப்பம்: பசுவோ அல்லது எருதோ அற்பமானவையல்ல. பசுவே பகவதி; எருதே சிவனுர் ஊர்தி. ஆவின் சாபத்தால் அரசர் கெடுவர்.

[2] —பட்டாங்கின் தெளிபொருளேச் சொல்லுகிறேன்—மாடு என்ருல் செல்வம். அதற்கு இணையில்லே உலகில். அதனுல் ஆநிரை உலகில் விஷ்ணு வனமாலி ஆள்கின்ருன். பிருந்தாவனமதில் வாழ்கின்ருன் கண்ணன் கோவலன்.

[3] அது தவிர பெரியோரே, இன்னும் எவ்வளவோ கூறுவேன். ஆ—என்ருல் இவ்வுலகைக் குறிக்கும் என்று கற்ருேர் கூறுவர்.

முன்னணியிலிருந்த பெருமக்கள் உவப்பு மேலிட அவனைப் பாராட்டினர். மற்ற பகுதிகளிலிருந்து வானைப்பிளக்கும் ஹரி கோஷம் எழுந்தது.

நிதாயி வெற்றிப் பெருமிதத்துடன் மத்தளம் வாசிப்பவனை நோக்கி, 'அடி அப்பா...அடி' என்றான். எல்லோரும் தத்தம் இடங்களில் அசைந்து கொடுத்து நன்றாக அமர்ந்தனர். ராஜா தன் பெண்டாட்டி மைத்துனி, இருக்கும் பக்கமாகத் திரும்பி, புன்முறுவல் செய்து, 'பாத்தியா...எப்படி!' என்றான். பெண்டாட்டி புன்னகை புரிந்து, 'ரொம்ப நன்னாருக்குன்னா' என்றாள்.

இளம் மைத்துனிக்கு இன்னும் அந்த வியப்பின் மயக்கம் தெளிய வில்லை. நினைவெல்லாம் எங்கோ சிதறிச் செல்ல நிதாயியையே அவள் உட்கொள்ளுவது போல் பார்த்தாள். அவள் ஆடை சற்று குலைந்து கிடப்பதைப் பார்த்து முகத்தில் கடுமை தோன்ற மைத்துனியை நோக்கி, 'தே... தலைப்பைச் சரியாகப் போர்த்துக்கோ' என்றான் ராஜா.

ராஜாவின் மனைவி அவனை இடித்து, 'நாசமாப் போக! ஒடம்பில் சொரணை இருந்தால்தானே?' என்றாள்.

மைத்துனி தன் நினைவு வந்து நாக்கைக் கடித்து, தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு, 'அந்த பாபு என்னமாப் பாடறார் அக்கா!' என்றாள். இந்தப் பக்கம் பிரமுகர்களும் வியப்புமேலிட 'சபாஷ்' போட்டனர். கல்கத்தாவில் உத்தியோகம் பார்க்கும் அந்த பாபு உள்பட, 'யெஸ் (Yes). இது ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்தான்! ஸன் ஆஃப் எ டோம் (Son of a Dom) ...அ... ஹீ இஸ் எ பொயட்! (He is a poet!) இழிந்த ஒரு டோமின்மகன் கவி!

அந்த பூதநாத் கோபங்கொண்டால் ருத்ரமூர்த்தியாவார்; மகிழ்ச்சி யுற்றால் ஆனந்தமூர்த்தியாய் மாறிவிடுவார். கஞ்சா அடிக்கும் இவருடைய மனப்போக்கு அடிக்கடி இவ்விரு முனைகளுக்கும் போய் வருவது சகஜம். நிதாயியின் பாட்டில் அவர் சொக்கிப் போய் விட்டார். 'துக்கடாப் பையன்; எவ்வளவு விஷயமப்பா அவன் கிட்ட! நீ ஒரு ரத்தினமடா! பயலே, நீ மாணிக்கமடா! உனக்கு இணையில்லையடா' என்றெல்லாம் புகழுரை பொழிந்தார்.

மஹந்து சிரித்து, 'இதெல்லாம் அந்தப் பைத்தியக்காரி இருக்காளே அவள் வேலை அப்பனே! இந்த நிதாயியை உசத்தி வெக்கத்தான் அந்தப் பயல் நோட்டனை ஓட்டிவிட்டாள் அவள்!' என்றார்.

கவிபாட இப்பொழுது மஹாதேவின் முறை. மஹாதேவ் தேர்ந்த ஒரு பழம்பெரு கவிவாலா. இப்படி ஜனங்களிடையே நிதாயியைப்

பற்றிப் புகழுரை மலிய, அவன் புருவங்கடுத்துப் பாட்டை எடுத்தான். வியங்கியமாகவும், கேலியாகவும் நிதாயிக்குச் சவால் பாட்டுக்களைப் பிரயோகம் செய்து அவனைத் துளித்துளியாக வருத்தினான். அவன் அளவுக்கு மீறி அடுக்கும் ஆபாசமான வியங்கியங்கள் அங்குக் கூடியிருந்த அத்தனைப் பேருக்கும் ஓயாச் சிரிப்பை மூட்டின. நிதாயியும் அரங்கில் அமர்ந்தபடி, மெல்லத் தனக்குள் சிரித்துக்கொண்டான். மஹாதேவின் வியங்கியத்துக்கு எதிரிடையான சொல்லம்புகளை அவன் தன்னுள் திரட்டிக் கொண்டிருந்தான்.

மஹாதேவின் போக்கு ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மிலிட்டரி குணம் சட்டெனத் தலைதூக்கியது. தன் நண்பனை, கவி வாலா அனுயாசமாகத் திணறச் செய்வதைப் பார்த்து அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் அரங்கை விட்டெழுந்து சற்று வெளியே சுற்றிவரச் சென்றான். ராஜாவின் சம்சாரம் ஒரே சிரிப்பும் குதூகலமுமாய் இருந்தாள். ஆனால் அவனுடைய மைத்துனி முகத்தில் ஒரு வாட்டம் தோன்ற சற்று எரிச்சலாகவே, ‘எதற்காக சிரிக்கிறே? இப்பிடிக் கூடவா ஆளைப் பாட்டில் திட்டி மட்டம் செய்வது?’ என்றாள்.

மஹாதேவ் தன்னுடைய வசவுப் பாட்டுக்களை அடுக்கிக்கொண்டே போனான்—

[1] ஸுபுத்தி டோமேர் போயேர் குபுத்தி தரிலோ
டோம் காடாரி ஃபேலே தியே, கபி கர்த்தே ஆயிலோ.
ஓ பேடார் பாபா சிலோ ஸிந்தேல் சோர்
கர்த்தா—பாபா டிங்காடே
மாதா மஹ் டாகாத் பேடார்
த்வீபாந்தரே மரே
ஸேஇ வம்சேர் சேலே பேடா கபி கர்பி துயீ
டோமேர் சாவால் ரத்னகர், சிங்க்டேர் போனா ருயி

இந்தப் பாட்டை ரஸிக்கும் ஒருவன் அந்தக் கூட்டத்தில் சற்றுக் குத்தலாக, ‘முழங்கால் நீரிலேதானே சிங்க்டி மீன் [2] வளையவரும்?

[1] நல்ல புத்தி ‘டோமனு’க்கு ஒரு கெட்ட புத்தி மகன் பிறந்தான். கட்டாரியேந்தும் அவன் கவிதை யெழுத வந்துவிட்டான். அந்தப் பயலைப் பெற்ற அப்பன் ஒரு கன்னக்கோல் திருடன். அவனைப் பெற்ற பாட்டன் ஒரு சிலம்பக் காரனே. அவன் தாய்வழிப் பாட்டனோ வழிப்பறிக்காரனும். தீவாந்திரத்தில் இறந்தவன். அந்தக் குலத்துப்பிள்ளை நீ கவிதை பாட வந்துவிட்டாய். டோம் மகன் பார்த்தால் கடல்தான். ஆனால் அவன் அதிலே உள்ள சின்ன மீன்தான்.

[2] கெண்டை மீன்

ஆழத்துக்கு அது போகாது ' என்ருன். பின்பாடகர்கள் உணர்ச்சியுடன் மஹாதேவ் எடுத்த புதிய சரணத்தைப் பாடினர்—

> [1] ஆஸ்தா குடேர் ஏண்டோ பாதா
> ஸ்வக்கே ஜாபார் ஆஷா கோ !
> ஃபராத் கரே உட்லோ பாதா
> ஸ்வக்கே ஜாபார் ஆஷா கோ !
> ஹாய்ரே கலி—கிஇ வா பலி—
> கருட் ஹபேன் மஷா கோ
> ஸ்வக்கே ஜாபார் ஆஷா கோ !

சட்டென மஹாதேவ், ' ஆ, என்ன ஆத்திரம் வருது தெரியுமா எனக்கு, ஐயாமாரே ! ' என்றதும் அவன் தன் தொடைமேல் ஓர் அரை 'சாப்பா' கொடுத்து உடனேயே பாட ஆரம்பித்தான்—

> [2] பாயேதே காம்டாய் மஷா—மாரிலாம் சாபட்
> கோலோகேதே விஷ்ணு காந்தேன்—சடிபேன் கார் உபர் !

மஹாதேவின் பின்பாடகன்-எவனை அழுத்திவிட்டு நிதாயி கவிவாலாவாக மாறினுனே-அந்த ஆள் மீண்டும் குத்தலாக, ' அடித்துச் செத்தது போதாதா ? சொர்க்கம் போக உன் உயிர் துடிக்குதா ? ' என்ருன்.

இரவு நேரம் ஏற ஏற மஹாதேவின் பாட்டின் வெறியும் ஏறத் தொடங்கியது. கேட்க வழங்காத வசவுகளைக் கவிதை வாக்கியங்களாக அமைத்து, நிதாயியைத் திக்குமுக்காடச் செய்தான். இப்படிக் குத்திக் கிளறிக் காட்டும் சாமர்த்தியம் நிதாயிக்குப் போதாது. ஆனல், இத்தனை அடியுண்டும் அவன் மண்ணைக் கவ்வாமல் நின்றதைத்தான் மெச்சவேண்டும். நெட்டாக நின்று அவன் சிரித்த முகமாகவே இத்தனைச் சொல்லம்புகளையும் ஏந்திக்கொண்டான். அதற்குப் பதிலாக நல்ல பாட்டையே திருப்பினுன்—

---

[1] குப்பைத் தொட்டியில் கிடக்கும் எச்சில்கல்லைக்குச் சொர்க்கம் போக ஆசை பார். காத்திலே பறக்கும் எச்சில்கல்லை ; அதுக்குச் சொர்க்கம் போக ஆசை பார். ஐயோ, கலிகாலமடா எதைச் சொல்லுவேனடா ? கொசுகு கருடன் ஆகுமாடா ? சொர்க்கம் போக ஆசைபார்.

[2] காலிலே கொசு கடித்தது, கையால் அடித்தேன். கோலோகத்தில் மாயன் அழுகிருன், ஏறிக்கொள்ள ஒன்றுமில்லையே என்று

[1] ஓஸ்தாத் துமி பாபேர் ஸமான் தோமாகே கரி மான்ய |
துமி ஆமாகே திச்சோ கால், தன்ய ஹோ துமி தன்ய ||
தோமார் ஹயேச்சே பீமரதி—ஆமார் கின்து ஆச்சே
மதி தோமார் சரணே |
டங்கா மேரேஇ ஜபாப் திபோ—கோநயி பய் கரி நா மனே ||

அங்குள்ளவர்கள் இப்பாட்டில் அடங்கியுள்ள நயத்தையோ, இன் சுவையையோ நுகரக்கூடிய ஆற்றல் இல்லாதவர்கள். மஹாதேவ் பொழியும் வசவுக் கவிதைகளையே அதிகமாக வரவேற்று அதில் வெறியும் கொண்டிருந்தனர். இதனால் மஹாதேவிற்கெதிரே நிதாயி ஓங்கி நிற்க முடியவில்லை; மழுங்கிவிட்டான். இப்படித் தான் தோல்வியுற்றதற்கு அவன் துளியேனும் குலைந்து போய்விடவில்லை. அதற்கு மாறாக, தன்னை ஒரு கௌரவம் நிரம்பியவனாகவே நினைத்துக் கொண்டான். பாட்டு அரங்கு முற்றுப்பெற்றதும், அவன் ஊர்ப் பெரியவர்களுக்குக் கைகுவித்து வணங்கி அடக்கத்துடன், 'ஐயா மார்களே, நான் என்ன சாதாரண மனிசன்' என்றான். அவன் இதைக் கூறி முடிப்பதற்குள் பெரியவர்கள், 'இல்லவே இல்லை நீ ரொம்ப நல்லவன்; யோக்யன் உன் பாட்டு உயர்தரமானது. பஹுத் அச்சா! பஹுத் அச்சா!' என்று கொண்டாடினர்.

உற்சாகம் மிகுந்து அவனுடைய முதுகில் சற்று உறைக்கும்படியே பூதநாத் தட்டி, 'ஜிதா ரஹோ பேடா.. ஜிதா ரஹோ' (நல்ல ஆயுசோடு இரு பையா; நல்ல ஆயுசோடு இரு) என்றார். உத்தி யோகம் பார்க்கும் அந்த ஆள் வாயும், முகமும் சிரிப்பு வழிய அவனைப் பாராட்டி, 'யு ஆர் எ பொயட்.. ஆ எ பொயட்' என்றான்.

இக் கூற்றின் பொருள் விளங்காமல் நிதாயி அடக்கத்துடன் வினவுவதுபோல் அந்த ஆளை நோக்கி, 'என்னமோ உங்கள் தயவு ஏதோ பாடினேன்' என்றான். அதற்கு அந்த பாபு, 'என்ன அப்படிச் சொல்றே? நீ ஒரு கவிஞனப்பா!' என்றார்.

வெட்கம் மேலிட நிதாயி தலையைத் தாழ்த்தித் தரையை நோக் கினான். பின்பு மஹாதேவின் பக்கமாகத் திரும்பி, 'உஸ்தாத், என்னை மன்னித்து விடுங்கள்.. நான் ஒரு அதமன்.. நான் கீழ் ஜாதியான். சொல்லப்போனால் நான் எம்மாத்திரம்? தட்டினால் சாகும் ஒரு கொசுகுதான்' என்றான்.

---

[1] புலவரே, என் தகப்பன் மாதிரி உம்மை நான் மதிக்கின்றேன். என்னை வைதாலும் நல்லவர் நீர்! நல்லவர் நீர்! வயது ஆகிவிட்டதால் நீர் இப்படி பேசுகீர். நான் உம்மை மதிக்கின்றேன். பறையறைந்து பாடி காட்டுவேன். பயமில்லை என் மனத்திலே.

தன் எதிரி இவ்வளவு வணங்கிக் குழைவதைப் பார்த்தும் மஹாதேவ் துளியேனும் இளகிவிடவில்லை அவன் இப்படித் தாழ்ந்து போனதைக் குறித்துப் பெருமிதமே கொண்டான். ‘என்னுடைய கோஷ்டியில் பின்பாடகனுகச் சேர்ந்துவிடடா. அப்புறம் அனுபவம் வரவர நீயே உன் சொந்த கோஷ்டியை அமைத்துக் கொள்ளலாம். உன்னுடைய சாரீரம் ரொம்ப இனிமையாக இருக்கிறது!’ என்றான்.

நிதாயி தன் மனத்துள், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் நன்ருக உறைக்கும்படி ஒரு பதில் சொல்ல யத்தனித்தான். மஹாதேவ், பாட்டின் வாயிலாகத் தன் குலம், கோத்திரத்தையெல்லாம் அலசிவிட்டதை நினைத்து நிதாயிக்கு உள்ளத்தில் முள் வருத்துவது மாதிரி இருந்தது. ஆனால் அவன் அந்த மறுமொழியை எடுப்பதற்குமுன் பத்து பதினைந்து பேர் அவனைச் சேர்ந்தாற்போல் கூப்பிட்டனர் — ‘ஒன்னைத்தான்.. நிதாயிசரண்.. நிதாயிசரண்!’

நிதாயிசரண் அவ்வழைப்பைச் செவியுற்று மயிர்க் கூச்செறிய, திரும்பி நின்றான். முன்பெல்லாம் ‘நெத்தே.. நெதா.. நிதோ.. நெத்தாயி’ என்று பலரால் பலவிதமாக அழைக்கப்பட்ட அவன் இன்று ‘நிதாயிசரணுக’ உயர்ந்துவிட்டான். ‘உன்னைப் பெரியவங்க கூப்பிடருங்க.. மஹந்து வரச் சொன்ருரு’ என்றனர்.

மஹந்து சண்டீதேவியின் பிரசாதமாகக் குங்குமம் தோய்ந்த வில்வ மாலையை அவன் கழுத்தில் போட்டு, ‘உனக்கு என்ன பொருத்தமாயிருக்கிறதடா! உன்னை ஜகதம்பா உன்னத நிலைக்குக் கொண்டு வருவாள்...அம்பாளுக்குத் திருவிழா வரும்போது நீதான் பாடவேண்டும். என்ன குளுமையான குரல் உனக்கு!’ என்ருர்.

உத்தியோகம் பார்க்கும் அந்த பாபு நிதாயின் முதுகிலே தட்டிக் கொடுத்து, ‘உனக்கு ஒரு தங்க மெடல் (பதக்கம்) தரவேண்டும்’ என்றதும் முறுவல் செய்து, ‘ரொம்ப ஆச்சரியம், நீ ஒரு ‘பொயட்’ என்ருர்.

நிதாயிக்குக் கரைகாணுத மகிழ்ச்சி; என்ன செய்வது, என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவே இல்லை. அந்த உத்தியோகஸ்தர், ‘ஜாக்கிரதை, உங்கள் இனத்தவர்கள்போல் கொள்ளை, திருடு போன்ற காரியங்களில் இறங்காதே. உன்னிடம் கவிதைப் பொறி இருக்கிறது!’ என்ருர்.

கைகுவித்து நிதாயி, ‘அடியேன் அப்படியே நடந்துகொள்கிறேன். இதுவரை நான் அந்தத் திருட்டு ஜோலிக்கே போனது கிடையாது; பொய்யும் என் நாக்கில் வராது; குடிப் பழக்கமும் எனக்கு இல்லை. என் உற்ருர் உறவினர்கள், உடன் பிறந்தவர்கள் இவர்களுடன்

ஒத்துப் போவதில்லை; எனக்கு எங்கேயும்தான் வீடு; சேரி வாழ்க்கையை விட்டுத் தொலைத்தேன். நான் ஸ்டேஷனில், ராஜா பாயிண்ட்ஸ்மனுடன்தான் இருக்கிறேன். ஏதோ கூலிக்கு வேலை செய்து பிழைக்கிறேன்' என்றான்.

அந்தக் கிராமத்தில் நல்லவன், கெட்டவன், திருடன் யார், யோக்யன் யார் இது பற்றிய விஷயங்களை பூதநாத் நன்கறிவார். நிதாயியைத் தட்டிக் கொடுத்து, 'ஆயிரம் தடவை வேண்டுமானாலும் சொல்லுகிறேன்—நீ தப்பிப் பிறந்தவன் உங்கள் குலத்தில்; தங்கமான பையன்' என்றார். நிதாயி அப்பொழுது, 'இதோ சண்டீயாத்தா முன்னால் நின்றபடி சொல்கிறேன்—நான் தவறாக வேறு வழியில் சென்றால் என் தலைமேல் இடி விழுந்து சாவேன்' என்றான்.

3

நிதாயி பொய்ச் சபதம் செய்யவில்லை. உண்மையில் அவன் தன் வாழ்நாளில் என்றுமே திருட்டுச் ஜோலிக்குப் போனது கிடையாது. அவனுடைய உறவினர்கள் நள்ளிரவில் ஓசை படுத்தாமல் நெஞ்சு உரத்துடன் இத்தீய செயலில் தென்பு கொள்வர். அத்தகைய நுகர்வு நிதாயின் ரத்தத்துள் துளியும் கிடையாது. அதை அவன் முற்றிலும் அறியாதவன். கிரேக்க வீரன் அலெக்ஸாண்டர் முன்பு வந்த திரேஸீய கள்ளனைப்போல் தருக்க ரீதியாக நியாயத்தைக் கூற இந்த வீரவம்சிகளுக்குத் தெரியாதுதான். ஆனால் நியாயம் அல்லது நீதி என்பதைப் பற்றிக் கேட்டால் இவர்கள் ஏளனம் செய்து சிரிப்பார்கள். நிதாயினுடைய குணம் கள்ளத் தன்மைக்கு நேர் முரணாக இருப்பதைக் கண்டு அவனை நெஞ்சு உரமற்றவன், கோழை என்று அவர்கள் வெறுத்தனர்.

இப்படி நேரக் காரணம் என்னவென்பது எவருக்கும் புரியவில்லை. இவனை அலட்சியமாக ஒதுக்கிவிடவே இதன் காரணத்தை கண்டு பிடிக்காமல் போயிருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் அவர்கள் கண்ணில் படாமல் போகவில்லை. ஒவ்வொரு நாளும் அந்திப் பொழுதில் நிதாயிசரண் நோட்டுப் புத்தகத்தை அக்குளில் அடக்கிக் கொண்டு புகையேறிய லாந்தர் கையில் தொங்க, இராப்பள்ளிக்

கூடத்திற்குச் செல்லுவான். அவ்வூர் பெரிய பண்ணையார் தம் அன்னையின் நினைவாக ஓர் இராப்பள்ளி ஏற்படுத்தியிருந்தார். அங்கேதான் நிதாயிசரண் கல்வி கற்ருன். டோம் சேரிவாசிகளின் குழந்தைகள் அப்பள்ளியில் அதிகமாக இருந்தனர். அப்பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் வந்து சேருவதற்காக, பண்ணையார் அவர்களுக்கு இலவச உடுப்பு தருவதாக அறிக்கை விட்டதின் பயனுக இந்த வீர்வம்சிகள் தம் பிள்ளைகளை அப்பாடசாலையில் சேர்த்தனர். அவர்களுடன் சேர்ந்து நிதாயியும் படித்தான். ஆண்டு இறுதியில் புது உடையைப் பெற்று இரண்டாம் வகுப்புப் பாட புத்தகத்தில் திருட்டு வேணியின் கதையைப் படிப்பதற்கு முன்பே டோம் பிள்ளைகள் பலர் நின்றுவிட்டனர். நிதாயி ஒருவனே தங்கினுன். அவன் பரீட்சையில் முதலாவதாக வந்ததால் புது உடையுடன் சொக்காய் ஒன்றும் அவனுக்குப் பரிசாகக் கிடைத்தது. ஒரு கைலாந்தரும் கொடுத்தார்கள். தன் மகனுக்குத் துணி, சொக்காய், துவாலை, லாந்தர் எல்லாம் பரிசாக வந்ததைக் குறித்து நிதாயியின் தாய்க்குச் சந்தோஷம் பொங்கியது. குற்றம் புரியும் அக்குலத்தவருக்கு நேர் முரணுன ஒரு புதுவித கௌரவ உணர்வு நிதாயிக்கு ஏற்பட்டது. இரண்டொரு வருஷங்கள் அவன் அதே பள்ளியில் படித்து இறுதியில் கிடைக்கும் சொக்காய்த் துணி முதலிய பரிசுகளுடன் அவனுக்கு நல்ல புத்தகங்களும் கிடைத்தன—சிறுவருக்கான ராமாயணம், பாரதக் கதை, விலங்குகளின் வரலாறு. இவற்றில் வரும் விஷயங்கள் யாவும் அவனுக்கு மனப்பாடம். வசதி தந்திருப்பின் அவன் மேற்கொண்டும் படித்து இருப்பான். இவனைத் தவிர வேறு பையன் பள்ளியில் இல்லாததால் அது மூடப்பட்டது. அத்துடன் அவன் படிப்பும் நின்றது. ஆனுல் கல்வியில் ருசி ஏற்பட்ட அவனுக்கு அறிவை வளர்த்துக்கொள்ள ஒரு கிளை வழி திறந்தது. இந்நாட்டில் பாட்டுப் போட்டியில் மக்கள் ஒரு மௌசு கொண்டிருந்தனர். வங்கத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர் அத்தனை பேரும் நினைத்த மாத்திரம் சந்தக் கவிகளை போட்டி போட்டுப் பாடும் இப்புலவர்களை ஆதரித்தனர். ஆனுல் இவர்களுடைய ரசனை மிகவும் மட்டமானது. ஆபாசங்களிலே திளைத்தது. ஆனுல் நிதாயி வேறு வகையைச் சேர்ந்தவன். இவனிடம் அத்தகைய இழிந்த தன்மைகள் இல்லை. இவனுடைய கவிதைக்கு விஷயங்கள் இதிஹாஸ புராணக் கதைகள். நல்ல ஓசையுடைய சந்தங்கள் இவனுக்கு எளிதாக வந்தன. இடையிடையே புத்தி சாதுரியமான யுக்திகளைக் கையாள்வான். நிதாயின் அம்மான்சேய், சித்திப் பிள்ளை யாவரும் அவனைக் கேலி செய்

தனர்—'அவுருக்கு என்ன பண்டிதரு!' என்றெல்லாம். அவனைத் தங்கள் குழுவில் சேர்த்துக்கொள்ள அரும்பாடுபட்டனர். அதாவது இரவில் கொள்ளையடிக்கும் கூட்டத்தில் ஒருவனுக அவனை ஆக்கிக் கொள்ள விரும்பினர்.

நிதாயின் மாமா கௌரசரண் ஐந்து வருஷம் சிறைவாசம் செய்து விட்டு இப்பொழுதுதான் ஊருக்குத் திரும்பி இருக்கிருன். தன் தங்கையிடம் குறைபட்டுக் கொண்டான், 'உன் பிள்ளை படிப்பு முடிச்சாச்சு... பேசாம குலத்தொழிலை கவனிக்கச் சொல்லு' என்று.

கௌர் இப்படிக் குறைபடுவது என்ருல் கட்டளையிடுவது என்று அர்த்தம். நிதாயின் தாய் தன் பிள்ளையிடம் நெருங்கி, 'அடே உன் மாமா சொல்லுருரடா நீயும் அவங்களோட சேந்திண்டு ஏதாவது செய்' என்ருள்.

நிதாயி தன் தாயையே ஊடுருவ நோக்கி, சொன்ஞன்: 'சே! என்ன பேச்சு இது. என்னைச் சுமந்து பெத்த தாயான நீயா என்னை இப்படிச் சொல்றது?'

அவள் வாயடைத்து நின்ருள்.

நிதாயின் மாமன் கொள்ளிபோல் சிவந்த கண்களுடன் அங்குத் தோன்றி, 'அம்மா எதிரே என்னடா முறைக்கிறே; இப்போ என்ன பண்ணிண்டு இருக்கே?' என்ருன்.

நிதாயி நோட்டுப் புத்தகத்தில் ராமாயணத்தைப் பார்த்து செய்யுட்களைத் தான் எழுதும் பயிற்சியைச் சுட்டி, 'எழுதுகிறேன்' என்ருன் பயமின்றி.

'எழுதறையா?' என்றதும் கௌர் மருமானை நெருங்கி நோட்டையும் புத்தகத்தையும் பிடுங்கி எறிந்தான். நிதாயியும் பரபரப்புடன் எழுந்தான். மாமாவைத் தாண்டிச் சென்று கீழே கிடந்த நோட்டையும் புத்தகத்தையும் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டான். அக் கணமே டோம் சேரியைவிட்டு வெளியே நடந்தான். அன்றே அவன் கனசியாம் கோஸாயின் வீட்டில் மாதச் சம்பளத்திற்கு ஒரு வேலையில் அமர்ந்தான்.

கோஸாயி ஒரு வைஷ்ணவ சாது. பிள்ளைக்குட்டி இராத, உடல் பருத்த மனைவி ஒருத்தி அவருக்கு. பூனையைப்போல் இருவருக்கும் பால் என்ருல் உயிர். கறவைப் பசுக்கள் இரண்டு; அவை இரவெல்லாம் கழனி கடறுகளில் இஷ்டம்போல் மேய்ந்துவிட்டு விடிகாலை திரும்பிவிடும். இப்பொழுது கலிகாலம் முற்றிவிட்டதால் அந்தக் கிராமத்து மக்களுக்குப் பார்ப்பான் பசு இவர்களைப் பற்றிய தரும சிந்தனை யாவும் அற்று ஒழிந்தன. இதனுல் அந்த வைஷ்ணவரின்

மாடுகள் இரண்டையும் விளைச்சல் கழனிகளில் திருட்டுத்தனமாக மேயும்போது கொண்ட மட்டும் அடித்துவிட்டிருக்கிருர்கள். இதனுல் பசு போஷகரின் கண்கள் கலங்கின. ஒழுங்காக அவ்விரு மாடுகளையும் மேய்த்து வந்து வீட்டில் கட்ட ஓர் ஆளைத் தேடினுர். நிதாயி அகப்படவே அவனை இந்த வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவன் செய்ய வேண்டிய வேலைகள்—புல் இருக்கும் இடங்களுக்கு மாடுகளை ஓட்டிக்கொண்டு போய் மாட்டை மேய்க்க வேண்டும்; அவற்றைக் குளத்தில் குளிப்பாட்ட வேண்டும்; வீட்டில் விழும் பாத்திரங்களைத் தேய்க்க வேண்டும்; சாமான் வாங்கக் கடை கண்ணிக்குப் போகவேண்டும்; இரவில் வீட்டுக்குக் காவலாக இருக்கவேண்டும். கோஸாயி வட்டிக்கு பணம் விடுபவர். இதன் மூலம் கிடைக்கும் தொகையிலிருந்து வீட்டில் களஞ்சியமாக நெல்லைச் சேர்த்து வைத்திருந்தார். சில சமயம் வட்டிக்குப் பதிலாக நெல்லைச் வசூல் செய்து கொள்வார். இந்த நெல் அடங்கிய தொம்பைகள் இரண்டு, சேர்ந்தாற்போல் வீட்டு ரேழிப் பகுதியில் இருக்கும்.

அன்ருடம் யாராவது வட்டி பாக்கிக்கு நெல்லை அளந்துவிட்டுப் போவார்கள். அதை வீட்டினுள் இருக்கும் பெரிய குதிருக்குள் சேர்த்து விடுவார். தொம்பைகள் பெருத்தும், தம் உடல் இளைத்தும் இருப்பதை நோக்கி அவர் கவலைக்குள் ஆழ்வார், என்றைக்காவது திருடன் எல்லாவற்றையும் வாரிக்கொண்டு போய்விடுவானே என்று. உடற்கட்டான ஓர் இளைஞன் கிடைக்கவே அவருக்கு இந்தக் கவலைவிட்டது. நிதாயி கோஸாயின் வீட்டிலேயே உண்பதும் உறங்குவதுமாக காலங் கழித்தான். அவன் வந்து இரண்டொரு மாதங்கள் ஆயின. அன்று ஒரு நாள் வழக்கத்தைவிட இரவு மைக்கருமையாக இருந்தது. நள்ளிரவு சமயம் கோஸாயி, 'நிதாயி!' என்று கூப்பிட்டார்.

வெளியே ஏதோ கட் மட் என்று சப்தம் கேட்கவே, நிதாயின் தூக்கம் கலைந்தது. விழித்துக் கொண்டு அவனும் அந்த சப்தத்தைக் கூர்ந்து கவனித்தான். மெதுவான குரலிலேயே அவன், 'ஸாயிஜீ, எனக்கும் கேட்டது அந்த சப்தம்' என்ருன். 'பேசாமல் என் பின்னுலேயே வா' என்றதும் கோஸாயி முன்னே சென்ருர். அந்த மெலிந்த கோஸாயின் திடத்தைப் பார்த்து நிதாயிக்கு அவரிடம் ஒரு மதிப்பு ஏற்பட்டது. கோஸாயி வெளிக்கதவின் தாழ்ப்பாளை மெல்ல நீக்கிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்ருர்.

வெளியே நான்குபேர் தலைமீது நெல்மூட்டைகளைத் தாங்கிக் கொண்டிருந்தனர். அவற்றின் பளு தாங்காமல் அவர்களுடைய

உடம்பு ஆடிக்கொண்டே இருந்தன. கதவைத் திறந்ததும் அவ்வாட்கள் நால்வரும் ஒவ்வொருவராக நுழைந்து ரேழியில் உள்ள தொம்பைக்குள் நெல்லைக் கொட்டினர். அந்த இருட்டிலும் பொன் மஞ்சளான அந்த நெல்லை நிதாயி கவனித்தான். ஆட்கள் யாவர் என்பதையும் கண்டு கொண்டான். அவனுடைய நெருங்கிய உறவினர் அல்லர் எனினும் அவர்கள் அந்தப் பிராந்தியத்திலேயே பெயர்போன நெல் திருடர்கள்.

பொழுது விடிந்ததுமே நிதாயி, கோஸாயியை அணுகிக் கைகூப்பி 'ஸாயி, உங்களிடம் என்னுல் வேலே செய்ய முடியாது' என்முன்.

'ஏன் அப்படி சொல்கிருய்?'

'எனக்கு பிடிக்கிலிங்க'.

'ஆனுல் இதுவரை நீ செய்ததற்குச் சம்பளம் தரமுடியாது, இப்போ இந்த விஷயம் வெளியில் தெரிஞ்சாக்கா உனக்குக் கஷ்டம் நேரிடும்'.

நிதாயி இதற்குப் பதில் பேசவில்லே. தன் துணிமணி புத்தகங்களே எடுத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். நேராக அவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனே அடைந்தான்.

ஸ்டேஷன் பாயின்ட்ஸ்மன் ராஜா அவனுடைய நண்பன். இந்த ராஜாலால் ஓர் அதிசயமான பேர்வழி. சென்ற உலக யுத்தத்தின்போது நல்ல வயது இளேஞுனை இவன் மிலிடெரியில் சேர்ந்து மெஸோபொடோமியா வரைக்கும் சென்றவன், திரும்பி வந்ததும் ரெயில்வேயில் இந்த வேலே கிடைத்தது. மனம் விட்டு எதையும் தமாஷாகப் பேசும் மனிதன். தப்பும் தவறுமாக ஹிந்தியில் பேசுவான். கடியாரமுள்ளேப்போல் காரியத்தில் கண்ணுய் இருப்பான். ஏழெட்டு தரம் சா குடிப்பான்; சாராயப் பழக்கமும் உண்டு. உரக்கப் பேசுவான்; மனேவியையும், மகனேயும் தடியால் பொத்துவான். இவனுக்கும் நிதாயிக்கும் நெடுநாள் பழக்கம். அதாவது ராஜாலால் இங்கே வேலேக்கு வந்ததிலிருந்து. மூன்று வருஷம் ஆகிறது.

முதன்முதல் ராஜாவுடன் சினேகம் கிடைத்த அன்று அவன் ஸ்டேஷனில் உலாவ வந்திருந்தான். ராஜாவின் பிள்ளே டிரெயின் வரப்போவதை அறிவிக்க மணியை அடித்துவிட்டு, 'ஓரமாப் போங்கோ...வண்டி வருது' என்று எச்சரிக்கை செய்தான்.

நிதாயிக்கு அவனே மிகவும் பிடித்திருந்தது. 'பையா, நீ யார் விட்டுப் பிள்ளே?' என்று கேட்டான்.

'நான் ராஜாவின் பிள்ளே'

'ராஜாவின் பிள்ளேயா? அப்ப நீ யுவராஜாவா!'

அருகிலேயே ராஜாவும் இருந்தான் அப்பொழுது. நிதாயி பேசு வதைக் கேட்டு அவன் ஓவென்று சிரித்து விட்டான். அதிலிருந்து இவர்களிடையே நட்பு வளரத் தொடங்கியது. ரெயில் வண்டி ஸ்டேஷனைக் கடந்து சென்றதும் ராஜா தன்னுடைய விடுதிக்கு நிதாயியை அழைத்துச் சென்றான். 'இந்த ஆள் நம்ப சினேகிதர், தமாசாகப் பேச்சு வெட்டுவார். நம்ம பையன் இருக்கானே அவனை ராஜாவின் மவன் 'யுவராஜா' என்று கூப்பிட்டார்' என்று தன் மனைவியிடம் பெருமையாகச் சொல்லி உரக்கச் சிரித்தான்.

நிதாயி உற்சாகங் கொண்டு கவிவாலாக்களைப்போல் அபிநயம் செய்து ராமாயணத்திலிருந்து ஒரு சரணத்தைப் பாடலானான்—

[1] 'ராஜார் பேட்டா ஜோபராஜா
தேஜார் பேட்டா மஹாதேஜா
காய் ஸே காஸ்தா காஜா கஜா
பிதித போ மண்டலே!'

ராஜா ஒரு துள்ளு துள்ளி வீட்டினுள் சென்று அவனுடைய பிதுரார்ஜிதமான டோலக்கையும், கைத்தாளத்தையும் வெளியே எடுத்து வந்தான். டோலக்கைத் தான் எடுத்துக்கொண்டு பைய னிடம் தாளத்தைக் கொடுத்து விட்டான். அந்த வெண்கலத்தாளம் ராஜாவுக்கு அவனுடைய அப்பா, மகேஷ்பூர் திருவிழாவில் வாங்கிக் கொடுத்தது. அன்று பகலே வில்லுப்பாட்டு ராஜாவின் வீட்டில் ஜமாய்த்தது. நிதாயி ராஜாவின் மகனை யுவராஜ் என்று சொன்ன துடன் நிற்கவில்லை. ராஜாவின் சம்சாரத்தின் (மனைவி) பக்கமாகத் திரும்பி ஒரு பாட்டின் அடியை எடுத்தான்—

[2] 'ராஜார் கரேர் கரணீ ஜினி—
தினி மஹாமான்யா ராணீ—
தினி கான் பொடோ பொடோஃபேணி
ஸர்வலோகே போலே'.

அதே சமயம் இன்னொர் ஆளும் அங்கு வந்து சேர்ந்தாள். பதினைந்து பதினாறு வயதான ஓர் இளம் பெண். அவள் நிறம் நல்ல

---

[1] ராஜா மகன் யுவராஜா; தடியன் மகன் கட்டைத் தடியன். அவன் தின்பது பூரி, முறுக்கு, மூசுண்டை—இது பூவுலகு எங்கும் தெரியுமே!

[2] ராஜா வீட்டுக்காரி, அவள் ராணி மஹாராணி. அவள் தின்பது பெரிய பெரிய பேணி—இது உலகம் முழுவதும் தெரியுமே!

கறுப்புதான். ஆனால் அவள் உடல் வனப்பான பல வளைவுகள் கொண்டிருந்தது. அல்லி மலரின் செழுமையான அடித்தண்டு போல் அபூர்வமான எழில் மண்டிக் கிடந்தது அவளிடம். அப்பெண்ணின் தலைமீது உள்ள துணிச் சும்மாட்டின் மேலே நன்றாகத் தேய்த்துப் பளபளக்கும் பித்தளைக் குடம். கையில் ஒரு சிறு குவளை. அரையில் நாட்டு நெசவான மோட்டா நூல் கண்டாங்கிச் சேலை. அந்த மோட்டா சேலையின் சுற்றுக்குள் அடங்கியிருக்கும் அவளுடைய வனப்பார்ந்த அவயவங்களின் நேர்த்தி நன்கு புலப் பட்டது. வண்ணம் பூசிய மண்பொம்மையாகவே தோன்றினாள். வந்த பெண் ராஜாவின் மைத்துனி. பக்கத்துக் கிராமத்தில் வாழ்க் கைப் பட்டவள். வளமிக்க இந்த பெரிய கிராமத்திற்கு அன்றாடம் பால் விற்க வருபவள். ராஜா வேலை செய்யும் ஸ்டேஷனில் ரெயில் வண்டி கடியார முள்ளைப்போல் நேரம் தவறாமல் வருகிறது. இந்தப் பெண் வருவதோ—மேலை வானில் தாழும் மாலைக் கதிரவன் முன் படியும் நீண்ட நிழல் போலவே இருக்கும்.

அவ்விளையவளின் விழிகளில் உலாவும் ஒரு பயந்த நோக்கில் ஏதோ அதிசயத்தைக் காணவேண்டிய விழைவு தென்பட்டது. ஆழம் வரைத் தெளிந்து இருந்தும் இருண்டு விளங்கும் நீர்நிலையை நினைப்பூட்டும் அந்நோக்கு. அன்று வியப்புக்குரிய ஒரு காட்சியை பார்த்ததும் அந்தக் கபடற்ற பெண் கூச்சத்தையும் விட்டுக் கலகல எனச் சிரித்தாள். ராஜாவின் மனைவி கடுமை சுபாவம் உடையவள். தன் தங்கையை அதட்டி, 'பகபக என்று எதற்காக சிரிக்கிறே. அசட்டுப் பொக்கணமே?' என்றாள். சட்டென இளையவள் சிரிப்பதை நிறுத்தி விட்டாள். இதனால் அவள் கோபமோ, வேதனையோ அடையவில்லை. எந்த மாதிரி கட்டு திட்டங்களுக்கும் நாணலைப் போல் வளைந்து கொடுக்கும் தன்மையாள். அவளுடைய உடல் உறுப்புக்களும் இந்த மென்மை நாணலையொத்தே வளைவான அழகு உடையன.

நிதாயும் தன் பாட்டை நிறுத்திக் கொண்டான். அவன் நிற்கவே ராஜாவும் டோலக் வாசிப்பதை நிறுத்தி விட்டான். மைத்துனியைப் பார்த்து அவன், 'எப்படி பாட்டு மச்சி? நம்ம தோஸ்து இவர். உஸ்தாத். நம்ப பேரு ராஜா; பையன் பேர் யுவராஜா; உங்க அக்கா இருக்காளே அவள் ராணி' என்றதும் ஒரே வேட்டுச் சிரிப்புத்தான்.

இந்தச் சிரிப்பு நோய் ராணியையும் பற்றிக் கொண்டது. மைத்துனியும் தன் சிரிப்பலைகளை எழுப்பினாள். தலைமுசுக்கு

விலகியதுகூட அவளுக்குத் தெரியவில்லை. கண்களில்கூட நீர் வந்துவிட்டது. ஆனால் அவள் சிரிப்பு ஓயவே இல்லை.

சிரிப்பு அடங்கியதும் ராஜா, 'உஸ்தாத், இந்த விஷநாகம் யார் தெரியுமா? எனக்கு மச்சினி ஆகவேண்டும். இவளுக்கு ஒரு பேர் வையேன்' என்றான். நிதாயியின் கண்கள் அந்த இளையவளின் மீதே பதிந்து விட்டன. அவள் உடலெங்கும், கொழுந்து இலையில் காணப்படும் மாமைக் கவினும், நளிர் மென்மையும் தென்பட்டன. அவளை ஊடுருவி ஆராய நிதாயிக்கு மனம் இடம் தரவில்லை. 'மைத்துனி, மைத்துனியே. இரண்டாவது பேரில்லை. எனக்கும் இவள் மைத்துனியே. ராஜாவுக்கும் மைத்துனியே. எல்லோருக்கும் அவள் இளைய மைத்துனியே. நான் சொல்வது எப்படியம்மா மச்சி?' என்றான் நிதாயி.

நிதாயின் யுக்தியைப் பார்த்து, ராஜா பேச்சற்று நின்றான். தலையை ஆட்டி அதை ஒப்புக் கொண்டான்—'சரியாகச் சொன்னாய் சரியாகச் சொன்னாய்... மச்சினி என்றால் மச்சினிதான்.'

அதற்கு அப்புறம் மதுபானத்திற்குத் திரும்பினான் ராஜா. 'வா உஸ்தாத் தம்பி' என்று அழைத்தான்.

நிதாயி ஒரு கும்பிடு போட்டு, 'மன்னிச்சிடு அண்ணே; அது இருக்கிற பக்கமே நான் போகமாட்டேன்' என்றான்.

'அப்போ, நீ என்னதான் சாப்பிடப் போகிறே?' மைத்துனி நிதாயியைப் பார்த்து, 'பால் வேண்டுமா?' என்றதும் கலகல வென்று சிரித்தாள்.

நிதாயும் சிரித்து, 'அது வேண்டுமானால் குடிக்கிறேன். அதைப் போல ஒரு பானம் இந்த பூமியிலே எங்கே கிடைக்கப் போவுது; கொடுத்து வைக்கணுமே' என்றான்.

இளையவள் உண்மையிலேயே பெரிய குடத்திலிருக்கும் பாலை ஓர் உழக்குஅளவு எடுத்துத் தம்பளரில் ஊற்றி அவன் எதிரே வைத்து விட்டு, அவளுக்கே இயல்பான துரித நடையுடன் அங்கிருந்து போய்விட்டாள்.

இதெல்லாம் பழைய கதை. ராஜா இன்று அவனுடைய நெருங்கிய நண்பன்; அவனுடைய பக்தன்.

கோஸாயிடமிருந்து விலகி வந்து நிதாயி நேராக ஸ்டேஷனுக்கு வந்தான். நடந்ததையெல்லாம் கேட்டு ராஜா, 'நீ செய்தது சரி தம்பி' என்றான்.

'நான் இங்கே தங்க சற்று இடம் தந்தால் நன்றாக இருக்கும்'

'தாரேன்... இப்போவே தாரேன்'

'இங்கயே இருக்கேன். ஸ்டேஷன் கூலியாளாக இருந்தால் ரெண்டு காசு சம்பாதிப்பேன். அது என் ஒரு வயிற்றுக்கு போதும்'.

ரெயில்வே நிர்மாணத்தின் போது இந்த ஸ்டேஷனே ஒரு முக்கிய நிலையமாக இருந்தது. அச்சமயம் இங்கே பலவிடுதிகள் கட்டப் பட்டன. அவற்றுள் எத்தனையோ பழமைபட்டு குடியிருப்புக்கள் இல்லாமல் இருந்தன. இது போன்ற ஓர் இடத்தில் ராஜா தன் நண்பனுக்கு வசதி செய்து கொடுத்தான். நிதாயி இப்போது ஸ்டேஷனில் மூட்டை சுமக்கும் கூலி. ஸ்டேஷனிலிருந்து அவன் வெளிக் கிராமங்களுக்குப் பயணிகளின் பெட்டிப் படுக்கைகளைக் கொண்டு செல்வான். இதனால் அவனுக்கு வருவாய் மேற் கொண்டே கிடைத்தது. ஸ்டேஷனில் மூட்டைகளை வண்டி யிலிருந்து இறக்குவதற்கோ, ஏற்றுவதற்கோ கூலிக்கட்டணம் இரண்டு பைசா. உள்ளூருக்குள் சுமந்து செல்லவேண்டுமானால் நாலு பைசா. தொலைவான இடங்களுக்குச் செல்லவேண்டுமானல் தூரத்திற்கு தகுந்தாற்போல் ரேட் உயரும். மற்ற கூலிகளைவிட நிதாயி நிறையச் சம்பாதித்தான். காரணம் அவனுக்கு உதவியாய் நின்றவன் ராஜா. ஸ்டேஷன்ஸ்டால் இவர்கள் கூடி வம்பளக்கும் ஓர் இடம். ஸ்டாலின் 'வெண்டார்' (விற்பனையாளர்) பெயர் பேணே மாமா (வணிக மாமா). நிதாயிடம் அவன் ரகசியமாக, 'ராஜாவின் தோஸ்து நீ! உனக்கு என்னப்பா?' என்பான். பேணே மாமாவின் கடையில், உயிருள்ள விளம்பரமான வாத ரோகத்தால் நலிந்துபோன, வாய்ச் சவடால் மிகுந்த விப்ரபதன் என்பவன், 'தோஸ்து என்ன....ராஜாவின் சபா கவி என்று சொல்லு' என்றான்.

நிதாயி, விப்ரபதனின் பாததூளியை எடுத்துச் சபக்கென்று வாயில் போட்டுக் கொள்வான். தனக்கு சபாகவி என்ற விருதை அவன் சூட்டவே அணைகொள்ளாத மகிழ்ச்சி ஏற்படும் அவனுக்கு. விப்பரதனை அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது. அவனுடைய உறுப்புக்கள் அவசமற்று இருப்பினும் அவனைவிட ஒரு குஷியான ஆளை பார்க்கவே முடியாது. வாதரோகத்தால் பீடிக்கப்பட்ட விப்ரபதன் இளங் காலையிலேயே எழுந்து எப்படியோ தள்ளாடிக் கொண்டு வணிகமாமாவின் கடையில் முகாம்போட்டு விடுவான். ஒரு பெஞ்சியில் அமர்ந்து ஊர்க்கதையெல்லாம் வம்பளப்பான். தேநீர் அருந்த வருபவர்களை உற்சாகப்படுத்த அவன் நடு நடுவே 'சா கரோம் சா கரோம்' என்பான். சா கரம் என்பதைத்தான் இப்படித் தமாஷாகத் திரித்துக் கூறுவான். அவனுடைய உடல்

உறுப்புக்கள் அசையவில்லையே தவிர அவனுடைய நாக்கு நன்றாகத்தான் வேலை செய்தது. ரசிகப் பேர்வழி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (வஸுதைவ குடும்பகம்) என்ற மனப்பான்மை உடைய மனிதன். மாமாவின் கடைக்கு வந்ததுமே விப்ரபதன் ஒரு கப் சூடான சா பருகிவிட்டு பீடியை பற்றவைத்து விடுவான். பன்னிரண்டு மணி வண்டி சென்றதுமே சாப்பாட்டுக்காக வீடு திரும்புவான். சாப்பிட்டு ஒரு தூக்கம் போட்டதும் மூன்று மணிக் கெல்லாம் அசைந்து கொண்டே ஸ்டேஷனில் ஆஜராகிவிடுவான். இரவு பத்தரைமணி வண்டிபோன பின்பே திரும்புவான். விப்ரபதனுக்கும் நிதாயிக்கும் இடையே ஆந்தரிகம் நிலவியது. நிதாயி அவனுடைய அடிப் பொடியை சிரமேற்கொள்வான். விப்ரபதன் தன்னுடைய படைப்பான ஒரு வடமொழிச் செய்யுளைச் சொல்லி வாழ்த்துவான்—

[1] 'பவ கபி, மகாகபி தக்தானன ஸலாங்குல'

கை கூப்பியபடி நிதாயும், 'ஸ்வாமி கபி என்பதின் அர்த்தம் எனக்குத் தெரியும்' என்பான்.

விப்ரபதனும் மெல்லச் சிரித்துத் தன் பிசகை ஒப்புக்கொண்டு—'ஓ கபி அல்ல, குரங்கு அல்ல. கவி, கவி. நான் பிசகிவிட்டேன். சரி, நீயோ கவி. நான் ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லு—சகுனி சூதாட்டம் ஆடினான்; ராஜ்யம் கிடைத்தது. துரியோதனனுக்குப் பணயம் வைத்தான் தருமன். ஆனால் பீமன் பிள்ளை யார் செய்த பாபத்திற்காகச் செத்தான்?'

நிதாயி உடனேயே எழுந்து பாட்டுக்கு ஆயத்தமானான். இடது கையைக் காதருகில் பதித்து, முகத்தின் முன்பகுதியை வலது கையால் மறைத்து, சற்றுக் குனிந்த படி ஸ்வரம்போட்டுப் பாட்டை எடுத்தான்.—

[2] 'ஆஹா ... ஆஹா ... ரே கடோத்கச மர்லோ கோன் பாபே?'

பக்கவாத்தியம் வாசிக்க டோலக் இல்லையே என்று ராஜா யோசித்தான். இதற்குள் பன்னிரண்டு மணி வண்டி வரப் போவதை அறிவிக்கும் மணியோசை கேட்டது. தொலைவிலிருந்து

[1] குரங்காகுவாய்... எரிமூஞ்சிப் பெருங் குரங்காகுவாய்... வால் நீண்ட வானர மாவாய்.

[2] ஆஹா... ஆஹா! கடோத்கசன் இறந்தானே, அவன் என்ன பாபம் பண்ணினான்?

வரும் பயணிகளுக்கு நிதாயியே கூலி தூக்குவான். ஸ்டேஷன் ஜமாதாரான, ராஜாவின் சிபாரிசின்பேரில் பயணிகள் நிதாயினிடமே வருவார்கள். அவர்களுக்குத் தகுந்தபடி அவனும் நடந்துகொள்வான்.

கூலி எவ்வளவென்று அவர்கள் பேசும்போது நிதாயி மிக வணக்கத்துடன், 'உங்களுக்குத் தெரியாததுங்களா? வானத்தை பாருங்கோ' என்பான். நல்ல கோடை காலமானால், 'சூரியபகவான் எத்தனை கிரணங்களால் நம்மைச் சுட்டு எரிக்கிறான் பாருங்கோ' என்பான். மழை நாளானால், 'மேகம் இருளோன்னு வருதுங்கோ அதைப் பார்த்தாவது கொடுங்க' என்பான். குளிர்காலமானால், 'என்னமா ஒடுக்குதுங்க குளிரு' என்றதும் உடல் நடுங்குவதுபோல் அவிநயம் செய்வான்.

மாமாவின் கடையில் அமர்ந்தபடி விப்ரபதன் நிதாயிக்கு அனுசரணையாக, 'உங்களைத்தாங்க! ஒரு சால்வைக்குமேலே இரண்டு சால்வை நீங்க போத்திண்டு இருக்கீங்க. ஒரே கிழிந்துபோன சொக்காய்தான் இவன் போட்டுண்டு இருக்கான். ஏதோ கஷ்டத்தைப் பார்த்து குடுங்கோ ஐயா' என்பான்.

பகல் வேளை வெளியே போகும்போது நிதாயி ராஜாவிடம் சொல்லி விட்டுப் போவான்—'ராஜா, நம்ப மச்சினி வந்தாக்கா பாலை வாங்கி வை'

பன்னிரண்டு மணி வண்டி சென்றதுமே பாயின்ட்டுக்கு அருகில் லயனுக்குச் சற்று எட்டியுள்ள [1]கிருஷ்ணசூடா மரத்தின் அடர் நிழலில் போய் நிற்பான். பட்டப்பகலில் வெயில் ஒளிபட்டுத் தண்டவாளத்தின் தேய்ந்த பாகம் கண்ணைக் கூசும்படி பளபளக்கும். நிதாயி ஏதோ எண்ணத்தில் ஒன்றி ரெயில் லைன் வளையும் இடத்தில் கண்ணைச் செலுத்துவான். திடுமென அங்கே வெளுப்பாக ஒரு கீற்று மெல்ல நகர்வது தெரியும். அந்தக் கீற்றின் தலைமீது பொன் வண்ணமான ஒரு பொட்டு புலப்படும். வரவர அந்த ஒள்ளிய கீற்று ஓர் ஆளின் உருவைக்கொள்ளும். சவுக்காரத்தால் வெளுக்கத் துவைத்த மோட்டா நூல் சேலையை உடல் அமர அணிந்துகொண்டு சற்று நெடிய, கருமாமேனியளான ஒரு நங்கை தோன்றுவாள். அவள் தலைமீது சும்மாட்டில் ஒரு பித்தளைக் குடம் மினுமினுக்கும். ஒரு கையில் பாலை முகக்கும் குவளை; மறுகை வீசியாடும். இந்தச்

---

[1] Gold-mohur tree கோடை நாட்களில் இலையுதிர்ந்து மீண்டும் பூ இணர்களுடன் தளிர்விடும் அழகிய நிழல்தரும் மரம். நெருப்பெனச் சொரியும் மலர்களைக்கொண்டது. இதை May-flower tree என்றும் கூறுவர்.

சந்தத்தில் அவள் அலட்சியமாக நடந்து வருவாள். நடையில் ஒரு துரிதம்; அதேபோல் பேச்சிலும். அந்தப் பெண் வேறுயாருமல்ல; மைத்துனியே.

நிதாயிக்குக் குடிப்பழக்கம் கிடையாது. ஆனால் பால்மீது பெரு விருப்பு. இது மேலும் அதிகரித்துவிட்டது. மைத்துனியிடம் அவன் அன்றாடம் உழக்குப் பால் வாங்குவான். பால் வந்ததுமே சா பானத்திற்கு உலையில் நீரை ஏற்றுவான். மாமா கடையில் சா வாங்கிக் குடித்தால் மேற்கொண்டு அரையணா செலவு செய்ய வேண்டியிருக்கிறது. விப்ரபதனைப்போல் இலவசச் சா அருந்த அவனுக்கு உரிமை இல்லை. இராதுபோனாலும் அவனுக்கு அது அவ்வளவாக ருசிக்கவில்லை. மட்டரகமாகவே இருந்தது. ஸ்டேஷனில் ஒவ்வொரு நாளும் பல திசைகளிலிருந்து மனிதர்கள் வருவதும் போவதுமாயிருந்தனர். அக்கம்பக்கத்துச் செய்திகளை ஸ்டேஷனலிருந்தபடியே தெரிந்துகொள்ளலாம். இந்தச் செய்திகளில் பாட்டு கோஷ்டிகளைப் பற்றிய தகவல் கிடைத்தால் நிதாயிக்குக் களிதுளும்பும். அன்று மாலையே சிவப்புக் கறைபோட்ட வெளேரென்ற தோதி அணிந்து, கைவெட்டிய சொக்காயும், தலைப்பாகையுமாய் முணுமுணுவென்று ஒரு பாட்டின் சரணத்தைப் பாடிக்கொண்டே ராஜாவுக்குச் சமாசாரம் அறிவிக்க வந்தான் நிதாயி. மிலட்டரி ராஜா, எட்டரை மணி வண்டியை அனுப்பிவிட்டு, 'ஐந்தே நிமிஷம் உஸ்தாத்... இதோ வந்துவிட்டேன்' என்றான்.

ஐந்து நிமிடங்கூடத் தேவையில்லை. மூன்றே நிமிடத்தில் ரெயில்வே கம்பனி தந்த நீலக் குடுத்தாவை மாட்டிக்கொண்டு ஸ்டேஷனின் ஒற்றைக்கண் லாந்தரையும் கைத்தடியும் கையில் ஏந்திக் கிளம்பிச் சென்றான் நிதாயுடன். பொழுது புலர்வதற்குள் திரும்பிவிட்டனர். வெறும் வில்லுப்பாட்டுமட்டுமன்று, [1] யாத்ரா கானமும் நிதாயிக்குப் பிடித்த விஷயம். ஆகா, விளக்கொளியும், விழாக் கோலமும் மண்டிய இரவெல்லாம் தன் வாழ்நாளை கழிக்க வேண்டுமென்பது அவனது பேரவா அன்றோ!

மனத்துள் குமிழ்க்கும் இந்த ஆசையை அவன் இரண்டடி கொண்ட ஒரு பாட்டாகவே அமைத்துவிட்டான். யாருமே தென்படாத வெட்டவெளியில், தனக்குத்தானே பாடிக்கொள்வான். அவனுடைய ரசமயனான நண்பனுக்குச் சிலசமயம் பாடிக் காட்டுவான். அந்த ரசமயன் வேறுயாருமில்லை, ராஜாதான்.

---

[1] ஜாத்திரை போன்ற விழாக்களில் நடக்கும் கூத்துப் பாடல்கள்.

[1] ஸேஇ மேலாதே கபே ஜாபோ
டிக்கா நா கி ஹாய்ரே!
ஜெ மேலாதே கான தாமே நா
ராத்தேர் ஆந்தார் நாஇரே
ஓ ரஸமய் பாஇரே!

ராஜா இதைச் செவிமாந்தி, 'பேஷ் பேஷ்' என்று உணர்ச்சி வசமாகி அவனை அணைத்துக்கொள்வான். 'உஸ்தாத், அபாரமான பாட்டு இது. அருமையான சொல் உன் வாக்கில் வருகிறது!' என்ருன். இப்படி எத்தனையோ பாடல்கள் பிறந்தன. ஆனுல் ஒன்றையாவது அவன் பூர்த்தி செய்யவில்லை.

திடுமெனச் சண்டிதேவியின் திருவிழாக் கூட்டத்தில் உண்மையில் இந்த நிதாயியே கவிவாலாவாக விளங்கினுன்.

4

பாட்டரங்கு முடிவடைந்ததும் சண்டிதேவியின் பிரசாதமாக குங்குமம் தோய்ந்த அந்த வதங்கிய வில்வ மாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டு நிதாயி, மேளாவிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும் காட்சி, அரசன் அவையில் வெற்றி அலங்கல் அணிந்து அந்தக் காலத்து கவிவாணன் வருவதுபோலவே இருந்தது. அவன் உயர்ந்த பாவனையில் திளைத்து நடந்துவந்து கொண்டிருந்தான். திடுமெனத் தான் ஓர் கவிஞனுக, படித்தவர்கள் பாராட்டும் புலவனுக மாறி விட்டதை உணர்ந்தான். வழிநெடுகிலும் அவன் இனத்தவர்கள், அவனுடைய உறவினர்கள் - இதுவரை அவனுடன் எந்தத் தொடர்பையும் கொள்ளாதவர்கள் - அன்று அவனைச் சுற்றிக் கொண்டு பின் தொடர்ந்தனர். அவர்கள் எழுப்பும் ஆரவாரம் அவன் செவிக்கே புரிபடாமலிருந்தது.

---

[1] இடந்தெரியாத அந்த மேளாச் சந்தைக்கு என்று போவேனே! பாட்டு சற்றும் ஓயாத, பாயிருள் சற்றும் புகாத அவ்விந்தை சந்தைக்கு என்று போவேனே தம்பி ரசிகமணி!

ராஜாவும் அவனோடு உடல் உராய வந்து கொண்டிருந்தான். புலவர்ஏறு வாகை சூடி தலை நிமிர்ந்து செல்கிறார்; பக்கலில் இத் தகைய பாவாணரைப் பெற்றோமே என்ற ஓர் உவகையால் ராஜாவும் வேந்தனைப்போல் பீடு நடை போட்டான். அடிக்கடி நிதாயின் மேலே விழ வரும் ஜனங்களை, 'ஒதுங்கிப் போங்கள் ஒதுங்கிப் போங்கள்'-' நிகிச்மே கேவோ ஆதா ஹை'-'ஹட் ஜாவ்... ஹட் ஜாவ்' (மேல் ஏன் வந்து விழுகிறீர்கள்? ஒதுங்குங்கள்) என்று உவப்பு மிகுதியால் அவனுடைய தாறுமாறுமான ஹிந்தி அன்று, அதன் அளவை மீறி விட்டது. ராஜாவின் சம்சாரமும், மைத்துனியும் சற்றுப் பின்னாலேயே வந்து கொண்டிருந்தனர். நிதாயின் நெருங்கிய உறவினர்களுடன் ராஜாவின் சம்சாரம் என்னவெல்லாமோ பிதற்றிக் கொண்டிருந்தாள்—'நீங்களும் சரி, அவர் அம்மாவும் அவரை வீட்டைவிட்டு துரத்தி விட்டீங்க. இங்கே ஸ்டேஷன்லே எங்க வீட்டிலே வந்திருக்காரு. ஒரு நாளாவது நீங்க அவரை வந்து பாத்தீங்களா? என்ன மனிசங்க?'

மைத்துனியான அந்த இளவயதினள் இருளிடையே, மருள மருள விழிக்க நடுநடுவே ஏதாவது சொல்லுவாள். அவளுக்கு எதனாலோ நடுக்கம். அடுத்த கிராமத்தில் அவளுடைய புக்ககம். மேளா நிமித்தமாக அவள் இன்று அக்காவின் வீட்டில் வந்திருக்கிறாள். இரவு இங்கு இருந்துவிட்டுப் பொழுது விடிந்ததும் போய்விடுவாள். அவளுக்கு ஓர் ஆசை, நிதாயுடன் இரண்டொரு வார்த்தை பேசவேண்டுமென்று. 'இப்படிப் பாட யாரிடம் கத்துக்கொண்டீங்க? இத்தனை பேர் முன்னாலே இப்படி மடமடன்னு பாட்டுக்களை எப்படித்தான் கட்டீனிங்களோ? அடேயப்பா!'-இவ்வாறு அவள் கற்பனையில் அவனுடன் பேச விரும்பியபோது அவளுடைய கண்கள் வியப்பினால் பெரிதாக மலர்ந்து விளங்கின.

சண்டீதேவதையின் ஆலயத்திலிருந்து ஸ்டேஷன் பகுதிக்கு டோம்களின் சேரி வழியாகத்தான் வரவேண்டும். நிதாயின் நெருங்கிய பந்துக்கள் சிலர், 'வீட்டுக்கு வா' என்று அவனை அழைத்தனர். நிதாயின் தாய் இப்போது அங்கே இல்லை. அவள் தன் பெண்ணிடம் போய்ச் சேர்ந்து விட்டாள். வேறு கிராமத்தில் மாப்பிள்ளை வீட்டில் வசிக்கலானாள். அந்த மருமகன் இந்தப் பிராந்தியத்தில் சிலம்பவித்தையில் கைதேர்ந்தவன். இரவு நேரங் களில் வீடு புகுந்து கொள்ளையடிப்பான்; மறைவாக கள்ளச் சாராயம் விற்பான். எங்கேயாவது பாழடைந்த குடிசையில் மிடா மிடாவாகப் பட்டைச் சாராயம் அருந்துவான்; சேர் கணக்கில் மீனை வாங்குவான்.

நிதாயின் தாய் வெறும் சோற்றுக்காக மருமகனின் நிழலில் தங்கி யிருக்க வில்லை. அவளுக்கும் இத்தச் சாராயம், மீன் என்ருல் உயிர். நிதாயி, கூரை விழுந்து போய் குட்டிச் சுவரான தன் குடிசையைப் பார்த்து நகைத்து,' வேண்டியதில்லை; என் இடத்துக்கே போகிறேன்.' என்ருன்.

அதே சமயம் கரகரப்பான குரலில் கூரிய கற்களை வீசியெறிவது போல் யாரோ கடுமையான சொற்களால் நிதாயியைத் தாக்கினர்— 'பன்னிப் பயலே, வேறு எங்கடா உனக்கு இடம்? நில்லு!' இது அவனுடைய மாமாவின் குரலே. இந்தச் சேரியில் இப்பொழுது இவர்தான் குலபதி; இரவில் திருட்டு வேட்டை மேல் செல்வோரின் தளபதி; அசகாய சூரன்.

நிதாயி திடுக்கிட்டான். சேரியின் ஒரு சந்து வழியாக இந்த மாமன் அவன் முன் வந்து நின்ருன் - பிரஹ்லாதன் எதிரே ஹிரண்ய கசிபு தோன்றுவதுபோல். 'லபக்' கென அவன் குரல்வளையை நெறித்து, 'உன் அப்பனையும், உன் அண்ணனையும் நீ திட்டிஞ திட்டிக்கோ; சபேலே ஊர்க்காரங்க முன்ஞலே அங்கே எங்க அப்பனையும், அண்ணுத்தையையும் ஏன் திட்டணும்? பன்னிக்குப் பொறந்த பயலே.' என்ருன்.

அங்கிருந்தவர் அத்தனை பேரும் திடுக்கிட்டனர்: ராஜாவும்தான். நிதாயின் மாமாவின் கை இரும்புப் பிடியானது. இருப்புப் பூட்டை அவன் கை, ஒரே முறுக்கில் உடைக்கும் வன்மையுடையது. நிதாயிக்கு மூச்சு அடைத்தது, அவன் நல்ல பாட்டைப் பாடிஞலும் இந்த மாமனின் மருமகன்தானே - வம்சத்துப் பையன்தானே; அவன் உடம்பிலும் அமோகமான வலிமை இருந்தது. மேலும் அவன் யௌவன வயதினன். அவன் தன் இரு கைகளாலும் மாமன் கைகளையும் உலுக்கித் தள்ளிஞன். மறுகணமே ராஜா, முன்ஞல் வந்து, 'விடு அவனை' என்று உறுமிஞன்.

அந்த மாமன் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வரவில்லை. அவனை அடக்கித் தன் வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே அவன் எண்ணம். நிதாயின் குரல்வளையிலிருந்து தன் பிடியை எடுத்து, 'தொலைந்து போ, இந்தப் பக்கம் இனி தலையைக் காட்டாதே... அந்த மாகாதேவ் கவிவாலா சொன்னது சரிதான்- குப்பையில் கிடக்கும் எச்சில் கல்லையடா; அதற்குச் சொர்க்கம் செல்ல ஆசையடா' என்றதும், திடுமென எப்படி வந்தாஞே அப்படியே போய் விட்டான்.

அங்குக் கூடியிருந்தவர் அத்தனைபேரும் கட்டுண்டு நின்றனர். ராஜா மட்டும் உரக்கவே, கூவிக்கொண்டு இருந்தான்—'என்ன உளறல் இது... துலுக்கன் தர்பார் நடத்தலாம்னு பார்க்கருனு? இது எந்தக் காலம்?'

சேரி பக்கத்திலிருந்து ஓர் உறுமல் வந்தது-'போடா போடா சோம்பேறி... டேஷன்லே வயிறு வளக்கும் கூலிப்பய!'

நிதாயி ராஜாவின் கையை அழுத்திப் பிடித்து, 'சும்மா இரு ராஜா. நாம் போகலாம். அந்தப் பாவி என் தம்பிதான்' என்றதும் ஒரு பெருமூச்சு எறிந்து, 'இனிமேல் நான் நாடோடிதான். இந்த உலகத்திலே நீ ஒருத்தன்தான் எனக்குத் துணை.' என்றான்.

ராஜா அவன் உள்ளங்கையைத் தன் கையால் வருடிக் கொண்டே தழுதழுத்த குரலில், 'உஸ்தாத், உன் மனசு போல எவனுக்கு இருக்கிறது?' என்றான்.

நிதாயி மெல்லச் சிரித்தான். அவன் பின்புறமாக மைத்துனி விசும்பி அழுது கொண்டிருந்தாள். ராஜாவின் சம்சாரம், 'நாசமாப் போனவளே நீ அழுவானேடீ?' என்றாள்.

இதற்குள் அங்கிருந்த கும்பலும் கலைந்து விட்டது. உதவிக்கு வந்தவர்கள் தத்தம் இடங்களுக்குப் போய்விட்டனர். நிதாயும் ராஜாவைச் சேர்ந்தவர்களுமே ஸ்டேஷன் பாதையில் திரும்பினர். விடுதியை அடைந்ததும் ராஜா, 'எதாவது வயிற்றுக்குச் சாப்பிடு கிறயா உஸ்தாத்?' என்றான்.

நிதாயி அதற்கு, 'என் பாட்டைக் கேள் ராஜாஅண்ணு! ஒரு நல்ல பாட்டின் அடி என் மனசில் குவிந்துக்கொண்டிருக்கிறது... கேட்கிறயா?' என்றான்.

ராஜா, 'டேரோ (சற்று இரு) டோலக்கை...' என்று நிறுத்தினன்.

நிதாயி அவனைத் தடுத்து, 'அதெல்லாம் தேவை இல்லை வெறு மௌன பாடப் போகிறேன்' என்றதும் தன் இனிய குரலைச் சற்று மந்தணமாகவே ஒலித்துப் பாடலானன்—

[1] ஆமி பாலோபேஷே ஏகி புஜேச்சி
ஸுகேர் ஸார் ஸே சோக்கேர் ஜலே ரே
துமி ஹாஸோ, ஆமி காந்தி
வாம்சி பாஜுக் கதம் தலே ரே''

---

[1] காதல் கொண்டேன், இனி அதனுல் கண்ணீர் வரலாச்சு. என்னே இனிமை, அக் கண்ணீர்த்துளியில்! நீ சிரிக்கின்றய்; நான் அழுகின்றேன்; கதம்ப மரத்தடியில் அவ்வேய்ங்குழல் இசைக்கட்டும்.

ராஜா அதை அனுபவித்துக் கொண்டே, ‘பலே! பலே...மேலே பாடு’ என்ருன்.

நிதாயின் கண்களிலிருந்து நீர் ஆருய்ப் பெருகியது. அதை அவன் துடைத்து விட்டு, ‘இது போதும்’ என்ருன்.

உடனேயே அவன் தன் படுக்கையில் போய்ப் படுத்தான். அவன் மனத்துள் எத்தனேயோ எண்ணங்கள் சென்றன. மாமா அவனே மோசமாக திட்டியதைக்கூட அவன் பெரிதாகப் பொருட்படுத்த வில்லே. இது போல் அவன் பலதடவை அவருடைய கொடுமைக்கு ஆளாகியிருக்கிருன். அதை அவன் பெருமையாகக் கூட எடுத்துக் கொண்டிருக்கிருன். இவற்றையெல்லாம் மீறி பாட்டுப் பாடும் புலமையைப் பற்றியே எண்ணிமிட்டுக் கொண்டிருந்தான்.

முக்கியமாக அந்தப் பக்கத்திலேயே பெயர் வாங்கிய தாரண் மண்டலேப் பற்றித்தான் அவனுடைய சிந்தனே. தாரண்கவி பாடும் அரங்குகளில் ஏராளமாக மக்கள் கூடுவர். ஆயிரக்கணக்கில் ஜனங்கள் வந்து அந்தப் பாட்டை ரசிப்பார்கள். அவன் முதன்முதல் தாரண்மண்டலின் பாடல்களேக் கேட்டு அனுபவித்த அந்தச் சித்திரம் அவன் மனத்திரையில் பளிச்சென்றே இருந்தது.

அந்தச் சண்டீதேவியின் விழாவின் போது கூடும் மேளாவுக்குத் தான் எத்தனேக் கூட்டம் வந்தது! என்ன ஆரவாரம்! மேளாவில், ஜனங்களே ஒழுங்கு படுத்த நான்கு ஐந்து ஜவான்கள் அதட்டிக் கொண்டே சுற்றிக்கொண்டு இருப்பார்கள். அவர்களுடன் ஊர் பிரமுகர்கள் சிலரும், அவர்களுடைய ஆட்களும் இருப்பார்கள். என்னமா கலகலவென்று இருக்கும்! நிதாயிக்கு அந்நினேவுகள் மிகத் தெளிவாக இருந்தன. அத்தனே ஜனங்களும் ‘உஷ்’ என்றதும் ‘கப்சிப்’ என்று இருந்தனர். பிரகாசமான விளக்கொளி பாயும் அந்த மேடைமீது தாரண்கவி வந்து நிற்கிருர்!

நெடிய ஆள். நரைத்த தலே மயிர், நரைத்த மீசை; நெற்றியில் சிவப்புக் குங்குமப்பொட்டு. மார்பில் மாலேயாக ‘மெடல்’ வரிசை; சிவந்த கண்கள். தாரண்கவி தோன்றியதுமே மக்களின் ஆர்பரிப்பு அடங்கிவிட்டது. மேடைப் பக்கங்களில் கிராமத்துக் கனவான்கள் அமர்ந்திருந்தனர். அவர்களும் பேச்சை நிறுத்தி விட்டனர். அது பாட்டா? அதை என்னவென்று வருணிப்பது!

இதற்கு அப்புறமே அக்கம் பக்கம் ஊர்களில் தாரண்கவியின் பாட்டு என்ருல், நிதாயி அங்கே ஆஜராகி விடுவான். ஒரு சமயம் கும்பலிடையே அவன் கையை நீட்டிக் குனிந்து தாரண்கவியின் பாததூளியை எடுத்துத் தலேயில் வைத்துக்கொண்டான். அது

முதற்கொண்டே தானும் பாட்டுக்கு ஓர் புலவஞக வரவேண்டும் என்ற ஆசை எழுந்தது. இந்தப் பாடகரின் கோஷ்டியில் சேர்ந்து பின் பாட்டுப் பாட பயிற்சி பெறவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆஞல் தாரண் இறந்து விட்டார். அளவுக்கு மீறி குடித்ததால் இந்த தாரணுக்கு மரணம் நேரிட்டது. மற்றபடி நல்லவர்தான். பயங்கர மான குடிப்பழக்கந்தான் அவரிடம் தென்பட்ட குறை. அரங்கி லேயே புட்டியும் கிளாஸும் வந்து விடும். எல்லோர் முன்பும், ஒரு பாட்டு முடிந்ததும் ஒரு விழுங்கு மதுவைச் சேவை செய்வார். இந்தத் தாரண்கவி அன்று இந்தப் பாட்டைப் பாடிஞர்—

[1] தோமார் லாகி ஆமார் புகே பரம ஆசிஷ் சோன் தசானன்,
தோமார் சரண தூலா ஆமார் அங்கே அகரு சந்தன்.
வீபீஷணேர் ராக்கஸ ஜன்மேர் சாப விமோசன்
காலாஸ் காலாஸ் காலாஸ், ஆமி காலாஸ் நிலாம் ஹே ||

அன்று நடந்த கவியரங்கில் தாரண்மண்டல்தான் வீபீஷணன். அவருக்குச் சவாலாக பாடிய விஷ்ணுசிங்தான் ராவணன். அந்தச் சித்திரமே இன்று நிதாயின் மனத்துள் வந்து நின்றது. இன்று அவனுக்கு விடுதலே...விடுதலே...விடுதலே...

ஒவ்வொரு சமயம் அவனுக்குத் தோன்றும், இந்தத் தாரண்கவி தன்னுடைய துரதிருஷ்ட வசத்தால்தான் இறந்து போய் விட்டாரோ என்று. அவன் விரும்பிய குரு போய்விட்டார். வேறு யார் கிடைக்கப்போகிருர்கள்? பாட்டில் வல்லவஞக வரவேண்டும் என்ருல் தாரண் போன்ற உயர்ந்த வகை குரு இராமல் முடியாது.

சாத்திரங்கள் கணக்கில் அடங்காதவை. அவற்றை யெல்லாம் கரைத்துக் குடித்து ஒரு புலவஞக வருவது இந்த ஜன்மத்தில் நடக்காது. கடல் போன்றவை ராமாயண, மகாபாரதம். சட்டென அப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது, மகாதேவ் கவிவாலா ராமாயணத்திலிருந்து ஒரு சந்தர்பப்த்தை எடுத்து அதன் மூலம் அவனேத் தாழ்த்திக் கூறியது. இதஞல் பரபரப்பு உற்று அவன் படுக்கையிலிருந்து சட்டென எழுந்து உட்கார்ந்தான். விளக்கை ஏற்றிஞன்.

---

[1] உன் பொருட்டே என் உளமதில் அன்பு ஊறுகிறது அண்ணு, கேளடா தசானனா! உன் அடித்துகள் என் உடம்பில் சந்தனம் போல் குளிருதடா. விபீஷணனின் அரக்க ஜன்மத்தின் சாபம் விண்டதடா விடுதலே! விடுதலே! விடுதலே! விடுதலேயடைந்தேனடா!

சின்னஞ்சிறு நாற்காலி மீது அவன் வெகு ஜாக்கிரதையாகத் தன்னுடைய புத்தகங்களை வண்ணச்சீலையால் கட்டி வைத்திருந் தான். அதை அவிழ்த்து ராமாயணத்தை வெளியே எடுத்தான். அந்தக் கட்டுக்குள் இன்னும் எத்தனையோ புத்தகங்கள் - பள்ளிக் கூடத்தில் அவன் பரிசாக பெற்றவை, அவனே காசுகொடுத்து வாங்கியவை இப்படிப் பல நூல்கள். போகும்போது வழியில் எங்கா வது அச்சடித்த காகிதமோ, புத்தகத்தாளோ கிடந்தால் அவற்றை அவன் திரட்டி வைத்துக்கொள்வான். அவற்றில் உள்ள விஷயங்களை ஓர் எழுத்து விடாமல் படித்து விடுவான். நல்ல பகுதிகள் இருந்தால் அவற்றை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வான். இப்படித் துளித் துளியாக அவனுடைய கல்வி வளரலாயிற்று. அவன் திரட்டிய புத்தகங்களோ அற்பமானவை அல்ல—கிருத்திவாஸரின் ராமா யணம், காசிதாஸரின் மகாபாரதம், கிருஷ்ண அஷ்டோத்திரம், சனிக்கிரக ஸ்தோத்திரம்; மனஸா தேவியின் புராணம், கங்கா மாகாத்மியம்; தியேட்டர், கிளப், நாடகக்குழுவினர் எறிந்து விட்ட சில பக்கங்கள் காணாத நாடக நூல்கள். இவற்றுடன் அவன் பள்ளியில் படித்த புத்தகங்கள். இன்னும் இரண்டு நோட்டுகள், ஓரத்தில் விரிந்த சிலேட்டுப் பலகை, பென்சில், சிவப்பும் நீலமும் சேர்ந்த மோட்டா பென்சில், வெற்றுக் காகிதங்கள் முதலியன.

அந்த இரவே அவன் ஒரே கவனமாக ராமாயணத்தைப் பக்கம் பக்கமாகப் பார்க்கத் தொடங்கினான். மகாதேவ் கவிவாலா அவனை அடக்கிவிட்டான். அவனும் தோல்வியை ஏற்றுக் கொண்டுவிட்டான். அது அவன் செய்த தவறால் அல்ல. வெறும் வாய்வீச்சினால் இதைத் தவறாக அந்த மகாதேவ் அம்பலப்படுத்தி விட்டான். நிதாயி தனக்குள் சிரிப்பு பொங்க ராவணன், விபீஷணன் இவர்களிடையே நடக்கும் தருக்கம் வரும் அத்தியாத்தைப் பிரித்தான். அதைப் படித்துவிட்டு அவன் படுக்கையில் சாய்ந்தான். ஆனால் துளிக்கூட அவனுக்கு தூக்கம் வரவில்லை. நெற்றியின் பக்கநரம்புகள் டக்டக் என்று அடித்துக் கொண்டே இருந்தன. அவன் செவியில் இன்னும் அந்த டோலக், ஜால்ராவின் சப்தம் கேட்பது போலவே இருந்தது. மெல்ல மெல்ல அந்த இரைச்சல் மெதுவாகி மறைந்தே விட்டது.

ராஜா கூப்பிட்டதினால் அவனுடைய தூக்கம் கலைந்தது.

மிலிட்டரி ராஜா இரவு வெகுநேரம் விழித்தபோதிலும் விடிநேரம் ஆறு மணிக்கு எழுந்து விட்டான். ஏழுமணிக்கு முதல் ரெயில் வண்டி இந்த ஸ்டேஷனுக்கு வந்து செல்லும். போர்முனையைப் பார்த்த ராஜா செய்யும் முதல் காரியம் சா குடிப்பதாகும். ஸ்டேஷனுக்குச் சென்று

சிக்னல் கொடுத்ததும் மணியடித்து விட்டுத் தன் நண்பனை வந்து எழுப்பினான்—'உஸ்தாத்...உஸ்தாத்'

நிதாயி கூட இராதுபோனால் அவனுக்கு அந்தத் தேநீர் ருசிப்ப தில்லை. அவனுடைய சம்சாரம் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த மைத்துனியோ ராஜா எழுவதற்கு முன்னேயே போய்விட்டாள். மைத்துனியின் மாமியார் மிகக் கொடியவள். இந்தப் பெண்ணை பாடாகப் படுத்தினாள். ராஜா தனக்குள்ளேயே, 'இந்தப் பெண்ணை மணந்து கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஒல்கி ஒசிந்து அருவிபோல் கவடற்றுச் சிரிக்கும், விரைவாகப் பேசும் இனிய தன்மை கொண்ட இந்த மைத்துனி, தனக்கு வாய்த்த வாயாடி மனைவியைவிட பொருத்தமாய் இருந்திருப்பாள்' என்று நினைத்துக் கொண்டான்.

நிதாயிடமிருந்து பதிலே வராது போகவே ராஜா மீண்டும், 'ஓ பாடகரே... எழுந்திருக்கலே?' என்று கூப்பிட்டான்.

உறக்கம் இன்னும் தெளியாத குரலில் நிதாயி, 'உம்' என்றான்.

'சா தயாராகிவிட்டது தம்பி!'

'ஊஹூம்'.

'டிரெயின் வந்துவிட்டது தம்பி!'

'உம்'.

தூக்கம் இன்னும் அவனை ஆட்கொண்டு இருந்ததினால் ராஜா போய்விட்டான். நேற்று இரவு நிதாயிக்குச் சற்று வேலை அதிகம் தான். அதனால் அவனுக்கு இந்த ஆழ்ந்த நித்திரை அவசிய மாயிற்று.

மணி ஒன்பது இருக்கும். நிதாயி எழுந்தான். சிரித்த முக மாகவே தென்பட்டான். இரவில் கண்ட ஒரு கனவின் நினைவு வந்து இந்தச் சிரிப்பு அவன் முகத்தில் படர்ந்திருக்கலாம். எழுந் ததுமே அவனுக்கு முதல் ஞாபகம் வந்தது—கல்கத்தாவில் உத்தி யோகம் பார்க்கும் அந்த பாபு, 'நீ ஒரு நல்ல கவிஞனாவாய்' என்று சொன்ன வார்த்தைதான். அப்புறம் அவர் இங்கிலீஷில் என்னவோ சொன்னாரே என்று யோசித்தான்.

தான் உண்மையில் ஒரு கவிஞனாகிவிட்டால் அந்த பூதநாத் பாபு கூட, 'நீ பெரிய ஆளடா... நீ ஒரு கவியடா' என்று தூக்கி வைத்துப் பேசுவார்.

அப்புறம் ஊரில் உள்ளவர்களெல்லாம் அவனைப் பலபடியாகப் புகழ்வார்கள். இப்படி அவன் கண்முன் தன் வருங்காலத்தைப்பற்றிய சித்திரத்தை எழுப்பிக் கொண்டான்—விப்ரபத பாபுவும் இத்தனை

நாழிகைக்கு ஸ்டேஷன் கடையில் ஊர்க்கதைகளை ஆரம்பித்து விட்டிருப்பார். இந்த ஒன்பதரை மணி வண்டியில் அவனுடைய கவித் திறமையைப் பற்றிய புகழ் விப்ரபதன் வாயிலாக கடோவா வரைக்கும் பரவிவிட்டிருக்கும். பழம், பால், தேயிலை, சீனி எல்லாம் தன்னிடத்தில் இருந்தும் அன்று அவன் தேநீரே தயாரித்துக் கொள்ளவில்லை. கையில் தேநீர்க் குவளையை உருட்டிக் கொண்டே சோம்பலாகவே கால் வைத்து ஸ்டேஷன் ஸ்டாலை நோக்கி நடந்தான். முகத்தில் அதே மெல்லிய சிரிப்பு.

அவனைக் கண்டதும் விப்ரபதன் தன்னுடன் இருந்தவர்களைப் பார்த்து, 'உஷ், யாரும் பேசாதீர்கள்' என்றதும், நிதாயியை வரவேற்றான்—'அதிர்ஷ்டம் பண்ணினவன் அப்பா! நீ அதிர்ஷ்டம் பண்ணினவன்! அடராமசந்திரா நேற்று நீ பெரிய லங்கா காண்டமே நடத்திவிட்டாயாமே...கேள்விப்பட்டேன்... பேஷ் கபிவரரே !'

விப்ரபதனின் புளித்துபோன இந்த ரசிகத்தன்மை நிதாயியை மிகவும் வருத்திவிட்டது. சட்டென அவனுடைய முகம் ஆழ்ந்து விளங்கியது.

விப்ரபதன் இதைக் கவனிக்கவில்லை. நிதாயிடமிருந்து பேச்சு எதுவும் வராது போகவே, 'என்னமவோ ஓர் அடி எடுத்தையே... அந்தப் பாட்டின் அடி எது?—'குப் குப் ககர் ககர் குப். தடிப்பயலே மகாதேவா சுப் சுப் சுப்'—இதுதானே?' என்றதும் அவன் நீளச் சிரித்தான்.

நிதாயி கைகுவித்து வேதனையுடன், 'அடியேன் சுவாமி, நான் உயர்ந்த சாதியானல்ல, இழிகுலத்தவன்—குரங்கு, கரடி, அநுமான், ஜாம்பவான் என்று அழைத்தால்கூட அது உண்மைதானே...' என்றதும் தன்னுடைய தேநீர்க் குவளையைக் கடைக்கார மாமாவிடம் நீட்டி, 'கடைக்காரரே, ஒரு கோப்பை சா ஊற்றுங்கள்.' என்றதும், அதற்கான காசைத் தன் மடியிலிருந்த பையிலிருந்து எடுத்தான்.

கடைக்கார மாமா, குவளையில் 'சா'வை ஊற்றி, 'மாமா என்று சொல்லாது கடைக்காரரே என்கிறுயே... இதற்குள் உறவைக்கூட மறந்து விட்டாயேப்பா!' என்றான்.

இதற்கு நிதாயி மறுமொழியே தரவில்லை. கடைக்கார மாமா மட்டும் பேசினான்—'போகட்டும், நேற்று உன்பாட்டு என்னமாக இருந்தது தெரியுமா... ரொம்ப ஜோர்... நீ என்னை எப்படி வேண்டுமானாலும் கூப்பிடு'

விப்ரபதன் சட்டென அங்கே இருந்த வறட்டியொன்றை எடுத்து, அதற்குத் துளைக்குத்தி கயிற்றை நுழைத்துக் கொண்டே, 'நம்ப கபிவரருக்கு மெடல் போடவேண்டாமா?' என்றான்.

ஆனால் நிதாயி இந்த வறட்டி மெடலைப் பெறுவதற்கு அவகாசம் தராமல், தேநீர் உள்ள குவளையை எடுத்துக் கொண்டு சென்றான்.

அந்தப் பக்கம் ஒன்பதரை மணி ரெயில்தொடர் பிளாட்பாரத்திற்கு வந்துவிட்டது. நிதாயி கூலிக்கு மூட்டை தூக்கத்தான் சென்றானென விப்ரபதனும், கடைக்கார மாமாவும் நினைத்தார்கள். ஆனால் பிளாட்பாரத்திலிருந்து ராஜா, 'உஸ்தாத்... உஸ்தாத்...' என்று கூப்பிட்டான்.

பதில் வராதுபோகவே ராஜாவே ஓடி வந்தான். 'இப்போதானே இங்கே இருந்தான் நிதாயி? பிளாட்பாரம் பக்கமாகப் போனானே...' என்றான் கடைக்கார மாமா.

இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் நோக்கிவிட்டு, ராஜா திரும்பும் போது மரக்கூட்டங்களின் மறைவில் நிதாயி தன் இருப்பிடத்தை நோக்கிச் செல்வது தெரிந்தது. ஓடிப்போய் ராஜா அவனைப் பிடித்தான்.

'கிராமத்துக்குச் சாமான் தூக்கிப் போக ஒரு கூலி தேவை... சட்டென ஓடு...உனக்குக் கிடைக்கும்'

நிதாயி தலையசைத்து, 'வேண்டாம்' என்றான்.

'அடே, பெரிய வீட்டு பாபுவின் மாப்பிள்ளை...நிறையத் தருவார்... இரண்டணா வருமே...'

'வேண்டியதில்லை'.

'உனக்கென்ன திடுமென?'

'வேண்டாம்'

'ஆனால்?'—என்றதும் ராஜா வியப்பில் ஆழ்ந்தான். நிதாயி முகத்தில் ஒரு வாட்டத்துடன், மெதுவாகச் சிரித்து, 'இனிமேல் நான் கூலி தூக்கப்போவதில்லை' என்றான். ராஜா அப்படியே அசந்து போய்விட்டான்.

5

நிதாயி தன் இடத்திற்கு வந்ததும் ராமாயணத்தைப் புரட்டத் தொடங்கினான். நெடு மூச்செறிந்து, ஆழ்ந்த கவனத்துடன் புத்தகத்தில் ஊன்றி விட்டான். விப்ரபதனின் ஏளனச் சொற்கள்

அவனை உள்ளூறப் பொத்திவிட்டன. 'பிராமண குலத்தில் பிறந்து விட்டானே தவிர, இந்த மூடனுக்கு அறிவில்லை!' என்று அவன் பலதடவை தனக்குள் சமாதானம் செய்துகொண்டும் அவன் மனப் புண் மட்டும் ஆறவில்லை. ராமாயண புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தான். சட்டெனக் கள்ள ரத்னுகரனின் கதை அவன் கண்ணில் பட்டது. இந்தக் கள்ளனைப் பற்றிய கதையை அவன் பல தடவை படித்திருக்கிறுன். ஆனுல் இன்று அவன் மனத்துள் அக் கதை, ஒரு புதிய உருவையும் புதிய பொருளையுமே நிறுத்தியது. புத்தகத்தில் உள்ள இக் கதையைப் படிப்பதற்கு முன்பே அது அவன் மனத்திரையில் எழுந்தது. உடனேயே அவனுடைய கண்களில் நீர் வார்ந்தது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவன் அக் கதையை படிக்க முற்பட்டான்—

[1] ராமநாம ப்ரஹ்மஸ்தானே பேயே ரத்னுகர்
ஸேஇ நாம ஜபே ஷாட் ஹாஜார் வத்ஸர் ||

அப்போது வெளிப்பக்கம், 'உஸ்தாத்' என்று அவனை ராஜா கூப்பிடுவது கேட்டது. வேண்டா வெறுப்பாய் முகத்தைத் தூக்கி நிதாயி அவனை உள்ளே அழைத்தான், 'வா ராஜா, வாயேன்.'

ராஜா வந்து அமர்ந்ததும் அவனைக் கேட்டான்—'உனக்கென்ன திடுமென வேலைக்குக் கூட வரவில்லையே?'

நிதாயி மெல்லச் சிரித்து, 'கேள்! முதலில் இந்தக் கதையை கேள்' என்றுன்.

ராஜா அதற்கு, 'தூரத் தள்ளு அந்த புஸ்தகத்தை. எழுதப் படிக்கத் தெரிந்ததினுல்தான் உன்னுடைய மூளை இப்படிக் குழம்பி விட்டது' என்றுன்.

நிதாயி அப்பொழுது படிக்கத் தொடங்கிவிட்டான். ராஜா ஒரு பீடியைப் பற்றவைத்துப் பிடித்துக்கொண்டே அதைக் கேட்க லானுன். சில விளுடிக்குள் அதில் அவன் தோய்ந்தே விட்டான்—

[2] வரதியா ப்ரஹ்மா கேலா ஆப்பன் பவன்
ஆதிகாண்ட கான் க்ருத்திவாஸ விசக்ஷண் ||

படிப்பது முடிந்ததும், நிதாயி ராஜாவின் முகத்தையே நோக்கினுன். ராஜா உருகிப் போய்விட்டான். அவன், கை

[1] பிரம்மனிடம் பெற்றுன் ராமநாமத்தை ரத்னுகரன். ஆருயிரம் ஆண்டுகள் அதை ஜபம் செய்தான்.

[2] வரம் தந்து பிரமன் சென்றுன் தன்னிடத்திற்கு. கற்றறிந்த கிருத்திவாஸன் ஆதி காண்டம் பாடினுன்.

இரண்டையும் கூப்பி நெற்றியில் வைத்து வணங்கி விட்டு, ‘சீதாராம்! சீதாராம்!’ என்று ஸ்மரணம் செய்ததும் நிதாயியைத் தூக்கிவைத்து, ‘நீ ரொம்ப நன்ளு படிக்கிறே ராமாயணத்தை; பஹுத் அச்சா!’ என்ருன்.

நிதாயி ஆழ்ந்த முகத்துடன், ‘ராஜா, நீயே சிந்தனைப் பண்ணிப் பார்...’ என்ருன்.

ராஜா வியப்புற்று, ‘நீ என்ன சொல்கிருய்?’ என்று கேட்டான்.

ஜன்னல் வழியாக ரெயில் தண்டவாளத்தின் நெடுங்கோடு தொலைவில் இணையும் காட்சியில் கண்ணைப் பதித்து நிதாயி, ‘இந்த ரத்னுகரன் கவிஞுக மாறிவிட்டான். அதன் பிறகு அவன் எங்கேயாவது கொள்ளையடிப்பாளு அல்லது மனிதரையாவது கொல்வாளு?’ என்ருன்.

ராஜா அப்பொழுது, ‘ஏ அப்பா, நீ சொல்வது பெரிய விஷயம். அவனைப்போல் நீயும் ஒரு கவியாக மாறிவிட்டாய்!’ என்ருன்.

‘அதனுல்தான் சொன்னேன். நேற்று ராத்திரி நடந்த விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு பார். கவிவாலா என்று நாலாதிசையும் பெயர் பரவிவிட்டது!’

‘சந்தேகமென்ன!’

‘அதனுல்தான், இனிமேல் நான் தலைமீது மூட்டை சுமந்து பிழைப்பது உசிதமாகுமா? வால்மீகி ரிஷி ஒரு புறம் இருக்கட்டும். யாரை யாருடன் ஒப்பிடுவது? அவர் பகவானுடைய அம்சம். அவர் தெய்வப் பிறவி. ஆனுல் நானும் ஒரு கவிதானே. ஓஹோ என்று இராவிட்டாலும் ஒரு சின்னப் புலவன்’

இவ்வளவும் கேட்டுக்கொண்ட பிறகுதான் ராஜாவுக்கு ஒருவாறு விஷயம் புரிந்தது. வியப்பும், அக்கறையும் கொண்டு நிதாயின் முகத்தையே அவன் வெகுநேரம் பேச்சின்றிப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

‘நீயே சொல் ராஜா, இனிமேல் நான் கூலிக்கு வேலைசெய்தால் அழகாய் இருக்குமா? மனிதர்கள் ‘சி சி’ என்று சொல்ல மாட்டார்களா?—கவி பாடுகிருன் இவன் மூட்டை சுமக்கிருனே—என்று ஏளனம் செய்ய மாட்டார்களா?’ என்ருன் நிதாயி.

‘நீ சொல்வது சரிதான்’ என்றதும், மறுகணமே ராஜா, ‘இன்னெரு விஷயம் உஸ்தாத்...’ என்ருன்.

‘சொல்லு’ என்று ராஜாவின் முகத்தையே நிதாயி நோக்கினுன்.

‘வயித்துப் பிழைப்பு ஒன்று இருக்கிறதே; வெறுங்கை சோறு போடுமா தம்பி?’

அடிக்கடித் தலையை அசைத்து நிதாயி, 'அதற்காக நான் கவலை படலே ராஜா. ரெண்டுவேளை இராவிட்டால் ஒரு வேளைச் சாப்பாடு போதும். அப்படிச் சோறு கிடைக்கலே பட்டினிக் கிடக்கிறேன்' என்றதும், குரலில் ஓர் ஆழ்மை தொனிக்க, 'பகவானே என்னை ஒரு புலவனாக ஆக்கி இருக்கும்போது!'—நிதாயி அடிக்கடி ஏதோ ஒன்றை ஒப்புக் கொள்ளாததுபோல் தலையை அசைத்து, 'வேண்டாம் வேண்டாம்...அந்த வழியே வேண்டாம்' என்று கூறிக்கொண்டான். இனிமேல் அவன் மூட்டை சுமக்கப் போவதில்லை என்பது உறுதியாயிற்று.

ராஜாவும் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான். அவன் நெடுமூச் செறிந்து ஹிந்தி கலப்பில்லாத வங்காளியில், 'இந்த அற்பவேலையை உன்னைப் போன்றவர்கள் செய்ய வேண்டியதே இல்லை. உஹூம் செய்யவும் கூடாது' என்றான்.

நிதாயிக்கு ராஜாவிடமிருந்த அன்புக்கோ ஓர் எல்லையில்லை. குரல் தழுதழுக்க அவன், 'உண்மையில் நீயே என் உயிர்நண்பன் ராஜா!' என்றான்.

'நான் கொடுத்துவைத்தேன் உஸ்தாத். உன்னைவிட உயர்ந்த நண்பன் வேறு எனக்கு யார்?'—ராஜாவின் குரலிலும் ஓர் தழுதழுப்பு.

நிதாயி நெட்டுயிர்த்து அப்பொழுது சொன்னான், 'இன்று எனக்கு ஒரு பெரிய வேதனை ராஜா...'

'வேதனையா? என்ன வேதனை அப்படி தம்பி?'

'அந்த விப்ரபதன் இருக்கிறானே, என்னை எப்படியெல்லாம் கிண்டல் செய்கிறான் தெரியுமா—நான் கபி வரனும்...அதாவது அனுமானும்..நான் குரங்காம்'.

ராஜா சட்டென மிடுக்காய் எழுந்தான். அவனிடமிருந்த அந்த மிலிட்டரி குணம் சீறித் தலைத்தூக்கியது. கடுங் குரலெடுத்து, 'நீ அவனுக்குத் தகுந்த பதில் கூறவில்லையா?' என்றான்.

'தகுந்த பதில் என் நாக்கின் நுனியில் வந்தது. ஆனால் ராஜா அடக்கிக் கொண்டேன். இந்தப் பார்ப்பனக் குலத்து முட்டாள் எருதைவிட, குரங்கு எவ்வளவோ மேலல்லவா!' என்றான்.

பின்பு சொந்த ரசனை ஒன்றை எடுத்தான்—

ஸம்ஸாரே ஜே ஸஹ்ய கரே ஸேஇ மஹாஷை
[1] க்ஷமார் ஸமான் தர்ம கோன் தர்ம நை.

---

[1] இவ்வுலகில் எதையும் பொறுத்துக்கொள்பவன் நல்ல மனிதன். பொறுமையை விட நன்மையானது வேறு இல்லையே.

கவிதையைச் சொல்லி முடித்ததும், 'ராஜா, நான் அவனை மன்னித்து விட்டேன். அவன் பிராம்மணன், நோயாளி. அத்துடன் அவன் ஒரு முட்டாள். அவனை நான் மன்னித்துவிட்டேன் ' என்ருன்.

ராஜாவுக்கு, அவனை எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. சில நேரம் அவன் வாய்வாளாது இருந்ததும் தூய வங்கமொழியில், 'நீ செய்தது நல்ல காரியம் உஸ்தாத். உன்னைப் போன்றவன் இப்படித்தான் செய்வான். அப்புறம் உன் பிழைப்புக்கு என்ன செய்யப் போகிருய் தம்பி? உலகத்தில் வயித்துப்பாடு என்று ஒண்ணு இருக்கிறதே...' என்ருன்.

'நான் ஒரு கடை வைக்கலாம் என்று இருக்கேன்...

'கடையா ?'

'ஆமாம், பீடிக்கடை. நானே பீடி சுற்றப் போகிறேன். ஸ்டேஷன் ஆலமரத்தின்கீழ் உட்கார்ந்து விற்கப்போகிறேன். இரண்டொரு சிகரெட் பாக்கெட்களும் வைத்திருப்பேன்'

ராஜா உற்சாகம் பொங்க, 'பஹுத் அச்சா...ஜமாய் உஸ்தாத்!' என்ருன்.

நிதாயி சற்று முகவாட்டத்துடன், 'இதில் இன்னொரு தொல்லை. இதனுல் கடைக்கார மாமாவுக்கு என்மேல் கோபம் வருமோ என்னவோ ?' என்ருன்.

'அவன் என்ன பண்ணுகிருன் பார்ப்போமே...'

'இல்லை ராஜா, யாருக்கும் நான் இடைஞ்சலாக இருக்க விரும்ப வில்லை. மேலும் என் கைப்பட்ட தண்ணீரையோ, 'சா'வையோ, வெற்றிலையையோ எவரும் வாங்கிக்கொள்ளமாட்டார்கள்' என்றதும் ஏதோ உற்சாகம் மேலிட்டவனுய், 'அது இருக்கட்டும், நல்ல மூங்கில் பிளாச்சு வாங்கி மோடா, பூக்கூடை தயாரிக்கலாமேயென்று ஓர் எண்ணமும் வருகிறது...என்ன ?' என்ருன் நிதாயி.

'இதுவும் நல்ல யோசனைதான்.' என்ருன் ராஜா.

'விப்ரபதன் என்ன சொல்லுவான் தெரியுமா? பயல் டோம். அதனுல் டோம் சாதிக்கு ஏற்ற வேலையைத்தானே செய்வான் என்பான்'

ராஜா பற்களை நறநறவென்று கடித்து, 'பார், ஒரு நாள் அந்தப் பார்ப்பான் காதைத் திருகி விடுகிறேன்' என்ருன்.

'அதெல்லாம் கூடாது. என்ன இருந்தாலும் பிராம்மணன் அவன்! ராஜா, பிராம்மணன் சாபம் மிகப் பொல்லாதது—அவன் சபித்தால் நாசந்தான்—இது சாஸ்திரம் சொல்லும் வார்த்தை. அத்துடன்..., என்று அவன் தொடர்வதற்குள் ராஜா மறித்து, 'சட், பிராம்மண

ணுவது கீம்ணுவது. எழுநூறு பிராம்மணர்கள் சேர்ந்து வந்தால் கூட ஒரு நாரையின் காலைக்கூட ஒடிக்க அவர்களால் முடியாது. பிராம்மணர்களாம்...'என்றான்.

நிதாயி சிரித்த வண்ணம், 'அப்படித்தான் என்னை டோம் என்று இழிவாகப் பேசட்டுமே. அதனால் தலையிறக்கம் இல்லை எனக்கு. டோம் எந்த வகையில் குறைந்தவன்? டோமும் மனிதன்தான், பார்ப்பானும் மனிதன்தான்.' என்றான்.

'பஸ் பஸ்...சொல்லிக்கொண்டு போகட்டுமே டோம் என்று. சரி, நீ ஒரு பீடி கடை போடு; அப்புறம் ஒரு பெண்ணைக் கட்டிக்கொள். என்ன உஸ்தாத்? அப்புறம் நீ ஆச்சு, உன் சம்சாரமாச்சு...கவலை விட்டது...' என்று தன் யோசனையைச் சொன்னான் ராஜா.

வெறுப்புற்றவனாய் உதட்டை நெளித்து நிதாயி, 'உம், அந்தத் தொல்லை எதற்கு?' என்றான்.

'தொல்லையா? நான் கேட்கமாட்டேன் அந்தப் பேச்சை' என்றான் ராஜா.

'சரி, அதற்கு முன்னால் ஏதாவது கதை சொல்கிறேன் கேள்'

கதையென்றால் ராஜாவுக்கு அத்தனைக் குதூகலம். அவன் ஒரு பீடியைப் பற்றவைத்து ஆர அமர்ந்தான். நிதாயி வால் அறுந்த நரியின் கதையை எடுத்தான். கதையைச் சொல்லி முடித்ததும்—'நீ வாலை அறுத்துக்கொண்டதுபோல் நானும் வாலை அறுத்துக் கொள்ள வேண்டுமா? என்னால் ஆகாது ராஜா' என்றான்.

முதலில் இப்பேச்சைக் கேட்டுச் சிரித்தான் ராஜா. பின்னர் அவன், 'நீ இப்படிப் பேசுவது நன்றாக இல்லை. எப்போது இந்த உலகத்திலே பிறந்தோமோ, யாரையாவது கட்டிக்கொண்டு சம்சாரம் நடத்தித் தானே ஆகவேண்டும்?' என்றான்.

நிதாயி குறுக்கிட்டு, 'நீ உளறுகிறாய் ராஜா! இந்தச் சம்சாரச் சுழலில் மாட்டிக்கொண்டால் அப்புறம் நான் மீளமுடியாது. என்னுடைய இனத்துப் பெண்ணுக்குப் படிப்பு வாசனையே கிடையாது. இரவு பகல் வாய்ச்சண்டை போடத்தான் தெரியும். குறியாகக் குடித்தனத்தில் இருக்க மாட்டார்கள்' என்று கூறி முடிப்பதற்குள் அவன் பக்கெனச் சிரித்துவிட்டான்.

புருவத்தை அசைத்து ராஜா, 'உஸ்தாத், இது ஒரு பேச்சா?—யாராவது கேட்டால் சிரிப்பார்கள்' என்றான்.

'சிரிக்கட்டுமே? அப்படி மனசுக்குப் பிடித்த பெண்தான் எங்கே?' என்றதும் மெல்ல முறுவலித்து, 'நானோ பாட்டுப் பாடும் கவி; எனக் கேற்ற ஒரு பெண்ணைத்தானே என் கண் நாடும் ராஜா?...' என்றான் நிதாயி.

அப்போது ராஜா உருண்டு உருண்டு சிரிக்கலானுன். ராஜாவின் இந்தச் சிரிப்பு, கேட்க மிக விகாரமாக இருந்தது. அந்தச் சிரிப்பு சட்டென ஓய்ந்தது. அவன் யோசனையில் ஆழ்ந்தவனுய்த் தலையை ஆட்டி, நிதாயி சொன்னதில் உண்மை இருப்பதை ஒப்புக் கொண்டான். 'நீ சொன்னது சரியே உஸ்தாத்! சண்டைக்குப் போயிருந்தபோது... என்ன சொல்லுவேன்... ஆகா... ஆகா... ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவள் பூ மாதிரியே இருந்தாள்—இரானிப் பெண்களைப் பார்த்திருக்கிருயா உஸ்தாத்? என்னமா இருப்பாள்!' என்ருன்.

ராஜாவின் பேச்சு முடிவுற்றது. ஆனுல் அந்த நினைவின் சித்திரம் அவன் மனத்தில் மறையவே இல்லை. வெகுநேரம் அவன் மனம் எங்கோ நிலைக்க, எதிரே விரியும் வயல் காட்டையே நோக்கினுன். பஸ்ராவில் அவன் பார்த்த அந்த அழகிய பூமென்மேனி, அந்த வயல் காட்டிடையே மெல்ல மிதந்து சென்றது. நிதாயும் சாளரத் திற்கு வெளியே தெரியும், பளபளக்கும் அந்த இருப்புப் பாதையின் தொலைவில் கண்ணை யோட்டினுன். நாணல் பூப்போல், ஒரு வெள்ளிக்கீற்று தென்படுகிறது. அதன்மீது ஒரு பொன் புள்ளி மினு மினுக்கிறது—இப்படி ஒரு சித்திரத்தின் சாயல் தோன்றி மறைகிறது. அந்த அமைதியைக் கலைத்தது' ராஜாவின் சம்சாரம் எழுப்பிய தீவிரக் குரல். அவள் கத்திக்கொண்டே இருந்தாள். வேறு ஒன்றுமில்லை. ராஜா வெகுநேரமாக நிதாயியுடன் அரட்டை அடிக் கிருன். இப்படி ஒருவனுக்குத் தான் வாழ்க்கைப்பட்டதையும், அதனுல் தான் அவதிப்படுவதையும் குறிப்பிட்டுக் கணவனை நோக்கி சொல்லம்புகளை எய்தாள்—'என் அதிர்ஷ்டத்தைச் சொல்லு? ஏதாவது அந்த ஆம்பிள்ளைக்குத் தன் வீடு வாசல் என்ற கவனம் இருக்குதா? என் தலையில்தான் நெருப்பை மூட்டவேண்டும்; எங்கே போய் என் மண்டையை உடைச்சுக்கொள்வது? கட்டின புருசனு இவன்?'—என்றெல்லாம்.

ராஜாவின் முகம் கோபத்தினுல் பயங்கரமாகத் தோன்றியது. அவன் போக எழுந்தான். நிதாயி திகிலடைந்து, 'எங்கே போகிருய் ராஜா?' என்ருன்.

'திரும்பி வர்ரேன்..இப்பவே' என்றதும் அவன் வெளியே போனுன்.

'ராஜா!...ராஜா உன்னைத்தான்...'என்று பின்னுலேயே நிதாயியும் சென்று வாசற்படியில் நின்ருன். சற்றுப் பொறுத்து ராஜாவே உரத்தச் சிரிப்புடன் திரும்பிவிட்டான். சிரித்துச் சிரித்து அவன் தரையில் சாய்ந்துவிட்டான். 'என்ன நடந்தது ராஜா...?' என்ருன் நிதாயி.—

ராஜாவின் சிரிப்பு சற்றும் ஓயவில்லே. அது போன்ற தொடர்ந்த சிரிப்பிற்கிடையே எவராலும் பேச முடியாது. இருப்பினும், ராஜா சற்றுக் கஷ்டத்துடனேயே, 'பிடித்தாள் ஓட்டம்... வயல் காட்டுக்கு...' என்று அவன் மிகுதியை முடிப்பதற்குள் மீண்டும் அதே பயங்கரச் சிரிப்பு.

நிதாயிக்குப் புரிந்தது விஷயம். வசவைப் பொழியும் ராஜாவின் சம்சாரம், அவன் கோபாவேசமாய் வருவதைக் கண்டதும், பிடித்தாள் ஓட்டம். ராஜா முன்ஞல் ஒரு நடை வைத்து, தான் செய்ததை அபிநயித்துக் காட்டிஞன்—'இப்படி வந்தேனு... பார்க் கனும், என்னமா ஓடிஞள் வயக் காட்டிலே' ராஜாவின் இரும்பான முட்டியென்ருல் அவள் குலே நடுங்கும். அவன் தான் செய்ததை நினைத்துக்கொண்டு மீண்டும் ஓவென்று சிரித்தான்.

அதே சமயம் வீட்டினுள் அந்த மைத்துனி நுழைந்தாள். அரையில் அதே சலவை முறுக்குடன் இருக்கும் மோட்டா நூல் சேலேதான். தலேயில் சும்மாட்டில் பளபளக்கும் பித்தளேக் கலயம். பகல் வெயிலில் அது பொன்னேயொத்து மினுமினுத்தது.

நிதாயி ஆதரவுடன், 'வா மச்சி, வரலாம்!' என்ருன். அவள், ராஜா அப்படி உருண்டு உருண்டு சிரிப்பதைக் கண்டு விஷயத்தை அறிய ஆவல் கொண்டாள். அவளுக்கே இயல்பான படபடப்பான வார்த்தைகளில், ராஜாவைச் சுட்டி, 'எதற்காக அத்தி, அப்படிச் சிரிக்கிருரு?' என்ருள்.

'உன் அத்தியையே கேளேன்...' என்று நிதாயும் சிரித்தான்.

'ஐயே, எதுக்கு இப்படிச் சிரிக்கிறீங்க... உன்னத்தான் அத்தி?' என்றதும் அந்தச் சிரிப்பு அவளேயும் தொற்றிக்கொண்டது. அவளும் 'ஹி—ஹி—ஹி!' என்று சிரித்தாள்—வெண்கல மணியின் இசை போன்ற சிரிப்பொலி. ராஜாவின் சிரிப்புச் சட்டென நின்றது. அவனேச்சுட்டிப் பேசவே, அவனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது, அவள், தன்னே நையாண்டி செய்கிருளோ என்று. ராஜா அவளேக் கடிந்து, 'வாடியம்மா, நீயும் வந்துவிட்டாயா?' என்ருன்.

அதட்டலுக்கு இடிந்து போகாமல், மேலும் அவள் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

'கறுப்புத் தார் மாதிரி இருக்கிருய்; வெளுப்புப் பல்லேக் காட்டிச் சிரிக்கிருய்...உனக்கு வெட்கமா இல்லே?' என்ருன் ராஜா.

இந்தத் தடவை அவளுக்கு உறைத்துவிட்டது. சிறிது நேரம் பேசாமலிருந்ததும், தான் வந்த வேலேயை முடிக்க, 'பாலே வாங்கிக்கோ ஐயா... எனக்கு நாழிகை ஆவுது... வீட்டிலே என்னமாவது சொல்லுவாங்க...' என்ருள்.

'உனக்கும் ஒரு நாள் இந்த வேடிக்கையைக் காட்டவேண்டும்... நீயும் உன் அக்காள் மாதிரி, வயல் காட்டை நோக்கி ஓடுவாய்...' என்றதும் சிரிக்கத் தொடங்கினான், ராஜா

இப்போது மைத்துனிப் பெண் சிரிக்கவே இல்லை. எதுவும் பேசாமல் தலை குனிந்தபடி, பித்தளைக் கலயத்திலிருந்து பாலை உழக்கில் மொண்டு, 'எங்கே...உங்கள் குவளையை எடுத்து வாங்கோ' என்றாள்.

நிதாயும் சட்டெனச் சென்று தன்னுடைய பாத்திரத்தை எடுத்து வந்து, 'என்ன, கோவமா மச்சி...? தமாஷ்தான்' என்று பாலை வாங்கிக்கொண்டான்.

மைத்துனி ஒரு வார்த்தை பேசவில்லை. அளந்து எடுத்த பாலைக் குவளையில் ஊற்றினாள். அவள் பின்னாலிருந்து ராஜா ரசிகமாக, 'மச்சி... மச்சி, என்னுடைய மெயில் வண்டி பறந்து போச்சு; ஏ அப்பா, என்னமா ஓடித்து—ஜிக்புக் ஜிகுபுகுவென்று...' என்றான்.

மைத்துனி அவனைத் துளியும் இலட்சியம் செய்யவில்லை. நிதாயி ராஜாவைப் பார்த்து, 'நீ இப்படியெல்லாம் பேசுவது அழகாயில்லை ராஜா' என்றான்.

ஆனால் ராஜா இதை ஒப்புக்கொள்ளவில்லை. இதில் அழகில்லாதது ஒன்றுமில்லையே. 'தெத்' என்று தான் செய்த அநீதத்தை உதறித் தள்ளினான்.

உடனேயே அவனும் போக எழுந்தான். ஒன்றரை மணி வண்டிக்கு மணி அடிக்கவேண்டும். மைத்துனி பால் குடத்துடன் வரும் நேரம் இதற்கு 'ஸிக்னல்'போல். அவள் பாலை விற்கக் கிராமத்தை நோக்கி நடைக் கட்டும்போது, ஸ்டேஷன் மாஸ்டரின் குரலும் கேட்கும்—'ராஜா' என்று. என்றும் பதில் குரல் தருவதுபோல், அன்றும் ராஜா, 'ஆஜர் ஐயா' என்று கூறிக்கொண்டே ஓடினான்.

மைத்துனியும், ராஜாவும் போய்விட்டனர். நிதாயி சற்று வாடி உட்கார்ந்து இருந்தான். 'இப்படி இந்த மிருதுவான பெண்ணை ராஜா கடிவது நன்றாக இல்லை. இனிய சொல்லாலேயே இவ்வுலகில் எதனையும் சாதிக்கலாம்.' முன்னாள் இரவு பாடிய அந்தப் பாட்டு மீண்டும் அவனுக்கு நினைவு வந்தது—

[1] 'ஆமி பாலோபேஷே ஏஇ புஞ்ஜேச்சி—
ஸுகேர் ஸார் ஸே சோக்கேர் ஜலரே!'

---

[1] நான் காதலித்து இதைப் புரிந்து கொண்டேன். இன்பத்தின் ஸாரம் கண்கள் சிந்தும் நீரே.

அவன் பெருமூச்சுவிட்டு எழுந்து நின்றான். மைத்துனி பாலைத் தந்துவிட்டுப் போய்விட்டாள். அடுத்தது தேநீர் பருகும் கட்டம். அவன் அடுப்பை மூட்டினான். கடைக்கார மாமா வழங்கும் அந்தத் தேநீர் அவனுக்குப் பிடிப்பதில்லை. மேலும் இன்று அவனுக்கு, உடம்பும் சரியாக இல்லை. முன்னாள் அவன் பட்ட சிரமத்தாலும், ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தாலும், தூக்கமின்மையாலும் அவனுக்குச் சற்றுக் களைப்பே மேலிட்டது. மண்டை வலி வேறு; காதில் டோலக், ஜாலர் இவை ஒலிப்பனபோல் ஓர் இரைச்சல். சூடாக ஒரு கோப்பை உள்ளே போகாது போனால் அவனுக்கு உடம்பு குதிராது போல் தோன்றியது.

அடுப்பை மூட்டிக் கெட்டிலில் அதாவது அவன் உபயோகிக்கும் மட்பாண்டத்தில் நீரைக் கொதிக்க வைத்துவிட்டுச் சற்று கம்மென் றிருந்தான். அவனுடைய மனம் மறுபடி எங்கோ நிலைக்கலாயிற்று— 'சே, ராஜா இப்படி இந்தப் பெண்ணைக் கடிந்திருக்கக்கூடாது... இவள் மென்மையான சுபாவமுடையவள் ... சற்றுப் படபடக்கப் பேசுவாள்...அதில் தவறு ஒன்றுமில்லையே...முன்னாள் இரவில் கேட்ட அந்தப் பாட்டைக் குறித்து அவள் எவ்வளவோ வியந்து பேசினாள். அவள் மனசு ரொம்பவும் இடிந்து போயிருக்கும். அதனால் வேறு எதுவும் பேசாமல் போய்விட்டாள் பாவம். கறுப்புத் தார் மாதிரி நிறம் உனக்கு—சே இப்படியெல்லாமா பேசுவது? கறுப்பா இவள்? இவள் கறுப்பாய் இருந்தால்தான் என்ன? இந்த ராஜாவுக்குக் கண் இல்லையா? கறுப்பென்றால் அவலட்சணமா? குறைவா? கண்ணன் கரியவன்தானே... குயிலும் கருநிறந்தானே... கூந்தலும் கார்வண்ணந்தானே...ஆகா! ஆகா! ஓர் அழகான பாட்டின் அடி என் மனத்தில் வருகிறதே...ஐயோ! ஐயோ!'

1 காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்த் கேநோ?

கறுப்பு நிறம் மட்டமென்றால் கூந்தல் நரைக்கும்பொழுது அழுவானேன்?

6

நல்ல பாட்டின் அடி எழுந்தது. நிதாயிக்கு அதிலே ஒருமோகம் பிறந்துவிட்டது—

'காலோ ஜதி மந்த தபே
கேச பாக்கிலே காந்தோ கேநோ?'

பேஷ்......பேஷ்......பலே...... ஏன் அழவேண்டும்?

இந்தப் பக்கம் தேநீருக்கு உலையில் ஏற்றிய நீர் கொதிக்கத் தொடங்கிவிட்டது. நிதாயி பொங்கும் நீர்க் கலயத்தை இறக்கிவிட்டு அதிலே தேத்துகளை இரண்டு அள்ளிப்போட்டு, கலாயி பூசிய இரும்புத் தட்டை அதன்மீது மூடினுன். கொதிக்கும் நீரில் ஓர் ஆளுக்குத் தேவையான ஒரு தேக்கரண்டி டீத் துகளைப் போட்டு ஐந்து நிமிடம் காத்திருங்கள்—இப்படி டீ தயாரிப்புப் பற்றிய விளம் பரம் ஒன்றை அவன் கடைக்கார மாமாவின் ஸ்டாலில் படித்திருக் கிருன். அப்புறம் சொல்லுவானேன்?

தேத்துகளைக் கொதிநீரில் போட்டுவிட்டு, அவன் தனக்குள்ளேயே பாட்டின் மற்ற அடிகளைக் கட்டிக்கொண்டிருந்தான். இரண்டாவது அடி அவன் விரும்பியபடி அமையவில்லை. ஜன்னல் வழியாக வெளியே தென்பட்ட கறுப்பாக விளங்கும் பொருள்கள் அனைத்தை யும் கூர்ந்து நோக்கினுன். ஆனுல் அவனுக்குப் பிடித்த இரண்டாவது பாட்டின் அடி அவனுக்கு அமைந்து வரவில்லை. வேறு நாளாக இருப்பின் கொதி நீரில் தேயிலையைப் போட்டுவிட்டு மனத்துள் ளேயே ஒன்றிலிருந்து ஆறுவரைக்கும் ஐந்து தடவை எண்ணி விட்டு, பாலில் சீனியைக் கலப்பான். இன்று அப்படிச் செய்யவில்லை அவன். பாட்டின் முதல் அடியைத் திருப்பித் திருப்பி முணுமுணுத்த படி இரண்டாவது அடியைத் தேடிக்கொண்டிருந்தான். சட்டென அவனுக்குத் தேநீரின் நினைவு வரவே அவன் தேநீர்க் கஷாயத்தை வடிகட்டி அதில் சீனி கலந்த பாலை ஊற்றினுன். மிகுந்த 'சா'வை ராஜாவுக்கென அதே கலயத்தில் வைத்து அதன்மேல் தட்டை மூடி விட்டான். இது ஆனதும் கிருஷ்ணசூடா மரத்தின் அடியில் வந்து நின்ருன். இது அவனுக்கு மிகவும் பிடித்த இடம். கரும் பச்சையாக மயிலிறகுபோல் தோன்றும், இலைக்குவைகள் குடை

விரிக்கும் ஓர் அழகிய மரம். பொடிப் பொடியான இலை என்பான் நிதாயி. சித்திரை, வைகாசி மாதங்களில் இலையே தெரியாமல் கொத்துக் கொத்தாகச் செந்நிறமலர்கள் மலிந்து விளங்கும். அந்தச் சமயங்களில் ஒருநாள்கூட அந்த மரத்தின்கீழ்ச் சற்று அவன் அமராமல் இருந்ததே இல்லை. இந்தப் பூவுக்காகச் சிறுவர்கள் கூடி விடுவார்கள். நிதாயி அவர்களுக்குக் கீழே உதிர்ந்து கிடக்கும் பூக்களைத் தந்து அனுப்பிவிடுவான். அவர்கள் மரத்தில் ஏறிப் பூக்களைப் பறிக்கவிடமாட்டான்.

ஸ்டேஷனிலிருந்து ராஜாவின் உரத்த குரல் இடையிடையே கேட்டது. ஸ்டேஷனில் இருக்கும் பிரயாணித் தொடர் வண்டியுடன் 'கூட்ஸ்' பெட்டிகளும் இருந்தன. இங்கு இறக்கவேண்டிய சாமான்கள் இருந்தால் 'கூட்ஸ்' பெட்டிகளைக் கத்தரித்து விடுவார்கள். அந்த 'ஷண்டிங்' ஓசை அதனுல்தான். முன்பு நிதாயி மற்ற கூலிகளுடன் 'கூட்ஸ்' பெட்டியை வேறு பக்கமாகச் செல்ல, தள்ளுவது வழக்கம். சட்டென அவனுடைய பாட்டுக்கட்டும் உணர்வை மீறி, வயிற்றுப் பாட்டைப் பற்றிய நினைவு எழுந்தது. இனிமேல் அவன் கூலி வேலை செய்யமாட்டான். அவன் கவிஞனுகி விட்டான். ஆனுல் கூலி வேலை செய்யாது போனுல் சோற்றுக்கு வழி என்ன ?

இந்த நினைவுக்கிடையே அவன் விழிப்புலனுக்கு வேருெரு காட்சி தென்பட்டது. விசையாகக் கால்களைத் தப்திப்பென்று வைத்தும், வெளேரென மொட்டா நாட்டுச் சேலை அணிந்து காற்றிலே அசையும் நாணல் பூவென விரையும் அந்தப் பெண்தான்...பால் விற்கும் மச்சிதான். தலைமீது கிரீடம்போல் பொன்னுெத்து மின்னும் பித்தளைக்குடம்...பேச்சில் எத்துணைப் படபடப்போ அத்துணைப் பரபரப்பு அவள் நடையில். இளமூங்கிற் கழையின் மென்மை மண்டிய வளைவின் வனப்பு அவள் அங்கங்களில். எவர் கண்ணையும் தன்பால் ஈர்க்கும் எழில் உருவம். அவளது கார்மேனியின் கவின் அவன் உள்ளத்தை அள்ளியது. அவளை நோக்க நோக்க அந்தப் பாட்டின் அடியே அவன் மனத்துள் தொனித்தது.

இன்று அவள் பின்னும் வேகமாக நடந்து சென்ருள். நிதாயி தனக்குத் தானே சிரித்துக் கொண்டான், தன்னைப் பார்த்துவிட்டதால்தான் மச்சி இப்படி வேகநடை கட்டுகிருள் என்று. 'வலிவு இருந்தால் இவள் தரையே அதிரும்படி நடந்து போவாளே! ஆனுல் ராஜா அவளை அப்படி இறக்கிப் பேசியது நன்ருக இல்லை. கரும் தார் மாதிரி அவள் நிறம் இருந்தாலும் அழகு சிந்தும் வடிவத்தாள்...கரு நிறம் எதில் குறைவானது?'

'காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேநோ?'

நிதாயி கூப்பிட்டான்—'மச்சீ! ஓ மச்சீ!'

'என் பேரில் ஆணையாக... நில்லு மச்சீ' என்று உரத்துக் கூப்பிட்டான்.

அந்தப் பெண் துடுக்கென நின்ருள்.

இனிமைதரும் மெல்லிய குரலில் படபடவென்று அவள், 'இல்லை, எனக்கு நேரமாகிறது' என்ருள்.

'ஒரே ஒரு வார்த்தைதான்—இதைக் கேட்டுவிட்டுப் போயேன்'.

'வேண்டாம்... அங்கிருந்தே பேசு'

'என்மேல் ஆணை'

விசையாகக் கால் வைத்து அவள் திரும்பி நிதாயின் முன்னர் நின்ருள். 'உன்மேல் ஆணை வைத்துக்கொண்டால் எனக்கு என்ன?' எனருள்.

'நீ அதை நம்பாது போனுல் என் மனசு என்ன வேதனைபடும் தெரியுமா? மச்சீ'? நிதாயி பசப்பிற்காகச் சொன்ன வார்த்தை அல்ல இது; உள்ளூரத்தான் சொன்ஞன்.

முன்னைவிடக் குரலில் தண்மை தவழ அவள், 'இதோ வந்தேன். கூப்பிட்ட காரியத்தைச் சொல்லு' என்ருள்.

அவளையே நோக்கி ஓர் இன்முறுவலுடன் நிதாயி, 'என்மேல் ஏதாவது எரிச்சலா, கோவமா?' என்ருன்.

அக்கணமே, மருண்ட அவளுடைய பெரிய விழிகள் குளமாயின. அவள் உணர்ச்சி பொங்க, 'நான் கன்னங்கரேலென்றுதான் இருக்கேன். என் கணவன் வீட்டில்தான் இருக்கிறேன்; உழைக்கிறேன்... எனக்கு நல்ல சோறு யார் போடுகிருர்கள்... நல்ல புடைவை யார் தருகிருர்கள்?' என்ருள்.

நிதாயி சிரித்து, 'மச்சீ, எனக்குக் கறுப்பு நிறமென்ருல் பிடிக்கும்' என்ருன். அப்போது அவள் கன்னங்களில் படர்ந்த அந்த நாணத்தின் சிவப்பு, அவள் கருமாமேனியள் ஆனதால் வெளிப்படையாகத் தெரியவில்லை.

நிதாயி இதைக் கவனிக்கவில்லை. அவன் தாடையில் கையை வைத்து மெதுவான சுரம்போட்டு பாடத் தொடங்கிஞன்—

'காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேநோ!'

நாணத்தால் குறுகும் அந்த மைத்துனி நிதாயியையே வியப்பும் அக்கறையும் கலக்க நோக்கிஞள்.

'புதுசா கட்டின பாட்டா?' என்றதும், வெட்கம் மேலிட, 'நேத்து நீ என்னமா பாடினே...!' என்ருள்.

'உனக்கு ரொம்ப பிடித்திருந்ததா ?'

'ரொம்பத்தான்!'.

'வா... கொஞ்சம் சா சாப்பிட்டுவிட்டுப் போகலாம்...'

'உஹூம்...' என்று மறுத்தாள். அவளுக்குச் சா மிகவும் பிடிக்கும். ஆனால் பெண்களுக்கு எப்போது, எதுபிடிக்கும் என்பது யாருக்குமே தெரியாது—'சீ !'

நிதாயி மீண்டும் ஆணைவைத்து, 'என்பேரில் ஆணை' என்றான். அவன் உட்புறம் வந்தான். ராஜாவுக்கென வைத்திருந்த தேநீரை அடுப்பில் ஏற்றி, சூடானதும் இரண்டு கோப்பைகளில் ஊற்றி மைத்துனியின் முன் நீட்டினான். அவள் இன்னும் வெட்கம் தெளியாமல், 'வேண்டாம்... நீ குடி' என்றாள்.

'குடிக்கமாட்டாயா ஆனால்...? என்மேல் ஏதோ உனக்கு கோவந்தான்'

அவன் கையிலிருந்து சா உள்ள கோப்பையை வாங்கிக்கொண்டே அவள், 'உன்மேல் துவேஷமேன்...துவேஷம்...' என்று மிழற்றினாள்.

'இல்லாவிட்டால் கோவம்......குரோதம்—கோவம் எல்லாம் ஒன்றுதான். முதலில் சொன்னது 'கு' வில் ஆரம்பிக்கிறது ; இரண்டாவது 'கோ'வில் ஆரம்பிக்கிறது. சினமோ, பகையோ கொள்வது நல்லதல்ல என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். புரிந்ததா மச்சீ...யார் மீதும் கோபப்படாதே, விரோதம் கொள்ளாதே. கோவம் சண்டாளம்' என்றான்.

ஆழ்ந்த வியப்புடன் நிதாயியையே அவள் நோக்கி, 'அச்சா, இதெல்லாம் எங்கிருந்து கற்றுக் கொண்டே ?' என்று கேட்டாள்.

முகத்தில் ஓர் ஆழ்மை விளங்க, மேலே நோக்கித் தத்துவஞானியைப் போல், 'எல்லாம் பகவானுடைய மாயை. அவன் செய்யும் விளையாட்டு மச்சீ! இராதுபோனால், கவியாக வரவேண்டியவனை, டோம் குலத்தில் பிறப்பு எடுக்கும்படி செய்வானா...நீயே சொல்லு ?' என்றான்.

வியப்பே உருவான அவள், நிதாயி கவிவாலாவைக் கண் இமைக்காமல் நோக்கினாள். அவள் கண்முன், அவன் அன்று அத்தனைப் பெரிய அரங்கில் அருமையாகப் பாடிய காட்சி மிதந்து வந்தது.

திடுமெனப் பெருமூச்செறிந்து நிதாயி, 'எல்லாம் அவன் ஆட்டி வைக்கிறபடியே நடக்கும். இராவிட்டால் என்னைச் சிலர் கபிவர், குரங்கு என்றெல்லாம் கேலி செய்வார்களா ?' என்றான்.

சட்டென மைத்துனியின் புருவம் விற்கோலியது. 'யார் உன்னைக் கேலி செய்தது அந்த மாதிரி... யார் அவன்?' என்றாள்.

மீண்டும் நெட்டுயிர்த்து நிதாயி, 'அந்த ஆள் யாரென்று சொன்னால் மட்டும் உன்னால் என்ன செய்ய முடியும்...'சா'வைக் குடி ஆறிப்போய்விடும்' என்றான்.

அவள் திரும்பிக்கொண்டு தேநீரைப் பருகினாள். நிதாயி முன்போ, அல்லது அத்தி எதிரேயோ அவள் எதையும் சாப்பிட மாட்டாள். அவள் திரும்பிய நிலையிலேயே அதை மெல்ல உறிஞ்சிய படி, 'நீ சொல்ல வேண்டாம், அந்தப் பயல் யார், எவன் என்பதை. அத்தியாகத்தான் இருக்கும்' என்றாள். அவள் ராஜாவைத்தான் குறிப்பிட்டாள்.

'இல்லை, இல்லை. ராஜா என் பிராணசிநேகிதனாச்சே. அவன் நல்ல மனுஷியன்'

'நல்ல மனுஷனா அவன்? மண்ணாங்கட்டி. எந்த மாதிரி பேசு கிறான் நாக்கில் நரம்பில்லாமல்'

'இல்லை, இல்லை...உன்னைப் பரிகாசமாப் பேசினானே, அதைச் சொல்லுகிறாயா... நீ அவனுக்கு மச்சினி முறையாக வேண்டும்; அதனால்தான் தாமாஷாகச் சொல்லி யிருப்பான்...'

'என்ன பரிகாசம் வேண்டியிருக்கு?'

'வேடிக்கையாக ஏதோ சொல்லிவிட்டான். அதற்கெல்லாம் நீ இடிந்து போவதா?'

அவள் மேலே பேசவில்லை. நிதாயி சொன்னதை மனத்துள் வாங்கிக் கொண்டாள். அவளுடைய மென்மையான சாயலுக்கும், அவள் இனிமையான இயல்புக்கும் ஓர் ஒற்றுமை நிலவியது- யாழுக்கும் அதன் இசைக்கும் உள்ள ஒற்றுமைப்போல. சற்றுப் பொறுத்து அவள், 'நிஜந்தான்...அத்தி சற்று கோவக்காரர்தான்... ஆனால் மனுஷன் நல்லவரே' என்றாள்.

'தங்கமான மனுஷியன்'

'உன்னை யார் அந்தமாதிரி இறக்கிப் பேசினாங்க? ...சொல்லித் தான் ஆகவேண்டும்...அந்த எரிமூஞ்சி யார்? யார் அவன்?'

'அவனை வையாதே...அவன் சாதியிலே பிராம்மணன். அந்த மாமாக் கடையிலே குந்திக் கொண்டிருப்பானே, அந்த முடக்கு வியாதிக்காரன்...வளவளவென்று பேசுவானே அந்த விப்ர பதனே...'

'எதற்காக உன்னை அப்படிப் பேசவேண்டும்?'

'அந்தச் சமாசாரத்தை விட்டுத்தொலை மச்சீ. அவன் உயர்ந்த சாதிக்காரன்; நான் கீழ் இனத்தவன்...சொல்லிக்கொண்டு போகட்டும்'

'பார்ப்பானுக இருந்தால்தான் என்ன...உன்னைப்போல் அவனுக்கு நினைத்ததும் பாட்டுக் கட்டத் தெரியுமா பார்க்கலாம்'— உணர்ச்சி மிகுதியால், அவளுடைய தலையிலிருந்து முசுக்கு நழுவி விட்டது.

நிதாயி தன் கண்ணை அவளிடமிருந்து எடுக்கவே இல்லை. 'எவ்வளவு அடர்த்தியான கூந்தல் உனக்கு...மச்சீ, நீ ரொம்ப அழகி' என்ருன்.

அவளுடைய சுரிகுழலில் ஒரு சிவப்பு கிருஷ்ணசூடாமலரைச் செருகியிருந்தாள். சட்டென நாணம் அவள் உடலெங்கும் பரவ, மருண்ட மானைப்போல், நழுவிவிட்ட முசுக்கைப் பரபரவென்று இழுத்துத் தலையை மூடிக்கொள்ளப் போனுள். ஆனுல் அச்சமயம் நிதாயி ஒரு காரியம் செய்துவிட்டான். சட்டென அவளுடைய கையைப் பற்றி, ' இரு, இரு...கொஞ்சம் பார்க்கிறேனே உன் கூந்தலழகை...இரு மச்சீ...'என்ருன்.

லஜ்ஜையால் முகத்தைத் தாழ்த்தி, குரலில் ஒரு கம்பலை அலைக்க அவள், 'என்னை விடு...விடுன்னு...' என்ருள். மறுகணமே நிதாயின் மயக்கம் கலைந்தது. அவனை விட்டுவிட்டான். விடு பெற்றதும் அவள் சாக் கோப்பையை எடுத்துக்கொண்டு பின்புறம் சென்ருள், அதைக் கழுவிவைக்கும் சாக்காக. நிதாயியும், வெட்கி முகம் தொங்க அமர்ந்திருந்தான். 'சீ...சீ... என்ன அசட்டுக் காரியம் செய்தோம்' என்று அவன் நெஞ்சு அவனை அறுத்தது.

குன்மம் பிடித்ததுபோல் கிடந்தான். அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் கிளம்பவில்லை. மைத்துனி, கழுவிய கோப்பையை ஒரு புறம் வைத்துவிட்டுத் தன் கலயத்தை எடுத்துக் கொண்டு கிளம்பிச் சென்ருள். ஒரு தரம் திரும்பிப் பார்த்தாள் நிதாயியை. வெட்கமும் சிரிப்பும் தோய்ந்த அவளுடைய இளம் செவ்வியான முகத்தில் வெயில்படும்போது, அது இளந்தளிரெனப் பளபளத்தது. இருவர் கண்ணுேக்கும் சந்தித்தபோது அவள் சட்டெனத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்த விரைவில் மீண்டும் அவளுடைய தலையை விட்டு முசுக்கு நழுவியது. அவள் அதைச் சரிப்படுத்திக் கொள்ளாமலேயே விரைவாக முன்னுேக்கி நடந்தாள். அவளுடைய சுரிமென் கருங்குழலில் அந்தச் செந்நிறப்பூ வானில் ஒளிரும் சிவப்புத் தாரகையெனத் தோன்றியது. மச்சினிக்குக் கோபம் இல்லை...அதோ போய்க்கொண்டே அடிக்கடித் திரும்பிப் பார்க்கிருள்...அவளுக்குக் கோபமில்லை அவன்மீது...அவளுடைய கரிய குழலுக்கு, அந்தச் சிவப்பு மலர் எடுத்துக்காட்டுகிறது !

தொலேவில், பொன்வண்ணமான புள்ளியைச் சூடிய நாணற் பூவென மெல்ல மெல்ல அவள் மறைந்துபோனுள். நிதாயி தன் னிடத்தில் இருந்தபடியே தனக்குள்ளேயே, பாட்டின் இரண்டாவது அடி பொங்கி வரவே பாடிஞன்—

[1] காலோ கேசே ராஙா குஸுாம்
ஹேரேச்சோ கி நயநே?'

7

கருங்கூந்தலில் சிவந்த பூவின் அழகைக் கண்டு கவி புனைந்து விடலாம்; ஆஞல் இந்த அழகில் மயங்கிப் பாதையில் நடப்பது எளிதன்று. உண்மையில் தடுக்கி விழுந்தான். பலமாகத் தடுக்கி விட்டது. கால் கட்டைவிரல் நகம் பிளந்துபோய் ரத்தமாய்ப் பெருகியது. அவன் அந்தப் பாட்டைப் புனைந்தபடி சண்டீதேவி ஆலயத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தான். ஆள் நடமாட்டமிராத வழி. இடது கையைக் கன்னத்தருகில் பதித்து நிதாயி உரக்கவே குரல் எடுத்துப் பாடிஞன். நடுநடுவே வலது கை சுட்டுவிரலைக்—கருங்கூந்தலில் சிவந்த பூவின் அழகை—யாருக்கோ காட்டுவதுபோல் தூக்கிஞன். அந்த மைத்துனி, முன்னே விரைவாக செல்வதுபோலவும், அவளுடைய சுருண்ட இருண்ட கூந்தலில் கிருஷ்ணசூடாவின் மலர்க்கொத்துச் செவேலெனத் தோன்றுவது போலவும் ஒரு மருள் அவனைப் பற்றியது.

சட்டெனக் காலில் ஒரு கல் தடுக்கி அந்த அப்பாவி உட்கார்ந்து விட்டான். உடல் பலவீனமுற்று இருந்ததால், அந்த அடியால் அவனுக்குத் தலை சுற்றியது. இந்தச் சில தினங்களாக ஒரு வேளையே உணவு கொள்கிருன். வேலை செய்யாதலால் வரும்படியும் இல்லை. ஏதோ முன்ஞல் சேமித்தது மிகச் சொற்பமே. அதை நம்பித்தான் கடை வைக்கப் போகிருன்! இதற்காகவே அவன் ஒரு வேளைச் சாப்பாட்டை மிச்சப்படுத்திக் காசு சேர்க்கிருன். சில நாட் களில் பிற்பகலில் பாயசமும், சில நாட்களில் கிச்சடியும் அவனுடைய பசியைப் போக்க உதவின. இந்த விஷயத்தைத் தன் ஆப்த

[1] கருங்குழலில் அச்சிவந்த மலரைக் கண்ணுரைப் பார்த்தாயா?

நண்பன் ராஜாவிடங்கூட அவன் வெளியிடவில்லே. அந்த மைத்துனிக்குக்கூட. அவர்களுக்கு இது தெரிந்தால் கட்டாயம் கண்டித்திருப்பார்கள். ராஜா கல்லென ஐந்து ஆறு ரூபாய்களே அவனிடம் தந்து, 'ஏதாவது வாங்கிச் சாப்பிடு, பசி தீர நாலு தினுசு. மேலும் வேண்டுமானுல் தருகிறேன்...ஏன் பட்டினி கிடந்து சாகிருய்...' என்பான்.

ராஜாவைப்போல் ஒரு சிநேகிதன் அகப்படவே மாட்டான். உண்மையில் 'ராஜா'வுக்குரிய தாராள மனசு படைத்தவன். விப்ரப்தன் தன்ணேப் பலவாருகக் கேலியான பெயர்கள் வைத்துப் பேசுவதுதான் நிதாயின் மனத்தை நோவச் செய்தது. அதில் ஒன்றுமட்டுமே அவனுக்குச் சுமாராகப்பட்டது—ராஜாவின் சபாகவி என்பதுதான். ராஜாவிடத்தில் அவன் எதையும் சொல்லச் சங்கோசப் பட்டதில்லே. ஆனுல் ராஜாவின் சம்சாரம் இருக்கிருளே அவள் 'ராணி'அன்று; அசல் ராட்சசி. அடேயப்பா, என்ன விஷம் அந்த நாக்கில்தான்! உடல் பற்றி எரியும்படி சொற்களே எய்வாள். மிலிட்டரி ஆளான ராஜா, பிரம்பு பிய்ய அவள் முதுகை ரத்தவிளர்வாக்கி விடுவான். அப்போதும் அவளுடைய விஷநாக்கு ஓயாது. அவள் கீழே விழுந்து புரண்டு மேலும் வசவுகளே அடுக்குவாள்.

மானம் சிந்திப் போகும்படி திட்டித் தீர்த்துவிடுவாள். இந்த உலகத்தையே அவள் திருணமாக நிணேப்பவள். நடுநடுவே ஸ்டேஷன் வழியாகச் செல்லும் புகை வண்டியையும் சபிக்கத் தொடங்குவாள். ராஜா ஸ்டேஷனுக்குத் தன் அலுவலாகச் சென்ருல் தன் காரியத்திற்கு அவன் பயன்படாது போனுல், ஸ்டேஷன் மாஸ்டர், கார்ட், இவர்களேயும் சந்திக்கு இழுத்துவிடுவாள். அவள் பொழியும் இந்த வசவு திட்டுக்களே நிணேக்கும்போது நிதாயிக்கு துக்கமாக வரும்; சிரிப்பும் வரும். ராஜாவின் சம்சாரத்தின் வசை களில் காவியத்திற்குரிய ஓசை நயமெல்லாம் தொனிக்கும். ஒரு கவிஞனுல்கூட அந்த மாதிரி ஒழுங்காக வசவுச் சொற்களே எதுகை மோனே யழகுடன் அமைக்கவே முடியாது. முன்ஞுள்கூட ரெயில் வண்டியை நோக்கி அவள் இட்ட சாப-வசவு இது: 'பாலம் இடிந்து நீ பாதாளம் போவாய்...தீயும் புகையும் கக்கிச் செல்லும் நீ தடம் புரண்டு ஒழியணும்...கண்மண் தெரியாமல் ஓடும் நீ கண்ட துண்டமாக முறியணும்...பாழ்த்த குரலெடுத்துக் கூவும் நீ, படு நரகில் வீழணும்... உருண்டு வீழணும்... உருமாறிப் போகணும்...' கடவுளே, மகாதேவ் மண்டலின் 'குப்பைத் தொட்டியின் அந்த எச்சிற்கல்லே' என்ற கவிதை இதற்கு எந்த மூலே!

ஓய்வு நேரம் கிடைக்கும்போது நிதாயி ராஜாவிடமே இருப்பான். அதனால் ராஜாவின் சம்சாரத்துக்கு இவன்மீது எரிச்சல் அதிகமாகி விடும். ராஜா இல்லாத சமயம் பார்த்து நிதாயியையும் கடுமை யாகவே திட்டிவிடுவாள். அவனுக்குச் சிரிப்பு வந்தது. இனிமேல் ராஜாவிடம் எந்த உதவியை நச்சியும் செல்லக்கூடாது. அப்படி இருந்தாலும், அவன் கொடுக்காமல் இருக்கப் போவதில்லை. செய் வதையும் மறைவாகச் செய்யமாட்டான். ராணியம்மாவுக்கு அது தெரியாமலும் போகாது. அவளுக்குத் தெரிந்தாலோ கேட்கவே வேண்டியதில்லை; அவளுடைய நாராசமான பேச்சுக்கு இலக்காக வேண்டியதுதான். முன்னாள் ஓர் அமர்க்களம் நடந்ததே! மைத்துனி தேநீர் அருந்தியதை இந்த ராணி பார்த்துவிட்டாள், நிதாயுடன் அவள் உரையாடியது, தெம்பாகச் சிரித்தது யாவும். ராஜாவின் சம்சாரம் அப்போது அந்தப் பக்கமாக வர நேர்ந்தது. சிரிப்பும் குதூகலமுமாய் சப்தம் வரவே எட்டிப் பார்த்திருக்கிறாள். இவர்கள் இருவரும் தமாஷாக இருப்பதை நோக்கியதும், சட்டென நழுவிவிட்டாள். இது தெரிந்ததும், அந்தப் பேதை மைத்துனிக்கு எப்படி மாறிவிட்டது முகம்! நிதாயும் திடுக்கிட்டுப் போனான். அடுத்த விநாடியே ராஜாவின் சம்சாரம் ஏளனத்தின் தீவரம் தொனிக்கப் பாடத் தொடங்கிவிட்டாள்—

[1] ஹாஸிஸ் நா லோ காலாமுகீ—ஆர் ஹாஸிஸ் நா,
லாஜே மரி கலாய் தடி—லாஜ் பாஸிஸ் நா?

அதற்குமேல் மைத்துனி தேநீரை உட்கொள்ளவில்லை. அவளுக்கு வைத்த அந்தத் தேபானமும் ஆறியே போய்விட்டது. ஆறிப்போன தேநீரை அப்படியே வைத்துவிட்டு, ஒரு செம்பு குளிர்ந்த நீர் பருகி யதும் வீட்டுக்குத் திரும்பினாள்.

கால் தடுக்கி விரலில் அடிப்பட்டுச் சமாளித்துக் கொண்டதும் நிதாயி ஒருவிதமாகச் சண்டீதேவியின் ஆலயம் வந்தடைந்தான். சண்டீ அன்னையை வணங்கியதும் அவன், மகந்து முன்பு கைகுவித்து நின்றான்.

மகந்து அன்பாகவே, 'வா கவிவாலா...நிதாயிசரண், வா அப்பா!' என்றார்.

நிதாயின் உள்ளம் குளிர்ந்தது. மகந்தை வணங்கினான்.

'மங்களம் உண்டாகட்டும்...க்ஷேமமெல்லாம் எப்படி?'

---

[1] சிரிக்காதே அடீ பாழ்முகத்தவளே, சிரிக்காதே. மானத்தாலே சுருக்கிட்டுச் சாவேன், வெட்கமாயில்லை?

'அடியேன் இருக்கிறேன்...ஸாயி எனக்கு மெடல் போடுவதாகச் சொன்னீர்கள்...'

'மெடலா...'

'ஆமாம்'

'போடத்தான் போகிறேன்...உனக்குக் கிடைக்கும் அப்பா...' என்றதும் அவர் வேறு கவனமாக இருந்துவிட்டார். சண்டிதேவியின் மகிமையை உட்புலனுல் கண்டவராய், ஆழமான குரலில் அழைத்தார்—'ஏ காலீ, கைவல்யதாயிநீ அம்மா!'

நிதாயி சில நேரம் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தான். மகந்து தன்மயமாக இருக்கும்போது அவன் குறுக்கிட்டு எதையும் பேசத் துணியவில்லை. சில கணத்திற்கெல்லாம் அந்தப் பக்கம் சண்டி தேவியின் வாசற்படியண்டை 'டங்'கென்று ஓசை வந்தது.

மகந்தும் தம் நினைவு வந்து எழுந்தார். சண்டியைத் தரிசிக்க வரும் யாரோ யாத்திரிதான் ரூபாய்க்காசை டங்கென்று போட்டிருக்க வேண்டும்.

மகந்து திரும்பியபோது அந்த நல்வாய்ப்பை நழுவவிடாமல் மறுபடி கைகுவித்து, 'ஸாயீ!' என்ருன் நிதாயி.

புருவம் சுளித்து மகந்து, 'நான்தான் சொன்னேனே...அது நடக்கும். அடுத்த மேளாவில், எல்லார் முன்னிலையில் உனக்கு மெடல் அளிக்கப்படும்' என்ருர்.

மிகத் தாழ்மையாக நிதாயி, 'அடியேனுக்குப் பிரசாதம் ஒன்று மில்லையா?' என்ருன்.

'பிரசாதம்...காசா?'

'ஆமாம் ஸாயி...'

மகந்து நிதாயியையே கூர்ந்து நோக்கினுர். அந்தப் பார்வை அவனை என்னவோ செய்துவிட்டது. மகந்தும் சட்டென், 'மைனுப் பறவையாகிவிட்டாயே...எங்கிருந்து கற்றுக்கொண்டாய்! காசா? அம்பிகையின் சந்நிதானத்தில் காசு? உன் நாக்கில் அவள் கவிபாடும் சக்தியை வைத்தாளே அதுவே நீ செய்த பாக்கியமடா!' என்ருர்.

மகந்து இப்படிப் பேசியது, அவனைச் சாட்டையால் அடித்தது போலவே இருந்தது. அவன் துடிதுடித்துப் போனுன். அவனுக்கு மூண்ட அவமானத்திற்கு எல்லையே இல்லை. உண்மையே. பாட்டுப் பாடக் கொடுத்து வைத்தது அவனுக்கு ஏற்பட்ட பாக்கியமே. எந்த முகத்தைக் கொண்டு அவன் காசு கேட்பான்?

அதற்குமேல் அவனுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. விரைவாக வெளியே வந்தான். திரும்பும்போது அவனையும் மீறிக் கண்

களில் நீர் துளித்தது. திடுமென அவனுக்கு அந்த மகாதேவ் கவிவாலாவின் சிந்து ஞாபகத்திற்கு வந்தது. அன்று பாட்டரங்கில் அவன் பாடிய—குப்பைத் தொட்டியிலுள்ள எச்சிற்கல்லை சொர்க்கம் போக பார்க்குது—என்ற அடி. மகாதேவ் கவிவாலா சரியாகத்தான் பாடினன். எங்கேயாவது எச்சிற்கல்லையால் சொர்க்கம் புக முடியுமா? முடியவே முடியாது. ஆயிரம் இருப்பினும் கவிவாலா மகாதேவ் நல்ல புத்திமான். அவர் சொன்னதில் பிசகு ஒன்றுமில்லையே. நிதாயி கவிஞனுக மாற ஆசைப்படுவதும், எச்சிற்கல்லை சொர்க்கம் புகப் பறப்பதும் ஒன்றேயாம்.

அவன் தன்னுக்குள்ளேயே, தெளிவாகவே, தன் உட்புலன் கேட்கும்படி, ‘தூரத் தள்ளு இந்த ஆசையை’ என்ருன். அதாவது தான் கவிவாணனுகப் போகும் எண்ணத்தை, கனவை உதறி யெறிய விரும்பினன். அத்துடன் ஒரு துணிவுக்கு வந்தான், அன்றே பன்னிரண்டு மணி வண்டி வந்ததுமே பழையபடி மூட்டைத் தூக்கும் கூலியாகிவிடவேண்டு மென்று.

‘விப்ரபதன் கேலி செய்வான், செய்யட்டுமே...கவிஞனுக ஆவதில் ஒரு பயனுமில்லை.’ நிதாயி தன் மனத்தை நன்ருகத் திறந்துவிட்டுக் குதூகலமாகவே மகாதேவ் கவிவாலாவின் சிந்தடியை எடுத்தான்—

[1] ஆஸ்தாகுடேர் ஏண்டோ பாதா
ஸ்வக்கே ஜாபார் ஆஷா கோ!
ஃபராத் கரே உட்லோ பாதா—
ஸ்வக்கே ஜாபார் ஆஷா கோ!
ஹாய்ரே கலி—கிஇ வா பலி
கருட ஹபேன் மஷா கோ!

சற்றுத் தொலைவு வந்ததும் அவன் செவிக்குள் ஓர் ஓசை நுழைந்தது. ரெயில் வருகிற சப்தமா? ஆமாம், ரெயில் வண்டிதான். அவனுடைய நடையில் ஒரு துரிதம். இதற்குள் ராஜா ஸ்டேஷனுக்குப் போய்விட்டிருப்பான்—கைகாட்டியைத் தாழ்த்துவான்—மணியடிப்பான்—பால் கொண்டுவரும் மைத்துனி அவன் வீடு பூட்டிருப்பதைப் பார்த்து மருள மருள விழிப்பாள்—இன்று அவள் ராஜாவீட்டுப் பக்கமே கால் வைக்கமாட்டாள்—முன்னுள் தான் அவளுடைய அக்காவின் வாயால் அத்தனைப் பாட்டுக்களை வாங்கிக் கொண்டாளே. நிதாயி ஓடத் தொடங்கினன்.

[1] முன்னுல் பார்க்கவும்—பக். 17

இறைக்க இறைக்க அவன் ஸ்டேஷனை அடைந்தான். புகை வண்டித்தொடரும் வளைந்து ஸ்டேஷனிலிருந்து கிளம்பிக்கொண் டிருந்தது. நிதாயி ஏமாற்றமடைந்து பெருமூச்சுடன் நின்ருன். வர இருந்த கூலிக் காசும் போய்விட்டது; அந்த மைத்துனியும் சென்று விட்டாள்.

திடுமெனத் தன்னை யாரோ அழைப்பது கேட்டது —'நிதாயி' ஸ்டேஷன் ஸ்டாலில் நின்றபடி அந்த வணிகமாமா, அவனைப் பார்த்ததுமே ஆவலுடன், 'உன்னைத்தான் நிதாயி' — என்று அழைத்தான்.

வாயுவினுல் பீடிக்கப்பட்டு உடல் சுவாதீனமிராத விப்ரபதனும் சிரமத்துடன் திரும்பிச் சிரித்தவாறு கூப்பிட்டான்—' ஏ கபிவரரே... இப்படி வா ஐயா, கபிசிரேஷ்டரே!' நிதாயிக்கு எரிச்சலாக வந்தது, கடுமையாக ஏதாவது சொல்லி அவன் வாயை அடக்கிவிடுவ தென்று. ஸ்டேஷனுக்குள் புகுந்தான். கடைக்கார மாமா சற்றுக் குஷியாகவே, 'சே, அப்படிச் சொல்லாதே ஸாமி...நம்ம நிதாயி நல்ல புத்திசாலி..ஒரு முக்கிய சமாசாரம்..மகாதேவ் கவிவாலா உனக் காக ஓர் ஆளை அனுப்பினுன்...எங்கேயோ பாட்டரங்கு நடக்கிற தாம்...பின் பாட்டுக்கு ஆள் வேண்டுமாம்' என்ருன்.

எதிர்பாராத இச்செய்தியைக் கேட்டு நிதாயி தம்பித்துப் போனுன்.

மகாதேவ் கவிவாலா அவனுக்காக ஓர் ஆளை அனுப்பியிருக் கிருன்...பாடுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு வருகிறது!—இப்படி அவன் ஓர் மயக்குள் ஆழ்ந்திருக்கும் நிலை, ராஜாவின் உரத்த கூச்ச லால் சிதறிவிட்டது. மகிழ்ச்சி பொங்கிட ராஜா, வானத்துக்குப் போய்வரும் ஒரு பெரும் குரலில்—'உஸ்தாத்..ஓ உஸ்தாத்..ஓ உஸ் தாத்...' என்று கூவினுன்.

ராஜாவுடன் இன்னேர் ஆளும் இருந்தான். மகாதேவ் மண்டலின் பின்பாடக கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன். போன தடவை நடந்த மேளாவில் அவன் பாடியிருக்கிருன். நிதாயி அவனை அடையாளம் புரிந்துகொண்டான். 'நல்ல வரும்படி இருக்கு, உஸ்தாத். உன்னைத்தேடி வருது!' என்ருன் ராஜா குதூகலம் பொங்க. கூட இருந்த ஆள் நிதாயிக்குக் கும்பிடு போட்டு, 'எப்படி உடல் நலமெல்லாம்?' என்று விசாரித்தான். நிதாயும் பதிலுக்கு வணக்கம் செலுத்தி மெதுவான குரலில், 'அடியேன் இருக்கேன். நீங்கள் சௌக்கியந்தானே? உஸ்தாத் மகாதேவ் க்ஷேமமா இருக்கிருரா?' என்ருன்.

'ஒரு குறைவுமில்லை...அவர்தான் என்னை அனுப்பினர். நம் உஸ்தாத் ஓர் இடத்தில் பாட ஒப்புக் கொண்டிருக்கிருர். நீங்களும் அவருடைய கோஷ்டியில் கலந்துகொள்ளவேண்டும். இப்போது அவருக்குச் சற்று உடம்பு நலக்கம்...தொண்டை கட்டிக் கொண் டிருக்கிறது. உங்கள் குரலைப் பற்றிச் சொல்லுவானேன்...பேஷான சாரீரம்! தமக்குப் பதிலாக உங்களையே அவர் பாடச் சொல்வதா யிருக்கிருர்...நீங்களும் சொந்தமாகவும் பாடலாம்...அப்புறம் என்ன? தடை சொல்ல மாட்டீர்கள்?'

அப்போது ராஜா, 'ஜரூர்...ஒப்புக்கொள்...வீட்டுக்கு வந்து மற்ற விஷயங்கள் பேசலாம்...என்னுடன் சா அருந்து' என்ருன்.

நிதாயி, ராஜா சொன்னதையே பின்பற்றினன். இன்று அவனுக்கு எல்லாம் குழப்பமாகவே இருந்தது. மகாதேவ் கவிவாலாவே ஆளை அனுப்பி இருக்கிருன்...நல்ல வரும்படியும் நிறையக் கிடைக்க லாம்! வந்தவனும், 'வாங்கோ...வீட்டுக்குப்போய் பேசலாம்' என்ருன்.

வீட்டையடைந்ததும் நிதாயி வியப்பிற்காளானன். ஒரு புதர் ஓரமாக, கிருஷ்ணசூடாமரத்தின் நிழலில் அமர்ந்திருப்பவள் யார்?

மைத்துனிதான்!

களிதுளும்பும் கண்களுடன் நிதாயியை நோக்கியதும் அவள் வெட்கிக் குறுகிப்போனள். மறுகணமே நிதானத்திற்கு வந்து மெது வாகவே, 'எங்கே போய்விட்டாய். உனக்காக இந்தப்பாலை வைத்துக் கொண்டு எம்மா நேரமாய்க் காத்திருக்கேன் தெரியுமா?' என்ருள்.

'நாளைக்குச் சற்றுப் பொழுதோடேயே பால் எடுத்துவா மச்சீ... நாளைக்குச் சரியாக பன்னிரண்டுக்கெல்லாம் நான் பாடப்போக வேண்டும்...அதற்கு முன்னரே...என்ன...?' என்று நீட்டினன்.

ராஜா அவன் சொல்ல இருந்ததைச் சுருக்கமாக, 'ஆமாம் நேர மாக்காதே; கடிகாரமுள்ளுமாதிரி டான்னு வந்துவிடணும் மச்சி...' என்ருன். இன்று ராஜாவும் ரொம்பவும் தென்பாகவே இருந்தான். மைத்துனியின் முகத்திலும் தென்பின் நிழல் ஆடியது. காக்கைக் கண்போல் தெள்ளிய நீர் நிலை... அதன் மீது வெயில் ஒளி பட் டதும், பளபளப்பு ஒன்று தெரியும்..இருள்மேகம் வானில் எழுந் தால், நீரும் இருண்டு விளங்கும்...இதே போல் அவள் கண்களில் ஒளியும் நிழலும் அவ்வப்போது மாறி மாறித் தோன்றின!

தென்பின் ஒளி விளையாடும் பெரிய விழிகளை நிதாயின்மீது பதித்து, 'என்ன கவி... பாடப்போகிருயாமே... நல்ல வரும்படிதான் போலிருக்கு..'என்ருள்.

'ஏது, இந்த விஷயம் மைத்துனி வரைக்கும் எட்டிவிட்டது போலிருக்கிறது!'

ஐந்து நாட்கள் கழிந்ததும் நிதாயி திரும்பினுன். அவன் ரெயில் பெட்டியிலிருந்து இறங்கியபோது ஆளே மாறிப்போயிருந்தான். அவன் கால்களில் வெள்ளைக் கான்வாஸ் ஜோடுகள்—புதியவை தான். அழுக்கடைந்த சொக்காய்க்குமேல் சலவை வெளுப்பான ஒரு புதிய சாதர் (மேல் அங்கவஸ்திரம்). முகத்தில் புன்சிரிப்பு. ஆனுல் அந்தப் பழைய அடக்கம் போகவில்லை. ரெயில் பயணத்தில் அவன் எத்தனையோ கற்பனை செய்துகொண்டான்—ஸ்டேஷன் மாஸ்டரே தொடங்கி யாருமே தன்னைக் கண்டதும் அப்படியே ஆச்சரியத்தால் முன்வந்து வரவேற்று உயர்த்தி வைத்துப் பேசுவார்கள்—இப்படி யெல்லாம்.

'யார் இது நிதாயா! அடேயப்பா, இதென்ன புதுஜோடும், அங்கவஸ்திரமும்... அடையாளமே புரிந்துகொள்ள முடியலையே!'

இதற்கு ஏற்ற பதில்கூற அவன் யோசனை செய்து வைத் திருந்தான்— 'அடியேன், இந்த மேல் அங்கவஸ்திரம் அந்த ஊர் சீமான்கள் என் தலையில் சுற்றிக் கௌரவப்படுத்தியது. இந்த ஜோடு நான் காசு போட்டு வாங்கியது'

தலையில் சாதரைச் சுற்றிய விஷயம் வெறும் பொய். அந்த கான்வாஸ் ஷூ, சாதர் இரண்டுமே அவன் ரொக்கம் கொடுத்து வாங்கியவை. காஷாயம் அணியாது போனுல் சாமியாரை எவரும் நம்ப மாட்டார்கள். வேடத்திற்கு அத்தனை மகிமை! மேலே சுற்றிக் கொள்ளும் அகலக்கறைச் சால்வை இராதுபோனுல் எவரும் கவிஞனைப் பொருட்படுத்தமாட்டார்கள். வெறுங்காலுடன் நடந்து செல்பவனை உலகம் கனவானுக மதிக்காது. அதனுலேயே நிதாயி காலணியையும், சாதரையும் வாங்கினுன். ஸ்டேஷனில் இறங்கி யதும், தனக்கு மகத்தான வரவேற்பு இருக்குமென்ற நம்பிக்கையில், கபடற்ற இன்முறுவலுடன் எல்லோரையும் நோக்கினுன். ஆனுல் அவனை யாரும் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை. அவனைப் பார்த்து அளவளாவுவது அப்புறம் இருக்கட்டும். என்ன என்றுகூட எவரும் விசாரிக்கவில்லை. அவனுடன் குளிர்ந்த வார்த்தை பேசக் கூடியவன் அச்சமயம் எஞ்சினண்டை ஏதோ முக்கிய காரியமாக இருந்தான். கூட்ஸ் பெட்டிகளை 'ஷண்ட்' செய்யவேண்டியிருந்தது. பெட்டிகளைக் கத்தரித்துவிட்டு, ராஜா எஞ்சினில் ஏறிக்கொண்டு, தண்டவாளத்தின் ஓரமாகச் செல்பவர்களை— 'ஒத்திப்போ... ஒதுங்கு — இது எஞ்சின், எருமை மாடல்ல—ஒத்து—' என்று கூவினுன்.

நிதாயின் மனக்கோட்டையெல்லாம் எங்கோ கரைந்து போயிற்று. உலகத்தின்மீது வெறுப்புற்றவன், ஜனங்களையும் அவர்கள் வாழும் இடத்தையும் நெருங்காமல் தனிவழியே, எவர் கண்ணிலும் படாமல் செல்வதுபோல், நிதாயி ஸ்டேஷன் மருதோன்றி வேலி மறைவிலேயே, ஒற்றையடிப் பாதை வழியாக ஸ்டேஷனைக் கடந்து தன்னிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் மனம் அப்படியே இடிந்துபோய்விட்டது. மனம் மட்டுமென்ன, அவன் மெய்யும் சோர்வடைந்தது. சட்டெனச் செவியில் விழுந்தது, யாரோ சுவரத்துடன் பாடுவது.

'காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேநோ?'

இவ்வடியைச் சுவரத்துடன் யாரோ மெல்லப் பாடினார்கள். அந்தப் புதர் பக்கத்திலிருந்துதான், கிருஷ்ணசூடா மரத்தடியிலிருந்துதான். அடுத்த நிமிடமே, வற்றிக் கிடந்த ஆற்றில் வெள்ளம் முட்டிக் கொண்டு எழுந்தது. மைத்துனிதான் அப்படிப் பாடுகிறாள்... அவன் கட்டிய பாட்டின் அடியைத்தான் அவள் பாடுகிறாள்!

ரப்பர் அடிப்புரையுடைய கான்வாஸ் ஜோடு காலில் அணிந்தபடியே ஓசை செய்யாமல் நிதாயி அவள் பின்புறமாக வந்து நின்றான். அதேபோன்ற மென்குரலில்— காலோ கேசே ராஙா குஸும் ஹேரேச்சோ கி நயநே?—என்று இசைத்தான்.

மைத்துனிக்குத் தூக்கிப்போட்டது; மருண்ட மானென எழுந்தாள். 'யார் இது?' என்றாள்.

மறுகணமே அவள் வியப்பினால் பேச்சற்று நின்றாள்—நிதாயி கவிவாலா!

முகத்தில் இன்முறுவல் படர, அன்பு கனிய, தன்னிடத்தில் அத்தனை பக்தி வைத்திருக்கும் அந்த மாமைக் கவிஞனைப் பார்த்து நிதாயி, 'வா, சா அருந்திவிட்டுப் போவாய்' என்றான்.

வீட்டினுள் நுழைந்ததும் அவன், தன் கழுத்தில் சுற்றியிருந்த சாதரைக் களையப் போகையில், அவள் தடுத்து, 'எடுக்க வேண்டாம், அப்படியே நில்...நன்றாகப் பார்க்கிறேன்' என்றாள்.

கண்ணாரப் பார்த்ததும் மைத்துனி, 'ரொம்பப் பொருத்தமாக இருக்கு...இப்பத்தான் நீ கவிவாலா மாதிரி தோன்றுகிறாய்...என்ன அழகாய் இருக்கிறாய்!' என்றாள்.

நிதாயி, 'இது எனக்கு பாபுக்கள் தலைப்பாகையாக அளித்தது' என்றான்.

'மெடல்? மெடல் எதுவும் போடவில்லையா?'

'அடுத்த தரம் போடுவார்கள்...மெடலுக்கென்ன, கடையில் தயாராக இருக்கிறது மச்சி...

'இந்த அங்கவஸ்திரம் ரொம்ப நன்ருக அமைந்திருக்கு. அங்கே நன்ருகப் பாடியிருப்பாய்... இல்லையா ?'

முகத்தில் சிரிப்பு தவழ, 'எப்படிப் பாடினேன் ! காலோ ஜதி மந்த தபே—என்ற பாட்டைக்கூடப் பாடினேன்' என்ருன் நிதாயி.

அந்தக் கருமாமேனியாளின் முகத்திலும் வெட்கம் படர்ந்தது. அவளுடைய கண்ணிமைகள் மெல்லத் தாழ்ந்தன. ஊறும் நீரினுல் அவை கனத்துத் தோன்றின. நிதாயியை நோக்காமலே, 'ஏன் அதைப் பாடினுய்... சீ, எந்த மாதிரி ஆள் நீ ?' என்ருள்.

நிதாயி சிரித்து, 'நில்... சற்று நில்லேன்... மறந்தே போய் விட்டேனே...'

'என்ன ?'

'கண்ணை மூடிக்கொள்... இல்லாதுபோனுல் முடியாது'.

'என்னதான் சொல்லு...'

'கண்ணை மூடித்தான் பாரேன்... அப்புறம் என்ன என்பது உனக்கே புரியும்'

மைத்துனி கண்களை மூடிக்கொண்டாள். ஆனுல் நடுநடுவே அவளுடைய இமைகள் படபடத்தன, திறந்துகொள்ள. சிமிட்டும் போது அவளுக்கு இலேசாகத் தெரிந்தது. நிதாயி ஜேபியிலிருந்து என்னவோ எடுப்பது.

'ஊம்... பார்க்கிருயே... மூடிக்கொள் கெட்டியாக...' என்ருன் நிதாயி. திருட்டுத்தனமாக அவள் பார்ப்பதைக் கண்டுபிடித்தான்.

மறுகணமே கழுத்தில் என்னவோ சன்னமான ஒரு பொருள் விழுந்தமாதிரி இருந்தது அவளுக்கு. அது என்ன ? சட்டெனக் கண் விழித்துப் பார்க்கையில், பொன்னுலான மெல்லிய நூல் போன்ற ஆரம் அவள் கழுத்தில் தொங்கியது. மைத்துனி வியப்பும் உவகையும் மேலிட, பரவசமாகி வாயடைத்து நின்ருள்.

'பொன் சரமா ?'

'இல்லை இமிடேஷன் தங்கந்தான்... நான் எங்கே போவேன் அசல் தங்கத்துக்கு ? நான் ஏழை'

அவள் உள்ளக் குதுகுதுப்புடன், 'இருக்கட்டுமே... இது தங்கத்தைக் காட்டிலும் எவ்வளவோ மதிப்பானது' என்ருள். அந்தச் சன்னமான ஆரம் தீண்டவே அவள் மார்பு எதனுலோ படபடவென்று அடித்துக் கொண்டது, இளவேனிலில் அரசமரத்து கொழுந்தளிர் காற்றில் துடிப்பதுபோல்.

'உஸ்தாத்... உஸ்தாத்...'

ராஜாதான் வருகிறான். ரெயில் வண்டி போய்விட்டது. 'ட்யூடி'யை முடித்துக்கொண்டு ராஜா பிளாட்பாரத்திலிருந்து குரல் கொடுத்துக்கொண்டே வருகிறான்.

நிதாயிக்குச் சங்கடமாகிவிட்டது. என்ன செய்வதென்று விழித்தான்.

உடனேயே அவன் அறையிலிருந்து வெளிப்போந்தான். அப்பொழுதும் அவன் கழுத்தில் அந்தச் சாதர் இருந்தது. கால்களில் ஜோடு. அவன், முன்னே சென்று ராஜாவுக்குத் தலைவணங்கி—'ராஜா, யாவரும் க்ஷேமந்தானே?' என்றான்.

ராஜாவுக்கு ஆச்சரியம் அண்டுகொள்ளவே முடியவில்லை. அவனுடைய கண்கள் விரிந்தன. 'ஏயப்பா, கழுத்தில் சால்வை!' என்றான்.

குறுக்கிட்டு நிதாயி, 'தலைப்பாகை...பாபுக்களின் சம்மானம்.' என்றான்.

'ஆம், தலைப்பாகை—பாபுக்கள் உனக்குச் சுற்றியதா?'

'ஆமாம், என் பாட்டைக் கேட்ட குஷியில் இதைச் செய்து என்னைக் கௌரவித்தார்கள்'

'ஆங்...?'

'ஆமாம்'

'ஏயப்பா...பெரிய ஆளாகிவிட்டே' என்றதும் ராஜா நிதாயியை மார்புறத் தழுவி, 'வா தம்பி, வெற்றியுடன் வா' என்றான்.

'எங்கே?'

'வாயேன்' என்றதும் கையைப்பற்றி அவனைத் தன்னுடனேயே இழுத்துச் சென்றான். மாமாவின் தேநீர் ஸ்டாலுக்குத்தான்.

'மாமா...சட்டென இரண்டு கோப்பை சா...இனிப்பிலே இரண்டு தினுசு...ஆச்சா?' வணிகமாமா, நிதாயி பூண்டிருக்கும் உடையைப் பார்த்து வாயடைத்துப்போனான். பக்கவாத நோயாளி அந்த விப்ரபதன் வேறு புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான். உணர்வு செத்த தன் உடல் உறுப்புக்களை மெல்லத் திருப்பி நிதாயியைப் பார்த்தபோது உலகத்து வியப்பெல்லாம் அவனைச் சுற்றிக் கொண்டது.

நிதாயி அடக்கமாகவே விப்ரபதனின் பாதத்துகளை எடுத்துச் சிரமேல் வைத்துத் தெண்டனிட்டான். 'பாபுக்கள் எனக்குச் சுற்றிய தலைப்பாகை இது...' என்று சாதரைக் காட்டினான்.

கடைக்காரமாமா, 'இதற்காக எங்களுக்கு இனிப்பு ஸந்தேஷ் எதாவது தரவேண்டும்' என்ருன்.

'கட்டாயம். ஸந்தேஷ்தானே? உன் கடையிலேயே இருக்கிறது... நான் அதற்கான காசு தந்துவிடுகிறேன்' என்ருன் நிதாயி.

ராஜா கடும் ஹிந்தியில்—'நேஹி ஹம் தேங்கே தாம்—பாநாவோ டோங்கா (நான் கொடுக்கிறேன் அதன் விலையை; பொட்டளங் கட்டு)' சாதிக்காய்ப் பலகையால் ஆன பெட்டி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு ராஜா அதன்மீது அமர்ந்தான். நிதாயியைப் பற்றித் தன் பக்கத்திலேயே ஓர் இடத்தில் குந்தச் செய்தான்— 'பயிட் ஜாஓ'

விப்ரபதன் இத்தனை நேரத்திற்குப் பிறகு வாயைத் திறந்தான். இன்று அவன் கோமாளித்தனம் செய்யவில்லை. பரிகாசமும் பண்ண வில்லை. உள்ளூறவே, நட்புணர்வுடனேயே, 'எப்படிப் பாடினே? எல்லோரும் ரசித்தார்களா? அதையெல்லாம் சொல்லப்பா நிதாயி' என்ருன்.

நிதாயிக்கு ஒரே மகிழ்ச்சி. விப்ரபதனை அவன் இன்று வென்று விட்டான். இதைவிட அவன் வேறு எதையும் விரும்பவில்லை. மீண்டும் அந்தப் பார்ப்பானின் அடிப்பொடியை எடுத்துக் கைகுவித்த வாறு, 'பாட்டைப் பற்றி நீங்கள் கரை கண்டவர், ஸ்வாமி. இருபக்கம் இரு கவிச் சிங்கங்கள்-ஒருவன் என்னைப்பார் என் சாமார்த்தியம் பார் என்கிருன். மற்றவன்-என் பாட்டை விடவா அவன்பாட்டு?- என்கிருன். ஒருவன் பிரமன், மற்றவன் மகேசுவரன்...ஒரே ஜன சமுத்திரம்...மேளாவா மேளா...என்ன ஆர்ப்பாட்டம்...! என்ருன்.

கடைக்காரன் பொட்டளங்களில் இனிப்புப் பண்டத்தை நிரப்பிக் கொண்டே ஒவ்வொருவர் கையிலும் வழங்கினுன். எல்லாருக்கும் கொடுத்தானதும் நிதாயின் பங்கை அவன் பக்கம் நீட்டினுன். ஆனுல் அவன் பெறுவதற்கு வசதியில்லை. பேசும்போது அவனு டைய இரு கைகளும் பல்வேறு பாணியில் அபிநயம் புரிந்தன.

விப்ரபதன் இதுவரைச் சாந்தமாக இருந்தவன் சட்டெனக் கடைக் காரன் கையில், நிதாயிக்கென இருந்த பொட்டளத்தை டபக் கெனப் பற்றிக் கொண்டு, 'சுத்த மட்டரகம் நீ...புலவன் எங்கே யாவது ஸந்தேஷ் தின்பானு? கவிஞர் நிலவொளியைப் பருகுகிறவர் கள்; மலர்த்தேனை மாந்துபவர்கள்; குயிலின் இன்னிசையை உண்ப வர்கள்...' என்றதும் நிதாயியை விளித்து, 'அப்புறம் என்ன நடந்தது நிதாயிசரண்? இந்தப் பக்கம் பிரம்மா, அந்தப் பக்கம் மகேசுவரன்—இவர்களுக்கிடையே ஜனசமுத்திரம்... அப்புறம்?'

என்றதும் தன்னுடையதும் நிதாயின் பங்குமான ஸந்தேஷை எடுத்து வாயில் போட்டுக்கொண்டே இருந்தான்.

நிதாயின் ஆர்வம் இதனுல் இறங்கிவிடவில்லை. அவன் மகிழ்ச்சியுடன், 'ஒரு நாள் மகாதேவ் மண்டலுக்குச் சற்று அளவுக்கு மேலே போய்விட்டது போதை. அன்று மகாதேவ் கிஷ்டன்; சிஷ்டிகர்த்தாவுக்கு ராதையின் பாத்திரம். அவன் ஓர் அடியை எடுத்தான்—காலோ டிக்கேர் ஆகுன் லேகேச்சே—தோரா தேகே ஜா கோ ஸாதேர் காலாசாந்த்[1] இப்படி வசவு அதன் உச்ச நிலைக்குப் போய்விட்டது...மகாதேவ் மேடைமீதே வாந்தி எடுத்து விட்டான். பின்பாடகர்கள் ஓடிவந்து அவன் மண்டையில் குளிர்ந்த நீரை ஊற்றினர். நான் அந்தச் சமயம் வந்தேன்...என் பாட்டை எடுத்தேன்— காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேநோ?—அவ்வளவுதான் பெருத்த கரகோஷம்... பலே பலே என்றனர், பெரிய பெரிய பாபுக்கள்...சரெலேன்று ஒரு கனவான் எழுந்து எனக்கு இந்தச் சாதரால் தலைப்பாகையைச் சூட்டினுர்... அதுதான் நான் அணிந்துகொண்டிருப்பது...' என்ருன்.

அவன் சொன்னது உண்மையே. நிதாயி பாட்டைப் பாடியது, அனைவரும் அதை மெச்சியது இவை வரைக்கும் உண்மையே. ஆனுல் அந்தத் தலைப்பாகை விஷயம் நம்பத் தக்கதன்று.

அவனுக்குத் தலைப்பாகையைச் சுற்றியிருந்தால், அது உசித மாகவே இருந்திருக்கும். அந்த மேளாவில் நிதாயி அற்புதமாகத் தான் பாடி அத்தனை பேரையும் மகிழ்வித்தான். அவனுடைய இனிமையான குரலும், விளக்கமும் ஒரு புதுச் சுவையை எல்லோர் உள்ளத்திலும் பாய்ச்சின. கருமை நிறம் அப்படிக் குறைவான தென்ருல் அது வெளுப்பாக ஏன் நரைத்துப்போகிறது? — இதில் தத்துவக்கருத்து அடங்கியுள்ளதை அலசிக் காட்டினுன். சிஷ்டிதரன் ஒரு விந்தைப் புலவன்...அவன் மனித இனத்தை நன்கு அறிந்தவன். அவன் எதிரிடையாக ஒரு பாட்டையும் பாடினுன் —

[2] காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேநோ?
காந்தி நா ரே! கலப் மாக்கி
கலப் மாக்கி—நா ஹய், பஉ துலே தேய் ஹேஞ்ச்கா டானே'

---

[1] கறுப்புச் சிகையில் நெருப்புப் பிடித்தது வந்துபார் ஆசைக் கரிய மதியே!

[2] கறுப்பு நிறம் மட்டமென்ருல் கூந்தல் நரைத்தபொழுது அழுவானேன்? அழாதேயடா. சாயம் பூசிக்கொள். இராவிட்டால் உன் மனைவி மூஞ்சியால் அடிப்பாள்.

ஜனங்கள் இதையெல்லாம் கேட்டுச் சிரித்தார்களே தவிர இதனுள் புதைந்துள்ள உண்மைக் கருத்து அவர்கள் மனத்திலிருந்து மறையவே இல்லை. அரங்கு முற்றுப்பெற்றதும் பலர் தமக்குள்ளேயே கைகளையாட்டி இந்தப் பிரச்னையை ஆராய்ந்தனர்—

'காலோ ஜதி மந்த தபே—கேச பாக்கிலே காந்தோ கேநோ ?'

மறுநாள் மேடையில் நிதாயியை, மகாதேவ் வேணுமென்றே சிஷ்டிதரனுக்கு எதிராக நிறுத்தினான். அன்று சிஷ்டி, துரோணன்; மகாதேவ் ஏகலவ்யன். முன்னாள் நன்றாகக் குடித்த போதையில் வாந்தியெடுத்ததால் மகாதேவ் மண்டலுக்கு உடல் சரியாக இல்லை. தொண்டை வேறு கட்டிக்கொண்டுவிட்டது. இந்த சிஷ்டிதரனிடம் தோல்வியுறுவோமோ என்ற பயம். அரங்கில் நிதாயியை அறிமுகப் படுத்தி மகாதேவே கறகறப்பான குரலில் வந்தனம் செய்து பேசத் தொடங்கினான்—

[1] ஆமார் சுல பேக்கேசே தாந்த் பேங்கேசே
வயஸ் ஆமார் அநேக ஹலோ—
வ்யாதேர் பேட்டா ஏகலவ்ய
வயஸ் தாஹார் பச்சர் ஷோலோ;
ஆமாகே கி மாநாய் தாஇ ?
தாஇ ஹே த்ரோண மோர் வக்தவ்ய
ஏகலவ்யேர் பாபா ஆமி
நிதாயி ஹலோ ஏகலவ்ய ||

'இந்த ஏற்பாடு பொருந்துமென நினைக்கிறேன்' என்றான். இதற்கு மறுமாற்றமாக, சிஷ்டிதரன் எழுந்து தலையில் சடேலென்று அறைந்து கொண்டு பாடத் தொடங்கினான்—

[2] டாக்கா கடி சாஇ நா கோ மா
தோர் தண்டஸாஜா ஃபிரியே நே

[1] என்னுடைய மயிர் நரைத்துவிட்டது; பல் விழுந்து விட்டது. வயசோ அதிகமாகிறது. இந்த வேடுவப் பையன் ஏகலவ்யன், வயது அவனுக்குப் பதினாறுதான். எனக்கு அவன் இணையானவனே. ஏ துரோணரே, கேளும் இதை. ஏகலவ்யனின் தந்தை நான். நிதாயியே ஏகலவ்யன். இது சரியான பொருத்தந்தானே !

துட்டு கிட்டு தேவையில்லை அம்மையே—உன் ஆயுதங்களைத் திருப்பிக்கொள் அம்மையே. எருமைக்கடா அதன் கன்றாக மாறிப் போயிற்று. அதை வதைப்பதனால் பயன் ஒன்றுமில்லையே. மஹிஷாஸுரனைக் கொன்ற மாசக்தியே அதன் கன்றை விட்டுவிட்டாள். அதைக் கொல்ல என்னை ஏவிடாதே. உன் கட்டளையைத் திருப்பிக்கொள், காடுகெழு செல்வியே !

ஹாய் மஹிஷேர் கைலே பாச்சுர்
வதேர் ஹுக்கும் ஃபிரியே நே ।
நிஜே வத்லி மஹிஷாஸுரே—
சாஞுடாகே திவி சேடே
ஆமாய் பலிஸ் வததே தாரே
ஏ ஆக்ஞே மா ஃபிரியே நே ।

அதற்குப் பிறகு மகாதேவ் நிதாயி இருவரையும் சேர்த்து, சிஷ்டிதரன் அவர்கள்மேல் தொடுத்த வசவம்புகளுக்கு ஓர் எல்லை இல்லை. அவனுடைய பாட்டின் மூலக்கருத்து இதுவே—நிதாயி மகாதேவின் மகனுல் அவர்கள் இழிந்த வேடுவ மரபினராகார். அவர்கள் அசுரர்கள் ; பயல் மகாதேவ் மஹிஷாஸுரன் ; நிதாயி அந்த எருமை அரக்கனின் கன்றுக்குட்டி !

[1] ஹாய் அஸுரேர் ச்வசுர் பாடீர் டிக் டிக்காநா நாஇ
கருர் பேட்டே ஹய் தாம்டா
காயே தாஹார் பாகேர் சாம்டா
விதாதா ஸே அதோவதன்—ஏ பேட்டா டிக் தாஇ ।

அந்த அரக்கனின் கடுங்சினம் கொண்டு பொங்கி வெடித்தான், சிஷ்டிதரன். மகாதேவ் தலை தொங்க நின்ருன். உடைந்த தொண்டையெடுத்து இதற்கு ஜவாப் சொல்ல அவனுக்கு வழியில்லை. ஆனுல் நிதாயி குன்றிப் போய்விடவில்லை. அவன் துளியும் அச்சமின்றிப் பாட்டை எடுத்தான். வெற்றி தோல்விக்கு அவன் ஏன் அஞ்சுவான் ? பாடத் தொடங்கினுன்—

[2] பாண்ட புத்த த்ரோண ப்ராஹ்மண
தோமார் காண்ட தேக்கே அவாக் ஹோ !

'பெரியோர்களே, என்னை இவர் எருமைக்கன்று என இழித்துப் பேசினுர். ஆனுல் இவர் பிறந்ததோ பாண்டத்தில்—அதாவது மட்பானையில்.

[3] நாரிகேலே நிந்தே கரேன்—ஓ கஷுடே குவாக் ஹோ !

---

[1] ஐயோ அசுரனின் மாமனுர் வீடு எங்கிருக்கிறதோ தெரியவில்லை. கருடன் வயிற்றில் தாம்புக் கயிறு தொங்குது (பாம்பு தொங்குகிறது). அவன் உடம்பிலே புலியின் தோல் போட்டிருக்கிருன். பிரமன் முகம் தொங்கி இருக்கிருன்; இந்தப் பயலும் அதே போல் இருக்கிருன்.

[2] பாண்டு மகனே, இந்தப் பார்ப்பார துரோணன் நீ செய்ததைப் பார்த்து அசந்து போய்விட்டான்.

[3] தென்னங்காய் திட்டியது பார், ஏ கழிசாடைக் கமுக மரமே !

—அதாவது பாக்கு—கனவான்களே பாக்கைத்தான் சொன்னேன்.' ஆனுல் அவனுல் தாக்குப்பிடிக்க முடியவில்லே. இதற்கப்புறம் அவன் தலேகீழ் வழியைப் பற்றினுன். தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, தான் அடியுண்ட அவமானத்தைக் குறைத்துக்கொள்ளப் பார்த்தான். சந்தப்பாட்டை எடுத்தான்—

[1] பாம்மன் ப்ரதாந ஓஹே த்ரோணுசாஜ்ய
குரு ஹயே தோமார் ஏகி அந்யாய் காஜ்ய
ஆமி ஏகலவ்ய நஹி ஸப்ய பவ்ய
நா ஹய் வ்யாதேர் சேலே வநே ஆமார் ராஜ்ய
கிந்து தோமார் சிஷ்ய கஹி ஸத்ய ந்யாஜ்ய
தசேர் ஸாக்ஷாதே—பா திலாம் மாத்தாதே—

என்றதும் சிஷ்டிதரனின் அடித்துகளேத் தலேமீது வைத்து,'இனிமேல் இந்த யுத்தம், வெற்றி தோல்வி யாவும் போகட்டும்' என்ருன். கடைசி கட்டத்தில் அவன் தோல்வியை ஏற்று ஒடுங்கிப்போய் கைகளேக் குவித்தபடி—

[2] ப்ரபுகண ! சுனுந் நிவேதன் !
ஆமி ஹேரேச்சி ஹேரேச்சி
ஸத்ய ஏ வசன் |
ஹேரேஇ கிந்து ஹய் ஸார்த்தக ஜீவன் | என்ருன்.

அதற்குச் சிஷ்டிதரன்—'நிச்சயம், நிச்சயமே. அதற்குக் காரணம்—

[3] முண்டு காட்டா ஜாய் தூலாதே கடாய்
ஜிப் பாஹிர் ஹய் உல்ட்டாய் நயன் | '

என்றதும் தானே நாக்கை வெளியே நீட்டி, கண்கள் சுழலமிடுவன போல் பாணி செய்தான். அங்குக் கூடியிருந்த ஜனங்கள், 'ஹோ'

---

[1] அந்தணர் ஏறே, துரோணுச்சாரியரே, குருவான நீர் இந்த அநியாய காரியம் செய்கிறீரே ! நான் ஏகலவ்யன். நாகரிக மனிதன் அல்ல; வேடுவப் பிள்ளே நான். காடு நான் ஆளுமிடம். ஆனுல் உன் சீடன் சொல்வது ஸத்யம்; நியாயம். பத்துப்பேர் முன்னுல் தலேமீது உன் காலே வைத்துக்கொள்கிறேன்.

[2] கனவான்களே, விண்ணப்பம் கேட்பீரே; நான் தோற்றேன்... தோற்றேன் உண்மை. இந்த வாக்கு உண்மை; தோற்றதனுல் என் வாழ்க்கை பயன் பெற்றது.

[3] தலே வெட்டுண்டு தரையில் புரண்டது காண்! நாக்குப் பிதுங்கிக் கண்கள் சுழன்றனவே !

என நகைத்துப் பெருத்த ஆரவாரம் செய்தனர். இந்த இரைச்சலுக்கு மேலே நிதாயின் இனிய குரலிசை, 'ஆ... ஆஹா...' என்று எழுந்து ஒலித்தது. அவனுடைய இனிய சுவரப் பிரஸ்தாரமும், ஆலாபனை நிரவலும் ஜனங்களின் சிரிப்பொலியை முழுக்கிவிட்டுத் தனி அழகுடன் நின்றன.

மாரிக்காலத்தில் அடர் மழை கொட்டும்போது இடையில் உறுமும் இடியேறுக்கு இதனை உவமித்தால் நன்கு பொருந்தும். ஏனென்றால் நிதாயின் சாரீரம் அத்துணைத் திண்மையும், இனிமையும் மிடைந்த தாகும். அப்புறம் இசையின் வெள்ளந்தான் வழிந்து ஓடியது அரங்கில். அசல் இசைப்பாட்டு. அவ்வப்போது அவனுக்கு உணர்ச்சி வேகத்தால் உருப்படிகள் பூரித்தன; பாடுவான். அவற்றுள் ஓர் இசைப் பாட்டு—

ஆஹா—பாலோபேஷே—ஏ இ புஜேச்சி
ஸுகேர் ஸார் ஸே சோக்கேர் ஜலே ரே—
துமி ஹாஸோ—ஆமி காந்தி
வாம்சீ பாஜுக் கதம் தலே ரே !
[1] ஆமி நிபோ ஸப் கலங்க
துமி ஆமார் ஹபே ராஜா
(ஹார் மானிலாம்) ஹார் மானிலாம்
துலியே தியே ஜயேர் மாலா
தோமார் கலே ரே !
ஆமார் பாலோபாஷார் தநே ஹபே
தோமார் சரண பூஜா
தோமார் புக்கேர் ஆகுன் ஜேநோ ஆமார் புக்கே
பிதீம் ஜ்வாலே ரே !

—இப்படிப் பாடி முடித்ததும் அரங்கின் கூரையே இடிந்துவிழுந்து விடும் போலிருந்தது பலத்த கைத்தட்டலால்; புகழுரையால். சிஷ்டிதரன் உண்மையில் நெக்காட, 'என்ன மாதிரி குரலப்பா உனக்கு நிதாயி!—நீ ஏன் இந்த ஜாத்ரா கோஷ்டியில் சேர விரும்புகிறாய்? வெறும் வில்லுப்பாட்டுப் பாடும் புலவன் அல்ல அப்பனே...' என்று உயர்த்திப் பேசினான் நிதாயியைக் குறித்து.

[1] மாசு அனைத்தும் என்மேல் கொள்வேன். நீ எனக்கு அரசனாவாய்; தோல்வி ஏற்றேன்; தோல்வி ஏற்றேன். வெற்றிமாலை உன் கழுத்தில் அசைந்தாடுகிறது.
என் ஆசையின் செல்வம் தந்து உன் கழலடி போற்றுவேன். உன் இதய விளக்கு என் இதயத் தகளியில் எரியுமே!

மறுபடி சிஷ்டிதரனின் பாததூளியை எடுத்துத் தலைமீது வைத்து, 'நான் எதற்காகப் பிறர் கட்டிய பாட்டைப் பாடப்போகிறேன் உஸ்தாத்?' என்றான் நிதாயி.

வியப்பால் விழிகள் விரிய சிஷ்டிதரன்—'ஆனால் இது உன்னுடைய சொந்தப் பாடலா?' என்றான்.

'அடியேன், நானே புனைந்தது'

சிஷ்டிதரன் சிறிதுநேரம் வாளா யிருந்துவிட்டு, 'இருக்கும்... ஆனால்...' என்று இழுத்தான்.

'என்ன உஸ்தாத்?'

'கவிவாலா ஆவது உனக்கு ஏற்ற வழியன்று, புரிகிறதா! ஆனால் இதை விடாதே; பகவான் உனக்கு மூலதனமாக இந்த திவ்ய சாரீரத்தைக் கொடுத்திருக்கிறான். பாழாக்கிக் கொள்ளாதே... தெரிந்ததா!'

அன்றிரவெல்லாம் நிதாயி ஒரே உணர்ச்சிக் கடலில் மிதந்தான். இரவெல்லாம் பல இனிய கனவுகளைக் கண்டு, விழிப்புற்று நினைவில் அவற்றை மீண்டும் நிறுத்திக் களித்தான். கனவுகள் தாம் எத்தனை!

மறுநாள் மேளாவைவிட்டு வெளியே வந்து தனக்கு வேண்டிய சாதர் (சால்வை)ஜோடு விலைபேசி வாங்கிக்கொண்டு கண்ணாடியில் தன்னை அடிக்கடிப் பார்த்து, மனத்துள்ளேயே பல கதைகளைக் கற்பனை செய்துகொண்டு தன் ஊருக்குத் திரும்பி வந்தான். 'பாபுக்கள் தலைப்பாகையைச் சூடினார்கள்!'—அவன் அடைந்த வெற்றியைப் பலருக்குச் சொல்ல தகுந்ததோர் அடையாளம் வேண்டாமா? 'நீங்களே பாருங்கள் இந்தச் சாதர்தான்' என்று அத்தாட்சி காட்டினான்.

தலைப்பாகையின் கட்டுக் கதையைக் கூறி முடித்ததும் அவன் சா அருந்திய பொழுது அந்த மைத்துனியின் நினைவு எழுந்தது அவனுக்கு. அவள் இன்னும் அந்த அறையிலேதான் இருக்கிறாளா? நிதாயி சட்டெனத் தேநீர் உறிஞ்சிக் குடித்தானதும் பிளாட்பாரத்து லைன் ஓரமாக வந்து நின்றான். இணை கோடாகப் பளபளப்புடன் தொலைவில் வளையும் ரெயில் தண்டவாளம் ஒன்றி மறைந்து விட்டது.

எங்கே? வெண்ணிறமான ஒரு கீற்றின் மீது ஒளிரும் அப்பொன்னிறப் புள்ளி...தென்படவில்லையே?

இல்லை, ஒரு வேளை இன்னும் அந்த அறையிலேயே கிடக்கிறாளா? கடையிலிருந்து ராஜா குரல் கொடுத்துக் கொண்டிருந்தான்—

'ஓ...உஸ்தாத்—'

'இதோ...வந்து விட்டேன். வீட்டுவரைக்கும் போய் விட்டு வருகிறேன்'

நிதாயி வேகமாக நடந்து சென்று வீட்டை அடைந்தான். ஆமாம், இன்னும் அங்குத்தான் இருந்தாள் அவள்—மைத்துனி. நிதாயியைக் கண்டதுமே எழுந்தாள். வேறு ஒன்றும் பேசாமல் அவன் பக்கமாக நழுவிச் செல்ல முற்பட்டாள். நிதாயி அவள் கையைப் பற்றி—'என்னமாவது கோவமா என்பேரில்...?' என்ருன் மென்மையுடன்.

சட்டென அவள் அழுதுவிட்டாள்.

'என்ன செய்வது? கொஞ்சத்தில்அவர்கள் விடுகிருர்களா? போய் மாட்டிக்கொண்டேன்'

'நான் இங்கே இருக்கச்சே, நீ அங்கே பேசப் போய் விட்டே? அது உனக்கு முக்கியம்'

'இதோ உன் கையை அழுத்திச் சொல்கிறேன் ...அப்படி ஒன்றுமில்லே'

மைத்துனியின் முகத்தில் தெளிவு ஏற்பட்டது. அவள் சிரித்தாள்.

'இரு...நான் சட்டென உனக்கு தேநீர் போட்டுத் தருகிறேன். ஒரு கப் வாங்கி வந்திருக்கிறேன். இதுவரை நான் அதை உன்னிடம் சொல்லாமல் இருந்தேனே...' என்றதும் அவளேயே பருகுவது போல் நோக்கி முறுவலித்தான். இரண்டு ஸ்டீல் கப்புகளே வெளியே எடுத்தான்.

'வேண்டாம், நேரமாகிறதே'—என்றதும் அவள் பொழுது சாய்வதைப் பார்த்து நடுங்கிஞள். 'ஐயோ அம்மா' என்றதும் வேகமாகக் கால் வைத்து நடந்தாள். வழி நெடுக அவளுக்கு இதே திகில், இத்தனே நேரம் ஏன் தாமதம் என்று கேட்டால் என்ன பதில் சொல்வதென்று. இப்படி அவள் வழி நடக்கும்போது சேலேத் தலேப்பில் முடிந்திருந்த பொற் சங்கிலியின் கவனமும் வந்தது. முடிச்சை அவிழ்த்துக் கழுத்தில் அணிந்து கொண்டாள். அத்துடன் அவளுக்கு இருந்த திகிலெல்லாம் மறைந்தே போயிற்று.

வழியில் ஒரு சிற்ருரைக் கடக்கவேண்டும். முழங்கால் ஆழம் அதன் நீர். பளிங்குபோன்ற அந்த ஓடையில் அவள் நிழல் விழும்போது அவள் கழுத்தில் போட்டிருந்த தங்கச் சங்கிலியும் பளபளப்பதுத் தெரிந்தது. அதையே சற்றுநேரம் பார்த்தபடி நின்ருள். அவள் கால் வைத்ததால் அசையும் நீர்த்திரள் மெல்ல மெல்லத் தெளிந்து பளிங்காகிவிடும். மீண்டும் ஒரு முறை அந்த ஆடியில் ஆரம் பூண்ட தன் எழிலேச் சற்றுக் கண்டு அனுபவித்துவிட்டு அதைக் கழற்றித் தன் சேலேத் தலேப்பில் முடிபோட்டுக் கொண்டாள். ஆற்றைக் கடந்து தன் ஊருக்குள் நுழைந்தாள்.

எத்தனை நேரம்...ஏனென்று கேட்டால் என்ன மறுமொழி தருவ தென்று இன்னும் அவளுக்கு விளங்கவில்லை. ஆனால், வசவோ, உதையோ என்ன வந்தாலும் அதைப் பொறுத்துக்கொள்ளத் துணிந்து விட்டாள்.

நிதாயி இன்னும் அந்த கிருஷ்ணசூடா மரத்தடியிலேயே நின்று கொண்டிருந்தான். சித்திரை மாதம் பிற்பகலாதலால் தொடுவான் செம்புழுதியால் மங்கியே காட்சி தந்தது. காற்றும் வறட்சியாகவே வீசிற்று. அந்தக் காற்று தூசிப் படலத்தை எழுப்பிவிட்டது. ஆற்று வெள்ளத்தின் கலங்கலைப்போல் தோற்றமளித்தது, திக்கு திசையெல்லாம். நிதாயின் மனத்துள் இன்னும் அந்த உணர்ச்சி யின் சலனம் அடங்கவில்லை. இன்னும் அவனுடைய மனக்கண்ணாடி யில், பொன்னிறப் புள்ளி உடைய நாணல் மலர் போல் அந்த வெண்ணிறக் கீற்று தெரிந்துகொண்டே இருந்தது. அவன் திசை முடிவையே நிலைத்து நோக்கி மனத்துள் ஒரு பாட்டின் அடியைப் புனைந்து கொண்டிருந்தான். விசித்திரமான சொற்கோவை அவன் நெஞ்சில் உதித்தது. அவனுக்கே சில சமயம் தோன்றும்—எதற் காக இப்படி நிற்கிறேம், இந்த நடுவழியில் வெறித்து நோக்கியபடி? அந்தப் பெண் அவனுக்கு எம்முறையினள்? அவன் மனத்துடன் சொல்லிக் கொண்டான் — அவள் யாராய் இருந்தால் என்ன? மனத்திற்கு உகந்தவள்! அந்த மனத்துக்கு உகந்தவள் பொருட்டே அவன் அந்த நடுப்பாதையில் நின்று கொண்டிருக்கிறன். இந்த நடுவாந்திரத்திலேயே இல்லம் அமைத்துக்கொண்டால்தான் என்ன? அதே திசையை நோக்கியபடி நின்றன். சட்டென அவள் திரும்பி வருவதுபோன்ற மருள் கொள்வான். இப்படி இந்த நினைவுகளின் ஓட்டம் அவன் மனத்துள் அழகிய சொற்களாக எழுந்து அமுதகீத வலையைப் பின்னியது—

[1] ஓ ஆமார் மனேர் மானுஷ கோ!
தோமார் லாகி பத்தேர் தாரே பாந்த்லாம் கர்!
சட்டாய் சட்டாய் ஜிகிமிகி தோமார் நிஷாஞ,
ஆமாய் ஹெதா டானே நிரந்தர்—

அதையே அவன் செய்வான். வழியோரத்தில் இல்லம் எழுப்பி அதன் வாசலில் அமர்ந்து, அவள் வரும் வழியை நோக்கி இருப்பான்!

---

[1] என் மனத்துக்கு ஏற்றவளே! உனக்காக வழியோரத்தில் அமைத்தேன் இல்ல மதை. பட்டொளி வீசிப் பறக்குது உன் கொடி; உன்பால் என்னை அது என்றும் இழுக்கிறது!

வீட்டிலிருந்து அவள் தலையில் கலயத்துடன் வருவாள்...வெயிலின் ஒளிபட்டு அது மின்னும்... அதன் கதிர் ஒன்று அவன் கண்ணுள் தோயும். பாட்டைச் சுவரத்தில் அமைத்தான்—

'ஓ ஆமார் மனேர் மானுஷ கோ !'

8

பாதையோரத்தில் சொந்த வீட்டிற்குப் பதிலாக கூலிகள் வாழும் விடுதியிலேயே நிதாயி பகற்கனவு காணத் தொடங்கினான். அவன் பாட்டுப்பாடி, பணம் சம்பாதித்து விட்டான். சிஷ்டிதர் கவிவாலாவே அவனுடைய திறமையைக் கண்டு மலைத்துவிட்டாரே ! அவனுக்கு அப்புறம் என்ன கவலை !

ரெயில் சத்தம் உள்பட நிதாயிக்குக் கிடைத்தது ஆறு ரூபாய். ஆனால் ரெயில் சத்தம் அவனுக்கு மிச்சப்பட்டது. இந்தக் கிளை ரெயில் லைனில், நிதாயி எத்தனையோ நாளாய், கூலியாக வேலை செய்கிறான். 'கார்ட்', 'எஞ்சின் டிரைவர்', 'செக்கர்' யாவரும் அவனை நன்கு அறிவார்கள். ராஜாவினாலேயே அவனுக்கு அத்தனை ஆட்களும் நல்ல பரிசயம். இதனாலேயே டிக்கட்டுக்கு அவன் காசைக் கரைக்கவில்லை. வந்த ஆறு ரூபாயையும் பத்திரப்படுத்தினான். ஜோடு பதினாலு அணா—மேல் அங்கவஸ்திரம் பன்னிரண்டு அணா—வத்திப்பெட்டி பீடி வகையறா ஒரு நாலணா—எல்லாமாக இரண்டு ரூபாய்க்குள்ளேயே அடங்கிவிட்டன. கையில் மிகுந்த நாலு ரூபாயுடன் திரும்பினான். இன்னும் இரண்டு மூன்று இடங்களில் பாட அவனுக்கு வாய்ப்பு வருமென்ற நம்பிக்கை இருந்தது. நிதாயின் எண்ணம், இப்படி நாலு இடங்களில் தன் பாட்டை ஜனங்கள் கேட்டால் தன்னுடைய புகழ் பரவுமென்று.

'புதுசாக ஒரு பையன், மகாதேவ் கவிவாலாவுக்குப் பின்பாட்டுப் பாடினானே, பார்த்தாயா ?'

'ஆமாம் ! ஆமாம் ! ரொம்ப நன்றாகப் பாடுகிறான்... இனிமையான குரல் !'

'உஹூம், அது மாத்திரமில்லை. பாட்டும் நன்ருகக் கட்டுகிருன். இந்தத் தடவை மகாதேவின் மானத்தைக் காப்பாற்றியவன் அவன் தானே. மகாதேவே அசைந்து போய்விட்டான்! அந்தப் பாட்டு—அதுதான்—காலோ ஜதி மந்த தபே கேச பாகிலே காந்தோ கேநோ—அது ஒன்றே போதுமே... சபையே ஜல்லென்ருகிவிட்டது. பதில் சொல்லப்பா—கருமை நிறம் குறைவென்ருல் கருங்குழலிக்கு அத்தனை கர்வம் ஏன்? அத்தனைக் காதல் ஏன்? அது நரைந்துவிட்டால் உள்ளம் நைவதேன்?'

'என்ன? அந்த வெடவெட என்று இருக்கும் பிள்ளையா இந்தப் பாட்டைக் கட்டினுன்?'

'ஆமாம்'

'சரி, நம் ஊர் மேளாவுக்கு இவனையே வைக்கலாம்'

—இப்படி நிதாயி தன்னைப்பற்றிய பெருமையை ஒரு கற்பனைச் சித்திரமாக எழுப்பிக் கொண்டான். மகாதேவ் மண்டல் எட்டு ரூபாய் வாங்குகிருன்; சிஷ்டிதரன் பத்து ரூபாய்; ஐந்து ரூபாய்க்கு நிதாயி ஒப்புக்கொள்வான். ஏன், நாலு ரூபாய் கொடுத்தாலும் போதும். இப்போது ஒரு டோலக் வாசிப்பவன் வேண்டுமே? ராஜாவின் மகனை ஜாலரா போட வைத்துக்கொள்ளலாம். இந்தத் தடவை இன்னும் நேர்த்தியான பாட்டைக் கட்டியிருக்கிருன்—அதற்கு ஏற்ற மெட்டும் அமைந்துவிட்டது—'என் மனத்திற்கு உகந்த மடவரலே—உன் பொருட்டே பாதையோரம் வீடு அமைத்தேன்; உன் கொடி என் கண்முன் பட்டொளி வீசிப் பறக்கிறது; அது என்னை உன் பக்கம் இழுக்கிறது'—இந்தப் பாட்டின் கருத்திலேயே அவன் மூழ்கிவிடுவான். ஒரு நல்ல வாய்ப்புக் கிட்டவேண்டியது தான்...சங்கடமெல்லாம் இங்கேதானே. பாட்டைப் பரவச் செய்ய வாய்ப்புக் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறது. இருந்தாலும் அவன் நம்பிக்கை இழக்கவில்லை. இந்த மேளா விழாக்களை நடத்துபவர்களுக்கென்ற தனித் தோற்றம் ஒன்று உண்டு. நிதாயி இத்தோற்றம் உடையவர்களைத்தான் தேடித் திரிவான். இன்னும் பன்னிரண்டு மணி டிரெயின் வரவில்லை. ஏனென்ருல், அதே சமயம் மைத்துனியும் வருவது வழக்கம்.

சில மாதங்களுக்குப் பிறகு. நள்ளிரவு. நிதாயி தூக்கமின்றி உட்கார்ந்திருந்தான். அவன் எண்ணமிட்டான்.

அன்று அவன் கையில் மிச்சமாக இருந்தது ஒரு நாலணு காசே தான். திடுமென அவன் மனம் இடிந்துபோகத் தொடங்கியது. இந்த நாலணு எத்தனை நாளுக்குப் போதும். ஓரிரண்டு தினங்கள்

சமாளித்துவிடலாம். அப்புறம்? மறுபடியும் மூட்டை தூக்க வேண்டியதுதானு?

இராவிட்டால்? பட்டினி... இப்படி ஒருவன் எத்தனை நாள் ஓட்ட முடியும்?

இந்தப் பக்கம் அந்தப் பெண்ணுக்கு பால் பாக்கி வேறு நிற்கிறது. பத்து நாட்களுக்கு முன் அவன் பழைய பாக்கியைத் தீர்த்து விட்டான். இப்போது பத்து நாளாக வாங்கும் பாலுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு முடிவுக்கு வந்தான்—இன்றே பிடித்து இந்தப் பாலையும் நிறுத்திவிட வேண்டும்.

மறுநாள் பகற்பொழுது. ரெயில் தண்டவாளம் தொலைவில் இணைவதுபோல் தோன்றும் தொலைவில் அவன் கண் நிலைத்தது. இன்றே கடைசி, அவன் இப்படி நிற்கப்போவது. 'என் மனத்திற்கு உகந்த மடவரலே'—என்ற பாட்டு இன்னும் பூர்த்தியாகவில்லை. அது ஆகப்போவதுமில்லை. இன்றுடன் அதையெல்லாம் மறந்துவிட வேண்டும்; இனிமேல் பாடக்கூடாது—இப்படி அவன் நினைவு ஓடும் போது தொலைவில் தலைமீது பித்தளைக் குடமும், வெளேரென்ற சேலையுடனும் அந்த இளம் மைத்துனி வந்துகொண்டிருந்தாள்.

அவள் நெருங்கிவிட்டாள். அவளைப் பார்த்து நிதாயி முறுவல் செய்தான்.

'இப்படி எனக்காக நீ நின்றுகொண்டிருக்கக் கூடாது. யாராவது என்னமாவது கதை திரித்துவிடுவார்கள், நம் இருவரையும் சேர்த்து' என்முள் அவள்.

பெருமூச்செறிந்து நிதாயி, 'என்ன கதை வேண்டுமானுலும் திரிக் கட்டும். நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லத்தான் இங்கு நின்று காத்துக்கொண்டிருக்கிறேன்' என்முன்.

நிதாயி இப்போதெல்லாம் சேரி மொழியைவிட்டுத் திருத்தமாகவே பேசக் கற்றுக்கொண்டுவிட்டான். ல காரத்தில் முடியவேண்டிய சொற்களை ந காரமாக உச்சரிப்பதில்லை.[1] ராஜா, இந்த மைத்துனி இருவரும் அவன் திருந்திய மொழியில் பேசுவதைக் கேட்டு ரசிப்பவர்கள்.

நிதாயி என்ன சொல்லப் போகிருனென்று அவள் அவனையே நோக்கினுள். விஷயம் என்னவோ? திடுமென அந்தப் பெண்ணின் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. உஸ்தாத் என்ன சொல்லப் போகிருரோ?

---

[1] திருந்தாத வங்கமொழி பேசும் சில நாட்டுபுறத்தவர் 'ல' என்ற உச்சரிப்புக்குப் பதிலாக 'ந' என்றே உச்சரிப்பர். 'லுசி'ஐ 'நுசி' என்றும், 'லங்கா' என்பதை 'நங்கா' என்றும், 'லோக்' என்பதை 'நோக்' என்றும் உச்சரிப்பர்.

'ரொம்ப நாளாக சொல்ல வேண்டுமென்று இருக்கிறேன் ஒரு விஷயத்தை... ஆனால்...' என்று நிறுத்தினான் நிதாயி. மீண்டும் தொடர்ந்து, 'மச்சி, எனக்குப் பால் தேவை இல்லை' என்றான்.

சட்டென அவளுடைய முகம் என்னவோபோல் ஆகிவிட்டது. இப்படி நடக்குமென்று அவள் நினைக்கவே இல்லை! அவள் முகத்தி லிருந்த மதர்வு கணப்பொழுதில் மாறிவிட்டது. மழை நீரால் கவித்த தளிரெனத் தோன்றும் அவள் முகம் பனிக்காலத்துப் பழுப்பிலை யின் வண்ணத்தைக் கொண்டது. அவள், தன்னை அறியாமலேயே மெல்ல மெல்ல நிதாயிடம் இதயத்தைப் பறிகொடுத்து வருகிறாள். என்ன சொல்வதென்று புரியாமல், பேச்சற்று அவள் நிதாயியையே நோக்கினாள். வெகுநேரம் இப்படிச் சென்ற பிறகுதான் அவளுக்குப் பேச உணர்வு வந்தது. குரலில் அழுகையின் குலைப்புடன், ஏங்குவது போலவே அவள், 'பால் வேண்டாமா இனிமேல்?' என்றாள்.

'வேண்டாம்'

'ஏன்? நான் என்ன தப்பு செய்தேன்?' என்றதும் அவள் இரு விழிகளிலும் நீர் நிரம்பித் தளும்பியது.

நிதாயி சிலகணம் கம்மென்று இருந்தான். அவளுக்குப் பதில் சொல்லவே அவனுக்குச் சக்தியில்லை. தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, 'பொய் சொல்வது மகாபாபம்... அதுவும் உன்னிடம் பொய் சொன்னால், நான் நரகத்துக்குத்தான் போவேன். உன் பாலை வாங்கிக்கொள்ள எனக்குக் காசு இல்லை...மச்சி, உன்னிடம் விட்டுச் சொல்கிறேன்' என்றான்.

அப்புறம் ஒரு நெடுமூச்சுவிட்டு அவன், 'தரித்திரம் பிடுங்கித் தின்னும் மக்களின் பாடகனாக இருப்பது வெட்கக்கேடான விஷயம் மச்சி' என்றான்.

உள்ளம் நெகிழ அந்த இளையவள், 'நீ எனக்குக் காசே தர வேண்டியதில்லை உஸ்தாத்' என்றதும், அடக்க முடியாத ஆர்வத் துடன் அவள் நிதாயின் கை இரண்டையும் அழுத்திப் பிடித்தாள்.

நிதாயி அவளையே கண் இமைக்காமல் நோக்கிச் சில நேரம் நின்றான். அப்புறமே அவன் பேசலானான்—'இது தெரிந்ததோ உன் புருஷன் உன்னைப் பிளந்து கட்டிவிடுவான். உன் மாமி வைது தீர்த்துவிடுவாள்... உன் நாத்தூண் ஊரெங்கிலும் உன்னைப் பற்றித் தூற்றுவாள்...'

இதற்கு அவள், 'ஒன்றும் நடக்காது. உஸ்தாத், எனக்கே சொந்தமான பசு ஒன்று இருக்கு. என் அப்பா வீட்டிலிருந்து ஓட்டி வந்தது. அந்தப் பசும்பாலை உனக்குத் தருகிறேன். அவர்கள் எதற்கு?' என்றாள்.

நிதாயி கம்மென்று இதைக் கேட்டுக்கொண்டிருந்தான். 'பாலை வாங்கிக்கொள்... உஸ்தாத்' என்று சொல்லுகையில் அவள் குரல் தழுதழுத்தது. நிதாயி அவளையே பார்த்தான் உருக்கமாக. நீரோடு அலமுற்றன, அவளுடைய பெரிய கண்கள்.

அவளுக்கு ஆறுதலாக இருக்குமென்று நிதாயி மெல்லச் சிரித்தான். அப்போதுதான் அவள் முகத்தில் சிரிப்பு தோன்றிக் களைகட்டியது. நிதாயி சிரித்ததால், அவன் இதற்குச் சம்மதித்துவிட்டானென்று அவள் புளகமுற்றாள். இந்த உணர்ச்சியில் அவள் சரசரவென்று மெல்லடி வைத்து நிதாயியைக் கடந்து அவன் விடுதியின் வாயிற் கதவைத் திறந்தாள். அவளுக்கு வீட்டு வேலையெல்லாம் நன்றாக வரும். பால் வைக்கும் குவளையை எடுத்து அதில் பாலை ஊற்றி யானதும் வேகமாகப் பாலை விற்கக் கிராமத்தை நோக்கி நடந்து சென்றாள்.

நிதாயி பின்னாலிருந்து அவளைக் கூப்பிட்டான்—

'மச்சீ!'

அவளுக்கு ஒழிவே இல்லை; எத்தனையோ வேலை! பின்னும் வேக மாகவே நடந்து சென்றாள்.

அப்போது போய்விட்டாளே தவிர, திரும்பி வந்ததும் அவள் நிதாயின் விடுதிக்கு வந்து வாசல்படியில் அமர்ந்து, கால்களை ஆட்டிக்கொண்டே, 'சா கொடு... அந்தப் புதுக் கோப்பையிலே கொடு' என்றாள்.

சா ஊற்றிய கோப்பையை அவளிடம் தந்து நிதாயி, 'மச்சி, ஒரு சமாசாரம் கேட்கிறாயா?' என்றான்.

தேநீரை மெல்ல உறிஞ்சியவண்ணம் அவள், 'சொல்லு' என்றாள்.

'காசு வாங்கிக் கொள்ளாமல் எதற்காகப் பால் தரவேண்டும் மச்சி?'

அவள் நிலைத்த நோக்குடன் அவனையே பார்த்தாள்.

மீண்டும் நிதாயி—'சொல்லு மச்சி, ஏன் தரவேண்டும்?' என்றான்.

'என் இஷ்டம்'

நிதாயினால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. 'உன் இஷ்டமா?' என்றான்.

'ஆமாம் எனக்கு ஆசை... கொடுக்கிறேன்' என்றதும் அவள் நிமிர்ந்து அவனையே கண் கொட்டாமல் பார்த்ததும் சிரித்துவிட்டாள். 'நீ கவிவாலா... நல்ல பாடகன்... பெரிய ஆள்!' என்றாள்.

சா குடித்தானதும் அந்தக் கோப்பையைக் கழுவி வைக்கும் சாக்கில் வெளியே சென்றாள். திருப்புகையில் நிதாயி அதே மாதிரி

முகத்தில் சிரிப்பு வழிய நின்று கொண்டிருந்தான். அவன் கையில் நன்ருக அலர்ந்த இரு கிருஷ்ணகூடா பூக்கள். அந்தச் செந்நிற மலர்களை அவளிடம் நீட்டி, 'வைத்துக்கொள்... கவிவாலா உனக்குத் தரும் மலர்க்காணிக்கை' என்ருன்.

அந்த இளமைக்காரி நாணம் மேலிட முகத்தைக் கவித்து, 'வேண்டாம்' என்ருள்.

'அப்படியாளுல் நானும் பாலே வாங்கிக் கொள்ளமாட்டேன்'

இப்படி மறுத்தாளே தவிர, மென்மையாக அம்மலர்களைக் அவன் கையிலிருந்து பற்றிக்கொண்டு ஓட்டம் பிடித்தாள்.

நிதாயி புதிய பாட்டொன்றைக் கட்ட அமர்ந்தான். இன்று, புதுக் கருத்து ஒன்று சுரந்துகொண்டிருந்தது அவன் மனத்துள். 'என் மனத்திற்கு உகந்த மடவரலே'—என்ற பாட்டுக்கு இன்னும் இரண்டு சரணங்கள் தேவை. சற்றுமுன் அவன் பாட்டிற்கே முழுக்குப் போடுவதென்று உறுதி கொண்டான். ஆனுல் விதி அவனை விட வில்லை. அந்தப் பாட்டின் மிகுதிப் பகுதியை அவன் பூர்த்திசெய்ய வேண்டியிருக்கிறதே...அருமையான பாட்டு!—சட்டாய் சட்டாய் ஜிகிமிகி தோமார் நிஷாரு—என்ற அடியை மெல்லப் பாடிக் கொண்டே எரியும் அடுப்பில் ஒரு விறகுத் துண்டைச் செருகிஞன். ஸ்டேஷனில் வண்டியும் போய்விட்டது. வேலையை முடித்துக் கொண்டு ராஜாவும் திரும்புகிற நேரமாயிற்று. அவன் தேயிலை, சீனி எல்லாம் எடுத்து வருவான்... மறுபடியும் சா அருந்தலாம்...புதிய உவப்பினுல் சரணம் குமிழ்த்து வந்தது அவனுக்கு. மிக நன்ருக அமைந்துவிட்டது. ஊறல் எழுந்தது. ஆகா... நா நுனியில் வந்து விட்டது அந்தச் சொற்கள்—

[1] ஸேஇ சட்டாதே கர் புடிலோ பத கரிலாம் ஸார்'

அதைத்தானே அவனும் விரும்பினுன். அப்புறமென்ன? இந்தப் பாதையின் நாற்புறமும் குழலோசை கேட்கிறது. இந்த நடுப்பாதை யில் நிற்பதனுல் ஒரு கஷ்டமும் ஏற்படவில்லை, ஒரு துயரமும் தெரிய வில்லை.

[2] 'சார்திகே சார் ப்ருந்தாவநே வம்சீ பாஜே கார்?'

---

[1] அந்தப் பகட்டொளியில் என் வீடு எரிந்து போயிற்று. வழிதான் எனக்கு இனி இடம்.

[2] நாற்புறமும் நாலு பிருந்தாவனத்திலும் யார் அவன், வேய்ங்குழல் ஊது கின்ருன்?

வேறு யாருடைய வேய்ங்குழல்? அந்த விருந்தையின் ஆம்பலந் தீங் குழல்தான்! அந்த வேயிசை நித்யகாலமும் வந்துகொண்டு தானிருக்கிறது. உண்மைக் காதல் உண்டானால்தான் அது செவி யில் விழும். இன்றேல் விழாது! அவனுடைய செவிக்கு அந்த இசை கேட்கிறது!

அன்று அவன் தெளிவாக உணர்ந்தான். இளம் மைத்துனி மீது அவனுக்கு ஆருக் காதல். அவளும் அவனைக் காதலிக்கிருள்.

தனக்குத்தானே பாட்டுக்கு ஆக்கர்களைச்[1] சேர்த்துப் பாட லானுன்—

வம்சீ பாஜே தார் |
ஓ ராதா ராதா ராதா பலே— |

அப்புறம்? அதற்கப்புறம்? ஆகா—! அந்த வேயிசை...இல்லை இல்லை...ஆமாம். ஆமாம்—

[2] கர் ஜ்வலிலோ—மன ஹாராலோ சட்டாய் ஸுரே கோ!
ஸுகேர் ஏகி ஆகுல ஆதாந்தர்!

அவாந்தரந்தான்...இது ஓர் அவலமே!

திடுமென அவன் பாட்டு நின்றுவிட்டது. ஏதோ ஒன்று நினைவுக்கு வரவே அவன் பாடுவதை நிறுத்தினான். அவனுக்குச் சிலிர்த்தியது- இந்த மைத்துனி வேறு வகுப்பைச் சேர்ந்தவள்; அத்துடன் அவள் ஒருத்தனுடைய மனைவி. இப்படி அவள் மீது ஆசைப் படுவது மகாபாபமாகும்...பெருத்த அவாந்தரம்! வெகுநேரம் நிதாயி கம்மெனக் கிடந்தான். தனிமையில் அடிக்கடித் தன் மன மெனும் மத்தவேழத்தை அங்குசத்தால் அடக்கத் தலைப்பட்டான். நடு நடுவே அவனுக்கு உடல் சிலிர்த்திட்டது. அவனுடைய மனம் எந்த அடக்குமுறைக்கும் பணிந்து போகவில்லை. வெட்கம் கெட்டு அலைந்தது; அதற்குத் துளியாகிலும் உறைக்கவில்லை. மாருக அது துள்ளத் தொடங்கியது; ஆறுதலையே அடைந்தது. அவன் இருக்கும் அறையில் ஒவ்வொரு பொருளிலும் அந்த இளமழகியின் முகமே தெரிந்தது. அந்த அறையின் இருளிடையே, அவள் வெளுப்புச் சேலையணிந்து நின்று அவனுடைய உள்ளத்துச் செய்திகளை அறிந்து

[1] அக்ஷரங்கள்—புதிய பதங்கள். அவன் குழலிசை கேட்கிறது—'ஓ ராதா... ராதா' என்றே அது அழைக்கிறது!

[2] வீடு எரிந்து போயிற்று. என் மனம் பாட்டிலே தொலைந்து போயிற்று. இன்பத்திடையே இதென்ன அவலம்...ஆகுலம்?

போக நிற்பது போலவே தோன்றியது. நிதாயி பரபரப்புற்ருன். சட்டென எழுந்து அறைச் சாளரங்களை நன்ருகத் திறந்து விட்டான். அவனுடைய கண்ணேக்கு, தொலேவில் ரெயில் தண்டவாளங்கள் சேரும் முனேக்குத் தாவியது. அங்கே, ஒரு பொன்னிறப் புள்ளி நிரந்தரமாக ஒளிர்வதுபோல் அவனுக்குப் பட்டது. அது அசைய வில்லை... நகரவில்லை...முன்னேக்கி வரவுமில்லை...பெயர்ந்து மறையவு மில்லை. அந்த இளேயவள் தன் வீட்டை விட்டகன்றதும் அங்கேயே நின்றுவிட்டது போலவே தோன்றியது. ஜன்னலேத் திறந்துவிட்ட தனல் அவள் புலந்து, போகும் பாதையில் சட்டெனத் திரும்பி, கவிவாலா தன்னை அழைக்கிருனு என்று கவனிக்க அங்கேயே நிலை கொண்டுவிட்டது போன்ற ஒரு மருள்!

நிதாயின் இதயத்தை என்னவோ ஒன்று உளேக்கத் தொடங்கியது. அவன் வெளியே வந்து அந்த கிருஷ்ணசூடா மரத்தின்கீழ் உட்கார்ந்தான். மரக்கிளேயெங்கும் குருதிநிறப் பூக்கள். பொடிப் பொடியாக இருக்கும் பச்சைத் தளிர்களுக்கிடையே செங்கனல் இணர்கள். இப்படி ஒரு கண்கொள்ளாக் காட்சியை அவன் பார்த்திருப்பதாக ஞாபகம் இல்லை. எதிர்ப்புறமாக ரெயில் பாதைக்கு அப்பால் காட்டு அவுச்சின்[1] குறும் புதர்கள். அதன் பூமணம் காற்றில் நெடிபோல் கலந்து இருந்தது. கடம்ப மரத்தில் இளம் தளிர் தலைக்காட்டியது. மழைக் காலம் நெருங்கியதும் அம்மலர்கள் மெல்லச் சிரிக்கும். பாபுக்களின் மாஞ்சோலைகளில் குயில்கள் எதிர்க் குரல் பயிற்றும் இன்னெலி. ஒரு வண்ணாத்திக் குருவி[2], 'சிக் விசிக்' என்று கூவிக்கொண்டே சண்டிதேவி ஆலயத்தை நோக்கிப் பறந்து போயிற்று. மதுகுலகுலி பறவைக் கூட்டம் ஒன்று கலகலவென்று ஆரவாரித்தது. சிவப்புக் கீற்றும் கருநிறமும் கலந்த வண்ணத்துப் பூச்சிகள் இறகு விரித்து நொவ்விதாக் கிருஷ்ணசூடா மலரிணர்கள் மீது வட்டமிட்டன.

அவள் வேகமாக இந்தப் பக்கமாக வந்துகொண்டிருக்கிருள். நிதாயின் உடற்கூறுகள் அவனுடைய வசத்தில் இல்லை. கண்ணை மூடியபடி அமர்ந்திருந்தான். மனத்துள்ளேயே—'வா, இனியவளே வா... கருமா மேனியளே வா... உன் உள்ளத்தின் ரகசியத்தை நான் அறிந்தேன்... நீ வா. நான் செய்வது பாபமாயினும், அதனல் நரகத்துக்கே நான் போவதாயிருந்தாலும் நான் சிரித்த முகமாகவே

---

[1] டிபிடிபி மரம்.

[2] எப்போதும் வாலை அசைத்துக்கொண்டேயிருக்கும் வண்ணாத்திக் குருவி. கண்ணசைவை இது நினைப்பூட்டும்.

செல்வேன். ஆனுல் என் அழைப்பை நீ அசட்டை செய்யாதே... ஆருயிரே, நீ என் அருகில் வா...' என்று கூவியழைத்தான். ஆனுல் அவனுல் இது ஆகுமா? வாய் திறந்து—வா... நீ வந்துவிடு—என்று அவளை அழைக்க உரம் உண்டா அவனுக்கு?

காணக்கூடாத நாலாம் பிறைமதியின் ஞாபகம் வந்தது அவனுக்கு. புரட்டாசி, ஐப்பசி (பாத்ர) மாதங்களில் இருட்டுக்கத்து அல்லது ஒளிப்பக்கத்து நாலாம் பிறையைப் பார்ப்பது கூடாதாம். ஆனுல் நிதாயி இதையெல்லாம் நம்பாதவன். மீண்டும் அவன் மனத்துள் பாட்டெழுந்தது. தானுகவே ஓர் அடி அவனுடைய நாவில் வந்தது—

[1] சாந்த் தேக்கே கலங்க ஹபே பலே
கே தேகே நா சாந்த்?
தார் சேயே சோக் ஜாவ்வா பாலோ
குசுக் ஆமார் தேக்கார் ஸாத்
ஓகோ சாந்த், தோமார் நாகி—'

ஓஹோ... பாட்டு மடைவிண்டாற்போல் பெருகி வருகிறதே!

[2] 'ஓகோ சாந்த் தோமார் நாகி
நா ஹய் ஆமி ஹபோ பைராகி,
பத சலிபோ ராத்ரி ஜாகி
ஸாத்பே நா கேஉ ஆர் தோ பாத்'

ஐயோ... ஐயோ என்ன சொகுசான பாட்டு! ஓ மச்சீ, கருமா மணியே! என்ன பாக்கியம் நீ வந்தாய்... இந்தக் கவியின்மேல் காதல் கொண்டாய். அதனுல்தான்...அதனுல்தான் இப்படிப் பாட்டு குபு குபுவென்று வந்து விழுகிறது!

நிதாயி எழுந்தான். அவன் ரெயில் லைன் ஓரமாகவே நடந்து அந்தக் கார் அழகி வரும் வழியே சென்றுன். சற்றுத் தொலைவு சென்றதும், தனிமை வரவே அவன் அந்தப் பாட்டை எடுத்தான்.

---

[1] சந்திரனைப் பார்த்தால் மாசு வருமென்று எவர் சந்திரனைப் பாராமல் இருக்கிறுர்கள்? அதைவிட என் கண் அவிவதே மேல். காண வேண்டுமென்ற என் ஆசையும் அவியட்டும். ஏ சந்திரனே, உனக்காக—

[2] ஓ சந்திரனே, உனக்காக நான் துறவியாகப் போகிறேன். இரவெல்லாம் கண்விழித்து வழி நடப்பேன். அதற்குமேல் எவரும் ஒன்றும் சொல்ல முடியாது.

ஆற்றங்கரையிலிருந்து ரெயில் பாலம் தொடங்குகிறது. அந்த மேடான பகுதியிலிருந்து நிதாயி ஆற்றுத் துறையில் இறங்கினன். ஆற்றிலும் அவ்வளவாக நீர் ஓடவில்லை; முழங்கால் அளவே இருந்தது. ஆற்றைக் கடந்தே இக்கரைக்கு அவள் அன்ருடம் வருகிருள். நிதாயி ஆற்றுத் துறையிலேயே நின்ருன்.

நிதாயி தன் வசத்தில் இல்லை; நடக்கலானன். இடது கையைத் தாடைப் பக்கம் வைத்து, வலது கைவிரல்களால் சிட்டிக்கைப் போட்டுக்கொண்டே, அந்த இனியவள்—மைத்துனியைக் குறித்துப் பாடிக்கொண்டே சென்ருன். அவன் நேராக அவளுடைய மாமஞர் வீட்டிற்கே சென்றுவிடுவான் போலிருந்தது. ஆற்றுத் துறையில் காலை வைத்ததும் சட்டென அவனுக்குத் தன் நினைவு வந்தது—'எங்கே போய்க் கொண்டிருக்கிறேம்? என்ன செய்கிறேம்? அந்த மைத்துனியின் வீட்டை அடைந்து—மச்சி, இந்தத் தண்ணிலா யார் தெரியுமா? நான் வானம், நீ அதனுள் விரியும் நிலவு—என்று பேசினல் அவளுக்கு என்ன நேரிடும்? அவள் கணவன் என்ன செய்வான்? அவளுடைய மாமியும், நாத்தூனும் என்ன பேசுவார்கள்? அக்கம் பக்கத்தவர்கள் கூடிவிட மாட்டார்களா? எல்லோருடைய திட்டு வசவுகளுக்கு இலக்காவாள்'—இப்படி அவன் மனத்திரையில் அந்த இளையவளைப் பற்றிய காட்சி எழுந்தது. 'பாவம், திசைகெட்டுப் போனவள்போல் அவர்களிடையே அழுது புலம்பிக் கொண்டிருப்பாள்...அவளைப் பற்றி இல்லாததும் பொல்லா ததும் அவ்வூரெங்கிலும் அலர் எழுந்துவிடும்...அப்புறம் அவளால் தலையே தூக்க முடியாது. அவளையே சுட்டி, அதோ போகிருள் பார், குடிகோலி, பட்டி என்றெல்லாம் ஏசிப் பேசுவார்கள். யோக்கியதை இல்லாதவர்கள் தான், உதவாக்கறைகள் தான் இந்தக் கபடற்றப் பெண்ணை அலக்கழிப்பார்கள். இவளைத் தலைமேல் வைத்துக்கொண்டு வேறு எங்கேயாவது போய்விட்டால் என்ன? அப்பொழுதும் உலகம் பேசும்—கெட்ட நடத்தை உடையவள், நிதாயுடன் ஓடிப் போய்விட்டாள் — என்றெல்லாம். போகிற இடத்தில் அவளைப் பற்றிய புகார் இருக்கும்... அவளால் தலையைத் தூக்கவே முடியாது'—இத்தனையும் அவனுக்கு மூண்ட சிந்தனைகள். நிதாயி ஆற்றுத் துறையில் அமர்ந்தபடி எண்ணமிட்டான். தனக் குள்ளேயே சொல்லிக்கொண்டான்—'நீ என் வானிலே மகிழ்விரிக்குர் வெண்ணிலா...நீ என் உள்ளத்திலேயே பத்திரமாக இரு...'

இன்று நிதாயிக்கு என்ன? மீண்டும் அவனுக்குப் பாட்டு குமிழ்த் தெழுந்தது—

[1] சாந்த் துமி ஆகாசே தாக்கோ—
ஆமி தோமாய் தேக்போ காலி
சூந்தே தோமார் சாஇநாகோ ஹேற
ஸோனுர் அங்கே லாக்போ காலி

நிதாயி இந்த அடிகளைப் பாடிப் பாடிப் பார்த்துக்கொண்டே தன்னிடத்திற்குத் திரும்பினுன்.

ராஜா அவன் வருவதைப் பார்த்து, 'கஹாங் கியா ரஹா, உஸ்தாத் (எங்கே போயிருந்தாய் உஸ்தாத்)' என்ருன்.

நிதாயி சிரித்தவாறு, 'பாட்டு...ராஜா பாட்டு...இன்று எனக்கு நல்ல பாட்டு தன் பாட்டிற்கு வருகிறது...அதை மெல்லப் பாடியபடி ஆற்றங்கரை வரைக்கும் சுற்றிவிட்டு வருகிறேன்'

'ஆங் ! நல்ல பாட்டா ?'

'ஆமாம் ராஜா, ரொம்ப உயர்வகையான பாட்டு...'

'குந்து இப்படி....நான் டோலக்கை எடுத்து வர்றேன்...' என்றதும் ராஜா டோலக்கை எடுத்து வந்தான்.

நிதாயி தன்மயமாகப் பாடலானுன்—'சாந்த துமி ஆகாசே தாக்கோ—'

திடுமென டோலக் அடிப்பதை நிறுத்தி ராஜா, 'உஸ்தாத், உன் கண்ணிலிருந்து இப்படி ஏன் நீர் ஊற்றுகிறது ?' என்று கேட்டான்.

கண்களைத் துடைத்துக்கொண்டு நிதாயி, 'ஆம் ராஜா, கண்ணீர் வந்துவிட்டது. என்ன செய்வது ? எவ்வளவு அடக்கினுலும் அது நிற்கவில்லையே...' என்ருன்.

மறுநாள் நிதாயி விடிநேரத்திலேயே அந்த கிருஷ்ணசூடா மரத்தடிக்குப் போய்விட்டான். அன்று காலைப் பொழுதிலிருந்தே அவன் மனத்துள் ஓர் நிறைவு வந்துவிட்டதை உணர்ந்தான். வேதனையோ விருப்போ எதுவுமில்லை; தான் ஒரு துறவியாகி விட்டதுபோன்ற ஓர் அமைதி.

முன்னுள் பகல் இரவு எல்லாம் எத்தனையோ சிந்தனைகள் அவனுக்கு. மாலைப்பொழுது ராஜாவின் வீட்டுக்குச் சென்றிருந்தான். ராஜாவின் மனைவி வாய் துடுக்கானவள். நிதாயிக்குத் தன் கணவன் பல வழிகளில் உதவி புரிவது, அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனுல் நிதாயிமீது அவளுக்கு ஓர் எரிச்சல். இத்தனை இருந்தும் அவன் சென்றிருந்தான். ராஜாவுக்கு அவனைக் கண்டதும் ஒரே

[1] சந்திரனே, நீ வானத்திலேயே இரு; உன்னையே நான் காண்பேன் என்றும். உன்னைத் தொடேன் ஒரு நாளும். உன் பொன்னுன மேனி என்னுல் கருமை கொள்ளாது (நான் தீண்டி மாசுருது).

குஷி. துவேஷங்கொண்டிருந்த அவன் சம்சாரம் இன்முகத்துடன் வரவேற்ருள். அவள் முசுக்கு மறைவிலிருந்தபடியே, 'நல்ல காலம் இத்தனை நாளுக்கப்புறம் உஸ்தாதுக்கு இங்கே வர வழி தெரிந்ததே' என்ருள்.

நிதாயி அவளிடமிருந்து சாமார்த்தியமாக, அந்த மைத்துனியைப் பற்றிய எல்லா சமாசாரத்தையும் தெரிந்து தொண்டான்.

அவளுடைய கணவன் பார்ப்பதற்கு அத்தனைச் சுந்தர புருஷனும்!

—'நல்ல சிவப்பு மேனி உஸ்தாத்; அங்கங்களும் அதற்கேற்பச் சிலைபோல் இருக்கும்... நல்ல தன்மை...இணைபிரியாத ஆசை தம்பதிகளுக்கு...புரிந்ததா!' என்றதும் அவள் தொடர்ந்து, 'குடும்ப நிலைக்கென்ன, அதுவும் நன்ருகவே இருந்தது. எந்த விதமான குறைவுமில்லை. சிரமமே அறியாதவர்கள் எல்பார்களே அதுபோல. ஏழெட்டு பசுமாடுகள்... நல்ல சாதி எருது இரண்டு...வாரத்துக்கு உழுது பயிர் செய்யும் வேலை. உங்களைப்போல் நாலுபேருடைய ஆசீர்வாதத்தாலே நல்லபடி சம்சாரம் நடந்தது...' என்ருள்.

நிதாயி அச்சமயம், 'ஆகா, எங்கள் நல்வாழ்த்துக்கள் அவளுக்கு உண்டு மகாராணி' என்ருன்.

ராஜாவின் சம்சாரம் ஒரு விந்தையான பேர்வழி. இதுவரைச் சாந்தமாகப் பேசியவள், மகாராணி என்று தன்னை விளித்தபோது கோபம் சுருசுருவென்று எழுந்தது. 'அந்த மாதிரி என்னைச் சொன்னல் எனக்குப் பொறுக்காது சொன்னேன். மகாராணி... ரொம்ப கண்டுவிட்டாய் மகாராணிகளை...அதைவிட மேதராணி (குப்பைக்காரி) சாகராணி (வேலைக்காரி) என்ருல் எத்தனையோ மேலாக இருக்கும். சே, இந்த வீட்டைச் சொல்லு,... இந்தக் குடித்தனம் பண்ணுகிற அழகைச் சொல்லு. வசிப்பது இந்த ரெயிலடிக் குச்சுக்குள்...ஓர் இடம் தங்குகிருஞ இந்த புருஷன்?' என்று பொரிந்தாள்.

ராஜா சீறி எழுந்தான்—'ஹாராம்ஜாதி (பட்டிமுண்டை) என்ன சொன்னே?'

'சொல்லவேண்டியதைச் சொன்னேன்...நான் எதற்காக பயப்படவேண்டும்?'

சட்டென அமைதி கலைந்து அமர்க்களமாகியது. ராஜா அவளுடைய கூந்தல் கற்றையைப் பிடித்துக்கொண்டான். அவனைத் தணிவிக்க நிதாயி எத்தனையோ சொல்லிப் பார்த்தான். அது பயனளிக்கவில்லை. அவள் வாங்கின உதையும்குத்தும் கணக்கில்லை. அன்று பாதிராத்திரிவரை அவள் அழுது தீர்த்துவிட்டாள். ராஜா

வையும் நிதாயியையும் சேர்த்து வைததது இவ்வளவு அவ்வளவு அல்ல. விடிநேரம் வரைக்கும் இந்தக் கோலம் நீண்டது.

நிதாயிக்கு ஏற்பட்ட ஒரு வெறுப்பு, இதன் பொருட்டன்று.

இரவெல்லாம் அவன் மனத்துள் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்தது— 'நீ அவளை நேசி... இந்த விஷயத்தை மனசுக்குள்ளேயே அடக்கிக்கொள். உன் இனியாளிடங்கூடக் கூருதே... அவள் நிம்மதியாக வாழ்கிருள்... அவள் நல்லபடியே சுகமாக இருக்கட்டும். அவள் மனத்துள் ரந்திரம் வைத்து அவளைக் களவாடி, அந்தக் குடித்தனத்தைக் கலைத்து விடாதே...'

பகற்பொழுது, என்றும் வருவதுபோல் கடிகார முள்படி மைத்துனி வந்தாள். இருப்புப்பாதையின் கோடியில் பொன்னிறப் புள்ளி வெயில் ஒளிப்பட்டுப் பளபளத்தது. மெல்ல மெல்ல நாணல் பூப்போன்ற அந்த வெண்மைச் சாயல் நகர்ந்து நெருங்கிக்கொண்டே இருந்தது. அருகில் வந்ததும் இந்தச் சித்திரம் மைத்துனியாக மாறிவிட்டாள். மதுரச் சிரிப்பு அவளுடைய கொழுவிய கன்னத்தில் தெரிந்தது.

'உஸ்தாத்?'

நிதாயி அழுகையால் நெஞ்சடைக்க, 'உள்ளே குவளை இருக்கு. அதில் பாலை ஊற்றிவிட்டுப்போ' என்ருன். அவளுக்கு இவன் இப்படி அழும் காரணம் புரியவே இல்லை. 'வேண்டாம்...வெளியே வந்து நீயே வாங்கிக்கொள். அப்புறம்—?'

'அப்புறம் என்ன?'

'வெயிலில் வந்தேனு. சற்றுக் குந்துவேன்'

'வேண்டாம் மச்சி...நீ என்னிடத்தில் அப்படித் தங்குவது சரியல்ல...நாலுபேர் என்னமாவது சொல்லிக் கொள்வார்கள்...'

கண்ணிமைக்கு அசையாமல் அவள், நிதாயியையே பார்த்தாள். நிதாயி அப்பொழுது, 'களைப்பாற வேண்டுமாஞல், உன் அக்கா வீடு இருக்கிறது...நான் இங்கே ஒரு கட்டைத்தடியன் தனியாக இருக்கிறேன். அதனுல் நாலுபேர் என்னமாவது நம்மைப்பற்றிக் கதை திரிக்கக்கூடும். நீயே யோசனை பண்ணு, மச்சீ?' என்ருன். இதைக் கூறுகையில் அவன் முகத்தில் ஒரு பரிதாபமான சிரிப்பு உலவியது.

வந்த பெண் திடுதிடுவென்று போய்விட்டாள். நிதாயி பெருமூச்செறிந்து, அந்த இடத்திலேயே கம்மென்று இருந்தான்.

நாட்கள் இந்தச் சந்தத்தில் நகர்ந்தன. எதிலும் பற்று அற்றவனுக இருந்தான் நிதாயி. பாட்டும் அவ்வளவாகப் பாடுவதில்லை. மைத்துனி பாலுடன் வருகிருள். ஆனல் எதுவும் பேசுவதில்லை. பாலை ஊற்றியதும் சட்டெனப் போய்விடுகிருள்.

இதுபோன்ற ஒரு நாள் நிதாயி அவளைப் பார்த்து, 'இதைக் கேள்' என்ருன்.

அவன் சொன்னது அவள் காதில் விழுந்தது. ஆனால் அந்த இடத்தில் அவள் நிற்கவில்லை. ஒரு தரம் திரும்பி நிதாயியையே நோக்கிவிட்டுத் தன் நடையைக் கட்டினாள்.

நிதாயி மீண்டும் அவளைக் கூப்பிட்டான்— 'உன்னைத்தான் இதைக் கேட்டுவிட்டுப்போ மச்சி!'

அவள் இந்தத் தடவை நின்ருள்.

'இங்கே வாயேன் சொல்கிறேன்...

அவள் திரும்பினாள். நிதாயின் கண்களிலிருந்து பொல பொல வென்று நீர் வடிந்தது. அவன் சுழன்று நின்று வேதனை அடைக்கும் குரலில், 'போ...இன்னொரு நாள் ஆகட்டும்...சொல்லுகிறேன்' என்ருன்.

நாட்கள் என்றும்போல் ஊர்ந்து சென்றன. ஒவ்வொரு தினமும் இவர்கள் சந்திக்கின்றனர். ஆனால் பேச்சு மட்டுமில்லை. இது போல் ஒரு நாள் அவ்விளையவள் பாலை ஊற்றிவிட்டு, அங்கேயே தயங்கி நின்ருள். சிறிது பொறுத்து அவள், 'அன்று என்னமோ சொல்லப்போனாயே...அதைச் சொல்லேன்...' என்ருள்.

'சொல்கிறேன்' என்ருன் நிதாயி.

'சொல்லு?'

என்னவோ யோசித்துவிட்டு, 'சரி இன்னொரு நாள் ஆகட்டும் மச்சி...' என்ருன் நிதாயி.

அவள் மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பைக் கண்ணுற்றதும் அலைபோல் ஒரு நெடு மூச்சு நிதாயிடமிருந்து எழுந்தது. மைத்துனியும் திரும்பிப் போய்விட்டாள்.

நிதாயின் வெய்துயிர்ப்பு அவன் இதய ஆழத்திலிருந்து வெளிக் கிளம்பியது. அவன் சொல்ல விரும்பியதை அவளிடம் சொல்ல முடிய வில்லை. ஆனால் அது ஓர் அற்புதப் பாட்டாக உருக்கொண்டது—

[1] பல்தே துமி ப'லோ நாகோ
(ஆமார்) மநேர் கதா தாக்குக் மநே
(துமி) தூரே தாக்கோ, ஸுகே தாக்கோ
ஆமிஇ புடி மன-ஆகுநே!

[1] நீ சொன்னால் சொல்லிக் கொள். என் எண்ணம் மனத்துள்ளேயே இருக்கட்டும். தொலைவிலேயே இரு. சுகமே இரு. என் உள்ளம்தான் பொரிந்து போகிறது.

பல நாட்களுக்குப் பிறகே மீண்டும் அவனுக்குப் பாட்டுப் புனையும் இவ்வுணர்வு பிறந்தது. பாட்டை மந்தணமாகப் பாடிக்கொண்டே பாபுக்களின் தோட்டத்தை நோக்கி நடந்தான். இங்கேதான் அவனுடைய பாட்டைச் செவி நுகர மாந்தும் தோழர்கள் இருந்தனர். இந்தத் தோட்டத்திலுள்ள மரங்கள் அத்தனையும் அவன் பாட்டை ரசிப்பவை. இந்த இடத்திலேதான் அவனுக்குப் பாட்டுப் புனையும் நாவன்மை தோன்றியது. இந்த மரங்களுக்கே தன் பாடல்களைப் பாடிக் காட்டுவான். இன்றும் அவன் இந்தத் தோட்டத்தில் வீற்று பாடத் தொடங்கினான். அந்தப் பாட்டு—

[1] ஸாக்ஷீ தாக் தருலதா, சோநோ ஆமார் மநேர் கதா
ஏ புகே ஜே கத வேதா—
போஜ்ஜோ போஜ்ஜோ அநுமாநே.
ஆமிஇ புடி மன-ஆகுநே ।

பாடியானதும் அவன் கம்மென்றிருந்தான். முடியாது, இந்த மாதிரி நாட்களைக் கடத்த முடியாது...மனத்துள் மூண்ட இந்தத் தீயில் வெந்து சாம்பலாக முடியாது. இது மனத்தைப் பற்றிய தீயல்ல... வயிற்றைப் பற்றியதாகும். அதன் எரிச்சல் கொஞ்சநஞ்சமன்று. வரும்படியே இல்லை ; கையில் உள்ளதும் கழிந்து போயிற்று. பிழைப்பிற்கு ஒரே வழி...மூட்டைச் சுமப்பதுதான். ஒரு கவிஞனாகிய பிறகு இந்த வேலை செய்ய இயலாது. இந்த இடத்தில் முடியாது ; வேறு எங்கேயாவது போனால்தான் நல்லது. அதையே அவன் செய்வான். நாளைக்கே சண்டீதேவியை வணங்கி வேண்டிக்கொள்வான்— 'அம்மா, உன்னுடைய நிர்பாக்கியனான பிள்ளை நிதாயிசரணனைக் கவி பாடச் செய்தாய். ஆனால் அவன் மனவேதனையையோ, வயிற்றுக் கவலையையோ நீ புரிந்துகொள்ளவில்லை ... அவன் போகிறான் ; அவனுக்கு விடை தருவாய் தாயே !'

அப்போது எத்தனையோ தினங்களுக்குமுன் அவன் கேட்ட பாட்டொன்று நினைவுக்கு வந்தது—பாஉல்[2] பாடும் பாட்டு. க்ஷுதிராமைத் தூக்கிலிட்ட உருக்கமான பாடல்—

' பிதாய் தே மா ஃபிரே ஆஸி. '

இதன் முதல் அடியை வைத்து மிகுதியைப் பூர்த்தி செய்து கொண்டே அவன் திரும்பி வந்து அமர்ந்தான். கம்மென்றிருந்தான். அந்தப் பாட்டின் பிற்பகுதியாவது—

[1] மரம் செடி கொடிகளே, நீங்கள் இதற்குச் சாட்சி ! என் மனத்திலுள்ளதைக் கேளுங்கள், என் உள்ளத்து வேதனைகளை ஊகித்துக் கொள்ளுங்கள். நான் உள்ளுக்குள் பொரிந்து போகின்றேன்.

[1] பிதாய் தே மா ஃபிரே ஆஸி
பல்தே கதா புக ஃபாடே மா
சோக்கேர் ஜலே பாஸி ।

அவன் கம்மென்றே கிடந்தான். ராஜாவின் உரத்த கூப்பாடு அவனுடைய மோனத்தைக் கலைத்தது. அவன் துட்கிட்டுப் போனான். ராஜா யாரையோ 'வாயை மூடு' என்று கடுமையாகப் பேசுவது கேட்டது. அடுத்த நிமிடமே அவனுடைய சம்சாரத்தின் தீவிர ஓலம் வந்தது—'சா, சீனி இதெல்லாம் எங்கே எடுத்துக் கொண்டு போகிறாய்.. யாருக்குத் தர.. மானம் இல்லே.. வெட்க மில்லே நோக்கு.. புருஷனும் புருஷன்...'

மனைவியை நன்றாகப் புடைத்துவிட்டு ராஜா, நிதாயின் அறைக்குள் நுழைந்தான். 'உஸ்தாத், சா தயார் பண்ணு' என்றதும் பத்துப் பதினைந்து பேருக்குப் போதுமான சரக்கு—அரைப்படி பாலும், அரை வீசைச் சீனியும் கீழே இறக்கினான். ராஜாவின் மனைவி தவறாக ஒன்றும் கூறவில்லை. இந்த மாதிரி தாம்தூமென்று புருஷன் பொருளைப் பாழ்பண்ணினால் எவள்தான் பார்த்துக் கொண்டிருப்பாள்? எதற்கு இவ்வளவு சீனி?

நிதாயி ஆழ்குரலில், 'ராஜா' என்றான்.

ராஜா நிதாயின் பேச்சையே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன் விடுதிக்கு வெளியே சென்றான்.

'தம்பிமாரே... யார் யார் இருக்கீங்களோ வாங்கோ எல்லோரும் இங்கே...' என்று அழைத்தான்.

நிதாயிக்கு வியப்பாக இருந்தது அவனுடைய போக்கு.

ஆண்களும் பெண்களுமாக ஒரு கூட்டம் வந்துகொண்டிருந்தது, டோல், தகர டப்பா, மரப்பெட்டி, மூட்டை முடிச்சுகளுடன். அந்தப் பெண்கள் விசித்திரமாக உடை பூண்டிருந்தனர். அந்த ஆடவர்கள் தனிப்பட விளங்கினர். இந்தச் சாடை உள்ளவர்களை நிதாயி அறிவான்.

'சா எங்கே தம்பி கொடு, ஒரே தாகம்' என்று இப்படிச் சொன்னவள் அந்தக் குழுவில் பின்னால் நின்ற ஆளே. அவள் எல்லோரையும் தாண்டி முன்னால் வந்து நின்றாள். ஒல்கி ஒசியும் சிவப்பு மேனியள்.. வாளன்ன அவள் இரு கண்களின் வெள்ளிய பகுதி

[1] விடை தா அம்மா, போய் வருகின்றேன். இதைச் சொல்லுகையில் என் இதயம் வெடிக்குது அம்மா, கண்ணீர் ஆறாய்ப் பெருகுது. (இது இளம் புரட்சிவீரன் க்ஷுத்திராம் வஸுவைப் பற்றிய பாட்டு).

கூராக இருந்தது. இந்தக் கூர்மைக்கு ஏற்ப வண்டெனச் சுழலும் கருமையான பாவை. வைகாசிப் பகல் வெயிலில் கருஞ்சிட்டு அலேவதுபோன்ற அசைவு அந்தக் கண் பார்வையில். மரணத்தையே வென்றுவரும் ஊடுருவும் நோக்கு !

ராஜாவின் முகத்தையே பார்த்தபடி அவள், 'எங்கே, உஸ்தாத் கிஸ்தாத் என்ருயே, எங்கே அந்த ஆள் ?' என்ருள்.

ராஜா நிதாயியைச் சுட்டி, 'ஓஹி ஹமாரா ஓஸ்தாத் ! (இவர்தான் எங்கள் கவிராயர்)' என்ருன்.

நிதாயிக்குப் பேசவே நாக்கெழவில்லே. இவர்களேப் பற்றி நன்கு அறிவான். இவர்கள் [1] ஜூமுர் நடன கோஷ்டியினர். இவர்கள் திடுமென எங்கிருந்து முளேத்தனர் ? நிதாயி இதைப்பற்றி விசாரிப்பதற்கு முன்னரே ராஜாவே கூறலாஞன்.

'ட்ரேன்ஸே ஜோர் கர்க்கே உதார் லியா. ஹியா காஓஞ ஹோகா ஆஜ்!—தும்கோ பி காஓஞ கர்நே ஹோகா ஓஸ்தாத் (ரெயில் வண்டியிலிருந்து இவர்களே இறக்கிவிட்டோம். இன்று இவர்களுடைய பாட்டையும் கூத்தையும் அனுபவிக்கலாம்...என்ன உஸ்தாத், நீயும் பாடவேண்டும்)' என்று கலப்பட ஹிந்தியில் மொழிந்தான்.

ஜூமுர் குழுவைச் சேர்ந்த அப்பெண் உதட்டை நெளித்து, 'ஓ சாமீ, நீயா அந்த உஸ்தாத்...அடியம்மா' என்ற அவள் இடிஇடியென்று நகைத்தாள். அதன் விரைவால் அவளுடைய ஒல்கிய உடலே அசைந்தாடியது. அவள் வாயால் மட்டும் சிரிக்கவில்லே, அவளுடைய அங்க அவயங்களிலும் இந்தச் சிரிப்பு வழிந்தது. அதில் எத்தனே கூர்மை! மனித உள்ளத்தைக் கொத்திக் கொந்தித் துண்டு துண்டாக்கி விளேயாடும் கொடூரச் சிரிப்பு அது !

9

நீர்மேல் கிழித்த கோடு நிற்பதில்லே. சட்டென அப்பிளவு மறைந்து விடுகிறது. அதேபோல் ஒரு மெல்லிய சிரிப்பின் கீற்று நிதாயின் முகத்தில் தோன்றி, அழகின் அலே வழியும் அவ்வொல்லிய மடந்தையின் கோலாகலச் சிரிப்பிலே கரைந்து மறைந்தது. நிதாயின்

[1] மேற்கு வங்கத்து ஒரு நடனபாணி – ஆபாசமான உடற்குலுக்கல்களேக் கொண்டது.

சிரிப்பு கத்திபோல் கூர்மை மிக்கது; ஆனால் அந்த மடந்தையி னுடையதோ விசையாகப் பெருகும் வெள்ளம் போன்றது. அதை மீறிச் செல்வது முடியாத காரியம். அவள் நிதாயின் சிரிப்பினால் மேலும் விறல் எழ நின்றாள். அவள் என்னவோ பேசப் போனாள். ஆனால் அதற்கு முன்பே நிதாயி அந்த ஜுமுர் பாட்டுக் குழுவினரை அடக்கத்துடனேயே வரவேற்றான் —' வாருங்கள் ... வாருங்கள்...'

நிதாயி வீட்டினுள் முன்னால் செல்ல, அத்தனை பேரும் அவனைப் பின்பற்றினர். நிதாயின் குடியிருப்பு ரெயில்வே கூலிகளுக்கெனக் கட்டிய குச்சு வீடு. இந்த லைனைப் போடும்போது அங்கேதான் இஞ்சினியரின் பெரிய அலுவலகம் இருந்தது. அது தாற்காலிகமாக எழுப்பப்பட்ட கட்டடம். இப்போது கலகலத்துப் போய்விட்டது. நல்ல வழுவழுப்பான சிமட்டித் தரை போட்ட வராந்தாப் பகுதி; அதை அண்டினாற்போல ஒரு சிறு கூடம். இந்த இரண்டு இடங் களிலும் ஜுமுர் கோஷ்டியினர் அமர்ந்தனர்.

பழங்காலத்தில் ஜுமுர் வேறொன்றையே குறிப்பது. ஆனால் இன்று கீழ்த்தரமான வேசிகள், விறலிகளாகவும் அவர்களைச் சுற்றித் திரியும் வாத்தியக்காரர்களுமாக அடங்கிய கோஷ்டியே எனலாம். இன்று ஓரிடம், நாளை வேறிடம். மரத்தடியில் தங்கி நாடோடி மாதிரித் திரிபவர்கள். பொழுதுபோனபிறகு யாருமே அழைக்காது போனாலும் தாமாகவே வலியவந்து பாடத் தொடங்கிவிடுவார்கள். சேர்ந்து ஆடுவார்கள்; பாடுவார்கள். பெரும்பாலும் விரச மான பாட்டுக்களே. இந்த மட்டமான அகச்சுவையில் திளைத்தோர் வெல்லத்தை மொய்க்கும் ஈக்களைப்போல் சேர்ந்து விடுவார்கள்.

இவர்களுடைய பாடல்களை மெச்சிச் சிலர் தட்டில் காசு போடு வார்கள். இரவு மறைவில் இந்த விறலிகள் விபசாரத்திலும் ஈடுபடுவார்கள். இது மட்டுமல்ல; புராண சம்பந்தமான கதைகளை வைத்துக் கூத்துப் பாட்டுக்களையும் பாடுவர். தமக்கு ஏற்ற ரசிகர் களின் ஜமா சேர்ந்தால் வெவ்வேறு சுவையான பாடல்களையும் இசைப்பர். இவர்களுக்கு அனுசரணையாக வாத்தியம் வாசிப் பவர்களில் நிதாயியை ஒத்த இரண்டொரு கவிவாலாக்களும் இருந் தனர். வாய்ப்பு வந்தால் பாட்டுப் போட்டியில் எதிர்ப்பாட்டும் பாடுவார்கள். சமயம் வந்தால் நிதாயியைப்போல் கவிவாலா வாகவும் நடிப்பார்கள்.

கோஷ்டியினர் உட்புறம் கூடத்தில் வந்து நின்றனர். மரத்தடியில் வழியோரமாகக் கூடாரம் அடித்துக்கொண்டு சிரமமின்றி இரவு பகலைக் கழிப்பவர்கள், இப்படி ஒரு கல் கட்டடமான ஒதுக்கிடம் கிடைக்கவே நிம்மதி அடைந்தனர். தம் பனம்பாய்களைப் பிரித்தனர். ஒல்கிய வடிவத்தாள் அந்தச் சிமிட்டித் தரையில் சடக்கெனக் குப்புறப் படுத்துவிட்டாள். அதன் தண்மை அவளுக்கு மிகவும் இதவாக இருந்தது. அம்மாடா என்று வெளியிட்ட அந்தக் குரலில் களைப்பும், ஏமாற்றத்தின் ஏக்கமும் சேர்ந்து தொனித்தன. 'இனிமேல் என்றால் ஒன்றும் முடியாது' என்பதை அக்குரல் குறித்தது.

—'வஸன்!'—இந்தப் பெண்களில் நடுவயதினளான ஒருத்தி. அவள் அந்தக் கூட்டத்தாரின் தலைவி—'ஏ வஸன், உனக்கு ஏற்கனவே ஜுரம், சில்லென்ற அந்தத் தரையில் படுக்காதே... எழுந்திரு... எழுந்திரு' என்றாள்.

பெண்ணின் பெயர் வஸந்தி. வஸன், அவளை லட்சியம் செய்யவே இல்லை. குரலைப் பெரிதாக்கி, 'எங்கே அந்த ஆள்...உஸ்தாதா கிஸ்தாதா..சா கொடுங்களேன்...' என்றாள். அப்போதுதான் தேநீருக்குத் தண்ணீரை உலையில் வைத்தான். 'இதோ ஐந்து நிமிஷம்...உனக்கு ஜுரமாமே...இந்தச் சில்லுத் தரையில் ஏன் படுத்துக்கொண்டிருக்கிறாய்? ஜமுக்காளம் ஏதாவது போடட்டுமா?' என்றான் நிதாயி.

வஸந்தி கண்ணைத் திறக்காமலே, மூடியபடி கலகலவெனச் சிரித்தாள். 'ஏனய்யா, அத்தனை அக்கறை என்மீது? வழியில் பார்க்கும் போது வாயோழுகப்பேசும் நாகரிகம்...உள்ளூறக் கொள்ளும் ஆசை அல்ல இது' என்று அவள் சொன்னபோது கூட்டத்தைச் சேர்ந்த மற்ற பெண்கள் இடிஇடியென்று நகைத்தனர்.

மைத்துனிக்கென வைத்துள்ள கோப்பையில் தேநீரை ஊற்றி வஸந்தி முன் வைத்தான். 'ருசி பார்த்துச் சாப்பிடு. அதில் வசியச் சரக்கும் கொஞ்சம் சேர்த்திருக்கிறேன்...' கவி நிதாயி ரசிகன் மட்டுமல்ல; ரசமாகப் பேசவும் கற்றவன். அதுவும் தனக்குப் போட்டி போடும் ஆளைக்கண்டு விட்டால், இந்த ரசிகத்தன்மை தலைக்கேறிவிடும்.

தேநீரின் மணம் வரவே, அதன் கோப்பையின் ஓசை கேட்கவே தாகமுற்றவள்போல் பரபரப்புற்று வஸந்தி எழுந்து உட்கார்ந்தாள். அவள் தனக்கு வந்த சிரிப்பை வெளிக்காட்டாமல், பெரிய பெரிய கண்களால் நிதாயியையே ஏற இறங்க நோக்கினாள். 'என்ன ரசிக சிரோமணி! காதல் கொண்டது போதாதென்று கட்டுமருந்துக்குக் கூட வந்து விட்டீரா!' என்றாள்.

மற்றவர்களுக்கும் 'சா'வை வழங்கியவாறு நிதாயி ஒரு பாட்டை எடுத்தான்—

[1] ப்ரேமடுரி தியே பாந்ததே நார்லேம் ஹாய்,
சந்த்ராவலீர் ஸிந்தூர் ச்யாமேர் முகசாந்தே!
ஆர் கி உபாய் ப்ருந்தே—ஏஇபார் ஏநே தே எநே தே—
வசீகரண லதா—பாந்த்போ ச்சாந்தே ச்சாந்தே |

இந்தப்பாட்டு நிதாயின் சொந்தப் புனைவன்று. நிதாயின் கவி குருவான தாரண் மோடலின் பாட்டு. அது நிதாயிக்கு மனப்பாடம்.

ஜுமுர் குழுவைச் சேர்ந்த பெண்கள் சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்து வருபவர்கள். எழுத்து வாசனையே அறியாதவர்கள். ஆனால் இவர்களுக்கு அற்புதமான குரலைக் கடவுள் தந்திருக்கிறார். தெருக்கூத்துக்களில் சேர்ந்ததால் இவர்கள் புராணக் கதைகளை நன்கு அறிந்திருந்தனர். உவமை வைத்தும், சிலேடையாகவும் இவர்கள் பேசுவதில் வல்லவர்கள். பாடத் தெரிந்தவர்களிடம் மதிப்பு வைப்பவர்கள். நிதாயின் பாட்டில் புதைந்திருக்கும் உள்ளுறை உவமத்தை வஸந்தி நன்கு புரிந்துகொண்டாள். அவளுடைய இரு விழிகளும் கூர்வேலெனப் பளபளத்தன. மறுகணமே முகத்தைத் தாழ்த்தி தேநீரைக் குடிக்கலானாள்.

ஆண்களில் ஒருவன், 'பலே பேஷ்...உஸ்தாத்' என்றான்.

மற்றொருவன், 'ஆமாம், சரியாகச் சொன்னாய் உஸ்தாத்' என்றான்.

'ஆமாம்...' புருவத்தை நெறித்து மற்றொரு பெண், 'ஆமாம், இதைவிட மைனா பறவை நன்றாகப் பாடுகிறது!' என்று வெட்டினாள். நிதாயின் பாட்டில் மறைந்துள்ள வியங்கியம் (ஏளனம்) இந்த வஸந்தியை மட்டுமல்ல, பெண்கள் அத்தனைபேரையும் உறுத்தி விட்டது. வஸந்தி ரோஷம் பொங்க, 'அடுப்பைக் கிளறினால் கரி தானாகும். சாம்பலைத் தட்டினால் நெருப்புத்தான் கிளம்பும்!' என்றாள். இச்சொல் தாக்கவேண்டிய இடத்தைத் தாக்கியது.

நிதாயி சிரித்துக்கொண்டே, 'நெருப்பை எங்கேயாவது தீண்ட முடியுமா? உன்னிடத்தில் எனக்கு மனஸ்தாபம் எதற்கு? நீ பூத்த மலர்; நான் வெறும் புழுதி. இந்தப் பூவை மெச்சும் அந்த நாகரிகன் இந்தப் புழுதிதானே!' என்றதும் ஒரு பாட்டை எடுத்தான்—

[1] காதல் பிணையால் கட்டமுடியவில்லை, ஐயோ, சந்த்ராவளியின் சிந்துரப் பொட்டணிந்த அந்த சியாமனின் மதிமுகத்தை! வேறு வழியுண்டு பிருந்தே!—கொண்டு தா...கொண்டு தா, அந்த வசீகரணப் பொடியை; அவனை அதனால் மயக்கிடுவேன்!

1 ' ஃபுலேதே தூலாதே ப்ரேம் ஹய் நாகோ
ஃபுல ஃபோட்டார் காலே!
ஃபுல ஃபோட்டே ஸஇ ஆகாசமுகே
சாந்தேர் ப்ரேமே ஹேலேதுலே,
தூலா த்தாகே மாட்டிர் புகே, சரணதலே அதோமுகே
ஃபுல ஜரிலே கரே புகே
ஸேஇ லேக்கா தார் போடா கபாலே!

இல்லையா சொல்லு?'

வஸந்தி விரிந்த கண்களுடன் அவனையே நோக்கினுள்—'இவன் எந்தமாதிரி ஆள்?'

வயது முதிர்ந்தவள் பாட்டை மிகவும் ஆராய்ந்தவள் போல் சிரித்து, 'நீ தோற்றுவிட்டே குழந்தே. உனக்குத் தகுந்த ஜவாப் கொடுக்கத் தெரியல்லே—இது போல பாட்டைப் பாடிக்கொண்டா திரிகிறே?' என்ருள்.

நிதாயி அடக்கத்துடன், 'ஏதோ பாடிப் பார்க்கிறேன். இரண்டொரு பாட்டரங்கிலும் பாடியிருக்கிறேன். எல்லாம் சொந்த ஸாஹித்யம்...'

வயது முதிர்ந்தவள்—' நன்ருகத்தான் இருக்கு பாட்டு!' என்ருள்.

நிதாயி கைகுவித்து நெற்றியைத்தொட்டு, 'எல்லாம் அம்பாள் அருள்!' என்ருன்.

வஸந்தி எதுவுமே பேசவில்லை. தேநீரைக் கடைசிச் சொட்டு வரைக்கும் பருகியதும் கோப்பையைக் கீழே வைத்தாள். அது தரையில் கவிழ்ந்துவிட்டது. அதே சமயம் அறையில் நுழைந்தான் ராஜா. அவனுடைய இரு கைககளில் சட்டி, சருவம்; அக்குளில் சாலமரத்து இலைகள் ஒரு கற்றை. மிலட்டரி ராஜா சமர்க்களத்தில் உத்தரவிடுவது போலவே நடக்கவேண்டிய மற்ற விஷயங்களை அறிவித்தான்—' பேய்யா லோக் ஓஹி வட்தலாமே, ஜாய்கா ஸாஃப் ஹோ கியா, ஆப் கானு—உனு பாக்கா லீஜியே' (சகோதரர்களே அந்த ஆலமரத்தடியில் இடம் சுத்தமாக்கப்பட்டிருக்கிறது. அங்கேயே சமையல் கிமையல்லெல்லாம் செளகரியமாகக் கொள்ளலாம்).

[1] பூப் பூக்கும் வேளையிலே காதலைப் பூவிலோ, அது விழும் மண்ணிலோ காண முடியாது. வானிடை விளங்கும் அந்த மதிமுகத்தவன் காதலினுலே இந்த மலர் பூத்திடுமே! மண்ணிலே புழுதியில் கிடக்கும்; அவன் கழலடியில் கவிழ்ந்து கிடக்கும். உதிர்ந்த இம்மலரின் இதயத்தில் அவன் காதல் வரைந்திருக்கும். அவன் தலையில் இப்படி எழுதியிருக்கும்.

ஒரு சமயம் ராஜாவைத் தனியாகச் சந்தித்து நிதாயி, ரகசியமாக விசாரித்தான்—'இதற்கெல்லாம் பணம் நீதான் செலவு செய்கிருயா?'

ராஜாவுக்கு ஓய்ச்சல் ஒழிவேது; மறைவு ஒளிப்பாட்டம் எதுவுமே தெரியாதவன். அவன் இயல்பான உரத்த குரலில், 'அதெல்லாம் நான் பார்த்துக்கொள்வேன்...சமாளிப்பேன். கடைக்காரமாமா ஓர் எட்டணு; கரிமூட்டைக்காரன் நாலணு; பலசரக்குக் கடைக்காரன் எட்டணு ... ஸ்டேஷன் மாஸ்டர் எட்டணு ... கூட்ஸ் க்ளார்க் எட்டணு; கார்ட் எட்டணு; கூட்ஸ் வண்டியின் டிரைவர் எட்டணு; என் பங்கு ஒரு ரூபா ...பஸ்—இதையெல்லாம் சேர்த்தால் போதும்; நீ ஒரு ரூபா ... தலைக்குமேல் வெள்ளம்...' என்ருன்.

இதைக் கூறியதும் அவன் போய்விட்டான். அந்தப் பக்கம் 'ஷண்டிங் யார்டி'லிருந்து ஒரு பெட்டியைக் கூலிகள் தள்ளி வந்து 'பாயின்ட்' அண்டை கொண்டு நிறுத்தினர்.

நிதாயி மரத்தடியில் வந்து நின்ருன். நாடோடிக் குழு இதற்குள் மிகத் திறமையுடன் விரைவாக மரத்தின் கீழ்த் தம் சம்சாரத்தைப் பரப்பினர்; அடுப்பைப் பற்ற வைத்தனர். ஒரு பெண், நீர் சேந்திக் கொண்டு வந்தாள். ஒருத்தன் காய்களை நறுக்கத் தொடங்கினுன். வயதானவள் அடுப்பெதிரே அமர்ந்து அரிசியை மட்சட்டியில் களைந்து கொண்டிருந்தாள். ஆடவர்கள் உடம்பில் எண்ணெய்த் தேய்துக்கொண்டனர். பெண்கள் குளித்தாயிற்று. அவர்கள் எல்லோரும் ஈரக் கூந்தலைப் பின் புறமாகப் பிரித்துப்போட்டனர் புலர்வதற்கு. நுனியில் முடிச்சுப் போட்டிருந்தனர். அந்தக் கோஷ்டியில் அந்த ஒல்லியான மடந்தையை மட்டும் காணவில்லை.

நிதாயியை அந்த முதியவள் கூப்பிட்டு அன்பாகவே பேசினுள்—'இங்கேத்தான் குந்தேனப்பா...'

ஆடவர்கள் இருவர் ஒரே சமயத்தில், 'அதுதான், நீங்கள் எதற்காக நிற்க வேண்டும்? சும்மா குந்துங்கள்' என்றனர்.

அடுப்பில் ஒரு விறகுச் சுப்பலை வைத்து முதியவள், 'அருமையான குரல் அப்பா உனக்கு... என்னமா பாடுகிறே!' என்றதும் அவனையே உற்றுப் பார்த்து, 'தராநநா மட்டுந்தாஞ...வேறே ஏதாவது வேலை யும் செய்வாயா?' என்று கேட்டாள்.

'தராநநாவாக இருக்கவே உத்தேசம்...பார்க்கலாம்...'

'கல்யாணம் ஆகிவிட்டதா? வீட்டிலே யார் யார் இருக்கிருர்கள்?'

'கல்யாணமா?'— நிதாயி சிரித்தான். 'வீட்டிலே அம்மா தங்கச்சி இருக்கிருர்கள். அம்மா பெண்ணிடமே இருக்கிருள். நான் தனியாகத்தான் இருக்கிறேன்...' என்ருன்.

'அப்படியானுல் எங்களுடன் சேர்ந்துகொள்ளேன்?'

இதற்குச் சட்டென மறுமொழி தர அவனுல் முடியவில்லை. இதற்குச் சம்மதம் தருவதென்ருல் ராஜாவை அவன் கேட்கவேண்டும். இன்னென்றும் அவனைத் தயங்கச் செய்தது. நில சம்பங்கியின் பசுமைத் தண்டுமாதிரி மெல்லிய மாமைக் கவினுள்—அந்த மைத்துனியின் நினைவு வந்தது. அவன் வாயைத் திறக்கவில்லை.

பதிலை எதிர்பார்த்த முதியவள் மீண்டும், 'என்ன சொல்றே தம்பி?' என்ருள்.

'உன் மனசுக்குப் பிடித்தவள் எவள் பொருட்டாவது தயங்குகிருயா அப்பா?' என்று அம்முதியவள் கேட்கும்போது, பின்புறமாக ஓர் அருவிச் சிரிப்பு துள்ளிச் சிதறியது. நிதாயி திரும்பிப் பார்த்தான்—வஸந்தி ஈரத்துணி உடலில் ஒட்ட அப்போதுதான் குளித்துவிட்டு வந்து நின்ருள். இன்னும் நீர் வழியும் தன் குழலைப் பிழியவில்லை. நிதாயி அவளை அந்நிலையில் கண்டதும் பிரமித்துப் போனுன்.

'—சம்சாரம் எப்படி இருப்பாள்? வசியப் பச்சிளங் கொடியால் அவளைப் பின்னி பிணைத்துவிட்டிருப்பாய்?' என்ருள் அந்த வாயாடி.

நிதாயி இதுவரை வியப்பில் ஆழ்ந்திருந்தவன், 'ஜுரமென்ருயே ஏன் குளித்தாய்?' என்ருன்.

'குளித்தால் தீரும் இந்தக் காய்ச்சல்—சந்திராவளிக்குக் காதல் ஜுரமே தவிர, வேறில்லை' என்றதும் அவள், உடல் ஒடிவதுபோல் சிரித்தாள். அவளுடைய ஈர ஆடையின் மறைவில் அவள் உறுப்பின் திரண்ட வனப்பு வெளிப்பட்டது. நிதாயிக்கு வெட்கமாகி விட்டது.

முதியவள் சொன்னுள்—'குளித்துவிட்டா வந்தே... முன்னுல் ஈரத் துணியை அவிழ்த்துப் போடு வஸன். நீ என்றைக்கோ குளிர் காய்ச்சல் வந்து சாகப் போகிருய்... இப்படியெல்லாம் செய்தால்?'

விசித்திரச் சிரிப்புடன் வஸந்தி, 'தூக்கி எறிந்துவிடேன். என்னுல் குளிக்காமல் இருக்கவே முடியாது...என்ன நாற்றம் நாறுகிறது' என்ருள்.

இன்னேர் இளமடந்தை மெல்லிய முறுவல் செய்து, 'இப்படித் தலைக்குக் கொட்டிக்கொண்டால், கூந்தல் கொடிமாதிரி பின்னிக் கொண்டு சிக்காகிவிடும்...' என்ருள்.

கையால் தலைமயிரை உதறிக்கொண்டே வஸன், 'கூந்தல் கற்றையாக வளர்ந்தால் மட்டும் எந்தக் காதலனின் கால்களை நான் துடைக்கப் போகிறேன்? என் கூந்தலைப்பற்றி நான் கருவப்படவில்லையடீ' என்ருள்.

பலபேருடன் கலவி புரிவது இவர்களுடைய தருமம். இந்தக் குழுவில் ஒவ்வொரு பெண்ணுக்கும் பிடித்த ஆடவன் ஒருவன் இருந்தான். இவர்களிடை பிணக்கு, ஊடல், கூடல் எல்லாம் நிகழும். ஆனால் இந்த வஸந்திக்கு ஏற்ற காதலன் எவனும் இல்லை. அவளுக்கு எவனும் சரிப்படவில்லை. அவளை நெருங்கும் ஆடவன் எவனும் அவளுடைய கூரிய தன்மையால் சிறகொடிந்த சுரும்பாகி விடுகிறான். காதல் விஷயமாக இந்த இளமடந்தையரிடையே தருக்கம் மூளும். இவள் சொல்லம்பு தாக்கி எவளாவது பட நாகமென இவள்மீது சீறிப் பாய்வாள். சண்டை முற்றாமலிருக்க முதியவள் குறிக்கிட்டுச் சமாதானம் செய்துவிடுவாள். 'வஸன் இதைக் கேளடீ... இந்த உஸ்தாத் உனக்குப் பிடித்திருக்கானா?' என்றாள் அம்முதியவள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள் வஸந்தி உரக்கவே சிரித்தாள். நிதாயிக்கு ஜல்லென வியர்த்தது. முதியவள் அவளை அடக்கி, 'நாசமாப் போக...எதற்கடி இப்படிச் சிரிக்கிறே?' என்றாள்.

சிரிப்பை நிறுத்தி வஸந்தி, 'நாசமாகப் போகிறவள் நீயல்ல; நான் தான்!' என்றாள்.

'ஏன்?'

'அய்யோ அம்மா... என்ன கறுப்பு!'

எல்லோரும் வாயடைத்துப் போயினர்.

வஸந்தி தொடர்ந்தாள்—'அம்மாவோ, இந்தக் கறுப்பு மேனி என் மேல் தீண்டினால் நானும் ஒரே கறுப்பாகிவிடுவேன்!' முகத்தைக் கோணி மெல்லச் சிரித்து, 'நான் போய், உலர்ந்த துணி கட்டிக் கொண்டு வருகிறேன்...நிமோனியா வந்தால் யார் படுகிறது' என்று கூறிய வண்ணம் அவள் குதித்துக்கொண்டே போனாள்.

இன்னொரு பெண், 'நீ செத்தொழிய... கழுத்துச் சுருக்கிட்டுச் சா' என்று வஸந்தியை நோக்கிச் சாபம் இட்டாள்.

பெரியவள், 'போதும் வாயை மூடு... மறுபடியும் குத்திக் கிளறு கிறாயே...' என்று அவளை அடக்கினாள்.

அந்தப் பெண்ணும் சும்மா இருக்கவில்லை. வஸந்தியைப்பற்றி என்னவோ முணுமுணுத்துக்கொண்டே இருந்தாள். நிதாயியும் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான், அந்த ஒல்கிய சிவப்பு மேனியாளின் விசித்திர மனோபாவத்தைப் பார்த்து. 'பேதைப் பெண் கர்வப்படுகிறாள், தன்னுடைய தங்கம் போன்ற மேனிப் பொலிவால் இந்த உலகத்தையே மயக்கிவிட்டதாகவும், எல்லோரும் அவளைப் பெற ஏங்குவதாகவும் நினைக்கிறாள்...ஐயோ... ஐயோ...!'

பெரியவள்—'இதோ சொல்கிறேன் மகனே!' என்று மீண்டும் பேச்சை எடுத்தாள்.

'என்னையா கூப்பிட்டீர்கள்?'

'ஆமாம், உன்னை மகன் என்றுதான் அழைப்பேன். மற்றவர்கள் உன்னை உஸ்தாத் என்பார்கள். நான் இப்படிக் கூப்பிடுவதால் உனக்குக் கோபம் வராதே?'

'அதெல்லாம் ஒன்றுமில்லை. எதற்குக் கோபம்?'—அந்தச் சித்தியின் பேச்சு அவனுக்கு மிகவும் இனிமையாக இருந்தது.

'என்ன சொல்கிறாய்... இப்படி எதற்கும் இல்லை இல்லை என்று பாடினால் எங்களுடன் வந்து சேராதே...'

'வேண்டாம்'—நிதாயின் குரலில் ஒரு திண்மை. எல்லோரும் கம்மென்றிருந்தனர். 'அப்படியானால் நான் வருகிறேன்... என் சாப்பாட்டைக் கவனிக்க வேண்டும்' என்றான்.

'என் கரி மாணிக்கமே!'—வஸந்தியின் குரல்தான்.

நிதாயி திரும்பிப் பார்த்தான். இதற்குள் அவள் கூந்தலை ஆற்றி அழகாக வாரி விட்டுக்கொண்டிருந்தாள். சிங்காரித்துக்கொள்ள வேண்டிய அடர்ந்த குழலழகு—பின்புறம் தாழும் இருட்குவை போன்ற மயிர்த்திரள். நெற்றியில் குங்குமப் பொட்டு. அரையில் பூபோட்ட செந்நிறச் சேலை!

வஸந்தி சிரித்து, 'உனக்கு ஒரு பெயர் சூட்டியிருக்கிறேன், கரி மாணிக்கம். கருமாணிக்கமென்று உன்னை எப்படி அழைப்பது?' என்றதும் அந்தக் கருமாணிக்கம் போன்றவனைக் கும்பிட்டாள்.

'நல்ல பெயர்தான்! கழிசாடை மாணிக்கம் என்று வேண்டுமானாலும் கூப்பிடேன், தவறொன்றுமில்லை...'

'கரியென்றாலும், கழிசாடையென்றாலும் ஒன்றுதானே—' என்றதும் முகத்தைக் கோணி ஏளனமாக நகைத்தாள் வஸன். உடனேயே அவள், 'எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?' என்றாள்.

'என்ன சொல்லு?'

'நாலு பைசாவுக்கு மீன் வாங்கி வரமுடியுமா? மீன் இராவிட்டால் எனக்குச் சாப்பாடே ருசிக்காது. வாங்கி வருகிறாயா?'

'எடு காசை' என்று நிதாயி கையை நீட்டினான். காசைத் தருகையில் அவள் கையை இழுத்துக்கொண்டாள். 'தீண்டிவிடப் போகிறாய்...' என்றாள்.

'தீண்டிவிட்டால், மறுபடியும் ஸ்நாநம் பண்ண வேண்டுமே?' என்றதும் அவளுடைய உதட்டு நுனிகள் அருவருப்பால் விற்போல் வளைந்தன.

நிதாயி சிரித்து, 'உன் செந்தளிர்க் கையில் கரி ஒட்டிக்கொள்ளு மென்ற பயமா ?' என்ருன்.

வஸந்தியின் கையிலிருந்த காசு நழுவி நிதாயின் கையில் விழுந்தது. அவளுடைய உதட்டில் தென்பட்ட அந்த வில்வளைவு மறைந்து விட்டது. அவளுடைய உதடுகள் படபடவெனத் துடித்தன. அடுத்த கணமே அந்தத் துடிப்பு சிரிப்பாக மாறியது. இதைப் பார்த்து நிதாயி அடைந்த வியப்பிற்கு ஓர் எல்லை இல்லை. கதையில் வரும் மாயாவினியாக அந்தப் பெண் தோன்றினுள். எதிரி, பாந்தள் தூக்கும் நாகமாக இருப்பின், அவள் கீரிப்பிள்ளையாக வருவாள்—கீரிக்குப் பகையாகப் பூனையொன்று அவனைக் கவ்வ வந்தால், அவள் பெண் புலியாகிவிடுவாள்! சட்டெனச் சிரிப்பு மறைந்து அழுகை அவள் உதடுகளில் துடித்தது. ஆனல் அவள் சிரித்தபடி, 'அதனுல் தான் தீண்டாமல் கொடுத்தேன்' என்ருள்.

வலைஞர் சேரிக்குப் போகும் வழியில் நிதாயின் மனத்துள் பாட்டொன்று குமிழ்த்தது. புதிய பாட்டு. அந்த விசித்திரமான பெண்ணை ஒன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தான்—இலவமலருடன் ... பாட்டின் அடி அவன் நாக்கில் புரண்டது—ஆஹா !

> [1] ஆஹா... ராங்காபரண் சிமுல ஃபுலேர்
> பாஹார் சுது ஸார் !

10

மாலை நேரம் பெருத்த ஆர்பாட்டத்துடன் ராஜா, ஜுமுர் ஆட்டத்திற்கு ஏற்பாடு செய்தான். அவன் படைத்தலைவனைப்போல் தன் காரியத்தில் முனைந்தான். விப்ரபதன் அரசனைப்போல் வீற்றிருந்தான். பாவம், அவனுக்குக் கைகால்கள் சுவாதீனமில்லை; வெறும் கூச்சல் அதட்டல் இவற்ருல் அந்த இடத்தைக் கலகலப்பாக்கினுன். முக்கியமான வேலைகள் நடந்தேறின. கரி மூட்டைக்காரன், விப்ரபதனின் குறும்புக்குப் பயந்து பெரிய ஜமுக்காளத்தை வெளியே கொண்டு போட்டான். கடைக்கார மாமா தன் பெட்ரோமாக்ஸ்

[1] ஆகா, சிவந்த வண்ணமான இலவமலரின் அழகுதான் என்னே !

விளக்கைக் கொண்டுவந்து தானே கெரோசினும் அதனுள் ஊற்றி வைத்தான். ஜனங்களும் அப்படிச் சொற்பமல்ல—பெரிய கூட்டமே. கனவான்கள் இதில் கலந்துகொள்ள வராமல் போனாலும், இந்தக் கடைக்காரர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களுமே அன்னப் பறவைக் கூட்டம்போல் இடங்களை நெருங்கப் பிடித்துக் கொண்டிருந்தனர். கீழ்த்தரமானவர் நாற்புறமும் சுற்றி வளைத்து நின்றனர். மத்தியில் ஜுமுர் ஆட்டத்திற்கான மேடை. இந்த ஜுமுர் கோஷ்டியில் எவனாவது கவிவாலா இருப்பான், அவனுடன் பாட்டுப் போட்டிக்கு இறங்கலாமென்று நிதாயி எதிர்பார்த்தான். இதுபோன்ற ஜுமுர் குழுவில் யாராவது ஒரு மட்டரக கவிவாலாவாவது இருப்பான். தானாகப் பாட அவனுக்கு யோக்யதை இராது போனாலும், பெயருக்குக் கவிவாலாவாக இந்தக் கூட்டத்தாருடன் சுற்றிக் கொண்டிருப்பான். வழியில் எங்கேயாவது ஜுமுர் கோஷ்டியைக் கண்டால், அதில் பாட்டுப் பாடும் கட்டத்தில் தோன்றி தன் சாமர்த்தியமெல்லாம் காட்டுவான். அதனால் ஜுமுர் ஆட்டமும் சுவாரசியமாக இருக்கும். இப்படி ஒரு கவிவாலா இந்தக் குழுவிலும் இருந்தான். ஆனால் இன்று, அவன் இவர்களுடன் வரவில்லை. ஏதோ வேலை இருக்கவே பின் தங்கிவிட்டான்.

இந்தக் கோஷ்டியினர் ஆலேபூரில் நடக்கும் மேளாவை நோக்கித் தான் கிளம்பினர். இரண்டு நாட்களில் அவன் அங்குச் சேர வேண்டுமென்ற திட்டம் போட்டிருந்தான். இராதுபோனால் அந்த மேளாவில் நிதாயியே ஓர் அரங்கைக் கூட்டியிருப்பானே! எதிர்ப் பாட்டுப் புலவன் இராத குறையால் வெறும் கூத்துப் பாட்டுக்குத் தான் ஏற்பாடாகி இருந்தது. டோல், உடுக்கை, தபலா, ஹார்மோனியம், ஒரு பிடில்—இந்த வாத்தியங்களுடன் ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த ஆடவர்கள் ஆட்டத்தைத் தொடங்கினர். எண்ணெய்த் தடவி நிகுநிகுக்கும் வகிர் வகுத்தத் தலைமயிர்...உடம்பில் பலநிறக் கோடுகள் போட்ட அழுக்கான சொக்காய். பெண்கள் கில்ட் நகையணிந்து பளபளத்தனர்—காதில் ஜுமுக்கி, கழுத்தில் ஆரம்; வங்கி, கைகொலுசு, வளையல்; உடம்பில் மலிவான துணியில் தைத்த பழைய மோஸ்தரான ரவிக்கை; அதற்குமேல் வண்ண மேலாடை. கூந்தல் அலங்கரிப்பெல்லாம் அதிநாகரிக பாணியை அனுசரிக்கப் போய், விகாரமாகவே தோன்றின. உதடுகளில் சிவப்புச் சாயம்; முகத்தில் ஒரே 'பவுடர்' - 'ஸ்நோ'வின் பூச்சு... கால்களில் செம்பஞ்சி; உள்ளங்கைகளில் சிவப்புச் சாயம். இவை யாவும் சேர்ந்துதான் பார்க்க வந்தவர்களின் மனத்தைக் கவர்ந்தன. பெண்

களிடையே வஸந்திதான் பளிச்சென இருந்தாள். உண்மையில் அவள் வனப்புடைய வடிவத்தாள். அவளுக்கு நல்ல ரஸனையும் இருந்தது. அவளுடைய அலங்காரமே எடுத்துக் காட்டியது. கவிவாலா நிதாயி வெளுப்புச் சட்டைமேல் சாதரைக் கழுத்தில் சுற்றியபடி ஜுமுர் கோஷ்டியை ஒட்டியே அமர்ந்திருந்தான். முகத்தில் ஓர் எக்களிப்பு. அவனுக்கு இந்த விசேஷச் சலுகை, அவன் கவிவாலா என்பதனுலேயே !

வாத்தியங்கள் முழங்கின. ஆடலும் பாடலும் தொடங்கின; 'கேம்டா' நடையில்.[1] பெண்களே முதலில் பாட்டை எடுத்தனர். அதையே பின்னணிப் பாடகர்கள் இருமுறைப் பாடினர். அவர்கள் பாடும்போது பெண்கள் ஆடினர். இந்தக் காலத்தில் இந்த 'கேம்டா நாச்சு'க்கு அதிக மௌசு இருந்ததால் அவர்கள் ஜுமுர் நாட்டியத்தைவிட்டு இதில் இறங்கினர். பெயரளவுக்கு ஜுமுரின் சாயல் இதில் கலந்திருந்தது. அதுவும் மிகவும் விரசமான போக்கிலிருந்தது.

பெரியவள் நடுநாயகமாகத் தாம்பூலப் பெட்டியை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் நிதாயிடம், 'என்னப்பா, நீ ஆரம்பியேன் அடுத்தது...?' என்ருள்.

நிதாயி சிரித்தான். ஆனுல் அந்தப் பின்னணிப் பாடகர்களுடன் கலந்துகொண்டு பாடவில்லை. முதல் பாட்டானதும் பெண்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள உட்கார்ந்தனர். அச்சமயம் நிதாயி கழுத்தில் தொங்கும் சாதரைக் கவிவாலாவைப்போல் இடுப்பில் இழுத்துக் கட்டிக்கொண்டு சபையை நோக்கிக் கைகூப்பி, 'ஒரு வேண்டுகோள்' என்ருன்.

நாலாபக்கமும் ஜனங்களிடையே ஒரு கலகலப்பு மூண்டது.

'இவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஆளா?'

'உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்'

'ஓ... நம்ம நிதாயி!'

ஒரு ரசிகன், '*மீசையைச் சிரைத்துவிட்டு வா... மீசையைச் சிரை!*' என்று உரக்கக் கத்தினுன்.

சட்டென இந்தக் கூச்சலையெல்லாம் அமுத்தி ராஜாவின் உங்காரம் எழும்பியது—'சூ... வாயை மூடு... பேசாதே' என்று.

விப்ரபதனும் ஓர் அதட்டல் போட்டான், 'ஆ... ஓ!' என்று.

கூச்சல் அடங்கிப் போயிற்று. இந்த நல்வாய்ப்பைக் கொண்டு நிதாயி, 'நான் ஒரு பதம் உங்களுக்குப் பாடிக் காட்டுகிறேன்' என்ருன்.

---

[1] இது ஒரு தாள வகை.

'உம்... ஆகட்டும் உஸ்தாத்'—ராஜாவின் குரல் கணீரென்று கேட்டது.

நிதாயி பாட்டை எடுத்தான். இடது கையைக் கன்னத்தருகில் வைத்து, வலது கையை வாய்க்கு நேராகப் பிடித்துச் சற்று உடல் குனியத் தொடங்கினான்—

'ஆஹா ராஙா பரண் சிமுல ஃபுலேர்
பாஹார் சுது ஸார்—
[1] ஓகோ ஸகி, தேக்கே ஜா பாஹார்'

இந்த அடியை முதல் தபா பாடி, மீண்டும் எடுக்குமுன் கைச்சிட்டி கையால் தாள அறுதியைக் காட்டி, 'இப்படி...இப்படி... ஓ தபலாக் காரரே போடுங்கள் !' என்றதும் அவன்—

[2] 'சுதுஇ ராஙா ச்சடா, மது நாஇ ஏக ஃபோன்டா
க்ாசேர் அங்கே காண்டா கா்தார்
மன-போம்ரா ஜாஸ்நே பாசே தார் | '

நிதாயின் குரல் இனிமை வழிய, சபை நிரம்பி ஒலித்தது. எல்லோர் உள்ளத்தையும் அசைத்துவிட்டது. 'கா' என்றால் கோமாதா— இந்த மாதிரி பாட்டே அல்ல, அவன் பாடியது. சுவையான கருத் துடைய இந்தப் பாட்டை அத்தனை பேரும் செவிமடுக்க ஆவலா யினர்.

ராஜா நிதாயியை உற்சாகப்படுத்த, 'பலே... பேஷ், உஸ்தாத் பலே... பேஷ்' என்றான்.

விப்ரபதனும், 'பஹுத் அச்சா' என்று பாராட்டினான்.

கடைக்கார மாமா, 'ரொம்ப ஜோர்' என்றான்.

கூடியிருந்த ஜனங்களும் பலத்த கரகோஷம் செய்தனர்.

நிதாயி குஷி பிறந்தவனாய் மெல்ல ஆட ஆரம்பித்துவிட்டான். நாற்புறமும் ஒருதரம் கண்ணோட்டினான். அவன் முகத்தில் புன்னகை. ராஜாவின் பின்புறமாக அவனுடைய சம்சாரம்; அவள் பக்கத்திலேயே இளம் மச்சினி. நிதாயியையே அவள் இழுத்துக் கொள்வது போல் நோக்கினாள். சற்றுநேரம் நிதாயி தன் பாட்டையே மறந்து நின்றான். அந்த மச்சினியை அவன் அலட்சியம் பண்ணி

[1] வெறும் வண்ணப் பகட்டுதான் அதற்கு; அதனுள் தேன் துளியுமில்லை. அதன் உடம்பில் முள் ஜாக்கிரதை! மனச் சுரும்பே, அதனருகில் செல்லாதே!

[2] ஓ தோழி இந்த இலவம்பூவின் செவ்வியை வந்து பார்!

விட்டாலும், அவள் அவனை அலட்சியம் செய்யவில்லை. அவன் பெறும் இந்த கௌரவத்தில் மறைவான பங்கொன்றைக் கொள்ளவே வந்திருக்கிருள். சற்றுநேரம் நிதாயி தன் பாட்டு விட்ட இடத்தை மறந்து நின்ருன்.

ஜுமுர் கோஷ்டியினர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, டோலைத் தட்டி, 'ஏ...தாளம் விட்டுப் போச்சே' என்றனர். அதாவது நிதாயின் பாட்டு பாதியில் அறுந்து விட்டதென்று. சட்டென அவன் விழிப்புற்று அந்தப் பாட்டை விட்டு, வேறு பாணி கொட்டி, 'இப்போது பாட்டில்லை...ஒரு [1] 'சடா' என்ருன்.

'உம்... உம்... உம்... உம்...' என்று தாள ஒத்தைக்காட்டி மறுபடியும் தொடங்கினுன்—

[2] 'ஃபல் தரே நா தரே துலோ, சாலேர் பதலே சுலோ—'

கூடவே அவன் நடனமாடினுன். அடுத்த சரணத்தைப் புனைய இது அவனுக்குக் கிடைக்கும் அவகாசம். நடனமாடியபடி அவன் மேடையிலிருந்தவர்களை ஒரு நோட்டம் பார்த்தான். ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த பெண்கள் பகபகவென்று சிரித்தனர். வஸந்தியின் கண்களில் மட்டுமே அந்தக் கத்தியின் கூர்மை விளையாடிற்று. நிதாயி அவள் பக்கமாகவே திரும்பிச் 'சடா'வை எய்தான்—

[3] 'ஃபுலேர் தரே தா விகாலோ, மாலா ஹலோ கலாய்'

நிதாயின் கண்ணுடன் அவள் கண்ணும் கலந்தபோது வெறி பிடித்தவள்போல் எழுந்தாள். முதியவளைப் பார்த்து வஸந்தி, 'நான் போகிறேன் சித்தி...' என்ருள். இலவமலர் என்றதில் மறைந்துள்ள கருத்தை அவள் புரிந்துகொண்டாள்.

'எங்கே?'

'தூங்கத்தான்'

'தூங்கவா?'

'ஆமாம்!'

'நோக்கு என்னமாவது பைத்தியம் பிடித்துவிட்டதா?'

'இல்லை, இந்த மேடையில் நான் பாடமாட்டேன்...குரங்கு குதிக்கிற இடத்திலே நேக்கு என்ன வேலை'—அவள் இதை

---

[1] சமயோசிதமாகப் பாடப்படும் ஒருவகை ஏசல் பாட்டு (epigram).

[2] இது பழமாவதில்லை; பஞ்சையே தரும். அரிசிக்குப் பதிலாக உமிதான்.

[3] பூ நல்ல விலைக்கு விற்றது; கழுத்தில் மாலை உற்றது.

உரக்கவே சொன்னாள். நிதாயி சட்டென நின்றான். பார்க்க வந்தவர்களில் பெரும்பாலோர் 'டே நிறுத்து...போதும் இந்தக் கோமாளிக் கூத்து' என்று ஆர்ப்பரித்தனர்.

கோபம் தலைக்கேற ராஜா கும்பலைப் பார்த்து, 'எவனடா அவன்?' என்றான்.

வஸந்தி எதுவுமே பேசவில்லை. கழுத்தை வளைத்து ஓர் அலட்சியப் பார்வையை வீசிவிட்டு அந்த இடத்தை விட்டுப்போக யத்தனித்தாள். நாற்புறமும் கூச்சல் எழுந்தது. சிலர் நிதாயி மீது சீறி விழுந்தனர். முன் பணம் வாங்கிய இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த இந்தச் சிறுக்கி இப்படித் தலைகிறுக்காகச் செல்வதைக் கண்டித்தனர் சிலர். ஆனால் இதெற்கெல்லாம் அவள் அசைபவளன்று. குறுக்கே நின்றிருந்தவனைப் பார்த்து, 'வழி விடு ஐயா' என்றாள்.

அவன் வழி விட்டானோ இல்லையோ, பின் புறமாக இருந்த நிதாயி அவள் எதிரே வந்து வழிமறித்தான். கையைக் கூப்பி அவன் சாந்தமாகவே, 'நான் தவறு செய்துவிட்டேன்...நீ போகாதே. போனாயானால் என் தலையைத் தின்றாற்போல' என்று சூள் வைத்தான்.

வஸந்தி பதிலே பேசவில்லை. தன்னிடத்திற்கே திரும்பி விட்டாள். கூச்சல் சற்று ஓய்ந்ததும் அவள் பாடத் தொடங்கினாள். தேர்ந்தெடுத்த பாட்டு. கண்யமானவர்கள் எதிரே இந்தக் 'கேஉர்'[1] வகைப் பாட்டு லாயக்கற்றதென்பதை உணர்ந்து அவள் நல்ல உருப்படி சிலவற்றைச் சேர்த்துவைத்திருந்தாள். அந்தப் பாடல்களில் ஒன்று வஸந்திக்கு நிரம்பப் பிடிக்கும். நாட்டிய அடைவுக்கு ஏற்ற பதம். அதை அவள் இசைக்கத் தொடங்கினாள்—

[2] 'ஜும் ஜுமா ஜும் பாஜ்லோ நாகரீ;
நூபுர் சரணே மோர்! ஓ ஸே தாமிதே நா சாய் கோ!
தோரா ஆய் கோ!
ஜல ஃபேலே காங்கே துலே நே கோ
ஸகி காகரீ

---

[1] 'கேஉர்' என்ற வகைப் பாட்டு நாட்டுப்புறக் கூத்துக்களில் பாடப்படும் இழிசுவை மண்டிய ஆபாசப் பாடல்கள்.

[2] 'ஜும் ஜும் ஜும்' என்று என் மட்குடம் தளும்புது. அதற்கேற்ப, கல் கலீரென்று என் சிலம்பு ஒலி செய்கிறது. அது சற்றும் ஓயமாட்டேனென்கிறது நீங்கள் இங்கே வாருங்கள் நீரைக் கொட்டிவிட்டு தோழியே, குடத்தை இடுப்பில் வைத்துக்கொள். இரவு கழிந்து பொழுது விடிந்தது. தோழியே வந்திடு; இரவு கழிந்து விட்டது. என் கால் சதங்கையும் சற்று நிற்கத் தயங்குது. ஜும்! ஜும்! ... ஜும்!

ரஜநீ ஹஇலோ போர்—ஆய் ஸகி ஆய் கோ !
நிஷி ஜே ஃபுராய் கோ !
நூபுர் சரணே மோர் த்தாமிதே நா சாய் கோ !
ஜூம் ஜூமாஜூம் ஜூமாஜூம் ஜூமாஜூம் !'

ஜூம் ஜூமா ஜூம் என்ற பல்லவியுடன் நடனமாடத் தொடங்கினுள். சபை அப்படியே 'ஆங்' என்று நின்றது. அந்தக் கடுமையான ராஜாகூட சொக்கிப்போய் விட்டான். அந்தப் பெண்ணுக்கு அழகும் இருந்தது; நல்ல குரலும் இருந்தது. கத்தியின் கூர்மை போன்ற சாரீரம். மேலும் அவள் தன் பாட்டிலும், ஆடலிலும் தோய்ந்து போய் விடுகிருள். தாள லய சுத்தமாக, துரித காலத்தில் அடிபோட்டுச் சட்டெனச் சிலையென நின்ருள். சபையில் ஒரே கைத்தட்டல்; ஆரவாரம் ... பாஹ்வா ... பேஷ் ... ரொம்பஜோர் ... என்றெல்லாம். முன்ஞல் வைத்திருந்த தட்டில் டக் டணங்கென்று, கால் ரூபாயும் அரை ரூபாயுமாகக் காசுகள் விழுந்தன. நெல்மண்டி கனச்யாம தத் வில்லையாக ஒரு ரூபாய் வெள்ளிக்காசைப் போட்டான். இதையெல் லாம் நோக்க அவளுக்கு ஒழிவில்லை. அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. மூச்சு இரைக்க மார்பு விம்மியது. அவளுடைய ஒள்ளியமுகம் ரத்தச் சிவப்பாகத் தென்பட்டது. முதியவள் தட்டில் கிடந்த காசுகளைத் திரட்டிக் கொண்டாள்.

நாற்புறத்திலிருந்தும் குரல் எழுந்தது — 'இன்ஞெரு தரம்... இன்ஞெரு பாட்டு !'

நிதாயி வஸந்தியையே நோக்கினுன். அவள் கண் அவனைச் சந்தித்தபோது அவன் வணங்கி, 'இதென்ன வஸன், இன்று ஜுரம் அதிகமாகி விட்டாற்போலிருக்கு !' என்ருன்.

வஸந்தி சிரித்து, 'கொஞ்சம் சாராயம் இருந்தால் கொடேன்' என்று கேட்டாள்.

மறைவிடமாக ஒதுங்கி அவள் கலப்படமற்ற சாராயத்தை இரண்டு விழுங்கு மாந்தியதும் வந்தாள். ஆனுல் முதலில் இருந்த ஜோர் அவளுக்கு இல்லை. அவளுக்கு மூச்சு வாங்கியது. நடையில் தளர்ச்சி தெளிவாகத் தெரிந்தது. பாட்டொன்றை எடுத்தும் அவ ளால் பாடமுடியவில்லை. பின்னணி பாடகர்கள் தாம் பாடினர். அவள் இரண்டொரு நடனபாணிகளை ஆடிக் காட்டியதும் ஓய்ந்து போன நடையுடன் வெளியே போனுள். யாருமே எதுவும் பேச வில்லை; ஏதோ வந்த காரியம் முடிந்தது. இரண்டு பாட்டு, இரண்டு ஆடல் இவற்றைக் கண்டு எடைபோட்டத்தில், காசுகள் நிரம்பிய

அந்தத் தட்டின் கனத்தைவிட, அவர்கள் அடைந்த களிப்பின் கனமே அதிகமாக இருந்தது. வழியில் நின்றிருந்தவர்கள் ஒதுங்கினர், அவள் செல்வதற்கு வழிவிட.

பெரியவள் நிதாயியைப் பார்த்து, ' எப்படி அப்பா...விசித்திரமான பெண் இல்லே ! ' என்ருள்.

நிதாயியும் வெளியே வந்தான். நாற்புறமும் நோக்கி வஸந்தியைத் தேடினுன். தான் அவளிடம் தோற்றுப்போனதை மனத்துள்ளேயே ஒப்புக்கொண்டான். ' இலவமலர் ' என்று அவளைக் குறித்துச் சொன்னது அநியாயந்தான். அத்துடன் பெருத்த குற்றமும் ஆகும். புதிய பாட்டின் அடியொன்று அவன் மனத்தில் மெல்ல முனகியது. ஆனுல் இந்த வஸந்தி எங்கே போனுள் ? ஜுமுர் கோஷ்டியினர் இந்த மரத்தடியில்தானே தங்குவார்கள். மரத்தடியில் ஒரு பாய்மீது ஓர் ஆடவன் அமர்ந்திருந்தான். அவர்களிலேயே மிகவும் வலிவான ஆள். எருமைக் கடா போன்ற உருவம் ; அதே போல் கறுப்பு நிறம்—செந்நோக்கு. ஊமையைப்போல் கம்மென்று இருப்பவன். வேட்கை மிகுந்த எருமை தண்ணீரைக் குடிப்பதுபோல் சாராயம் அருந்தி, நாள் முழுவதும் விழுந்து கிடப்பவன். மாலை நேரத்துக்குப் பிறகே அவன் விழித்தெழும் படலம். நெருப்பை மூட்டி அதன் எதிரே அமர்ந்து சாமான்களை எடுத்துத் தந்தான். அங்கேயும் இந்த வஸந்தியைக் காணவில்லை. நிலவொளி பெருகியோடும் சுற்றுப்புறமெங்கும் கண்ணைச் செலுத்தினுன். இதென்ன ? அவன் விடுதியின் வாசலில் ஆட்கள் நிற்கின்றனரே ; ஏன் ? அவன் முன்னேகி—' யார் ? ' என்ருன்.

—' நாங்கள்தான் '

நிதாயி புரிந்துகொண்டான். வியாபாரி காஸேத் ஷேக்கின் பிள்ளை...நயான் அல்லது நநாயின் கோஷ்டி. ' ஏன் இங்கே நிற்கிறீர்கள் ?' என்ருன்.

' அந்தப் பெண் உன் வீட்டுக்குள் நுழைந்தாளே... '

' நுழைந்தால் என்ன ? உங்களுக்கு இங்கு என்ன வேலை ? ' நயானின் கோஷ்டியினர், ' ஹோ ' என்று நகைத்தனர்.

' மரியாதையாக இந்த இடத்தைவிட்டுப் போங்கள். இல்லே, கலாட்டாதான் ஆகும். நான் ராஜாவைக் கூப்பிடுவேன். போலீஸ்காரன் இருக்கிருன், அவனை அழைத்து வருவேன் ' என்ருன் நிதாயி. நயான் ஷேக் அவனைப் பொருட்படுத்தவில்லை. ஆனுல் ராஜாவிடத்தில் அவனுக்குச் சற்றுக் குளிர்தான். ' இதைக் கேள் நிதாயி... உனக்கு பக்ஷிஷ் தருகிறேன் ' என்ருன்.

நிதாயி அவனை அலட்சியமாக நோக்கிவிட்டு வீட்டினுள் வந்து கதவை மூடிக் கொண்டான். இந்த வஸந்தி எங்கே? எங்கேயும் காணவில்லையே? ஆனால் உட்புறத்து அறைக் கதவை அவன் திறந்து வைத்து விட்டுதானே போனான்? அது மூடியிருக்கவே நெட்டினான். ஆமாம், உட்பக்கம் தாழிடப்பட்டிருந்தது.

நிதாயி கூப்பிட்டான்—'உன்னைத்தான், கேட்கிறதா? நான்... நான்தான்'

'யார்?'

'உன் கரிமாணிக்கம்'

'யார், உஸ்தாதா?'

'உஸ்தாத் கிஸ்தாத் என்பாயே அவனேதான்...'

கதவு திறந்தது. நிதாயி அறையினுள் நுழைந்தான். வஸந்தி மறுபடியும் படுத்துக்கொண்டாள். அவனுடைய படுக்கையைப் பிரித்துப் போட்டு ஹாய்யாகச் சுருட்டிக் கிடந்தாள். 'கதவை தாழிட்டு விடு' என்றாள் வஸந்தி.

'வெளிக் கதவைப் போட்டுவிட்டேனே...'

'முற்றத்து வழியாக உள்ளே குதித்து வருவார்கள்...கதவை மூடு' என்றதும் வஸந்தி ஒரு விநோதச் சிரிப்புச் சிரித்தாள். நிதாயி அவள் நெற்றியில் கை வைத்தபோது திடுக்கிட்டான். 'இதென்ன, இப்படிக் காய்கிறதே... நல்ல ஜுரம் உனக்கு...' என்றான்.

'ஒரே தலைவலி...சற்றுப் பிடித்து விடேன்?'

நிதாயி சிரித்து அவள் தலையைப் பிடித்துவிட்டான். வஸந்தியும் சிரிப்புடன், 'நீ கிஸ்தாத் அல்ல; நிஜமான உஸ்தாத். ரொம்ப அழகாய்ப் பாடுகிறே... உன்னுடைய சொந்தப் பாட்டா?' என்றாள்.

'ஆமாம்? ஆனால் அந்தப் பாட்டையெல்லாம் விட்டுத் தொலைத் தேன்'

'ஏனும்?'—கண்ணை மூடியபடி கேட்டாள் வஸந்தி.

'எனக்குத்தான் தாளம் தப்பிவிட்டதே...'

வஸந்தி வாயைத் திறக்கவில்லை, சிறிதே சிரித்தாள்.

'இன்னொரு பாட்டுக் கட்டியிருக்கிறேன்' என்றதும் சுரம் போட்டு அதை எடுத்தான்—

[1] 'கரிலோ கே புல், ஹாய் ரே!
மந-மாத்தாநோ பாஸே பரே தியே புக்
கராத்-காண்டார் தாரே கேரா கேயாஃபுல்'

[1] இத் தவற்றைச் செய்தது யார்? ஐயோ, இதன மீது மனதைப் பறி கொடுத்தது யாரோ? கூரிய முள் நிரம்பியது இத் தாழம் மலரே.

வஸந்தியின் முகத்தில் ஓசை எழாத சிரிப்பு தோன்றியது.

'அப்புறம்?' என்ருள்.

'அப்புறம் என்ன, இன்னும் அதை முடிக்கவில்லை...'

'அந்தப் பாட்டை எனக்கு எழுதிக் கொடு'

'என் பாட்டையா எழுதிக்கொள்ளப் போகிருய்? பாடுவாயா?'

'ஆமாம்'

ஜன்னலிலிருந்து நிதாயி வெளியே நோக்கிவிட்டு, 'இன்றே அதை முடிப்பேன். யார் அங்கே... யாரது?' என்ருன்.

ஜன்னல் பக்கமாக யாரோ நழுவிச் சென்றதுபோல் இருந்தது. அந்தச் சோம்பேறிப் பயல்களாகத்தான் இருக்கும்.

நிதாயி இதை நம்பிக் கொண்டிருக்கவில்லை. சட்டென ஜன்னலண்டை வந்து கவனித்தான். அவன் எதைப் பார்த்தானே அது அவனுக்குத்தானே தெரியும். ஆமாம், அந்தப் பால் வெண்ணிலாவிலே ஓர் ஆள் ரெயில் பாதையை நோக்கிச் செல்வது தெரிந்தது. நாணற் பூவைப்போல் ஓர் உருவம் வேகமாகப் போகிறது...தலைமேல் அந்தப் பொன் புள்ளியில்லை...யார் அவள்? மைத்துனிதான்!

11

ரகசியம் குடிகொண்ட அந்த நிலவொளியின் வெண்மையில் கடுகிச் செல்லும் அந்த 'நாணல் பூ' ஒன்றிக் கலந்துபோயிற்று. நிதாயி ஜன்னல் விளிம்பருகிலேயே நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் ஒரு வெற்று நோக்கு. அவன் மனத்துள்ளும் தெளிவற்ற சிந்தனையோட்டம். மெய்ப்பாடுகளால் இதயத்துள் ஓர் உத்வேகம். அவன் கல்லாய்ச் சமைந்துவிட்டான். இந்தப் பரந்த வெண்ணிலவு வெள்ளத்திடையே அந்த இளம் மைத்துனி மறைந்தபோது நிதாயியின் அனைத்தும் அவிந்து ஒழிந்தது.

அவன் இப்படித் தன்னையும் மறந்த நிலையில் நிற்பதைப் பார்த்து உடல் நலமற்றுக் கிடக்கும் அந்த வாய்த்துடுக்கான வஸந்தி திகிலடைந்து போனுள்.

வாழ்க்கையைப்பற்றி அவள் அறிந்தவை, சிக்கலானவை; அதே போல் கோணலானவை. நாடோடியான, தாழ்ந்த வகுப்பைச்

சேர்ந்த விலைமாதுக்கு ஏற்படும் இரவு அனுபவங்களே! இதுபோன்ற அனுபவங்களுடையவர்களே—இருட்டில் அலையும் கொடிய மிருகங்களே, இவ்வுலகில் முக்காலே மூன்று வாசியெனலாம். அந்த அனுபவத்தால் வரும் ஒரு திகில் வஸந்திக்கு மூளவே அவள் எழுந்து உட்கார்ந்தாள். காமப் பசியால் அலையும் ஆட்கள் சிலர் வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கின்றனரோ என அவள் ஐயுற்ருள். வெருவி அவள், 'அங்கே என்ன பார்க்கிறே?' என்ருள் நிதாயியை விளித்து.

அப்பொழுதும் நிதாயி பதிலே பேசவில்லை. அவன் அப்படியே அசைவற்று நின்றிருந்தான். மைத்துனியின் புலவி எத்தகையது என்பதை அவன் அறிவான். அவள் கோபித்துக்கொண்டு போவாள்...அவன் அவளைப் பின்தொடர்வான். 'என்னைக் கூப்பிட்டால்தான் திரும்புவேன்' என்ற குறிப்பை உணர்த்தும், அவளுடைய நடை. ஆனல் இன்று அவள் அந்தமாதிரிச் செல்லவில்லை; போயே விட்டாள்! அந்த ராத்திரியில் தனியாகவே போய்விட்டாள்! ஒல்லடங்கிய நடுநிசி நிலா எவர் உள்ளத்திலும், ஓர் அச்சத்தைப் பாய்ச்ச வல்லது. ஆனல் அவளோ இதற்கு அஞ்சவில்லை.

வஸந்தி மெல்ல வந்து நிதாயின் பக்கலில் நின்ருள். ஜுரம் கொதிக்கும் கையால் அவனைத் தொட்டு, 'என்ன, யாராவது ஒளிந்துகொண்டிருக்கிருர்களா?' என்ருள்.

தன் நினைவு வந்து நிதாயி திரும்பினன். அழகும், அதற்கேற்ற கூரிய அறிவும் சேர்ந்த வஸனின் முகம் வாடிக் கிடந்தது. அந்தப் பெரிய பெரிய விழிகளில் சோர்வுக்குறி; குரலில் ஒரு குலைப்பு. இந் நிலையில் அவளை நோக்கியபோது நிதாயின் மனம் நெகிழ்ந்துவிட்டது. வஸந்தியின் தலையை மெல்ல வருடி, 'இவ்வளவு ஜுரம் காய்கிறது; ஏன் எழுந்து வந்தாய்...போய் படுத்துக்கொள்...ஊ...என்னமா சுடுகிறது—நெல்லு போட்டால் பொரியும் போலிருக்கிறதே!' என்ருன்.

'அந்தப் பாவிப் பசங்கள் இங்கே சுற்றிக்கொண்டா இருக்கிருர்கள்? கையில் கத்தியெல்லாம் இருக்குமே?'

'அந்தப் பசங்கள்தானே?'—நிதாயி வியப்புற்று வினவினன். அவள் எவர்களைக் குறித்துச் சங்கைப்பட்டாளோ, அவர்களை எப்போதோ மறந்துபோய் விட்டான் அவன்.

வஸந்தி புருவத்தைச் சுளித்து, 'கப்பெனச் சுரிக் கத்தியை வீசுகிருர்கள் என்று வைத்துக்கொள் என்ன செய்வாய்? பார்த்துக் கொண்டிருந்தாயே, அவர்கள் எந்தப் பக்கம் போனுர்கள்?' என்ருள்.

வஸந்தி எதற்காகப் பயப்படுகிருளென்பது இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. 'ஓ, அவர்களைச் சொல்லுகிருயா ... நான் பார்த்தது அவர்களை யல்ல. நீ பயந்து சாகாதே... வா, வந்து படுத்துக்கொள்' என்று அவளை இழுத்தான்.

—'யார் அங்கு வந்தது? யாரைப் பார்த்துக் கொண்டிருந்தாய்? ஜன்னலண்டை எட்டிப் பார்த்தது யார்?'

'யாரென்பது தெளிவாகத் தெரியவில்லை'

'தெரியவில்லையா?'

'இல்லை'

'ஆனுல், ஏன் அங்கேயே நின்றுகொண்டிருந்தே?—எதையோ இழந்துவிட்டதுபோல் உன் முகம் இருந்ததே?'

வஸந்தியின் கூரிய பார்வை அந்த இருளிலும் சுடர்வது போலிருந்தது.

நிதாயி எதுவுமே பேசவில்லை. சுண்டிய முகத்துடன் அவன் வஸந்தியையே நோக்கினுன்.

வஸந்தி திடுமெனக் கலகலவென்று நகைத்தாள். கூர்மை தோய்ந்த விரைவுச் சிரிப்பு. 'என் கண்ணிலே மண் தூவப் பார்க்கிருயே; எட்டிப் பார்த்த ஆசாமி தலையில் முட்டாக்கிட்டிருந்தாள்! ஓ, தெரிகிறது...என்னை இங்கே பார்த்ததுமே...' என்றதும் மீண்டும் துரித சந்தத்தில் அவள் சிரித்தாள்.

நிதாயிக்குத் தலையே தொட்டுக் கால்வரை சிவ்வென ஒரு குளிர் பரவியது. வஸந்தி சிரித்துவாறு கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்ருள்.

நிதாயி அவளை விளித்து, 'வஸன்...ஓ வஸன், எங்கே போகிறே?' என்ருன்.

வெளி வாசலிலிருந்து அவனுக்குப் பதில் கிடைத்தது—

'வஸன் அல்ல...உன்னுடைய தாழம்பூ...முள்ளடர்ந்த தாழம்பூ... அவளைத் தொட்டால், உன் கையைத்தான் கீறிக் கொள்வாய்... ரத்தந்தான் வரும்...'

இருந்தும் நிதாயி வெளியே வந்தான்.

அந்த யதேச்சைக்காரி அப்பொழுது காஸேத் ஷேக்கின் பிள்ளை நயானுடன் என்னவோ பேசிக்கொண்டிருந்தாள்.

இந்த நிலையில் அவளைக் கூப்பிடச் சென்றவன், வெட்கிப் பின்னடைந்தான். தன் வீட்டு வாசல் படியிலேயே திகைத்து நின்ருன். அந்தப் பக்கம் ஸ்டேஷன் இருக்கும் திசையிலிருந்து ஜுமுர் ஆட்டம் பாட்டத்தின் ஒலி வந்தது. பெட்ரோமாக்ஸின் வெளிச்சம் மரக்

கிளைகள் மீது இங்குமங்கும் பரவித் தென்பட்டது. இந்தப் பக்கம் மனிதர் அரவமே இல்லை, நிச்சப்தம். மேலைவானில் நிலா தாழ்ந்து கொண்டிருந்தது. கீழ்வானில் இருள் அடர்ந்திருந்தது. வஸந்திக்கு மானம் ஈனம் ஒன்றுமே இல்லை. காஸேதின் மகன் நயானுடன் இருளில் எங்கோ மறைந்து விட்டாள். நிதாயி ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டே நின்றுன். இருந்தாற்போலிருந்து ஒரு பாட்டு எழுந்தது அவன் மனத்துள். கடவுள் இந்த மனித உள்ளங்களை வைத்து என்ன வேடிக்கையெல்லாம் செய்கிருர்! நிகழ்வதொன்று; தன்னுடைய மாயையால் அதை வேறு விதமாகவே மாற்றி விடுகிருன். உள்ளே வஸந்தி இருப்பதை மைத்துனி பார்த்து விட்டுப் போய்விட்டாள். இந்தக் கூத்துக்காரியோ, ஜன்னல் வழியாக அவள் எட்டிப் பார்த்ததை அறிந்து விட்டடித்தாள்.

இந்த விசித்திர மனோபாவங்களை வைத்தே அவன் பாட்டைக் கட்டினுன்—

[1] பங்கிம விஹாரி ஹரி வாங்கா தோமார் மன் |

இன்று அவன் இந்நிகழ்ச்சி வாயிலாக நியதியின் விளையாட்டை, கடவுள் இயற்றும் புதிரைக் கண்டு கொண்டான். தீண்டாதவர் குலத்தில் தான் பிறந்திருப்பதுபோலவே இருந்தது, கடவுளின் இந்தக் கொடிய பரிகாசம். இந்த பாட்டின் மூலம் ஹரியை அவன் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

விடிகாலையிலேயே, ராஜாவின் உரத்தக் குரல் கேட்டு அவனுடைய துயில் கலைந்துவிட்டது. அவன் தன் அறையில் பாட்டைக் கட்டிய வண்ணம் கண்ணயர்ந்து போனவன், விழித்தெழுந்ததுமே அந்தப் பாட்டின் அடியை நினைவிற் கொண்டான்—

[1] 'பங்கிம விஹாரி ஹரி வாங்கா தோமார் மன்,
குடில கௌதுகே துமி ஹய்கே கர் நய்
அகடன கர் ஸங்கடன'

ராஜா அவனை உரத்துக் கூப்பிடவே ஏதோ முக்கிய விஷயந்தான் என்று ஊகித்துக் கொண்டான் நிதாயி. தனக்குத்தான் பாடுவதற்கு அழைப்பு வந்திருக்கும்; அதைச் சொல்லவரும் ஆளுடன் ராஜா

[1] வளைந்து நிற்கும் விஹாரி! ஹரியே! கோணலுடையது உன் மனம்! நீ எப்போதும் குறும்பில் குதூகலம் கொண்டவன். நடக்காதது உன்னுல் நடந்துவிடும்; உள்ளதை நீ இல்லாதாக்குவாய்.

வந்திருப்பானென்று நினைத்ததுமே அவனுக்கு இருப்புக்கொள்ள வில்லை. இயல்பான புன்னகை முகத்தில் தோன்ற அவன், வாயில் கதவைத் திறந்தான். வெளியே ராஜா நின்றுகொண்டிருந்தான். அவன் பின்னுல் ஜுமுர் குழுவைச் சேர்ந்த அந்த முதியவள். ராஜா சட்டென உள்ளே நுழைந்து சுற்று முற்றிலும் யாரையோ தேடுவது போல் பார்த்தான்.

நிதாயி வியப்புற்று, 'என்ன சமாசாரம் ராஜா?' என்ருன்.

'எங்கே அவள், அந்தப் பாடகி?'

'பாடகியா?'

ராஜா 'ஹ ஹ' என்று சிரித்து, 'குட்டெல்லாம் வெளியாகிவிட்டது. உஸ்தாத்...நேற்று இரவு' என்றதும் உருண்டு உருண்டு சிரித்தான். அவன் மிகுதிச் சொல்ல வந்ததை அந்த வேட்டுச் சிரிப்பு தடுத்தது.

நிதாயிக்கு விஷயமே புரியவில்லை.

அவனுக்கு விளக்கமாகச் சொன்னுள் அந்த முதியவள். இதுவரை வெளியே நின்றவள் உட்புறம் வந்து, 'நாசமாப் போனவளே... அடியே வஸன்..வெளியே எழுந்து வா. இந்த வண்டிக்குப் போக வேண்டுமே நாமெல்லாம்?' என்ருள்.

நிதாயி அவளைப் பார்த்து, 'அவள் இங்கே இல்லையே' என்ருன்.

—'இல்லே? என்ன? அவள் மேடையிலிருந்து இங்கேதானே வந்தாள்? நீயும் பின்னுலேயே போனுயே. அப்புறம் அவளைத் தேடினேன்...உன் வீட்டில்தான் இருக்கிருளென்று சொன்னுர்களே?'

நிதாயி அதற்கு, 'ஆமாம், சில துஷ்டப் பயல்கள் அவளை வழியில் மடக்கினுற்போலிருக்கு. சட்டென என் வீட்டிற்குள் புகுந்து கொண்டாள். இங்கேதான் அவள் படுத்திருப்பதைப் பார்த்தேன். அவள் உடம்பு நல்ல ஜுரத்தால் சுட்டது. கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் தான் அவள் எழுந்து போய் விட்டாள். வாசலில் யார் யாரோ இருந்தார்கள்...அவர்களுடன் போனுள்' என்ருன்.

அந்த முதியவள் வேதனையில் ஆழ்ந்தாள்; ராஜாவின் குதூகலமும் சிரிப்பும் அடங்கிவிட்டன.

'காஸேத் ஷேக்கின் மகன் நயானுடன்தான் அவள் போனுள். அவள் அவனுடன் அந்த ஆலமரத்தண்டைதான் என்னமோ பேசிக்கொண்டிருந்தாள்...வாருங்கள் போய்ப்பார்க்கலாம்' என்ருன் நிதாயி.

அந்த இடத்தை நோக்கி நடந்தனர். அங்கு அவள் கிடைத்தாள். மூச்சு பேச்சிராமல் விழுந்து கிடந்தாள்.

குடைபோல் விரிந்து நிழல் மண்டிய அந்த ஆலமரத்தின் கீழ், தரையில் புல்லே இல்லை. அந்த மண்மேல், வஸந்தி ஆழ்ந்த நித்திரையில் கிடந்தாள். அவளுடைய கற்றைக் கூந்தல் விரிகோலமாகப் புரண்டிருந்தது. உடம்பெங்கும் ஒரே புழுதி. அவள் வாய்ப்புறம் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. பக்கத்திலேயே காலி புட்டி; ஒரு எச்சிற் கல்லை. நெருங்க நெருங்க ஒரே சாராய நெடி வீசியது. எல்லோரும் மூக்கை மூடிக்கொண்டனர்.

அப்போது பெரியவள், 'நாசமாப் போனவளே... இதனாலேயே இவள் செத்தொழியப் போகிறாள்...வஸன், அடீயே வஸன்!' என்று எழுப்பினாள் அவளை.

ராஜா அவளைப் பார்த்து, 'நிஷா ரொம்ப ஜாஸ்தி போலிருக்கு' என்றான்.

நிதாயி வேகமாக அந்த இடத்தைவிட்டு அகன்றான். சற்றுப் பொறுத்து அவன், ஆவி வரும் சூடான தேநீரை எடுத்து வந்தான். பாலே கலக்காத சா. அதில் எலுமிச்சம் ரசம் பிழிந்திருந்தது. இதை உட்கொண்டால் சாராய மயக்கம் தெளிந்துவிடும். மகாதேவ் கவிவாலா அதிகமாகச் சாராயம் போட்டுவிட்டால் மயக்கம் தெளிய அவருக்கு இப்படித்தான் கொடுப்பது வழக்கம்.

அச்சமயம், வஸந்தி தள்ளாடத் தள்ளாட எழுந்து உட்கார முனைந்தாள். முதியவள் அவளை உலுக்கி, 'எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையே...' என்றாள்.

'இதோ இந்த தேக்கஷாயத்தைக் கொடுங்கள்...உடனேயே அவளுக்கு நிஷா கலைந்துவிடும்'

தேக்கஷாயத்தை அருந்தியதும் உண்மையில் வஸந்திக்குத் தெளிவு ஏற்பட்டது. சிவந்த கண்களைத் தூக்கி அவள் நிதாயியையே பார்த்தாள்.

பெரியவள் அவளை அதட்டி, 'எழுந்து வாடீ' என்றாள்.

'குளிர்ந்த நீரில் குளித்தால் சரியாகிவிடும். உடம்பெல்லாம் ஒரே புழுதி...' என்றான் நிதாயி.

வஸந்தியின் சிரிப்பொலி அப்போது அவன் பேச்சையும் அடக்கி எழுந்தது. அவள் தள்ளாடத் தள்ளாட எழுந்து நின்றாள். நிதாயியின் முன்னால் வந்து கனத்த குரலில், 'உனக்குப் பார்க்கச் சகிக்காது போனால் துடைத்துவிடேன், உஸ்தாத்... எத்தனை அக்கறை என்மேல் பாவம்!' என்றாள்.

அவளையே நோக்கி நிதாயி சற்றுச் சிரித்தான். தோளில் போட்டிருந்த சவுக்கத்தைக்கொண்டு அவள்மீது படிந்திருந்த புழுதியைத் துடைத்து, 'அச்சா, நமஸ்காரம் வரட்டுமா?' என்றான்.

பெரியவள்—'அப்பனே !' என்று கூப்பிட்டாள்.

நிதாயி திரும்பினுன்.

'நான் சொன்னேனே ; யோசனைப் பண்ணுயா ? அதுதான்—எங்கள் கோஷ்டியில் வந்து சேர்வதுபற்றி...' என்ருள் அவள்.

நிதாயி இதற்குப் பதில் கூறுவதற்கு முன்பே சாராய மயக்கில் இருந்த வஸந்தி மீண்டும் ஆரம்பித்துவிட்டாள், அந்தத் தொடர் சிரிப்பை. அவளுடைய சிரிப்பு ஓயாதுபோல் இருந்தது.

வெறுப்புற்றவளாய்ப் பெரியவள், 'பாழாய்ப்போன பெண்ணே, ஏனடீ இப்படிச் சிரிக்கிறே...மூச்சு போய்விடப் போகிறது ' என்ருள்.

அந்தச் சிரிப்பிற்கிடையே எப்படியோ பேசினுள்—'சித்தி...சித்தியோய்... நம்ம கரிமாணிக்கத்துக்கு ஓர் ஆசைக் கிளி இருக்குது தெரியுமா ? நேத்து இரவு... ஹி...ஹி...ஹி...ஹி...' என்று சிரிக்கலானுள்.

ராஜா பொறுமையிழந்தவனுய், அவளை அடக்கி, 'என்ன சும்மா கக்கக்கென்று சிரிக்கிறே பொண்ணே ?' என்ருன்.

வஸந்தியின் இரு கண்களும் சுடர்விட்டன. ஆனுல் மறுநிமிடமே அவள் திரும்பவும் அதேபோல் சிரிக்க ஆரம்பித்தாள்—'ஹி...ஹி...ஹி...'

அந்தப் பக்கம் ஸ்டேஷனில் டிரெயின் வருவதற்கான மணியடித்தது. ஸ்டேஷன் மாஸ்டரே மணியை அடித்துவிட்டு, 'ஏ ராஜா... ராஜா' என்று கூப்பிட்டார்.

ராஜா ஓடினுன் ; இராதுபோனுல் ஏதாவது நடக்கக் கூடாதது நடந்துவிடக் கூடும்.

நிதாயி சிரித்தவண்ணம், 'அச்சா, வாருங்கள்...' என்றதும் அவனும் தன்னிடத்திற்குத் திரும்பினுன்.

பெரியவள் கடுமையான குரலில், 'அடி வஸன், வரப் போகிருயா, இல்லை இங்கேயே ஆட்டம் காட்டப் போகிருயா ?' என்ருள்.

வஸந்தி மிகக் களைப்பினுல், தடுமாறும் காலுடன் நடக்கலானுள். ஆனுல் அப்பொழுதும் அவள் சிரிப்பது நிற்கவில்லை. சட்டெனத் திரும்பி அவள், கையை அசைத்துக் குறிசெய்து உரத்தக் கூச்சலாக 'நான் போகிறேன்...' என்ருள்.

நிதாயி அந்த கிருஷ்ணசூடா மரத்தடியில் வந்து அமர்ந்தான்.

அந்தப் பக்கம் ரெயில் வண்டித்தொடர் ஸ்டேஷனைக் கடந்துகொண்டிருந்தது. அது, சிஸ்... சிஸ்... என்று நீராவியை வெளிப்படுத்திக்கொண்டே இரைச்சலுடன் சென்றது. ஒவ்வொரு பெட்டியாக அது நகர்ந்தது. ஒரு பெட்டியில் அந்த ஜுமுர் கோஷ்டியினர்

இருந்தனர். அந்த வஸந்தி ஒரு பெட்டியின் கதவோரமாக ஜன்னலில் தலையை வைத்துப் படுத்திருப்பது தெரிந்தது.

விசித்திரமான பெண் !—நிதாயி தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். எத்தனையோ ஜுமுர் கோஷ்டிகளை அவன் பார்த்திருக்கிறான். அவன், இதுபோன்ற கோஷ்டிகளில் சேர்ந்து பாடியும் இருக்கிறான். ஆனால் இப்படிக் கத்தியின் கூர்மைபோன்ற ஒரு பெண்ணை அவன் பார்த்ததில்லை. கத்தியின் கூர்மையன்று, நெருப்புச் சுவாலை. அந்தப் பெண் ஒரு தீப்பிழம்பாகவே சுடர்விட்டாள். இருப்பினும் அவளிடம் நல்ல தன்மையும் இருந்தது; அழகும் இருந்தது. எவரையும் திகைக்கச் செய்யும் அதிசயமான பெண். முன்னாள் இரவு அவன் புனைந்த அந்தப் பாட்டு அவனுக்கு நினைவு வந்தது—

[1] கரிலோ கே புல—ஹாய்ரே !
மந மாதாநோ பாஸே பரே தியே புக்
கராத-காண்டார் தாரே கேரா கேயாஃபுல.
கரிலோ கே புல் ! ஹாய்ரே !

ரெயில் வண்டி போய்விட்டது. நிதாயி அதே இடத்தில் இருந்தான். தண்டவாளங்கள் நீளும் தொலைவில், அவை இரண்டும் சேர்ந்திடும் முனையையே நோக்கினான். வஸந்திதான் போய் விட்டாள்; இனிமேல் இந்தப் பக்கம் வருவாளோ மாட்டாளோ—அதிசயமான பெண் அவள் ! ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு விதமாக அவள் அழகு மாறியது. ஒரே இரவில், அவளைக் குறித்து மூன்று பாட்டுக்களைப் புனையும் உணர்வு ஏற்பட்டது. இதை நினைக்கையில் அவன் மனம் எங்கோ நிலைகொண்டது. அவனை என்னவோ ஒரு வேதனை உலுக்கிவிட்டது. அந்த லைன் வளைவில் இன்னும் சற்று நேரத்தில் ஒரு பொன்புள்ளி பளபளக்கும்; அப்புறம் அந்த நாணல் மலர் தெரியும். அந்தக் காட்சி அவன் நெஞ்சை அள்ளிக் கொள்ளும். அவன் குறையாகப் பாடிய பாட்டு குறையாகவே நின்றது. வழிமீது விழியைச் செலுத்தி, எதிர்நோக்கியிருந்தான். மைத்துனி எப்போது வருவாள்? ஏன், இன்னும் அவளைக் காணோம் ?

அதென்ன ? இல்லை வேறு யாரோ ? கண்பார்வையின் பிரமை. கற்பனை செய்யும் மருள். அந்த ஒளியிடையே, கானல்நீரென

[1] முன்னால் பார்க்க.

என்னவோ தோன்றுகிறது...மறுபடியும் அது மறைகிறது. நிதாயி சிரித்தான். இப்போது மணி பகல் பத்து இருக்கும். மைத்துனி பன்னிரண்டு மணி வண்டி வருவதற்கு முன்புதான் கடிகாரமுள்ளேப் போல் வருவாள் அல்லவா ?

இருந்தாலும் அவன் எழுந்து போகவில்லை. மரத்துத் திம்மை மீது சாய்ந்தவாறு சற்றுத் தூங்க நினைத்தான். இன்று அவனுக்குப் பொழுது நகராது போலவே ஓர் உணர்வு ஏற்பட்டது.

அதோ ? ஆமாம் அவள் தான் வருகிறுள்...வெண்மையான கோடு ஒன்று ; அதன் தலைமீது ஒரு பொன்புள்ளி..இரு அவளல்ல—அந்தக் கோடு அவளைப்போல் விரைவாக நகரவில்லையே...அது அவளுடையதுபோல் நெடியதாகவுமில்லை !

அதோ இன்னென்று புலனுகிறது...அவள் அல்ல.

நிதாயி நினைத்ததில் தவறில்லை. அந்தக் கோடு நெருங்க நெருங்க ஒரு பெண்ணின் வடிவமாகவே காட்சி அளித்தது. அவள் தலை மீது குடம் இருந்தது. வேறு எவளோ பால் விற்கும் பெண். இப்படி ஒவ்வோர் உருவமும் வேறு பெண்ணுக மாறி அவனைக் கடந்து சென்றது. இந்த மைத்துனிக்கு என்ன ? இன்று ஆளேயே காணேமே ?

பதினெரு மணி வண்டியும் போய்விட்டது.

ராஜா, ' உஸ்தாத் ' என்று கூப்பிட்டான்.

துட்கி நிதாயி சிரித்தவண்ணம், ' என்ன ராஜா ? ' என்முன்.

' இங்கே உட்கார்ந்து என்ன தியானம் பண்ணுறே...புதுப் பாட்டு ஏதாவது கட்டுகிருயா...? '

' அதெல்லாம் இல்லை.. '—இதை எதிர்பார்க்காதவன் போல் அவன் சிரித்தான்.

' உன்மேல் எனக்குக் கோபம் உஸ்தாத் '

' ஏன் ராஜா, நான் என்ன தப்பு செய்தேன் ? '

' அந்த ஜுமுர்வாலி சொன்னுள், உன்னுடைய இதயராணி... உனக்கு இனியவள் ஒருத்தி இருக்கிருளாமே...?'

நிதாயி, ' ஹ ஹ ' என்று சிரித்தான். அப்புறம் ராஜாவின் கையை இழுத்து, ' வா. சா சாப்பிட்டு வரலாம். இன்னும் சா குடிக்க வில்லை. மச்சி இன்னும் பாலை எடுத்துக்கொண்டு வரவில்லை. நீ அந்த ஜுமுர்வாலியின் பேச்சை நம்புகிருயா ?...ஆமாம் ராஜா, என் மனத்திற்கு உகந்த ஓர் ஆள் இருப்பது உண்மை...அந்த ஆள் யாருமில்லை...நீதான்...நீயேதான் ' என்முன்.

'நானு?' என்றதும் ஒரு விகாரச் சிரிப்பால் அந்த இடத்தைக் கலக்கிவிட்டான். ராஜா அவனை அணைத்துக்கொண்டு, 'முத்தம் தரட்டுமா உஸ்தாத்?' என்றதும், அதே விகடச் சிரிப்பு. அந்தச் சிரிப்பொலியைக் கேட்டு எதிரொலியாக வானும் சிரித்தது; காற்றும் சிரித்தது.

12

ஒருநாள் சென்றது, இரண்டு நாளும் ஆயிற்று, மூன்ருவது நாளும் கழிந்தது.

வரிசையாக மூன்று நாட்கள் ஆகியும் அந்த இளம் மைத்துனியைக் காணவில்லை. நாலாவது நாள் வேதனைக்குள்ளாகி நிதாயி ஒரு முடிவுக்கு வந்தான், இன்று அவள் வராதுபோனுல் அவளுடைய கிராமத்துக்குச் சென்று விஷயம் என்ன என்று கண்டறிவதென்று.

பன்னிரண்டுமணி டிரெயினும் போய்விட்டது. அவள் வரவில்லை. பால் விற்றுவிட்டுச் செல்லும் மற்ற பெண்களும் திரும்பிப் போயாயிற்று. அவர்களையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென நிதாயிக்கு அடிக்கடி ஒரு நைப்பாசை. ஆனுல் இதைக் கேட்க அவனுக்குக் கூச்சமாக இருந்தது. 'எதற்காக வெட்கப்படுவது, இதில் தவருென்றுமில்லையே' என்று அவனுக்குத் தோன்றியது. இருந்தும் வெட்கத்தை மீற அவனுல் முடியவில்லை. கம்மென்று தன் இடத்துக்கே திரும்பி, எண்ணமிடலானுன். எந்த வியாஜமாகவாவது மச்சியின் பக்கத்திற்குப் போவதென்று முடிவு செய்தான். வாத்தோ, கோழியோ, முட்டையோ வாங்குகின்ற சாக்கில் போவதென்று துணிவு கொண்டான். மச்சியின் வீட்டில் இவை கிடைக்குமென்பது அவனுக்குத் தெரியும். அவள் தன் வீட்டைப்பற்றிய அற்ப சமாசாரங்களைக்கூட அவனிடம் கூறியிருக்கிருள்! அவள் வீட்டுச் சுவரில் ஊசியை எங்கே குத்தி வைத்திருக்கிருள் என்பதை அவன் கண்ணைப் பொத்தியபடி தேடிக் கொண்டு வந்துவிடுவான்.

'உஸ்தாத் என்ன பண்ணுகிருய்?'—ராஜாவின் குரல்தான். நிதாயிக்கு அதிசயமாக இருந்தது, ராஜா ஹிந்தியில் பேசுபவன்—

இப்போது தெளிவாக வங்காளி பேசுகிருனேயென்று. அவனுக்கு ஹிந்தியிலேயே பதில் சொன்ஞன்—'ராஜா, ஆஓ மஹாராஜ், கியா கபர்? (வா மகாராஜா, என்ன சேதி?)'

ராஜா செய்தியை எடுத்தான். வேதனையுடன் வங்கமொழியி யிலேயே சொன்ஞன்—'கெட்ட சமாசாரந்தான் உஸ்தாத், மச்சி இருக்குதே அவள் விஷயந்தான் ரொம்ப சங்கடமாகிவிட்டது தம்பி'

நிதாயின் இதயத்தைப் பிளந்தாற்போலிருந்தது, இச்செய்தி யைக் கேட்டதும். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திகிலில் உறைந்துபோய் ராஜாவையே நோக்கிஞன்.

'இன்ருேடு மூன்று நாளாகிறது...அவளுக்கு என்னவோ, தெரிய வில்லை—நல்ல பெண்ணப்பா..லச்சுமி மாதிரி. வீட்டிலே மாமஞர், மாமி, நாத்தஞர், ஓரகத்தி இவர்களுடன் சண்டை போடுகிருள். என்னவோ தலைகால் தெரியாமல் அனர்த்தம் பண்ணுகிருள். நேற்று இரவே தொட்டு மூர்ச்சை போட்டு விழுந்துவிடுகிருளாம். பல் கிட்டிக்கொண்டு விட்டதாம். கைகாலெல்லாம் கட்டை மாதிரி போட்டுவிட்டு நீட்டிக் கிடக்கிருளாம். ...'

அடக்க முடியாத பரபரப்பால் நிதாயின் இதயம் உள்ளுக்குள் குலைக்கத் தொடங்கிவிட்டது. ராஜாவின் இரு கைகளையும் கெட்டி யாகப் பிடித்தபடி, 'நீ அவளைப் பார்க்கப் போவாயா ராஜா?' என்ருன்.

'சம்சாரம் பார்க்கப் போயிருக்கு. அது திரும்பி வரட்டும். நானும் போகலாமென்றுதான் இருக்கேன்' என்ருன் ராஜா.

'நானும் வருகிறேன்'

நிதாயின் கண்களில் நீர்த்திரையிட்டது; தலையைக் குனித்து அதை மறைக்கலாஞன்.

ராஜா பெருமூச்செறிந்து, 'உம், நல்ல பொண்ணு உஸ்தாத்' என்றதும் நின்றுவிட்டு, மீண்டும், 'மச்சியின் புருஷன் என்ன அழுருன் அழுருன்! கதறுகிருன்...இளம் வயசு...அந்தப் பொண்ணு பேரில் அவ்வளவு பிரியம்...அப்பாவிப் பையன்' என்றதும் அவன் மழுங்கிய சிரிப்பொன்று சிரித்தான்.

நிதாயின் கண்களிலிருந்து இருபோட்டு நீர் டப் டப் பென்று விழுந்தது. சட்டெனக் கண்களைத் துடைத்துக் கொண்டான். அப்புறம் ஒரு நெடுமூச்சு எறிந்து, 'ராஜா' என்று கூப்பிட்டான்.

'உஸ்தாத்!'

'ஏதாவது வைத்தியம் பார்த்தார்களா?'

சப்பிட்டவனாய் ராஜா தன் உதடுகளைத் தொங்கப்போட்டு, 'டாக்டரோ, வைத்தியனோ பார்த்துத் தீர்க்கிற கதையா? காற்று கறப்பு எதுவோதான் சேஷ்டை செய்யுது. யாரோதான் ஏவல் வேலை செய்திருக்காங்கோ...' என்றான்.

இந்த வார்த்தை நிதாயியைத் தட்டி எழுப்பி விட்டது. சட்டென அவனுக்குப்பட்டது, ஒரு வேளை அந்தச் சிறுக்கி வஸந்தியின் வேலைதானோ? இந்த ஜுமுர் கோஷ்டிப் பெண்களே எந்த மந்திரமும் மாயமும் செய்யக் கூடியவர்கள்—ஆடவர்களை வசியம் செய்யும் வித்தையில் தேர்ந்தவர்கள் என்று,

அப்போது ராஜா, 'காளி ஆத்தா கோயிலுக்குச் இட்டுச் சென்று அவளை நிறுத்திக் குறி கேட்கலாமென்று இருக்கிறார்கள். விஷயம் என்னவென்று தெரிந்துபோகும்' என்றான்.

சற்றுநேரம் அங்கேயே இருந்ததும், நிதாயின் கையைப் பிடித்து, 'வா தம்பி, கொஞ்சம் சா சாப்பிட்டுவிட்டு வரலாம்' என்றான்.

இப்போது அவன் ஹிந்தி மொழிக்கே திரும்பிவிட்டான். அவனுக்கு அந்த மொழிதான் பேசுவதற்குப் பாந்தமாக இருந்தது.

ராஜாவின் வீட்டிலேயே நிதாயி அமர்ந்திருந்தான். ராஜாவின் மனைவி, மச்சினியைப் பார்க்க அவள் புக்ககத்திற்குப் போனவள் இன்னும் திரும்பவில்லை. குறி கேட்டானதும் சமாசாரம் தெரிந்து கொண்டு வருவாள் போலும். அந்த சமாசாரத்தைக் கேட்கத்தான் நிதாயி அவ்வளவு அக்கறையுடன் அங்குத் தங்கினான். கஷ்ட நிஷ்டூரம் எது வந்தாலும் ராஜா ராஜாதான். அவன், அவல் பொரி, கத்தரிக்காய் பஜ்ஜி, உருளைக்கிழங்கு வறுவல், பச்சை மிளகாய், வங்காயம், இவற்றுடன் கொஞ்சம் ஸந்தேஷும் வாங்கி வந்தான்.

நிதாயி அவனைப் பார்த்து, 'இதெல்லாம் எதற்கப்பா... இந்தத் தடபுடலெல்லாம் இப்போது எதற்கு...நன்றாக இல்லையே?' என்றான்.

'வயிற்றுக்குப் போடாமல் எதுதான் நடக்கிறது தம்பி? வயிற்றைச் சுண்டப் போட்டால் அது கேட்குதா? சும்மா சாப்பிடு...' என்றதும் இடிக் குரலெடுத்து, 'டே பையா... எங்கேடா தொலைந்தே' என்றான்.

அவன் தன் பிள்ளையைத்தான் அப்படி அழைத்தான். ராஜாவின் பிள்ளையின் தோரணையும் ஏறக்குறைய அந்தக் காலத்து யுவராஜாக்களிடம் காண்பதுபோலவே இருக்கும். பகலில்லை இரவில்லை, எப்போதும் ஏதாவது வேட்டைமேல் புத்தி. உண்டை வில்லுடன் வயல்வெளி, தோப்பு துரவு எங்கும் திரிவான். மைனா, தேன்சிட்டு, குயில், காகம்—எது கண்ணில் படுகிறதோ அதைச் சுட்டுத் தள்ள வேண்டியது. அவனுடைய குறிக்கோள் சுட்டுக் கொல்லுவதுதான்;

மாமிசத்திற்காக அல்ல. சில சமயம் பறவைக் குஞ்சுகளைப் பிடித்து வளர்ப்பான். அவற்றிற்கு உணவுபோட வெட்டுக்கிளி போன்ற பூச்சிக்களை வேட்டையாடுவான். இத்தகைய யுவராஜா எங்குப் போய்விட்டானே? அவனுடைய குரலே கேட்கவில்லை. ராஜா சினந்து மறுபடியும் உறுமினன்—'பன்னிப் பயலே, ஹாராம்ஜாதா' என்றெல்லாம்.

அப்போதும் பதில் வரவில்லை. 'உன் யுவராஜ் மேட்டு வெளியில் எங்கேயாவது மாயப் பறவையைப் பிடிக்கப் போயிருப்பான்' என்று முன்னெல்லாம் நிதாயி வேடிக்கையாக அந்தப் பையனைப்பற்றிச் சொல்லுவான். ஆனால் இன்று அவனுக்கு இப்படிப் பேச இஷ்ட மில்லை. நெட்டுயிர்த்து ராஜாவின் கோபத்தைத் தணிவிக்க அவன் மெல்லச் சிரித்தான்.

ராஜா தன் மகனைத் தேடவில்லை. தான் கொண்டுவந்த, தின் பண்டங்களை இரு பங்காக்கி, ஒன்றை நிதாயிடம் நீட்டி மற்றொன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு ஓசைபடாமல் தின்னத் தொடங்கிவிட்டான். 'நான் என்ன பண்ணுவேன், பயல் தின்னக் கொடுத்து வைக்கவில்லை...போகட்டும்' என்றான்.

நிதாயி எதுவுமே பேசவில்லை. அவனுடைய நினைவெல்லாம் அந்த மச்சியைக் குறித்தே. அவனுடைய கற்பனைக் கண்முன் விரிந்த அச்சிரக் காலத்து மேட்டுவெளியில், பயிர்நிலம் புல்தரை எங்கும் பொன்னிறப் பசலைப் போர்த்து இருந்தது. வெயிலில் அந்த வண்ணப் பொலிவு மேலும் பளிச்சென விளங்கியது. வான் வையம் நிரம்பிக் கதிரவனின் தங்கம் தோய்ந்திருந்தது. திசைமுடிவில் கண்காணு உலகு ஒன்று மெல்லத் துடிப்பதுபோன்று இருந்தது. அதினிடையே, அதன் எச்சாரும் பொன்புள்ளி யேற்ற நாணற்பூவின் காட்சியே பரவியிருந்தது. எதை நோக்கினும் இந்தப் பொன்புள்ளி ஒளிரும் நாணற்பூவே அசைந்தது, ஆடியது.

அரக்கப் பசியுடன் ராஜா அவக் அவக் கென்று எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டான். 'என்ன உஸ்தாத், ஒன்றையுமே தொட வில்லையே?' என்றான்.

மழுங்கிய சிரிப்புடன் நிதாயி, 'வேண்டாம்...பிடிக்கவில்லை' என்றான்.

'சே... என்ன இது, சும்மா தள்ளு... வயிற்றுக்குப் போட்டால் எல்லாம் சரியாகிவிடும்... பசியில்லையா?' என்றான் ராஜா.

'அதற்குக் குறைவில்லை. ஆனால் எனக்கு எதுவும் பிடிக்க வில்லையே'

‘உஸ்தாத், உனக்கென்ன?’

ராஜாவின் இரு கைகளையும் பற்றி நிதாயி திடுமென, ‘ராஜா, நீ அன்று என்னைக் கேட்டாய், உன் மனசுக்கு ஏற்ற ஆள் யாரென்று?’ என்றான்.

‘ஆமாம்’ என்றபோது ராஜாவுக்குச் சட்டென விஷயம் புரியவில்லை. அதனால் அவன் நிதாயின் முகத்தையே நோக்கினான்.

‘என் மனதுக்கு உகந்தவள் அந்த மச்சியே, ராஜா! அவள்தான் என் மனப்பீடத்தில் ஏறிக்கொண்டவள்...’ என்றதும் நிதாயி விக்கி விக்கி அழுதுவிட்டான்.

ராஜா சாப்பிடுவது நின்றுவிட்டது. கண்கள் வியப்பால் விரிய கவிவாலாவையே பார்த்தான். அவனால் நம்ப முடியவில்லை. வேறு சமயமாக இருந்தால் அவன் இதற்குள் சிரித்துக்கொண்டே விஷயத்தை உலகு எங்கும் பரவச்செய்து விட்டிருப்பான். ஆனால் இந்தப் பெண்ணுக்காக அவனுடைய உள்ளமும் வேதனைப்பட்டது. இருவருமே வாய்வாளாது இருந்தனர் சற்றுநேரம்.

இப்படி இருக்கையில் திடுமென ராஜாவின் சம்சாரத்தின் தீவிரக் குரல் கேட்டது.

அவளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள நிதாயி ஆவலும் திகிலும் கலக்க முற்படுகையில், அவனுடைய உதடுகள் மெல்லவே துடித்தன. ‘என்ன நடந்தது?’ என்ற சொல்லே அவனிடமிருந்து வெளிவந்தது.

ராஜாவின் மனைவி தீப்பற்றிய வெடி மருந்தென வெடித்தாள்—‘எந்த முனியோ, பேயோ பிரம்ம ராட்சசோ...’

கேட்க வழங்காத வசவுகளை அவள் நிதாயிமீது பொழிந்தாள். நிதாயியையே விரலால் சுட்டி அவள், ‘உன்னால்தான்...நீதான்... உன் கண்பட்டுதானடா அவள் அப்படி ஆகிவிட்டாள்...உன் ஆசையிலே கொள்ளி வைக்க... எத்தனை கெட்ட எண்ணம் உனக்கு?’ என்று அடுக்கினாள்.

அவள் இப்படிக் கொடிய சாபனை, நாராசமான வசவுகளுக் கிடையே வெளியிட்டப் பேச்சுக்களிலிருந்து விவரம் தெரிந்தது. இன்று காளி ஆத்தாமுன்பு மச்சியை நிறுத்திக் குறி கேட்டிருக் கிறார்கள். காலையே தொட்டு, அவளை உபவாசத்தில் வைத்துப் பகற்பொழுது வெயிலில் அவளை மந்திரசுத்தி செய்த பீடத்தின்மீது நிற்கச்செய்து, மூக்கில் திணறும்படி தூபப் புகையைப் பிடித்து, காளி ஆத்தாவின் தெய்விகச் சக்திவாய்ந்த ஒரு விளக்குமாற்றை கையில் ஏந்திப் பூசாரி குறி கேட்டான்—‘காளீ, கராளீ முண்டமாலினீ!

பூதமா, பிரேதமா, டாகினியா, யோகினியா, ஹாகினியா, சாகினியா ராட்சசனு, பிசாசா, உன்னைப் படுத்துவது யார்? அவனைக் கொண்டு வா...அவன் ரத்தத்தை நீ உறிஞ்சிக் குடி...' என்றெல்லாம்.

மச்சினியின் உடலில் அப்போது ஒரு நடுக்கம் ஏற்பட்டதாம்.

'சொல்லம்மா—உன்னை யார் பிடித்துக்கொண்டது? காளிமீது ஆணையிடு தாயே...'

அப்போதும் அவள் எதுவுமே பேசவில்லை; வெறித்தே நோக்கினுளாம். அவள் உடல் நடுக்குற்றதாம். பின்னர், புரிபடாத மந்திர உச்சாடனம் எல்லாம் நடத்தி, தெய்விகச் சக்தி மிளிரும், மந்திர சுத்தியான சாட்டையால் அவளை அடித்ததாகத் தெரிந்தது. அப்போது வீரிட்டு அவள், 'ஐயோ சொல்லிவிடுகிறேன்...ஒன்றும் செய்யாதீர்கள்; அடிக்காதீர்கள்...சொல்லிவிடுகிறேன்' என்றுளாம்.

அவள் நிதாயின் பெயரைச் சொன்னுளாம். 'அந்த உஸ்தாத், கவிவாலா, எனக்குச் சிவப்பு மலர் தந்தான்' என்றதும் அவள் மெல்லிய குரலில் பாடத் தொடங்கினுளாம்—

[1] கால சுலே ராஙா கொஸு^ம்
ஹேரேச்சோ கி நயனே?' என்று.

அப்போது ராஜாவின் மனைவிக்கு ஞாபகம் வந்துவிட்டது, நிதாயியின் வீட்டினுள் ஜன்னல் வழியாக தற்செயலாய்க் கண்ணைச் செலுத்தியபோது, அவன் அவள் கூந்தலில் அந்தப் பூவைச் செருகியது யாவும். அதை அத்தாட்சியாகக் கொண்டு எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூவித் தீர்த்துவிட்டாள். மற்ற விஷயங்களைப்பற்றி அந்த மச்சியைக் கிளறிக் கேட்கவில்லையாம். அங்கேயே மிகுதி விஷயங்களை எல்லோர் எதிரிலும் அம்பலப்படுத்திவிட்டாள் அந்த மகராஜி. இங்கே நிதாயியைக் கண்டதுமே அவளுக்கு ஆத்திரம் பொங்கி வந்துவிட்டது. சொல்லம்பால் அவனைப் பொத்தலாக்கிவிட்டாள்.

வேறு நாளாக இருப்பின், ராஜா இத்தனை பேசியதற்கு அவளைத் தலைமயிரைப் பிடித்துப் பிரம்பால் விளாசியிருப்பான். ஆனுல் இன்று அவனும் முடங்கிக் கிடந்தான். நிதாயி தலை குனிந்தபடி எப்படி இருந்தானே, அப்படியே உட்கார்ந்திருந்தான். வசவுகளுடன் அந்த மச்சி சொன்ன விஷயத்தையும் கேட்டு அவன் கல்லாகச் சமைந்து போனுன்.

[1] முன்னுல் பார்க்க.

சிறிது நேரமானதும் டிரெயின் வருவதன் அடையாளமாக ஸ்டேஷனில் மணியடிக்கும் ஓசை கேட்டது. ராஜாவுக்கு நினைவு வந்தது. நிதாயியையும் அவன் தட்டி எழுப்பினுன். மூன்று மணி வண்டி வரும் நேரம், ராஜா ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். நிதாயியை அசைத்து அவன், 'எழுந்திரு தம்பி...என்ன செய்வது உஸ்தாத்? நான் ஸ்டேஷனுக்குப் போகவேண்டுமே...' என்முன்.

நிதாயி எழுந்து கிருஷ்ணசூடா மரத்தடிக்கு வந்து அமர்ந்தான். எதிலும் வெறுப்புற்று, இடிந்துபோய் நிதாயி தான் செல்லவேண்டிய வழியைப்பற்றிச் சிந்தித்தான்—'எந்தப் பாதையில் சென்முல் இந்த அவமானத்திலிருந்து தலைதூக்க முடியும்; எந்த மார்கத்தைக் கடைப் பிடித்தால் சாந்தி பிறக்கும்?'

ஏறக்குறைய அதே தருணம், ஓர் ஆள் அவன் எதிரே வந்து, 'ஐயா, உஸ்தாத்...'என்று கூப்பிட்டான்.

நிதாயி பற்றற்றவனைப்போல் அவனை நோக்கினுன். சட்டென அவனுடைய முகம் பிரகாசமாகியது. 'யார் நீயா?' என்முன்.

வந்தவன், 'ஆமாம், நான்தான்! உங்களிடமே வந்தது' என்முன்.

'என்னிடமா?'

'ஆமாம்—ஒரு நெருக்கடியில் வந்தேன் தம்பி. வஸன் என்னை அனுப்பினுள்...'

'வஸந்தியா...?'

'ஆமாம், அந்த ஜுமுர்வாலியே!'

வந்தவன் அந்த ஜுமுர் கோஷ்டியில் பிடில் வாசிப்பவன்.

அப்புறம் சில மணிநேரம் பொறுத்து.

அச்சிரக் காலத்து மங்கலான மாலைப்பொழுது. செக்கர் வொளி யுடன் நாட்டுப்புறத்து புகையும், புழுதியும் சேர்ந்து பழுப்பான மங்குல் நாற்புறமும் சூழ்ந்திருந்தது. அந்தப் பக்கம் மாலையில் வர வேண்டிய டிரெயின் வந்துகொண்டிருந்தது. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, காடோவாவுக்குப் போகும் வண்டி. கைகாட்டியைத் தாழ்த்தி ராஜா, லைனின் பாயின்ட் அருகில், கையில் நீல விளக்குடன் நின்றிருந்தான். இருட்டில் ஓசைபடாமல் நிதாயி வந்தான்.

'ராஜா!' என்று அழைத்தான்.

ராஜா திரும்பிப் பார்த்தான். நிதாயின் காலில் கான்வாஸ் ஜோடு; உடம்பில் சொக்காய்; கழுத்திலே சாதர்; அக்குளில் ஒரு மூட்டை. ராஜா வியப்புற்று அவனை, 'எங்கே கிளம்பிவிட்டே உஸ்தாத்?' என்று கேட்டான்.

ஐந்து ரூபாய் அவனிடம் தந்து, ‘ இது மச்சிக்கு நான் கொடுக்க வேண்டிய பால் பாக்கி...அவளிடம் கொடுத்துவிடு’ என்ருன் நிதாயி.

நிதாயியையே ராஜா நோக்கினுன். ‘ மச்சினியின் ‘ஸாதி’யை (மணவாழ்க்கை) நான் ரத்து பண்ணிவிடுகிறேன். அவளை உனக்குக் கட்டிவிடுகிறேன்... அவளை உனக்கு ‘ஸாங்காஇ’ (சம்பந்தம்) பண்ணித் தந்துவிடுகிறேன் ’ என்ருன்.

நிதாயி, தரையை நோக்கியவாறு சிலநேரம் இருந்து முகம் தூக்கிச் சிரித்து, ‘ சீ ! ’ என்ருன்.

‘ சீ...என்ன ? ’

‘ ஒருவனுடைய இல்வாழ்க்கையைக் கெடுத்துவிட்டா... சே ’

ராஜா ஒரு மூச்சுவிட்டு, வாளாயிருந்தான்.

‘ இதை நம்பு ராஜா, நான் கவி பாடித் திரிபவன். எனக்கு மந்திர தந்திரம் எதுவுமே தெரியாது. அந்த மாதிரி ஒருவருக்கும் தீங்கிழைத் தவனல்ல. ஆனுல் காதல்தான் என்னை அவள் பக்கம் இழுத்தது. ஆனுல் அவளைத் தீண்டிப் பாழாக்கவில்லை...தெரிந்துகொள் ’

இருள் கவிந்து வந்தது. டிரெயினின் எஞ்சின் முகப்பொளி அதனூடே ஒள்ளிய கீற்றை வரைந்து, ஸ்டேஷனில் நுழைந்தது. நிதாயி சரசரவென்று ஸ்டேஷனை நோக்கி ஓடினுன். அந்த எஞ்சி னின் பிரகாசமான முகப்பொளியில் நிதாயி பூண்டிருந்த கோலம் ராஜாவுக்கு நன்கு புலனுகியது. உஸ்தாத் எங்கோ போகத்தான் கிளம்பிவிட்டானென்று ஊகித்துக்கொண்டான். இருட்டில் இதை அவன் கவனிக்கவே இல்லை. உரக்கவே ராஜா, ‘ எங்கே போகிருய் உஸ்தாத் ? ’ என்ருன்.

இதற்குள் டிரெயினும் வந்துவிடவே அதன் இரைச்சலில், நிதாயி என்ன சொன்னுன் என்பதே ராஜாவின் காதில் விழவில்லை. டிரெயின் நுழைந்ததும் ராஜா பாயின்ட்டை விட்டுப் பிளாட் பாரத்துக்கு வந்தான்.

‘ உஸ்தாத்... உஸ்தாத் ! ’

இதற்குள் நிதாயி ஒரு பெட்டியில் இடம் கொண்டுவிட்டான். பெட்டியிலிருந்து அவன் முகத்தை வெளியே நீட்டி, ‘ராஜா’ என்ருன்.

வேதனைத் துழவும் குரலில் ராஜா, ‘ எங்கே போகிருய் தம்பி ? ’ என்ருன்.

இயல்பான சிரிப்புடன் நிதாயி, ‘ ஓரிடத்திலிருந்து அழைப்பு வந்தி ருக்கிறது. ஆலேபூர் மேளாவுக்குச் செல்கிறேன் ’ என்ருன்.

ஆலேபூரில் முதல் தடவையாக ஆர்ப்பாட்டமான மேளா ஒன்று கூடுகிறது. ஆனுல் யாருமே நிதாயியை வந்து கூப்பிடவில்லையே.

ராஜாவுக்குச் சந்தேகம் தட்டியது. மச்சினிக்குச் சேரவேண்டிய பால் பாக்கிக்கு ஐந்து ரூபாய் தந்துவிட்டு, அவன் பாடுவதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டா போகிறான்? இது வெறும் பொய். 'பொய் சொல்றே, உஸ்தாத்' என்றான் ராஜா.

'என்னை நம்பு ராஜா... இதோ பார் என்னை அழைத்துப் போக வந்த ஆளை...'

அங்கே அந்த ஜும்ர் கோஷ்டியைச் சேர்ந்த பிடில்காரன் உட்கார்ந்திருந்தான். கோஷ்டியின் தலைவி மேளாவுக்குப் போயிருக்கிறாள். நிதாயியைக் கூட்டிவர ஓர் ஆளை ஏவியிருக்கிறாள்; அவர்களைச் சேர்ந்த பாடகன் ஓடிவிட்டானாம். வஸன் அவனைத் தடியால் புடைத்துத் துரத்திவிட்டாள்.

'ஆலேபூர்... அங்கிருந்து காந்தரா... காந்தராவை விட்டதும் காட்டோவா... அங்கிருந்து அக்ரதீபம்... அப்புறம்...' என்று நிதாயி கூறுவதற்குள் எஞ்சினின் சீட்டி மிகுதி வார்த்தைகளை அழுத்தி விட்டது.

சீட்டி நின்றதும் வண்டியும் கடகடக்கென்று புறப்பட்டது. நகரும் வண்டித் தொடருடன் ராஜா ஓடிக்கொண்டே, 'எதற்கு உஸ்தாத், அக்ரதீபம் எங்கே? எப்போதுமா உன்னை அழைத்துப்போக வருவார்கள்...? இறங்கிவிடு உஸ்தாத்... என்னுடன் நிம்மதியாக இரு... இறங்கிவிடு' என்றான். அவனுடைய குரலில் தென்பட்ட ஓர் ஏக்கம் நிதாயியைச் சற்றுக் கலங்கச் செய்தது. ஆனால் அடுத்த நிமிடமே அவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு சிரித்தான். 'ஆம், யாராவது அழைத்தால் நான் எப்போதும் போகவேண்டியது தானே, ராஜா?' என்று தன் மனத்துடன் கூறிக்கொண்டான்.

இதற்குள் டிரெயினும் பிளாட்பாரத்தைவிட்டு விசையேற நகர்ந்து போயிற்று.

13

ரெயில் வண்டித் தொடர் கிழக்குப் பக்கமாக ஒரு வளைவைக் கடந்து தென்திசையாகத் திரும்பியது. இந்த வளைவருகில்தான் அந்த மைத்துனி, தலைமீது பளபளக்கும் பால் குடத்துடன் வருவது புலப்

படும். வண்டி தென் திசையே சென்றது. அதன் இடதுபுறம் விரிந்த கிழக்குவான் விளிம்பில் பூருவ பக்கத்து, பதினுன்காம் நாள் மதி எழுந்து கொண்டிருந்தது. வானில் மெல்லிய பஞ்சு போன்ற மேகப் பத்திகள், பனித்திரைப் போர்த்தது போன்று. அதன் மறைவில் சந்திரபிம்பம், மஞ்சள் உருண்டையென, மாப்பிள்ளை வசந்த நீராடிவிட்டு மணப்பந்தலுக்குள் நுழைவதுபோல் மெல்ல எழுந்தது. நிதாயி தன்மயமாகி அப்பேரெழிலை நோக்கினுன். சின்ன ரெயில்வே பாதையானதால் பெட்டிகள் அதிகமாக ஆடின. பெரிய லைனில் செல்லும் வண்டிகளைவிட, வெற்றுக் குடம் போலவே அசைந்தன. நிதாயியை அழைத்துச் செல்லும் ஆள் அந்த ஜுமுர் கோஷ்டியில் பிடில் வாசிப்பவன். அவனுக்கு நன்ருக மத்தளங்கூட வாசிக்கத் தெரியும். சற்று இலேசான குடிபோதையில் இருந்தான். வண்டி குலுங்கிக் கொண்டே செல்லும் ஓசை அவனுக்கு எரிச்சலைத் தந்தது. ‘இதென்ன உஸ்தாத், வண்டி ஜம்பதாளம் போடுகிறதே?’ என்றதும் அந்த வண்டி செல்லும் சத்தத்திற்கு ஏற்ப பெஞ்சி மீது தாளம்போட ஆரம்பித்து விட்டான். இதைப் பார்த்து எதிர்ப்பக்க மாக இருந்த இரு சிறுபிள்ளைகள் வண்டி செல்லும் ஓசையின் மருமத்தைப் புரிந்து கொண்டுவிட்டனர். அவர்களுள் ஒருவன் தாளத்திற்கு ஏற்ற சொற்களான—

[1] ‘காஞ்சா தேந்துல்—பாக்கா தேந்துல்—
காஞ்சா தேந்துல்—பாக்கா தேந்துல்’

என்று சொல்லத் தொடங்கினர்.

ஆனுல் நிதாயின் மனமோ எதிலுமே ஊன்றவில்லை. அந்த வட்ட மதியத்தையே நோக்கியவாறு சிந்தனையுள் ஆழ்ந்தான்—மச்சினி, ராஜா, அவன் மகன் ‘யுவராஜா’, அந்தக் கடைக்கார மாமா, விப்ரபதன், கிருஷ்ணசூடா மரத்தடி, ஸ்டேஷன், கிராமம் இவற்றைக் குறித்த பல நினைவுகள். நடுநடுவே தோன்றும் அவனுக்கு, அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விடலாமா யென்று.

பக்கத்து ஸ்டேஷனையும் கடந்தாயிற்று. அவனையும் மீறிக் கண் களில் நீர் வழியத்தொடங்கியது. அவன் அழுது விட்டான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தனக்குத்தானே சிரித்தான். அவன் தன் உணர்வைப் பெற்று இயல்பான சுக சாரீரத்தை எடுத்

[1] வண்டி செல்லும் சத்தத்திற்கு ஏற்ப அமைந்த சொற்கள்—‘புளியங்காய், புளியம்பழம்’ என்பது இவற்றின் பொருள்.

தான். இரண்டுதரம், த...ந...நா... என்று சுரம்போட்டுப் பாட்டை ஆரம்பித்தான்—

‘ சாந்த் துமி ஆகாசே தாக்; ஆமி தோமாய் தேக்போ க்காலி
சூந்தே தோமாய் சாஇ நாகோ ஹே சாந்த்,
தோமார் ஸோனுர் அங்கே லாக்பே காலி ’

வாத்தியக்காரன் உடனேயே மயக்கம் தெளிந்து, ‘ பாஹ்வா [1] உஸ்தாத்! உங்களைப் பாட்டில் போட்டுவிட்டதுபோலும் ’ என்றதும் பெஞ்சிமீது பெரிய சாப்பா கொடுத்து, ‘ திரிகட—தா—தா ’ என்று தீர்மானம் தந்தான். பாடிக்கொண்டே நிதாயி வேறு சரணத்தைப் பிடித்தான். அவன் மனத்துள் பாட்டு நிரம்பி வழிந்தது—

[2] ‘ நா நா, தா ஓ கரோ மார்ஜநா
ஆஜ் தேக்கே ஆர் தா ஓ தேக்போ நா—
ஜாந்தாம் நாகோ ஏஇ கு-சோக்கேர் திஷ்டிதே
விஷ தேய் ஹே டாலி ’

ஒவ்வொரு ஸ்டேஷனாக வண்டித்தொடர் கடந்து ஏகிற்று. நிதாயி அந்தப் பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடினான். அத்தனைப் பாடியும் அவனுக்குத் தெவிட்டவில்லை.

சட் சட் சடவென்று தண்டவாளங்கள் சேருமிடங்களைத் தாண்டி ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது வண்டி. ஸ்டேஷன் போர்ட்டர் குரல் கொடுத்தான்—‘ காந்தரா...ராம்ஜீபன்பூ ஊ ஊ ர்.’ மத்தளக்காரன் ஜன்னல் வழியாக முகத்தை நீட்டி ஸ்டேஷனின் தோற்றத்தைக் கண்டு, ‘ உம், இதற்குள்ளா வந்து விட்டோம்... உஸ்தாத்... இறங்கும்... இறங்கும் ’ என்றான்.

நிதாயி இறங்கினான்; ஆனால் அவன் பாடுவதை நிறுத்தவில்லை. குரலை மட்டும் மந்தனமாக்கிப் பாடியவாறு ஸ்டேஷனைத் தாண்டி பாதையில் இறங்கினான்.

[3] ‘ தாஇ சலேச்சி தேசாந்தரே ஆந்தார் க்குஞ்ஜேஇ
ஃபிர்போ குரே

[1] ‘ பேஷ் ’ என்று சொல்வது போன்ற ஒரு பாராட்டுமொழி.

[2] மாட்டேன், மாட்டேன்...மன்னிக்கமாட்டேன். இனிமேல் உன்னைப் பார்க்க மாட்டேன். அந்தக் கெட்ட கண்பார்வையால் விஷத்தை நீ வெளியே கொட்டினாய்; எனக்கு இது தெரியவில்லையே.

[3] அதனால் நான் தேசாந்தரம் போகின்றேன். இருளிலே அலைந்து திரிகின்றேன். காக்கையைத் தூது அனுப்பி வை. பதினாறு கலையும் வளர்ந்தவளாகிறாய்!

காகார் முகே வாத்தா திஓ—ஷோல் கலாய் பாட்சோ
க்காலி '

ஸ்டேஷனிலிருந்து சுமார் இரண்டு மைல், மண்வழியில் நடந்த பிறகே நிதாயின் மனத்திலிருந்து அயர்ச்சி யாவும் விலகின. [1] ராஸ பூர்ணிமையில் கூடும் இந்த ஆலேபூர் மேளா பிரசித்தமானது. ஏகப்பட்ட கும்பல் வரும். பூர்ணிமைக்கு நெருங்கும் பதினுன்காம் நாள் நிலாவெளிசத்திலும், இரண்டு கல்தொலைவில் மேளா கூடும் இடத்துக்கு மேல், ஆகாயத்தில் செவேலென்ற ஒளி படர்ந்திருந்தது. இந்த மேளாவைப் பார்க்க நிதாயி இதற்குமுன் ஒரு தடவை வந்திருக்கிருன். எங்குப் பார்த்தாலும் ஒரே விளக்கொளி. அந்த ஒளியில் வரிசையான கடை கண்ணிகளில், எத்தனையோ சாமான்கள், பண்டங்கள் குவிந்திருப்பது தெரியும். வழிதுறையெங்கும் ஒரே மக்கள் திரள். ஆங்காங்கே பல வேடிக்கை தமாஷாக்கள் காட்டும் கொட்டகைகள். ஜாத்ரா கானம், வில்லுப் பாட்டு, பாஞ்சாலி, ஜுமுர் இவைபோன்ற ஆடல் பாடல் நிகழ்ச்சிகளுக்குக் குறைவே இராது. இவற்றைப் பார்க்கவரும் கூட்டம் வேறு. இதுபோன்ற நிகழ்ச்சி யொன்றில்தான் நிதாயி பங்குகொள்ள வேண்டும். இரண்டு கட்சிகளுக்கிடையே போட்டா போட்டி நடக்கும். யாராவது ஒருத்தன், ‘ இதைப்பாடு ’ என்று சொல்லிவிட்டால் போதும் எல்லோரும் சேர்ந்து, ‘ பாடு...பாடு ’ என்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அதைப் பாடாதுபோனுல் பிழைத்து வர முடியாது. நிதாயி சேர்ந்துகொள்ளும் ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த பாடகன், வஸந்தியுடன் சண்டை போட்டுவிட்டு, அவனுடைய இனியாளைக் கூட்டிக்கொண்டு வேறு கோஷ்டியில் சேர்ந்து விட்டான். மேலும் அவனுடைய குரலும் கெட்டுப்போய்விட்டது. ஆளும் ஓயாக் குடியன். பாட்டுக் கட்டவும் திறமை போதாது. சென்ற தடவை ஏதோ பாட்டின் சுரதாள விஷயமாகப் பெருத்த சண்டை மூண்டு விட்டது. வஸந்தியும் நன்ருகக் குடித்து விட்டிருந்தாள். அந்தப் பாடகன் வஸந்தியைக் கன்ருபின்ருவென்று திட்டவே அவள், அவனைத் தடியால் மொத்திவிட்டாள். அதன் பலனுக அவன், தன் இனியாளை இழுத்துக்கொண்டு வேறு ஜுமுர் குழுவிற்குப் போய்விட்டான். கவிவாலா அல்லது நல்ல பாடகன் இராதுபோனுல் எப்படி வஸந்தியின் ஜுமுர் கோஷ்டியின் நிரல்கள் நடக்கும்? வேறு வழியின்றி அந்த முதியவள், அதன் தலைவி

[1] ராஸலீலை தொடங்கும் கார்த்திகைப் பௌர்ணமி.

நிதாயியை நினைத்தாள். அவர்களுடைய மானம் மரியாதையெல்லாம் அவனால்தான் தக்கவேண்டும். அதற்காகவே அவனுக்கு ஆளை ஏவித் தருவித்தாள்.

மனசிலேயே ஒரு நல்ல மெட்டை உருவாக்கிக் கொண்டே நிதாயி வழி நடந்தான். அவன் அதிலேயே தோய்ந்திருந்தான். விளக்கொளியின் செம்மை பரவிய வான்விளிம்பையே அவனுடைய கண்கள் நோக்கின. அந்த இளமச்சி, ராஜா, யுவராஜா, கிருஷ்ண சூடா மரம் யாவும் இந்தப் பகட்டொளி எதிரே நிற்கும் தன் உடலின் நீண்ட நிழலிருட்டிலே மறைந்துவிட்டன. அவன் முன்னே செல்லச் செல்ல, பின்புறமாக விழும் இந்த நிழல் அளவில் பெரிதாகவும், இருள் நிரம்பியும் தோன்றியது. மெல்ல வளரும் இந்த நிழற்கருமையில் பழையன யாவும் கரைந்து வந்தன.

அந்தப் பகட்டான மேளாவே நிதாயியை இழுத்தது. மச்சியைப் பற்றிய சிந்தனையே, பழைய இடத்தைப் பற்றிய நினைவுகளையெல்லாம் மீறி அவனுக்கு ஓர் உணர்வை எழுப்பிவிட்டது. இன்று மேடையில் கவிவாலாகவே காட்சி தரப்போகின்றான். சண்டி கோயில் மேளாவில், அவன் மகாதேவ் கவிவாலாவுடன் போட்டியிட்டது வேறு, இது வேறு. இன்று அவன் உண்மையான புலவன். அந்த யோக்கியதையினால்தான் அவனை அழைத்துச் செல்கின்றனர். இதுபோல் நல்லகாலம் வருமென்று அவன் நினைக்கவே இல்லை. அவன் பாடப் போகிறான்; வஸந்தி ஆடப் போகிறாள். மற்ற பெண்களை அவன் ஆடவிடப் போவதில்லை. அவர்கள் பின்னணிப் பாட்டைத்தான் பாடவேண்டும்—இவ்வாறு கற்பனையில் திட்டம் செய்துகொண்டு நடந்தபோது சட்டென ஒரு பாட்டின் அடி முளைத்தது—

[1] வ்ரஜ-கோகுலேர் கூலே காலோ காலிந்தீர் ஜலே—
ஹேலே தோலே ஓரே ஸோனார் கமலா !
காலோ ஹாதே சூயோ நாகோ, லாகிபே காலி—
ஓஹே குடில காலா !

இதற்குச் சுரம்போட்டு அவன் மெதுவாகப் பாடினான். வேற்றுக் கட்சியைச் சேர்ந்த கவிவாலா தமாஷ் பேர்வழியாம். ஆரம்பத்திலேயே தன்னுடைய சமத்காரத்தையெல்லாம் காட்டி, அதனு

[1] பிருந்தாவன கோகுலத்தின் கரையிலே, இருண்ட யமுனை நீரிலே ஒரு பொற்றாமரை அசைந்து ஆடுது பாராய்! அதைக் கரிக்கையால் தொடாதே நீ. தொட்டால் கறுப்பு ஒட்டிக்கொள்ளும், ஓ கறுப்புக் குறும்புக்காரா !

லேயே வெற்றி கொள்வாளும். நிதாயி முதலிலேயே தன் திறமையைக் காட்டப் போவதில்லை. மனிதர், மதுபானம் என்ருல் ஓடி வருவார்கள். பால்பாயசம் என்ருல் ஒதுங்கிப் போவார்கள்—இந்தப் பேச்சை அவன் நம்புவதில்லை. அப்படிப் பால் பிடிக்க வில்லை, அவன் மதுவைத் தரவும் தயாராளுன்...பார்க்கலாமே!

சட்டென ஓராளுடன் முட்டிக்கொண்டு நிதாயி நிற்கவேண்டிய தாயிற்று. மேளாவுக்கு அருகில் வந்துவிட்டான். ஜனங்களின் நெரிசல் அதிகமாகிவிட்டது. இன்ஞேர் ஆள் அவன்மீது மோதிக் கொண்டு, ‘என்னடா கண்ணில்லே? என்னமோ ஓடறயே?’ என்ருன்.

நிதாயி கைகூப்பி, ‘தப்புதான் தம்பீ’ என்ருன். அப்போது அந்த முரடன் தணிந்துபோய், ‘பாத்துப் போகணும்’ என்ருன்.

அப்போது நிதாயி, ‘என் பேரில் மட்டும் தப்பில்லே... யோசனை பண்ணப்பா’ என்ருன்.

அந்தத் தடியன் இளித்து விடுவிட்டான்.

அந்த இருண்டு முடுக்கைத் தாண்டியதுமே மேளா கூடுமிடம். மேளா கொட்டகைகள் பலவற்றைக் கடந்து சென்று மேளா இடத் திற்கு நேர் எதிரான ஒரு திறந்தவெளிக்கு வந்தனர். இங்கு விளக் கொளி சற்று மட்டு. ஆனல் மக்கள் நெரிசல் அதிகம். மேளாவின் இந்தப் பகுதியில் ஒரு மரத்தடியில், சிறு சிறு குடில்கள் அமைத்துக் கொண்டு ஜுமுர் கோஷ்டியார் தங்கியிருந்தனர். அதற்குச் சற்றுத் தொலைவில் சூதாடு கழகம். அதற்கப்பால் சச்சவுக்கமாக ஒரு திறந்த இடம். அங்கே வரிசையாகக் குடிசைகள்—வேசிகளின் விடுதி. அங்கே தேனடையில் ஈக்கள் மொய்த்திருப்பதுபோன்ற ‘உம் உம்’ என்ற ஓசை.

இடை இடையே சாராயம் அருந்தி, வெறி தலைக்கேறியவர்களின் கூச்சலும் கொம்மாளமும் கேட்டன. இதுபோன்ற இரண்டொரு கூச்சலில் நிதாயின் பாட்டின் இரண்டொரு சரணங்கள் சரியாக அமையவில்லை.

வஸந்தி கோஷ்டியார் தங்கியிருக்கும் குடிலுக்கு முன்ஞல் மரத் தடியில் ஒரு பாய்மீது வீற்றபடி பெரியவள் பாக்கு நறுக்கிக்கொண்டி ருந்தாள். இரண்டு பேர் சமையலைக் கவனித்தனர். ஒரு குடிசைக் குள் பளிச்சென்ற விளக்கொளியில் ஆடவரும், பெண்களும் சிலர் சேர்ந்து குலுங்கக் குலுங்கச் சிரிப்பது தெரிந்தது. அவர்களிடையே வஸந்தி இருப்பதை நிதாயி கண்டான். அவளைத் தவிர வேறு எவர் அந்த மாதிரி சிரிப்பார்கள்!

நிதாயியைப் பார்த்ததுமே அந்த முதியோள் சந்தோஷம் பொங்க எழுந்திருந்தாள். 'வா... வாப்பா... உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கேன்' என்றாள்.

சமையல் செய்யும் பெண்கள் இருவரும் காரியத்தைப் போட்டு விட்டு அங்கே வந்து நின்றனர். சிரித்த முகமாகவே அவர்கள், 'வந்துவிட்டீர்களா!' என்றனர்.

'இதோ வந்துகொண்டே இருக்கிறேனே...' என்றான் நிதாயும்.

பெரியவள் அப்போது, 'யாரங்கே...? எங்கள் அப்பாவுக்கு சா கொண்டு கொடுங்கள். முகம் கழுவிக்கொண்டு வா அப்பா!' என்றாள்.

வந்த பெண்களில் ஒருத்தி நிதாயியை நோக்கி, 'இந்தத் தரம் நன்னு பாடணும் தெரியுதா?' என்றாள்.

மற்றவள் ஓடிப்போய் விளக்கொளி மலிந்த குடிசைக்கருகில் சென்று, 'அடியே வஸன்... கவிவாலா வந்துவிட்டார்... உன் கரு மாணிக்கமடீ!' என்று கூவினாள்.

நிதாயி சிரித்து, அவள் சொன்னதைத் திருத்தி, 'கருமாணிக்க மல்ல... கரிமாணிக்கமென்று சொல்லு' என்றான்.

வஸந்தி வெளியே வந்தாள். அவளுடைய கால்கள் தள்ளாடின; அந்தப் பெரிய கண்ணிமைகள் கனக்கத் தொடங்கின. மூக்கு நுனி, மோவாய், நெற்றிக்கட்டு எங்கும் வியர்வைத் துளித்தது. விழிகள் விரிய அவள், நிதாயியையே நோக்கினாள். அவன் கையைப்பற்றி, 'இல்லை... நீ என் கருமாமணியே...என் மானத்தைக் காத்த மாயன். என் ஓட்டைக் குடத்தைத் துளும்பச் செய்தவன். நீ என் கார் முகில் வண்ணன்... என் கரியமாணிக்கம்!' என்றாள்.

போதையின் வேகத்தால், இயல்பாகவே படபடத்துப் பேசும் அவள், மேலும் உணர்ச்சியுற்று இருந்தாள். ஆனால் இந்த வேகம் கடைசி வார்த்தைக்கு வருகையில் மேலும் அதிகரித்தது. பெரியவள் அவளிடம் ரகசியமாக, 'அதற்காக நீ இப்படி அழ ஆரம்பித்து விடாதே போதை வெறியில்...' என்றாள்.

போதை கண்ணிதழ்களை அமுத்த வஸந்தி மலர விழித்துப் பெரியவளைப் பார்த்து, 'அதற்கென்ன நான் அழத்தான் போகிறேன்...என் கருமாணிக்கத்தின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுது தீர்க்கப் போகிறேன். அவ்வளவு அக்கறையாக அவரைப் போல் யார் சா போட்டுத் தருவார்கள்? இன்று இரா முழுவதும் அழத்தான் போகிறேன். அப்படி என் உடம்பிலிருந்த புழுதியை யார் அவர் மாதிரி துடைப்பார்கள்? நான் அழத்தான் போகிறேன்'

என்றதும் தன் குடில் வாசலுக்கு வந்து, ‘என் நாகரிகர்களே, வெளியே போங்கள் எல்லோரும்... போதும் கொம்மாளம் போட்டது...’ என்ருள்.

பெரியவள் பரபரப்புடன் வஸந்தியின் கையைப் பிடித்து, ‘வஸன் இதென்ன? சீ... வந்த லட்சுமியைக் காலால் உதைத்துத் தள்ளுகிருயே? வரும்படி வாயில் மண்ணைப் போட்டுக் கொள்ளாதே...’ என்ருள்.

நிதாயி, ‘நீ ஏன் அழவேண்டும் வஸன்? சீ...!’ என்ருன்.

‘ஆனுல் நீ வா! நீ பாடுவாய், நான் ஆடுவேன்...’

‘ஆகட்டும் ஆடலாம். இதோ சா வந்துவிட்டது. அவன் அதைக் குடித்துச் சற்று இளைப்பாறட்டுமே... அப்புறம் அதெல்லாம்... நீபோ உன் வேலையைப் பார்’ என்ருள் பெரியவள்.

‘சாவா? சா எதற்கு? நல்ல சரக்கு இருக்கச்சே மதுபானம் பண்ணலாம்... வா கருமாணிக்கமே...’ என்று நிதாயின் கையைப் பற்றி இழுத்தாள்.

நிதாயி கையை வாங்கிக்கொண்டு, ‘விடு’ என்ருன்.

‘முடியாது’

‘நான் மதுபானம் செய்வதில்லை’

‘குடித்துத்தான் ஆகவேண்டும். நான் உன் வாயில் ஊற்றுகிறேன்...’

‘வேண்டாம்’

வஸந்தி கழுத்தை வளைத்து நிதாயியையே பார்த்தாள். ‘நீ குடித்துத்தான் ஆகவேண்டும்’ என்ருள்

பெரியவள் குறுக்கிட்டு, ‘ஏ வஸன்...உன் இடத்துக்குப் போகப் போகிருயா இல்லையா?’ என்ருள்.

அதே வளைத்த கழுத்துடன் அவள் நிதாயியை வற்புறுத்தி, ‘ஆனுல் வரமாட்டாயா? மது அருந்தமாட்டாயா?’ என்ருள்.

‘முடியாது’

‘என் பேச்சைக் கேட்க மாட்டாயா?’

‘இதைக் கேட்க மாட்டேன் வஸன்’

வஸந்தி நிதாயியை விட்டாள். அவள் கண்கள் போதையால் சுழல, தட்டுத்தடுமாறத் தன்னிடத்திற்குச் சென்று, ‘வாசற்கதவை மூடி விடு’ என்ருள்.

பெரியவள் இதை ஆட்சேபித்து, ‘என்ன பண்ணுவேன், இவள் இப்படிக் குடித்துக் குடித்தே பாழாகப் போகிருள்...? என்னத்திற்கு ஆகும் இந்த உடம்பு?’ என்ருள்.

நிதாயி பெருமூச்செறிந்தான்... சா எடுத்துவரச் சென்றவள் கலாயி பூசிய ஒரு குவளையில் தேநீரை எடுத்து வந்தாள். 'இதோ உஸ்தாத், உங்களுடைய சா' என்ருள்.

சிரித்தவாறு நிதாயி குவளையைக் கையில் வாங்கி, 'தங்கமான பெண்ணே... என்னைக் காப்பாற்றினுயே' என்ருன்.

பெரியவள் சிரித்து, 'நல்ல பெண்... அடியே நிர்மலா இந்த உஸ்தாதை அண்ணு என்றே கூப்பிடு' என்ருள்.

'சகோதரன் நோன்பின்பொழுது உன் அண்ணு நெற்றியில் பொட்டு இடவேண்டும்... அண்ணன் உனக்குப் புதுச்சேலையொன்று தருவான்' என்ருள் மீண்டும்.

நிதாயி மகிழ்ச்சி மிகவே, 'கட்டாயம்' என்ருன்.

மற்ற பெண் சமயல் விடுதியிலிருந்தே, 'அப்படியாளுல் நான் மச்சியாகி விடுவேன் உஸ்தாதுக்கு' என்ருள். பெரியவள் குஷியாகி, 'சரியாகச் சொன்னுய் லலிதா, வஸன் உன்னை அக்கா என்று தானே அழைக்கிருள்' என்ருள்.

நிதாயின் கையிலிருந்து சா கோப்பை நழுவி விழுந்தது— 'மச்சீ...மச்சீ!'

இரவு ஏற ஏற அருவருக்கத் தக்க காட்சிகள் தென்படலாயின. இவையாவும் புதியனவல்ல. மேளாவின் ஆர்ப்பாட்டம், வெளிச்சம் இதற்கெல்லாம் புறம்பாக மற்ருேர் உலகும் அங்குத் தென்பட்டது. அந்த உலகு மனிதர் கண்ணில் சட்டென, பளிச்செனப் புலப்படுவதில்லை. ஒளிக்கு நேர்மாருன இருள் சூழ்ந்த பகுதி அது. அந்த காரம் நிரம்பிய மண்ணின்கீழ் நெளியும் ஜீவன்களென மனித உள்ளங்களில் விளுவிளுக்கும் பழைய மிருக உணர்ச்சிகள் வெளிப்பட்டன. நிதாயி இந்தச் சூழலில்தான் பிறந்து வளர்ந்தவன். அவன் வாழ்ந்த இடம், பண்பட்ட சமூகத்தவர் நிழலில் படரும் ஓர் இருண்ட பாழ்—நாகரிக மக்கள் தம் குப்பைக் கூளங்களை எறியும் பகுதி. அந்த இருளில் என்ன நடக்கிறதென்று யாருக்குத் தெரியும்? துருவப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்தும் பேர் இருளே. இதுபோன்ற அருவருப்பை மூட்டும் விஷயம் அவனுக்குத் தெரியாததன்று. ஆளுல் இதனை அவன் நேரிடையாகக் கண்டதில்லை. இந்தத் திக்கை அவன் எட்டிப் பார்த்ததுமில்லை. திணறிற்று அவனுக்கு.

நிர்மலா, லலிதா இவர்களுடைய குடிலிலும் புதியவர்கள் வந்திருந்தனர். மதமோகம் நிரம்பிய குரலில் ஆபாசமான பேச்சும் சிரிப்பும் கேட்டன.

வஸந்தி அறையிலிருந்து இருவர் வெளியே சென்றனர். புது ஆட்களும் புகுந்தனர்.

பெரியவள் சில ஆடவர்களுடன் சாராயம் அருந்த உட்கார்ந்து விட்டாள். மீண்டும் நிதாயிக்குச் சா தந்தனர். அந்த இளமச்சியைப் பற்றியே அவன் சிந்தனை யோடியது. இப்போதே இந்த இடத்தை விட்டு ஓடிப்போய்விடலாமா யென்று அவனுக்குத் தோன்றியது. அவனுடைய பெயருக்கோ ஓர் இழுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த மாசு, மச்சியையும் பற்றியது. அவளுடைய கணவன் அவளை ஒதுக்கி விடலாம்—வீட்டைவிட்டுத் துரத்திவிடலாம். இருவருடைய மனமும் அம்பலமாகி விட்டது...சிதைந்த கூடாகிவிட்டிருக்கும் அவள் வாழ்வு. இனிமேல் பயமென்ன? இன்று அவன் மச்சினியை அணுகி அவள் கையைப் பற்றிச் சொல்ல முடியும்—'வா...இன்று நீயும் நானும் ஒரே நிலையில் நிற்கிறோம்'—இப்படி நினைக்கும் போது நிதாயிக்கு இருப்புக்கொள்ளவில்லை. நெடுநேரம் யோசனைப் பண்ணி விட்டு ஒரு முடிவுக்கு வந்தான். இந்த மேளாவை விட்டு வெளியேறி விட வேண்டியதுதான். ஆனால் போவது தன் கிராமத்தை நோக்கி யன்று. வேறு எங்காகிலும். இத்தனை பெரிய உலகில் இடமா இல்லை? மனத்திற்குப் பிடித்த ஓர் இடம் கிடைக்காமலா போகும்? சட்டென அவனுடைய சிந்தனையின் போக்கு நேர்மாறாகத் திரும்பியது—

'இல்லை...இதுவேண்டாம். மச்சினியின் சிதைந்த மணவாழ்க்கையை மீண்டும் சரியாகிவிடலாம்...அவள் மறுபடி வாழ்வில் சுகம் காணலாம்...

'மச்சி அவனை மறந்தே போகட்டுமே. அவன் கண்ணில் படாது போனால் அவள் மறக்கத்தான் செய்வாள். அவளுக்குக் குழந்தைகள் பிறக்கும்; அவளுடைய இல்லறம் இன்பத்தில் மிதக்கும். பழைய வடுக்களும் மறைந்து போகும்...புருஷனுடன் தென்புடன் பழகுவாள்...'

14

இரவில், அவன் கண்களில் தூக்கம் ஒரு பொட்டுக்கூட வரவில்லை. விழித்தே அதைக் கழித்தான். இளங்காலையிலேயே எழுந்து அவன் ஜுமுர் கோஷ்டியின் விடுதியிலிருந்து கிளம்பினான். ஒரு பெரிய

குளம்: அதன் நாலு பக்கத்துக் கரைகள் மீது மேளாவை அமைத்திருந்தனர்—ராஸ பூர்ணிமையின் ராஸோத்ஸவத்து மேளா. குளத்தின் கீழ்ப்பக்கம் ராதாகோவிந்தரின் கோயில். அதையொட்டினாற்போல் வைஷ்ணவ பாபாஜியின் அக்காடா (ஆசிரமம்). முகம், கை கால்களைக் கழுவிக் கொண்டு நிதாயி கோயிலுக்குப் போனான். ராஸ மண்டபத்தில் அஷ்ட ஸகிகள்[1] சூழ்ந்த ராதா கோவிந்தனுடைய தரிசனம் அவனுக்குப் பிடித்திருந்தது. அக்கடவுளாரின் சன்னதியில் வீற்றுப் பாட்டொன்றைப் புனைந்தான்—ராதா கிருஷ்ணர்களின் இணைவடிவங்களைப் புகழும் துதி. சுரத்தை மெல்ல முணுமுணுத்தபடி பாட்டைப் புனைந்தாயிற்று. குரல்விட்டு அதனைப் பாடலானான். அவனுடைய இனிமை சொட்டும் குரலைக் கேட்டு அங்குச் சிலர் கூடிவிட்டனர். அக்காடாவின் மஹந்தும் வந்து விட்டார்.

நிதாயி பாடிக் கொண்டிருந்தான்—

[2] ‘ ஆஷ் மிட்டாயே தேக்கோ ரே நயன் !
ஜுகல் - ரூபேர் மாதுரீ ! ’

மஹந்து கண்ணை மூடியவாறு தலையை அசைத்துத் தாளம் போட்டுக் கொண்டே ஒருவனை விளித்து, ‘கோல்[3] எடுத்து வாப்பா’ என்றார்.

‘கோல்’ வந்தது. மஹந்து அதைத் தாமே சுருதிகூட்டி வாசித்தார். பாட்டு முடிந்ததும் நிதாயியை நோக்கி அவர், ‘ரொம்ப அருமையான சாரீரம்! உனக்குப் பதாவளி[4] பாடம் உண்டா?’ என்று கேட்டார்.

பதாவளி என்ன என்பது நிதாயிக்குப் புரியவில்லை. மிகவும் பணிவுடன், ‘அடியேன், அப்படியென்றால்?’ என்றான்.

‘மஹாஜன பதாவளி தெரியாது? சண்டிதாஸ், வித்யாபதி, ஞானதாஸ் இவர்களுடைய திவ்யப் பிரபந்தங்கள்?’

நிதாயி கைகுவித்து—‘பிரபு, அடியேன் மிகவும் கீழ்ச்சாதியில் பிறந்தவன். எனக்கு என்ன தெரியும் அதைப்பற்றி?’ என்றான்.

மஹந்து சிரித்து, ‘எந்தச் சாதியில் பிறந்தால் என்ன; ஒருவனுடைய பிறப்பு பெரிதன்று. அவன் புரியும் காரியமே முக்கியமானது.

---

[1] கண்ணனுடன் கோகுலத்தில் பரமானந்த லீலையில் ஈடுபட்ட கோபிகைகள் எண்மர். அவர்கள் குரவையென்னும் ராஸலீலை புரிந்தவர்கள்.

[2] கண்காள், காண்மின்களோ, இவ்விருவர் இணைவடிவின் அழகினை !

[3] ஒற்றை நரம்பு யாழ்.

[4] வங்க வைஷ்ணவக் கவிகளின் பாடல் தொகுதி.

மஹாபிரபு நீசமான புலையர்களையும் தம் மடியில் ஏற்றுக்கொண்டாரப்பா!' என்றார்.

சட்டென நிதாயிக்கு இரண்டு கண்களிலும் நீர் நிரம்பி விட்டது. அவன், அங்கம் குழைய, 'நான் செய்யும் காரியம் மிகவும் ஈனமானது பிரபு. ஜுமுர் கோஷ்டியில் வேசிகளுடன் சேர்ந்து பாடும் ஓர் அற்பமான கவிவாலா...' என்றான்.

'கவி பாடுகிறாயா?'

'ஆமாம் பிரபு!'

'இப்போது நீ பாடினாயே, அது உன் சொந்தப் பாட்டா?'

தலையைத் தாழ்த்தி வெட்கத்துடன் நிதாயி, 'அடியேன் என் சொந்தப் பாட்டே' என்றான்.

மஹந்து அவனை உற்சாகப்படுத்தி, 'ரொம்ப அருமையான பாட்டு! அற்புதமான கருத்து அப்பனே' என்றார். சற்றுப் பொறுத்து அவர், 'அப்பனே, நீ செய்யும் காரியம் மிகவும் உயர்ந்தது. உனக்கு ஒரு குறைவுமில்லை! பாடல் பாட வல்லவர், அவர்கள்தானப்பா மஹா ஜனங்கள்...புண்ணியசாலிகள்; அவர்கள்தாம் சாதகர்கள். அவர்களைக் கொண்டுதான் பகவான் தன்னைப் பாடிக் கொள்கிறான். சண்டிதாஸனின் பதாவளியைக்கேட்டு மஹாபிரபு அப்படியே மெய் மறந்துபோய் உள்ளம் நெக்காட ஆலிப்பார்...அழுவார்' என்றார்.

டப்டப்பென்று சில பொட்டு நீர் நிதாயின் கண்களிலிருந்து வழிந்தது. 'நான் மிகவிம் இழிந்த மனிதர்களுடன் பழகுகிறேனே பாபாஜி—வேசி...இவர்களுடன்...' என்றான்.

மஹந்து சிரித்தார். கையைத் தூக்கிக் குறிப்பால் நிதாயியைத் தடுத்து, 'பகவானுடைய சிருஷ்டியான இந்தப் பிரபஞ்சத்தில் தாழ்ந்தவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவருக்கு ஒருவன் உயர்த்தி ஒருவன் தாழ்த்தி என்ற வித்தியாசமே கிடையாது. அவரே எல்லாமாயிற்றே! அவர்தான் தீண்டாதவன்; அவரைத் தொட யாரால் ஆகும்? நீ கண்ணில் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்க்கிறாயா? உனக்குச் சூரியன் ஒளிகூட நிழலாகவே தோன்றும். உன் கண்ணாடி எந்த நிறமாக இருக்கிறதோ அந்த மாதிரி உன் மனம் அருவருப்பால் பிறரையும் நோக்கும். இந்த மனோ விகாரத்தில் இந்த அழகிய உலகின் மீது கோபங் கொண்டு மனிதர் தற்கொலை புரிந்து கொள்கிறார்கள்...இந்த வேசிகளைத்தான் சொல்லேன்? அப்பனே, சிந்தாமணி யாராம்? தாசி. அந்த பில்வமங்களரென்னும் கிருஷ்ண பக்தருக்கு நல்வழி காட்டிய குரு. பில்வமங்களரின் கதை உனக்குத் தெரியுமா?' என்றார்.

நிதாயிக்கு இந்த பில்வமங்களரின் சரிதை தெரியும். அவனுடைய கிராமத்தில் பாபுக்கள் நடத்திய பில்வமங்களரின் நாடகத்தை அவன் பார்த்திருக்கிருன். ‘பாபாஜி, தெரியும்’ என்ருன். அந்தக் கதை முழுவதும் அவன் நினைவுக்கு வந்தது.

மஹந்து ஆதரவாக, ‘அப்போ?’ என்ருர்.

நிதாயி அற்புதமான ஒரு மனமாற்றத்துடன் திரும்பினுன். ஜுமுர் கோஷ்டியின் பெண்களைப் பற்றி நிதாயி வெளிப்படையாக, அவர்கள் நன்ருகப் பாடுகிருர்கள் ஆடுகிருர்கள் என்று தூக்கி வைத்துப் பேசினுலும், உள்ளுக்குள் அவர்கள் பால் அவனுக்கு அருவருப்பே இருந்து வந்தது. அது இப்போது அறவே நீங்கிவிட்டது. அவன் மனம் இப்போதுதான் நன்மையுற்று நிரம்பி விளங்கியது. திரும்பும் போது அவனுக்கு அடிக்கடிக் கண்ணீர் துளித்தது. சாதரின் தலைப்பின் நுனியால் துடைத்துக்கொண்டு, கண்ணைத் திறந்து அந்த பாபாஜிக்கே வணக்கம் செலுத்தினுன். கோவிந்தனின் பிரசாதத்துடன் அந்த பாபாஜியின் ஆசியையும் பெற்றுச் செல்லவேண்டுமெனத் திட்டம் போட்டுக் கொண்டான்.

ஜுமுர் குழுவினர் இருக்கும் இடத்துக்கு வந்ததும், அவன் வியப்பில் ஆழ்ந்தான். ‘இதுவும் கோவிந்தனின் திருவருள்தான், அவன் கிருபைதான்’ என்று எண்ணிக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! இன்று காலை, இந்த இடம், இங்கே இருப்பவர்களை, முன்னுள் இரவு இங்கே பார்த்தவர்களுடன் ஒப்பிடும் போது துளியாகிலும் ஒத்தே இருக்கவில்லை இடம் சுத்தமாகப் பசும் சாணத்தால் மெழுகப்பட்டு விளங்கியது. மரத்தடியில் ஒரு வாழை இலையில் நிறையப் புஷ்பங்கள். பெண்கள் எல்லோரும் நீராடி விட்டு ஈரம் சொட்டும் கூந்தல் கற்றையைப் பின்புறமாக பிரித்துவிட்டு, அமைதியாக அமர்ந்திருந்தனர். எல்லோர் உடம்பிலும் சிவப்பு கறைபோட்ட துல்லியமான சேலை. துப்புரவும் ஒரு தூய்மையும் எங்கும்.

வஸந்தி திரும்பி உட்கார்ந்திருந்தாள். நிர்மலா, லலிதா இந்தப் பக்கம் முகம் வைத்து இருந்தனர். அவர்கள் இருவரும் நிதாயியைப் பார்த்ததும் வரவேற்று, ‘என்ன மனுஷ்யர் போங்கள்...இத்தனை நாழிகை எங்கே போயிருந்தீர்கள்?’ என்றனர்.

வஸந்தி முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். நிதாயி மெல்லச் சிரித்தான். வஸந்தி முகத்தை வேறு பக்கமாக வைத்து உடனேயே எழுந்து சமையல் விடுதிக்குப் போனுள். நிதாயி, நிர்மலா லலிதா இவர்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, ‘எல்லாம் அழகாகப்

பண்ணியிருக்கிறீர்களே! சுத்தமாக மெழுகியிருக்கிறது. நீங்களும் ஸ்நாநம் செய்தாயிற்று... சிவப்பு கறை போட்ட புடவை...' என்ருன்.

நிர்மலா சிரித்து, 'இன்னிக்கு லக்ஷ்மீபூஜை தெரியாதோ உனக்கு அண்ணு?' என்ருள்.

'லக்ஷ்மீபூஜாவா?'

'ஆமாம், பூர்ணிமை வெள்ளிக்கிழமை. நம்முடைய வரலஷ்மி விரதம் இன்றுதானே'

நிதாயி திகைத்து நின்ருன். இத்தனை நாள் இவர்களுடன் பழகியும் அவன் இப்படி ஒரு விரதம் இவர்கள் கொண்டாடுவதை அறியவில்லை. இவர்களுக்கும் விரதங்கள், பண்டிகைகள் இருந்தன. 'எப்போது லக்ஷ்மீ பூஜை ஆரம்பம்?' என்று கேட்டான்.

'இன்று சாயங்காலமே...இன்று உங்கள் கச்சேரி ஆரம்பிக்கும் ஒன்பது மணிக்கல்ல; அதற்கு முன்னுலேயே...'

பெரியவள் அப்போது, 'உஸ்தாத் மிகவும் பக்தியுள்ளவன்...நல்ல குணம்' என்ருள்.

லலிதா விசித்திரச் சிரிப்புடன், 'நல்ல மனுஷந்தான்... ஆனுல் இந்தக் கச்சேரி, துலுக்கன் தமாஷாவாச்சே...சாப்பாடும் அப்படித் தானே...' என்ருள்.

பெரியவள் அவளுக்குச் சாடை செய்து, 'உஷ்' என்ருள்.

வஸந்தி வந்து நின்ருள். அவள் கையில் ஒரு கோப்பை. அதை நிதாயிடம் நீட்டி அவள், 'வாங்கிக்கொள்' என்ருள்.

நிதாயி அவள் முகத்தையே நோக்கி, 'என்ன இது?' என்ருன்.

அவள் களுக்கெனச் சிரித்து, 'சாராயமோ, மதுபானமோ அல்ல, வாங்கிக்கொள்' என்ருள்.

நிதாயி கோப்பையை வாங்கிப் பார்த்தான். அப்போதுதான் தயாரித்த ஆவிவரும் சா.

லலிதா சிரித்து, 'பார்த்துவிட்டுக் குடி. என்ன மாப்பிள்ளை, வசிய மருந்து ஏதாவது போட்டிருக்கப் போகிறது?' என்ருள்.

வஸந்தி அங்கிருந்து நகர்ந்தவள், சட்டென ஒரு சுழல் சுழன்று நின்ருள். முகத்தைக் கோணி, 'ஏனடீ எரிமூஞ்சி, சும்மா இருக்க முடியவில்லையா?' என்ருள்.

நிதாயி சிரித்து அவள் சொன்னதைத் தன்மேல் எடுத்துப் போட்டுக்கொண்டு, 'தாராளமாகக் கொடு... இந்தக் கரி கசாடெல்லாம் ஒழிந்து போகும்... புடம்போட்ட பொன்ருகட்டும் என் உடம்பு உள்ளமெல்லாம்... தெரிகிறதா?' என்ருன்.

[1] 'ஆகுநேர் பரச பேலே காலோ கய்லா ராஙா பரண் | '

லலிதா கிளுகிளுவென்று சிரித்தாள். 'ஏனடீ போகிறே, நெருப்பு மாதிரி எரிகிறுயே... உன் உடம்பை அவர்மேலே தீண்டி அந்த நெருப்பை மூட்டேன்...' என்ருள்.

வஸந்தியின் கண்களில் வாளின் மின்னல் விளையாடியது. மறுகணமே அவள் சிரித்து, 'நல்ல வகையான சாராயம் எரியும் தெரியுமா?' என்றதும் தன் உடல் உறுப்புக்களைக் காட்டி, 'இது தான் அந்த நெருப்பு!' என்ருள். இதைக் கூறியதும் அவள் அறையினுள் நுழைந்துவிட்டாள்.

நிதாயின் மனத்தில் முன்ஞள் இரவில் நடந்ததெல்லாம் நிழலாடியது; அவன் சிரித்தான்.

இதற்குள் நிதாயி வஸந்தியின் ஆளாகிவிட்டான். வஸந்தியும், அவன் தனக்கு வசமாகிவிட்டான் என்பதைத் தெரிவித்துவிட்டாள்.

பெண்கள் அன்று முழுவதுமே உபவாசம் இருந்தனர். அதாவது முழுப் பட்டினி. பயபக்தியுடன் அதை அனுஷ்டித்தனர். மாலை நேரமானதும் பழம், புஷ்பம், பால், தயிர் இன்னும் எத்தனையோ... தூபதீபம் எல்லாம் தந்து, மிகுந்த அக்கறையுடன் லக்ஷ்மீ பூஜையை நடத்தினர். பூஜை முடிந்ததும் பெரியவளை வளைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் கையில் கொட்டைப் பாக்கை அடக்கிக்கொண்டு விரதக் கதையைக் கேட்டனர்...

நிதாயி சற்றுத் தொலைவாகவே வீற்றிருந்தான். மற்ற ஆடவர்கள் வெகு தூரத்தில் அமர்ந்து மதுபான சேவை பண்ணிக்கொண்டே இரவு ஆட்டத்திற்கான வேஷங்களைப் போடுவதில் ஈடுபட்டு இருந்தனர். பிடில்காரன், தன் பிடிலுக்குச் செய்யவேண்டியதில் கவனமாக இருந்தான்—வார்னிஷ் புட்டி, தந்தி நரம்பு, ரோஜனம் இவற்றுடன். பக்கவாத்தியக்காரன் டோலக்கில் சுருதி சேர்த்து மார்ச்சனைத் தடவி அடித்துப் பார்த்துத் தயாராக வைத்தான். கையால் தாளம் போட்டு, 'நாலு தட்டு ஒரு விசிறு' என்று தனக்குள்ளேயே தாள வொத்துக்களை ஞாபகப்படுத்திக் கொண்டான், ஜால்ராக்காரன். அவன் பக்க வாத்தியக்காரனுடன் ஒத்துப் போகவில்லை.

எருமைக்கடா போல் இருக்கும் அந்தத் தடியன், சாராயம் அளவுக்குமேல் போட்டுவிட்டு, மயங்கிப் படுத்திருந்தான். அவன் எதிரே கணகணவென்று எரியும் அடுப்பு. மொண்டும் முடிச்சுமான விறகுகளை அதனுள் போட்டிருந்தது. புகையுடன் செந்தழலும்

[1] நெருப்பைத் தீண்டியதும் கரித்துண்டு செந்தழலாகிறது.

பெரிய சுவாலையாக எழுந்தது. அந்த ஆள் ஜுமுர் கோஷ்டியின் பாராக்காரன். கம்மென்று விழுந்து கிடந்தான். சற்றுத் தொலைவில் பெண்களின் கூட்டம். அவர்கள் மத்தியில்தான் பெரியவள் விரதக் கதையைக் கூறிக்கொண்டிருந்தாள்.

விரதக் கதையைச் சொல்லி முடித்தாயிற்று. [1] உலுக்குரல் எழுப்பிப் பெண்கள் லக்ஷ்மியை வணங்கினர். பின்னர் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு அவரவர்கள் அறைக்குப் போயினர். அதாவது அந்தக் கீற்றுக் கொட்டகைக்குள். பெரியவள் ஆடவர்களை அழைத்து, ' எல்லோரும் போய் பிரசாதம் வாங்கிக் கொள்ளுங்கள் ' என்ருள். வாங்கிக்கொண்டு அங்கு நிற்காமல் போய்விடுங்கள் என்று பொருள் அதற்கு.

நிதாயி ஒரு மரத்தடிக்குப் போய் உட்கார்ந்தான். வஸன் தன் இடத்திற்குப் போகையில்,வாயிலில் நின்று அவனைக் கூப்பிட்டாள்— ' இதைக் கேள் '

' என்னையா கூப்பிடுகிறே? '

' ஆமாம் '

இன்று இத்தனை நியமநிஷ்டையாக விரதம் இருந்தவளிடம் செல்ல நிதாயி கூச்சமோ, அசூயையோ படவில்லை. அறையில் நுழைந்து நெருங்கிய உறவினனைப்போல், மதுரச் சிரிப்புடன், 'என்ன வஸன்?' என்ருன்.

வஸந்தி அவன் முகத்தையே நோக்கிச் சட்டெனக் கண்களைத் தாழ்த்திக் குதலையாக, ' பிரசாதம் கொஞ்சம் சாப்பிடு ' என்றதும் இடம் ஒழித்து, இலையொன்றில் பழம், ஸந்தேஷ் எல்லாம் வைத்தாள். வஸந்தியின் இந்தப் புதுப் போக்கைப் பார்த்து நிதாயி அசைந்து போய்விட்டான். அந்த வஸனு இவள் என்று நினைத்துக் கொண்டான்.

நிதாயி தனக்குப் போட்ட ஆசனத்தில் அமர்ந்தான். சாப்பிட்டுக் கொண்டே, ' நித்ய மங்களமும் ஜயமும் உனக்கு உண்டாகட்டும் ' என்ருன்.

அப்போது வஸந்தி, ' பிரசாதத்தில் கொஞ்சம் இலையில் மிச்சப் படுத்தி வை ' என்ருள்.

' எதற்கு வஸந்தி? ' என்ருன் நிதாயி.

' ஆமாம், இனியன் உண்ட மிச்சிலைத் தின்னத்தான் ' என்றதும் அவள் சிரித்தாள். அவள் முகத்தில் இப்படி ஒரு சிரிப்பு உலவியதை அவன் பார்த்ததே இல்லை. அவன் பரவசமாகி அவளையே நோக்

[1] 'உலுஉலு' என்று பெண்கள் செய்யும் மங்கள வாய் ஒலி.

கிஞன். வஸந்தி ஏதோ ஒழித்துவைக்கும் வியாஜமாக அவன் பின் பக்கமாக முதுகைக் காட்டித் திரும்பிஞள். அவள் ஒரு பாட்டை மெல்ல பாடிக் கொண்டிருந்தாள். அந்தப் பாட்டைக் கேட்டு நிதாயி சொக்கிப் போஞன்.

[1] 'தோமார் சரணே ஆமாரஇ பராணே லாகிலோ
ப்ரேமேர் ஃபான்ஸி,
ஜாதி குலமான ஸப் விஸர்ஜ்ஜியா
நிஸ்சய் ஹஇநு தாஸி | '

' அப்பா, என்னமாதிரி பாட்டு !...' என்றதும் நிதாயி அதிலேயே ஒன்றிவிட்டான்.

[2] 'கஹே சண்டீதாஸ்...'

' வஸன், அது யார் சண்டீதாஸ் ' என்று கேட்டான் நிதாயி.

இரு கைகளேயும் குவித்து நெற்றியில் வைத்து வணங்கி அவள் சொன்ஞள்—' இது மஹாஜன பதாவளியில் வரும் ஒரு பாட்டு... சண்டீதாஸரின் பதம்... ' என்ருள்.

' சண்டீதாஸின் பதம் உனக்குப் பாடத் தெரியுமா ? '

' தெரியுமே !'—வஸந்தி மோகனப் புன்னகைப் பூத்தாள். 'என்னுடைய பாட்டு நோட்டில் அவர் பாடிய பதங்கள் எத்தனேயோ இருக்கு ' என்ருள்.

15

இரவு ஒன்பதுக்கு மேல் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாக இரு கட்சிகளின் கவியரங்கு தொடங்கியது. ஆஞல் இந்தப் பாட்டுநிரலில் சண்டீதாஸின் பதமோ, மற்ற மஹாஜன பதகர்த்தாக்களின் பாடல்களோ இடம் பெறவில்லே. மலேயெங்கே மடுவெங்கே! நள்ளிரவு

[1] உன் கழலடியில், எனது உள்ளம் காதல்கொண்டு ஊசலாடுகிறது. ஜாதி குலம், மானம் யாவும் துறந்து உனக்கு உண்மை அடிமை ஆனேன்.
[2] இதைச் சொல்பவன் சண்டீதாஸ். (சண்டீதாஸின் முத்திரை.)

வரை விளக்கொளி மலிந்த மேளாச் சந்தையில், இன்பம் துய்க்கும் மக்கள் விரும்பும் பச்சையான, காமநகையைத் தூண்டும் பாடல்களே ஒலித்தன. இதய பாண்டத்தை இழிநகையின் உலையில் ஏற்றி, நுரைத்தெழக் காய்ச்சி எடுத்த இன்ப நறவேயாம் அப்பாடல்கள்.

எதிர்க் கட்சியினர் முதலில் ஆரம்பித்தனர். அந்தக் கட்சியிலுள்ள கவிவாலா, விரசமும் வேடிக்கையுமான பாடல்களை இசைப்பதில் கெட்டிக்காரன். அரங்கில் ஏறியதும் அவன் விருந்தையின் தோழி யாகவும், நிதாயி கண்ணனாகவும் ஆயினர். தலைவி ஊடியபொழுது அவள் தோழி, பரத்தை வழிப்பிரிந்த தலைவனை கண்ணனைப் புலந்துத் தூற்றும் அகச்சுவைப் பாடலாகும். ஏளனம் தெறிக்கும் வகையில் அமைந்தது. இப்பாட்டு தொடங்கிற்று—

[1] கா - தா - ஜா - மேர் போ - தா—
கஷேர் ரஸே ஓலோ மஜேச்சே காலா,
ஆமேர் காபே மிச்சே—தரிலோ ரங்
மிச்சே ஸுவாஸ டாலா,
சந்த்ராவலீ காதா ஜாம்—
ராதே ஆமார் பாக்கா ஆம்— ,

இதன் பின்பே 'கேஉர்' என்ற இழிசுவைப்பாடல்களை எடுத்தான். சந்திராவளியின் அழகு, குணம் இவற்றை மண்மீது விழுந்து நசுங்கிய நாவற்கனியோடு ஒப்பிட்டதும், அவன் வஸந்தியின் எழிலையும் தன்மையையும் பச்சையாக, மிக விரசமாக எடுத்துரைத்து வியாக் கியானம் செய்தான். ஆனால் அவனுக்கு யாப்பில் நல்ல பழக்க மிருந்தது. சபை இதுபோன்ற ஆபாசச் சுவையால் சிரித்துக் கொம்மாளம் போட்டது. வஸந்தியிடம் தடியடிப் பட்டு ஓடிப்போன பாடகன், வஸந்தியிடம் தென்பட்ட குற்றம் குறைகளையெல்லாம் இந்தக் கவிவாலாவிடம் சொல்லியிருக்கிருன். கவிவாலா, வஸந்தியை விரலால் சுட்டிக்காட்டி, சந்திராவளியின் வண்ணமதைப் பாடினன். இந்தப் பாட்டிற்கு ஏற்றவாறு அந்தக் கட்சியைச் சேர்ந்த பெண்கள் விகாரமாக நடனம் புரியலாயினர். அவர்களும் வஸந்தியை நையாண்டி செய்தே ஆடினர்.

[1] மண்ணில் நசுங்கிய நாவற்கனி—இதன் சாற்றிலே தோய்த்தெடுத்தது உன் கருநீல மேனி. மாங்கனிமேலே படருது செம்மை. அதில் இனிமை மறைந்தேயுள்ளது. சந்த்ராவளியே அந்தக் கசங்கிய நாவற்கனி ஆவாள்; என் ராதை பக்குவ மாங்கனியாவாள்.

நிதாயிக்குச் சப்பிட்டு விட்டது. இந்தக் 'கேஊர்' பாடல்களில் ஒலிக்கும் அரங்கில், தன்னுடைய பாட்டு எடுபடாதோ என்ற ஐயம் அவனுக்கு மூண்டது. அவனுக்கு இவ்வகையான பாட்டுக்கள் வாரா. அவனுக்கு வாய் கூசியது. அவன் கவலைப்பட்டதெல்லாம் தன்னுடைய தோல்வியைப் பற்றியே அன்று. அவன் வஸந்திக்காகத் தான் வேதனைப் பட்டான். வஸந்தி ஒரு விசித்திரமான பெண்—ரோஷம் பொத்திக்கொண்டால், அவள் தீப்பிழம்பென எழுந்து அமர்க்களமாக இந்த அரங்கைச் செய்து விடுவாளோ என்னவோ? ஆனால் பாட்டரங்காதலால் அவள் தன் பொறுமையை இழக்கவில்லை; வாய்வாளாது அமர்ந்திருந்தாள். நிதாயின் கண்ணோடு அவள் கண்ணேக்கு ஒக்கும்பொழுது அவள் மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் உட்பொருளைத் தவறின்றி நிதாயி புரிந்துகொண்டான். அந்த முறுவல் உணர்த்திய குறிப்பாவது— 'கேட்டாயா? இதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும்'

முன்னிரவு நடந்த சில விஷயம் அவனுக்குநினைவு வந்தது. வஸந்தி அவனுடன் முதலில் பேசவந்தபோதே—'நீ என் கரிமாணிக்கமன்று, கருமாணிக்கமே—என் பொத்தல் குடத்தில் நீர் வழியாமல் நிற்கச் செய்தாய்...என் மானத்தைக் காப்பாற்றினாய்..' என்று சொல்லியிருக்கிறாள்.

இன்று வஸந்தி காண்பதற்குக் கவினார்ந்து விளங்கினாள். நாட்டியத்திற்குத் தகுந்த அலங்காரங்களைப் புனைந்து கொள்ள அவளுக்கு ஒழிவில்லை. அவள் முதுகுப்புறம் கூந்தல் விரிந்தே இருந்தது. அந்தச் சிவப்புக்கறை தஸ்ஸர்[1] சேலையைச் சற்று ஒழுங்குற அணிந்து இருந்தாள். எல்லாவற்றையும் விட அவளுடைய மதர்த்த விழிநோக்கொன்றே போதும். இன்று பெண்கள் எவருமே மதுபானம் பண்ணவில்லை. அவளும் பண்ண வில்லை. என்ன கூர்மையான வேல்விழிகள் அவளுக்கு! மது அருந்திவிட்டாலோ இவை, ஓரங்களில் செவ்வரி படர்ந்து மேலும் கூர்மையாகிவிடும். மீண்டும் அவளுடைய நயனக் கொள்ளையில் சிக்கிய அவனுக்கு, அவள், வெள்ளி வெண்மையான [2]காஜல்லதாவாகவே தோன்றினாள்.

எதிர்க்கட்சியின் கவிவாலா பாட்டை முடித்து விட்டார். எங்கே பார்த்தாலும், ஜனங்களின் நெரிசல்—அழுகிய மீன் கடையில் மொய்க்கும் ஈக்களைப்போல். இதற்குள் அரங்கு முகப்பிலிருந்து பைசா, ஓரணா, இரண்டணா, கால் ரூபாய், அரை ரூபாயாக இப்படிக்

[1] 'ஏண்டி', 'மூகா', 'தஸ்ஸர்' என்ற வகையில் தஸ்ஸர் ஒரு வகைப் பட்டு.
[2] வங்க நாட்டுப் பழங்கதையில் வரும் ஒரு கதாநாயகி (மையார்க்கொடி.)

காசுகள் தட்டில், குவிந்துவிட்டன. வில்லையாக மூன்று நான்கு ரூபாய்களும் விழுந்தன. பாட்டானதும் ஜனங்கள் ஹரிபோல் போட்டனர். இவர்களது பாராட்டு முறை விசித்திரமாக இருந்தது.

அருகிலேயே எண்ணெய்ப் பட்சணங்களும், மாமிசக் கறிகளும் மலிவாக விற்கப்படும் கடைகள். ரகசியமாகச் சாராய வியாபாரமும் நடந்தது. அதை நோக்கி ஓடுவோர் பலர். எதிர்க்கட்சிப் பெண்கள் இருவரை அழைத்துக்கொண்டு, அவ்வூர் மைனர்கள் சிலர் கடைக்குள் சென்று மேஜைக்கருகில் அமர்த்தி, திண்பாண்டங்களைத் தருவித்து அவர்களுக்கும் தந்து தாமும் தின்றனர்.

நெற்றியைக் கையால் தொட்டு நிதாயி சண்டீதேவிக்கு ஒரு கும்பிடு போட்டான். அவனுக்கு உள்ளங்கை தலையெல்லாம் வியர்த்தது. தொண்டை வறண்டுவிட்டது. மதுபான வேட்கை மிகுந்த இந்த மக்களை எந்தப் பாட்டை எடுத்து திருப்தி பண்ணுவதென்ற கவலையே அவனைப் பற்றியது. எவ்வளவோ சிந்தனை செய்ததும் அவன், அரங்கில் தன் பாட்டை எடுத்தான்—

[1] மத ஸே ஸஹஜ வஸ்து லய்
சோக்கேதே லாகாய் தாந்தா—
காலோகே தேக்காய் ஸாதா—
ராஜா ஸே க்காணுய் படே ரய் !

கவிவாலாவுக்கெல்லாம் ஒரு கோணலான புத்தியே. இவர்களுக்குச் சமயோசிதமாகச் சொற்களை மாற்றவோ, மடக்கவோ, முறிக்கவோ தெரியும். உண்டென்பதை இல்லையென்று ஆக்குவார்கள். இப்படியே பதஜாலங்களால் வெற்றிக்கொடி நாட்டிவிடுவார்கள். இவர்களுடைய பாடல்களில் பிராசங்கள் (மோனை) அதிகமாக இருக்கும். ஆனால், கருத்தாழமே இராது. ஆனால் நிதாயி இந்தப் பாதையில் செல்லாதவன். விரசப் பாடல்களைத் தவிர்த்துத் தன் பாட்டை எடுத்தான்—

[2] 'பிருந்தே துமி நிந்தே அமார் கர் அகாரண்
நய் அகாரண்—காரண் க்கேயே மத்த தோமார் மன் '

---

[1] மதுபானம் ஒரு நல்ல பொருளல்ல; கண்முன் மருளைத் தரும்; கறுப்பை வெண்மையாகக் கொள்ளும்; அரசனும் சரி, இப்பள்ளத்தில் விழுந்து விடுவான்.

[2] விருந்தே, நீ காரணமின்றி நிந்திக்கின்றாய். காரணமில்லாவிடினும், உன் வெறிபிடித்த மனம் காரணமொன்றைக் கற்பித்திடுமே.

கூடவே வியாக்கியானமும் செய்தான்—'மதம் தலைக்கேறிய பிருந்தா, உண்மையில் நீ சந்திராவளியை நிந்தனை செய்யமாட்டாய். சந்திராவளீ யார்? ராதா எப்படியோ அவளும் அப்படியே. காளீ எப்படியோ கண்ணனும் அப்படியே. சந்த்ராவளியை நன்ருகப் பார். முதலில் புளியம்பழம் தின்னு; தலையில் குளிர்ந்த நீரைக் கொட்டிக் கொள்; மயக்கம் தெளிந்து அவளைப் பார். அவளிடம் ராதையைத்தான் காண்பாய். ராதையிடம் அவளைத் தான் காண்பாய். ராதா தத்துவத்தில் ஊடலை விவரிக்கும் படலத்தில், பத்தாவது பக்கம், பத்தாவது வரியை நன்ருகப் படி தெரியும்'

அப்புறம் அவன் சந்திராவளியின் அழகைப் பற்றி வருணித்தான். அவன் வஸந்தியின் வனப்பார் வடிவைத்தான் சித்தரித்தான். சொற்களால் அவளை [1] ஏழாவது சொர்கத்துப் பொருளாகவே உயர்த்திக் கூறிவிட்டான். வஸந்தி அதற்கேற்ப நடனமாடினுள்! இன்று அவள் உடல் நலத்துடன் இருந்ததால் அற்புதமாகவே நடம் புரிந்தாள். ஆனுல் அவளுடைய இளமையும், எழிலும் இன்று காமத்தைத் தூண்டும் வகையில் அமையவில்லை. ஒரு வேளை மது போதையில் இராததனுலேயோ, இல்லை நிதாயின் பாட்டில் சுவை அவ்வளவாகக் களைகட்டாததனுலேயோ எதிர்பார்த்தபடி அமைய வில்லை போலும். வர வர வஸந்தியின் ஆடல் மட்டுமல்ல, அதனைப் பார்க்கும் ஜனங்களுடைய அபிப்பிராயமும் சப்பிட்டு வந்தது. ஜனங்கள் எழுந்துபோகத் தொடங்கினர். இரண்டொருவர் போகையில்—'அக் தூ...!' என்றனர்.

இவர்களுடைய தட்டில் காசே விழவில்லையென்று சொல்லலாம்.

பெரியவள் மெதுவான குரலில் அரங்கு செல்லும் போக்கைப் பார்த்து, 'நிதாயி, கொஞ்சம் வண்ணங்களை மாற்று. உஸ்தாத் இன்னும் கொஞ்சம் மெருகேத்து...' என்று எச்சரித்தாள் அடிக்கடி.

டோலக் வாசிப்பவன் வஸந்தியின் அருகில் வந்து அவள் காதுடன், 'இன்னும் கொஞ்சம் அம்சங்களை அசைத்துக் காட்டு; கண்களை உருட்டு, மார்பைக் குலுக்கு..' என்ருன்.

வஸந்தி எப்படி விழிகளை உருட்டுவாள்? அவளுக்குத்தான் கண்ணீராக வருகிறதே. எப்படி உடற் கொடியை வளைத்துக் கிளைத்துக் காட்டுவாள்? களைப்பால் உடம்பு அப்படியே துவண்டு வந்ததே. அரங்கிற்கு வந்து இப்படி ஒரு திசைகெட்ட மாந்தர் காட்டும் அலட்சியத்தை அவளால் பொறுக்க முடியவில்லை.

[1] ஏழாவது சுவர்க்கம் கோலோகமாகும்.

நிதாயின் தத்துவ உரைகளைக் கேட்டுச் சப்பிட்டவராய் ஜனங்கள் அவன் பக்கமே திரும்பவில்லை. நிதாயின் தர்மோபதேசத்தில் தென்படும் வரள்சுவை வஸந்தியின் ஆடலுக்கு ஒரு பொலிவை ஊட்டவில்லை. எல்லாவற்றையும் விடத் தன் கோஷ்டி தோல்வியுறுவதே அவளை உள்ளூற வாட்டியது. கீழ் வகுப்பைச் சேர்ந்த உடலை விலைபோக்கும் கட்டழகிகள் இவர்கள். அழகான உடற் கட்டுடையவர்கள் தாம் என்ற செருக்கில் செம்மாந்து இருப்பவர்கள். ஆனால் வாழ்க்கைக்குரிய மரியாதையை இவர்கள் உணராதவர்கள். இந்த இளமையும், வனப்பும் இருப்பதாலேயே ஆடவர் பணத்தைத் தந்து இவர்களுடன் போகம் துய்க்கின்றனர். ஒருவன் ஆனதும் மற்றவன்—உண்மை அழகுணர்வினால் அவர்கள் வருவதில்லை. கண்மூடித்தனமாகக் காமாதுரத்தைத் தணித்துக்கொண்டதும், போகும்போது எச்சிற்கல்லையென இம்மாதர்களை ஒதுக்கிவிடுகின்றனர். இத்தகைய பெண்கள் தம் வாழ்வில் மரியாதைக்குரியவற்றை இந்த ஆடல் பாடல்கள் வாயிலாகச் செருக்குடன் காத்துவருகின்றனர். இதுவொன்றே இவர்கள் தம் வாழ்வில் பெருமைப்படக்கூடிய விஷயம். இதை அவர்கள் நன்கு அறிவார்கள். நல்ல பாட்டுக்கும், நடனத்துக்கும் உள்ள மதிப்பை இவர்கள் உணர்ந்தவர்களே. மணற்பாலை போன்ற வாழ்வில், இவையே அவர்கள் தஞ்சம் புகும் தண்ணிய சோலையாகும்.

இந்த உணர்வினாலேயே இம்மடந்தையர், தம் வனப்பையே விழுங்குவதுபோல் பார்க்கும் அத்தனை மனிதமிருகங்களைப் பொருட்படுத்தாமல், தலைநிமிர ஆடல் புரிகின்றனர். சமூகத்தைச் சேர்ந்த உண்மையான ரசிகர்கள் முன்னிலையில் தயக்கமின்றி ராக தாளங்களைப் பற்றித் தருக்கம்புரிய இவர்களால் ஆகும். இந்தக் 'கேஉர்' வகைப் பாட்டுக்கள் இது போன்ற பாட்டரங்கிற்கு இன்றியமையாதன. சிறப்பாக ஜுமுர் கோஷ்டிக்கு இது மிக அவசியம். இவ்வகைப் பாடல்கள் தெரியாதவர் இவ்வரங்கில் சேரத் தகுதியற்றவர்களே. யாராவது இவ்வண்ணங்களைப் பற்றி இழித்துப் பேசினால், பெரியவளான அந்தச் சித்தி, 'எத்தனையோ பெரிய பெரிய பண்டிதர்கள், பாடகர்கள் காமசாஸ்திரத்தில் தோற்றுப்போய் என்னிடம் வந்து அல்லவோ சீடர்களாகிக் கற்றுச் சென்றனர்! கேஉர் பாட்டுக்கள் எப்படி மட்டமாகும்?' என்பாள். இன்று இந்தத் தோல்வி ஏற்பட்டதுடன், அந்தக் கலையில் அவளுக்கிருந்த மரியாதை மண்ணைக் கவ்வியது. இதனால் வஸந்தி உடைந்தே போய்விட்டாள். வெற்றி பெறவேண்டுமானாலும் கவிவாலாவும்

நாச்வாலியும் (நாட்டியக்காரி) இரண்டு பேருமே சேர்ந்து பெற வேண்டும். ஒருவர் ஜயிப்பது மற்றவர் தோற்பது என்பது நடக்காது.

ஒருவிதமாகப் பாட்டை முடித்துத் தோல்வியின் சுமையைத் தலைமேல் கொண்டு நிதாயி உட்கார்ந்திருந்தான். டோலக் வாத்தியமும் [1] 'தோஹாஇ'யைத் தீர்த்து அடங்கியது. வஸந்தியும் நடனத்தை நிறுத்தினாள். நாட்டியம் முடிந்ததும் அவள் அரங்கில் நிற்கவே இல்லை. கோஷ்டியின் தலைவி, அந்தப் பெரியவள் அவளையே உற்று நோக்கி, 'வஸன்?' என்று கூப்பிட்டாள். வஸன் திரும்பி, 'எனக்கு உடம்பு சரியாகயில்லை, சித்தி' என்றாள்.

பெரியவள் சிரித்து, 'இதென்னடீ, இன்னொரு தரம் ஆட வேண்டுமே?' என்றாள்.

வஸந்தி நிதாயின் பக்கமாகத் திரும்பினாள். அவளுடைய கண்களில் வேலின் கூர்மை பளபளத்தது. மறுகணமே அவள் வெளியே போய்விட்டாள்.

என்ன அதிசயம், அந்தப் பெரியவள் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பிடில்காரன் எதிலும் அக்கறைப் படாதவன்போல் 'அந்தக் காசுத் தட்டை எடுத்து வா' என்றான்.

ஓர் ஆள் தட்டைக் கொண்டுவந்து வைத்து, 'இரண்டணாக் காசுகள்தான்...வேறு எதுவுமில்லை. எல்லாமாகச் சேர்த்தால் இரண்டு ரூபாய் இருக்குமோ என்னவோ?' என்றான்.

'சரியாக எண்ணிப்பார்' என்றதும் பெரியவள் அந்த வெற்றிலைச் சம்புடத்தை எடுத்து வைத்துக்கொண்டாள். 'இந்த மேளாவுக்கு வருவோர் வெறும் தமாஷ் பார்க்கத்தானே கும்பல் கூடுகின்றனர். நம்ம நிதாயி பாபாவின் பாட்டெங்கே, இந்த டப்பான்[2] எங்கே? உனக்குப் பாட்டைப்பற்றி என்ன தெரியும்?' என்றாள்.

அதற்குப் பிடில்காரன், 'இருக்கலாம் அம்மா; ஆனால் இந்தத் தமாஷாவுக்கு வந்தால், அதற்கேற்ற பாட்டைத்தானே பாட வேண்டும்! இந்த விரசப் பாட்டுக்களும் பாட்டுதானே!' என்றான்.

பெரியவள் இதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அவள் மேலும் சொன்னாள்—'தமாஷா இல்லாது பாட்டா, பாட்டு இல்லாது தமாஷாவா?' அவள் அப்போது வெற்றிலைச் சுருள் ஒன்றை மடித்து வாயில் போட்டுக்கொண்டே, 'என்ன உஸ்தாத்... கடைசி

[1] தாள ஆவர்த்தனத்தில் தரும் மூன்று தீர்மானங்கள்.

[2] இது ஒருவகை இசைப்பாட்டு. இதை முதலில் கொண்டு வந்தவர் நிது பாபு

யில் ஓர் அடி அடியேன்! ஒரு தரம் பாரேன்...' என்றாள் நிதாயியை நோக்கி.

நிதாயி கம்மென்று சிந்தனை செய்தான்.

நிர்மலா, லலிதா இவர்கள் முகத்தில் ஈயாடவே இல்லை. முகம் தொய்ந்து பேசிக்கொண்டனர் தங்களுக்குள்—'வெற்றி தோல்வி பற்றித்தான் போலிருக்கு'

பெருமூச்செறிந்து நிதாயி தலையிறங்கிக் கிடந்தான். எல்லா ருடைய வெட்கமும் சேர்ந்து ஒரு பெருஞ்சுமையாகத் தன் தலையை அழுத்துவதுபோல் அவனுக்குப் பட்டது. வெட்கம் மட்டுமன்று; அவன் அடைந்த வேதனைக்கும் ஓர் எல்லை இல்லை. இந்தக் 'கேஉர்' வகைப் பாடல்கள் அவனுக்கு வராது!

அந்தப் பக்கம் எதிர்க்கட்சியின் டோலக் வாசிப்பு தொடங்கியது. அந்த வாசிப்பில் ஒரு ஜயகோஷமே கேட்டது. வாசிக்கும் பாணியில்கூட ஓர் அறைகூவல் தொனித்தது. அந்தக் கட்சியின் கவிவாலா வெளியே சென்றிருந்தான் போலும். அவன் நாடக தோரணையில் ஒரு சடாவை பாடிக்கொண்டே அரங்கினுள் நுழைந்தான்—

[1] 'ஹாய்...ஹாய்...ஹாய்...ஹாய் காலாசாந்த் பலே கேலோ கி?

குகுரியாம் மயூரியாம்; ஸிம்ஹினியாவது சூகரியாவது; சிமூலமாவது வகுளமாவது; காகமாம் குயிலாம்; மேலார்ப்பாம் நாமாவளியாம்; ராதாவாம் சந்திராவளியாம்—இவற்றிற்கிடையே வித்தியாசமே இல்லையாம்?'—என்ற நிதாயின் வியாக்கியானத்தை நையாண்டி செய்து ஆபாசமான உவமைகளை வைத்து அதே மாதிரி தொடுத் தான். இது, தின் தீண்டியதுபோல் ஜனங்களிடையே ஆரவாரத்தை எழுப்பியது. ஹோ என்று அவர்கள் ஹரிபோல் போட்டனர். பாடகன் ஒரு புது உருப்படியைச் சுவரம்போட்டு எடுத்தான்—

[2] 'ஆ... காலாசாந்தேர் காலோ முகே
ஆகுன ஜ்வேலே தே கோ—
டிக்கேய் ஆகுன தியே ராதே
தாமுக் க்கேயே லே கோ'—

---

[1] அந்தோ...அந்தோ...அந்தோ! கண்ணன் கரிமதி என்ன சொல்லிவிட்டுப் போனான்?

[2] ஆ! கறுப்பழகா, உன் கரிய முகத்தில் நெருப்பை மூட்டிவை. அவன் சிகையைக் கொளுத்திவிட்டு ராதையே, புகையிலை கொஞ்சம் போட்டுக் கொள்!

பொருளற்ற உவமைகள், தாறுமாருகப் புனைந்து வசவும் திட்டும், ஆபாசச் சொற்களும் வைத்துப் பாட்டுக்களைப் பாடி மக்களைக் கவர்ந்துவிட்டான்.

நிதாயி அரங்கைவிட்டு வெளியேறினன். அவர்களைச் சேர்ந்த ஒரு பெண், விரசமாக அங்கங்கள் அசைய ஆடிக்கொண்டே வரும் போது, அதற்கேற்பச் சங்கதிகளைச் சேர்த்து ஒரு ஜாவளியைப் பாடினள்—

1 'தர்...தர்...தர் காலாசாந்தே, பலாயே ஜே ஜாய் கோ !
ஏகா ஆமி தர்தே லாரி ஸபாஇ மிலே ஆய் கோ !'

சபையில் ஒரே அமர்க்களம்; நகைப்பொலி உருண்டு சென்றது. நிதாயி அதற்காகக் கோபம் கொள்ளவில்லை. அவன் சிரித்த முகமாகவே அப்பெண்ணின் சமயோசித புத்தியைப் பாராட்டி 'பேஷ்... பேஷ்... நன்ருகச் சொன்னுய்' என்ருன்.

அரங்கிலிருந்து வெளியே வந்து நிதாயி ஜுமுர் கோஷ்டியின் விடுதியில், வஸந்தியின் குடில் வாயிலில் நின்ருன். அதன் தட்டி வாசற்கதவு பாதி திறந்த நிலையில் இருந்தது. உட்புறம் ஒரு லாந்தர் மெல்லிய ஒளி தந்துகொண்டிருந்தது. வெளியே திறந்த ஆகாயத்தின் கீழ் ஒரு மேடையில் அந்தப் பரந்த இருள் நடுவில், காடி அடுப்பு இன்னும் வெம்மையாக எரிந்து கொண்டிருந்தது. அதன் முன்னுல் அந்த எருமைக் கடாபோன்ற ஆள், பெருவயிறு படைத்த ஒரு கொடூரப் பிராணியைப்போல் அந்த இடத்தை நிரப்பிக்கொண்டு அமர்ந்திருந்தான். காலடிச் சப்தம் வரவே அவன் திரும்பிப் பார்த்தான். நிதாயியைப் பார்த்துச் சிந்தையற்றவனுய் வேறுபுறமாகத் திரும்பி உறங்கலானுன். வஸந்தியின் அறை வாசலில் நின்ற நிதாயி உள்ளே செல்லத் துணியவில்லை. விலைமாதர் அறைக்குள் எப்படி எப்படியோ இருக்கும்! அவன் வெளிப்புறத்திலிருந்தே கூப்பிட்டான்—'வஸன்!'

'யார்?'—அறையின் உள்ளிருந்து வெறுப்புத் தோய்ந்த குரலுடன் வஸந்தி பதில் சொன்னுள்.

'நான்தான்... நிதாயி'—ரஸிகத் தன்மையாக, 'நான்தான் உன் கரிமாணிக்கம்' என்று சொல்ல அவன் நா எழவில்லை.

'எதற்கு வந்தே?'

'உள்ளே வரலாமா?'

---

1 பிடி...பிடி...பிடி என் கருமாணிக்கத்தை! ஓடிப் போய்விடுகிருன். என் ஒருத்தியால் முடியுமா? எல்லோரும் வந்து பிடியுங்கள்!

'எதற்கு ?'

'ஒரு விஷயம் பேச வேண்டும்'

சில நிமிடங்களுக்கெல்லாம் அவளே வெளியே வந்தாள். கால்கள் தடுமாற, அறையிலிருந்து நிதாயின் எதிரே வந்து அவள் நின்ற பொழுது உறையிலிருந்து வெளிப்பட்ட வாளெனத் தோன்றினுள். வெளியே எரியும் அடுப்பின் சிவந்த சுவாலை ஒளியில் அவளுடைய மேனி மேலும் சிவந்து தோன்றியது. நிதாயிக்குத் திகிலாகி விட்டது. அன்று மாலைப்பொழுது பூசாரிணியைப்போல் தணிந்த அழகுடன் தோன்றிய வஸந்தியாகக் காணவில்லை. அதே பழைய மது உபாஸிகை வஸந்தியாகவே இருந்தாள். அவளுடைய அங்க மெல்லாம் ஒரு கூரிய ஒளி பளபளத்தது. அந்த அடுப்பின் செவ் வொளியில் மேலும் ரத்தச் சிவப்பாக விளங்கியது. அரங்கிலிருந்து திரும்பியதும், இங்கு வந்து அவள் மதுபானம் செய்திருக்கிருள். அதன் மயக்கம் அவள் கண்களில்.

'எதற்காக நீ வந்தாய்? நான் வரமாட்டேன்... நான் வரப் போவதில்லை' என்ருள் வஸந்தி.

என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை நிதாயிக்கு. திகிலடைந்த பார்வையுடன் அவன் வஸந்தியை நோக்கியபடி மௌனமாக நின்ருன்.

திடுமென ஆக்ரோஷம் கொண்டு வஸந்தி அவனுடைய கன்னத்தில் பலமாக ஓர் அறைவிட்டாள். 'அசடு வழிய என் எதிரே ஏன் வந்து நிற்கிருய்? சொல்லு... ஏன் ?... ஏன் ?... ஏன் ?' என்று கேள்வியாக அடுக்கினுளே தவிர, அதற்கான பதிலுக்கு அவள் காத்திருக்கவில்லை. தடுமாற்றமாக அவள் எப்படி வெளியே வந்தாளோ, அப்படியே உட்புறம் போய்விட்டாள். இப்படித் தாக்கியும் அவளுடைய ஆத்திரம் அடங்கவில்லை. உட்புறம் சென்றதும், அவள் தன் நெற்றியில் சடேரென அடித்துக்கொள்ளும் ஓசை கேட்டது.

நிதாயி சிலகணம் அங்கேயே நின்றுவிட்டு அடுப்பருகில் இருக்கும் அந்த முரட்டு ஆளை அணுகி, 'ஏ பயில்வான்' என்று கூப்பிட்டான்.

அத்தக் கோஷ்டியினர் அவனைப் 'பயில்வான்' என்றே அழைத் தனர். போதையிலிருக்கும் அவன், சிவந்த கண்களை விழித்து நிதாயியையே சற்று நேரம் பார்த்தான். ஆனுல் அவன் பதில் தரவில்லை. அவனுடைய முன்பற்கள் இரண்டு வெளியே தெரிந்தன.

நிதாயி அவனைக் கேட்டான்—'உன்னிடம் சரக்கு இருக்கிறதா ?... அது தான் சாராயம்...'

பதில் பேசாமலேயே அந்த ஆள் இப்படியும், அப்படியும் தடவிப் பார்த்து, ஒரு புட்டியை எடுத்து அவனிடம் நீட்டினன். அந்தப் புட்டியைக் கையில் வைத்தபடி நிதாயி சற்று யோசித்தான். பிறகு ஒரே விழுங்கில் அதிலிருந்து கொஞ்சம் பருகினன். உள்ளுக்குள் என்னவோ பற்றி எரிகிற மாதிரி இருந்தது. அவனுடைய அந்தராத் மாவே அதைத் தாளாமல் வீறிடுவது போலத் தோன்றியது. ஒரே ஓக்காளம் பிடுங்கியது. உடம்பை யாரோ முறுக்கி விட்டமாதிரி இருந்தது. ஆனல் மிகச் சிரமத்துடன் இந்த விகாரங்களையெல்லாம் தடுத்து நின்றான். மெல்ல மெல்ல இந்த விகார உணர்ச்சிகள் அடங்கின. அப்பொழுது அவனுள் கட்டுக்கடங்காத ஒரு சலனம் தலை தூக்கியது. வேறு மனிதனுகவே மாறிவிட்டான். இந்த உலகமே வேறு விதமாகவே அவனுக்குப் பட்டது. இதென்ன விந்தை?

உலகமே அவன் கண்முன் சுழன்றது.

உள்ளுக்குள் ஒரு வெம்மையின் சுவாலை. உலகமே துச்சமாகி விட்டது போன்ற ஓர் உணர்வு. இப்போது அவனல் எதுவேண்டு மானலும் செய்ய முடியும்? பயங்கரமான அந்த வீர் வம்சிகளின் உடலில் பாய்ந்த அந்தக் கொடிய ரத்த வேட்கை, அதே முரட்டுத் தனம், இதுவரை அவனுள் அடங்கியிருந்த கொடூர அணுக்கள்—இந்த மதுபானம் அருந்தியதும் கிளர்ந்தெழுந்தன, நீரின் பரிசம் பட்டு மஹாமாரியின் (பெரியம்மை) முத்துக்களைப் போல்—புரா ணத்தில் வரும் ரத்த பீஜனின் முளையைப் போல். மேலும் இரண்டு விழுங்கு அந்த மதுவை அருந்தினன்.

இரண்டாவது முறையாக அவன் அரங்கினுள் நுழைந்தான். அப்பொழுது அவனுடைய உருவமே வேறுவிதமாக மாறிவிட்டது. வேறு ஒரு மனிதனுகவே தோன்றினன். அந்தப் புராண தத்துவங் களெல்லாம் மறைந்து போய்விட்டன. பாபம், புண்ணியம் என்ற பேச்சுக்களெல்லாம் எங்கோ போயின. விரசமாகப் பேசி, ‘ஓ’ என்று சிரிக்க அவன் விரும்பினன்.

அவன் இப்படிச் செய்வதில் தவறென்ன? சமூக வாழ்க்கையில் பாவச் செயல்கள், அருவருப்பைத் தரும் காரியங்கள், விரசமானவை—இவை யாவும் குவிந்து அழுகிப்போன ஒரு படுகுழியில் அல்லவோ இவன் பிறப் பெடுத்தவன்! வறுமை, அடிமைத்தனம், மேலோர் காலின் கீழ் நசுங்கிய வாழ்வு—இவற்றைப் பல்லூழியாகப் பொறுத்து வரும் ஓர் இருண்ட சமூகத்தில் தோன்றிய சந்ததியல்லவா! தாய் தந்தையர் நாராசமான மொழிகளைப் பேசி, அதே போல் தம் மக்களை யும் பேச வைத்து, அதே சூழ்நிலையில் அவர்களை வளர்க்கும் ஒரு

தாழ்குலத்துத் தோன்றலல்லவா! நிதாயிக்கும் இவையாவும் தெரியாது என்பதில்லை.

இளமையில் கிடைத்த கல்வியின் சிறு வெளிச்சம் அவனை இந்த இருண்ட உலகினின்று வேறு வழியில் திருப்பியது. தன் குலப் பண்புகளை அவன் மறந்து போக விரும்பினான். அவனுக்கே ஒரு அருவருப்பு ஏற்பட்டிருந்தது. இன்று வஸந்தியிடம் வாங்கிக் கொண்ட அடி அவனை என்னவோ செய்துவிட்டது. வெகுளி பொங்க அவன், அசல் சாராயத்தை விழுங்கி வெறியனாக மாறி விட்டான். இந்த வெறியில் அவன் கேட்க வழங்காத நாராசமான பேச்சுக்களைக் கக்கினான். யாப்பும், சுவரமும் அவன் நினைத்தபடி வந்தன. இனிய குரல் படைத்தவன். பார்த்துக் கொண்டிருக்கையில், அந்த அரங்கு களை கட்டியது.

அவன் நுழையும் பொழுதே கவிவாலாக்களுக்குரிய அந்த நாடக பாணியில் நின்றான். உரத்த குரலில் பக்க வாத்தியக்காரர்களை விளித்து, 'வாத்யக்காரர்களே!' என்றான். எல்லோரும் ஆச்சரியத்துடன் அவன் பக்கமாகத் திரும்பினர். அவன் திரும்பி வருவானென்று யாருமே நினைக்கவில்லை; அவனைக் கூப்பிடக்கூட மறந்து விட்டனர்.

ஆனால் அந்தப் பெரியவள்—சித்தி மட்டும் மறக்கவில்லை. சாதுரியம் நிரம்பியவள். அவள் குரல் கொடுத்தாள்—'உஸ்தாத்' என்று. நிதாயி அப்பொழுது எடுத்தான்—

[1] 'தம்ம கதாய் ஜக்கன் மன ஓடேனா—பஸேனா
தக்கன் திதே ஹய் கால்!
சூஞ்சேர் மதோ மிஹி தாரே ஜக்கன் காஜ ஹய்னா
தக்கன் சாலாதே ஹய் ஃபால்!
ஜக்கன் டாண்டா ஜலே கலே நா டால்—
தக்கன் கஷே திதே ஹய் தேந்துல் காட்டேர் ஜ்வால்'

எதிர்க்கட்சிக் கவிவாலா ஏளனம் தொனிக்க, 'என்ன புலவரே, காலாசாந்த்...குடுமியிலே நெருப்பு பற்றிக் கொண்டதா? கசப்பு ரொம்ப ஏறி விட்டதா?' என்றான்.

---

[1] தர்ம விஷயங்களில் மனம் ஊன்றுவதில்லை. வசவு திட்டுதான் வருகிறது. ஊசியைப் போல் காரியம் செய்ய முடியாது போனால் கலப்பையைத் தூக்கிக் கொள். பச்சைத் தண்ணீரில் பருப்பு ஊறாது போனால், புளியம் விறகிட்ட அடுப்பில் கொதிக்க வை.

நிதாயி அதற்கு, ‘அப்படி அதிகம் இல்லை...ஏ விந்தி, கொஞ்சமா தான் எரியுது... நான் சொல்றதைக் கேளு. நல்லதனமாகச் சொன்னு உனக்கு ஏருதடீ’ என்றதும், ‘ஓ வாத்யக்காரர்களே, ஆரம்பி யுங்கள்...’ என்றான்.

உம்!... உம்!... உம்!’ என்று முழவு அதிர்ந்தது.

நிதாயி எடுத்தான்—

[1] ‘புடீ தூதீ நேடீ குத்தி ஜூத்தி ச்சாடா நை ஸாயேஸ்தா
ச்சடிர் பாடி மார்லே பாவே ஏகி ஆமார் ஸுக அவஸ்தா

கிழவிமேலே தடியைக் கொண்டு அடித்தால் ஒன்றும் பண்ணாது. இந்த விந்திக்கு ஜோட்டால் அடித்தால்தான் புத்திவரும்.’ என்றதும், அந்நடுவயதினனை எதிர்க்கட்சிக் கவிவாலாவின் முகத்தைநோக்கி விரலால் சுட்டி, ‘இந்தக் கிழமுண்டைக்குச் சொகுசு வேண்டுமா? அவள் தலைவகிர் அழகைப் பார்த்து மலைக்க வேண்டுமா?—

[2] ஏ பூடோ பயஸே ப்ருந்தே கோஞ்சா முகே
ரஸகலி காட்டிஸ்னே!
ரஸேர் பியேன் ஜானிஸ் நேகோ
கேஞ்ஜ்லா தாடி காடிஸ்னே.’

அப்புறம் அவன் முகத்தண்டை விரலைக் காட்டி,

[3] ‘ஃபோக்லா முகே லம்பா ஜியே ஜரா லாலா ஜாடிஸ்னே’

என்றான்.

அச்சமயம் ஒரே ஆரப்பரிப்பு சபையில். எல்லோரும் நிமிர்ந்து உட்கார்ந்தனர். நிதாயும் இந்த உணர்ச்சி வேகத்தில் தன்மயமாகி விட்டான்.

மீண்டும் ஒரு பாட்டை எடுத்தான்—

[4] ‘புடீ ம்ரே நா மரண் நாயி ஹாய்—ஹாய்!’

பாடிக்கொண்டே அவன் குதித்தான்.

---

[1] கிழதூதி அவள்; மயிர் உதிர்ந்த நாய் அவள். ஜோட்டால் அடித்தால், அடங்குவாள். பிரம்பைக் கொண்டு முதுகில் போட்டால், ‘என்ன சுகம்’ என்று சொல்லுவாள்.

[2] இந்தக் கிழ வயசில் பிருந்தே, சதை சுருங்கிய முகத்தில் திலகமேன் தீட்டுறாய்? உனக்குச் சுவையைப் பற்றி என்ன தெரியும்? புளிச்சக்களைக் குடிக்காதே.

[3] பொக்கை வாயில் நீண்ட நாக்கில் சுரக்கும் சொள்ளை நக்காதே.

[4] கிழவி சாக மாட்டாள்...சாகமாட்டாள்...ஐயோ சாகமாட்டாளே.

[1] புடீ க்கான்கீ நேடீ குட்டனி மரே நாஇ, மரே நாஇ
ஓ ஹாய், தார் மரண் நாஇ—மரண் நாஇ !

பிற்பாடு ஒவ்வொன்ருக அந்த எதிர்க்கட்சிப் பாவாணரைப்பற்றிய ஆபாசமான வர்ணனைகள் அவன் வாயிலிருந்து வெளியே வந்தன. இதை ரசித்து அப்பெரிய கூட்டம் ஆர்ப்பாட்டமாகச் சிரித்து, அந்த நள்ளிரவு வேளையைக் கலக்கியது. நிதாயின் கண்முன் அந்த விளக்கொளி, மனிதர் உருவம் யாவும் இரட்டை இரட்டையாகத் தெரிந்தன. 'அங்கே இரண்டு நிர்மலா...அதோ இரண்டு லலிதா... இரண்டு பேர் மத்தளம் வாசிக்கிருர்கள்...அந்தச் சித்தியும் இரண்டு சித்தியா சிரிக்கிருள்'—சட்டென அவன் பார்த்தபொழுது வஸந்தியும் அங்கே இருண்டு வஸந்தியாக நடனமாடுகிருள். 'என்ன ஆடுகிருள் !... என்ன ஆடுகிருள் !...' அச்சமயந்தான் வஸந்தியும் அங்குத் தோன்றி நடனமாடத் தொடங்கினுள்.

கடைசி முறையாக நிதாயி பாடிய ஆபாசப் பாட்டு அந்தச் சபையையே கழுத்துவரைச் சேற்றுக் குழியில் அமிழ்த்துவிட்டது. அவன் மெள்ளத் தள்ளாடிக் கொண்டே ஒரு பக்கம் வந்தமர்ந்தான். இப்போது வஸந்தி கோஷ்டியாரின் தட்டில் காசுகள் கோபுரமெனக் குவிந்தன. அவன் தன் பாட்டை முடித்தானே இல்லையோ ஒரு பயங்கர ஹரிபோல் வானை, அந்த இரவை, அந்த மரத்தடியை உலுக்கிவிட்டது. பெரியவள் அவன் முதுகைத் தடவி, 'அப்பனே, எங்கள் மானத்தைக் காப்பாற்றினுய். பார்த்தாயா, நான் அப்பவே சொன்னேனே. சரக்குப் போடாதுபோனுல் இந்தப் பாட்டு சுரக்கவே சுரக்காது. இதுதான் மந்திரம் அப்பா...ஏ வஸன், நம் அப்பனுக்குக் கொஞ்சம் [2]பாத்தியா கொடு...அவனுக்குத் தொண்டை வரண்டிருக்கும்' என்ருள்.

வஸந்தி ! நிதாயி நிலைத்த நோக்குடன் வஸந்தியின் முகத்தையே பார்த்தான்.

ரத்தச் சிவப்பாக இருந்தன அவன் கண்கள். அவன் காலின் கீழ் பூமி நெளிந்தது. திகில், கூச்சம் யாவையும் இந்த வெற்றி உல்லாசத்தில் மறந்தே போனுன். வஸந்தியினுடைய கண்களும் அவன் கண்களோடு இணைந்தன. அதில் எத்தனை ஆசைகள் வழிந்தோடின. அதே போல் நிதாயின் இதயத்திலும் ஒரு நகை

[1] கூட்டிக்கொடுக்கும் இந்த வீட்டுக்கிழவி சாகமாட்டாள்... சாகமாட்டாள்... அவளுக்குச் சாவே வராதோ !

[2] முஸ்லீம் தர்காக்களில் பூஜை போடுதல். இங்கு இடக்கரடக்கலாக 'சாராயம் கொடு' என்று பொருள்படும்.

சுடர் விட்டெழுந்தது. இந்த வஸந்தி ஒரு விந்தையான பெண்! அவள் சிரிக்கிருள்! சற்று முன்பு அவள் நிதாயின் கன்னத்தில் எப்படி அறைந்தாள்! எப்படி அவனை அவமானத்துக்குள் ளாக்கினுள்!—இப்போது அவள் துளியேனும் அதற்காக வெட்கிய தாகத் தெரியவில்லை: மாருக ஓர் உவகையின் சிலிர்ப்பு அவள் முகத்திலும், கண்களிலும். நிதாயிக்குக் கிடைத்த பெருமையால் அவள் பெருமிதம் கொண்டு விளங்கினுள்.

'எனக்கு பாத்தியா கொடு' என்று சொல்லி நிதாயி சிரித்தான்.

'உள்ளே வா...என் அறைக்கு வா...உசத்தி சரக்கு இருக்கிறது... அசல் சீமை' என்று வஸந்தி அவனுடைய கைகளைப் பிடித்தபடி செருக்கால் தலை நிமிர அழைத்துச் சென்ருள்.

அறையில் கண்ணுடிக் கிண்ணத்தில் சீமைச்சரக்கில் சிறிது ஜலம் கலந்து வஸந்தி, நிதாயிக்குத் தந்தாள். கடைசிச் சொட்டுவரை அதை அருந்திவிட்டு அவன் வஸந்தியை நோக்கிச் சிரித்தான். இந்த வஸந்தி முற்றிலும் புதிய வஸந்தியே நிதாயிக்கு. அந்தச் சீமைச் சரக்கு என்றுமிராத தெம்பைத் தந்தது. மீண்டும் நீட்டினுன் கையை. அவனுக்கு வேட்கை எழுந்துவிட்டது. 'இன்னெரு கிளாஸ்' என்ருன்.

வஸந்தி சிரித்துக் கொண்டே கொஞ்சம் ஊற்றிக் கொடுத்தாள். அதைப் பருகிவிட்டு நிதாயி, 'நில்லு உன்னையே பார்க்கிறேன்' என்ருன்.

வஸந்தி சிரித்து, 'வேண்டாம், அரங்கிற்குப் போவோம்' என்ருள்.

'கூடாது...நீ நில்'—வஸந்தியின் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

வஸந்தி நின்ருள். உடலை விற்றுப் பிழைக்கும் மட்ட இனத்தவள். போகிற இடங்களிலெல்லாம் இப்படி வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வெட்கமோ மானமோ இராதுதான்; இருக்கவுங் கூடாது. இந்த வழியில் இறங்கியதும் மானத்துக்கு ஒரு முழுக்குப்போட்டு விட வேண்டியதுதான். இத்தகைய பாதையில் செல்லும் வஸந்தியின் முகம் சட்டெனச் சிவந்துவிட்டது.

ஓர் ஆச்சரியம்...மறுகணமே அவள் கண்களில் நீர் வார்ந்தது. அவள் அழுதுவிட்டாள். வியப்புற்று நிதாயி, 'எதற்காக அழுகிருய்?' என்ருன். அப்பொழுது அவள் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, 'வேண்டாம்...நீ என்னை அந்த மாதிரிப் பார்க்காதே'...என்றதும் இரண்டடிப் பின்னடைந்தாள். நிதாயி அவளை நோக்கி நகர்ந்து, 'ஏன்?' என்ருன். அதற்கு வஸந்தி, 'எனக்கு...

காசரோகம்...நடுநடுவே நான் ரத்தமும் துப்புகிறேன்..மாலை நேரங்களில் எனக்குக் காங்கை வருகிறது' என்று கூறும்பொழுது, டப் டப்பென்று கண்ணீர் உகுத்தாள். உடனே கண்ணைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள்.

'இருக்கட்டுமே' என்றதும், நிதாயின் மார்பு விம்மியது. காட்டு மிராண்டியிடம் காணப்படும் கொடூரமும், வீர்வம்ச மரபினருக்குள்ள ஆண்மையும், பயங்கரமும் கலந்த உருவமுங் கொண்டு முன் நகர்ந்தான். அத்தகைய கோரமான தோற்றத்தை அந்த இளைய மைத்துனி பார்த்துச் சகித்திருக்கவே மாட்டாள். ஆனால் வஸந்தி ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த பெண்ணல்லவா! அவள் ரத்தத்திலும் அந்த ஆதிமனிதரின் கொடூரமும், அச்சமின்மையும் ஊறியிருந்ததால் இதை அவளால் தாங்கிக் கொள்ள முடிந்தது. அதற்கான நெஞ்சுரமும் இருந்தது. நிதாயி தன்னை நோக்கி மெல்ல அடி வைத்து வருவதைத் திகிலுடன் அவள் நோக்கினாலும் அவனை மலர்ச்சியுடனேயே எதிர்நோக்கினாள். அவனுடைய இரும்பான கையணைப்பில் அவள் சிக்கிக் குழையும்பொழுது, மென்குரலில் பாடினாள்—

[1] 'வது தோமார் கர்வே கர்வினி ஹாம் கர்வ டுடாபே கே!
தெஜி ஜாதி குல வரண கைலாம் தோமாரே ஸம்பியா தே'

அப்பொழுது நிதாயின் இரும்பான முயக்கம் மெல்லத் தளர்ந்தது. அந்தப் பாட்டு அவனை மயக்கிவிட்டது—'என்ன பாட்டு!' அவனுடைய மதுமயக்கம் கலைந்துவிட்டது. 'என்ன அழகிய மெட்டு!' நழுவிடும் அவன் இரு கைகளையும் வஸந்தி எடுத்துத் தன் கழுத்தில் மாலையாகச் சேர்த்து மீண்டும் பாடினாள்—

[2] 'பராண பந்துயா துமி,
தோமார் ஆகேதே மரண ஹஉக், எஇ வர் மாகி ஆமி'

'அற்புதம்! அற்புதம்!'—நிதாயிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவன் கண்களில் நீர் நிறைந்தது. குரல் தழுதழுக்க வஸந்தியைக் கேட்டான்—'இந்தப் பாட்டை எங்கே கற்றுக்கொண்டாய்? எந்தக் கவிவாலாவின் பாட்டு இது?'

---

[1] உன் மணுட்டி மிக்க கர்வம் பிடித்தவள். அவள் கர்வத்தை யார் ஒடுக்குவார்! ஜாதி குல வருணம் எல்லாம் உனக்கே நான் தந்துவிட்டேன் (நான் அவற்றை மதிக்க வில்லை).

[2] நீ என் இன்னுயிர்க் கேள்வன்! உனக்கு முன்னால் எனக்கு மரணம் வருக! இதுவே நான் கேட்கும் வரமாகும்!

வஸந்தி இரு கைகளைக்கூப்பி யாரையோ குறித்து வணங்கிப் பாடினாள்—

1 'ஜே ஹலோ ஸே ஹலோ
ஸப் க்ஷமா கர் பலியா தரிலோ பாய்,
ரஸேர் பாத்தாரே நா ஜானே
ஸாந்தார் டுப்லோ சேக்கர் ராய்'

பாட்டைப் பாடியதும் அவள், 'இது மஹாஜன பதம்' என்றாள்.

நிதாயின் உள்ளத்துள் ஓர் இன்பக் கடலின் அலை புரண்டது. அவன் வஸந்தியின் இரு கைகளையும் எடுத்துத் தன் கழுத்தில் அணைத்து, 'எனக்கு அதைக் கற்றுத் தருவாயா?' என்றான்.

வஸந்தி உவகை மேலிட நிதாயின் வாயில் பன்முறை முத்தம் ஈந்தாள்.

16

காலையில் நிதாயி எழுந்தபோது, அவனுடைய நாக்கு நுனியே தொடங்கி வயிற்று உள்புரை வரைக்கும் ஒரே கசப்பாக இருந்தது. உச்சந்தலையிலிருந்து, கால் நகம்வரை ஒரே எரிச்சல். தன்னுடைய மூச்சே அவனுக்குத் துர்கந்தமாக வீசியது. உடம்பெங்கும் ஓர் ஓய்ச்சல்; வெம்மை, விஷம் பரவிவிட்டதுபோல். குளிர்நாள் தொடக்கம். மேலும் விடிகாலை. இத்தனைக் குளிரிலும் அவனுக்கு வேர்வை வந்தது. மண்டையினுள் கடுமையான இடி. அவனுடைய உணர்வு யாவும் கோடைப் பகலில், சுடு புழுதி பரவிய ஆகாயம் போல் வரண்டிருந்தது. மேட்டு வெளியில் கிலுகிலுக்கும் கானல் நீரை ஒத்திருந்தது. வயிற்றுள் வேக்காடு; மார்பினுள் ஓர் எரிச்சல்-உள்வரைக்கும் வரண்டு கட்டையாகிவிட்டது போலிருந்தது.

வஸந்தி அறையினுள் இருந்தாள். அவளுக்கு வேறு என்னவோ வேலை இருந்தது. சில நாட்கள் வசிப்பதற்கென்றே இந்தக் கீற்றுக்

[1] நடந்தது நடந்தாயிற்று. பொறுத்தருள்வாய். உன் கழலடி பற்றினேன். ரஸக் கடலின் ஆழமறியாது நீந்தி மூழ்கிப் போனேன் சேகர் ராய்! (சேகர் ராய் ஒரு பிரபல வைஷ்ணவ பதகர்த்தா)

குடிசை கட்டப்பட்டது. இதை நன்ருக ஒழித்து வைத்துக் கொள்ளும் காரியத்தில் கவனமாக இருந்தாள். பொழுது விடிந் ததுமே இந்த வீட்டு வேலையெல்லாம் மலைபோல் குவிந்து இருந்தது. மேளாவில் சில படங்களை வாங்கினுள். இக்காலத்து நாலாந்தரமான ஓவியர்கள் தீட்டிய வண்ணக் குழப்பமான சித்திரங்கள் அவை. ஜர்மனியில் அச்சடித்த ராதா-கிருஷ்ணர்களின் காதல் ஓவியம்; பிறந்தமேனியாகக் காட்சி அளிக்கும் வெள்ளைக்காரிகளின் இரு படங்கள். படங்களை அவள் தன் அறையில் ஒரு மூங்கில் வடிம்பில் மாட்டிக் கொண்டிருந்தாள்.

நிதாயி எழுந்திருப்பதைப் பார்த்து அவள் முறுவலித்து, ‘ எழுந்து விட்டாயா ? ’ என்ருள்.

அந்தச் சிரிப்பும், அந்தக் கேள்வியும் இன்று நிதாயிக்குக் கோபத் தையே மூட்டின. சிவந்தக் கண்ணுடன் கடினமாக அவளையே பார்த்துக் கசப்பான குரலிலேயே, ‘ ஆம் ’ என்ருன்.

குரலில் கடுமை தொனிக்கவே அவனையே வியப்புற்று நோக்கினுள் வஸந்தி. பின்பு சிரித்தாள். ‘ உடம்பு சரியாக இல்லையான்ன ? அப்படித்தான் இருக்கும். முதல் நாளே அவ்வளவு குடிக்கலாமா ? முகசுத்தி செய்துகொள்... தேநீரைக் குடி... குடித்ததும் ஸ்நாநம் பண்ணு... வெறும் தேநீர் கஷாயம் தருகிறேன். நீ அன்று கொடுத்தாயே, அது ரொம்பவும் உதவி செய்தது ’ என்ருள்.

நிதாயி அவள் பேச்சிற்கு மறுமொழி பகராது, தள்ளாடியபடி வெளியே சென்ருன். அவன் காலின் கீழ் தரை ஆடுவது போலிருந்தது.

காலைக் கடனை முடித்துக்கொண்டு திரும்பியபோது அவனுக்கு எவ்வளவோ இலகுவாகிவிட்டது. குளத்தில் ஆழக் குடைந்து தலைக்குள் பற்றிய அந்த வெம்மையைத் தணித்துக் கொண்டான். அவன் சிகையிலிருந்து அவன் உடலெங்கும் நீர் வெம்மையாக வழிந்தது, காய்ச்சிய இரும்புப் பாத்திரத்தில் நீர்த் தெளித்தமாதிரி. வஸந்தி ஒரு போர் துணியை துவைத்து வரக் கிளம்பினுள். நிதாயி யைக் கண்டதும் அவள் அதைப் போட்டுவிட்டு அவனுக்குச் சரசர வென்று தேநீர் தயாரித்தாள். அதில் எலுமிச்சம் சாற்றைப் பிழிந்து அவனுக்குத் தந்தாள். அது அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது. தேநீரைச் சொட்டுவிடாமல் உட்கொண்டதும் அவன், மறுபடி அறை யில் பரப்பியுள்ள வைக்கோல்மீது படுத்தான். படுத்ததுமே அப் படியே கண்ணயர்ந்து விட்டான். ‘ இந்த வைக்கோல் கூளத்திலே படுப்பானேன் ? ’ என்று வஸந்தி கூறுவது அவன் செவியில்பட்டது.

அவன் கண்ணைத் திறந்து பார்த்தான். ஒரு போர் துவைத்த ஈரத்துணியைத் தோள்மீது போட்டபடி, கால் தொடங்கி தலை வரை ஈரம் சொட்ட வஸந்தி வாசற்படியில் நின்று பேசுவதைக் கண்டான். 'எழுந்திரு... பாய் போடுகிறேன்... தலைக்குத் தலையணையும் தருகிறேன். அடீ நிர்மலா, உன் அண்ணனுக்கு ஒரு பாய் எடுத்து வாயேன்... நான் ஈரப் புடவையுடன் இருக்கிறேன்' என்றாள்.

நிதாயி கண்ணை அழுத்தி மூடி, கரகரத்தக் குரலில்—'வேண்டாம்' என்றான்.

வஸந்தி அவன் அருகில் வந்து அவன் கையைப் பிடித்து இழுத்து கண்டிப்புக் குரலில், 'எழுந்திரு, இப்படிப் படுப்பானேன்... எழுந்திரு...' என்றாள்.

நிதாயி இந்தத் தடவை எழுந்து கண்கள் விரிய வஸந்தியை நோக்கினான்.

'எங்கே... அண்ணா எங்கே...?' என்று சிரித்த முகத்துடன் நிர்மலா உள்ளே வந்தாள். அக்கறையுடன் பாயைப் பிரித்து, அதன்மேல் தலையணையை வைத்து, 'ஓ... என் அண்ணா... நேத்து என்னவெல்லாம் பாட்டுப் பாடினே!' என்றாள்.

அப்போது நிதாயிக்கு முன் இரவு நடந்ததெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. மண்டையில் மின்னல் ஒன்று பாய்ந்தாற் போலிருந்தது.

அதே சமயம், வேறு குடிசையிலிருந்து ஜுமுர் கோஷ்டியின் தலைவி—அந்தச் சித்தியம்மா வெளியே வந்தாள். 'அப்பன் எழுந்து விட்டானா?' என்றாள். மறுகணமே அவள் நடுநடுங்கிப்போய், 'இதென்னடீ வஸன்? இந்த இரண்டு நாளாகத்தான் உனக்கு ஜுரம் விட்டிருக்கு... இதற்குள் ஈரத்தில் நடமாட ஆரம்பித்து விட்டாயா?' என்றாள்.

மெல்லச் சிரித்து வஸந்தி, 'இதையெல்லாம் எத்தனை நாள் துவைக் காமல் இருப்பது...? இனிமேல்தான் நான் ஸ்நானம் பண்ணப் போகிறேன்' என்றாள்.

'நீ எதற்காகத் துவைக்க வேண்டும்?'

நிர்மலா கிளுகிளுவென்று நகைத்து, 'காதல் சாமானிய விஷயம் அல்ல. அண்ணா நேற்று, பாய் படுக்கையெல்லாம் வாந்தி மயமாக்கி விட்டான்...' என்றாள்.

பெரியவள் சிரித்து, வஸந்தியைப் பார்த்து, 'சரி போ... போ... ஈரத்துணிகளைப் போட்டுவிட்டு ஸ்நானம் பண்ணப் போ... புதுசைக் கட்டிக்கொண்டு இதை உலர்த்து' என்றாள்.

இரு கண்களும் வியப்பால் விரிய நிதாயி வினவினுன்—'நாஞ வாந்தியெடுத்தேன் ?'

நிர்மலா மீண்டும் கலகலவென நகைத்தாள்.

தலே குனிந்தவாறு நிதாயி எண்ணமிட்டான். அந்த அறையில் என்னவோ நாற்றம் வீசியதே... அது அவன் வாந்தியின் துர்நாற்றமேதான். அந்த வாந்தியின் நெடி தன் உடலெங்கும் இருப்பதை உணர்ந்தான். அந்த நாற்றமே, அவன் உள்ளே இழுத்துக்கொள்ளும் மூச்சிலும் கலந்து, உள்வரைக்கும் ஓர் அருவருப்பையே மூட்டியது. தன் உடம்பில் இதன் நெடி இன்னும் வீசவே அவனுக்குச் சகிக்க முடியாமல் இருந்தது.

'தலேயைக் கனக்கிறது இல்லேயா அண்ணு? நீ படுத்துக்கொள்... நான் சற்று உன் தலேயைப் பிடித்து விடுகிறேன்' என்றதும் நிர்மலா அவன் நெற்றியை மெல்லப் பிடித்தாள். அவளுடைய கை அவனுக்கு மிருதுவாகவும், சில்லென்றும் இருந்தது. அவளுடைய தீண்டல் அவன் மூளேக்கு ஓர் இதவை அளித்தது. நிதாயி குளிக்காமல் இருக்க விரும்பவில்லே. அவன் எழுந்து நின்ருன். 'இல்லே, நான் குளிக்க வேண்டும்' என்ருன்.

வஸந்தி துணிமணிகளே மடித்து வைத்துக் கொண்டிருந்தாள். அவள் நிர்மலாவைப் பார்த்து, 'அடீ நிர்மலா 'பாஸ்க்கு' (பாக்ஸ்) பக்கத்திலே வச்சிருக்கேன் தைலம்...அதை எடுத்து வா' என்ருள். அவள் நிதாயிடம், 'நன்ருக இதைத் தேய்த்துக்கொண்டு தலேக்குக் குளி; உடம்பு எரிச்சல் எல்லாம் வாங்கும். அப்புறம் 'சப்'பு போட்டுத் தேய்த்துக்கொள்' என்ருள்.

'வேண்டாம்' என்றதும் அவன் வெளியே சென்ருன். குளத்தில் மூழ்கிச் சாக வேண்டுமென்று இருந்தது, ஓவென்று கத்த வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

அவன் ஸ்நானம் பண்ணிவிட்டுத் திரும்பும்போது, வஸந்தி நீராடி விட்டு வேறு ஆடை அணிந்து 'பாக்ஸில்' என்னவோ கிளறிக் கொண்டிருந்தாள். நிதாயி உள்ளே நுழைந்ததும் அவள் சிரித்து, 'இன்னிக்கு எந்த உடை உடுத்தப் போகிருய்? இதோ கண்ணுடி சீப்பு, ஸ்நோ எல்லாம் இருக்கு... ஸ்நோ பூசிக்கொள்' என்ருள்.

அமிழ்ந்து குளித்த பிறகே நிதாயிக்கு உடம்பு சற்று சொஸ்தமாகியது. ஆனுல் மனத்துள் மூண்ட அமைதியின்மை மேலும் தீவிரமாகியது. '*சீ!* இந்த மாதிரி ஏன் செய்தோம்...? *சீ! சீ!*' என்று அவன் குளித்துவிட்டுத் திரும்புகையில் ஒரு துணிவுக்கு வந்தான்— 'இன்றே கிளம்பிப் போய்விட வேண்டும்; ஆனுல்

இவர்கள் விடமாட்டார்கள் ; அதனால் ஓடி விடுவதைத் தவிர வேறு வழியில்லை ! 'இப்படிக் கடை கண்ணிகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று சாக்குச் சொல்லிப் போய்விட வேண்டும். அவனுடைய சாமான்களுக்காக அவன் வருத்தப்படவில்லை. என்ன சாமான்கள் அவை ! இரண்டு தோத்தி, இரண்டு சொக்காய், ஒரு கம்பளிப் போர்வை, இரண்டு கிழிந்த தலையணை. தொந்தரை யெல்லாம் அந்தப் புத்தகங்களைப் பற்றித்தான். அவை சின்னவை யன்று, சால்வைக்குள் மறைத்துக்கொண்டு போவதற்கு. ராமா யணம், மகாபாரதம் இன்னும் இரண்டொரு புராணங்கள்—இவையே ஒரு மூட்டை ஆகுமே. மேளாவில் பஜாரில் வேறு சில புத்தகங்களை வாங்கியிருக்கிறான்...கவிகான் ; பாஞ்சாலி; தர்ஜ்ஜார் கான்; ஸத்ய பீரின் பாட்டு ; கவிகங்கண் சண்டீ ; அன்னதாமங்கல்[1]—இப்படிப் பல புத்தகங்கள்... பாட்டுக்கள் போட்டுவிடும் அச்சடித்த காகிதங்களை வேறு சேமித்திருக்கிறான். தாள்களில் சில நாடகங்களும் இந்தத் தொகையில் அடங்கும். இது தவிர அவன் கட்டிய பாட்டுக்கள் அடங்கிய நோட்டுக்கள் பல......

பெட்டியிலிருந்து சேலையை எடுத்து நிதாயிடம் காட்டி வஸந்தி, 'இந்த உலங்க பாஹார் சேலையை நான் கட்டிக்கொள்ளப் போகிறேன்' என்றாள்.

இதன் குறிப்பை நிதாயி புரிந்துகொண்டான். அதாவது வஸந்தி, பிறந்த மேனியைக் காட்டும் இப்பூந்துகிலை இன்று கட்டிக்கொள்ளப் போகிறாள். இதை நினைத்தபோது அவனுக்குச் சிலிர்த்திட்டது.

'இன்றைக்குப் பார்க்கப் போகிறேன், யார் கெலிக்கப் போகிறார்கள் என்பதை. நீ உன் பாட்டினாலா... இல்லை நான் என்னுடைய ஆட்டத்தாலா ?' என்றாள் வஸந்தி.

நிதாயி, கண்ணாடி சீப்பு எல்லாம் வைத்துவிட்டு சொக்காயைப் போட்டுக் கொண்டான். அவன் மனம் ஒரே முடிவை நாடியது. இந்தப் புத்தகங்கள் எப்படியாவது போகட்டும்... அவன் போயே தீருவான். இந்த இடத்தில் அவனால் இருக்க முடியாது.

'சொக்காய் ஏன் போட்டுக் கொள்கிறாய் ? எங்கே போகிறாய் ?'

'இதோ வந்து விடுகிறேன்'

திடுமென நிதாயி இப்படி இருப்பதைக் கண்டு, வஸந்தி திகைத் தாள்.

'இப்படிக் கொஞ்ச நேரம் பஜாரைச் சுற்றிவிட்டு வருகிறேன்'

---

[1] இவை யாவும் இடைக் காலத்தில் தோன்றிய வங்க இலக்கியக் கருவூலங்கள்.

'வேண்டியதில்லை... பஜாருக்கும் போகவேண்டாம்... கிஜாருக்கும் போகவேண்டாம்... சற்றுப் படுத்துத் தூங்கு... அந்த கிளாஸிலே கொஞ்சம் ஊற்றி வைத்து இருக்கிறேன், அதைச் சாப்பிடு... உடம்பு நோவெல்லாம் போய்விடும்'

'இல்லை நான் கோவிலுக்குப் போகிறேன்'

'கோவிலுக்கா?'

'ஆமாம்'

'ஒரு தரம் பஜார்... ஒரு தரம் கோவில்... எங்கதான் போகப் போகிறே சொல்லேன்?'

'பஜாருக்கும்தான், ராதா கோவிந்தரின் கோவிலுக்கும்தான்'

'சரி, நானும் உன்னுடன் வருகிறேன்...'

நிதாயி, இதென்ன தொல்லை யென்று தன் வாயை மூடிக் கொண்டு வஸந்தியையே நோக்கினான். அந்த விறலி கூரிய கண் படைத்தவள். நிதாயின் உள்ளம் வரைக்கும் ஊடுருவப் பார்க்கக் கூடியவள். அவள் சிரித்து, 'நீ என்னவோ எண்ண மிடுகிறாய்?' என்றாள்.

நிதாயி பதில் பேசவில்லை. வஸந்தி மீண்டும், 'நான் உன்னுடன் வந்தால் என்ன? வெட்கமாய் இருக்கிறதா?' என்றாள்.

இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் திடுக் கிட்டான். 'அதெல்லாம் ஒன்றுமில்லை வஸந்தி! வாயேன்...' என்றான்.

'உன் முகத்தைப் பார்க்கும்போதே எனக்குத் தெரிந்து விட்டதே. இங்கிருந்து தப்பித்துக்கொண்டு போனால் போதும் என்று நீ நினைக்கிறாய். யாரோ உன்னை இழுக்கிறார்கள். சரி நீ வெளியே இரு. நான் அதற்குள் வேறு புடவை கட்டிக் கொள் கிறேன்'

நிதாயி வாயடைத்து நின்றான். வஸந்தியின் கண் கூரியகத்தி மட்டும் அல்ல; அது ஊசியுங் கூட. உள்ளம் வரைக்கும் பாய்ந்து அங்கே குத்திக் குடைந்து பார்க்க வல்லது. அவன் வெளியே வந்து நின்றான். எப்படி இவளை விட்டு அகல்வது என்பதைக் குறித்துச் சிந்திக்கலானான். அந்தப் பக்கம் நிர்மலாவும், லலிதாவும் தத்தம் கேளிருடன்—அதாவது பிடில்காரன், பக்கவாத்தியக்காரன் இவர் களுடன் சேர்ந்து வெகு சல்லாபமாகப் பேசிக்கொண்டு சாராயம் மாந்திக் கொண்டிருந்தனர். மகிடாசுரனைப்போல் இருக்கும் ஆள் கோஷ்டியின் தலைவியான பெரியவளின் மனத்திற்கு உகந்தவன். அவன் ஓர் அதிசயப் பேர்வழி. அவன் இருந்த இடத்திலேயே

அனந்தகாலம் கூட இருப்பான். அவனைப் பார்த்ததும் நிதாயி அவனுடைய சமாசாரத்தைப் பற்றி நினைக்காமல் இருக்கமுடிய வில்லை. ஆள் அதிகமாகப் பேசமாட்டான். வங்காயம் போன்ற கண்களை உருட்டி எவரையும் ஏறிட்டுப் பார்ப்பான். பகாசுரனைப் போல் தீனி தின்பான். பகல் முழுவதும் படுத்து உறங்குவான். இரவில் கழுத்துவரைச் சாராயம் குடித்து விட்டு ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பான். அவன் அருகிலேயே ஒரு விளக்கு எரியும். நெகிழி கனலும் ஒரு குழியும் இருக்கும். நாடோடிகளைப் போல் திரியும் இந்தக் கூட்டத்தவர் அமைத்துக்கொள்ளும் குடிசைகளை நோக்கி இப்பெண்களுடன் இன்பம் துய்க்க வருவோர் எவரும் இவன் கண் பார்வையிலிருந்து ஒளியவே முடியாது. குடித்துவிட்டு வரும் துஷ்டர்கள் இவனுடைய உருவை பார்த்துப் பயந்துபோய் வாலைச் சுருட்டிக் கொள்வார்கள். இவன் நன்ருக குடித்துவிட்டு எதிலும் பற்றற்றவன்போல் இருப்பான். சமயல் விடுதியில் பெரியவள் எண்ணெயில் ஏதோ வறுத்து எடுத்துக் கொண்டிருந்தாள்.

இவளும் ஒரு விசித்திர மாது! எப்போதும் சிரித்த முகம். அவளுடைய கண் சற்றுச் சிவந்தால் அவளை நச்சி வாழும் ஆட்கள் நடுங்கிப்போய் விடுவார்கள். உடனே அவள் சகஜமாகி விடு வாள். இவளுக்குத் தெரியாத பாட்டுக்களே கிடையா. எத்தனையோ சிந்து, சடா, வண்ணம் இவளுக்கு மனப்பாடம். இருபத்துநாலு மணி நேரமும் ஏதாவது காரியம் செய்து கொண்டேயிருப்பாள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியாகத் தாவும் காட்டுக்குதிரைகளைப் போல் உள்ள அந்தக் குழுவினரை, லகான் இட்டு நடத்துபவள். ஒருங்கே அவளே தேரும், அதை ஓட்டும் பாகனும் ஆவாள்.

நிர்மலா சிரித்து, நிதாயியைக் கூப்பிட்டாள்—'வா அண்ணு உள்ளே...ஏழைத் தங்கச்சியின் வீட்டில் உன் காலடி படட்டும்'

நிதாயி சிரித்து, 'இன்னிக்கு என்ன விசேஷம்?' என்ருன்.

'நேற்று லக்ஷ்மி விரதம் ஆயிற்று. எல்லோரும் உபவாசம் இருந்தோம். வஸந்தி எங்கே? அவள் ஏன் வரவில்லை?' என்றதும் சாராய புட்டியைக் காட்டி அவள், 'கடகட' வென்று நகைத்தாள்.

நிதாயி இதற்கு ஒரு கும்பிடு என்பதுபோல் கைகூப்பினுன். பிடில்காரன் அப்போது சிரித்து, 'ஆமாம் ஆமாம். அவளைக் கூப்பிடு. காதைத் திருகினுல் தானுய்ச் சாப்பிடுகிருர்' என்ருன்.

நிதாயின் பின்னுலேயே வஸந்தியின் குதுகுதுப்புக் குரல் கேட்டது. 'காதைத் திருகினுல் மட்டும் என்ன, கவிவாலா கைக்குள் சிக்கி விடுவாரா?' என்ருள்.

வஸந்தி இப்படிப் பேசியது நிதாயின் செவிக்கு இனிமையாய் இருந்தது. சட்டென அவன் திரும்பிப் பார்த்தான். முன்னாள் பார்த்ததுபோல் அவள் பக்தி ததும்பும் பூஜாரிணியின் உடை பூண்டு நின்ருள். வஸந்தி அவனைப் பார்த்து, 'போகலாமா?' என்ருள்.

பாதையின் இரு மருங்கிலும் கடைகளின் வரிசை.

வஸந்தி எத்தனையோ சாமான்களை வாங்கினாள். பழம், தித்திப்பு பக்ஷணம் இவற்றிற்காக ஒரு ரூபாய் செலவு செய்து விட்டாள். ஒரு கால்ரூபாயை மாற்றிக் காலணுக்களாக நிதாயின் கையில் கொடுத்து, 'இதை ஜோபியில் போட்டுக்கொள்' என்ருள்.

நிதாயி மீண்டும் சிந்தாகுலத்தில் ஆழ்ந்தான்.

இந்தத் தளையிலிருந்து எப்படி அறுத்துக் கொள்வது என்பதே அந்தச் சிந்தனை. கோயிலுக்குப் போய் விட்டுத் திரும்பியதும் அவனை ஏதாவது காரியமாகச் சூழ்ந்து கொள்வார்கள். வஸந்தியும் அப்பொழுது இந்த வஸந்தியாக இருக்கமாட்டாள். கொடூர ஒளியும், கூர்மையும் கொண்டு விளங்குவாள். இரவில் தோற்றமளிக்கும் வஸந்தியின் உருவம் அவன் கண் முன் எழுந்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்தான். திரும்புகையில் வஸந்தியை அவள் குடிசைக்கு அனுப்பிவிட்டுத் தான் நழுவி விடுவதென்று திட்டம் போட்டான். ஏதாவது ஒரு சாக்கைச் சொன்னால் போகிறது; தங்கள் ஊரைச் சேர்ந்தவனைத் தற்செயலாகக் கண்டதாகவும், அவனுடன் சற்றுச் சுற்றி விட்டு வருவதாகவும் ஒரு சாக்கு போட்டுவிடவேண்டுமென்று திட்டம் போட்டான். இந்நினைவில் வஸந்தி காசுகளை அவனிடம் தந்தபொழுது, 'என்ன பலத்த யோசனை?' என்று புருவம் கடுத்துச் சொன்னாள்.

'ஒன்றுமில்லை' என்ருன் நிதாயி.

'ஐயோ அம்மா, மறந்தே போய்விட்டேனே. எத்தனை மொண்டியும் முடமுமான பிச்சைக்காரர்கள் கோயில் படிகளில் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலா காலணுவாவது போட வேண்டாமா? அவர்களைப் பார்த்தால் எனக்கு என்னவோ மாதிரியாகிவிடுகிறது' என்று கூறும்போது ஏதனுலோ அவள் உடல் நடுங்கியது.

நிதாயி உண்மையில் இதைப்பார்த்து வாயடைத்துப் போனான். இதென்ன அவள் கண்களில் நீர் ததும்புகிறதே!

கண்ணைத் துடைத்துக்கொண்டு வஸந்தி மீண்டும் சிரித்தாள். அது ஒரு விந்தைச் சிரிப்பு. அது போன்ற ஒரு சிரிப்பை நிதாயி பார்த்ததே இல்லை. 'நானும் இவர்களைப் போல் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமோ? நேற்று உன்னிடம்

சொன்னேனே—இருமும்போது எனக்கு ரத்தம் வருகிறது. க்ஷய ரோகந்தான் என்னைப் பற்றியிருக்கிறது! இந்த ரத்தம் விழுவதை மறைப்பதற்கே நான் ஓயாமல் வெற்றிலைப் போட்டுக் கொள்கிறேன். ரத்தத்தைப் பார்த்து நான் இதனால் திகிலடையாமல் இருப்பேனோ இல்லையோ! ரத்தத்தைப் பார்த்தால்தான் பயம் வருகிறது. இது எங்களவர் எவருக்குமே தெரியாது. அந்த சித்தி ஒருத்திக்கு மட்டும் தெரியும். இத்தனை இருந்தும் என்னால் நன்றாக ஆட முடிகிறது. என்னுடைய வசீகரமான அழகினால் நாலு புருஷர்களை நான் இழுத்துக்கொள்ள முடியும். இதனாலேயே என்னை அந்த சித்தி, கோஷ்டியில் வைத்துக்கொண்டு இருக்கிறாள். நான் படுத்து விடுவேன் என்று அவளுக்குத் தெரிந்தால் என்னை அன்றே அனுப்பி விடுவாள்; இல்லாவிட்டால் எவனிடமாவது தொலைத்து விடுவாள். நான் அப்புறம் ஏதாவது மரத்தடியில் விழுந்துவிட வேண்டியது தான். உயிர் இருக்கும்போதே என்னை நாயோ, நரியோ கிழித்துத் தின்றுவிடும்'

நிதாயிக்குச் சிலிர்த்தியது. 'வஸன்' என்றான்.

வஸன் அதற்கு, 'நான் சொல்வதில் துளியேனும் பொய்யில்லை. இப்படி எங்கள் தலையில் எழுதி இருக்கிறது. என்னுடைய விதி இன்னும் பயங்கரமானது. கவிவாலா, கடைசியில் என்னுடைய ஆசையெல்லாம் மண்ணில் மறைந்தொழியும்'—சற்று நேரம் வாளா யிருந்ததும் அவள் தொடர்ந்து, 'இந் நோய் அருகம்புல்லின் சாற்றை உபயோகித்தால் குணமாகுமாமே!' என்றாள்.

அன்றாடம் காலையில் வஸந்தி அருகம்புல்லைக் கொதிக்க வைத்த கஷாயத்தைச் சாப்பிடுவாள். யாருக்கும் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்வாள். கிரமமாக இதை அவள் சாப்பிடுவதில்லை. ஒழுங்கற்ற அவளுடைய வாழ்க்கையில் இதைச் செய்ய அவளுக்கு ஒழிவு ஏற்படவில்லை. அவள் கட்டோடு இந்தக் கஷாயத்தைச் சாப்பிடாமல் இருந்தால் அந்தச் சித்தி அவளுக்கு நினைவூட்டுவாள்—'அடியே வஸன்! அருகம்புல் கஷாயம் சாப்பிட்டாயா?' என்று விசாரிப்பாள்.

வஸந்தி உதட்டைச் சுளித்து, 'இதைவிட என்னைக் கொன்று போட்டுவிடு சித்தி. என்னால் அது முடியாது' என்பாள்.

மறுபடி இருமல் சற்று அதிகமானால் அவளே பயந்து அருகம் புல்லைக் கொண்டு வருவாள். அதை இடித்துச் சாறு பிழியும்போது அழுகையாய் வரும் அவளுக்கு.

கோயிலுக்குச் செல்லும் வழியில் இத்தனைப் பேச்சும் நடந்தது. நிதாயின் மனசு என்னமோ மாதிரியாகிவிட்டது. ஒரு நெடுமூச்சு அவன் மார்பிலிருந்து எழுந்தது. இப்படிச் சிரித்துக்கொண்டே வஸந்தி தனக்குற்ற காசநோயைப்பற்றி விவரிக்கும்போது அவளுடைய உதடு விரிகையில் அதனிடையே சிவப்பு மசியால் கீறியதுபோன்று ரத்தம், சிவக்க ஊறுவது தெரிந்தது. 'மரத்தடியில் விழுந்து கிடப்பேன். உயிருடன் இருக்கும்போதே நாய், நரிகள் என்னைக் கவ்வித் தின்னும்...'—இந்தச் சித்திரம் அவன் மனத்திலே ஆழமாகப் பதிந்துவிட்டது. முன்னும், பின்னும் அவன் எவ்வளவோ தவறுகளுக்கு உள்ளாகி இருக்கிறான். ஓடி விடுவது என்ற எண்ணத்தையே மறந்துவிட்டான். ஏதாவது சாக்குத் தேட வேண்டும் என்பதையும் அறமறந்தான். தலை குனிந்தபடி வஸந்தி யுடன் கோவிலை நோக்கி நடந்தான்.

திரும்பவும் வஸந்தி அவனுடன் பேசத் தொடங்கினாள். ஆனால் முன்னிருந்த தழுதழுத்த குரல் இப்போது இல்லை. சிரிப்பும் குதூகலமுமாகவே அவள், 'நம் இருவர் ஆடையையும் முடி போட்டுக் கொள்ளலாமா?' என்றாள்.

அவள் வேடிக்கைக்குத்தான் இப்படிச் சொன்னாள். ஒரு விசித் திரமான பெண்! சற்றுமுன் தன் இறுதியைப்பற்றி இத்தனை பேசியவள் இதற்குள் எல்லாவற்றையும் மறந்தே போனாள்!

வஸந்தியையே நிலைத்து நோக்கினான் நிதாயி. சாணைப் பிடித்துக் கூரான கத்தியைப் போன்ற இந்த வஸந்தி ஒரு நாள் கூர்மழுங்கித் துண்டு துண்டாகித் துகளெனப் போகலாம்.

வஸந்தி சிரித்த வண்ணம், 'அதோ பார்த்தாயா?' என்றாள்.

'ஆம்'

'நீ என்ன பார்த்தாய்? கூரான தாழம்புகூட வாடிவிடுகிறது. அழகிய கண்களில் கூட கருத்த சுருக்கம் விழுகிறது...'

வஸந்தியின் முகத்தில் அப்பொழுதும் சிரிப்பின் ஒளி! அதிசய மான சிரிப்பு!

நிதாயி பதில் ஒன்றும் பேசவில்லை. வஸந்தியின் தானைத்தலைப்பை இழுத்துத் தன் சால்வையின் நுனியுடன் முடிபோட முயன்றான்.

வஸந்தி திடுக்குற்று, 'இது எதற்கு?' என்றதும் வேதனை மண்டிய உணர்ச்சி வேகத்துடன் தன் தலைப்பை இழுத்துக் கொண்டாள், 'உஹும்...வேண்டாம்...சீ! நான் வேடிக்கையாகச் சொன்னேன்; அதை நீ நிஜமென்று நினைத்துக் கொண்டாயா?' என்றாள்.

நிதாயின் முகத்தில் தெளிவான சிரிப்பு உலவிற்று, ' இந்த முடிச்சு முன்னுலேயே விழுந்துவிட்டது வஸன். முடி போடுவதைத் தடுக்காதே... நான் முன்னுல் இறக்கும் பக்ஷத்தில் நீ இந்த முடிச்சை அவிழ்த்துக் கொள்ளலாம். நீ எனக்கு முன்னுல் போய் விட்டால், அன்று இதைப் பிரித்து விடுவேன் '...என்ருன்.

வஸந்தியின் முகம் என்னவோபோல் ஆகிவிட்டது.

பனிநாள் முடிவில் பழுத்த அரசிலை பெருங்காற்றில் துடிப்பது போல் அவள் உதடுகள் துடித்தன. ரத்தச் செம்மை பூசிய அவளுடைய ஒள்ளிய முகம் சலவைத் துணிபோல் வெளுத்து விட்டது. செருக்குற்றிருந்த வஸந்தி கணப்பொழுதில் சாம்பிய பிச்சைக்காரிபோல் ஆனுள்.

நிதாயி சிரித்து, ' வா வா... நாம் இத்தனை நாழி கழித்தது போதும். கடவுள் சன்னதியில் நின்று கோபத்திற்கு ஆளாகாதே... ' என்ருன்.

' கோபமா ? என்னுடைய கோபத்தை உன்னுல் தாங்க முடியுமா ? '

' உன் காலைத் தொட்டு நான் அதைப் போக்க முடியும்...வா... வா...' என்ருன் நிதாயி சிரித்துக்கொண்டே.

விடுதிக்குத் திரும்பியபோது அங்கு ஒரே கூச்சலாக இருந்தது. நிர்மலாவும், லலிதாவும் மது மாந்தி ஒரே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர்.

கழுத்தில் பூப்பிணையலுடன் நிதாயும், வஸனும் வருவதைப் பார்த்து அவர்கள் மங்களத் துவனி எழுப்பினர். இருவரையும் பிணைத்துக் கொண்டு இருக்கும் அந்த மாலையை அவிழ்த்துக் கொள்ள இருவருக்குமே ஞாபகம் வரவில்லை.

நிதாயி சிரிக்கலானுன்... துளியாகிலும் அவன் வெட்கப்பட வில்லை. மனச்சோர்வும் அடையவில்லை.

அதிசயத்திலும் அதிசயம் என்னவென்ருல், இதனுல் வெட்கங் கொண்டவள் வஸந்தியே ! நிதாயின் சாதருடன் முடிச்சிட்டிருந்த தன் சேலைத் தலைப்பை இழுத்துக் கொள்ளும்பொழுது நாணத்தால் அவள் தலை குனிந்துகொண்டாள். சிரிப்பை அடக்க முடியாமல் அறையினுள் அடைக்கலம் புகுந்தாள்.

17

இடம் இடமாக நகரும் ஆடல் பாடல் குழுவினர். இந்த ஆடல் பாடல் தொழிலுடன் அதிலுள்ள பெண்கள், விலைக்கு உடலை விற்றுப் பிழைப்பவர். ஊர் ஊராக, நாடுவிட்டு நாடாகச் செல்லும் கோஷ்டியினர் இவர்கள். எந்த இடத்தில் விழா நடக்கிறது, எந்த ஊரில் மேளா கூடுகிறது, எந்தப் பாதையாக எந்த ஊரை அடையலாம்— இவை போன்ற விஷயங்கள் இவர்களது நகக் கணுவில். பீர்பூமிலிருந்து மூர்ஷிதாபாத்—கால்நடையாகவும், மாட்டு வண்டியிலும், டிரெயினிலும், பின்னர் படகிலும் சென்று கங்கையாற்றைக் கடந்து, ராஜஷாஹி, மால்தஹ், திஞஜ்பூர் வரைக்கும் சுற்றிவிட்டு ஆடிமாத ஆரம்பத்தில் வீடு திரும்புவர், இக்குழுவினர்.

பெரியவள் சொன்னாள்—'முன்னெல்லாம் பத்மா நதியின் கீழ்க் கரைப் பகுதிகளுக்குச் செல்வோம். பத்மாவைத் தாண்டியதும் பாங்களாதேசம். அங்கே எங்களுக்கு நல்ல வரவேற்பு ? '

'பத்மாவையுமா தாண்டிப் போயிருக்கே சித்தி?' என்றாள் நிர்மலா.

அவள் பேசி முடிப்பதற்குள் சித்தி (பெரியவள்) பத்மாவின் அக்கரை நாட்டுக் கதைகளை எடுத்துவிட்டாள். 'போகவில்லை யென்று நினைத்தாயோ ? அடேயப்பா, என்ன ஆர்ப்பாட்டம் !' என்றாள்.

அவள் ஹாய்யாகக் காலை நீட்டிக்கொண்டாள். கொட்டைப் பாக்கைச் சீவிக்கொண்டே, 'அம்மா, அந்த வாயுவுத் தைலத்தைக் கொஞ்சம் தடவிப் பிடி...பத்மா நதிக்கு அப்பால் உள்ள ஊர்க்கதையெல்லாம் சொல்லுகிறேன் ' என்றாள்.

வருத்தத்துடன் பெருமூச்செறிந்து அவள் ஆரம்பித்தாள்—'அதை ஏன் கேட்கிறே ! நீங்கள் என்ன பார்த்திருக்கிறீர்கள் ? என்ன சம்பாதித்தீர்கள் ? அந்த மாதிரி ஆடியிருக்கிறீர்களா ? அந்தநாள் ! நாடாவது நாடு ! பொன் கொழிக்கும் நாடு அது ! மண்ணுதான் என்ன மண்ணோ ! லட்சுமி அங்கே பன்னிரண்டு மாசமும் குலுங்குகிறாள். கடையிலே காசு போட்டுப் பாக்கு வாங்குகிறோம் இங்கே ; அங்கே அந்தத் தொல்லையே இல்லை. எங்கே பாரு, கமுகம் சோலைதான். போகவேண்டியதுதான் ; அள்ளிக்கொள்ள வேண்டி-

[1] வங்காளத்தின் சில மாவட்டங்கள்.

யதுதான்; சீந்துவாரற்றுக் கிடக்கும். அந்த இளநீர்க்காயைத் தான் சொல்லு; என்னமா இருக்கும் அந்த நீரும், வழுவலும்! அம்ருதந்தான் போ—நம்ம ஊரிலே பனைமரம் எப்படியோ அங்குத் தென்னைமரம். எந்தப் பக்கம் பார், சணல் சணல் கழனிகள் தான்'

அவள் தன் கையை நீட்டி, திசை முடிவு வரைக்கும் சணல் வயல்கள் அங்குப் பரவியுள்ளதை உணர்த்தினாள். அவள் மறுபடி தொடங்கினாள்—'ஒவ்வொரு சணல் வியாபாரிக்கும்...என்ன பணம், என்ன பணம்... பெரிய பெரிய படகுகள். வியாபாரிகள் தாம் என்ன! என்ன தாராளக் கை அவர்களுக்கு! தட்டிலே அரை ரூபாயும், ஒரு ரூபாயுமே வந்து விழும். தேடினால்கூட அந்த நாலணாக்காசு அகப்படாது. அடியம்மா அந்த மீனைத்தான் சொல்லேன்! எத்தனை வகை! இலிஷ் பேட்கி [1]...அங்குள்ளவர்கள் என்ன காரம் சாப்பிடு கிறார்கள்—மிளகாய் என்றால் உயிர்!'

'ஒருவாட்டி எங்களை அந்த இடத்துக்கு அழைத்துப் போயேன் சித்தியம்மா?' என்றாள் லலிதா.

பெரியவள் மேலும் தொடர்ந்தாள்—'அந்த ராமனும் இல்லை; அந்த அயோத்தியும் இல்லை. இப்போ அங்கே முன்போல் ஆதரவாக வர வேற்பவர்கள் எவரும் இல்லை தாயே. அப்போது நாங்கள் போவோம்; பாடுவோம். எல்லாம் பதாவளியில் வரும் பாட்டுக்களே. அந்தக் காலத்து உஸ்தாதுகள் ரஸபுஷ்டியுடன் இந்தப் [2] பாலாகானங்களை கட்டுவார்கள். அதெல்லாம் நாங்கள் பாடுவோம். என்னமா கூட்டம் சேரும்! நெற்றியில் திலகம் இடுவோம்; கழுத்தில் கண்டி அணிவோம். பஜாரில் எங்களைக் கூப்பிட்டுப் பாடச் சொன்னால், இக்கால மௌசுக்கு ஏற்ற ஜவாளிகளைப் பாடுவோம். இப்போ பாலாகானம் யார் கேட்கிறார்கள்? ஜுமுரும் நடத்துவோம்'

பிடில்காரன் அவள் சொன்னதைக் கேட்டுக்கொண்டே, 'அந்த தேசத்துப் படகோட்டிகள் பாடும் பாட்டு உனக்குத் தெரியுமா சித்தி?' என்ற கேள்வியைப் போட்டான்.

'ஏன் தெரியாது? காதுக்கு இனிமையான பாட்டாச்சே' என்றதும் அவள் தனக்குள்ளேயே மெதுவாகச் சுரம் இழுத்தாள். அவளுக்கு அந்த [3] பாட்டியாலிப் பாட்டின் ஓர் அடி இலேசாகக் கவனத்துக்கு வந்தது. தலையசைத்து, 'ஊஹும், முழுவதும் ஞாபகம் வரவில்லை' என்றாள். என்னவோ ஞாபகமாய், பிடில்காரன் பிடிலில்

---

[1] நெத்திலி, கெண்டை, கெளுத்தி போன்ற மீன் வகைகள்.

[2] ஒருவகைத் தெருக்கூத்துப் பாட்டு.

[3] படகோட்டிகள் பாடும் தெம்மாங்கு.

வில்லைப் போட்டு இழுத்தான் ஒரு சுரத்தை. பெரியவள் உடனேயே, 'ஆம்...ஆம் அதுவேதான்' என்ருள். ஆனல் பிடில் வாசிப்பு சட்டென நின்றுவிட்டது.

நிர்மலா அந்தப் பாட்டின் மெட்டு என்னவென்று அறிய மிக ஆவலாக இருக்கும்போது, பிடில்காரன் சுரம் இழுப்பதை நிறுத்தவே அவளுக்கு எரிச்சலாக இருந்தது. இவன் என்ன ஆள்? வாசிக்க ஆரம்பித்து நிறுத்தி விட்டானே!

நிர்மலாவின் கேள்வன், அந்தப் பிடில் வாசிப்பவன் ஒரு விந்தைப் போக்குடையவன். நாளெல்லாம் பிடிலோடு மன்ருடுபவன். வில்லிலே ரோஜனம் தேய்ப்பான். பிடில் சாவியைத் திருகிச் சுருதி கூட்டும்போது தந்தி அறுந்து விடும். வேறு தந்தியைப் போடுவான். அந்த வாத்தியத்தைத் துடைத்து வைப்பான். அது பளபளவென்று இருப்பதற்கு வார்னிஷ் பூசுவான். ஆனல் இரண்டு நிமிஷம் சேர்ந் தாற்போல் வாசிக்கமாட்டான். அரங்கில்தான் வாசிப்பது வழக்கம். வீட்டிலே புது மெட்டுக்களை வாசித்துப் பழகுவான். இது வேறு விஷயம். நாளெல்லாம் பிடிலை வைத்துக் கொண்டிருக்கும் அவன் தன் மனத்திருப்திக்கு ஒரு நாளாவது வாசித்ததில்லை. இது எல்லோருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. வில்லை இழுத்துச் சுரம் கூட்டுவதிலேயே அவன் காலம் கழிந்துவிட்டது. ஆனல் ஒரு நாள் இப்பேர்ப்பட்டவனும், நடுராத்திரி வேளையில் எல்லோரும் தூங்கு கையில் பிடிலை வாசிப்பான். அது வாசிப்பு! அவன் என்று இந்த மாதிரி வாசிப்பான் என்பதை நிதாயி முன்னலேயே தெரிந்து கொண்டிருந்தான். நிர்மலாவின் அறையில் எவனாவது வந்து இராமுழுவதும் கொண்டாட்டமும் கொம்மாளமும் ஏற்படும்போது அந்தப் பிடில்காரனுக்கு ஜோர் பிறந்துவிடும். அன்று பிடில் வாசிப்பு அற்புதமாக அமையும்.

அது ஓர் அற்புதமான பாட்டு. நிதாயி அந்தப் பாட்டை, பிடிலில் வாசித்தபோது கேட்டான். இருளில் எங்கேயாவது மரத்தடியில் தனி ஆளாக அமர்ந்து, பிடில்காரன் அந்தப் பாட்டை இழைப்பான். ஆனல் யாராவது பக்கத்தில் இருந்தால் அவன் பிடிலை வைத்து விடு வான். நிர்மலாவின் அறையில் இரவுக் கொண்டாட்டம் என்று பலமாக இருக்குமோ, அன்று அவன் அந்தப் பாட்டை வாசிப்பது வழக்கம். தூக்கம் கண்ணை அழுத்தியபோதிலும் நிதாயி அதைக் கேட்கத் துடிப்பான். அந்தப் பிடில் இசையைக் கேட்டதுமே அவனுக்குத் தூக்கம் பறந்தோடிப்போகும். ஆனல் படுத்தபடியே செவி சாய்ப்பான். அந்த எருமைக்கடா ஆள் ஒருத்தனேதான்

பிடில்காரன் லட்சியம் செய்வதில்லை. அவன் ஒரு மனிதனே அன்று; ஒரு ஜடப் பொருள். அவனும் மௌனமாகச் சிவந்த கண்களுடன் இருண்ட திசையே நோக்கிக் கொண்டிருப்பான்.

லலிதா தன் கேள்வனை அந்தப் பின்பாட்டுக்காரனுடன் ஏதாவது தருக்கம் செய்துகொண்டே இருப்பாள். தாளப்பிரமாணம், ஜாதிகள், இவை பற்றி ஏதாவது அவனை வம்புக்கு இழுப்பாள். இடை இடையே அது சண்டையாகவும் முடியும். லலிதா அவனை வெளியே துரத்திவிடுவாள். அவன் சித்தியிடம் முறையிட்டுக் கொள்வான். அவள் நடத்தும் விசாரணையில் யாருக்குத் தோல்வி நேரிட்டாலும், அவன் லலிதாவிடமே அடைக்கலம் புகுவான். 'என் பேரில்தான் தவறு; இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன். என் காதைக் கிள்ளிக் கொண்டு தோப்புக்கரணம் போடுகிறேன்' என்று கெஞ்சுவான். அதேபோல் கரணமும் போடுவான். நிர்மலாவும் வஸந்தியும் அவனுக்கு ஒரு பெயரைச் சூட்டியிருந்தனர்—'மூஞ்சுறு... திருவடி தொழும் மூஞ்சுறுர்' என்று. இதை மறைவாகத்தான் சொல்லுவார்கள். இராதுபோனால் லலிதா சண்டைக்கு வந்துவிடுவாளே. ஆனால் பின்பாடகன் எப்படித் தன்னை அழைத்தாலும் கோபம் கொள்ளவே மாட்டான்; இளிப்பான்.

டோலக் வாசிப்பவனுக்கு ஆசைநாயகி எவளுமே இல்லை. அவன் எந்தப் பெண்ணோடும் தொடிசு வைத்துக் கொள்கிறானோ, அவளிடமிருந்தே பணம், பொருளைக் களவாடி விடுவான். இப்படி ஒரு குணம் படைத்தவன். அவன் நடு வயதினன். நிர்மலாவும், லலிதாவும் ஒரு சமயம் இவனுக்குப் பிரியமானவர்களாக இருந்தனர். ஆனால் இந்தக் காரணத்தினாலேயே கத்தரித்துக் கொண்டு விட்டனர். மனுஷ்யன் என்னவோ அருமையாக வாசிப்பான். அபாரமான லய ஞானமுடையவன். வாசிப்பில் இனிமையான உருட்டல்கள் இருக்கும். எத்தனையோ தரம், ஏதாவது களவாடிவிட்டுக் கோஷ்டியிலிருந்து பிரிந்துகூடப் போயிருக்கிறான். அப்புறம் சில நாட்களுக்கெல்லாம் போன மச்சான் திரும்பி வந்துவிடுவான். நடத்தைக் கெட்டவன். இரவில் வாசிப்பான்; பகலெல்லாம் பெண்களைத் தேடி அலைவான்.

நிர்மலாவும், லலிதாவும் நிதாயிக்கு ஒரு பெயர் வைத்திருந்தனர்—வஸந்த கோகிலம் [1]

வஸந்தியும் நிதாயும் சிரிப்பார்கள்...

[1] வஸந்த கோகிலம்—இளவேனிற் குயில். வஸந்த்—வஸந்தியைக் குறிக்கும். அவளுடைய கேள்வன் குயில்போல் கருநிறமாக இருப்பவன்.

நிதாயி இப்புதிய வாழ்வில் இதுபோன்ற சுற்றத்தில் காலங் கழிக்கலானுன். வாழ்க்கையின் ஓட்டம் அவனை எங்கிருந்தோ இங்கு அடித்துக்கொண்டு வந்துவிட்டது. அந்த இளமச்சி எங்கோ போய்விட்டாள்... ராஜா எங்கோ... இதையெல்லாம் எண்ணும் பொழுது அவன் இதயத்தை என்னவோ ஒன்று பிசைந்தது. ஓடிப் போய்விடலாமா யென்று தோன்றியது. ஆனுல் வஸந்தியின் முகத்தைப் பார்த்ததுமே இந்தத் திடம் குலைந்து போகிறதே! அவன் போட்டுக் கொண்ட முடிச்சு என்றுமே அவிழாததுபோல் இருந்தது. எத்தனையோ தாக்குதல்களைச் சமாளித்து ஒரு கையால் கண்ணீரைத் துடைத்து, மறு கையால் சிட்டிகைப் போட்டுக் கூட்டங்களில் பாடி, எதிலுமே பற்றுதல் அற்ற ஒரு போர்வைக்குள் வளைய வந்தான். அதை அவன் பொறுத்துக் கொண்டான். வஸந்தியை அவன் நேசித்தான்...அவளைத் தன் மார்புறத் தழுவினுன். ஆனுல் அவனுல் அந்த மச்சியை மறக்கவே முடியவில்லை. வஸந்தியிடம் வேறு ஆள் எவனுவது வந்திருந்தால் அவன் மரத்தடியில் தனிமையில் தனக்குள்ளேயே அந்த மச்சியுடன் உரையாடுவான்... இல்லை, திருமணப் பாட்டாவது கட்டுவான்...ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பாட்டின் அடி அவனிடமிருந்து பிறக்கும். வஸந்த கோகிலம் என்ற பெயர் தனக்குச் சூட்டப்படவே அவன் அதைக் குறித்தும் ஒரு பாடலையும் புனைந்தான். மேடையில் கவிவாலாவாக மீண்டும் தோன்ற வாய்ப்பு ஏற்படும்போது அதை எந்தச் சந்தர்ப் பத்திலாவது வெளிப்படுத்திவிட வேண்டுமென நினைத்தான். அந்தப் பாட்டு—

> [1] தோரா—சுனேசிஸ் கி—வஸந்தேர் கோகில - ஜங்கார் !
> வாம்சீ கி ஸெதார்—தார் காச்சே ச்சார்
> ஸே கானேர் காச்சே ஸகல் கானேர் ஹார் |

கோகிலம் (குயில்) என்று அவனுக்கு ஒரு பெயர் இருப்பது எங்கும் பரவி விட்டது. கருங்குயில் என்று சொன்னுல் அது யாரைக் குறிக்கிறதென்பது எல்லோருக்கும் தெரியும்.

இதற்குள் அவன் எவ்வளவோ கற்றுக்கொண்டான் ; எவ்வளவோ திரட்டிக்கொண்டான். பழமையான, பெயர்போன கவிவாலாக் களின் புகழ் வாங்கிய பாலா கானங்களின் எத்தனையோ வரி அவனுக்கு மனப்பாடம். ஹருடாகுர், கோபால் உடே, ஃபிரிங்கிப்

[1] கேட்டீர்களா அந்த இளவேனிற் குயில் கூவுவதை? அதனெதிரே குழலோ, யாழோ என் செய்யும்? எந்தப் பாட்டும் அதன் முன் நிற்காது !

புலவன் ஆன்டனி துரை, கவியால் போலா மய்ரா—இவர்களே தொடங்கி மனத்துள் குருவாகப் போற்றும் தாரண் மண்டல் வரையிலான புலவர் பெருந்தகையோரின் பாட்டுக்கள், அவர்களைப் பற்றிய வரலாறு யாவும் நிதாயிக்கு அடக்கம். ஒழிந்த நேரங்களில் அவன் வேறு விஷயங்களிலும் நாட்டம் செலுத்துவான். ஜுமுர் கோஷ்டிப் பெண்களுக்கென 'லக்ஷ்மீ கதா' என்ற சந்தப் பாடல்களில் அமைந்த ஒரு காவியமே இயற்றிவிட்டான்.

ஒரு லக்ஷ்மி நோன்பின்போது அவன் வஸந்தியைத் திடுக்குறச் செய்தான். அவள் விரதக் கதையைக் கேட்டுவிட்டு, நிதாயிக்கு ஒரு மணை போட்டு அவனை அமரச்செய்து, பிரசாதம் கொடுக்க வந்தாள்.

'கதையைக் கேட்டாச்சா?' என்றான்.

'ஆச்சு'

'நான் சொல்லப் போவதைக் கேள்...'

வஸந்தி வியப்புற்று, 'என்ன?' என்றாள்.

—'லக்ஷ்மீ கதை!' என்றதும் நிதாயி வஸந்தியின் பக்கம் கையை விரித்து, சடா பாடும் சுருதியிலேயே ஆரம்பித்தான்—

[1] 'நமோ நமோ லக்ஷ்மீதேவீ—நமோ நாராயணீ—
வைகுண்டேர் ராணீ மாகோ—ஸோனார் வரணீ |
சததள பத்மே பைஸோ—தேஇ ஸே கமலா
ஸாமான்ய ஸ்ஹே நா பாப்—தாஇ தோ சஞ்சலா |

வஸந்தி பேச்சற்று நின்றாள்—'இதை எங்கிருந்து பிடித்தாய்? புதிய பாஞ்சாலி புத்தகம் ஏதாவது வாங்கினாயா...அதிலிருக்கிறதா?'

நிதாயி அவள் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை, சிரித்தான்.

'என்னதான் சொல்லேன்?'

'முதலில் கேளேன்! [2] பணிதையிலிருந்து யாருடையது என்பது தெரியும்...

[3] அதம நிதாயி கவி வஸந்தேர் கோகில—
லக்ஷ்மீர் வந்தனா காய் சுனோ ஹே நிகில—'

---

[1] லக்ஷ்மி தேவீ, உனக்கு நமஸ்காரம்...! நாராயணியே, வைகுண்ட ராணியே, தாயே... பொன் வண்ணத்தவளே நமஸ்காரம்! அலர்மேல் வீற்றிடுவாய் அதனால் நீ கமலா. சிறு தவற்றையும் அவள் சகியாள். அதனால் அவள் எவரிடமும் நிலையற்றவள்.

[2] பாடகனின் முத்திரை.

[3] இந்தக் கீழ்த்தர நிதாயிப் புலவன் இளவேனிற்குயிலாவான்... லக்ஷ்மியின் புகழைப் பாடுகின்றான்... கேளுங்கள் யாவரும்!

வாயாடி, கர்வியான வஸந்தி விம்மிதமும், உவப்பும் மேலிட்டு ஓடிப்போய் எல்லோரையும் அழைத்து வந்துவிட்டாள்—'ஓ... சித்தி லக்ஷ்மியின் பாஞ்சாலியை வந்து கேளேன்... நிதாயியே எழுதினது...'

பெரியவள், 'என்னடீ ?' என்று குரல் கொடுத்தாள்.

வஸந்தி இரைக்க இரைக்க அவளிடம், 'லக்ஷ்மியின் பாஞ்சாலி! உன் மாப்பிள்ளை எழுதியது' என்றாள்.

அன்று மாலை தன் அறையிலேயே கூட்டம் கூட்டி அவனைப் பாடச் சொன்ன பிறகுதான் அவள் மறு காரியம் செய்தாள். 'நன்றாக ராகம் போட்டுப் பாடு நிதாயீ' என்றாள்.

நிதாயின் பாஞ்சாலியைக் கேட்டு அத்தனை பேரும் ஆச்சரியம் அடைந்தனர். பாஞ்சாலி, நிரம்ப நன்றாக அமைந்திருந்தது. அவர்களுக்குப் பழக்கமான மற்ற கவிவாலாக்கள் ஏதோ பாடுகிறார்கள்... சடா கட்டுகிறார்கள்...ஆனால் இப்படி ஒரு புனித விஷயமாக எவருமே பாஞ்சாலி கானம் புனைந்தது இல்லை. அந்தக் காலத்தில் சிலர் இப்படிச் செய்தார்கள். அவர்கள் பாடியவையே இன்றும் வழக்கில் வருகின்றது. கவியரங்கில் அவர்களுடைய பணிதை வைத்த பாட்டுக்களை வந்தநாகீதமாக எல்லோரும் எடுத்தாள்கின்றனர். எல்லோருக்கும் ஆச்சரியமே—நிதாயி இப்படி ஓர் அற்புதமான பாஞ்சாலியை இயற்றினானே யென்று. அன்று தொடங்கி அவனுக்கு இருந்த மதிப்பு உயர்ந்து விட்டது.

நிதாயின் பாஞ்சாலியே இப்போது இந்தக் கோஷ்டியின் விரத கதையாகத் தொடங்கியது. இவர்களுடன் நிற்கவில்லை. வேறு ஐந்தாறு கோஷ்டியின் உஸ்தாதுக்கள் இந்தப் பாஞ்சாலிகானத்தை எழுதிக்கொண்டு சென்றனர். பூர்ணிமையில், வெள்ளிக்கிழமையில் பெண்கள் இந்தப் பாஞ்சாலியைக் கேட்க ஆவல் கொண்டு வரும் போது அவன் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவான். இப்படியும் நாலா திசையும் பரவும்படியான ஒரு பாஞ்சாலியை தன்னால் இயற்ற முடிந்ததே என்று நினைத்துப் பூரிப்புக்கொள்வான்.

அவனுடைய புத்தகங்களும் எண்ணிக்கையில் வளர்ந்தன. புதிய புதிய புத்தகங்களை மேளாவில் வாங்கினான். இப்போதெல்லாம் கல்கத்தாவிலிருந்தே புத்தகங்களை தருவிக்கின்றான். இது விஷயமாக அவனுக்கு உத்தி சொன்னவள் சித்திதான். இந்தச் சித்திக்குத் தெரியாத விஷயமே இல்லை. ஒவ்வொரு சமயம் நிதாயி பிரமித்துப் போவான், அவளுக்குள்ள சாமர்த்தியத்தைப் பார்த்து. அதனாலேயே அவளிடம் ஒரு மரியாதை. 'வித்யாஸுந்தர்' என்ற

கவிதையை அவள் வாயிலாகத்தான் தெரிந்து கொண்டான். வஸந்தி ஒரு நாள் கூந்தலை வாரி, வேணியாகப்போட்டு ஏதோ காரியமாக வந்தாள். 'இது உனக்கு ரொம்ப அழகாக இருக்கிறது. கொண்டைப் போட்டுக்கொள்ளாதே' என்ருன். அப்போது அங்கே இருந்த இந்தச் சித்தி சடா ஒன்றை எடுத்தாள்—

[1] 'விநநியா வநோதியா வேணீர் சோபாய்,
ஸாபிநீ தாபிநீ தாபே விவரே லுக்காய்'

கண்கள் வியப்பால் விரிய, சித்தியையே நோக்கினுன் நிதாயி. அவன் அப்படிப் பார்க்கவே சித்தி சிரித்து, 'வித்யாஸுந்தர் கேள்விப் பட்டிருக்காயா? பாரதராய்குணுகரரின் வித்யாஸுந்தர் காவியம்?' என்ருள்.

வஸந்தி, லலிதா, நிர்மலா மூவரும் பிடித்துக் கொண்டார்கள்— 'இன்று வித்யாஸுந்தரின் கதையைச் சொன்ஞல்தான் ஆச்சு...'

'எனக்கு எல்லாம் எங்கேயடீ ஞாபகம்? பல சந்தர்ப்பங்கள் மறந்தே போயின...'

'ஞாபகம் உள்ளதைச் சொல்லு...' என்ருள் வஸந்தி விடாமல்.

'உம், சொல்கிறேன்...' என்றதும் சித்தி எடுத்தாள்—

[2] 'கதார் ஹிரார் தார்—ஹீரா தார் நாம்
தாந்த் சோலா ராஜா தோலா ஹாஸ்ய அவிராம்'

சித்தி மடமடவென்று சொல்லிக்கொண்டே போனுள்—

[3] 'வாதாஸே பாதியா ஃபாந்தே கோந்தல பேலாய்
படோசீ நா தாக்கே பாச்சே கோந்நலேர் தாய்'

சித்தி யருகிலேயே வீற்று நிதாயி பணிவாகவே, 'நீ சொல்லு சித்தி, நான் எழுதிக் கொள்கிறேன்' என்ருன்.

'எனக்கும் முழுவதும் ஞாபகம் இல்லையே. வித்யாஸுந்தர் புத்தகம் ஒன்று வாங்கேன். வடதலா புத்தகசாலை எதற்காவது எழுதிப்போடு. உனக்குப் தபாலில் அனுப்புவார்கள் புத்தகத்தை.

[1] நன்ருகச் செருகி முடித்த அவள் பின்னலழகைப் பார்த்துப் பொருமிப் பாம்பு வளையினுள் மறைந்தது.

[2] அவள் சொல்லிலே வயிரத்தின் கூர்மை; அதனுல் அவள் பெயர் ஹீரா! பளபளக்கும் முல்லைப் பற்களைக் காட்டிச் சிரிக்கிருள்.

[3] காற்றிலே கண்ணிவைத்து, கோடரி மிதக்குது. கூட ஒருத்தி இராதுபோனுல் அதன் பாடு சங்கடம்.

பணத்தைக் கொடுத்து இங்கேயே வாங்கிக்கொள்ளலாம். வடதலா புத்தகசாலையின் விலாசம் பஞ்சாங்கத்தின் பின்னுல் போட்டிருக்குமே ' என்ருள்.

வித்யாஸுந்தருடன் அவன், அன்னதாமங்கல் காவியத்தையும் தருவித்திருந்தான். அந்தப் புத்தகத்தில் இருந்த விளம்பரத்தைப் பார்த்து, [1] தாசுராயின் பாஞ்சாலீ, உத்பட சாகரம்—இவற்றையும் வரவழைத்தான். தாசுராயைப் படித்த பிறகு அவனுக்கு ஓர் ஐயம் தீர்ந்தது. [2] ' நந்தினி ப'லோ நாகரே டுபேச்சே ராஇ ராஜநந்திநீ கிருஷ்ண-கலங்க-ஸாகரே ' — இன்னும் ' கிரி, கௌரீ ஆமார் ஏஸேச்சிலோ—ஸவப்நே தேக்கா தியே, சைதந்ய கராயே சைதந்ய ரூபிணி கோத்தாய் லுகாலோ '—இப்படி தாசுராய் இயற்றியுள்ளார். அவர் கடைசி ரசனையான ' கேஉர் ' பாட்டைப் பாடு முன்பு நிதாயி தாசுராயையே மனத்துள் வணங்குவான்.

'கேஉர்' அவன் அதிகமாகப் பாடுவதில்லை. அதைப்பாட இப்பொழுதெல்லாம் அவனுக்குக் கூச்சம் வருவதில்லை. சில நாட்களுக்கெல்லாம் கவிவாலாக்கள், கவிகானம் கேட்பவர்களிடையே அவனுக்கு நல்ல பெயர் நிலைத்துவிட்டது. அவனுடைய பாட்டுக்களை ஊன்றி எல்லோரும் கேட்டனர். கேட்க வழங்காத கேஉர், ஆபாசமான ஏளனப்பாட்டுக்கு எதிர்பாட்டாக அவன் பாடத் தொடங்கியதால் ரசிகர்கள் மெச்சிக் கைத்தட்டினர். சில தினங்களுக்கு முன்னர் ஓர் அரங்கில் இப்படி ஒரு கவிவாலாவுடன் பாட்டு மோதல் நடந்தது. அந்தக் கவிவாலா முதியவன். சிகையை எவ்வளவு விட்டுக் கொண்டிருந்தானே அவ்வளவு ஆபாச உருப்படிகளை வாய் கூசாமல் பாடுவான். இந்தக் ' கேஉர் ' பாடுவதில் அவன் பிரக்கியாதி பெற்று இருந்தான். எல்லோரும் அவனை, ' கேஉர் புலி ' என்று கூறுவர்.

அவனும் ஒரு ஜுமுர் கோஷ்டியில் இருந்தான். இந்த முதியவன் முன்னுல் அரங்கில் ஏறி, நிதாயியைக் ' காலா சாந்த் ' [3] ஆக நிற்க வைத்துத் தான் விருந்தையின் பாத்திரத்தையேற்று வந்தான். இந்த அமைப்பில் சந்த்ராவளியை அதாவது வஸந்தியை அந்த முதிய பாடகன் 'கேஉர்' பாடல்களால் இழிவுபடுத்தி விட்டான். அவளுடன் சேர்ந்து கண்ணுகை வரும் நிதாயியை உயிருடன் மண்ணில்

[1] இடைக் காலத்துக்குப் பிறகு வங்க இலக்கியத்தில் தோன்றிய பிரபந்தங்கள்.

[2] நாத்தூணே, அந்த நாகரிகனிடம் சொல்லு, அந்த ராஜநந்தினி ராஇ கிருஷ்ணகளங்கக் கடலில் மூழ்கி விட்டாளென்று. வரைமகள் கௌரி வந்தாள்; கனவில் காட்சி தந்தாள். என்னை யெழுப்பி அந்த சித்ருபிணி எங்கோ மறைந்தாள்.

[3] முன்னுல் பார்க்கவும்.

புதைத்துவிடப் பார்த்தான். அவனுடைய கவிப் போட்டியில் இந்தப் பாத்திரங்கள் எந்த ஏளனத்துக்கும் இலக்காக அமைந்தன. அன்று ஒரு நாள் முதல்முறைக் கூடிய அரங்கில் வஸந்தி நிதாயின் கன்னத்தில் அறைந்தாள் அல்லவா! எதிர்க்கட்சிக் கவிவாலா, இதைப் பயன் படுத்திக்கொண்டு நிதாயியை இறக்கிவிட்டான். இதனால் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எதிர்க்கட்சி இதைத் தகுந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை.

எதிர்க்கட்சிக் கவிஞன் அரங்கில் ஏறி கேஉரைத்' தொடங்கினன். நிதாயின் தோற்றம், வஸந்தியின் உருவம் இவற்றை வைத்து மிக நாராசமான பாட்டு வாயிலாகத் திட்டியதும் அரங்கை முடித்தான்.

நிதாயி ஏறினன் அரங்கில், இந்தச் சவாலுக்கு ஜவாப் தர. அவனைப் பார்த்ததும் பெரியவள், ' அப்பனே அதே பழம்பாட்டா கொஞ்சம் மெருகேற்றேன் ' என்ருள்.

நிதாயி சிரித்து, ' அதற்கென்ன, ஏற்றத்தான் போகிறேன். இந்த வாட்டிப் பாரேன்...' என்றதும் தொடங்கினன்.

பாட்டென்னவோ அந்தப் பழைய உருப்படிதான்.

[1] ' ஏ புடோ வயஸே விருந்தே—குஞ்ச்கோ முகே
ஆர் ரஸகவி காட்டிஸ் நே !
ரஸேர் பியேன் நா ஜானிஸ் ஜதி—
கேஞ்ஜ்லா தாடி காண்ட்டிஸ் நே '
சோனேர் நுடி பாக்கா சுலே—
காஜ் நேஇ ஆர் ஆல்போட் துலே—
ஓ தோர்—ஃபோக்லா தாந்தே பட்சே லாலா
ஜிப் தியே ஆர் சாட்டிஸ் நே |
ஓ ஹாய்—புடி மரே நா—மரண் நாஇ—
ஓ பயே யம ஆஸே நாகோ
ஓ தாஇ மரண் நாஇ

பயம் எதற்கென்று கேட்பீர்—பின்னணிப் பாடகர்களே தெரிந்து கொள்ளுங்கள்... யமனுக்கு ஏன் பயமென்ருல்? ' என்ருன்.

[1] இந்தக் கிழவயதில் பிருந்தே, சுருங்கிய உன் நெற்றியில் திலகமேனோ? சுவை என்னதென்று நீ அறியாத பட்சத்தில் புளித்த கள்ளைப் பருகாதே. சணல் போன்ற நரைத்த கூந்தலை ஏன் பின்னிக்கொள்கிருய்? உன் பொக்கை வாயில் சொள்ளு ஒழுகுது—அதை நக்கி விடாதே. கிழவி உனக்குச் சாவு வராதோ ; சாவு வராதோ—உன்னைக் கண்டால் யமனே ஓடுகிருன். அதனால் நீ சாகவே மாட்டாய் !

ஒருவன், ‘ருசிக்கவில்லை... யமனுக்கு அவள் ருசிக்கவில்லை’ என்ருன்.

மற்ருருவன், ‘ஏதாவது எடக்குப் பண்ணுவாளென்று யமன் வராமலிருக்கலாம்’ என்ருன்.

‘உஹூம் இல்லை... சந்திராவளி, உனக்குத் தெரியுமானுல் சொல்லு’ என்ருன் நிதாயி.

வஸந்திக்குச் சங்கடமாகிவிட்டது. கவிவாலாவின் மனத்திற்கு ஏற்றவாறு என்ன சொல்வதென்று சற்று யோசித்தாள். ஆனுல் அவள் ஏமாறுகிற பேர்வழியல்ல. ‘கிழவி எங்கேயாவது மேலே விழுந்து தன்னைக் காதலித்து விடுவாளோ என்றுதான் யமன் வர நடுங்குகிருன்’ என்ருள்.

நிதாயி, ‘பேஷ்... பேஷ்...’ என்று உரக்கச் சொன்னுன்.

ஜனங்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்து அயர்ந்தனர்—‘சரியாகச் சொன்னே...’ என்றதும் நிதாயி பாட்டைத் தொடர்ந்தான்—

[1] ‘ஓ பாச்சே, பிரீதி கரிதே சாய்—
யம ஓரே நேய் நா தாஇ—
ஓ தோர் பாயே தரி—ஓரே புடி
ஃபோக்லா தாந்தே ஹாஸிஸ் நே
யமகே பாலோபாஷிஸ் நே’

நிதாயின் எதுகை, மோனை, இன்குரல், சிலேடை, வியங்கியம்—இவற்றின் கூர்மையும் சபையில் ஒரே கலகலப்பை மூட்டிவிட்டது. அத்துடன் வஸந்தியின் ஒயில் நடனம் சேர்ந்துவிட்டது. இப்போதெல்லாம் அவள் ஆபாச நிருத்தியங்கள் புரிவதில்லை. ஆனுல் தன்னுடைய நடனத்திலேயே தோய்ந்து விடுகிருள். காணுநரும் இதனை விரும்பினர். ஜனத்திரளில் சில பகுதியினர் ஆபாச நடனம் புரியுமாறு கூச்சல் போட்டனர். ஆனுல் பெரும்பாலோர் அவளுடைய அமைதியான கூத்தையே பாராட்டினர். சற்று நாகரிகமானவர்களும் இந்தக் கூட்டத்தில் பார்க்க வந்திருந்தனர். நிதாயும் இதை உணர்ந்து சமயோசிதமாகப் பாட்டுக்களை வேறு தோரணைக்குத் திரும்பினுன்—

---

[1] நீ ஒரு வேளை அவன்மீது காதல் கொண்டுவிட்டால் என்ன செய்வான்? அதனுல் ஓடுகிருன். உன் காலைத் தொட்டுச் சொல்கிறேன், கிழவி உன் பொக்கை வாயைக் காட்டிச் சிரிக்காதே... யமனிடம் ஆசை வைக்காதே...

[1] '(தோமார்) பாலோபாஷி பலேஇ
தோமார் ஸஇதே நாரி அஸைரண்
நஇலே தோமாய் கடு பலார் சேயே
பாலோ ஆமார் மரண்'

அவன் விளக்கம் சொல்லத் தொடங்கினுன்—' ஏ விருந்தே... நீயே எனக்குக் காதல் ஆசான்! நீதான் எனக்கு ராதையை அறிமுகம் செய்து வைத்தாய். நீதான் பூர்ணிமை தோறும் பூம்பாயலை அமைத்தாய்—எங்களைக் குறித்து நீயே பாடினுய், எங்கள் இணை உருவின் இன்னமூகை! ஓ தோழி, இந்தக் கிழவயதில் உனக்கு வந்த மதிமயக்கம் ஏனோ? அதனுலேயே வெஃகி நான் உன்னைக் கடுமை யாகப் பேசிவிட்டேன். நீயே யோசித்துப் பார், நீ செய்த காரியத்தை—

[2] ரஸேர் பாண்டாரி துமி—கதா தோமார் மிச்சரீர் பானு
ஸேஇ துமி ஆஜ் ஹாடே பேசோ
ஸஸ்தா கேஉர் குக்நீதாநா—!'

இப்படி நிதாயி அந்தப் பாட்டுப் போட்டியின் போக்கையே வேறு விதமாகத் திருப்பிவிட்டான்.

வஸந்திக்குக் கோபமே. ' கடைசியில் அந்த ஆளை இப்படி இனிய வார்த்தைகளால் ஏன் சமாதானப்படுத்த வேண்டுமோ? அவனைக் குத்திக் குத்திக் கொன்று இருக்கவேண்டும்—ஏனோ இந்த மழுப்பல்' என்ருள் அவள்.

நிதாயி சிரித்து, ' வஸன், உனக்கு இது புரியவில்லையே... இன்னுது இனியது, கயப்பு இனிப்பு, மென்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் சபையில் களைக்கட்டும்' என்றதும் அவளுக்கு மேலும் விளக்கி, ' அந்த ஆளுக்குத் தள்ளாத வயசாச்சு... உயிர் வைத்துக் கொள்வது நன்ருக இல்லை... நீயே சொல்லு ' என்ருன்.

வஸந்தி இதற்குமேல் பேசவில்லை. நிதாயி சிரித்து, ' என்மேல் கோவமா வஸன்?' என்ருன்.

வஸந்தி சிரித்து, ' இல்லை ' என்ருள்.

---

[1] உன்மீது ஆசை கொண்டதால் நான் உன்னைச் சகித்துக் கொண்டிருக்கிறேன்; இராதுபோனுல் உன் கடுமையான சொற்களைவிட இந்த மரணத்தை நான் வரவேற்பேன்.

[2] சுவையின் கருவூலம் நீ. உன் பேச்சு தேனினும் இனிமையானது. இன்று இந்தச் சந்தையில் விலைபோகும் மலிவான அவல் பொரி கொள்ளு நீ.

'அப்படியானுல்?'

'அதுதான் யோசிக்கிறேன்... நீ என்னைக்கூட இளகச் செய்து விட்டே!'

நிதாயி அவளையே பார்த்தான்.

'அந்த அடி ஞாபகம் இருக்கா?' என்ருள் அவள்.

'அந்த அடியை வாங்காமலிருந்தால் உன் 'குயில்' உன்னைக் கூப்பிட்டிருக்குமா? அது எனக்குத் தந்த உபதேசமாச்சே—'

வஸந்தி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

நிதாயி அவள் தலையை மோந்து, அன்பின் மிகுதியால் தடவித் தந்தான்.

கேஉர், பச்சையான கேஉர். வாயில் வழங்காத ஆபாசப் பாட்டுக் களையும் அவன் பாடவேண்டியிருந்தது. இரண்டொரு இடங்களில், நிசி ராத்திரியில் இதுபோன்ற பாட்டுக்களைப் பாடாமல் இருக்க முடியாது. ஜனங்கள் இதைப் பாடச் சொல்லி வற்புறுத்துகின்றனர். இந்தக் கிழவனைப் போல் எவனுவது ஒரு எதிர்தரப்புப் பாடகன் இந்தச் சகதியில் இறங்கிச் சாக்கடையைக் கிளறுவான். அதனுல் நிதாயும் இந்தச் சேற்றில் இறங்க வேண்டியிருக்கிறது. பாலா கானம் முடிந்தது. அன்று அவனுடைய போக்குச் சற்று விறு விறுப்பாகியது. அவனுடைய கண்களில் ஓர் உக்கிரம் தாண்டவ மாடியது. அவனுக்குச் சூடு பிடித்துவிட்டதென்று அவனுடைய கோஷ்டியினர் புரிந்துகொண்டனர். எல்லோருக்கும் முன்னுல் இதை வஸந்தியும், சித்தியும் அறிந்தனர்.

'வஸன்!' என்று பெரியவள் இங்கிதம் செய்தாள்.

'ஆமாம் சித்தி—' என்ருள் வஸந்தி.

அவள் அரங்கிலிருந்து வெளியே வந்து, அங்கிருந்தே நிதாயியைக் கூப்பிட்டாள்—'ஒரு பேச்சுக் கேட்டுவிட்டுப் போகலாம்...'

பெரியவளும் அவனுக்கு நினைப்பூட்ட, 'அப்பனே... உன்னை அவள் கூப்பிடுகிருள்' என்ருள்.

நிதாயி திடுக்கிட்டான். ஆழ்ந்த முகத்துடனேயே வெளியே வந்து வஸந்தியை நெருங்கிக் கையை நீட்டினுன். எதற்காகத் தன்னை வஸந்தி கூப்பிடுகிருள் என்பதை உணர்ந்தான். கிளாஸ் நிரம்பச் சாராயத்தை ஊற்றி அவனிடம் தந்தாள். முழுவதையும் அருந்தி கிளாஸை அவளிடமே திருப்பிவிட்டு முற்றிலும் மாறியவனுக அரங்கில் தோன்றினுன்.

பின்னர் இரவு ஏறஏற அந்த அரங்கே குலுங்கியது. வெறிபிடித்துக் கூவியது, எத்தனையோ ஆபாசப் பாடல்களால்.

ஒவ்வொரு தரமும் அவன் அரங்கிற்குப் போகுமுன்பு சாராயம் துளும்பும் கோப்பையை அவனிடம் நீட்டுவார்கள். அவனும் அருந்துவான். நடுநடுவே வஸந்திக்குக் கொஞ்சம் மதுவை ஊற்றித் தருவான். அவளும் தென்பாட நிற்பாள். இதுபோன்ற நாட்களில் அரங்கு எப்படி இருக்குமென்று சொல்லவே தேவையில்லை. நிதாயி யின் ரத்தத்திலும், மூளையிலும் மதுபானத்தின் வீரியம் வேலை செய்யும். அவன் பிறப்பால் பெற்ற, வமிசக்கிரமான விஷம் அது. இந்தக் குப்பைமேட்டில், இந்தச் சாணக் குழியில், இந்தக் கொடிய நச்சினை அவன், இளமைப் பிராயந்தொட்டே உட்கொண்டவன். இது விஷபீஜமென, அவனிடத்தில் ஆழ்ந்திருக்கும் பயங்கரச் சக்திகளை வெளிப்படுத்திவிடும். அவனுடைய மொழி, பாவம், நடை யாவும் ஆபாசச் சுவைக்கே அடிமையாகிவிடும். அதுமட்டுமல்ல. இதன் வேகம் தீவிரமானால், அற்ப காரணத்திற்கெல்லாம் யாருட னுவது பெருத்த மோதல் ஏற்பட்டு, எதிரியைக் கொலை செய்யும் அளவிற்கு அவனை ஊக்கிவிடும்.

இதுபோன்ற சமயங்களில் பெரியவள் தன் கோஷ்டியாரை எச்சரித்துவிடுவாள்—' யானைக்கு மதம் பிடித்துவிட்டது... ஜாக்கிர தையாக அவனிடம் நடந்துகொள்ளுங்கள்...வாயை விடாதீர்கள் '

நிர்மலா சிரித்து, ' பாகனைக் கூப்பிட்டால் அடங்கிப் போகிறது தன்னாலேயே ' என்பாள்.

பெரியவள் வஸந்தியை நோக்குவாள். வஸந்தி சிரிப்பாள். அப்பொழுது அவள் சிரிக்கும் விதமே மிக அற்புதமாகத் தோன்றும். அந்த மாதிரி சிரிப்பைக் கண்டு நிர்மலா கலகலவென்று நகைத்து, ' அப்படி என்னமோ உருண்டு உருண்டுச் சிரித்து இளகிப் போகிறாயே வஸன் ' என்பாள்.

வஸந்தியின் மூளையிலும் மதுபானத்தின் போதை ஏறிவிடும்; கண்கள் தொய்யும். இருப்பினும் அவளுடைய சிரிப்பு மட்டும் ஓயாது. இது போன்ற நாட்களில் அவள் எத்தனையோ விஷயங்களை எதிர்பார்ப்பவள். இது போன்ற சமயத்தில்தான் நிதாயி, வஸந்தியை முழுவதும் தன்னுள்கொண்டு இன்பம் துய்ப்பான். வஸந்தி அவனிடம் வந்ததும் நிலைதடுமாறுவாள்.

வலுவான தோளிடையே அவளை ஏந்தி ஊசலாட்டுவான். சில சமயம் குழந்தையைப்போல் அவளை மேலே எறிந்து கப்பென பிடித்துக்கொள்வான். தலைமீது அவளை அலக்காக வைத்து நடமாடுவான். பிராணனே ஒடுங்கியவளாய் வஸந்தி, தொய்ந்து சாய்வாள். அப்போதுதான் அவன் அவளை விடுவான். இவ்வளவு

அவன் ராட்சஸக் காதலுடன் தன்னை ஆட்டினாலும், அவள் அவனையே எதிர்நோக்கி யிருப்பாள்.

சாந்தமான நிலையில் அவன் சகஜமாகக் காட்சி தருவான். அவன் வஸந்தியை அன்பின் ரஸத்தில் கழுத்துவரை அமிழ்த்தினாலும் அவளுடைய பிடிக்கு அடங்காமலேயே ஒதுங்கி நிற்பான்.

வஸந்தி அச்சமயம் வலுவில் அவனுடன் தன்னைப் பிணைத்துக் கொள்வாள். அவனை இழுத்துக்கொள்ளவும் மாட்டான், உதறித் தள்ளவுமாட்டான். தலையே பிடித்து முதுகுவரை தடவித் தருவான். இளம்பிள்ளையாகவே அவளை நினைப்பான். இதிலும் ஓர் ஆர்வம் தென்படும்.

வஸந்தி ஏதாவது சாக்கிட்டுச் சிணுங்குவாள்; அழுது பார்ப்பாள்.

நிதாயி தன் கையாலேயே அவள் கண்ணைத் துடைப்பான். 'நீ அழுதாக்கால் என் மனசு ரொம்ப நோவும்' என்பான்.

மெல்லப் பாடுவான்—

[1] 'தோமார் சோக்கே ஜல தேக்கிலே
ஸாரா புவன் ஆந்தார் தேக்கி
துமி ஆமார் ப்ராணேர் அதிக ஜேநேஓ
தாஹா ஜாநோ நாகி?'

கூடவே சொல்லுவான்—'உண்மைதானே?'

வஸந்தி உள்ளுக்குள் குதுகுதுப்படைவாள். அவள் முகத்தில் புன்னகை பூக்கும். அவளே கண்ணைத் துடைத்துக்கொண்டு, 'சொல்லமாட்டேன்' என்பாள். 'என் கருங்குயில் அல்லவா? அற்புதமாகக் கூவினாய். அதை முடித்துவிடு...இந்தப் பாட்டை எழுதிக்கொள். ஆனால் அது முடியாதுபோலிருக்கு...இதை எழுதி வைத்துக்கொள்ள முடியாதோ என்னவோ...குறை நிற்கும் பாட்டு என்றுமே காணாமல் போய்விடுமே...' என்பாள்.

வஸந்தியின் அந்த முதல் உருவம் அவன் மனத்திரையில் நின்றது! அவளுடைய கண்களில்தான் எந்த மாதிரித் தீவிர ஒளி சுடர் விட்டது! அந்த வஸந்தி இன்று விழிநீர் பெருக அழுகிறாள்.

நிதாயி சிரித்து ஒரு பாட்டை எடுத்தான்—

---

[1] உன் கண்ணில் நீர் வருவதைப் பார்த்தால் இந்த உலகமே எனக்கு இருண்டு விடுகிறது! நீ என் உயிரினும் மேலானவள் என்பதை நீ அறியாயோ?

'ஸே ஆகுன் தோமார் கே—லோ
  கோத்தாய் சுதாஇ தோமாரே ?
ஓ தோமார் நயந்கோணே ஆகுன ச்சிலோ
  ஜ்வல்தோ திகி திகி ஹோ
ஆய்நாதே முக தேக்தே கியே—
தேக்கோ நி கி ஸகி ஹோ ?
ஓ ஹாய்—ஸே ஆகுன் ஆஜ் ஜல ஹலோ
  புடாஇயே ஆ-மாரே ?
சுதாயி தோமாரே !'

இந்தப் பாட்டைக் கேட்டதும் வஸந்தி இருமடங்காக விசும்பினாள். எவ்வளவோ சமாதானப்படுத்திய பிறகே அவள் ஓய்ந்து விட்டாள்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே அவள், 'பாட்டை முடித்துவிடு. நான் கற்றுக்கொண்ட பிறகுதான் வேறு காரியம் செய்வேன். உன்னை அடித்தேனே, அதை இன்னும் நீ மறக்கவில்லையா ?' என்றாள்.

நிதாயி, 'கடவுள்மேல் சத்தியமா...' என்ற போது வஸந்தி, அவன் வாயைப் பொத்தி, 'சீ...சீ... நான் விளையாட்டாகக் கேட்டேன்' என்றதும் அவள் சிரித்து, 'உனக்கு இந்த விளையாட்டுக்கூட புரிய வில்லையே...' என்றாள்.

வஸந்தியும் அவனுக்கு எவ்வளவோ கற்றுக்கொடுத்திருக்கிறாள். அவனுக்கு டப்பான் பாட்டுக்கள் சொல்லித் தந்திருக்கிறாள். அது நிதாயிக்கு மிகவும் பிடித்திருந்தது. 'அது அல்லவோ பாட்டு! பதாவளியில் ஏற்படும் பிடித்தம் வேறு; இந்த டப்பான் மோகம் வேறு தினுசானது. இது நம் உடன்பிறந்த ஆசை போன்றது' டப்பானுடன் அவன் நிதுபாபுவைப் பற்றியும் தெரிந்து கொண்டான். வஸந்தியே அவனுக்கு இதையெல்லாம் சொன்னவள். மனத்துள்ளே அவன் ஆயிரம் தடவை வாழ்த்தினான். இது நிதுபாபுவின் ஒரு டப்பான்—

[2] தாரே புலிபோ கேமநே
  ப்ராண ஸம்பியாச்சி யாரே ஆபன் ஜேநே—

[1] உன்னிடமிருந்த அந்தக் கனல் எங்கே போய்விட்டது சொல்லுவாய்? அது உன் விழிக்கடையில் சுடர்விட்டு ஒளிரும்மே! கண்ணாடியில் முகத்தைப் பார்த்தபோது தெரியவில்லையா ஸகி? ஐயோ அந்தக் கனல், நீராகி ஆவியாகி மறைந்ததோ? உன்னைக் கேட்கின்றேன்.

அவளை எங்ஙனம் மறப்பேன் ? என்னவள் என்று அவளுக்கு என் பிராணனைப் பறிகொடுத்துவிட்டேன். அவள் மீது கொண்ட காதலினாலேயே நான் அவளைக் காதலிக்கவில்லை; என் சுபாவம் இது. உன்னைவிட எனக்கு யாருமில்லை!

மற்ளுென்று—

'பாலோபாஷிபே பலே பாலோபாஷி நே
ஆமார் ஸ்வபாவ ஏஇ
தோமா பஇ ஆர ஜானி நே

'ஆஹா! இது அல்லவோ மிச்சரீபாநா!'—இப்படி நிதாயி இவற்றை இனிப்பான ஷர்பத்துடன் ஒப்பிட்டான். நிதாயிக்கோ ஆர்வம், இப்படிப் பாட்டுக்களைப் புனைய வேண்டுமென்று. அவன் இது போன்ற பாட்டுக்களை இயற்றிவிட்டு இறந்துபோனாலும் பிற்காலத்துப் பாடகன் எவனாவது அவற்றைப் பாடுவான்; 'பேஷ்' என்று புகழ்வான்.

ஒவ்வொரு நாளும் கவிதைப்புள் அவன் நெஞ்சில் கொஞ்சியது. நடுநடுவே நிதாயி எதிலுமே பற்றுதலிராமல், எதிலுமே ஆர்வம் குன்றித் தோன்றுவான். அந்த ரெயில் ஸ்டேஷன் அவன் கண்ணெதிரே வந்து நிற்கும். அந்த இளம் மச்சி...பகல் வேளையில், ரெயில் தண்டவாளம் வளையும் இடத்திற்கு அப்பால் வெயில் ஒளி பட்டு ஒரு பொன் புள்ளி பளபளக்கும்... வங்க நாட்டுப்புறம். மாடுகளை மந்தையில் நிழலுக்கு ஒதுக்கும் சமயம், உழவர் வீட்டுப் பெண்கள் தம் ஆடவர்களுக்குக் கலயங்களில் பகல் உணவுக் கொண்டு தலையில் சுமந்து வயல்களை நோக்கிச் செல்வார்கள்... ஊரில் பாலை விற்று வர மடந்தையர் அசைந்தாடிக் கொண்டு வருவார்கள்...வெயில் பதைபதைக்கக் காயும் மேட்டுவேளியில் அந்த மச்சி தலையில் குடத்துடன் வருவது தெரியும்—இப்படிப் பழைய சித்திரங்கள் நிழலாடும்போது அவனுக்கு இந்த வெறுப்புணர்ச்சி தோன்றிவிடும். எதுவுமே பிடிக்காது போய்விடும்.

அந்த நாணற்பூ, பொன்கிரீடம் அணிந்துவரும் காட்சியே அவனுக்கு அடிக்கடி எழுந்தது. அந்த இளைய மச்சி! இந்தக் கணமே ஓடிவிடலாமா யென்று அவனுக்குத் தோன்றும். அதே கிராமத்தை அடைய அவன் நெஞ்சம் ஏங்கும். அந்தக் கிருஷ்ணசூடா மரத்தடியில் நின்றபடித் தொலைவில் தென்படும் ஒருத்தியைக் காணவே அவனது உள்ளம் கதறியது. உடனேயே அந்தப் பாட்டு—'என் மனத்திற்கு உகந்த மடவரலே; உன் பொருட்டே நடுப்பாதையில் என் இல்லம் அமைத்தேன்'—

'வேண்டாம்...

மறுகணமே பெருமூச்செறிந்து, 'வேண்டாம்...அம்புலியே நீ ஆகாயத்திலேயே இரு...மச்சி, உன்னிடத்திலேயே சுகமாக இரு... உன் இல்லறத்தில் நீ இன்பமாக வாழ்ந்திடு...' என்று சொன்னான்.

அவனுக்குத் திரும்பிப் போகத்தான் அவகாசம் ஏது? இன்னும் வரிசையாக ஐந்து நாட்கள் ஜுமுர் நிகழ்ச்சிகளில் அவன் பங்கு கொள்ள வேண்டும். தேர்ந்த கவிவாலாவுடன் அவன் இப்போது போட்டிக்கு நிற்கிறான். வேறொரு மேளா அரங்கிற்கு அவனுக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஆனால் ஜுமுரைத் தவிர வேறு எந்த மாதிரிப் போட்டியிலும் அவன் சேர விரும்பாததால் அவர்கள் திரும்பிப் போய்விடுவார்கள்.

இந்த அரங்குகள் ஆனதும் ஜுமுர் கோஷ்டியார் தூலியானுக்குச் செல்வார்கள். அவன் போய்விட்டால் இவர்களுடைய கோஷ்டிக்கு கையொடிந்த மாதிரி ஆகிவிடுமே... வேறொரு சங்கடம். இந்த வஸந்தி இருக்கிறாளே... வஸந்திக்கு அவன் சத்தியம் பண்ணிக் கொடுத்துவிட்டானே...அவள் மூச்சு இருக்கும் வரை அவளுடைய முடிச்சை அவிழ்த்துக்கொண்டு போக முடியாது... இப்படி ஒவ் வொன்றாகத் தடங்கல்கள் அவனைச் செல்ல விடாமல் வழிமறித்தன. அவன் உள்ளம் எதனாலோ நடுக்குற்றது. வஸந்தியின் மரணத்தை அவன் விரும்புகிறானா? இல்லை, இல்லை...'மச்சி நீ தொலைவாகவே இரு... நிம்மதியாக இரு... உன்னைப் பார்க்க நான் வரமாட்டேன்' இந்தக் கருங்குயில், வஸந்தத்தை விட்டுப் பிரியவே பிரியாது... வஸந்தி உயிருடன் இருக்கட்டும்...அவளுக்கு உடம்பு தேறட்டும். வஸந்தியுடனேயே அவன் வாழ்வைக் கழிப்பான். இன்னும் எத்தனை நாள் இந்த வாழ்வு? இதற்குள் வஸந்தியின்மேல் படரும் இந்த ஆசை, காதலுக்கு ஒரு முடிவே ஏற்படாது. இவளுக்குப் பிறகு அந்த மச்சினிமீது அவனுக்கு எப்படி காதல் துளிர்க்கும்? இப்படித்தான் அந்த இளைய மச்சியிடமும் ஆசை வைத்தான்... அந்த விளையாட்டு அரைகுறையாக நின்றது. இப்போது வஸந்தி யைப் பற்றுகிறது இந்த ஆருக்காதல். மீண்டும் வஸந்தியைத் துறந்து அந்த மச்சினியை நோக்கித் தாவுமோ? இது நடக்காது...வஸந்தி யோடு இருப்பதே நல்லது.

இத்தனை எண்ணியும் அவனுக்கு வெறுப்புணர்வு இருந்து வந்தது. திறந்த மேட்டுவெளிக்குச் சென்று அமர்ந்தான். யாரோ தன்னை அழைப்பது போலவும், பின்னால் நிற்பதுபோலவும் அவனுக்கு ஒரு மருள் மூண்டது.

வஸந்திதான்—

'இதோ பார்... இப்படி இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும் உனக்கு' என்றாள்.

நிதாயி யோசனையில் ஆழ்ந்தபடி, 'என்ன வஸந்தி?' என்றான்.

'நானும் பார்க்கிறேன், காலையேபிடித்து என்னமோ மாதிரி நீ அலைந்து கொண்டிருக்கிருய்... சாப்பிட வேண்டாமா?'

'நல்ல பாட்டு வருகிறது வஸன்...இதைக் கேளேன்...'

'பாட்டெல்லாம் அப்புறம்... சாப்பிட வா...'

'வேண்டாம்... முதலில் பாட்டு' என்றதும் சுரம் போட்டு அதைப் பாடத் தொடங்கினுன்—

[1] 'ஏஇ கேத ஆமார் மனே மனே;
பாலோபேஷே மிட்லோ நா ஆஷ்—
குலாலோ நா ஜீபன்;
ஹாய், ஜீபன் ஏதோ ச்சோட் கேநே, ஏ புவநே?'

சிறிது நேரத்திற்குள் ஒன்று நிகழ்ந்துவிட்டது. வஸந்தி அவன் முகத்தையே இமைக் கொட்டாமல் நோக்கித் தன்மயமாக அவன் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்படியே கல்லெனச் சமைந்து போய்விட்டாள்.

நிதாயி திடுக்குற்று அவளை—'வஸன்... உனக்கென்ன வஸன்? ஏ வஸந்தீ!' என்று கூப்பிட்டான்.

அவள் இரு விழிகளிலிருந்தும் இரு கீற்றுகக் கண்ணீர் வழிந்தது—'ஏன், இந்தப் பாட்டை எழுதிஞய் கவிவாலா?'

'ஏன் வஸன், அப்படிச் சொல்லிவிட்டாய்?'

களைப்பான குரலில் அவள், 'நான் இப்போது நலத்துடன்தானே இருக்கிறேன் ... இதை ஏன் எழுதிஞய் ... இந்த வாழ்வு அத்தனை அற்பமாவானேன்?' என்ருள்.

காரணமின்றி நிதாயின் மார்பு திக்கென அடித்துக்கொண்டது.

18

உண்மையில் அச்சமயம் வஸந்திக்கு உடல் நிலை நலமாகத்தான் இருந்தது. இப்போது அவளுக்கு எவ்வளவோ தேவலை. தன்

---

[1] இந்த எவ்வமே என் மனத்துள்... என் ஆசை தீரவில்லை. அதற்கு இவ்வாழ்வு போதாதோ? ஐயோ! வாழ்வு ஏன் இவ்வளவு அற்பமாகிவிட்டது, இவ்வுலகிலே?

உடம்பைக் குறித்து அவளுக்கு அக்கறை பிறந்துவிட்டது. மது பானமும் குறைந்துவிட்டது. முன்பு அருகம்புல் கஷாயத்தை ஒதிக்கி விட்டிருந்தவள், இப்போது தவருமல் காலை எழுந்ததுமே அதைச் சாப்பிட்ட பிறகே எந்த வேலையையும் கவனிக்கிருள். அவளுடைய உடம்பு எவ்வளவோ தேறிக்கொண்டு வந்தது. சுண்டிக் கிடந்த முகத்தில் சதை போட்டிருந்தது. சோகையின் பசலை பாய்ந்த அவளுடைய மேனி நல்ல ரத்தம் ஊறவே சற்றுக் கறுத்தே இருந்தது. பேச்சில் அந்தக் கூர்மை இருந்தது; ஆனுல் அதில் காரமில்லை. அவள் இப்போது எதற்கெடுத்தாலும் சிரிப்பதில்லை. மெதுவாகவே இதைச் செய்கிருள்.

லலிதாவும், நிர்மலாவும் ஏளனம் பண்ணுவதை நிறுத்தவில்லை. நிதாயின் காரியத்தை வஸந்தி செய்யப்போனுல், லலிதா நிர்மலா விடமாவது, இல்லை, நிர்மலா லலிதாவிடமாவது—'அடியே சகி, கடைசியில் இப்படியா...!' என்று பேசிக் கொள்வார்கள்.

இதன் பொருளாவது—ஒரு சமயம் இந்த அவலட்சணத்தைப் பார்த்து இவள் முகத்தைத்திருப்பிக்கொண்டாள். இப்போது அவன் சிறிது நேரம் தன்னுடன் யிராதுபோனுல் சரிப்படுவதில்லை.

வஸந்தி இதற்கெல்லாம் எரிந்து விழுவதில்லை. மெல்லச் சிரித்து, 'நாசமாகப் போ...' என்பாள்.

பெரியவளும் சிரிப்பாள். இடை இடையே அவளும் ஏதாவது மர்மமாகப் பேசுவாள்—'வஸன், பூ பூத்துவிட்டது... குயில் என்ற பெயரை மாற்றி உஸ்தாதுக்குச் சுரும்பு என்று வை. குயிலும் கறுப்புத் தான்; சுரும்பும் கருநிறந்தான்!'

வஸந்தி சிரிப்பாள்—

ஆனுல் ஒரு சமயம் மட்டும் அவள், பழைய வஸந்தியாகவே இருப்பாள். அந்தச் சமயமாவது—மாலை நேரத்துக்குப் பிறகு. அதன் பின்னரே சற்று உக்கிரமாகிவிடுவாள். அவள் பிற ஆடவருக்குத் தன் உடலை விற்றுவிடும் நேரமது. மாலை மழுங்கி இருள் சூழ்ந்ததுமே பெண்களை விலைபேசுவோரின் நடமாட்டம் அதிகமாகும். பெண்கள் சிங்காரித்துக் கொண்டு ஓரிடத்தில் அமர்ந்திருப்பார்கள். அல்லது தத்தம் விடுதிகளில் எதிர்நோக்கி யிருப்பார்கள். இந்தச் சமயம் பெண்கள் தமக்குள் அந்தரங்கமாகப் பேசிக் கொள்வார்கள். தெரிந்த ஆடவர்களுடன் தொடர்பே கொள்வதில்லை. விரசமான குறிப்புக்களை உணர்த்தித் தமக்குள் மர்மமாக நடந்து கொள் வார்கள்.

நிர்மலா மெதுவாகவே அழைப்பாள்—' நிவ... நிஸ... நிந்த்... என்று. அதாவது இத்தொடரில் முதலெழுத்தை எடுத்துவிட்டு மிகுவது வ-ஸ-ந்த்.

வஸந்தியும் இதைப் புரிந்துகொண்டு, 'நிஏன் ?' என்பாள். அதாவது 'ஏன் ?'

அந்த 'நி' எழுத்தைச் சேர்த்து மேலும் விரசமான ரகசியப் பேச்சுக்களில் ஈடுபடுவர். சில நாட்கள் விபசாரம் பற்றிய சல்லாபம்... அதைக் கேட்டு அவர்கள் உருண்டு சிரிப்பார்கள். வெளி ஆடவர்களைக் கவரும் வகையில் தம் அங்கங்களைத் தீட்டி வைத்துக் கொண்டிருப்பார்கள். இதிலிருந்து அவர்களுக்கு விடுதலையே இல்லை. அவர்கள் இதிலிருந்து தப்புவதற்கும் அந்தச் சித்தி விடாள். அவர்களுக்கும், இது நெடுநாளைய பழக்கமுமாகி விட்டது. வழியே இல்லை. ஆடவர்கள் இந்தச் சமயம், தத்தம் காரியங்களை நோக்கிப் போய்விடுவார்கள். தாற்காலிகமாக இவர்களுடைய தொடர்பை அறுத்துக் கொள்வார்கள். இதிலே கலக்காமல் இருப்பார்கள்.

நிதாயி தனிமையான இடம் ஒன்றைத் தேடிக் கொள்வான். தன் லாந்தர் விளக்கை ஏற்றிக்கொண்டு எழுதுவான் அல்லது படிப்பான். வஸந்தியின் அறையில் வருவோரின் காமாதுரமான குரல்கள் கேட்கும். அப்போது நிதாயி, ராமாயணம் படித்துக் கொண்டிருப்பான். அல்லது கிருஷ்ண லீலையை எடுத்துக்கொள்வான். பாட்டுப் புனைவான்—

[1] 'ஆர் கதகால் மாகால ஃபலே புல்பி ஆமார் மன் ?'

அல்லது—

[2] 'ஆமார் கர்மபல் தயா கரே குச்சாவோ—
ஜநம கர் ஸஃபல்'

சில சமயம் அவன் ஏதாவது சிந்தையில் மூழ்கியிருப்பான். பெரிய கவிவாலாக்களைப் பற்றி நினைப்பான்—' உண்மையில் அவர்களே சிறந்த பாவலர்கள்—ஜுமுர் போன்ற ஆட்டங்களுக்குப் பாடல்கள் புனையாதவர்கள். அவர்களுக்கும் என்றைக்காவதுதான் அரங்கில்

[1] இன்னும் எத்தனை நாள் எட்டிக்கனிபோல் என் மனத்தை ஏமாற்றுவாய் ?

[2] என் தீவினையைக் கருணைகூர்ந்து ஒழித்திடு, ஹரி! என் பிறப்பைப் பயனுறச் செய்!

பாட வாய்ப்புக் கிட்டியிருக்கும். இந்தக் கூட்டத்தைவிட்டு அகன்று போய் விடவேண்டும். ஆனல் ஒரே தடங்கல்...இந்த வஸந்திதான். வஸந்தி இதற்கு உட்படமாட்டாள்...அவளுக்கு எல்லாம் நன்ருகப் புரிகிறது. ஆனல் பிய்த்துக்கொள்ள முடியவில்லேயே ஆச்சரியந் தான்...' அவன் தனக்குள்ளேயே இதைக் குறித்துச் சிரித்துக் கொள்வான்.

'என்ன? எதற்காகச் சிரிக்கிருய்?'

நிதாயி, வஸந்தியை நோக்கினன். பிடில்காரன் அவனேயே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சற்றுத் தொலேவில் உட்கார்ந் திருந்தான். தன் பிடிலில் சுருதிச் சேர்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சுருதி அவனுக்கு எப்போதுதான் கூடப் போகிறதோ? சுருதியைச் சரிப்படுத்துகிருன்; வில்லேத் தந்திமீது இழுத்துப் பார்க்கிருன்; மறுபடி பிடிலின் சாவியைத் திருகுகிருன்; சட்டென அறுந்து விடுகிறது தந்தி...வேறு தந்தி போடுகிருன்; வில்லில் ரோஜனம் தேய்க்கிருன்; பிடிலேத் துடைக்கிருன்; நடுநடுவே கொஞ்சம் வார்னிஷ் எடுத்துப் பூசுகிருன்.

நிர்மலாவின் அறையினுள் கூச்சலும், கொந்தளிப்புமாய் இருக்கிறது.

பிடில்காரன் பிடிலில் வில்லேப் போடுகிருன். நடு இரவு வந்தால் தான் அவனுக்கு வாசிப்புக் குதிரும். பன்னிரண்டு மணிக்குமேல் அவனுக்குத் தெம்பு பிறக்கும். அற்புதமாக வாசிப்பான். வில்லால் இழைத்த ஒரு நீண்ட சுரம்...அந்தச் சுரம் உருக்கமாகத் துடிக்கும். நடு நடுவே அது பிரதிமத்யமத்துக்குத் தாவும்போது உடல் உண்மையில் சிலிர்த்திடும். உலகமே அடங்கித் துயில்வது போலவும், நாற்புறமும் பனி மூடி வருவதுபோலவும் தோன்றும். இந்த இசையில்தோய்ந்த அவனுக்கு, கைகால் சில்லிட்டு விடுவது போல் தோன்றும். அவனுடைய எண்ணங்கள் உறங்கி விழும்.

பின்பாடகன், பக்கவாத்தியக்காரனுடன் ஏதாவது வாதம் புரிவான்.

இந்தப் பக்கவாத்தியம் வாசிப்பவன்மீது எவளுடைய நிழலும் படுவதில்லே. அவனிடம் காதல்கொள்ள எந்த மடந்தையுமில்லே. அவன் உரக்கச் சிரிப்பான்... தன் வாத்தியத்தைத் தட்டுவான்... பின்பாடகனுடன் வாதம் புரிவான். நடுநடுவே பெண்கள் விடுதிக்குச் சென்று கொஞ்சம் சாராயம் அருந்திவிட்டு வருவான். பிடில்காரனுக்கு அந்தச் சாக்கில் கொஞ்சம் எடுத்து வருவான். அப்புறம் தூக்கம் வந்தால் எங்கேயாவது சுருட்டிப் படுத்துக்கொள்வான்.

பின்பாடகன் லலிதாவின் அறைக்குச் சென்று அவளோடு ஏதாவது அக்கப்போர் பேசுவான். எருமைக்கடா போன்ற அந்த ஆள் நெகிழிக்கு முன்னால் கிடப்பான். பெரியவள் குடிசைகள்மீது ஒரு நோக்குடன் பாக்குச் சீவிக்கொண்டிருப்பாள். யாராவது ஆள் வந்தால் பெண்களைக் கூப்பிடுவாள்; பேரம் பேசுவாள். பணத்தை வாங்கிக் கொள்வாள். மறைவாகச் சாராயமும் விற்பாள். இது போன்ற சமயங்களில் அவள் வேறு தோற்றமே கொண்டிருப்பாள். மர்மம் நிரம்பியதாகவே இருக்கும் அவள் முகம். அதிகம் பேசவே மாட்டாள். ஒரு சிடுசிடுத்த பார்வை. அந்தக் கோஷ்டியில் உள்ள வர்கள் அவளுக்கு நடுங்குவார்கள். வஸந்தி மிகவும் உக்கிரமாக எவனுடனாவது சண்டையிடுவாள்... பெரியவள் வந்து அவளை அதட்டுவாள்—'என்னடீ இது, வஸன்! ஏன் சண்டை போடுகிறே?'

'பின் என்ன? அந்தச் சாராயம் எனக்கு வேண்டாம் என்றால், அவன் குடிக்கச் சொல்கிறானே...'

'கொஞ்சம் குடித்துதான் வையேன்... இப்படி நீ செய்தால் வருகிறவர்களும் நின்று விடுவார்களடீ'

'வராமல் போனால் யார் அழுதா? எனக்கு எவனும் வேண்டாம்'

'வேண்டாமா?'

'வேண்டாம்'

'சரி, நாளைக்கே உன் வீட்டுக்குப் போகலாம் நீ... இங்கே உனக்கு இடமில்லை'

வஸந்திக்கு மட்டுமா? லலிதா நிர்மலாகூட இப்படித் தம்மைப் பாழ்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுக்கும் இந்த ஈனப் பிழைப்பு கசந்துவிட்டது. அவர்களும் கூறிவிட்டனர்—'எங்களால் முடியாது' என்று. அவர்களுக்கும் அதே பதில்தான்—'பெண்களா, இனிமேல் உங்களுக்கு என் கோஷ்டியில் இடமில்லை... உங்கள் வழியைப் பார்த்துக் கொள்ளுங்கள். எவன் உங்களுக்குப் படைக் கிறானோ பார்க்கலாம்... இந்தத் தொழிலை விட்டால் உங்களுக்குப் பிழைப்பேது?'

எல்லோரும் வாளாயிருந்தனர். வஸந்தியுந்தான். இதுபோன்ற ஈனப் பிழைப்பில் ஈடுபட்ட இவர்கள் தம் நிலையைக் குறித்துத் தங்களுக்குள் ஆலோசனை செய்தனர்—'இப்படியிருந்தால் நமக்கு ஒன்றும் கிட்டாது... வரும்படியே இராதுபோனால் என்ன செய்வது...?' என்று ஒருத்தி சொல்லும்போது, 'சரியாகச் சொன்னேடீ... எனக்குந்தான் தெரியவில்லை என்ன செய்வதென்று' என்றாள் மற்றவள்.

'லலிதா...'

'என்னடீ ?'

'ஒரு வழியும் தெரியவில்லையே... அஞ்சு ரூபாய் சேர்த்து வைத்திருந்தேன், பேசரிப் பண்ணிப் போட்டுக் கொள்ளலாமென்று... இப்போதே நாலு ரூபாய் செலவாகிவிட்டது அதுக்கும், இதுக்கும்... அடியே...வஸன்...'

வஸன் பேசாமல் இருந்தாள். அவளுக்கு உடம்பு பிழிந்துவிட்டது போலிருந்தது. மனசும் சரியாக இல்லை. நிர்மலாவும், லலிதாவும் அவளை மறுபடியும் கூப்பிட்டனர்—'என்னடீ வாயைப் பொத்திக் கொண்டிருக்கே?... உன்னிடந்தான் அத்தனை ரூபாய் இருக்கே...' என்றனர்.

வேறு நாளாக இருந்தால் இதற்கு அவள் சீறியெழுந்து விட்டிருப்பாள். அவளுக்கு புத்தி ஒரு மாதிரி இருக்கையில், அவள் அடங்கியிருக்கும்போது அவளுக்கு எதையும் உணர்த்த முடியாது. அவள் சண்டைக்குப் புறப்பட்டாளானுல் நிதாயி ஒருவனுல்தான் அவளைச் சமாதானப்படுத்த முடியும். அவள் சற்று அமைதியில் இருக்கும் சமயம்—'ஏன் இப்படிச் செய்கிறே வஸன் ?' என்று கேட்பார்கள்.

அவள் படுக்கையில் முகம் புதைத்து, 'தெரியாதடீ' என்பாள்.

நிதாயி அவளுடைய தலையைப் பிடித்துவிடுவான்.

அந்தப் பெண்களைத் தேடிக்கொண்டு ஆடவர்கள் யாரும் எதிர் பார்த்தபடி வராதுபோனுல் — அதாவது விபசாரத் தொழிலில் மந்தம் ஏற்பட்டால், வேறு உத்தியைக் கையாள்வாள் அந்தச் சித்தி. பெண்களைக் கூப்பிட்டு, 'சிங்காரித்துக் கொள்ளுங்கள்...இப்படி பஜார் பக்கம் சுற்றிவிட்டு வரலாம்' என்பாள்.

இப்படி அவர்களைப் பார்த்தால் யாராவது அவர்களை நச்சி வரக் கூடுமல்லவா !

பெண்கள் உற்சாகமேலிட்டு, துவாலை சோப்புடன் குளத்துக்குச் செல்வார்கள். நன்ருக முகம் கழுவிக்கொண்டு, ஸ்நோ, நெற்றிப் பொட்டு, பவுடர் எல்லாம் போட்டுக்கொண்டு தம்மை அலங்காரம் செய்து கொள்வார்கள். வஸன் ஒருத்திதான் சற்று எடக்குப் பண்ணுவாள். சில நாள் வர விரும்புவாள் ; சில நாள் மாட்டாள். சித்திக்குத் தெரியும். இவளுக்கு எந்த மருந்தைக் கொடுக்க வேண்டுமென்பது. முன்னுலேயே நல்ல சீமைச்சரக்கில் கொஞ்சம் ருசியைக் காட்டி விடுவாள். இதைக் குடிக்கச் செய்ய அவள் எத்தனையோ வழிகளைக் கையாள்வாள்.

நல்ல சலவை செய்த சேலையை அணிந்து பெரியவளும், இவர்களுடன் வெற்றிலைக் குதப்பிக் கொண்டே கிளம்பி விடுவாள். பெண்கள் தம் உடலைக் கொண்டு ஈட்டும் வருமானத்தில் அந்தப் பெரியவளுக்குப் பங்கு உண்டு. இந்த வருமானம் மூன்று பாகமாகப் பிரிக்கப்படும். இரண்டு பாகம் விபசாரம் செய்பவளுக்கு; ஒரு பாகம் அந்தப் பெரியவளுக்கு—இது வழக்கம். பாட்டுப் பாடிச் சம்பாதிப்பதில் இதே முறை அநுசரிக்கப்பட்டது. அரங்கிற்குக் கிடைக்கும் பணம் எட்டு பாகமாக்கப்படும். அந்த எட்டில் ஒரு பாகத்தை அந்த மூன்று பெண்களும் தங்களுக்குள் சமமாகக் கொள்வார்கள். ஒரு பாகம் அந்தப் பெரியவளைச் சேரும். இரண்டு பாகம் கவிவாலாவுக்கு; ஒரு பாகம் பிடில்காரனுக்கு. மிகுந்த ஒன்றில்—பாதி பக்கவாத்தியக்காரனுக்கு, மறுபாதி பின்பாடகனுக்கு. சம்பாத்தியம் இல்லாத ஆட்களைப் பெரியவள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ள மாட்டாள். வரும்படிக்கான வழிகளைத்தான் அவள் தீவிரமாக நாடுவாள். பெண்களை நச்சி வருவோருடைய எண்ணிக்கை சிறுத்துவிட்டால், அவள் எவனுவது சிக்கினுல் அவனை மெள்ளப் பூசி, ‘வா அப்பா...எதற்காக வெட்கம்? இங்கே ஒரு பயமும் இல்லை, தாராளமாக இருக்கலாம்’ என்று அவனுக்குத் தாம்பூலம் வழங்குவாள். அவனிடமிருந்து எப்படியாவது காசைப் பறித்து விடுவாள். அவனிடம் பெற்ற பணத்தைத் தலைப்பில் முடிச்சுப் போட்டு, பெண்களைக் கூப்பிட்டு, ‘அடி வஸன், நிர்மலா இந்தப் பக்கம் வாருங்கள்... லலிதா, நீ கேட்டாயே—காது தொங்கடம் வேண்டுமென்றயே எத்தனை வராகன் எடையில்?’ என்று ஆசையை மூட்டுவாள்.

இதுபோல் ஒரு நாள்—

சித்தி வஸந்தியைக் கூப்பிட்டு, ‘வஸன், இதைக் கேள். அவன் அத்தனைக் நாழிகையாய் காத்துக்கொண்டிருக்கான்; உன்னை அவனுக்கு தெரியுமாமே?’ என்றாள்.

‘எனக்கு உடம்பே நன்ருக இல்லை...போ சித்தி’

‘உன் உடம்புக்கு என்ன வந்தது? ஒன்றுமே இல்லை...இதைக் கேட்டுவிட்டுப் போ. கொஞ்சம் தருகிறேன், உனக்குப் பிடித்த சரக்கை. உடம்பு சட்டெனச் சரியாகிப் போகும்...இப்படி வா’—அவள் கூப்பிடவில்லை, கட்டளை இட்டாள். தட்டிக் கழிக்க வேறு வழியில்லை. வெளியே வந்தாள் வஸந்தி. நல்ல உடையும், கமகமக்கும் ஸெண்ட்டுப் பூச்சுமாய் நாகரிகமான ஓர் ஆள் நின்றிருந்தான். சித்தி அவனை அணுகி, ‘உடம்பைக் காட்டு ... புளுகு ... ஒன்றுமே இல்லை. என் உடம்பு உன்னதைவிடச் சுடுகிறது’

என்றதும், வந்த நாகரிகனை நோக்கி, ‘அப்பா, இவளுக்கு உடம்பு சரியில்லை...கொஞ்சம் சீமைச் சரக்குக் கொடுத்தால் சரியாகிவிடும்’ என்றதும் குரலைத் தாழ்த்திச் சிரித்த வண்ணம், ‘வெளியே எங்கேயும் போக வேண்டாம். என்னிடத்திலேயே இருக்கு’ என்றாள்.

விலை மாதர்களுக்கு இந்தச் சிற்றின்பத்தில் உள்ள நசை தீரவே தீராது போலும். பகட்டுடையும், வசீகரத் தோற்றமும் உடைய இந்த ஆளைப் பார்த்தவுடன் அவளுக்கு இந்த நசை தலைத் தூக்கியது. விழிக்கடையால் அவனை நோக்கி மென்முறுவலுடன் அவனைத் தன் அறைக்குள் இட்டுச் சென்றாள். சித்தி சிரித்தாள். அவளுக்குத் தான் தெரியுமே—அந்த நச்சு கொஞ்சம் இறங்கிவிட்டால், அமுதக் கடலை பருகினுல்கூட அவளுக்கு அதிலுள்ள ருசி போகவே போகா தென்று. வஸந்திக்கு உடம்பு சரியாகிவிட்டது.

அவளுடன் கலவி செய்துவிட்டு அந்த நாகரிகன் அகன்றதும், இந்த மதுமயக்கமும் அவளுக்குத் தெளிந்து போகும். ஆனுல் இந்த நச்சினுல் வேறு விகாரங்கள் எல்லாம் அவளிடம் தோன்றும். குடிமயக்கு இருப்பதுபோல் பாசாங்கு செய்து படுத்திருப்பாள்—அழுவாள். இந்த நிலையில் நிதாயுடன் எங்கேயாவது போய்விடுவ தென்று உறுதி கொள்வாள். ஆனுல் அந்த மாதிரி செய்ய முடிவ தில்லை. இன்றும் நினைத்தாள், போய்விடுவது அப்படி சுலபமான விஷயமன்றெனை. போக்கிடந்தான் எங்கே? அந்தச் சித்தி, நிர்மலா, லலிதா இவர்களை விட்டால் அவளுக்கு ஆந்தரிகமானவர் வேறு எவர்? இந்த உலகில் நெடுவழியைத் தவிர அவளுக்கு போக்கிடம் வேறு எங்கே?

ஏழு நாட்களுக்குப் பிறகு...

வஸந்தி உடல் குலைக்கச் சித்தியிடம் வந்து, ‘சித்தி’ என்றாள்.

வஸந்தியின் திராணியற்ற குரலைக்கேட்டு அந்தச் சித்திக்குத் தூக்கி வாரிப்போட்டது. அந்தப் பழைய வஸந்தி—காச நோய்க்குப் பலியாகும் வஸந்தி. ‘மருந்து தா, சித்தி எனக்கு மீண்டும் வந்து விட்டது அந்த நோய்’ என்றாள் அவள்.

‘நோயா...? காசமா?’

‘இல்லை...இல்லை’—வஸந்தியின் கண்களில் கத்தியின் கூர்மை பளபளத்தது. அதைப் பார்த்ததுமே பெரியவள் தன் தவற்றை உணர்ந்தாள். சிரித்து, வஸந்திக்கு சமாதானம் சொன்னுள்—‘இதற்கேன் பயப்படுகிறே? இன்றே தயாரித்துத் தருகிறேன்... மூன்றே நாளில் குணமாகிவிடும்...மச்சம் மாத்திரம் சாப்பிடாதே’ என்றாள்.

இவர்கள் வாழ்க்கையில் இது ஓர் அத்தியாயம். இந்த அத்தியாயம் வந்தே தீரும். மனிதனின் வாழ்வில் இந்த நோய்நொடி யெல்லாம் எந்தக் காலத்தில் வந்தது என்ற விஷயம் ஆராய்ச்சிக்குரியது. ஆனல் இந்த நோய் மனித வாழ்வில் தடுத்தற்கரிது! அது மட்டு மல்ல; இந்த நோயால் இவர்கள் துடிதுடித்து வாழ்நாளைக் கழிக்க வேண்டியிருக்கிறது. இந்த விஷத்தை மனிதர்களிடையே பரவச் செய்தே இவர்கள் செல்கின்றனர். டாக்டரிடமோ, கவிராஜிடமோ (சித்த வைத்தியர்கள்) இவர்கள் தம் உடலைக் காட்டிச் சிகிச்சைப் பெறுவதில்லை. தாமே சிகிச்சை செய்து கொள்வர். எல்லாம் கை மருந்தால்தான். இந்த மருத்துவத்தின் மர்மம்—வியாதி வெளியே சொஸ்தமாகிவிடும்; ஆனல் அது ரத்த அணுக்களில் பற்றி உள்ளே புரை வைத்துப் படர்கிறது. இதன் விளைவால், பின்னல் ஏதாவது நோய் பற்றினல், இவர்கள் படுகிடையாகி விடுவார்கள்; உயிரை வைத்து இவர்களைக் கொன்றுவிடும். இதையெல்லாம் இவர்கள் யோசிப்பதில்லை. வியாதியின் மூலகாரணம் இவர்களுக்குப் புரிவ தில்லை. நோய் சற்று அதிகமானல்தான் இவர்கள் கவலைக்குள்ளா கிறர்கள்.

வஸந்தி இப்படி ஆகுலமுற்றுச் சித்தியிடம் வந்து விழுந்தாள். சித்திக்குத் தெரியும், அவளைப் பீடிக்கும் ரோகத்தைப்பற்றி.

இதில் வெட்கப்படுவதற்கொன்றுமில்லை. இது தொற்றுநோயான தால், நோயாளியுடன் அதிகமாக நெருங்கக்கூடாது. அவர்கள் உபயோகிக்கும் துவாலை, துணிமணிகளைத் தொடாமல் இருத்தல் நல்லது. இப்படிச் செய்தால் தன்னைத் தீண்ட அருவருப்புக் கொள் கின்றனரெனத் தவருக இந்த நோயுற்றோர் நினைத்துக்கொள்வர்.

வஸந்தியின் துணிகளைத் தொடாமல் ஜாக்கிரதையாகவே இருந்தனர் லலிதாவும், நிர்மலாவும். வஸந்தி யாரையுமே திரும்பிப் பார்க்கவில்லை.

நிர்மலா அவள் பக்கத்தில் அமர்ந்து, 'இந்தக் கொண்டை எதற்கு? நான் அவிழ்த்து விடுகிறேன்...' என்ருள்.

முன்னுள் அவளுடைய சில எச்சிற்பாண்டங்களை நிதாயி எடுத்துக்கொண்டு வெளியே சென்று கொண்டிருந்தான். வஸந்தி நிர்மலாவிடம், 'அதையெல்லாம் தொடவேண்டாமென்று சொல்' என்ருள்.

இன்று அவள் நிமிர்ந்து நிதாயியுடன் பேச முடியவில்லை. நிர்மலா கூப்பிட்டாள், 'அண்ணு...அண்ணு...' என்று. நிதாயி சிரித்து, 'நீ ஏன் கவலைப் படுகிறே, வஸன்? இதனல் ஒன்றும் வந்து

விடாது. என்னை ஒன்றும் செய்யாது எந்த மாதிரி நோயும்' என்றான்.

நிர்மலா திடுக்கிட்டுப் போனாள்!

மூன்று நாட்களுடன் நிற்கவில்லை, ஒன்பது நாட்களும் ஓடின. வஸந்தி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அவள் உடலெங்கும் சிறுசிறு கொப்புளங்கள் கண்டன. மேனி கறுத்துக் கருகி வந்தது. நள்ளிரவில் விளக்கொளியில் அவள் தலைமாட்டில் நிதாயி விசிறியால் விசிறிக் கொண்டிருந்தான். இது போன்ற நிலை வந்தால் நோயுற்ற பெண்களின் பக்கலில் எவருமே இருக்கமாட்டார்கள். அவர்கள் மீது ஆசை வைத்திருப்பவன்கூட தலை மறைந்து விடுவான்; அல்லது அந்த எல்லையைவிட்டே போய் விடுவான். பிணியால் வாடும் அந்த ஜீவன் தனியே கிடப்பாள். அவளுக்குச் சேவையோ, உதவியோ புரிபவர்கள் அவளுடைய கோஷ்டியைச் சேர்ந்த பெண்களாகவே இருப்பார்கள். ஆனால், நிதாயி தன்னுடைய வஸந்தியின் தலைமாட்டில், நிச்சலமாக அவளுக்குச் சேவை புரிந்தான்.

அன்று...

வெளியே இரவு, மெல்ல முதல் யாமத்தைக் கடந்து இரண்டாம் யாமத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. திடுமென இரவின் மோனத்தைக் கலைத்து ஓர் உருக்கமான இசை எழுந்தது. நிதாயி விழித்துக் கிடந்தவன் திடுமெனக் கண்ணயர்ந்தபோது இந்த இசை வரவே விழிப்புற்றான். அவனால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அந்தப் பிடில்காரன் தன் இசைக் கருவியில் மனத்தை உருக்கும் சுரங்களை இழைத்துக் கொண்டிருந்தான். இன்று நிர்மலாவின் அறையில் ஒரு கொண்டாட்டத்திற்காக ஏற்பாடாகியிருந்தது. அதனால் பிடில்காரனுக்கு உணர்ச்சி வந்துவிட்டது. இதற்காகச் சாயங்காலம் தொடங்கி அவள் இந்த இன்னிசையை எதிர்நோக்கியிருந்தாள். அவனுடைய இன்றைய வாசிப்பு இனிமையும், உருக்கமும் சொட்ட அமைந்திருந்தது. ஓர் அருமையான ஆலாபனம்—பேஹாக் ராகத்தின் சாயல் அதில் அதிகமாகக் கலந்திருந்தது. அதைக் கேட்கும் போது இழந்த ஒருவரை யாரோ இருளிடையே தேடி அலைவது போன்ற ஒரு மருளை எழுப்பியது.

'ஆ... சீ... சீ...!'—வஸந்தி விழிப்புற்று எழுந்து உட்கார்ந்தாள்.

திடுக்கிட்டவனாய் நிதாயி, 'என்ன வஸன்? உனக்கென்ன பண்ணுகிறது?' என்று மெதுவாகக் கேட்டான்.

'ஆ... அதோ... அவன் வாசிக்க வேண்டாம்... அவனை நிறுத்தச் சொல்லு' என்ருள் வஸந்தி.

'உனக்குப் பிடிக்கவில்லையா?'

மூச்சுத் திணற வஸந்தி—'வேண்டாம்... எனக்கு என்னவோ செய்கிறது... என் கைகாலெல்லாம் பனிக்கட்டி மாதிரி சில்லென்று இருக்கிறது' என்ருள்.

பிடிலின் வில், ஒரு நீண்ட ராகமூர்ச்சனையைத் துடிப்புடன் இழுத்து அந்த இருட்கங்குலிடையே கரைந்து போயிற்று... அதனுல் இரவே அழுது விம்முவதுபோலவே தோன்றிற்று.

19

ஒரு முழு மாதமாயிற்று. வஸந்தி நோய்ப் படுக்கையிலிருந்து ஒருவிதமாக எழுந்துவிட்டாள். ஆனுல் அவள் அந்தப் பழைய வஸந்தியாகவே இல்லை. அத்தனை உருமாறிப் போயிருந்தாள். அந்தப் பொல்லாத வியாதி தன் விஷநாக்கைக் கொண்டு அவளுடைய பொன்னுன மேனியை, கண்கவர் வனப்பையெல்லாம் அடியோடு உறிஞ்சிப் பாழாக்கிவிட்டது. அவள் அங்கமெல்லாம் கரிபூசியதுபோல் பார்க்கக் கண்ணருவியாக இருந்தது. அந்த அடர்ந்த கருங்கூந்தல் பிசுபிசுவென்ருகிச் செம்பட்டை நிறமாக மாறி விட்டது. அவள் சருமத்தில் இருந்த பளபளப்பெல்லாம் மழுங்கி வரண்டுவிட்டது. ஒரு நாற்றம் அவளிடத்தில். எலும்புக் கூடாகி விட்டது தேகம். அவளுடைய பழைய அழகிற்கு அத்தாட்சிக் கூற அந்த இருகண்கள் மட்டுமே இருந்தன. ஆனுல் அவளுடைய வற்றிப்போன முகத்தில் அக்கண்கள் பின்னும் பெரியனவாகத் தோன்றின. அசையாமல் படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். அக்கண்ணொளி மட்டும் மங்கவில்லை, நீறுபூத்த கரித்துண்டில் கரந்துள்ள கனலென.

அன்று அந்தச் சித்தி, 'வஸன், உடம்பில் மஞ்சளும் எண்ணெயும் கலந்து பூசிக்கொண்டு குளி...' என்ருள்.

வஸந்தி அவளேயே கண்கொட்டாமல் நோக்கினுளே தவிர, பதிலேதும் பேசவில்லை; அசையவுமில்லை. மீண்டும் அந்தச் சித்தி,

'இந்த நோய்க்குரிய நாற்றம் போகுமடி ; சதையும் மழுமழுப்பாகும்' என்றாள்.

இப்பொழுதும் வஸந்தி பேசவில்லை.

அந்தச் சித்தி அவளை அணுகி, அவளை மெல்லத் தொட்டாள். அவள் உடம்பிலிருந்து ஆடையைக் களைந்துவிட்டு, அவள் அங்கங்களைத் தடவினாள். லலிதாவைக் கூப்பிட்டு, 'லலிதா, ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் எண்ணெயைக் காய்ச்சி எடுத்து வா... கொஞ்சம் மஞ்சள் பொடியும்...' என்றாள். பிறகு நிதாயியைக் கூப்பிட்டாள்—'எங்கே இருக்கே அப்பா...?'

நிதாயி வஸந்தியின் படுக்கையை உதறிச் சுத்தம் செய்ய வெளியே சென்றிருந்தான். வெயிலில் அதைப் பிரித்துப் போட்டுக் கொண்டே, 'கூப்பிட்டியா என்ன, சித்தி?' என்று குரல் கொடுத்தான்.

அவள் சிரித்து, 'உன்னைப்போல் ஒரு மனுஷனை இவ்வுலகில் பார்க்கவே முடியாது. உன் குணம் யாருக்கு வரும்! அவள் உன்னைக் கூப்பிடுகிறாள்' என்றாள்.

அவன் சிரித்து, 'என்ன வேண்டும் சொல்?' என்றான்.

'வஸந்தியின் சீப்பையும், தலைத் தைலத்தையும் இப்படிக் கொடு. அவள் கூந்தல் ஒரே சிக்குக் கூண்டாகிவிட்டது ; வாரி விடுகிறேன்'

இப்பொழுதுதான் வஸந்தி வாய் திறந்தாள். தன் படுக்கையை விரலால் சுட்டி, 'அதையெல்லாம் என்ன செய்ய வேண்டும்?' என்றாள்.

அறையில் வைத்திருந்த தைலப் புட்டியையும், சீப்பையும் தேடிக் கொண்டே நிதாயி, 'அதை நன்றாகத் துவைக்க வேண்டியதுதான்' என்றான்.

தீவிரக் குரலில் வஸந்தி, 'வேண்டியதில்லை...' என்றதும், அவள் பொங்கிப் பொங்கி அழுதுவிட்டாள். அந்த அழுகை நிற்கவே இல்லை.

நிதாயி விந்தையான மனிதன்! அவன் அவளைத் தேற்ற, 'சித்தி சொல்வதைக் கேள் வஸன்... இதைப் பற்றியெல்லாம் நீ ஏன் மண்டையை உடைத்துக் கொள்கிறாய்?' என்றான்.

அவள் அழுவதை நிறுத்தவில்லை—

நிதாயி மீண்டும், 'என்னுடையதும் மனுஷ சரீரந்தானே ; எனக்கும் இந்த ரோகம் தொற்றிக் கொள்ளலாம். அப்பொழுது நீ எனக்கு வட்டியும் அசலுமாகச் சுசுருஷை பண்ணு. இப்போது நான் செய்வதற்குப் பதில் செய்துவிடேன்! என்ன சித்தி நான் சொல்வது?' என்றான்.

அவன் சிரித்துக்கொண்டே அவளுடைய மற்ற துணிமணிகளை எடுத்துச் சென்றான்.

லலிதாவும், நிர்மலாவும் மோவாயில் விரல் வைத்து இதையெல்லாம் வியப்புடன் நோக்கினர். பெரியவள் நெடுமூச்செறிந்து, 'உம்... என்ன இருந்தாலும் வஸன் பாக்கியம் பண்ணினவள்' என்றாள்.

நோயின் அழுக்கும், மாசும் படிந்த அவளுடைய துணிகள் யாவற்றையும் காரநீரில் நன்றாகக் கொதிக்க வைத்து, துவைத்துத் தூய்மை யாக்கினான். லலிதாவும், நிர்மலாவும் தேகத்தை விற்று ஜீவனம் நடத்துபவர்களே. இவர்கள் வாழ்வில் இதுபோன்ற காதல், மழைக்குப்பின் தென்படும் மேகம்போல் வருவதும் போவதுமாயிருக்கும். அப்படித் தப்பித்தவறி யாராவது காமுற்றாலும் அற்சிரக் காலத்துக் குளிர்ந்த காற்று மாதிரி இரண்டொரு நாள் வந்துவிட்டுக் காணுமற் போய்விடுவார்கள். இந்த நோய் நிர்மலாவுக்கு மூன்று முறை வந்திருக்கிறது; லலிதாவுக்கு இரண்டு தடவை... இவர்களிடம் இந்நோய் தலைக் காட்டியதுமே, இவர்கள்மீது காதல் கொண்டவர்கள் ஓட்டம் பிடித்தனர். நிர்மலாவின் கேள்வன் ஒருவன் இப்படி இவளுக்கு நோய் வந்த சமயம் அவளுடைய உடைமைகளையும் அழுத்திக் கொண்டு போய்விட்டான். இன்று நிதாயி நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்து இவர்கள் அடைந்த ஆச்சரியத்துக்கோர் எல்லையில்லை; தம்போல் ஈன ஜன்மங்கள்பால் இப்படி ஒருவன் தூய அன்பு காட்டுவதை இவர்கள் பார்த்ததே இல்லை.

பாய் படுக்கை, துணி மணி யாவையும் தூயனவாக்கி நிதாயி திரும்பியபொழுது, வஸந்தி அதே மாதிரி அமர்ந்திருந்தாள். அவனைப் பார்த்ததுமே அவளுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது. மஞ்சளும், எண்ணெயும் உடலில் தேய்த்துக் கொண்டு குளித்த பிறகே அவள், தன் பழைய பொலிவினைச் சிறிது பெற்றாள். அவள் தலைமயிரை வாரி முடித்து, சித்தி அவளுக்கு அழகிய கொண்டையைப் புனைந்தாள். அவள் நெற்றியில் சிந்தூரப் பொட்டையும் இட்டாள்.

நோயில் வதைந்த வஸந்தி குணமாகி வருவதைக் கண்டு நிதாயி உண்மையில் மகிழ்ச்சியுற்றான். 'இப்போ பாரேன், எவ்வளவோ தெளிந்து இருக்கிறது, உன் முகம்' என்றான்.

வஸந்தி சிரித்தாள். உடனேயே ஒரு பெருமூச்சும் எழுந்தது அவளுக்கு. நிதாயி சொன்ன வார்த்தைகள் அவளுடைய சிரிப்பி

னூடே பாய்ந்து அத்தெளிவைச் சிதைத்து விட்டன. அந்தப் பெரு மூச்சில், அவள் கொண்டிருந்த ஆறுதலும் பறந்துபோயிற்று. அந்தச் சிரிப்பில் ஓர் ஏளனம் தொனித்தது போலவே, துயரும் வெளிப் பட்டது. இதனால் நிதாயின் மனம் கலக்கமுற்றது.

எப்படியோ இதனை அடக்கிக் கொண்டு அவன், 'நான் பொய் சொல்லவில்லை வஸன். உன்னுடைய உடம்பின் அந்த நிறம் திரும்பி விட்டது. பலவீனமாக இருந்தாலும் அந்த நோய்க் களை போய் விட்டது. நம்பாது போனால் கண்ணாடியில் நீயே பார்த்துக்கொள் ளேன்' என்றான். இதனால் என்ன விளையுமென்பதை யோசியாமல் அவன் கண்ணாடியை அவள் முகத்துக் கெதிரே பிடித்தான்.

அக்கணமே ஒன்று நிகழ்ந்தது.

வஸந்தியின் பெரிய பெரிய விழிக்கோணத்திலிருந்து அழற்பொறி பறந்தது. உலர்ந்து கருத்திருக்கும் வெடிமருந்துபோல் அது அவள் உடலெங்கும் பற்றிக்கொண்டது. கணமதில் மின்விசையுடன் நிதாயின் கையிலிருந்து அந்தக் கண்ணாடியைப் பிடுங்கி அவனைக் குறிப்பிட்டு வீசியெறிந்தாள்! அவளுக்கு வெறி பிடித்து விட்டதோ என்னவோ? பலவீன முற்றிருந்ததால் அவள் கையிலிருந்து பறந்த அந்தக் கண்ணாடி நிதாயின் நெற்றியோரமாக மெல்ல உராய்ந்ததே தவிர, அவனுக்கு ஊறு எதுவும் செய்யவில்லை. கண்ணாடி ஒரு மூங்கிற் கழி மீது தாக்குண்டு, சுக்கல் சுக்கலாய் நொறுங்கிவிட்டது.

நிதாயி சிரித்தான். அவன் தரையில் கிடந்த கண்ணாடித் துண்டு களைப் பொறுக்க முயன்றான்.

அதே சமயம் ஒரு கடுமையான குரல் அவன் காதருகில் ஒலித்தது—'வஸன்!'

நிதாயி நிமிர்ந்து நோக்கினான். வந்தவள் சித்தி. அதே கடுமை யான குரலில் அவள், 'வஸன்!' என்றாள்.

வஸந்தி அசையாமல் இருந்தாள். அவளுடைய கண்கள் இமைக் காமல் நிலைத்து நின்றன.

'சொல்கிறேன்.. இந்த ரோகம் யாரைத்தான் தொற்றிக்கொள் ளாது? இந்த ஒரு மனுஷன் உனக்கு இவ்வளவு செய்யாவிட்டால் உன்னை ஒரு 'டோம்'கூடத் தொடமாட்டானடி!'

வஸந்தி அப்பொழுதும் பதில் பேசவில்லை. அவள் எதிரே நின்ற அந்தச் சித்தி, கொடுமையாக எல்லோரையும் ஆட்டிவைத்துத் தன் ஆட்சியைச் செலுத்தும், அந்த ஜுமுர் கோஷ்டியின் தலைவி. பெண் களும் சரி ஆண்களும் சரி, அவளுடைய பிரியத்திற்குப் பாத்திரமான அந்த எருமைத் தடியன்கூட அவள் எதிரேநிற்க அஞ்சுவார்கள்.

நிதாயின் குரல்கூட அவளுக்கெதிரே அடங்கிப்போய்விட்டது. அவன் கண்ணுடித் துண்டுகளைப் பொறுக்குவதை நிறுத்தி அவளையே நோக்கினுன். இதுவே முதல் தடவை அவன் ஒரு ரணசூரியின் முகத்தைக் காண்பது.

அவள் மேலும் கடுமையாக, ‘வஸன், எனக்கு நீ பதில் சொல்லப் போகிருயா இல்லையா?’ என்ருள்.

வஸந்தி நடுங்கிப்போய் எழுந்து நின்ருள். அவளையே நிலைத்து நோக்கினுள். நிதாயும் நின்ருன், இருவருக்குமிடையே. அந்தச் சித்தியின் கண்கள் தீயைக் கக்கின, மையயிருளில் பெண்புலியின் அழல் விழியென. வஸந்தியின் கண்களில் ஒரு நெருப்புப் பார்வை. எதையும் எரிக்கும் ஆற்றல் படைத்ததுபோல் அது சுடர்க் கான்றது. நிதாயி மிகப் பணிவுடன் திடக்குரலில், ‘வெளியே போ சித்தி...சீ! சீ! இவள் நோயாளி...’ என்ருன்.

‘நோயாளியா? யார்தான் நோயாளியில்லை? இவள் ஒருத்திக்கு மட்டுந்தாஞ? இவள் தடிச் சிறுக்கி; இவள்...’

‘சீ!

‘சீ என்ன?’

‘நொய்ந்தவள் இவள். உனக்கு இவள் என்ன தீங்கு செய்தாள்?’

‘இவள் இந்தக் கோஷ்டியில் ஏன் இருக்கவேண்டும்? நீ எங்களுடைய கோஷ்டியில் சேர்ந்தவன் கவிவாலா...’

நிதாயி சாந்தமும், திடமும் இணைந்த குரலில் சிரித்துக்கொண்டே, அதிருக்கட்டும். இந்த வஸந்திக்காகவேதான் நான் உன் கோஷ்டியில் இருக்கிறேன். இராவிட்டால்...’ என்று சற்று நின்றதும், ‘நீ வெளியே போ...’ என்ருன்.

பெரியவள் நிதாயியையே ஏறயிறங்கப் பார்த்தாள். அந்த ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த எவரும் தம்மை அறியாமலேயே இந்தப் பெரியவளின் கட்டளைக்குத் தலை வணங்கி நடப்பவர்கள். இதை அவள் நன்ருக உணர்ந்திருந்தாள். அவளுடன் ஆலோசித்துத் தான் காரியங்கள் எதுவும் நடக்க வேண்டும். சுருங்கச் சொன்னுல் அவள் இட்டதே சட்டம். அவளுக்கே எல்லோரும் அடி பணிந்து போகவேண்டும். இளமையில் அவள் இதுபோல் வேருரு தலைவியின் கீழ் உழைத்து அனுபவம் பெற்றவள். இன்று இதற்கு முரணுனது தோன்றவே அவள் தம்பித்து நின்ருள். அவளுக்குச் சினம் பொங்கி யிருக்கவேண்டும். அந்த மஹிஷாஸுரனை, அந்தக் கறுப்பு எருமைத் தடியனை அவள் கூப்பிட்டிருக்கவேண்டும்! ஆனுல் நிதாயியை நோக்கியதும் இவ்வாறு செய்ய அவளுக்குத் துணிவு

ஏற்படவில்லை. இந்த ஆள் அவளுக்கு அடிபணியாது போனாலும் இவனிடம் முரட்டுத்தனமோ, கொடுமையோ தென்படவில்லை. அவளை இவன் அவமானமாக எதுவும் பேசவில்லை.

நிதாயியையே சற்றுநேரம் நோக்கி நெடுமூச்செறிந்து அவள், ‘நீ தீர்க்காயுசா இரு அப்பா...உன்னை ஆசீர்வதிக்கிறேன். சித்தி என்ற உறவைவிட்டு, உன்னுடன் தாய்-மகன் என்ற உறவைக்கொள்ள விரும்புகிறேன். அதனால் என்னுடைய இறுதிக் காலத்தைப் பற்றி நான் கவலைப்படவேண்டியதில்லை’ என்றாள்.

நிதாயி சிரித்து, ‘அம்மா என்றாலும் சித்தி என்றாலும் ஒன்று தானே! இப்பொழுது நீ போய்விடு. உன் மருமகளுக்கும், மகனுக்கும் இடையே நடக்கும் சண்டையை நீ கேட்கவேண்டாம்’ என்றான்.

பெரியவள் வேறு எதுவும் பேசாமல் அவன் சொன்னதை ஏற்று வெளியே சென்றாள்.

நிதாயி வஸந்தி பக்கமாகத் திரும்பி, ‘சீ! இந்த நொய்ந்த உடலில் நீ இவ்வளவு ரோஷம் கொள்ளலாமா? இதனால் உன் உடம்புதான் பாழாகும், வஸந்த்’ என்றான்.

திடுமென வஸந்தி அந்த மண் தரையில் கவிழ்ந்து படுத்து விக்கி விக்கி அழலானாள்.

அன்பாகவே நிதாயி, ‘இன்று காலையே பிடித்து எதற்காக நீ இப்படி அழுகிறாய்?’ என்றான்.

வஸந்தியின் அழுகை மேலும் அதிகரித்தது. அந்த அழுகையின் வேகத்தினால் அவளுக்கு மூச்சு அடைத்துவிடும் போல் இருந்தது.

நிதாயி அவளுடைய தலையை மெல்லத் தடவித் தந்து, ‘மருந்துக் காக கல்கத்தா மருந்துக் கடைக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். மூன்று புட்டி ஸால்ஸா அனுப்பச் சொல்லி இருக்கிறேன். ஸால்ஸா சாப்பிட்டால் உடம்பு நன்றாகத் தேறிவிடும். ரத்தமும் சுத்தமாகும். அப்புறம் எல்லாம் குணமாகிவிடும்’ என்றான்.

மூச்சைத் தடைப்படுத்தும் அழுகையின் வேகத்தால் வஸந்தி இருமத் தொடங்கினாள். இருமிக் கொஞ்சம் கோழையைத் துப்பியதும் அவள் களைத்துப்போய், ஜீவனே ஒடுங்கிவிட்டதுபோல் படுத்துக் கொண்டிருந்தாள். ஒரு விரலைத் தூக்கி மெல்ல மெல்ல எதையோ காண்பித்தாள்.

‘என்ன வஸந்தி?’ என்றான் நிதாயி.

ஒரு விநோதமான சிரிப்பு அவள் முகத்தில் படர—‘அதோ பார் ரத்தம்...’ என்றாள்.

'ரத்தமா?'

'அதே பயங்கர வியாதி' என்றதும் வரண்ட சிரிப்புச் சிரித்தாள். இத்தனை நேரம் சொல்ல முடியாததனுல் அவள் அழுதாள். இதைச் சொன்னதும் அவள் அழுகையும் நின்றது.

நிதாயி கூர்ந்து நோக்கினுன். அவள் துப்பிய அந்த எச்சிலில் செவசெவ வென்று ரத்தம் தோய்ந்து இருந்தது. நெட்டுயிர்த்து அவன் வெகு நேரம் கம்மென்றிருந்தான்.

வஸந்தி இரு கைகளால் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, 'ஏனோ இங்கே வந்து நீ சிக்கிக்கொண்டாய் என்றுதான் நான் வேதனைப் படுகிறேன்; சாவதற்கு நான் பயப்படவில்லை. ஆனுல் என் மனம் சாக விரும்பவில்லையே...' என்றதும், நோயால் இளைத்த அவள் முகத்தில் மெல்லிய முறுவல் உலவ நிதாயியையே அவள் நோக்கினுள்.

நிதாயி தன் கைக்குள் அவளை, பலவீனமுற்ற ஒரு குழந்தையென அணைத்து, 'பயம் எதற்கு? நோய் குணமாகத்தான் போகிறது. நீ சாவானேன் வஸன்?' என்ருன்.

வஸந்தி தலையை அசைத்து, 'இல்லை...இல்லை' என்ருள்.

சில கணம் பொறுத்து அவள் மீண்டும் சொன்னுள்—'நானுவது பிழைக்கப் போகிறதாவது?'

உடனேயே அவள், 'எனக்குத் தெரியும் கவிவாலா, அன்று நீ ஒரு பாட்டுப் பாடினுயே...அன்றே எனக்குத் தெரிந்துவிட்டது...'

'எந்தப் பாட்டு வஸன்?'

'வாழ்க்கையேன் இவ்வளவு அற்பமானது அந்தோ!'

—அவள் கண்களிலிருந்து பலபலவென்று முத்துக்கள் உதிர்ந்தன.

நிதாயின் கண்ணிலும் நீர் வார்ந்தது... முடிக்காத பாட்டு அவனுக்கு ஞாபகம் வந்தது—

> [1] ஏஇ கேத மோர் மனே
> பாலோபேஷே மிட்லோ நா ஆஷ், புலாலே நா ஏ ஜீபனே,
> ஹாய்! ஜீபன் ஏதோ ச்சோட கேனே, ஏ புவனே?

அப்புறம் என்ன?

அப்புறம் ஒன்றும் இல்லை; அதற்குமேல் ஒன்றுமில்லை. பாட்டு முடிவுறாமல் நின்றது. நிதாயி ஒரு பெருமூச்சு விட்டான்... அந்தப் பாட்டு எப்போது முடியுமென்பதை யார் அறிவார்?

---

[1] முன்னுல் பார்க்க.

வஸந்தி மீண்டும் சொன்னாள்—'எனக்கு எப்பவோ தெரியும். அந்தப் பிடில்காரன் முன்னெல்லாம் இரவு நேரங்களில் என்ன அழகாய் வாசிப்பான்! இப்பொழுது அதைக் கேட்க எனக்கு என்னவோ பயமாய் இருக்கிறது. யாரோ என் பக்கத்தில் நின்று கொண்டு சிணுங்கிச் சிணுங்கி அழுவதுபோலவே இருக்கிறது. எனக்கு என்னமோ சாவின் கவனமே வருகிறது. மனசில் இப்படித் தோன்றுவது பொய்யாவதில்லை. உன்னுடைய பாட்டு வேறே எனக்கு கவனம் வந்து விடுகிறது... ஏன் இப்படி?'

வஸந்தியின் மனத்தில் பட்ட விஷயம் தெய்வ வாக்குப் போல மெய்யே—பொய்யன்று!

சில தினங்களுக்கெல்லாம் சாயந்தரம் சாயந்தரம் வஸந்திக்கு ஜுரம் வரத் தொடங்கியது. அவள் நிதாயியைத் தன் அருகில் அழைத்து அவன் உள்ளங்கையில் தன் கையைச் சேர்த்து 'எவ்வளவு சுடறது பாரேன்...' என்றாள்.

நிதாயி அவள் முகத்தையேப் பார்த்தான்.

வஸந்தி மெல்லச் சிரித்து, 'ஐயோ! வாழ்க்கை ஏன் அற்பமாகி விட்டது இவ்வுலகில் கவிவாலா?' என்றாள்.

இவர்கள் இப்படிப் பேசியது ஒரு சின்ன நகரில். அதன் பெயரைச் சொல்லவில்லையே...காடோவா. காடோவாவின் ஒரு பகுதியில் பழுதுபட்ட ஒரு மண் வீட்டில் இருந்தனர். அது வாடகை வீடு. 'லலிதாவை நான் கூப்பிடுகிறேன்... அவள் உன் பக்கத்தில் இருப்பாள். நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்' என்றான் நிதாயி.

'வேண்டாம்'—ஆகுலத்துடன் வஸந்தி, 'என்னை விட்டுவிட்டுப் போக வேண்டாம்' என்றாள்.

'இதோ அரைமணி நேரத்துக்குள் வந்துவிடுகிறேன்'

'வேண்டாம்... போக வேண்டாம். எனக்கு மீண்டும் அந்த இருமல் வந்தால், அதில் ரத்தம் இருப்பதைப் பார்த்தால் இவர்கள் என்னை இங்கேயே போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். நீ போகாதே... போகாதே...' என்றாள் வஸந்தி.

நிதாயி நிற்க வேண்டியதாயிற்று. அவளுடைய கோழையில் ரத்தம் விழுகிற சமாசாரம் இதுவரை யாரிடமும் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தான்.

மடமடவென்று ஜுரமும் அவளுக்கு ஏறிக்கொண்டே இருந்தது. முன்னெல்லாம் இப்படி ஜுரம் வந்தால் இரவு சில நாழிகைக்கு அப்புறம் வியர்வைவிட்டு ஜுரம் நின்றுபோகும். இன்று வியர்க்கவே

இல்லை ; ஜுரமும் இறங்கவில்லை. அந்த ஜுரவேகத்தில் அவள் நாக்கு உலர்ந்துபோய், மருள மருள விழித்து நாற்புறமும் எதையோ தேடி நிதாயியை நோக்கினாள். உடனேயே கண்ணை மூடி, படுக்கையில் இப்படியும் அப்படியும் புரண்டாள். இன்று அதிகமாகவே இருந்தது அலட்டல் அவளுக்கு.

அவளுடைய சுழலும் கண்களிலிருந்து நிதாயி புரிந்துகொண்டான். அவள் எதையோ பார்த்து மருளும்பொழுது அவன் அவளை அணைத்து, 'நான் இதோ இருக்கிறேனே' என்றான்.

இரவு கடைசி யாமம்... நிதாயும் அலுப்பினால் சுவரில் சாய்ந்தபடி கண்ணயர்ந்து விட்டான். கடையாமத்தின் அமைதி நிரம்பிய வேளை. இவ்வேளையில் பகலில் மூளும் வெம்மை, வேதனை யாவும் ஒழிந்துபோய் ஓர் ரகசியம் நிரம்பிய, தண்ணிய அமைதி மெல்ல மெல்லப் பெருகி வந்தது. அது நெற்றியைத் தொட்டு உள்ளத்தையே ஆட்கொள்ளும். இரவில், குவிந்துவரும் ஒரு மோனம் சூழ்ந்து இருக்கும்; பனித்திரை போன்ற ஒரு ரகசியம் நிலவும். மண்ணிலும் மரத்துஇலையிலும் அல்கும் எண்ணற்ற பூச்சி களின் அரவம் அதன் சுருதியாகும். உலகத்தில் எப்பொருளும் எவ்வுயிரும் கண்ணயர்ந்து, மெய்மறந்து இருக்கின்ற வேளை... குளிர்ந்த பனி, மண்ணின் உட்புரை வரைக்கும் சிலிர்க்கச் செய்யும். புலன் உணர்வு அடங்கி ஜீவன், சித்தஉலகிற்குள் நுழையும்தருணம் அது. வைகறைக்கு முன் இலங்கும் விந்தையான இருட்பக்கம். வேற்றுலகோர் கண்களெனத் துடிக்கும் தாரகைகள் மலிந்த தென் கிழக்குத் திசை. நிதாயின் உணர்வு யாவும் ஓர் இருட்கடலுள் ஆழ்ந்து கொண்டிருந்தது. எவ்வளவு பார்த்தும் அவன் அதை மீறி எழ முடியவில்லை. சுவர் மீது தலைமுட்ட அவன், தன்னையுமீறி அவ் அனந்தலில் மறைந்து போனான்.

திடுமென அவனுக்கு நினைவு திரும்பியது, வஸந்தி அவனை இழுக்கும்போது. அவள் திடுமென எழுந்து உட்கார்ந்து இருகை களால் அவன் கழுத்தை அணைத்து அவனைக் கூப்பிட்டாள்— 'உன்னைத்தான் எழுந்திரு...'

அவள் குரலில்தான் எத்தனை குலைப்பு...எத்தனை திகில் !

'என்ன வஸன் ? என்ன உனக்கு ? ஏன் எழுந்து உட்கார்ந் தாய் ? படுத்துக்கொள்' என்று அவன், அவள் கையைத் தொட்ட போது அது வெம்மையே போய், சில்லிட்டுக் கிடந்தது. மண்ணின் உட்புரை வரைக்கும் பாயும் அந்த மரணசீதளம் அவள் உடம்பிலும் ஊடுருவிக் கொண்டிருந்தது. அவளைச் சீதளம் கப்பிக்கொண்டு

விட்டது. நெற்றிக் கட்டெல்லாம் முத்து முத்தாக வியர்த்தது. பிசுபிசுவென்ற ஈரம் உள்ளங்கால் கைகளில்.

'அவனை நிறுத்தச் சொல்லு...அவனை நிறுத்தச் சொல்லு...'

'எதை?'

'அந்தப் பிடிலை வாசிக்கச் சொல்லாதே'

'பிடிலா? இங்கே எதுவுமே இல்லையே' என்றதும் நிதாயி காது வைத்துக் கவனித்தான். அமைதி நிரம்பிய அந்த கடையிரவில் அவர்கள் இருவரும் மூச்சுவிடும் சப்தம் தவிர வேறு எந்த அரவமும் கேட்கவில்லை.

'அதோ... அதோ... உனக்குக் கேட்கலே? ஏன் அவன் அப்படி வாசிக்கிறான்?'

திடுக்குற்றுப்போன நிதாயிக்கு ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

வஸந்தி உடம்பைத் தொட்டதினால் அவனுக்கு இந்த நினைவு எழுந்தது. அவளுடைய நாடியின் துடிப்பைப் பிடித்துப் பார்த்து அவன் அவளையே பரிதாபமாக நோக்கி, 'கோவிந்த நாமத்தைச் சொல்லு வஸந்தி' என்றான்.

'ஏன்?' என்றதும் வஸந்தி நிதாயியை நோக்கினாள். அவள் குரலின் சுரம் அடங்கி ஒலித்தது.

ஏன் என்ற கேள்விக்கு அவனால் விடை பகர முடியவில்லை. மரணம் நெருங்குமுன் ஓர் அமைதி தோன்றும், மரணம் வருவோருக்கு. பெரிய விழிகளைத் தூக்கி வஸந்தி, நிதாயியைப் பார்த்துக் கேட்டாள்—'நானா சாகிறேன்?'

நிதாயி முகவாட்டத்துடன் அவள் தலையை மெல்லத் தடவி, 'பகவான் பெயரைச் சொல்லு—கோவிந்த நாமஸ்மரணம் பண்ணு. உன்னுடைய கஷ்டம் குறையும்' என்றான்.

'இல்லை, அந்த பகவான் எனக்கு என்ன செய்துவிட்டான்? புருஷனா, பிள்ளையோ, வீடோ, வாசலோ எதைக் கொடுத்தான்?' என்று வஸந்தி நாணறுந்த வில்லைப் போல் படுக்கையில் விலு விலுத்துக் கொண்டாள்.

தான் ஏதோ குற்றமிழைத்தவன் போல் நிதாயி கம்மென்று அவளையே பார்த்தான். பகவானுக்கு எதிராக வஸந்தி சொன்ன அத்தனை குற்றச்சாட்டும் தன்னையே வந்து தலையில் தாக்குவது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

வஸந்தி அவன் பக்கமாகத் திரும்பி அவனையே நோக்கி, 'கோவிந்த ராதாவல்லப கருணை செய்; அடுத்த ஜன்மம் எனக்கு நல்லதையே கொடு...' என்று வேண்டினாள்.

அவளுடைய பெரிய கண்களில் நீர் தளும்பியது, நீத்தத்தில் மூழ்கிய கருங்குவளைப்போல். நிதாயி அவள் பக்கமாகக் குனிந்து அவள் கன்னங்களில் பெருகி வழியும் நீரைத் தன் சவுக்கத்தால் மெதுவாகத் துடைத்து, 'வஸன்...வஸன்' என்று மெல்லக் கூப்பிட்டான்.

வஸந்தியின் கண்கள் எங்கேயோ குத்திட்டு நின்றன. 'வேண்டாம்... இனிமேல் என்னைக் கூப்பிடாதே...வேண்டாம்' என்று சொல்லும்போது வெற்றுவெளியில் எதையோ பிடிக்க அவள் கை தாவியது. உருக்கமான வேதனையைக் காட்டும் ஒரு முனகல்.

மறு நிமிடமே அவள் நிதாயின் மடியில் தலைதொய்யச் சாய்ந்தாள்.

20

கங்கைக் கரையோரமாகவுள்ள ஒரு நகரம். அந்த ஆற்று ஓரமாகவே மயானம். அங்கே வஸந்திக்கு, நிதாயி தன் கையாலேயே ஈமச் சடங்குகளை நடத்தினான். அவனுக்குத் துணையாக இருந்தவர்கள் அந்த ஜுமுர் கோஷ்டியைச் சேர்ந்த பெண்களே! இதில் வியப்பென்னவென்றால், ஆடவர்கள் எவருமே அந்தப் பிணத்தின் பக்கங்கூட எட்டிப் பார்க்கவில்லை. அவர்கள் ஜாதி வித்தியாசங்களைப் பாராட்டுபவர்கள். லலிதாவின் கேள்வனான அந்தப் பின்பாடகன் வாய்விட்டுச் சொன்னான்—'உஸ்தாத், நீ செய்வதை நான் தடுக்கவில்லை. அவளுக்கு எவ்வளவோ செய்திருக்கிறாய்... இன்னும் எதற்கு?' என்றான்.

நிதாயி சிரித்தான். அவன் இதற்கு மறுமொழியும் தரவில்லை. அவனது உபதேசத்தைக் கேட்பதாகவுமில்லை. ஆனால் வீண்வாதம் செய்யும் அந்தப் பின்பாடகன் மேலும், 'இது விளையாட்டு விஷயமல்ல உஸ்தாத். பரலோகத்தில், இதற்கு நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்?' என்றான்.

நிதாயி சிரித்து, 'பதில் சொல்வதற்கென்ன இருக்கிறது? கம்மென்று நிற்பேன் தம்பி!' என்றான்.

பிடில்காரன் குறுக்கிட்டு, 'அது எப்படியாவது போகட்டும்; எதற்கு இந்த மயானத்தில் வாதம்?' என்றான்.

சுடலை மீது வஸந்தியின் சவத்தை வைப்பதற்கு முன் அந்தப் பெரியவள் ஒரு வேதனை மூச்செறிந்து, 'உம்...என் வஸன் என் தங்கம்...' என்றதும், அவள் கண்களிலிருந்தும் இரு நீர்த்துளிகள் விழுந்தன. பக்கத்திலேயே மணல்மேட்டில் நிர்மலாவும், லலிதாவும் அமர்ந்திருந்தனர். அவர்கள் மெதுவாக அழுது ஆராக் கண்ணீர் வடித்தனர்.

சவத்தைச் சிதைமேல் ஏற்ற நிதாயி எழுந்தபோது பெரியவள், 'கொஞ்சம் இரப்பா' என்றதும், அவள் வஸந்தியின் உடம்பிலிருந்து நகைகளையெல்லாம் ஒவ்வொன்ருகக் கழற்றினுள். விலைமாதாக இருந்த அந்த இழிகுலத்தவள் உடம்பில்தான் எத்தனை நகைகள்! காதில் அணியும் தொங்கடம், பேஸரி, கைவளையல், கழுத்தில் தேள் கொடுக்கு மோஸ்தர் தங்கச் சரடு...

நிதாயிக்குச் சிரிப்பு வந்தது—'என்ன சித்தி, கழற்றிக் கொள் கிருயா?' என்ருன்.

பெரியவள் அவனையே சற்று நேரம் நோக்கிவிட்டுத் தன் வேலையில் ஈடுபட்டாள். கழற்றிய நகைகளைத் தன் புடவைத் தலைப்பில் முடி போட்டுக்கொண்டே அவள், 'என்னுடைய செல்வம் போய் விட்டாள் அப்பா! இந்த உலகம் இருண்டு விடுகிறது; சாப்பாடு விஷமாகி விடுகிறது; எதிலும் வெறுப்பேற்படுகிறது. ஆனுல், இரண்டு நாள் கழிந்ததுமே நாம் பழையபடி நடமாடுகிருேம்... பாழும் வயிற்றுக்குப் போடுகிருேம்... பேசுகிருேம்... எதுதான் செய்யாமலிருக்கிருேம்? வாழ வேண்டுமோ, இல்லையோ? அழுதால் மட்டும் மாண்டு போனவள் திரும்பி வந்துவிடுவாளா? உம்... இதை யெல்லாம் சுடலைக்கு விடுவதனுல் ஒரு பலனுமில்லை...' என்று பேச்சை முடித்துக் கையில் வைத்திருக்கும் பொன் வளையலை உருட்டிக்கொண்டே, 'இது என்னைச் சேரவேண்டுமப்பா' என்ருள்.

நிதாயிக்கு மீண்டும் சிரிப்பு வந்தது. நகைகள் இல்லாத வஸந்தி யின் சடலத்தைச் சிதையில் ஏற்றிவிட்டான். பெரியவள் தலையில் கையை வைத்தபடி, 'என் அதிர்ஷ்டத்தைச் சொல்லு... இப்போது நான் அவளுக்கு வாரிசாகிவிட்டேன்' என்றதும், அவள் கண்களி லிருந்து நீர் பெருகியது.

தொலைவிலிருந்தே லலிதாவும், நிர்மலாவும் அழுது இடுங்கிய கண்களுடன் வஸந்தியின் சுடலையையே நோக்கினுர்கள். அவளுக் காக அவர்கள் படும் வேதனை உண்மையானது. அதே கணம் அவர்கள் தம் நிலையைக் குறித்தும் சிந்தாகுலமுற்றனர்—'இப்படியே தான் நாமும் ஒருநாள் போய்விடுவோம்...இந்தச் சித்தி நம் உடம்பி

விருந்தும் கொஞ்ச நஞ்சமுள்ள பொன்னையும் பறித்துக்கொண்டு விடுவாள்...ஒருவேளை, நல்லகாலம் இருந்து கிழவயதுவரை உயிருடனிருந்தால் இந்தச் சித்தியைப்போல் ஒரு கோஷ்டியின் தலைவியாக இருக்கலாமல்லவா? அப்போது...' — இவ்வாறு கற்பனை செய்யும்போது அவர்கள் பெருமூச்செறிந்தனர். கற்பனை அதற்கு மேல் ஓடவில்லை. நம்பிக்கையைவிட அவநம்பிக்கையே அவர்கள் வாழ்வில் அதிகம். இந்த அவநம்பிக்கையைக் கொள்ளும்போது இந்தக் கடைசி நாடகம் அவர்களுக்கும் பிடித்திருந்தது. அவர்களும் ஒரு நாள் மரிப்பார்கள்; அந்தச் சித்தியும் உயிருடனிருப்பாள்!

கடைசிச் சடங்குகளை முடித்துவிட்டு, நிதாயி திரும்பி வந்ததும் பார்த்தான். அந்த எருமைத்தடியன் வஸந்தியின் அறையில் இடம் கொண்டிருந்தான். வஸந்தியின் உடைமைகள் இதற்குள் ஓரிடத்தில் குவியலாகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன.

இப்பொழுதும் நிதாயிக்குச் சிரிப்பே வந்தது. அறையில் ஒரு புறமாகப் பாயொன்றைப் பிரித்துப் போட்டுக்கொண்டு சுடலை நெருப்பண்டை இருந்ததனுல் ஏற்பட்ட சிரமத்தைப் போக்கிக் கொள்ள உடம்பைக் கீழே போட்டான்.

மரணத்தைப் பற்றிய நினைவுகளே அவனுக்கு வந்தன...

மரணம் என்பது என்ன? புராணத்தில் அவன் படித்த மரணத்தைப் பற்றிய விஷயங்கள் மனத்தில் எழுந்தன. மனிதனுடைய ஆயுள் முடிந்ததும் யமதர்மராஜா தன் படர்களைக் கூப்பிட்டு அந்த மனிதனைத் தன்னிடம் எடுத்து வரும்படிக் கட்டளையிடுகிருன். கண்ணுக்குப் புலப்படாத இந்த யமதூதர்கள் வந்து மனிதனிடமுள்ள விரல் அளவான ஆத்மாவை எடுத்துச் செல்வார்கள். விசாரணை மன்றத்தில் நிறுத்தி யமன், அவர்கள் செய்த வினைகளை ஆராய்வான். அவரவர்கள் வினைப்பயனை அனுபவிக்கச் சிலரை சுவர்க்கத்திற்கும், சிலரை நரகத்திற்கும் அனுப்பி விடுவான். புண்ணியத்திற்கேற்ற பரிசையும், பாபத்திற்கேற்ற தண்டனையையும் பெறுவார்கள். நிதாயும் ஒருநாள் இங்கே போகவேண்டியவனே. வஸந்தி செய்த வினைக்கும், அவன் பண்ணிய வினைக்கும் இடையே வித்தியாசமே இல்லை. இதனுல் அவனுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது. அது சுவர்க்கமோ, நரகமோ வஸந்தி போன இடத்திற்கே அவனும் போவான்...பயங்கரமான நரகமாக இருந்தாலும் அவன் அஞ்சவே மாட்டான்.

அதெப்படியோ அந்த நாள் வரும்பொழுது அவன் அவளை அங்குச் சந்தித்துதானே ஆகவேண்டும்? சற்று நாழிகைக்கெல்லாம்

அவனுடைய மனம் எல்லாவற்றையும் இழந்து சூன்யமாகிவிட்டது போல் தோன்றியது. அவன் உள்ளம் எதனுலும் அமைதியுற வில்லை. தன் மடியிலேயே வஸந்தி சாய்ந்து உயிர்நீத்தாள்; தன் கையாலேயே அவன் சற்றுமுன் அவளை எரித்துச்சாம்பலாக்கி விட்டுத் திரும்பியிருக்கிருன். இந்த உலகில், அவன் எங்கே தேடினுலும் அந்த வஸந்தி அவனுக்குக் கிடைக்கமாட்டாள்!

இந்த ஒரு துயரே மீண்டும் மீண்டும் அவனுடைய இதயத்துள் சுழன்று வந்தது.

வஸந்தி போய்விட்டாள்... பளபளக்கும் கத்தியைப் போன்று சிரிப்பாள்... நெருப்புப் பிழம்பெனச் சுடர்விடுவாள்... தங்க மேனிக் கேற்ற வனப்பான உடல் உறுப்புக்கள்... அவள் சிங்காரமாகச் சேலை யுடுத்தி நிற்கும்பொழுது இளவேனிற் காலத்தில் பூத்துக் குலுங்கும் காஞ்சன மரத்தையே நினைவுபடுத்துவாள். இத்தகைய பொற் சித்திரம் என்றுமே அழிந்து போயிற்றே... அவளுடைய நகை நட்டுக்களை அந்தப் பெரியவள் பறித்துக்கொண்டு விட்டாளே... அவன் தன் கையாலேயே அவளுடைய பூவான உடலை அழலுக் கிரையாக்கினுன்...உயிரற்ற வஸந்தி இதுபோல அவன் செய்வதைத் தடுக்கவில்லை.

உண்மையில் மரணம் விசித்திரமானது! நகைகள் மீதுதான் வஸந்திக்கு எத்தனை மோகம்! அதையெல்லாம் பெரியவள் கழற்றிக் கொண்டாள். வஸந்தி ஏன் என்றுகூட கேட்கவில்லை. உடலை அழகுபடுத்திக் கொள்வதில் அவளுக்குத்தான் எத்தனை அக்கறை! உடையில் எங்கேயாவது சற்று அழுக்கு படிந்துவிட்டால் பத்து தடவை அதை துடைப்பாள்; துளியேனும் அவள் நோவைத் தாங்காதவள். அத்தகைய தேகம் நெருப்பில் பொசுங்கி முடிவில் ஒரு பிடி சாம்பலாகிவிட்டது. ஆனுல் இத்தனைக்கும் அவள் முகம் சற்றுவது சுளித்துக் கொண்டதா? துயர், இன்னல், வெகுளி, மயக்கம், காமம் யாவையும் ஒரே கணத்தில் மரணம் துடைத்து விட்டது! மிக விசித்திரமானது மரணம்!—இப்படி எண்ணங்கள் அவனை அலைக்கும்போது அந்தப் பாட்டின் அடி மீண்டும் அவன் நினைவில் எழுந்தது—

[1] ஏயி கேத மோர் மனே
பாலோபேஷே மிட்லோனு ஆஷ்—குலாலோ நா ஏ ஜீபனே.
ஹாய்! ஜீபன் ஏதோ ச்சோடோ கேனே, ஏ புவனே?

[1] முன்னுல் பார்க்க.

வஸந்தியே சொல்லியிருக்கிருள்—' கவிவாலா, உன் பாட்டில் வருவது என் வாழ்வில் பலித்துவிடும். இந்தப் பாட்டை நீ ஏன் புனைந்தாய்?' வஸந்தியுடைய வாழ்க்கையில் இது எவ்வளவு உண்மையாகிவிட்டது! 'ஐயோ... ஐயோ! வஸந்திக்கு இறந்த பின்பாவது அமைதி கிட்டியிருக்குமா? இவ்வுலகில் செய்த பாப தாபங்கள், பெற்ற ஏமாற்றம் இவற்றிற்கு அவ்வுலகில் ஒரு முடிவு ஏற்படுமா? வாழ்வில் பெற முடியாதவை மரணத்தின் வாயிலாகப் பெற இயலுமா?' மெல்லச் சுரம் போட்டுப் பாடினுன்—

[1] ஜீபனே ஜா மிட்லோ நாகோ
மிட்பே கீ ஹாய் தாஇ மரணே?'

நிறைவேறுமா? மரணத்துக்குப் பிறகு வஸந்தி வஸந்தியாகவே இருப்பாளா? இந்த ஆகாயத்தில் அத்தமிக்கும் சந்திரன் அந்த ஆகாயத்தில் எழுமா? இங்கு மண்ணில் உதிர்ந்துபோன மலர் அவ்வுலகில் வாடாமலராகப் பூத்து விளங்குமா? இவ்வாழ்வில், இவ் வுலகில் துயரால் துடித்த அழுகையின் கண்ணீர், அவ்வுலகில் கலப் பற்ற ஆனந்தச் சிரிப்பாக ஒலிக்குமா?... ஒலிக்குமா?

ஏ புவனே டுப்லோ ஜே சாந்த்
ஸே புவனே உட்லோ கி தா?
ஹேத்தாய் ஸாஞ்ஜே ஜர்லோ யே ஃபுல
ஹோத்தாய் ப்ராதே ஃபுட்லோ கி தா?
ஏ ஜீபனேர் காந்நா யத
ஹய் கி ஹாஸி ஸே புவனே?
ஹாய்?... ஜீபன் ஏதோ ச்சோட் கேனே?
ஏ புவனே?

திடுமென ஒரு கலவரமான கூச்சல், பாட்டில் ஒன்றிய அவன் மனத்தைக் கலைத்தது. அவனுக்குச் 'சீ' என்று ஆகிவிட்டது. ஜமீர் கோஷ்டியினரிடையே ஒரு கலவரம் மூண்டுவிட்டது. நிர்மலா கீச்சுக் குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்தாள். நிதாயி வெளியே வந்து நின்முன். விஷயம் தெரிந்தபோது அவன் மேலும் உள்ளூர வருந்தினுன். சண்டை சச்சரவெல்லாம், வஸந்தியின் இடத்தை யார் பிடித்துக்கொள்வது என்பது பற்றியே. 'சீ...சீ!'

[1] வாழ்வில் நிறைவேறுதது மரணத்தால் நிறைவேறுமா?

வஸந்தி அன்றுதான் இறந்து போனுள். அவள் உடல் எரிந்து சாம்பலாகி இன்னும் வெகுநேரம் ஆகவில்லை. அப்பொழுது மாலை நேரம். இதற்குள் அவளுடைய கோஷ்டியினர் அவளை அறவே ஒழித்து விட்டனர். அவளுடைய இடத்தை யார் கொள்வதென்ற பிரச்னையை இப்பொழுதே ஆராயவேண்டுமா என்ன ? வஸந்தியின் உடைமைகளை எடுத்துக் கொண்டு பெரியவள் தன் அறையில் பத்திரப்படுத்தி இரவுச்சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந் தாள். லலிதாவும், நிர்மலாவும் தம் சொந்தச் செலவில் சாராயம் வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் பிடில்காரன், பின்பாடகன், டோலக் வாசிப்பவன் இவர்களிடையே தீவிர ஆலோசனை மூண்டது. ஆடல், பாடல், இளமை, அழகு இவற்றில் தேர்ந்த பெண் எவளை இந்தக் கோஷ்டியில் சேர்ப்பது என்பதைப் பற்றி. எல்லோரும் ஒருமுகமாய், பிரபாதி என்ற பெயருடைய ஓர் இளமடந்தையே இதற்கேற்றவளென்ற முடிவுக்கு வந்தனர். வஸந்தியை விட அந்தப் பெண் சிறந்தவள் என்பதற்கு ஒரே காரணம், அவள் வஸந்தியைக் காட்டிலும் வயதில் சிறியவள் என்ப தாகும். பின்பாடகன், 'அவளைப் பிடிப்பதுதான் உசிதம்' என்ருன். அவளை அழைத்து வருவதற்கு ஐம்பது ரூபாய் செலவாளுலும் அதுவே உசிதமெனச் சொன்ருன். 'இப்படிச் செய்யாவிட்டால் இந்த ஜுமுர் கோஷ்டி, தகுந்த ஓர் ஆட்டக்காரி இராததால் கலைந்து விடும்' என்ருன். டோலக் வாசிப்பவன் தன் கருத்தை வெளி யிட்டான்—'ஜீராவில் நன்ருக ஊருது போனுல் ஜிலேபி வாய்க்கு ருசிக்காது. அதேபோல் வெறும் கவிாொலாவின் பாட்டை மட்டும் எவரும் கேட்கமாட்டார். லலிதாவோ நிர்மலவோ பாடினுல் கண்ணை மூடிக்கொண்டுதான் அவர்கள் பாட்டைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டும்'

லலிதாவுக்கும், நிர்மலாவுக்கும் இதைக் கேட்டதும் புஸுக்கெனக் கோபம் வந்துவிட்டது. அவர்கள் சண்டைக்கு ஆரம்பித்து விட்டனர். ஏற்கனவே அவர்கள் உடலை விற்கும் பட்டிகள் ; அதுவும் இப்போது அவர்களுக்குச் சாராய போதை வேறு ஏறியிருந்தது. தங்களைப்பற்றி இவ்வளவு அலட்சியமாக கூறியது இருவருக்கும் தாளவில்லை.

நிதாயிக்கு இது துளிக்கூடப் பிடிக்கவில்லை. மெல்ல எழுந்து வெளியே போய்விட்டான். எங்கே போகிருேமென்று கூட அவன் உணரவில்லை. அவன் வந்து நின்ற இடம், கங்கைக் கரையிலுள்ள அந்த மயானம். அங்கேயே அவன் உட்கார்ந்து விட்டான்.

மனிதர் நடமாட்டமிராத இடம் அந்த மயானம். ஒரு சுடலையி லிருந்து சிறிது சிறிதாகப் புகை போய்க்கொண்டிருந்தது. தரையில் இங்குமங்கும் என்புகலந்த சாம்பற்குவியல்கள். ஆற்றுக்கப்பால் கீழ்த் திசையில் இருள் கவிந்து வந்தது. செத்த உடல் வேகும் நாற்றம் அங் குள்ள காற்றில் அதிகமாகக் கலந்திருந்தது. இதனிடையே அவன் கம்மென்று இருந்தான். இவ்வளவு அருகிலிருந்தும், அந்தத் தனிமையில் அமர்ந்திருந்தும் இரு கண்கொண்டு இம்மைக்கு அப்பாலானதை அவனால் பார்க்கமுடியவில்லை. வாழ்வின் அக்கரை யில் உள்ள இருண்டதென்புலத்தில் மரணதேவதை வீற்றிருக்கிறது!

தன் ஊரிலும், அக்கம் பக்கத்து இடங்களிலும் மனிதர் மரித்ததை அவன் பார்த்திருக்கிறான்; அதுபற்றிக் கேள்விப்பட்டுமிருக்கிறான். எவரையும்போல் அவனுக்கும் மரணத்தைப் பற்றிய பயம் இருந்தது. இதுவரை துயரையோ, மனவேதனையையோதான் அவன் அனுபவித்திருக்கின்றான். வஸந்தி தன் மடியில் துஞ்சிய பொழுது தான், அவன் மரணத்தை அவ்வளவு அண்மையில் முதன்முதலாகப் பார்க்கின்றான். அவள் நெற்றிமீது கைவைத்தபோது அந்தத் தண்மையில் மரணத்தைக் கண்டான். எத்தனையோ தரம் இப்படி அவள் நெற்றியில் கை வைத்து அவன் பார்த்திருக்கிறான். ஆனால், முன்னால் பெற்ற அந்த ஸ்பரிசமே இதன் உண்மையை அவனுக்கு யுணர்த்திவிட்டது. சொல்லாமல் கொள்ளாமல் வரும் இந்த மரணம், வஸந்தியை அவனிடமிருந்து சட்டெனப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டது. வஸந்தி சாவுக்கு அஞ்சவில்லை; அவள் வாழ்வை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாள். எத்தனையோ செய்ய வேண்டுமென்று அவள் மறைவில் உறுதி கொண்டிருந்தாள். சட்டென நிதாயிக்குத் தோன்றியது—'வஸந்தியின் ஆத்மா ஒரு வேளை... உடல், வீடு, வாசல், உற்றார், உறவினர் உலகு யாவையும் இழந்து திக்கற்றதாய் மனிதனுடைய ஆத்மா, தன் உடல் மீது உள்ள மோகத்தால் அழுது திரிவதாகப் பலர் சொல்லக் கேள்வி. நடுராத்திரியில் வஸந்தி ஒருவேளை இந்தச் சுடலைப் பக்கலில் வந்து தன்னுடலை தேடுவாளோ; தான் ஆற்ற விரும்பி யதைத் தேடியலைவாளோ?'—இப்படி ஓர் நினைவு வந்தபோது அவ னுடைய மார்பு படபடத்தது.

மயானத்தில் வஸந்தியைச் சுட்டெரித்த அந்தச் சிதை அரு கிலேயே நிதாயி அமர்ந்திருந்தான். இரவு முதல் யாமம்தான். ஆனால் அங்கே ஒரே நிச்சப்தம்; ஒரே இருள். சிள்வண்டு கறங்கும் ஒலி ஒன்றேதான். நகரின் விளக்கொளி, கோலாகலம் எல்லாம்

தொலேவில் நின்றன. சிதையின் அருகில் அமர்ந்தவாறு நிதாயி தனக்குள்ளேயே, 'வஸந்தி, எழுந்து வா...எழுந்து வா' என்று சொல்லிக் கொண்டான். ஆனால், வஸந்தி வரவில்லே.

இராமுழுவதும் அந்தச் சுடுகாட்டில் நரி, நாய், கழுகு போன்ற பிராணிகளின் கூச்சலுக்கிடையே அவன் பொழுதைக் கழித்தான். அவை ஒவ்வொன்ருக வந்தன; உடல் நிணத்தைக் கவ்வ ஒன்ருே டொன்று சச்சரவிட்டு, தின்று பசியடங்கியதும் போயின. கங்கை யாற்றில் நீர்வாழ் புட்கள் மூழ்கிப் பறக்கும் சடசடப்பொலி; ஆனால் அவன் எதிர்நோக்கிய அந்த வஸந்தி வரவில்லே. இரவு முழுவதும் மணல்மேட்டை அரித்துக் கொண்டே கங்கையின் நீத்தம் 'சல சல கல கல' என்று ஓடிக்கொண்டேயிருந்தது. இவ்வோசை சில சமயம் உரத்தும், சில சமயம் தாழ்ந்தும் கேட்டது. வானிடை இரண்டொரு எரிநட்சத்திரங்கள் ஒள்ளிய கீற்றை வரைந்து மறையும். கங்கையின் அக்கரையில், பாட்டையில் மாட்டுவண்டிகள் செல்லும் அரவம். அவற்றின் கீழ்த் தொங்கும் லாந்தர்விளக்கு பல விசித்திர நிழற்கோலங்களேப் புனேந்தன. மரங்கள் மீது திட்டுத் திட்டாகச் சிமிட்டும் மின்மினிக் கூட்டங்கள். அருகிலுள்ள குறுங்காட்டிலிருந்து வெளியேறும் குள்ள நரிகள். மணல்மேட்டில் விரைந்து சென்று ஒரு வேலமரத்தில் வதிந்த கோட்டான் ஒன்று கத்தியது. சிதைக் கருகிலும் கூகைகள் வட்டமிட்டன, உலர்ந்த மேனியரான தவசிகளேப் போல். இதையெல்லாம் நிதாயி, தன்னிடத்திலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், அந்த வஸந்தி வருவதற்கான அடையாளமே தெரியவில்லே. வான்வீதியில் தாராகணங்கள் கிழக்கி லிருந்து மேல்திசையே நழுவி விழுந்து கொண்டிருந்தன. நாஞ்சில் போன்ற எழுமீன்கள் (ஸப்தரிஷி மண்டலம்) சுழன்று மறைந்து விட்டன. தேள்கொடுக்கு (விருச்சிக ராசி) கங்கைக்கு மேற்கில் குறுங்காட்டு மரங்களிடையே புகுந்துவிட்டது. கீழ்வானில் விடி வெள்ளி எழுந்தது. நிதாயி அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

கீழைக் கரையில் மணற்பாங்கான இடம்—சில மைல் வரை விரிவது. அதன் மறுபுறம் விட்டுவிட்டுத் தோப்புக் கிடையே கிராமங்கள். அந்தத் தோப்புக்களுக்கு மேலே ஆகாயம் மெல்லச் சிவந்து வந்தது. 'கலகல' என்று பறவைகளின் தீங்குரல்கள் எதிரொலித்தன. எங்கும் இருள்சீத்துப் புலரி பூத்தது. வஸந்தி இவ்வுலகை விட்டே அடியோடு அழிந்து போய்விட்டாள். சட்டென அவனுடைய கண்களில் நீர் கான்றது. கண்ணே மூடிய படித் தன்னேத் திரட்டிக் கொண்டான். அதே சமயம் அதிசயமான

தொன்று நிகழ்ந்தது. திறந்த கண்களுக்கெதிரே அந்த வஸந்தி எங்குமே புலப்படவில்லை. ஆனால் நிதாயி கண்களை மூடிக் கொண்டதுமே அவன் மனத்தில் தெள்ளத்தெளிய அவள் தோன்றினாள். அவன் எதிரேயே அவள் சிரித்தமுகமாய் நிற்கிறாள்! 'வஸந்தி !...வஸந்தி ! ...'

கண்ணைத் திறந்ததுமே நிதாயின் மருள் விலகியது. இதற்குள் இருளும் நன்றாகப் பிரிந்து வெளுத்துவிட்டது. அவன் எதிரே அதே கங்கை, அதே மயானம், அதே மரங்கள், அதே சிதையின் புகை. நாய்களும் தென்பட்டன. வெறுப்புற்று மீண்டும் கண்ணை மூடினான். அற்புதக் காட்சி ! இது என்ன...மீண்டும் வஸந்தி அவன் முன்னால் வந்து நிற்கிறாள் ! எதிர்பார்த்த அவள் வந்து விட்டாளே... ! அவன் கண்ணை மூடினால் இந்த மாதிரி ஒரு சித்திரம் எழுந்தது. 'சித்திர மன்று ; உண்மை வஸந்தியே ! அதோ அவள் சிரிக்கிறாளே !... அதோ, அவள் பேசுகிறாளே ! பழைய பேச்சே அன்று.

புதிய பாணியில் புதிய விஷயங்களே பேசுகிறாள் ; புதிய வேஷத்தில் புத்துருவாகவே நிற்கிறாள் !'

நிதாயிக்கு ஓரே மகிழ்ச்சி. புதியதோர் பாட்டு அவன் மனத்துள் எழுந்தது—

[1] 'மரண் தோமார் ஹார் ஹலோ யே மனேர் காச்சே
 பாவ்லே யாரே கேடே நிலே ஸே ஜே தேக்கி மனேஇ ஆச்சே
மனேர் மாஜ்ஜேஇ பஷே ஆச்சே |
 ஆமார் மனேர் பாலோபாஷார் கதம்தலா—
சார் ஜுகேதேஇ பாஜாய் ஸேத்தா வம்சீ ஆமார் வம்சீவாலா.
 விரஹேர் கோத்தாய் பாலா, கிஸேர் ஜ்வாலா ?
சிகன-காலா திவஷ் நிஷி ராதாய் யாசே'

அவனுடைய மனம் உவகை நிரம்பி வழிந்தது. இது எப்படி நேர்ந்தது? அதைப்பற்றி அவன் ஒன்றும் அறியான். ஆனால் அது நிகழ்ந்தது. வஸந்தியை அவன் இழக்கவில்லை ! நிரம்பிய உள்ளத்துடன் அவன் ஆற்றுத்துறையில் இறங்கி, முகம் கையெல்லாம்

[1] மரணமே, நீ தோற்றுவிட்டாய், என் மனத்திற்கெதிரே ! நீ யாரைக் கவர்ந்து சென்றாயோ, அவள் என் மனத்துள்ளேயே வாழ்கின்றாள் ! என் மனத்துள் திகழும் அந்த அன்பின் நிழலில் வாழ்கின்றாள் ! நான்கு யுகத்தினூடே அந்தக் குழலோன் தன் குழலை இசைக்கின்றான். இந்தப் பிரிவு நாடகத்தின் முடிவு எங்கே ? ஏனிந்த வேதனையின் வெம்மை ? அந்தக் காரிருள் நிறத்தான் அல்லும் பகலும் ராதையைத் தேடுகின்றான்.

கழுவிக் கொண்டான். அந்நீரால் தலையைத் துவட்டிக்கொண்டான். பிறகு, தன்னிடத்துக்குத் திரும்பினான்.

அச்சமயம் விடுதியில் சாமான்களை ஏறக்கட்டிக் கொண்டிருந்தனர். அவனைப் பார்த்ததும் எல்லோரும் பரபரப்புடன், ‘இதோ நம் கவிவாலா! ... இதோ வருகிறார்!’... என்றனர்.

பின்பாடகன் ரசிகமாக, ‘நான் சொல்லலே, உஸ்தாத் துறவியாகி விட்டார்’ என்றான்.

நிதாயி மெல்லச் சிரித்துச் சடாவின்சந்தத்தில் தன் பழம்பாட்டின் இரண்டு அடிகளை எடுத்தான்—

[1] ‘ஸே விநே ப்ராணே வாஞ்சினே—
பவனே புவனே ரஹி கேமனே
ஆமி ஜாபோ ஸேஇ பதே, யே பத் லாகே
பாலோ நயனே’

லலிதா உதட்டை ஏளனம் காட்டக் குவித்து, எச்சில் உமிழ்ந்து ‘எங்கே புரண்டு விட்டு வந்தாய், புலவரே? இத்தனைச் சாம்பல் பூச்சு ஏன் உடம்பில்?’ என்றாள்.

ஆனால் நிர்மலா அன்பாக அவனுடன் பேசினாள்—‘வா அண்ணா, உட்காரு...சா கொண்டு தருகிறேன்!’ பக்கவாத்தியக்காரன் அருகில் வந்து, மெதுவாக விசாரித்தான். ‘ராத்திரி எங்கே ஆளையே காணோமே?’ என்றதும் கண்ணடித்து, ‘யார் வீட்டிலே?... எப்படி இருந்தாள்?’ என்று கேட்டான். அவனுடைய எண்ணம், வஸந்தியை மறப்பதற்கு நிதாயி வெளியே எவளுடனோ இருந்து விட்டு வருகிறான் என்பது. பிடில்காரன் அவனை அதட்டி, ‘நிறுத்தப்பா... உன்னைப் போலவே எல்லோரும் இருப்பார்களா?’ என்றதும் நிதாயியைப் பார்த்து அவன், ‘அமருங்கள் உஸ்தாத்’ என்றான். நிதாயி இதையெல்லாம் ரசித்துவிட்டு உட்கார்ந்தான்.

பெரியவள் தன் காரியத்திலேயே கருத்தாக இருந்தாள். பழையதுணி வாங்கும் ஒருவனிடம் வஸந்தியின் துணிமணிகளை விற்பதற்குப் பேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவன் அவற்றை விலைக்கு வாங்கிக்கொண்டு போய்விட்டான். அவள் நிதாயியைப் பார்த்து, ‘தம்பி, இப்போதுதான் எழுந்தாயா? மடமடவென்று மூட்டை முடிச்செல்லாம் கட்டு’ என்றாள்.

---

[1] **அவளின்றி நான் உயிர் வாழேன். வீட்டிலும், உலகிலும் நான் எவ்வாறு இருப்பேன்? என் கண்சென்ற வழியே நான் சென்றிடுவேன்!**

நிர்மலா ஒரு கிண்ணத்தில் எண்ணெய்ப் பிசறிய அவல் பொரியைக் கொண்டு கொடுத்தாள். 'இதோ இரண்டே நிமிஷத்தில் சா கொண்டு வருகிறேன்; வடிகட்டவேண்டியதுதான். அதற்குள் இதைத் தின்றுவிடு. நேற்று ராத்திரி யெல்லாம் பட்டினி...' என்றாள்.

அவள் முகத்தையே நோக்கி அவன், 'அண்ணனுடைய வேதனை தங்கையைத் தவிர யாருக்குத் தெரியும்?' என்றான்.

'சித்தி ஒருத்தி இருப்பதைக்கூட மறந்து விட்டாயா அப்பா'— பெரியவள் அங்குத் தோன்றி, புட்டியில் கொஞ்சம் சாராயம், முன்னாள் இரவு வேவித்த முட்டை, கொஞ்சம் இறைச்சி இவற்றைத் தட்டில் வைத்து அவனிடம் நீட்டினாள். 'நேத்தியே பிடித்து இதை யெல்லாம் உனக்கு மூடிவைத்து இருக்கிறேன். தின்னு...கொஞ்சம் தெம்பு வரும்...' என்றாள்.

நிதாயி அவளையே நோக்கி மெதுவாகச் சிரித்து, 'என் அம்மா வான இந்தச் சித்தியை நான் எப்படி மறப்பேன்? எப்போதும் உன்னுடைய கவனம் எனக்கு இருக்கும்' என்றான்.

பெரியவள், 'நீ இதைச் சாப்பிடு...நான் இதோ வந்து விடுகிறேன்' என்றாள்.

அவள் சென்றதும் டோலக்காரன் நிதாயின் அருகில் வந்து உட்கார்ந்தான். 'வா...வா நீயும் ரெண்டு எடுத்துக்கொள்' என்றான் நிதாயி. அவன் இதற்கு நன்றியுடன் கிண்ணத்தில் சாராயத்தை ஊற்றிக்கொண்டே, நிதாயின் காதொடு ரகசியமாக, 'தெரியுமா உனக்கு, வஸந்தியின் துணிமணியெல்லாம் விற்று விட்டாளே...' என்றான்.

நிதாயி இதற்கு பதில் ஏதும் சொல்லவில்லை.

அந்த டோலக்காரன் ஆத்திரத்துடன் மீண்டும், 'வஸந்தியின் இரண்டொரு நகையை நீ வைத்துக்கொள்கிறதானே? என்ன மடத் தனம் பண்ணே போ...' என்றான்.

நிதாயி சாராய பாட்டிலை எடுத்து, பிடில்காரனையும் பின்பாடகனை யும் பார்த்து, 'வாங்க...நீங்களும் கொஞ்சம் சாப்பிடுங்கோ' என்றான்.

அவர்களும் பரமதிருப்தியுடன் அவன் மேல் அனுதாபப்படுவது போல் நெருங்கியே உட்கார்ந்தனர். பிடில்காரன் சட்டெனத் திடுக் குற்றவன்போல், 'என்ன இது, புட்டியில் ஒன்றுமே இல்லையே...நீ ஒண்ணும் சாப்பிடலையா?' என்றான்.

நிதாயி சிரித்து, 'இருக்கட்டும்...எனக்கு அப்படித் தேவை இல்லை' என்றான்.

'சாப்பிடமாட்டாயா?'

'வேண்டாம்'

எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

நிதாயி, பிடில்காரனைப் பார்த்துச் சொன்னான்—'உன்னிடம் ஒன்று கற்றுக்கொள்ள விரும்புகிறேன். ராத்திரி பிடிலில் வாசித்த அந்த சுரத்தை வாசி... நான் அதைக் கற்றுக்கொண்டு பாடுகிறேன்'

பிடில்காரன் அதற்கு, 'கட்டாயமா... உனக்குக் கற்றுக் கொடுக்காமல் யாருக்குக் கற்றுத் தரப்போகிறேன்? பார், மூன்றே நாளில் அதை நீ பாடுவாய்' என்றான்.

'மூணு நாளைக்குள் நீ எங்கேயாவது விட்டடித்தால்...' என்றான் நிதாயி சிரித்துக் கொண்டே.

'ஏன் அப்படி?' என்று வியப்புடன் பின்பாடகன் கேட்டான். பிடில்காரன் நிதாயியையே உற்றுப்பார்த்தான். அவனும் புரிந்து கொண்டான்.

நிதாயி சிரித்துக்கொண்டே, 'நான் இன்றைக்கே கிளம்பப் போகிறேன்' என்றான்.

'ஏன், நானுந்தான். நீ ..?' என்று பிடில்காரனைப் பார்த்தான் பின்பாடகன்.

அவன் வாயைப் பொத்திப் பிடில்காரன், 'நிறுத்தப்பா' என்றான்.

நிதாயி, பாடகன் சொன்னதைப் பின்பற்றி, 'ஆம்...எல்லோரும் தான் கிளம்பப்போகிறோம். நீங்கள் ஒரு வழி...நான் ஒரு வழி' என்றான்.

பிடில்காரன் அவன் கையை அழுத்திப் பிடித்து, 'உஸ்தாத்' என்றான்.

நிதாயி சற்று வாளாய் இருந்தான். அவனுக்கு பதில் சொல்ல வில்லை. பின்னர் நன்றாகக் குரலெடுத்துப் பாட ஆரம்பித்தான். ஒரு புதிய 'பதம்' வந்துவிட்டது—

[1] வஸந்த் சலியா கேலோ ஹாய்,
காலோ கோகில ஆஜி கேமனே கான காய்
பலோ—கேமனே த்தாகே ஹேத்தாய்?

பிடில்காரன் தன் வாத்தியத்தை எடுத்துக் கொண்டான். 'கேள், உஸ்தாத் வாசிக்கிறேன் கேள். நீ சொன்ன சுரமே வந்துவிட்டது...' என்றதும் வில்போட்டுத் தந்திகள் மீது விரல்களை ஓட்டினான். நீள் அலையாகச் சுரம் துடித்தது. அதே சுரம்!

[1] வஸந்தம் என் வாழ்வைவிட்டுப் போய் விட்டதன்றோ! இந்தக் கருங்குயில் இன்று எப்படிப் பாடும்? சொல், எப்படி வாழும் இங்கே?

இதற்குள் சித்தி அங்கே வந்துவிட்டாள். ‘அப்பனே’ என்று கூப்பிட்டாள்.

நிதாயி கையால் சமிக்ஞை செய்து தெரியப்படுத்தினான்—‘இப்பொழுது வேண்டாம்...அப்புறம்’ என்பதுபோல். அதனால் பிடில்காரன் வாசிப்பதை நிறுத்தினான். அவள் முகத்தை பார்த்ததும் அவன் நிறுத்திவிட்டான்.

பெரியவள் கேட்டாள் — ‘என்னவோ கேள்விப்பட்டேனே அப்பனே?’

‘என்ன சித்தி?’

‘நீ...? நீ போகிறாயாமே? எங்களுடன் வரப்போகிறதில்லையா?’

‘இல்லை சித்தி. இந்த ஆட்டத்தின் ஒரு காட்சி முடிந்துவிட்டது. இனிமேல் வேறு காட்சி...’

‘வேறு எந்த கோஷ்டியிலாவது...?’

‘அதெல்லாம் இல்லை சித்தி. இனிமேல் நெடுவழியே போகும் காட்சி...மனம்போனபடி’

பெரியவள் இதை முற்றிலும் புரிந்து கொண்டாள். அவள் எவ்வளவோ ஆசையெல்லாம் மூட்டினாள். வஸந்தியின் நகைகளில் ஒரு பகுதி தருவதாகவும் சொன்னாள். ‘வஸந்தியை விட வேறு ஒரு கட்டழகியை நான் கொண்டு வந்திருக்கேன் அப்பா. நான் உறுதியாகச் சொல்கிறேன்; அவளை நீ வைத்துக்கொள்ளலாம்...’ என்றாள்.

‘வேண்டாம் சித்தி, இனி எதற்கு?’

நிர்மலா அழுது விட்டாள்.

நிதாயும் தனக்கு வந்த அழுகையை அடக்கிக்கொண்டு, கண்ணை துடைத்தபடி, ‘தங்கச்சி, நீ ஏன் அழுகிறாய்—நீ அழுதால் என் மனசை என்னவோ செய்கிறது...’ என்றான்.

அப்போது அந்தப் பிடில்காரன் ‘என்ன உஸ்தாத், உலகத்தை வெறுத்து விட்டாயா?’ என்றான்.

இதற்கு மறுமொழி தருவதுபோல் அவனையே நோக்கினான் நிதாயி. வஸந்தியுடன் அவன் போட்டுக்கொண்ட முடிச்சு பிரிந்து விட்டதே! வஸந்தி அவனுக்கு விடுதலை தந்துவிட்டாளே! அவனை வேறொன்று கூப்பிடுகிறது—பதே பதே சலோ முஸாஃபிர் (நிற்காமல் செல், ஆண்டியே நீ நிற்காமல் செல்). பிடில்காரன் வினவியபோது, திடுமென அவன் மனத்துள் ஒரு சுரம் ஒலித்தது—‘நீ ஆண்டியா?’ என்று.

வைராக்கியமே அவனுக்குப் பிடித்துவிட்டது.

21

ஜுமுர்கோஷ்டி வேறிடத்தை நோக்கி நடந்தது.

எந்த வழி செல்வதென்று நிதாயி இன்னும் முடிவு செய்து கொள்ளவில்லை. ஆனால் அந்தக் கோஷ்டியில் என்னவோ அவன் இருக்கப்போவதில்லை. அதனால் அவர்களுடைய தொடர்பை அறுத்துக் கொள்வதற்கு ஒரு வழியைப் பிடித்தான். காடோவாவி லிருந்து சிறிய ரெயில் மார்க்கமாக அவர்கள் மல்லார்புரத்தை நோக்கிச் சென்றனர். நிதாயி பெரியலைன் வழியாக வடக்குப் புறமாகச் சென்றான். கடைசியில் காசிக்குச் செல்வதென்று ஒரு முடிவுக்கு வந்தான்.

நிர்மலா ஒருத்திதான் அவனுக்காக அழுதவள். அந்தப் பெண் அவனை, 'அண்ணா' என்றே அழைத்தாள். அண்ணன் என்ற முறையில் நிதாயும் அவளுக்காகக் கண்ணீர் விடக் கூச்சங்கொள்ள வில்லை. கடைசி நிமிஷம் லலிதாவும் பிரிவு தாளாமல் அழுது விட்டாள்—'மாப்பிள்ளை, உண்மையில் எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்களே!'

பெரியவள், அப்போதைக்கு நம்பிக்கையற்றிருந்தாலும் வருங் காலத்தைப் பற்றி அவள் நம்பிக்கை யிழக்கவில்லை. அவள் சொன்னாள்—'என்றைக்குமே மனிதனுடைய மனம் வைராக்கி யத்துடன் இருக்காது அப்பனே...அது அந்த வழியை விட்டுத் திரும்பும். மீண்டும் இன்பக் காட்சிகள் தோன்றும்; திரும்பி வந்து விடுவாய். அப்பொழுது இந்தச் சித்தியை மறக்காதே. எங்கள் கூட்டத்திற்கே வா...'

பிடில்காரன், மழுங்கிய சிரிப்புடன், 'சரி...போய்வா' என்றான்.

எருமைத் தடியன் வாயைத் திறந்தான்—'போகிறாயா?' என்றதும் சற்று நின்று மீண்டும், 'சன்னியாசியா போனா, கஷ்டமெல்லாம் வருமே? பிச்சையெடுத்தாகூட வயிறு ரொம்பாதே... என்னமோ சொன்னேன்; போய் வா...' என்றான்.

அவர்கள் சின்னரெயிலில் செல்ல வேண்டும். அந்த லைனில்தான் நிதாயின் ஊரும் இருக்கிறது. அந்த லைன் வண்டியில்தான் தன் ஊரைவிட்டு வந்தான். அந்தச் சின்னப் பெட்டியில் ஏறிக்கொண்டு சித்தி, 'வா அப்பனே, வந்து ஏறிக் கொள்ளேன்...இந்த லைனில்

தானே உன் ஊரும்? உன் மனசுக்குக் கஷ்டமானுல் உன் ஊரிலே கொஞ்சநாள் தங்கிவிட்டு வா' என்ருள்.

தன் வீடு... தன் ஊர்—நிதாயிக்குத் தூக்கிப்போட்டது. அந்த ஸ்டேஷன்...அந்த கிருஷ்ணசூடா மரம்...அந்த ரெயில் தண்டவாளம் வளையுமிடம்...அந்தப் பொன் கிரீடம் அணிந்த நாணற்பூ... தலையில் பளபளக்கும் பித்தளைப் பால்குடத்தைச் சுமந்துகொண்டு மோட்டா வெண்ணிறச் சேலையணிந்த அந்த மாமைக் கவினுள்... அவனுடைய இளமச்சி!...அத்துடன் அந்தப் பழைய பாட்டின் அடி...

[1] காலோ ஜதி மந்த தபே கேச பாக்கிலே காந்தோ கேனே?
காலோ சுலே ராஙா குஸும் ஹேரேச்சோ கி நயனே?

நிதாயின் முகத்தில் சிரிப்பின் மெல்லிய கீற்று தென்பட்டது. எத்தனையோ நினைவுகள், எத்தனையோ நிகழ்ச்சிகள், எத்தனையோ பழம்பாட்டுக்கள்!

இருந்தும் நிதாயி தனக்குத்தானே பிடிவாதமாகத் தலையசைத்து, 'வேண்டாம்...வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டான்.

அவன் மனத்துள் அந்தப் பாட்டின் அடியே ஒலித்துக்கொண்டிருந்தது—

[2] சாந்த் துமி ஆகாசே த்தாகோ.

'அதனுல்தான் நான் தேசாந்தரம் செல்கின்றேன்'—மறுபடியும் அவன் தன் தலையை யசைத்து, தன் எண்ணத்தை வெளியிட்டான்—'வேண்டாம் வேண்டாம்,...மைத்துனி இப்பொழுது குணமாகிவிட்டிருப்பாள். அமைதியாகக் குடித்தனம் செய்து கொண்டிருப்பாள். அங்கே சென்ருல் மீண்டும் அந்த அமைதி குலையலாம். வேண்டாம்...வேண்டாம்...அந்தத் திசையே நாடக்கூடாது...!'

நிதாயி மௌனமாகவே விடைபெற்றுக் கொண்டான். இப்படி விடை பெறுவது, ஏற்கனவே வேதனையால் புழுங்கும் அவன் மனத்தைப் பின்னும் வாட்டியது. அந்த கோஷ்டியிலிருந்த ஒவ்வொருவருடைய முகமும் அவன் கண்முன் நிமிடத்திற்கு நிமிடம் வந்து போயிற்று. பிரிவால் வாடிய முகங்கள். அவர்களுடன் ஒரு நாளும் சச்சரவிட்டதில்லை. அவர்களும், உள்ளத்தில் எத்தனை

[1] முன்னுல் பார்க்க.
[2] முன்னுல் பார்க்க.

அனுதாபம் கொண்டிருந்தனர் என்பது இதுவரை அவன் உணர்ந் திருக்கவில்லை. ஒரு சமயம் அவர்களிடம் தென்பட்ட குறைகள் பெரிய அளவாகவே இவனுக்குத் தோன்றின. அந்தச் சித்தியின் முகத்தில் அத்தனை அன்பு வழிந்தாலும், அவள் பேச்சில் அத்தனை இனிமை இருந்தாலும், அவளுடைய உள்ளம் விஷம் நிரம்பியது. பொய்யைத் தவிர அவள் உண்மையைக் கூறமாட்டாள். இந்த உலகில் சோறும் பணமுமே முக்கியமானவையென்று எண்ணுபவள். இதனால், அவளுக்கு எதன் மீதிலும் நம்பிக்கையோ, ஆசையோ கிடையாது. இப்படி அவளைக் குறித்துக் கருத்துக் கொண்டிருந்தான். ஆனால் இன்று என்னவோ அவன் மனத்துள், 'சித்தி நல்லவளே; அன்னையைப் போல் அவளிடத்தில் எனக்கு அன்பு படர்கிறது' என்ற எண்ணமே நிலவியது. அவள் வஸந்திக்காக சிந்திய இரு பொட்டுக் கண்ணீர், பேதையின் மரணத்தருவாயில் காதில் சொல்லும் பகவானுடைய நாமத்தைப் போலவே உண்மையானவை.

நிர்மலாவும் நல்ல பெண்தான். அவன், அவளைத் தன் உடன் பிறந்த தங்கையைப் போலவே நேசித்தான். லலிதா கண்ணுலேயே அவனை இறக்கிப் பேசியதெல்லாம் மைத்துனி செய்யும் விளையாட் டான பரிகாசங்களே. பிடில்காரனைப் பற்றி நினைத்தபோது அவனு டைய விழிகளில் நீர் ஊறிற்று. அவன் இழைத்த அந்த சுரம் இன்னும் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

அந்த சுரத்தையே மீண்டும் மீண்டும் பாடியபடி அவன் கங்கை யாற்றின் துறைக்கு வந்தான். கங்கையில் நீராடிவிட்டு மனத்துள் ளேயே கங்கையைப் பற்றிய ஒரு துதி புனைய முற்பட்டான். ஆனால் அது அமைந்து வரவில்லை. துறைக்கு மேலே ஒரு மரத்தண்டை வந்து அமர்ந்தான். எந்த இடத்திற்குப் போவது என்ற பிரச்னையே! 'போகிற வழியெல்லாம் பாவுலைப்போல் பிச்சையெடுப்பதா?... வேண்டியதில்லை' அவன் மனத்திற்கு இது ஏற்கவில்லை. 'அப்புறம்?... என்னதான் செய்வது? எங்கேதான் போவது?...' சட்டெனத் தோன்றியது—'ஐயோ...ஐயோ... பாழும் மனமே, எதற்காகச் சிந்திக்க வேண்டும்? கடவுள் இருக்கிறன்; அவனிடமே செல்வோம்! கோவிந்தன், விச்வநாதன்! அவர்களிடமே அடைக் கலம் புகுந்தால் போகிறது! அன்னையின் அடிக்கே சென்றல் போகிறது! அன்னை அன்னபூரணி! ராதாராணி, ராதாராணி, ராதாராணி! இவர்கள் சன்னதியில் நின்று பாடுவது—இவர்கள் மகிமையைக் கீர்த்தனம் செய்வது; இவர்கள் செவிகுளிரத் தன் சொந்தப் பனுவலைப் படிப்பது...இத்தனை இருக்கும்பொழுது

அவனுக்கு என்ன குறை! அவனுடைய பாட்டைக் கேட்பவர்கள் கண்ணுர நீர்மல்குவர். அவன் வயிற்றுக்கு வேண்டியதைக் கொடுத்துதவுவர். அது போதுமே, உயிர் வைத்துக் கொள்வதற்கு! ‘பாழும் மனமே, நீ ஏன் அல்லல்படுகிருய்? இங்கிருந்து நேராகக் காசி. உன்னைக் கவனித்துக் கொள்ள அப்பன் விச்வநாதன் இருக்கிருன். அன்னை அன்னபூரணி உன்னைப் பட்டினி போடமாட்டாள். காசியை விட்டதும், அயோத்தி—ஸீதாராம்... ஸீதாராம்! ராமராஜ்யம் ஆனதும், ராதா கோவிந்தன்! ராதாராணி... ராதா ராணி! கோகுல பிருந்தாவனம்!’—இப்படி அவன் மனம் அவ்விடங்களை நோக்கித் தாவியது.

பிறகு மதுரை...இல்லை...இல்லை மதுரைக்குப் போகமாட்டான். ராதாராணியை அழவைத்துவிட்டு ராஜ்யத்தின்மேல் ஆசைப்பட்டு அந்த சியாம மாமேனியன் அங்கே இருக்கின்ருன். அவனிருக்குமிடத்துக்கு நிதாயி போகமாட்டான்! மதுரையிலிருந்து குருக்ஷேத்திரம்—ஹரித்துவாரம். ஹரித்துவாரம் ஆனதும் ஹிமாலயம்... பனிவரைக்குமேல் பனிவரை! சிறுவயதில் படித்த அந்த பூகோள வர்ணனை அவனுக்கு ஞாபகம் வந்தது. உலகில் இமயம்போல் உயர்ந்த மலை வேறெதுவும் இல்லை. அதன் பனிமுடியின் பெயர் கௌரிசங்கர். அதற்கப்பால் மானஸ ஸரோவரம்—அது வரையிலும் மனிதனுல் போக முடியுமே! நிதாயியும் அதில் இறங்கி நீராடுவான். பின்னர், மனிதரே புகுந்தறியாத பனிவரைப் பகுதியில் ஒரு சிறு ஆச்ரமத்தை அமைத்துக் கொண்டு அங்கேயே தங்கிவிட வேண்டும். நவநவமான பாட்டுக்களை இயற்றுவான்; அவற்றைப் பாடுவான். பெரும் பாறைச்சுவர்களில் அவற்றைப் பொறித்து நிரந்தரமாக்குவான்... அவன் இறந்துபோய் விடுவான். ஆனுல் அந்தப் பக்கம் வருவோர் அதைப் பார்ப்பார்கள்; அதைப் படிப்பார்கள்! அந்த நிதாயிகவியை வணங்கிச் செல்வார்கள்!...

சித்திரை மாதக் கடைசி. பகல் வேளை. நெருப்பெனப் பேய்க் காற்று கங்கைக் கரையோரமாக உள்ள மணலை வாரி இறைத்துக் கொண்டு சென்றது. இருபுறத்துக் கரைக்கப்பால் வரண்டுபோன நில புலங்கள். அவற்றின்மீது உலவும் கானல்நீர் கண்ணைச் சிம்புளிக்கச் செய்தது. மனிதர் எவருமில்லை. இரண்டொரு பருந்து மட்டும் வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவை எந்தத் தொலைவான இடத்தை நோக்கிச் செல்கின்றவோ? எங்கும் ஒரே சூன்யம். எங்கும் ஒரே வரட்சி. வைராக்கியத்தின் போர்வை போல் செம்புழுதி போர்த்திருந்தது. இந்தக் கள்ளிப் பொறி பறக்கும்

வெவ்விய கர்னலிலே நிதாயி கிளம்பிவிட்டான். ‘சலோ, முஸாஃபிர் பாந்தோ காண்ட்டோரி பஹு தூர் ஜானு ஹோகா’ (செல்வாய் ஆண்டியே, தலையில் துணியைக் கட்டு... நீ செல்வது வெகு தூரம்!) காசி அவன் செல்ல வேண்டிய இடம். அவன் ஸ்டேஷனை யடைந்தான். அந்தப் பெரிய லைனில் காசிக்கு வண்டி செல்கிறது. காசிக்கு ஒரு டிக்கட்டு வாங்கினுன்.

நிதாயி வந்துவிட்டான் காசிக்கு.

பாலத்தின்மேல் வண்டி செல்லுகையில் ஜன்னல் வழியாகக் காசி க்ஷேத்திரம் மெல்லக் குறுகுவதை அவன் கண்டு மெய்ம்மறந்து நின்ருன். பிறைமதி வளைவான கங்கையின் ஒள்ளிய நீர் பளபளத்தது. எங்கே பார்த்தாலும் கோயில் ஸ்தூபிகள்! துறைகள்! பெரிய பெரிய மாளிகைகள்! அன்னை கங்கை, கண்ணைச் சிதறச் செய்யும் வெண்சுதை மாடங்களாகிய கண்டிகையை அணிந்திருப்பதுபோல் நிதாயிக்குத் தோன்றியது. பெட்டியிலிருந்த யாத்திரிகர்கள் சேர்ந்து கோஷம் செய்தனர்—‘ஜய் பாபா விச்வநாத்! அன்னபூரணி மாயி கீ ஜய்! (அப்பன் விச்வநாதனுக்கு ஜயம்! அன்னை அன்ன பூரணிக்கு ஜயம்)’ அவனும் அவர்களுடன் குரல் ஒன்றி விச்வநாதர் அன்னபூரணி இருவரையும் போற்றினுன்.

ஸ்டேஷனில் இறங்கியதும் திடுமென அவன மனத்தின் சந்தம் அறுந்து போயிற்று. ஏதோ தடுக்கி விழுந்தவன்போல் நின்ருன். முற்றிலும் புதியதொரு வேற்றுநாட்டிற்கு வந்தது போன்ற அனுபவமே அவனைச் சற்றுத் திக்குமுக்காடச் செய்தது.

வங்கதேசத்தின் எல்லையைக் கடந்த பிறகே அவனுக்கு ஏதனுலோ வெறுப்புணர்வு வளர்ந்து வந்தது. வேற்று மொழி பேசுபவர்கள், வேறு விதமாக உடை பூண்டவர்கள் இத்தகையோரின் நெரிசலே அதிகமாகிக் கொண்டு வந்தது. காசியில் இறங்கியதும் வேறுவிதமான மனிதர்கள் நடத்தும் மேளாவின் நடுவே நிற்பது போன்ற நுகர்வு ஏற்பட்டது அவனுக்கு. இங்குள்ள மனிதர்களின் வாழ்க்கைச் சந்தம், தன் வாழ்க்கைப் போக்குடன் ஒத்திருக்கவில்லை. அவனது கற்பனை எழுப்பிய அந்தக் காசி, அவன் விரும்பிய அந்தக் காசி எங்கே? கடைகளும், பலவகை வியாபாரமும் கோலாகலமாக நடக்கும் நகரமா, அவன் பார்க்க விரும்பிய அந்தக் காசி? இல்லை... விச்வநாதக் கடவுள் உறையும் அந்தக் காசி வேறு!

சித்தம் குழம்பி அவன் நின்று கொண்டிருந்தான்.

சித்தம் கலங்கியே நாற்புறமும் கண்ணைச் செலுத்தி ஒரு பாதையிலிருந்து வேருெரு பாதையில் நுழைந்து சென்றுகொண்டிருந்தான்.

எத்தனை நேரம் இப்படிச் சென்றுனே அவனுக்கே தெரியாது. முடிவில் ஓர் எக்கா வண்டியில் ஏறி, அதை ஓட்டுபவனிடம் தன்னை விச்வநாதர் கோயிலுக்குச் அழைத்துச் செல்லுமாறு, அவன் புரிந்து கொள்ளும்படி சொன்னான். எக்காவாலா அவனை நாலுபாதைகள் சேரும் ஓரிடத்தில் இறக்கி, நேரே இதே வழியில் சென்றால் கோயில் வரும் என்று வழிகாட்டினான். அவன் காட்டிய திசையே முன்னேறுகையில் திடுமென அவன் முகத்தில் ஓர் ஆனந்த பரவசம் மூண்டது. பூஜைத் தட்டுடன் வெளுப்பான சேலையணிந்த ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். அவன் குதுகுதுப்புடன் அவளையே நோக்கி நகர்ந்தான். 'இவள் நம் ஊரைச் சேர்ந்த அந்த டாகுருன்[1] அம்மா மாதிரி இருக்கிறாளே' என்று அவனுக்குத் தோன்றியது. இன்னும் நெருங்கியபொழுது அவன் தெரிந்துகொண்டான். 'ஆமாம், அவளேதான்! அதே பகட்டான கொய்சுவம் வைத்த ஆடை அணிந்து இருக்கிறாள். தலையைப் பாதி மறைக்கும் கோம்டா; கத்தரித்துவிட்ட தலைமயிர். அசல் அந்த டாகுருன் அம்மாவே!' வழி தப்பிக் காணாதுபோன ஒரு பிள்ளை திடுமெனத் தன் தாயை ஓரிடத்தில் கண்டதும் எப்படி ஆனந்தத்தால் தாவிச் செல்லுமோ அதே போல் நிதாயி, அவளைக் கண்டதும் களிப்பின் மிகுதியில் திளைத்துப் போனான். ஓடிப்போய் அவள் எதிரே கைகூப்பி நின்றான்.

இல்லை...அவள் அந்த டாகுருன் அம்மா அல்ல. ஆனால் அதே ஜாடையாக இருந்தாள். அவள் தன் நாட்டைச் சேர்ந்த வேறு ஒரு கிராமத்து அம்மா ஆவாள்; நிதாயிக்கு இதில் சந்தேகமே இல்லை. உண்மையில் அவன் ஊகித்ததில் பிசகு ஏற்படவில்லை. அவள் ஒரு வங்காளி விதவையே. அவளுடைய கிராமத்தில் அவளை எல்லோரும் டாகுருன் அம்மாவாகவே போற்றி வந்தனர். கணவனையும், மகனையும் பறிகொடுத்த அந்த வங்காளிக் கைம்பெண் காசியில் விச்வநாதனின் நிழலை அண்டி மணிகர்ணிகை கட்டத்து அருகில் வசிப்பவள். தன் வாழ்க்கைச் சுமையை இப்புனிதத் தலத்திலேயே இறக்கிவிட்டு, விச்வநாதனின் திருவடி நிழலை அடையும் உறுதியுடன் வந்தவள். கோயிலில் தொழுதுவிட்டு, அவள் வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். அப்பொழுது நிதாயி அவள் முன் சென்று கைகூப்பி 'டாகுருன் அம்மா' என்று வணங்கினான். அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். முதலில் அவள் புருவத்தைச் சுளித்தாள். ஆனால் நிதாயின் பணிவைப் பார்த்த பின்னர் முகம் மலர்ந்து, 'நீ யாரப்பா?' என்றாள்.

[1] ஊரில் எல்லோராலும் மதிக்கப்படும் சிறந்த பண்புடைய முதிய பெண்டு.

நிதாயி சடக்கென்று அவளை வணங்கி, 'தாயே, நான் ஒரு அநாதை. நான் இங்கே சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறேன்' என்றான்.

இந்த 'சங்கடம்' என்ற சொல் அவனைப் பல சங்கடங்களிலிருந்து காப்பாற்றியது. பாவம், ஏதோ நாட்டுப்புறத்து ஆள், இந்த ஊருக்குப் புதிதாக வந்து வழிதெரியாமல் அலைகிறானோ என்று அவள் நினைத்தாள்.

அவள், அன்பு கனிந்த குரலில், 'என்ன சங்கடம் உனக்கு அப்பா?' என்றாள்.

'இங்கத்து மொழியே எனக்குப் புரியவில்லை அம்மா. நான் ஒரு பரம ஏழை. எனக்குப் போக்கிடமில்லை. இந்த ஊருக்குப் புதிசு' என்றான்.

அவள் இன்முகமாகவே, 'உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே! வா என்னுடன். ஸ்டேஷனிலிருந்து நேரே வருகிறாயா?'

'ஆம் அம்மா'—நடுவழியில் நிதாயிக்கு விச்வேச்வரன் வெளிச்சம் காட்டினான். அவள், அவன் கண்டெடுத்த புதிய அம்மா. அவளைப் புதுஅம்மா என்றே அழைத்தான். அவள் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். நிரம்ப நல்ல குணம்.

நிதாயி தனக்கு ஏற்பட்ட பாக்கியத்தை எண்ணி எண்ணிப் பூரித்துப் போனான். ஜீவகோடிகளின் சங்கடங்களைத் தவிர்க்கும் அந்த ஈசனை அவன், 'பிரபோ, உன்னிலும் கருணை உள்ளவர் எவர்? மிக மட்டமான என்மீதும் உமது கடாக்ஷம் விழுந்ததே; இராதுபோனால் இந்த வேற்றுநாட்டில் நான் திக்குத் தெரியாமல் அலையும்போது யசோதையைப் போன்ற ஒரு தாயிடம் நான் அடைக்கலம் புகமுடியுமா?' என்று போற்றினான்.

அவனுடைய இந்தப் புதியஅம்மா தன்னிடத்திற்கு அவனை இட்டுச் சென்றாள். வளைந்து வளைந்து முடிவற்றுச் செல்லும் ஒரு சந்தில் அவளுடைய வீடு. ஓர் அறை; ஓர் வராந்தா. அந்த வராந்தாவின் ஓர் ஓரமான இடமே அவளுடைய அடுக்களை. நிதாயி மிகவும் கூச்சத்துடன், 'நான் உள்ளே வரவில்லை அம்மா; வெளியிலேயே நிற்கிறேன்; நான் கீழ் இனத்தவன்' என்றான்.

'ஏனப்பா நீ இந்த வராந்தாவில் குந்தலாம். கீழ்மகனாக இருந்தால்தான் என்ன?'

நிதாயிக்குக் கண்ணீர் வந்துவிட்டது. உண்மையில் அவள் யசோதை அன்னையே! பிருந்தாவனத்து அன்னைமார்கள், இந்த யசோமதியின் நாட்டைச் சேர்ந்த அன்னையர் எத்தகையோர் என்

பதை அவன் அறியான். ஆனுல் தன் நாட்டு அன்னையரைத் தவிர வேறு எவரும் யசோதைபோல் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த தேசத்தைச் சேர்ந்தவர்களான ஹிந்துஸ்தானி பேசும் மக்கள் வேறு நாடுகளுக்குச் செல்லுகிருர்கள்; ஓர் ஆண்டோ இரண்டு ஆண்டுகளோ அங்குத் தங்குகிருர்கள். ஆனுல் இப்படி அன்னை ஒருத்தியைப் பார்க்கத் துடிக்கும் பேராவல் அவர்களிடம் உள்ளதா? இந்த அன்னைமார் நிச்சயமாகத் தம் இடங்களில் நிம்மதியாகக் காலங் கழிக்கின்றனர். குழலூதும் தன் கண்ணனை யசோதை மாடுமேய்க்க அனுப்பிவிட்டு அவனை நினைந்து அழுது உருகுவதுபோன்ற அன்னையாக இவர்கள் இருப்பார்களா? என்ன அன்பாகப் பேசுகிருள். 'வாடா அப்பா என் கோபாலா'—இப்படி மனங்குளிர ஓர் அன்னை எங்கே கிடைப்பாள்?

அந்தப் புதுஅம்மா நிதாயியை ஒவ்வொரு கேள்வியாகக்கேட்டாள்; —என்ன பெயர்? எந்த ஊர்? எந்தத் தபால்ஆபீஸ்? எந்த ஜில்லா? இப்படி எல்லாம். கடைசியாகக் கேட்டவை—'உனக்கு யாரார் இருக்கிருர்கள்? கூடப்பிறந்தவர் எத்தனை பேர்? மணமாகிவிட்டதா?'

அப்பொழுது நிதாயின் மனக்கண்ணில் இருவர் தோன்றினர்—அந்த இளமச்சியும், வஸந்தியும். அவன் பெருமூச்செறிந்து, 'யாரும் இல்லை' என்ருன்.

அந்தப் புதியஅம்மா சற்றுப் பொறுத்து அவனை மீண்டும் வினவினுள்—'உன் கிராமத்தில் பிராம்மணர்கள் எத்தனை பேர்? வேறு ஜாதியினர் யார் யார் உள்ளனர்? சொல்லப்பா மாணிக்கம். எந்த ஸ்டேஷனருகில் உங்கள் ஊர்? போன வருஷம் விளைச்சலெல்லாம் எப்படி? வேறு என்ன என்ன பயிர் செய்வார்கள்? மழை சரிவரப் பெய்ததா?'

இப்படிக் கேட்கும்போது அவளுடைய கண்கள் எதையோ நோக்கிக் கனவு காண்பதுபோல் தோன்றியது.

'மழை நாளில் ஊர் சேருக இருக்குமா? உங்கள் பக்கத்தில் தென்னைமரம் அதிகமா, பனைமரம் அதிகமா? மீனெல்லாம் மலிவா? எந்த மீன் அதிகம் கிடைக்கும்? உங்கள் ஊர்ப்பக்கம் நல்ல பொரி கிடைக்குமா?'

நிதாயி ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்லிக்கொண்டே வந்தான். அத்துடன் அவன் மனத்திரையில் பல சித்திரங்கள் எழுந்தன.

'உங்கள் கிராமத்து அருகில் ஆறு ஏதாவது ஓடுகிறதா? பெரிய குளம் இருக்கிறதா? ஆ! ஆ! நான் அந்த மாதிரி குளங்களில்

குளித்து எத்தனை நாளாகிறது? குளத்திலே தாமரை பூத்திருக்கிறதா? காய் கீரை வகைகள் கிடைக்குமா?'

நடுநடுவே அவளுடைய கேள்விகள் நின்றுவிடும். அவள் எங்கோ நினைவுகள் படர வாளாயிருப்பாள். ஒரு வேளைத் தன் ஊரையும் வாசலையும் குறித்து ஏங்கினாளோ என்னவோ? ஒவ்வொரு விஷயம் நினைவுக்கு வந்து அவள் கேட்கும்போது சங்கிலித்தொடர் போல் மற்றவையும் அவன் மனக்கண்முன் நிழலாடின.

'உங்கள் ஊரில் முருங்கைக்காய் நிறையக் காய்க்குமா?... வெற்றிலைத் தோட்டம் உண்டா? தாழம்புதர்களில் பாம்பு நிறைய வளையவருமே? நாகப்பாம்பு நடமாட்டம் அதிகம் என்று சொல்வார்களே அந்தப்பக்கம்? நதியோரத்திலும் நத்தை மேயவருமாமே? பார்ப்பார மைனாக்கள் இருக்குமே?[1] பஉ கதா கஓ என்று கூவும் பறவை இருக்குமே? சோக் கேலோ கூட்டமாக வருமே? கிருஷ்ண கோத்தா ரே பக்ஷி வேறு? இதைச் சிலர், கிரஸ்தேர் கோக்கா ஹோக் என்பர். அதன் உடல் நிறம் மஞ்சளாக இருக்கும், தலைப் பக்கம் கறுப்பு, அலகு செக்கச் செவேலென இருக்குமே? பேனே பஉ என்றும் அதைச் சொல்லுவோம் நாங்கள்'

சட்டென டாகுருனின் கண்கள் கலங்கின. அவள் சற்று நேரம் பேசாமல் இருந்தாள். பலபலவென்று கண்களிலிருந்து நீர்த் துளிகள் உருண்டன.

நிதாயி, அவளுக்கு எந்தக் கேள்வியும் போடத் துணியவில்லை. ஆனால், கிருஷ்ண கோத்தா ரே (கிருஷ்ணன் எங்கேயடீ) என்ற பறவையின் பெயரைச் சொல்லுகையில் அவளுடைய கண்களில் நீர் துளித்ததைப் பார்த்து, அவளுடைய கண்ணன் எங்கேயோ போய் விட்டான் என்ற எண்ணமே அவனுக்குத் தோன்றியது.

டாகுருன் மேலும் சொன்னாள்—'யசோதை தன் கண்ணனை நினைந்து அழுதுகொண்டிருந்தாள். அப்போது மஞ்சள் அறைத்துக் கொண்டிருந்தாள். மஞ்சள் விழுதிலிருந்து ஒரு பறவையைப் பண்ணினாள். அந்தப் பறவையின் தலையில் அவளுடைய கண்ணீர்த் துளியொன்று சொட்டியது. அந்த வெம்மை நீரால் அதன் தலை கறுத்துவிட்டது. அந்தக் கண்ணீரில் ரத்தமும் கலந்திருந்தது.

---

[1] வங்காளத்தில் காணும் சில பறவைகளின் பெயர். இவை கூவுவது மேற்கொண்ட சொற்களைப் போலவே ஒலிக்கும். இவற்றின் பின் சில கதைகள் உலவுகின்றன. நம் நாட்டிலும் இதேபோல்—'வெற்றிலைச் செட்டி பொறு பொறு' என்பதுபோல் மணிப்புரு. 'வெட்டிக் குத்திச் சுட்டுப் போடு' என்று மயானத்துப் பறவையான கோட்டான் கூவுவதுபோல் இருக்கும்.

அதனுல் அதன் அலகு சிவப்பாக மாறியது. அந்த மஞ்சளில் பண்ண பறவையைப் பறக்கவிட்டு, செம்போந்தே, சென்று என் கருமுகில வண்ணனைத் தேடி வா என்ருளாம். அந்தப் பட்சி எங்கெங்கோ அவனைத் தேடி, கிருஷ்ண கோத்தாரே என்று அலைந்ததாம்...அது என்றுமே அப்படிக் கூவி அழைக்கிறது'

இதைக் கேட்டதும் நிதாயின் கண்களிலும் நீர் அரக்கியது.

அந்த டாகுருன் அம்மா தொடர்ந்து, 'என் கண்ணன் போயே போய் விட்டான் அப்பா. இந்த உலகில் எனக்கு வேறு யாருமே இல்லை. அதனுல் விச்வநாதபாபாவின் சரணத்தை அடைந்தேன். இராதுபோனுல் அந்த மாதிரி கிளிகொஞ்சும் ஊரிலிருந்து இங்கு வருவேனு?' — பாதியில் அவளால் பேசமுடியவில்லை. துயர் தொண்டையை அடைத்தது. மீண்டும் கேள்விகளை அடுக்கினுள்— 'நீ காசிக்கு யாத்திரையாகக் கிளம்பினுயா? இந்த வயசிலா யாத்திரை? வேறுவிதமாக நினைத்துக் கொள்ளாதே. உங்கள் ஜாதியில் இப்படி எவரும் கிளம்பியதில்லையே யென்றுதான் கேட்டேன்'

இரு கைகளையும் கூப்பி நிதாயி, 'பூர்வஜன்ம வினையோ, இல்லை நான் செய்த நல்வினையோ என்னவோ, இராவிட்டால்—' என்று மிகுதியைச் சொல்லாமல் நின்ருன். அவள் அதற்கு, 'நீ என்னவோ சொல்லப் போனுயே?' என்று கேட்டாள்.

'உங்களிடம் நான் ஒளிப்பானேன் அம்மா? என் தந்தை, தாய், தம்பி, மாமன், சிற்றப்பன் எல்லோரும் பயங்கரக் கள்ளர்கள். ஜெயி லுக்குப் போனவர்கள். அந்த வம்சத்தில் பிறந்தவன் நான்' என்றதும் நிதாயி நின்ருன். சில கணம் கழிந்த பிறகே அவன் தொடர்ந்தான்—ஆனுல் அவமானமாக இருந்தது அவனுக்கு— 'கவிவாலா பாட்டுக்களைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் அம்மா. கவிவாலாக்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுப் பாடுவார்கள்; பார்த்ததில்லையா?' என்ருன்.

'தெரியுமப்பா—எத்தனையோ பார்த்திருக்கிறேன். எங்கள் ஊரில் நவான்னத்தின்போது பாரோயாரி அன்னபூரணி பூஜை நடக்கும்.[1] அப்போது இந்தப் பாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்வார்கள். துர்காபூஜையில், ஜாத்ராகானம்...கிருஷ்ண லீலை...கூத்து எல்லாம்.

[1] புதிதாய் அறுவடையாகி வீட்டிற்குத் தானியம் வரும்போது நடத்தப்படும் பூசை. பன்னிருவர் கலந்து ஆற்றும் பூசனை. இருவர் சேர்ந்து புராணக் கதைகளைச் சுரத்துடன் பாடுவது யாத்ராகானம். அதே போல் கண்ணன் திருவிளையாடல்களைப் பாடுவது கிருஷ்ணலீலை.

நீலகண்டனின் பாட்டு— ஸாதே கோ தோர் கோபால் சாஇ கோ? சோன் யசோதே (குட்டன் கோபாலனை நீ சமாளிப்பாயோ?— கேளடி யசோதே)—அந்தப் பாட்டுக்களை எப்படி மறப்பேன்? மனஸார் பாஸான்.[1]...மனஸாபூஜையின்போது நடக்கும் இருபத்து நாலுமணி நேரமும் கீர்த்தனம்[1] முழங்கும். பாஉல், பைராகிகள் கஞ்சிராவைத் தட்டிப் பாடிக்கொண்டே பிச்சைக்குப் போவார்கள், —ஆமி ஜதி ஆமார் ஹதாம் குடியே பேதாம் ஹேமேர் கடா (நான் நாணுகிவிட்டால், அந்தப் பொன் நிரம்பிய புதையல் எனக்குக் கிடைத்திடுமே). ஆகா... என்ன மாதிரி தத்துவ ஆழமுள்ள பாடல்கள்! அந்தக் கீர்த்தனப் பாடல்களைத்தான் சொல்லு— அமிய மத்தியா கேவா லாவணி துலிலோ கோ, தாஹாதே கடிலோ கோரா தேஹ்—(கடைந்தெடுத்த நவநீதத்தை வைத்து அந்த கோராவின் வடிவைச் சமைத்தது யாரோ?) கோராசாந்தின் (சைதன்யர்) உடம்பை அமிர்தத்தைக்கொண்டே பண்ணியிருக்க வேண்டும். அந்தப் பாடல்களிலும் அமுதம் சொட்டுமே... நான் கேட்காத பாட்டில்லை'

நிதாயி வாயடைத்து நின்றான். இதற்குமேல் தன்னை ஒரு கவிவாலாவாகச் சொல்லிக் கொள்ள அவனுக்குத் துணிவு பிறக்க வில்லை.

அந்த முதியவள் வினவினாள்—'நீ இந்தக் கவிவாலா கோஷ்டியில் உள்ளவனா? உனக்கே பாடத் தெரியுமா?'

கைகூப்பி நிதாயி, 'ஆம் அம்மா, ரொம்ப மட்டமான கவிவாலா நான். அம்மாவைப்போல் நான் அப்படிப் பெரிய கவிவாலா அல்ல. நான் ஜுமுர் கோஷ்டியில் பாடுபவன்' என்றான்.

'இருக்கட்டுமே—நீயும் பாடகன்தானே! அதனால்தான் தீர்த்த யாத்திரையாக வந்திருக்கிறாய்' என்றாள் டாகுருன்.

சற்றுப் பொறுத்து நிதாயி தொடர்ந்தான்—'ஊருக்குத் திரும்பிப் போவதென்ற எண்ணத்தில் நான் இந்த யாத்திரை செய்யவில்லை. பகவானுடைய சந்நிதியில் பாடிக்கொண்டே... நிற்காமல் போய்க் கொண்டே என் ஆயுளைக் கழிக்க வேண்டுமென்ற ஆசை...'

அம்முதியவள் வெகுநேரம் கம்மென்று இருந்தாள். 'அப்படி யானால் உனக்குச் சுகமே ஏற்படாது அப்பனே. நீயோ கவிவாலா; பாட்டுப்பாடி ஜனங்களின் மனத்திற்கு ஆனந்தத்தைத் தருபவன்; அவர்களைச் சிரிக்க வைப்பவன்; எவரையும் கண்ணீர்ச் சிந்தும்படி செய்பவன். உனக்குச் சம்மானமெல்லாம் வரும்... மெடல் போடு வார்கள்... புகழ்ந்து பாராட்டுவார்கள்... இதிலேதானே குதூகலம்

ஆனந்தமெல்லாம்' என்றதும் அவள் நின்ருள். 'பிரபஞ்சத்தில் நீ எங்கே போனுல்தான் என்ன, சுகம் என்பதே கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும், விச்வநாதன் கிருபையால் வந்தாலும் உன்னுடைய தொழிலிலேயே அதைப் பெறுவாய்' என்ருள்.

பிற்பகலில் அவன் இந்த அம்மாளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான். இதற்குள் அவன் தன்னைப் பற்றிய விஷயங்களைச் சொல்லியாயிற்று. ராஜா... விப்ரபதன்... ஏன் வஸந்தியுந்தான்—இவர்களைப் பற்றியும் கூறியாயிற்று. ஆனுல் அந்த மச்சியின் விஷயத்தைதான் அவன் எடுக்கவில்லை. அந்த டாகுருன் அம்மாவைப்பற்றிய விஷயங்களையும் அவன் தெரிந்து கொண்டான். அவளுக்குத் தமர் என்பவர் எவருமே இல்லை. தன் ஒரே மகனைப் பறிகொடுத்துவிட்டுக் காசியில் இறைவன் நிழலில் வந்து தங்கியிருக்கிருள். ஊரில் அவளுடைய பங்காளி, தாயாதிகள் சொத்து உடைமைகளைக் கைப்பற்றிக் கொண்டனர். ஏதோ மாதம் பத்து ரூபாய் அனுப்புகிருர்கள்; அதுவும் சரியாக வருவதில்லை. அவள் தன் கதையைச் சொல்லுகையில், 'இந்தப் பாழும் வயிற்றுக்காக அவர்களுடன் நான் சண்டை போடவேண்டுமா? ஒரு வேளை உண்டு வயிற்றைக் குறைத்துக்கொண்டால், ஒரு மாசத்துக்கு வருவதை வைத்துக்கொண்டு இரண்டு மாசம் தள்ளலாமே... உபவாசம், பட்டினி, பாராயணம் எத்தனையோ இருக்கிறது' என்ருள்.

நிதாயிக்கு, இதைக் கேட்கக் கஷ்டமாகவே இருந்தது. 'இந்த அம்மா ஒருவேளை பட்டினிக் கிடப்பவளோ—எனக்குத் தன் பாகத்தில் பாதி கொடுத்துவிட்டாளோ... அதுவும் சிரித்த முகமாகவே போட்டாளே...' என்று நினைத்துக்கொண்டு அவன் தொலைவிலிருந்தபடி தரையில் விழுந்து அவளைச் சேவித்தான். 'கொஞ்சம் பின்னுக்குப் போங்கள். உங்கள் கால்பட்ட இடத்தில் உள்ள துகளை எடுத்துக் கொள்கிறேன்' என்ருன்.

அப்போது அவள்—'என்ன காலைத் தொட்டுவிடாதே... நான் ஸ்நாநம் பண்ணவேண்டி வரும்' என்ருள்.

'இல்லை அம்மா' என்று அவள் காலைத் தொடாமலே வணங்கினுன் நிதாயி.

'சத்திரம் இங்கே வேண்டியது இருக்கு... இடம் கிடைக்கும்... என் இடத்தைத்தான் பார்த்தாயே... இங்கே பெண்கள் இருப்பார்கள்... அதனுல்தான்' என்ருள் டாகுருன்.

நிதாயி சிரித்து, 'இந்த தெய்வக் காட்சி பார்த்தாயிற்றம்மா... நான் இங்கே தங்கமாட்டேன். நான் செய்த புண்ணியந்தான், இதோ இங்கேயே என் அன்னபூரணி மாயியைத் தரிசனம் செய்து விட்டேன்' என்றான்.

அவள் சொன்னாள்—'உனக்கோ இளம் வயசு; நீ ஒரு கவிவாலா. ஊருக்கே திரும்பிப் போ...சொன்னேன்...நல்ல குரல் உனக்கு...உன் பாட்டும் நன்றாக இருக்கிறது... ஊருக்குத் திரும்பினால் உனக்குக் கௌரவமான வாழ்வு ஏற்படும். வங்கநாட்டுப் பாட்டை இங்கே யார் கேட்கப் போகிறார்கள். அந்தப் பக்கம் வங்காளிகளின் குடும்பங்கள் நிறைய இருக்கின்றன. அங்கேதான் உன் பாட்டை விரும்புவார்கள்...ஏதாவது கிடைக்கும். ஆனால் வயிற்றுக்கு மட்டும் இருந்தால் போதுமா, இந்த ஸம்ஸார வாழ்க்கையில்?' என்றதும் ஒரு மழுங்கிய சிரிப்பு அவள் முகத்தில் உலவியது.

நிதாயின் மனம் இதனைக் கேட்டுச் சற்று வருந்தியது. இதைப் பற்றியே அந்த அம்மா இரண்டுதரம் கூறிவிட்டாள்.

மாலை நேரம் விச்வநாதர் ஆலயத்தின் முகமண்டபத்திற்கு வந்த போது அந்த அம்மா சொன்னதன் உண்மை அவனுக்கு விளங்கியது. அங்கே ஒன்று நிகழ்ந்தது. மண்டபத்திலிருந்து கோயில் விமானத்திலுள்ள கலசத்தையும், கொடியையும் நோக்கினான். பொன் தகடுகள் வேய்ந்த கோயில். வானில் முழுநிலா பரவியிருந்தது. அந்த வெள்ளி ஒளியில் பளபளத்தது தூபி.

ஆரதி ஆராதனை ஆகும் வேளை. பல வண்ணமாகப் பகட்டாடை அணிந்து இருக்கும் சேவார்த்திகளின் கும்பல். ஆயிரம் குரல்கள் ஒலிக்கும் 'ஜய் விச்வநாத்' கோஷம். அந்தக் குரல்களுடன் நிதாயின் குரலும் சேர்ந்தது.

அவன் மனத்துள் ஒரு பாட்டு கருயிட்டது—

[1] 'பிக்காரி ஹயேச்சே ராஜா
மன ரே ஆமார், தேக் ரே நயன் மேலே
ஸாத் மஹலா ஸோனார் தேஉல்
கடேச்சே ஸே ஸ்மசான ஃபேலே'

சுரத்துடன் குரல் விட்டுப் பாடத் தொடங்கினான். ஆகா...! தன் முழு அந்தக்கரணத்துடன் அவன் பாடி நெக்குருகினான்.

---

[1] மனமே, கண்ணாரக் காண்பாய்... ஆண்டி இங்கே அரசனாகிவிட்டான்... மயானத்தைத் துறந்து ஏழடுக்குப் பொன் மாளிகையிலே இடம் கொண்டு விட்டான்.

பாட்டு முடிந்தது. வந்திருந்த ஜனங்களில் ஒருவன் என்னவோ சொன்னுன். அது நன்ருகக் காதில் விழவில்லை. அவனைப் பார்த்து நிதாயி, 'என்னவோ சொன்னிர்களே ஐயா?' என்ருன்.

மற்றெருவன் சிரித்து, வங்காளியில் சொன்னுன்—'நீ வங்கதேசத் தவன்தானே? ஊரைவிட்டு எப்போது வந்தாய்?'

'ஆமாம் ஐயா...'

'அவர் உன்னை ஒரு ஹிந்தி பஜனை பாடச் சொல்லுகிருர்... உன் குரல் ரொம்ப இனிமையாக இருக்கிறதாம்... உன்னிடம் ஹிந்தி பஜனைப் பாட்டைக் கேட்க ஆசைப்படுகிருர்'

'ஹிந்தி பஜனு?'—என்றதும் நிதாயி கைகுவித்து, 'அடியேனுக்கு ஹிந்தி பஜன் எதுவுமே தெரியாது' என்ருன்.

அந்த வங்காளி ஹிந்தியில், தன் நண்பனிடம் சொன்னதை மேல் வாரியாகத்தான் புரிந்துக் கொண்டான் நிதாயி—'ஹிந்தி பஜன் எனக்குத் தெரியாதென்று அவனிடம் சொல்லியிருப்பான்'

ஜனங்கள் அவ்வளவாக இல்லை. இந்தக் கூட்டத்தில் தேவ சாந்நித்தியத்தில் நிற்க அவனுக்கு வெறுப்பாகவே இருந்தது.

கோயிலைவிட்டுக் கங்கையின் கட்டத்திற்கு வந்தான்.

அவன் கண் குளிர்ந்துவிட்டது. இங்கே இரவு பகல், ஒரே விழாக் கோலந்தான். அன்னை கங்கையின்கரையில் வாழ்க்கையின் சந்தை கூடுகிறது! இந்தப் பக்கம் மணிகர்ணிகை கட்டம்—அந்தப் பக்கம் ஹரிச்சந்திரன் துறை—அங்கே இடையருது ஈம ஒள்ளெரி சுடர் விட்டபடி இருக்கிறது. [1]'ராம் ராம் ஸத்த ஹய்' என்ற சவம் தூக்கிகளின் குரல் கேட்கிறது.

இந்தக் காசியில் ஒருவன் இறந்து, அவன் உடல் பஸ்மமாகி (சாம்பல்) விட்டால் அவனுக்குச் சிவலோகப் பிராப்தியாம்—சிவராம சிவராம சிவசம்போ! என்னவோ தோன்றியது நிதாயிக்கு. தசாச்வமேத கட்டத்திலிருந்து, வழியில் போவோரைக் கேட்டுக் கொண்டே மணிகர்ணிகை கட்டத்தை அடைந்தான். வந்ததுமே அவன் தன் மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து பித்தளைமோதிரம் ஒன்றை வெளியே எடுத்தான். வஸந்தி அணிந்தது—அவளுடைய ஒரே ஞாபகச்சின்னம்; இது ஒன்றே அவனிடம் இருந்தது. அதை இந்த ராஜா ஹரிச்சந்திரன் (நிதாயி) அந்தக் கட்டத்தில் ஓடும் கங்கையின் நீரிலே வீசி எறிந்துவிடுவான்...இந்தப் புண்ணியச் செயலால் வஸந்தியின் பாபங்கள் விலகிப் போகும்...'வஸன் நீ சொர்க்கம் போ...'

[1] ராமநாமம் ஒன்றே அழிவதில்லை. அது உண்மையானது.

ஆனால் அவன் அதைப் போடச் சென்றும் போட முடியவில்லை. கைக்குள் அதனை அடக்கியபடி இறங்கியவன், ஓட்டமாக ஏறி வந்தான். வஸந்தியின் ஞாபகத்திற்கு அவனிடம் வேறு எதுவு மில்லை. இருக்கட்டுமே...இருந்துவிட்டுப் போகட்டுமே...அவன்உயிர் உள்ளவரை அது இருக்கட்டுமே... காசி வந்ததிலிருந்து அவனுக்கு அவளைப் பற்றிய நினைவு வரவில்லை; கனவில்கூட வரவில்லை. காடோவா துறையில் அவன் கண்களை மூடியிருக்கையில் வஸந்தி யைக் கண்டான். ஒரு பாட்டையும் கட்டினான்—

'மரண் தோமார் ஹார் ஹலோ யே மனேர் காச்சே.

(என் மனத்திடம் நீ தோல்வியுற்றாய் ஏ மரணமே!) 'நீ யாரைக் கொண்டு போனாயோ, அவள் மனத்துள் பத்திரமாக இருக்கிறாள்... மனத்துள் வாழ்கின்றாள்...' என்று நினைத்துக்கொண்டான்.

ஆனால் இப்போது அவள் எங்கே? ஓ! அவன் மனத்துள் படர்ந்த அந்தக் கதம்ப மரமும் (சரக்கொன்றை) உலர்ந்து வருகிறதே. வஸந்தியின் முகங்கூட மழுங்கியே விட்டதே! அவனுடைய கண் களில் நீர் துளித்தது. மனத்துள் அந்தப் பாட்டையே மீண்டும் இசைத்தான்—

'ஏஇ கேத மோர் மனே |
பாலோபேஷே மிட்லோ நா ஸாத்
குலாலோ நா ஏ ஜீபனே |
ஹாய்! ஜீபனே ஏதோ ச்சோடோ கேநே—
ஏ புவனே ?'

மோதிரத்தைத் தன் சுண்டு விரலில் அணிந்து கொண்டு திரும்பி னான். தசாச்வமேத கட்டத்திற்கு வந்தான். மெல்ல மெல்ல அவனுடைய மனம் குளிர்ந்தது. நிரம்ப அழகிய இடம் இந்த தசாச்வமேத கட்டம். இதுபோன்ற மகிமை வாய்ந்த தீர்த்தம் வேறில்லை. எத்தனை தேசத்து மாந்தரின் கூட்டம்தான் அங்கே! எத்தனையோ மந்திர கோஷம்! பாட்டுக்கள் தாம் எத்தனையோ! அந்த தானங்கள் தாம் கணக்கில் அடங்கா... எத்தனை வேண்டுதல்; எத்தனை விதமான யாசகம்...எத்தனை கோரிக்கைகள்...துயரின் நெக்காடல் எத்தனை...எத்தனை அகலமான படித்துறை...இந்த இடமே மேல்...மிகுதி நாட்கள் பாடல் பாடிப் பிச்சை எடுத்தால் போகிறது!

மறுநாள் பிற்பகல் ஒரு சவுக்கத்தைப் பிரித்துப் போட்டுக் கட்டத்தின் ஒரு பக்கமாக அமர்ந்து அவன் பாடலானான்—

'ஏஇ கேத மோர் மனே...'

அவனுடைய குரலோ தேன் இனிமையது. கூட்டம் கூடிவிட்டது, பாட்டைக் கேட்க. காசும் குவிந்தது பாட்டுப்பாடி... அவனை அணுகி ஒருவன், 'காசிக்கு வந்து நீ வேதனைப் படுவானேன் தம்பி?' என்றான்.

ஒரு மடந்தை, 'அப்பனே நல்ல பாட்டாகப் பாடேன்... ஒரு மகாஜனபதம் பாடு — [1] ராமப்ரஸாதின் காளீகீர்த்தனம் ... கமலா காந்தரின் ஒரு பாசுரம்...' என்றாள்.

அவன் சட்டென ஒரு பாட்டைப் பாடினான்—

[2] 'ஆமார் காசீ ஜேதே மன கஇரே?
ஸர்வநாஷீ ஏலோகேஷீ—ஸே ஜே ஸங்கே
ஸங்கே ஃபேரே?'

பாட்டை முடித்ததும் அவன் மனம் கலக்கமுற்றது. அவனுடைய உள்ளம் ஆழ்ந்த வேதனையால் எதன்மீதும் வெறுப்புக் கொண்டது. அவனுக்குத் தன் ஊர் சண்டிமாதேவியின் ஞாபகம் வந்தது. ராமப் பிரசாதின் விரிகூந்தலாளைப்போல் சண்டிதேவியும் இந்தக் காசியில் அவன் அருகிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறாள். அந்த விப்ரபதன் அலைகிறான்... அந்தச் சித்தி, பிடில்காரன் வட்டமிடுகின்றனர்... இந்தக் காசியைவிடத் தன் கிராமமே மேலெனத் தோன்றியது அவனுக்கு. காசியில் பிழைப்பிற்காக அவன் வேதனைப் பட வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் வாழ்வைக் குறித்து அவன் வேதனைப் படாமல் எப்படி இருப்பான்? நிதாயி கம்மென்று உட்கார்ந்திருந்தான்.

கோடை நாள் மாலைநேரம். தாள முடியாது வெயில்...அன்று இறுக்கம். கட்டங்களிலும், அதன் படிகளிலும் ஜனங்கள் போவதும் வருவதுமாய் இருந்தனர்; வம்பளந்து கொண்டுதான் இருந்தனர். ஆனால் நிதாயிக்குப் புறம்பானவை இவை. அவர்கள் பேச்சுக் குரல் தான் வந்தது. அதன் பொருள் தெளிவாக இல்லை... அவனுக்குப் புரிபடவில்லை. அருகில் இருந்தும் அவர்கள் வேறுஉலகத்து மனிதர் போலவே தோன்றினர்.

---

[1] ராமப்பிரஸாத ஸேன்; காளியின் அருளால் பல பக்திச்சுவை பாடல்களைப் பாடியவர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காளீ பக்தராவார். அதேபோல் கமலாகாந்த ஸேனின் பாசுரங்களும் காளீ விஷயமானவை.

[2] காசிக்குச் செல்ல என் மனம் ஒப்பவில்லையடா; அந்தப் பாழாய்ப்போனவள் அந்த விரிகூந்தலாள் (காளீ) என்னை விடாமல் அலைக்கின்றாளே.

அவனுக்குப் பிடிக்கவில்லை; இந்தச் சூழல் சுத்தமாகப் பிடிக்க வில்லை. காசிதான்; அங்கு விச்வேச்வரன்தான் ஆட்சி புரிகிருன்; சொர்க்கத்திற்குச் செல்லும் தோரண வாயில்தான். இருந்தாலும் அவனுக்கு ஏற்கவில்லை அவ்விடம். மகாஜனங்களின் பதாவளி அவனுக்கு நன்ருகத் தெரியாது. சொந்தப் பாட்டைத் தவிர, வேறு எந்தப் பாட்டு நன்ருக இருந்தாலும் அதைப் பாட அவன் இஷ்டப் படவே இல்லை. அவனுக்கும் அந்தப் பழம்பாடல்களைப் போலப் பாட வரவில்லை. உள்ளத்தில் ஆனந்தம் பொங்கினுல்தானே? அது அவனுக்கு வருவதாகத் தெரியவில்லை. கவிவாலாப் பாட்டு, அந்த ஒளி விழா, மக்கள்கூட்டம் இவையாவும் அவனுக்குக் கசந்து விட்டன.

சில சமயம் அந்த டாகுருன் அம்மா சொன்னது ஞாபகம் வரும்—'நீ உன் ஊருக்கே திரும்பிப் போ' என்ற வார்த்தை. அவன் இதை உன்னி நெடுநேரம் யோசனை செய்வான். இப்படி எத்தனை நேரம் சென்றதோ? சட்டென, எல்லா கலவரச் சப்தமும் அடங்கி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. சிந்தனை கலைந்து அவன் நாற்புறமும் நோக்கினுன். துறையில் எவருமே இல்லை. எல்லோரும் தம் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். இரண்டொரு பேர் அயர்ந்து படிகளில் நித்திரை செய்துகொண்டிருந்தனர். அவனும் படியில் படுத்துக் கொண்டான். இந்த நள்ளிரவில் முன்பின் அறியாத அந்த நகரில் வழிதெரிந்துகொண்டு எப்படிப் போவது? படிகளுக்குக் கீழே கங்கையின் நீரோட்டம் மெல்லொலி செய்து விரைந்து கொண் டிருந்தது. ஏதோ புரிபடாத மொழி போல அவ்வொலி கேட்டது. காடோவா, நவத்வீபம் இங்கெல்லாம் இந்தக் கங்கையின் ஒலியை அவன் கேட்டிருக்கிருன்...அதன் மொழி அவனுக்குத் தெளிவாகப் புலப்படும். இங்கோ, புரிபடாத-ஒரு குழப்பான மொழியிலேயே அது பேசியது.

மீண்டும் அந்த அம்மா சொன்னது அவன் மனத்துள் ஒலித்தது. அவன் எத்தனையோ புட்குரல்களைக் கேட்டிருக்கிருன் அங்கே. ஆனுல் ஒரு 'பஉ கதா கஓ'வோ, 'சோக் கேலோ வோ', 'கிருஷ்ண கோத்தாரே வோ' இங்கே பாடிப் புலம்பவில்லை. இங்கே காக்கையின் கரைவுகூட வித்தியாசமாக இருந்தது. டாகுருன் சொன்னது உண்மையே.

சட்டென அவனுக்கு நினைவு வந்தது,...இந்த விச்வநாதன் இங்கே ஆட்சி செலுத்துகின்றவன்...இவனும் இந்நாட்டு மொழியில்தானே பேசுவான்? இவனுக்கு ஆற்றும் பூசனையின் மொழி புரியவில்லையே.

இந்த ஹிந்திமொழியில் பஜன் கேட்க இக்கடவுளின் மனம் ஆர்வம் கொள்கிறதா? இந்த அன்னபூரணித் தாயும் ஹிந்தியில்தான் பேசுகிருள். பசி வருத்தும்போது நிதாயியை இவள் ஏதாவது கேட்டால், அவன் ஹிந்தியில்தான் பதில் சொல்லவேண்டுமா? இந்த விச்வநாத புரியில் யார் கேட்க அவன் பாடுவது? மீண்டும் அவனுக்கு நினைவு வந்தது. அந்தச் சண்டிமாதேவிதான்—கூடவே அந்தக் கிழச் சிவனும். அவளோ ஒரு பைத்தியக்காரி— அந்தச் சிவனோ ஒரு 'பம்போலாநாத்' (எதையும் மறந்து இருப்பவன்).

[1] 'ஓ மா திகம்பரீ நாசே கோ'

சப்பரத்தில் அமர்ந்து அதைச் சுமப்போர் அசைக்க அந்தப் பைத்தியக்காரி ஆடுவாள்—

[2] ஹாடேர் மாலா கலாய், போலா நாசே தேய்யா தேய்யா...'

இந்த உலகை மறந்த அச்சுடலை ஆண்டியும் ஆடுவான். அந்த [3]காஜன் பக்தர்களும் கூடவே ஆடுவார்கள்...அதைப் பார்க்கும் அம் மக்கள் கூட்டமும் தம்முள் ஆடுவர். மீண்டும் அந்த நாசக்காரி விரி குழலாள் சண்டிதேவி, அவன் அறிந்த யாவரும் கண்முன் வந்து நின்றனர்.

முதலில் அந்த ஜுமுர் கோஷ்டியினர் அவன் நினைவில் நின்றனர். நிர்மலா தங்கச்சி வந்தாள். அப்புறம் லலிதா. சித்தி வந்து 'என்னப்பா' என்று சொல்வதுபோல் எதிர்ப்பட்டாள். பிடில் காரன், பின்பாடகன், டோலக் வாசிப்பவன், ராஜா, கடைக்கார மாமா, விப்ரபதன்—எல்லோரும் கும்பலாக வந்தனர். மைத்துனி அவன் மனத்தில் தெளிவாகத் தோன்றிஞள். அந்த கிருஷ்ண சூடா மரத்தடி; கொல்லை மேட்டுப் பயிர்; திறந்த மந்தை வெளி; அந்த வைகாசிச் சூருவளி கலந்த பெருமழை; இருண்டு வரும் வானம்; கண்ணைச் சிதறச் செய்யும் மின்வெட்டு; கட் கடா என்று உருண்டு செல்லும் இடியின் கர்ஜனை; சோவெனப் பெய்யும் மழைத்தாரை; பூர்ணிமையின்போது நடக்கும், தருமராஜா ஜாத்திரை; நள்ளிரவில் தோட்டங்களில் பக்தர்கள் கனிகொய் படலம்—இப்படி எத்தனையோ பழைய காட்சிகள் மீண்டும் அவன்

---

[1] அம்மை திகம்பரியே அண்டம் குலுங்க ஆடிடு.

[2] என்புமாலை அணிந்து தெய்ய என்று அந்த நக்கனும் ஆடுகின்ருன்.

[3] சிவனைக் குறித்த விழா.

மனக்கண்முன் எழுந்தன. பாபுக்களின் அந்தப் புதர்மலிந்த தோட்டத்திலே, நாமம் வரிந்த மலைப்பாம்பளவு நாகம் உலாவும்; கொம்பேறிமூக்கன் கிளைக்குக் கிளை தாவும், தொங்கும். ஆனால் பக்தர்கள் 'ஜய் தர்ம ராஜா' என்று கூச்சல் போட்டு மரக்கிளைகளில் ஏறும்போது, இவை கண்ணில் படாமல் ஒதுங்கிவிடும். அந்தத் தோட்டத்தில் உள்ள ஆலமரத்தின் கீழ் 'அரண்யஷஷ்டி'[1] தினத்தன்று ஊர்ப்பெண்கள் கூடிப் படையல் போடுவர். அவர்கள் நல்லாடை அணிந்து வரப்பு வழியாகச் சாரி சாரியாக வருவது, ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்த வரப்பு, நாற்றங்காலில் இளம்பயிர் பச்சைப்படாம் போர்த்த வயல்களை அறுத்துச் செல்லும். ஆடிமாதம் பிறந்து விட்டிருக்கும். வானில் மேகம் சேர்ந்துவிடும்; நீருண்ட மேகங்கள்— இதையெல்லாம் நினைக்கும்போதே அந்த 'பாரோமாஸி'ப்பாடல் நிதாயிக்கு ஞாபகம் வந்தது—

[2] 'வைசாகே ஸூர்யேர் ச்சடா—
ஜத ஸூர்யா—ச்சடா, காட் ஃபாடா
தத கடா கால வைசாகீர் மேகே—
லக்ஷ்மீ மாப்பேன் பீஜ தான்ய
சாஷ—க்ஷேதேர் லேகே.
புண்ய தரம்மாஸே—

[1] அரண்ய ஷஷ்டி அல்லது ஜாமாயி ஷஷ்டி என்று பெயர் அன்று சுமங்கலிப் பெண்கள் நல்மக்கட்பேற்றுக்காகக் காடுகளில் திரிந்து விந்த்யவாசினிக்குப் படையல் போடுவர். அதேநாள் வீட்டு மாப்பிள்ளைக்கு மரியாதைகள் செய்வது வழக்கம். இது ஜேஷ்ட சுக்லபக்ஷத்தில் நிகழும்.

[2] வையாசியில் (சித்திரையில்) வெய்யோன் கொளுத்தக் கட்டையும் பிளந்து விடும்...காலவைசாகிச் சூறைக்காற்று கடுகியே கிடுகிடுத்து வரும். திருமடந்தை தானியம் அளப்பாள் கரிசை கரிசையாக .. உழவர் ஏர் பூட்டுவர்...புண்ணியம் தரும் மாசமது...பௌர்ணமியில் தருமராஜனைப் பூசை செய்வர்...என் பிராணன் கதறுகிறது, விதியேயோ ? கட்டையைப் போல் என் மார்பும் வெடிக்கிறது. அப்புறம் ஜேஷ்டமாதம்.. மரத்தடியில் பெண்கள் சேர்ந்து அரண்ய ஷஷ்டி நோன்பு நோற்பர்... வீட்டு மாப்பிள்ளை வருவார் ; வீட்டுப் பெண் சிரிப்பாள்...புத்தாடை அணிவாள் ; பூத்து விளங்குவாள்... அப்புறம் தசஹரா (பத்துநாள் பண்டிகை) வந்திடும்...சதுர்புஜாவான கங்கையின் பூஜை...ஆற்றிலே கரை புரள வெள்ளம் போகும்...என் பிராணன் கதறுகிறது விதியேயோ.. கண்ணீர் என் மார்பில் வழிந்து ஓடுகிறது.

பன்னிரண்டு மாதங்களின் சிறப்பையும், அம்மாதங்களில் நடக்கும் கொண்டாட்டங்களையும் வருணிக்கும் இந்த 'பாரோ மாஸி' நாட்டுப் பாடல், மக்கள் இலக்கியத்தின்பால் படும். இது காவியத்தில் பருவகால வருணனையாகும்.

புண்ய—தரம் மாஸே—தரம் ஆஸே
பூர்ணிமாதே (ஸபே) பூஜே தர்மராஜாய்—
ஆமார் பராண காந்தே, ஹாய் ரே விதி'!
காட்டேர் மதன் வக்ஷ ஃபேடே ஜாய்.
தார்பரே ஜ்யைஷ்ட ஆஸே—
ஜ்யைஷ்ட ஏலே, விருக்ஷதலே
மேயேர் தலே அரண்ய ஷஷ்டி பூஜே.
ஜாமாயி ஆஸே, கன்யா ஹாஸே
ஸாஜேன் நாநா ஸாஜே.
தசஹராய் சதுர்புஜா—
தசஹராய் சதுர்புஜா கங்கா பூஜா,
ஏவார் ஸோஜா மாட் பாஸிபே வன்யாய்—
ஆமார் பராண காந்தே—
ஹாய் ரே விதி—சோக்கேர் ஜலே, வக்ஷ பேஸே ஜாய்.

இப்படியே ஆஷாட (ஆடி) தேர்த் திருநாள் வரும்... மாரிக் காலத்து மழை... [1] அம்புவாசியில் சண்டை... சிராவணமாதம் (ஆவணி) சோவென்று வானம் கிழிந்து வழியும் பெரும்பாட்டம். நெல் கவரிவீசும் நெடுங்கழனிகளைக் கடந்து சென்றால் பாபாஜியின் அக்காடாவில் பொற்ருப்பு விழா (தோல உத்ஸவம்)... இப்படி நினைவுச் சுருள்கள், சைத்திர (பங்குனி) காஜன் விழா வரைக்கும் விரிந்தன நிதாயிக்கு. அவனுக்குப் புதிய பாரோமாஸி பாட்டொன்று எழுந்தது—

[2] பச்சர் சேஷே—சைத்ர மாஸே—
திவ்ய ஹேஸே பஸேன் ஏஸே
அன்னபூர்ணு பூஜார் டாட்டே
பாண்டார் பரிபூர்ண, மாட் சூன்ய

[1] அம்புவாசி .. ஆடி மாதத்தில் ஆறு, நீர்நிலைகள் பூப்பு அடைவதால் பயிர்த் தொழில் நடக்காது. அப்போது மக்கள் வேடிக்கை விளையாட்டுக்களில் மனம் செலுத்துவர்.

ஆண்டு இறுதியில், (சைத்ர மாதம்) தெய்வீகச் சிரிப்புடன் அன்னபூரணி வந்து அமருவாள் ஆதனத்தில். நெல் களஞ்சியம் நிரம்பிவிடும்... வெற்று வயல் நிற்கும். எட்பூ எங்கும் வெளேரெனச் சிரிக்கும்... சிவலிங்கத்தின் சிரமதில் எண்ணெய் இராது ; சடைக் கற்றை வரண்டிருக்கும் ; உடம்பில் வெண்ணீறு பூசியிருக்கும் ! காஜனின் பூதங்கள் நடமிடும். என் பிராணன் கதறி அழுகிறது, விதியேயோ ! இறகடித்து எங்கேயாவது போக என் உள்ளம் அலைபாய்கிறது !

தில புஷ்ப ஃபுடேச்சே சுது மாட்டே—
தேல் நாஹி ஹாய் சிவேர் மாத்தாய்—
பர்லோ ஜடாய்—அங்கேதே ச்சாஇ
காஜனே பூத நாச்சாய்
ஆமார் பராண காந்தே—ஹாய் ரே விதி
பக்ஷ மேலே உடே ஜேதே சாய்.

பொழுது விடிவதற்காக அவன் காத்திருந்தான். அடிக்கடி காசியில் கண்ட அந்தப் புது அம்மாவைக் குறித்தே—' நீ என்னிடம் ஒளிக் கிருய் அம்மா, நீ என் ஊரிலிருந்த டாகுருன் அம்மாதான். என்னை மெல்ல ஊருக்கு அனுப்பவே இப்படிச் செய்தாய். உன் கட்டளை யைத் தலைமேல் கொண்டேன்...' என்று அவன் மனம் கூறிற்று.

எப்படியோ சில மாதங்கள் நிதாயி காசியில் காலம் கடத்தி விட்டான். அவன் ஒரு நாள் ரெயில் ஏறிவிட்டான். அவனுல் அங்கு இருக்க முடியவில்லை.

இந்த இரண்டு மாசமாய் அவனுக்கு நல்ல தூக்கமே வரவில்லை. அத்துடன் ஒரு திகிலினுல், உத்வேகத்தினுல் அவன் தளர்ந்து போயிருந்தான். அவனுக்குத் தூக்கமாய் வந்தது. மொகல்ஸராயி ஜங்ஷனில், எப்படியோ வேறு வண்டிக்கு மாறி இடம் பிடித்துக் கொண்டான். கூரைக்கு அணித்தாகத் தொங்குமிடம் ஒன்று காலியாக இருந்தது; அதில் படுத்தான். நிச்சிந்தையானுன். தன் பொன்னுன வங்கத்தை நோக்கி, தன் அன்னையின் மடிக்கே அவன் செல்கின்ருன்!

மறுநாள் காலையில் அவனுக்குத் தூக்கம் கலைந்தபோது, தனக்குப் பழக்கமான மொழி பேசுவோரின் குரல் கேட்டது. அவனை யாரோ இனிமை பயக்கும் குரலில் கூப்பிடுவது கேட்டது—

' எழுந்திரு, எழுந்திரு...'

' யார்...? யார்?'

நிதாயி வாரிச் சுருட்டி எழுந்தான்.

இல்லை, அவனுக்குத் தெரிந்தவர் எவருமில்லை; கூப்பிட்டது அவனை அல்ல. கீழ்ப் பெஞ்சியில் இடம் விடாமல் இருந்த ஆட்களைத்தான், புதிதாக வண்டியில் ஏறிய பிரயாணி அப்படி எழுப்பினுன்.

நிதாயிக்கு நல்ல மூச்சு வந்தது. வர வரத் தெரிந்த முகங்கள் வண்டியில் நிரம்பிவிட்டன. நிதாயி மேல்தட்டிலியிருந்து கீழே இறங்கினுன். புதிதாக வந்த பிரயாணிகளில் ஒருவரைப் பார்த்து—' மேலே வைத்து விடுங்களேன், உங்கள் சாமான்களை...' என்ருன்.

'வைக்கிறேன்'

நிதாயி அவருக்கு உதவி புரிந்து, சாமான்களை மேல் தட்டில் தள்ளினான்.

'ரொம்ப நல்ல பிள்ளையாண்டான்' என்று பிரயாணிகளில் ஒரு கிழவர் அவனை வாழ்த்தினார்.

நிதாயி ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். ஸ்டேஷனுக்கு வெளிப்புறமான காட்சிகள் அவன் கண்களைக் குளிரச் செய்தன. எல்லாம் தெரிந்த இடங்கள்—'நம் தேசத்துக்கு வந்து விட்டோம்... அதோ ஜன்னலுக்கு அப்பால் வங்காள தேசம்...' ராணீகஞ்சைக் கடந்தது வண்டி. அப்புறம் வர்த்தமானம். வெளியே ஆகாயத்தில் மேகம் கப்பிக் கொண்டிருந்தது.

வர்த்தமானில் வேறு வண்டி மாறினான் நிதாயி. இன்னும் இரண்டே மணி காலத்திற்குள் அவன் ஊரை அடைந்துவிடுவான். சண்டீதேவி...அந்தப் பழைய சிவன் !

அந்த ஆலயத்தில் அவர்கள் சந்நிதி முன்பு அவன் துதிப் பாடுவான்... க்ஷேத்திரம் க்ஷேத்திரமாகச் சென்று மேளாக்களில் தன் பாடல்களைப் பாடுவான்... தாரகேச்வரம்... காலிகாட் எங்கும். ஒவ்வொரு ஜில்லாவாகப் போவான், பாடிக்கொண்டே. தன் பாட்டை நிச்சயமாக விரும்பிக் கேட்பாரென அவனுக்கு நம்பிக்கை இருந்தது. அவனே ஒரு கோஷ்டியை உருவாக்கத் திட்டம் போட்டிருக்கிறான்... இப்போது அவனுக்கு ஒரு பெயர் இருக்கிறது; நல்ல வாய்ப்பு ஏற்படும். கவிவாலா நிதாயின் இன்சுவைப் பாடலைக் கேட்க மக்கள் திரண்டுவருவர்...அவன் அந்த ஆபாசமான 'கேஉர்' வழிக்கே திரும்பமாட்டான். காதலைப் பற்றிய பாட்டுக்களையே அவன் இனிப் பாடுவான்...

வஸந்தியை இழந்ததும் இந்த உலகமே அவனுக்கு வெறுத்து விட்டது. அந்த வேதனை அவன் மனத்திலிருந்து சற்றும் மாறவில்லை. வாழ்வு இத்தனை அற்பமா? அதன் வரம்பிற்குள் அவன் கொண்ட காதல் நிறைவேறாது போயிற்றே! அது வளர்வதற்கு இடம் இல்லாமல் போயிற்றே! காதல் பாட்டு; வெம்பிய உள்ளத்தின் பாட்டு... வஸந்தியின் நினைவு மலிந்த உருக்கமான பாட்டு...குயில் எங்கேயாவது வஸந்தத்தை மறக்குமோ? எக்ஸ்பிரஸ் வண்டி நின்றது. ஒரு ஸ்டேஷன் வந்தது—

'வர்த்தமான்... வர்த்தமான்'

வர்த்தமானிலிருந்து கிளைப்பாதையில் செல்லும் வண்டி. நிதாயி அந்த வண்டியில் ஏறிக்கொண்டான். அவன் மனத்துள் பாட்டுப்

புனையும் வேகம் எழுந்தது. கிராமத்துக்குச் சென்றதும் அந்தச் சண்டிதேவதை முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து சேவிக்க வேண்டும். அந்த வணக்கத்திற்காகவே ஒரு புதுப்பாட்டைப் புனையத் தொடங்கினான். அதைப் பாடியே அன்னைக்கு அவன் அஞ்சலி செலுத்தப் போகிறான். ஜயந்தி, மங்கலை, காளீ என்றெல்லாம் அல்ல ; தன் சொந்தப் பனுவலையே அவள் காலடியில் சமர்ப்பிக்கப் போகிறான்—

[1] 'ஸாடா தேமா—தேமா ஸாடா
கர்பாலானே சேலே ஏலோ
பேடியே விதேஷ்—விபூஇ பாடா.
தோர் ஸாடா நா பேலே பரே மா
கிச்சுதே ஜே மன பரே நா,
நாச-துயாரே பா ஸரே நா,
சோக்கே பஹே ஜலேர் தாரா'

ஆகாயத்தில் நெய்யணி குஞ்சரம் போல் மேகநிரைகள். ஈரக் கீழ்க் காற்று வீசியது. ஆ...உடம்பில் என்ன ஆரோக்கியமாக அது ஒத்திச் செல்கிறது! வரண்ட மண்ணே கண்ணில் படவில்லை. இளம்புல் போர்த்து இருந்தது; எங்கும் உழுத நிலபுலங்களில் கறுப்பாக ஈரம் கசியும் மண் பாகுமாதிரி இருந்தது. தந்திக் கம்பத்தின் மீது ஒரு காக்கை மழைநீர் தோய்ந்து கூரல் இருந்தது. இத்தனை நாள் அது வெம்மைக்குப் பிறகு மழைநீரில் குளித்து இன்புறுகிறது. அரசு, ஆல், வாகை முதலிய மரங்களில் ஊழ்த்திருக்கும் இளந்தளிர்கள் காற்றில் மெல்லச் சிலிர்த்து அசைந்தன. லைன் இருபுறமும் புதர்களில் கொத்துக் கொத்தாக ஜுமுக்கி மலர்கள் தொங்கின. தாழம்புதர் களின் செவ்வியுடன் மலர்மடல் அவிழ்ந்திருக்கும் கவின்தரு காட்சி. இத்துடன் வஸந்தியின் நினைவுகள் பின்னிக் கொண்டன.

[2] 'கரிலோ கே புல—ஹாய், ரே
மன—மாத்தானே பாஸே பரே தியே புக்
கராத் காண்டார் தாரே கேரா கேயா-ஃபுல!' |

---

[1] குரல் கொடம்மா... குரல் கொடு... வீட்டைவிட்டு ஓடிய உன் பிள்ளை வந்து விட்டான்; வெளியூரில் சுற்றி அலைந்தே வந்துவிட்டான். உன் குரலைக் கேட்காது அவன் உள்ளம் நிரம்புமா? நிரம்பாதம்மா! ஆடல் அரங்கை அவன் கால் நாடாதம்மா. அவன் கண்ணீர்விட்டு உன் காலடிக்கே வரு கிறானம்மா!

[2] முன்னால் பார்க்கவும்.

ஜம் ஜம்மென்று வண்டி சென்றது. நல்ல மழையும் இறங்கியது. அந்த அந்திப்பொழுது காஜல்தீகியின் (அவன் ஊர்க்குளம்) மையிருள் நீரின் சாயலைக் கொண்டிருந்தது. திக்கு திசை யாவற்றையும் மழைத்திரை மறைத்து மங்கலாக்கியது.

மழை சோனையாகப் பெய்தது. உயர்வரப்புடைய கழனிகளில் நீர் நிரம்பித் துளும்பியது. தவளைகளின் கூச்சல், ரெயில்வண்டிச் சப்தத்தையும் அடக்கிக் காதைத் துளைத்து மீட்டியது. எங்கும் களை எடுப்பது நடந்து கொண்டிருந்தது.

'கங்...கங்—கும்...கும்...தட...தட' என்ற ஒலியுடன் வண்டித் தொடர் துருபத கானம்[1] செய்து கொண்டே சென்றது. ஆற்றைக் கடக்கும் பாலம். அதன் கீழ் குழம்பி ஓடும் செந்நீரில் வெளுத்த நுரைகள் அடித்துச் சென்றன. கண்ணுக் கெட்டியவரை செம்புலப் பெயல்நீர் விரிந்து கிடந்தது. இடை இடையே சுழல்களும் தென் பட்டன. சில இடங்களில் நீரோட்டம் எய் கணையென விரைந்தது. இருபுறமும் கரைகளில் வளைந்து ஆடும் நாணற்செடிகள்...பச்சைப் புதர்கள். ஆம், அஜய்[2] நதிதான்...ஊர் நெருங்கிவிட்டது... அவன் பிறந்து வளர்ந்த கிராமம்; அவனைக் கட்டிக்காத்த அன்னை!—

'தோர் ஸாடா நா பேலே பரே மா
கிச்சுதே ஜே மன பரே நா
சோக்கேர் பாதாய் கும தரே நா
பயே ஜாய் மா ஜலேர் தாரா'

(உன் குரல் கேட்காது போனால் எதிலும் என் மனம் நிலைப்பதில்லை அம்மா...என் கண்ணிமை மூடுவதில்லை...வெள்ளம் பெருகி ஓடு தம்மா)

அப்புறம் போல்பூர்...அப்புறம் கோபாயி நதி...அப்புறம் ஜங்ஷன்; சின்னலைன். கட்—கட்—கடாங்—கடாங்—தண்டவாளம் வேறு திசையாகத் திரும்புவதால் வண்டியின் குலுக்கல். நிதாயின் உள்ளம் ஒரு சிறுபையனுடையது போலவே துள்ளிக் குதித்தது. அஜயநதி வெள்ளம் போல் அவன் கண்களிலிருந்து நீர் பெருகியது. 'அம்மா என் அம்மா! என்னை ஈன்ற கிராம அன்னையே! அதோ நிம்சேர் ஜோல் (இடத்தின் பெயர்) அதோ உதாசீர் மாட் (ஒரு கொல்லை மேட்டின் பெயர்) வந்து விட்டதே...காசீர் புகுர் (குளத்தின் பெயர்)

---

[1] விளம்பித நடையிலான உயர்தரப் பாட்டு வகையே துருபத் (துருவபதம்) ஆகும்.

[2] மேற்கு வங்காளத்தில் வர்த்தமானுக்கு அருகில் ஓடும் ஒரு காட்டாறு.

காலீபாகான் (காளித் தோட்டம்).' அந்த தோட்டத்தில்தானே அவன் தன் காவிய சாதனைகளை வளர்த்துக் கொண்டான்! அதில் உள்ள மரங்கள்தானே அவனுடைய கவிதைகளைக் கேட்டுத் தலை யசைத்தன! வண்டி ஒரு வளைவில் திரும்பியது. ஸ்டேஷன் வந்து விட்டது. நின்றது.

டிரெயின் கிளம்பிப் போய்விட்டது. நிதாயி பிளாட்பாரத்தில் நின்றான். அவனைச் சுற்றிலும், வியப்பால் கண் விரிக்கும் ஜனத் திரள். இதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. எத்தனை அன்பை, எத்தனை ஆதாரவை, தன் பொருட்டு இவர்கள் சேர்த்துவைத் திருந்தனரோ? எவருமே பேச்சற்று நின்றனர். நண்பன் ராஜாவின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி. கடைக்கார மாமா, தேவேன், கெஷ்டோ தாஸ், ராமலால் இன்னும் எத்தனையோ பெரிய மனிதர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டனர். எதிரே அந்த கிருஷ்ணசூடா மரம்; அதில் பூ பூத்து முடிந்துவிட்டது. பொடிப் பொடியான பச்சிளம் தளிர்கள் மயிற்பீலியெனக் கிளைகளையெல்லாம் மறைத்துக் கொண் டிருந்தன. இங்கொன்று அங்கொன்றுமாய்ச் சிவப்புமலர்கள் தலை நீட்டின. நிதாயின் கண்களில் நீர்த்தாரை. அவன் அழுதான். விப்ரபதனுடைய மரணச் செய்திகேட்டு அழுதான்.

நிதாயி அவனுக்காக அழுவதைப் பார்த்து எல்லோரும் வியப் படைந்தனர். அவன் விடும் இந்தக் கண்ணீரில் ஏளனத்தின் சின்னம் துளியேனும் இல்லை. உண்மை வேதனையின் உருக்கமே தென்பட்டது. நிதாயின் பெயர் நாடெங்கும் பரவியதைக் கேட்டு அங்கு நின்ற அத்தனை பேரும் அவனைப் பற்றி உயரிய மதிப்பையே கொண்டு இருந்தனர். அவர்கள் எல்லோரும், ஒரு பழய நண்பனைத் திரும்பப் பெற்ற உவகையால் கண்ணீர்மல்க நின்றனர். நிதாயும், விப்ரபதனைப் போன்ற ஒருவனை இழந்ததற்காக மட்டும் அழவில்லை; அவன் தன் ஊருக்கு வந்துசேர்ந்த உவப்பினாலும் இப்படிக் கண் கலங்கி நின்றான்.

சில கணம் சென்றது—

நிதாயி அந்த கிருஷ்ணசூடா மரத்தடியில் வந்து அமர்ந்தான். ராஜாவைத் தன் பக்கலில் அழைத்துக்கொண்டான். தண்டவாளம் வளைந்து குவியும் இடத்தின்மேல் கண் ஊன்ற, நிதாயி தன் நண்பனைப் பார்த்து, 'ராஜா, எல்லாம் நலம்தானே?'

'உஸ்தாத்! வந்துவிட்டாயா?'

'மைத்துனி?'

'உஸ்தாத்...'

'என்ன ராஜா ?'

'அவள் போய்விட்டாள்...'

'எங்கே ?'

'இல்லை உஸ்தாத்... போயே விட்டாள்... அவள் செத்துப் போய் விட்டாள்'—அப்பொழுது ராஜாவைப் போன்ற திடமனம் படைத்தவனும் உதடு துடிக்க நின்றான். 'உஸ்தாத், அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது, நீ போனதிலிருந்தே...' — ராஜாவின் கண்களிலிருந்து நீர்க்கால் வழிந்தது. 'ஆனால், மைத்துனி இல்லை... அவள் செத்துவிட்டாள்... பைத்தியம்பிடித்து மரித்தாள்'— இந்தச் சில சொற்கள் நிதாயின் மார்பினுள் ஒரு பெரும் புயலை எழுப்பின. விழிகளிலிருந்து பெருகியது நீர். இத்தனை அற்பமா வாழ்வு? அவன் அழுவதைப் பார்த்து ராஜா, 'உஸ்தாத்... தம்பி; அழுகிறாயா? அவளுக்காக அழுகிறாயா ?' என்றான்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு நிதாயி ஒரு பெருமூச்செறிந்து, 'இந்தப் பாட்டைக் கேள், ராஜா' என்றதும் சுரம் போட்டு வாய் விட்டுப் பாடினான்—

1 'ஏ இ கேத ஆமார் மனே
பாலோபேஷே மிட்லோ நா ஸாத்
குலாலோ நா ஏ ஜீபனே !
ஹாய்—ஜீபன் ஏதோ ச்சோட் கேனே ?
ஏ புவனே ?'

ராஜா அவன் கையை அழுத்திக் கோவென்று அலறினான்— 'ஐயோ...ஐயோ, உஸ்தாத் ! வாழ்வு இவ்வளவு அற்பமாகி விட்டதா ? ஐயோ...ஐயோ !'

நிதாயினுடைய தொண்டையும் அழுகையினால் அடைத்தது. கண்ணீர் வடித்தான். பொங்கிப் பொங்கி எழுந்தது துயர்.

இந்த அழுகைக்கு இடையே அவன் முகத்தில் மெல்லிய சிரிப்பும் படர்ந்தது. இல்லை...இளம் மச்சி சாகவில்லை...அவன் தெளிவாகப் பார்க்கிறானே ! அந்தத் தண்டவாளங்கள் இணைந்து ஒன்றாகச் சேரும் அந்தத் தொலைவில், தென்புறமாக நதியைக் கடந்து, தலைமீது பொன் கிரீடம் அணிந்து ஒரு நாணற்பூ மெல்ல ஆடி அசைந்தவாறு வருவது போன்ற மருள் கொண்டான். அவள் சாகவில்லை, இருக்கிறாள் ! இங்குள்ள எப்பொருளிலும் அவள் கலந்து விளங்கு

1 முன்னால் பார்க்க.

கிருள். இந்த கிருஷ்ணசூடா மரம் அவனுக்கு ஞாபகம் வந்தது... இங்கேதானே வஸந்தி வந்த அன்று படுத்துக் கொண்டிருந்தாள். அவள் எங்கே? ஆ...! அந்த மைத்துனி, வஸந்தி அவன் இரு பக்கமும் வந்து நிற்கின்றனர். அவர்கள், ஒருவருளொருவர் கலந்து மறைகின்றனர்!

நிதாயி எழுந்து, 'வா போகலாம்' என்ருன்.

'எங்கே தம்பி?'

'சண்டீதேவியின் ஆலயத்திற்கு... அம்மையை நான் வணங்க வேண்டுமப்பா'

ராஜாவையே நோக்கி நிதாயி, 'அவள் திருவடியில் விழுந்து பாட வேண்டும்' என்ருன்.

இனிமை மிகுந்த தன் தாயகத்தின் மண்ணில் அவன் புரள விரும்பினுன். அன்னையின் சந்நிதி முன்னின்று விண்ணப்பித்துக் கொள்ளப் போகிருன்—'தாயே வாழ்வு, இவ்வளவு அற்பமானது ஏனே?'

முற்றும்.

தமிழில் வெளிவந்துள்ள மற்ற நூல்கள்

I. தேசீய வாழ்க்கை வரலாற்று வரிசை

		ரூ.	பை
1.	**தியாகராஜர்** - *பி. சாம்பமூர்த்தி*	1	75
2.	**ராமானுஜர்** - *ஆர். பார்த்தசாரதி*	2	00
3.	**குரு நானக்** - கோபால் சிங்	2	25
4.	**முத்துஸ்வாமி தீக்ஷிதர்** - டி. எல். வெங்கட்ராம அய்யர்	2	50
5.	**கபீர்** - *பாரஸ்நாத் திவாரி*	2	25
6.	**ரண்ஜீத் சிங்** - டி. ஆர். ஸூத்	2	75
7.	**ஹரிநாராயன் ஆப்தே** - எம். ஏ. க்ரந்தீகர்	2	75

II. இந்தியா - நாடும் மக்களும் வரிசை

1.	**வீட்டுப் பிராணிகள்** - ஹர்பன்ஸ் சிங்	4	50
2.	**சாதாரண மரங்கள்** - எஸ். *சாந்தபௌ*	4	75
3.	**மக்கட் தொகை** - எஸ். என். அகர்வாலா	3	75
4.	**இந்தியப் பாம்புகள்** - பி. ஜே. தேவரஸ்	6	50
5.	**தோட்ட மலர்கள்** - விஷ்ணுஸ்வரூப்	6	00
6.	**பூமரங்கள்** - எம். எஸ். *ரந்தாவா*	6	50
7.	**நிலமும் மண்வளமும்** - எஸ். பி. *ராய் சௌதுரி*	5	25

III. அனைத்திந்திய நூல் வரிசை

1.	**அக்னி நதி** - குர் அதுல்ஜன் ஹைதர்	8	50
2.	**மறைந்த காட்சிகள்** - *பகவதி சரன் வர்மா*	8	50
3.	**காகித மாளிகை** - *முப்பாள ரங்கநாயகம்ம*	4	25

4.	**கதாபாரதி : இந்திச் சிறு கதைகள்** - *டா. நாம்வர் சிங்*	8	25
5.	**அழிந்த பிறகு** - *சிவராம காரந்த*	5	25

IV. பல்வகை நூல்கள்

1.	**காந்தியின் இந்தியா - வேற்றுமையுள் ஒற்றுமை**	3	25
2.	**அக்பர்** - லாரென்ஸ் பின்யன்	2	25
3.	**அறிவு வளர்க்கும் அறிவியல்** - *ரிக்சி கால்டர்*	4	25
4.	**அசோக சாசனங்கள்** - என். ஏ. நிகம், ரிச்சர்ட் மக்கியோன்	3	00
5.	**கோதம புத்தர்** - *ஆனந்த கே. குமாரசாமி, ஐ. பி. ஹார்னர்*	6	00
6.	**மார்கோ போலோ** - மௌரின் காலிஸ்	5	75
7.	**குடதிசை - குண திசை ஞானப் பெண்மணிகள்** - ஸ்வாமி காஞநந்தா	6	00
8.	**இன்பத்தின் வெற்றி** - பெட்ராண்ட் ரஸ்ஸல்	3	50
9.	**பாமரமக்களின் பரம்பரைப் பாடல்கள்** - அழ. வள்ளியப்பா	1	25
10.	**விழாவும் பூசையும்** - எல். ஜி. கணபதி அய்யர்	1	25

இந்த நூல்வரிசை வெளியீட்டின் சிறப்பான நோக்கம், இந்தியாவில் ஒவ்வொரு மொழியிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட சில தலைசிறந்த பிரபல புத்தகங்களை மற்ற இந்திய மொழிகளில் பெயர்த்து வெளியிடுவதன் மூலமாக, அம்மொழிப் பகுதியின் சமூகத்தின் பண்பாடு, கலாசாரம், வாழ்க்கைத்தடம், பழக்க வழக்கங்கள், இன்ப துன்பங்கள் ஆகியவற்றை மற்ற மொழிப் பகுதியினருக்கு அறிமுகப்படுத்துவதேயாகும். இதே குறிக் கோளுடன் புத்தகங்கள் தெரிந்தெடுக்கப்படும். பொதுவாக அவை தற்கால, சமகாலத்திய இலக்கியப் படைப்புக்களாக இருக்கும்.

நம்நாடு பல மொழிகளைக் கொண்டது. எனினும் நம் நாட்டவர்க்கு அண்டை மொழிகளில் கருத்தோட்டம், கலாசார சமுதாய மாறுதல்கள் ஆகியவற்றைப் பற்றி அக்கறையும் கவனமும் குறைவாக இருப்பது வருந்தற்குரியது. ஐரோப்பா போன்ற நிலப்பகுதியில் பல தனித்தனி நாடுகளும், மொழிகளும் இருந்தபோதிலும், அவர்கள் தம்மிடையே நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இலக்கிய-கலாசார பரிவர்த்தனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதேபோன்ற இலக்கியப் பரிவர்த்தனை நம் நாட்டிலுள்ள வெவ்வேறு மொழி வழங்கும் மாநிலங்களையும், மக்களையும் ஒன்றிணைக்கும்; பரஸ்பரப் பரிவுணர்வை வளர்க்கும் என்று நம்பு கிறோம். அதனால் தேசீய ஒருமைப்பாடு வலுவுற உதவி கிட்டும்.